D
V211,31 P08
P08.51.2
228386

**30–4–2008**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 253-299 |
| **தகவல் கோரல்—** | |
| (அ) வாகனங்களில் சிவப்பு விளக்கைப் பயன்படுத்துதல் | 299-302, 308-309 |
| திரு. சி. ஞானசேகரன் | 299-301 |
| * மாண்புமிகு திரு. கே.என். நேரு | 301-302, 308-309 |
| (ஆ) வேளாண் பட்டம்/பட்டயம் பெற்றவர்களின் வேலைவாய்ப்பிற்கு வயது வரம்பைத் தளர்த்துதல் | 302-303 |
| திரு. தி. வேல்முருகன் | 302 |
| * மாண்புமிகு திரு வீரபாண்டி எஸ். ஆறுமுகம் | 303 |
| (இ) மூவேந்தர் முன்னேற்றக் கழகத் தலைவர் டாக்டர் சேதுராமன் அவர்களை விடுதலை செய்யக் கோருதல் | 303-306 |
| திரு. கே.ஏ. செங்கோட்டையன் | 303-304, 305-306 |
| மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி | 304-305 |
| (ஈ) வினாக்கள்–விடைகள் – உரிய நேரத்திற்குள் முடிக்கக் கோருதல் | 306 |
| * திரு. டி. சுதர்சனம் | 306 |

பக்கங்கள்

**2. தகவல் கோரல்**—தொடர்ச்சி

(உ) ஸ்ரீபெரும்புதூர், ஹூண்டாய் நிறுவனத் தொழிலாளர்களை விடுதலை செய்யக் கோருதல் — 306-308

செல்வி கே. பாலபாரதி — 307-308

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி — 308

(ஊ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் — 309

(எ) தொண்டாமுத்தூர் அருள்மிகு அனுவாவி சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் காவலாளி, யானைக் கூட்டம் தாக்கி இறந்தது — 326

* திரு. மு. கண்ணப்பன் — 326

**3. கவன ஈர்ப்பு**—

(அ) மன்னார்குடி, திருமக்கோட்டை மின் உற்பத்தி நிலையக் கழிவு நீரினால் ஏற்பட்ட பாதிப்புக்கு இழப்பீட்டுத் தொகை கோருதல் — 310-312, 316-320

திரு. வை. சிவபுண்ணியம் — 310,312, 316-319

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி — 310-312, 317-320

(ஆ) கபிலர்மலை, பொத்தனூர் ஆதி திராவிடர் காலனி வீட்டு மனைகள் ஆக்கிரமிப்பு — 320-326

* டாக்டர் க. நெடுஞ்செழியன் — 320,323,325

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி — 320-326

**4. உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி அவையிலிருந்து வெளியேற்றம்** — 313-31





பக்கங்கள்

**5. அறிக்கைகள் அளித்தல்**—

(அ) பொதுக் கணக்குக் குழு — 327

(ஆ) பொது நிறுவனங்கள் குழு — 327

**6. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 6 – கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 7 – மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

(இ) கோரிக்கை எண் 8 – பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

(அ)–(இ) — 327-469

*மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன் — 328,386, 457-465

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி — 346,386,432, 445-457

*மாண்புமிகு திரு. உ. மதிவாணன் — 366,387,393, 434-445

திரு. க. இராஜேந்திரன் — 387-396

திரு. சி. தமிழ்செல்வன் — 395-399

*திரு. எஸ். ஜெயபால் — 359,400-403, 405-407

திரு. பெ. கண்ணன் — 339,360, 379,407-410

திரு. வே. மாரிமுத்து — 338,359, 372,410-414

பக்கங்கள்

6. **மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 6 – கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)
(ஆ) கோரிக்கை எண் 7 – மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)
(இ) கோரிக்கை எண் 8 – பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)—தொடர்ச்சி ... 327-469

*திரு. எஸ். இராசசேகரன் ... 333,352, 372-373, 415-417

*திரு. நா. இராமகிருஷ்ணன் ... 418-421

திரு. என்.கே.ஆர். சூரியகுமார் ... 421-423

திரு. மா. தண்டபாணி ... 337,357,376, 424-428

திருமதி செல்வி ராமஜெயம் ... 336,356-357, 384

7. **அறிவிப்பு**—

பேரவைத் தலைவரின் மே தின வாழ்த்து ... 469

8. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** ... 470-471



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228386.
சென்னை-600 008
நூலகம்


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, சித்திரை 18

## 2008 ஏப்ரல் 30, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின்."

பசியைப் பொறுத்துக்கொள்ளும் நோன்பைக் கடைப்பிடிப்பதைவிட, பசித்திருக்கும் ஒருவருக்கு உணவு அளிப்பதே சிறந்ததாகும்.

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள், வினா எண் 181, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**181—**

### ஏற்றுமதி மையம்

***725--திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கிருஷ்ணகிரியில் மாம்பழக் கூழ் ஏற்றுமதி மையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களை உள்ளடக்கி, தேனியில் Magrita தனியார் நிறுவனப் பங்கேற்புடன் ரூபாய் 24.08 கோடியில் மாம்பழத்திற்கென ஏற்றுமதி மையம் அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஐந்தாம் முறையாக முதல்வராகப் பதவி ஏற்று, 2006-2007 ஆம் ஆண்டுக்கான முதல் நிதிநிலை அறிக்கையிலே மக்கள் பிரதிநிதிகளாகிய எங்களுடைய கோரிக்கையை ஏற்று கிருஷ்ணகிரியிலே மாம்பழக் கூழ் ஏற்றுமதி மையம் அமைக்கப்படும் என்கிற அறிவிப்பை வெளியிட்டார்கள். அதன் பிறகு, மாவட்ட நிருவாகமும், நாங்களும் சேர்ந்து மேற்படி மையம் அமைப்பதற்கான இடமெல்லாம் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. மாம்பழ உற்பத்தியாளர்கள் மற்றும் மாம்பழக் கூழ் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை வைத்திருப்போர், மாவட்ட ஆட்சியர் உட்பட அரசு அலுவலர்கள் அத்தனை பேரும் கூட்டம் நடத்தி, "Establishment of Integrated Mango Development Activities in Krishnagiri District என்கிற ஒரு திட்ட அறிக்கையும் தயாரிக்கப்பட்டு, Krishma Society—யும் உருவாக்கப்பட்டு, அதற்காக கிருஷ்ணகிரி-பெங்களூரு நெடுஞ்சாலையிலே மாவட்ட ஆட்சித் தலைவர் பங்களாவிலே ஒரு அலுவலகம் திறக்கப்பட்டிருக்கிறது. அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு அரசின் ஆணைக்காக இப்போது காத்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்களும் கிருஷ்ணகிரிக்கு வருகை தந்தபோது மேற்படி திட்ட அறிக்கையும் C.D. மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் காண்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மேற்படி மாம்பழக் கூழ் ஏற்றுமதி மையம் உருவாக்கிடுவதற்கான அரசாணையை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்குவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் ... அவர்களே, தருமபுரி மாவட்டத்திலே 9,091 எக்டேர் பரப்பில் ... மாம்பழம் உற்பத்தி செய்யப்படுகிறது. உற்பத்தித் திறன் எக்டேர் ஒன்றுக்கு 8.76 மெட்ரிக் டன்னாக உள்ளது. அதைப்போலவே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 33,616 எக்டேர் பரப்பில் 1,58,000 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. உற்பத்தித் திறன் எக்டேருக்கு 4.69 மெட்ரிக் டன்னாக இருக்கின்றது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 43 மாம்பழக் கூழ் தயாரிக்கும் தனியார் தொழிற்சாலைகள் உள்ளன. 1,52,000 மெட்ரிக் டன் மாம்பழத்திலிருந்து 75,000 மெட்ரிக் டன் மாம்பழக் கூழ் தயாரிக்கப்பட்டு அரபு நாடுகள், ஐரோப்பிய நாடுகள், சீனா, ஜப்பான், மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதுவரை 14 மாம்பழக் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு மொத்த திட்ட மதிப்பீடான ரூபாய் 48 கோடியே 74 இலட்சத்தில் நடுவண் அரசு உணவுப் பதனிடும் தொழிலகத்தின்மூலம் ரூபாய் 7 கோடியே 72 இலட்சம் மானியம் பரிந்துரை செய்யப்பட்டு, ரூபாய் 3 கோடியே 17 இலட்சம் மானியமாக இதுவரை இந்த 14 மாம்பழக் கூழ் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. தனியார், மாம்பழக் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க முன்வந்தால், அரசு பரிந்துரை செய்து நடுவண் அரசின்மூலம் 25 சதவிகிதம் மானியம் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

சென்னை-600 008





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

முற்பகல் 9-35

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக அளவிலே மாங்காய் உற்பத்தி, ஆண்டுக்கு 19 மில்லியன் டன்னாக உள்ளது. இந்தியாவின் உற்பத்தி, ஆண்டுக்கு 11 மில்லியன் டன்னாக உள்ளது. 2006-2007-ல் இந்திய ஏற்றுமதி அளவு, மாங்காய் மட்டும் 142 கோடி ரூபாய் அளவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. 2006-2007-ல் மாம்பழக் கூழ் ஏற்றுமதி மட்டும், 500 கோடி ரூபாய்க்கு மேல் செய்யப்பட்டிருக்கிறது. மாங்காய் உற்பத்தியில் தமிழகம் இந்தியாவிலே ஏழாவது இடத்தில் உள்ளது. தமிழகத்தில் மட்டும் 4.13 இலட்சம் டன் மாங்காய் ஆண்டு ஒன்றுக்கு உற்பத்தியாகிறது. இதிலே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மட்டும் ஓராண்டுக்கு 2 இலட்சத்து 20 ஆயிரம் மெட்ரிக் டன் மாங்காய் உற்பத்தி செய்யப்படுகிறது. கிருஷ்ணகிரியிலே இருக்கக்கூடிய 42 Fruit Pulp Industries-ஐ நம்பித்தான் அந்த Industries—அதாவது அந்த 2 இலட்சத்து 20 ஆயிரம் டன் மாங்காயையும் விவசாயப் பெருங்குடி மக்கள், அந்த உற்பத்தி செய்கிறார்கள். அப்படி உற்பத்தி

செய்கிறபோது விவசாயிகளுக்கான கட்டுப்படியாகக்கூடிய விலையோ, குறித்த காலத்தில் பணமோ கிடைக்காமல் மிகவும் அவதிப்படுகிறார்கள். அதனால்தான், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், மாங்கனி-மாங்காய் உற்பத்தி செய்யும் விவசாயிகளினுடைய நலன் கருதி, மாம்பழக் கூழ் ஏற்றுமதி மையத்தை அறிவித்தார்கள். ஆகவே, அரசு, மாம்பழக் கூழ் உற்பத்தியாளர்கள் மற்றும் நிலம், அரசுப் பங்கு, அதேபோல, மாங்காய் உற்பத்தி செய்கின்ற விவசாயிகளினுடைய பங்கு, வங்கிக் கடன் உட்பட அனைத்தும் கொண்ட ஒரு கூட்டு முயற்சியின் காரணமாக இப்போது மிகப் பெரிய ஒரு திட்ட அறிக்கையை எங்களுடைய மாவட்ட நிருவாகம் தயாரித்திருக்கிறது. ஆகவே, அந்தத் திட்ட அறிக்கைக்கு அரசு அங்கீகாரம் அளிப்பதன்மூலமாக ஒரு மிகப் பெரிய வளர்ச்சியை அந்த மாவட்ட மாங்காய் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு வழங்கிட இயலும் என்கிற காரணத்தினால்தான் நான் பணிவோடு கேட்டுக்கொள்வது, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த Krishma Society என்ற அந்த Agency-க்கு கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த அந்த மாங்காயை உலக நாடுகளிலே விற்பனை செய்வதற்கான அரசாணையை வழங்குவாரா என்பதை மீண்டும் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த விவரங்களெல்லாம் என்னிடத்திலே இல்லை. அவரிடத்திலே மட்டும் அதை வைத்துக்கொண்டிருக்கின்றார். மூலக் கேள்விக்கும் அந்தப் புள்ளிவிவரத்திற்கும் தொடர்பு இல்லை. கிருஷ்ணகிரி மாவட்டத்திலே 33 ஆயிரத்து 616 எக்டேர் பரப்பில், ஒரு இலட்சத்து 58 ஆயிரம் மெட்ரிக் டன்தான் உற்பத்தி செய்யப்படுகிறது. அவர், 2 இலட்சத்திற்கு மேற்பட்ட உற்பத்தி என்று சொன்னார்; அது உண்மையல்ல. ஆகவே, உற்பத்தித் திறன் ஒரு எக்டேருக்கு 4.69 மெட்ரிக் டன்தான் இருக்கிறது. தருமபுரியிலே மட்டும் உற்பத்தித் திறன் என்பது ஒரு எக்டேருக்கு 8.76 மெட்ரிக் டன்னாக உள்ளது. ஆக, உற்பத்தித் திறனும் கிருஷ்ணகிரியிலே குறைவு. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்த அந்த Krishma என்ற அந்த ஏற்றுமதி மையம் குறித்த தகவல், அரசுக்கு இன்னும் வந்து சேரவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே அந்த விவரங்களைக் கோரிப் பெற்று உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தில், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய இரண்டு மாவட்டங்களிலேதான் மாம்பழ உற்பத்தி அதிகமாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக, தருமபுரி மாவட்டத்தைச் சார்ந்தவர்கள், விவசாயத்தைத் தவிர--அதிலும், வானம் பார்த்த பூமியாக உள்ளது; அவர்கள் விவசாயத்தைத் தவிர--வேறு எந்தத் தொழிலும் இல்லாதவர்கள். கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் அதே நிலை. ஓசூர் பகுதியைத் தவிர, மற்ற எல்லாப் பகுதிகளிலும் உள்ள மக்கள், விவசாயத்தையே நம்பியிருக்கின்ற காரணத்தால், இந்த மாம்பழ உற்பத்திக்குச் சரியான விலை கிடைக்காத காரணத்தால், சில நேரங்களிலே விவசாயிகள் மாம்பழ உற்பத்தியைவிட்டு ஓடலாமா என்ற நிலைக்குக்கூட தள்ளப்படக்கூடிய காலம் வந்துகொண்டிருக்கிறது. அந்தக் காரணத்தினாலேதான் விவசாயிகளினுடைய வாழ்க்கையிலே புத்துயிர் ஊட்டுகிற வகையில், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் சேர்த்து, இந்த ஏற்றுமதி மையத்தை அமைப்பதோடு, அதற்குச் சிறப்புத் திட்டத்தின் அடிப்படையிலே--மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட இங்கே 25 விழுக்காடு மானியம் வழங்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள்; அதை நாங்கள் வரவேற்கிறோம்--அதேநேரத்தில், மத்திய அரசினுடைய பங்கைவிட மாநில அரசினுடைய பங்குத் தொகையைச் சற்றுக் கூடுதலாக உயர்த்தி, இந்த மாம்பழ உற்பத்திக்கும், ஏற்றுமதிக்கும், நடப்பாண்டிலே விரைவான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார், இதுபோன்ற மாம்பழக் கூழ் தயாரிக்கின்ற நிறுவனம் நிறுவினால் மத்திய அரசு நிதியிலேயிருந்து 25 சதவிகிதம் மானியம் வாங்கி வழங்கப்படும் என்று சொன்னேன். அதைப்போல, தமிழக அரசின் புதிய வேளாண்மைக் கொள்கைத் திட்டம், தொழில் திட்டமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, மாநில அரசிலேயிருந்தும் அந்த 25 சதவிகித மானியமாக, ஆக, 50 சதவிகித மானியம், இதுபோன்ற தொழிற்சாலைகள்

தொடங்கினால், அவ்வாறு தொழில் தொடங்கக்கூடியவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதற்கான விண்ணப்பம் வருமானால், அதை அரசு பரிசீலனை செய்யும்.

(முற்பகல் 9-40)

மற்றொன்று, கிருஷ்ணகிரி மாவட்டத்திலே மாங்கனிக்குக் குளிர்பதன வசதியுடன்கூடிய ஒரு வணிக வளாகம் ரூபாய் 2 கோடி செலவில் அமைக்க அரசு அறிவித்து, அதற்காக ஒப்பந்தங்கள் 3 முறை கோரப்பட்டன. 3 முறையும் தகுதியானவர்கள் வராத காரணத்தால், அந்த ஒப்பந்தங்கள் இரத்து செய்யப்பட்டு, இப்பொழுது நான்காவது முறையாக மீண்டும் ஒரு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருக்கிறது. தகுதியானவர்கள் வருவார்களேயானால், அந்தக் குளிர்பதனக் கிடங்கு அமைந்துவிட்டால், விலை குறைவாக இருக்கக்கூடிய நேரத்திலே உற்பத்தியாளர்கள் அதைக் குளிர்பதனக் கிடங்கிலே வைத்து, விலை அதிகமாக விற்பனை ஆகக்கூடிய நேரத்திலே எடுத்து விற்பதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே, அந்த அடிப்படையிலே அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியிலே அமைந்திருக்கிற ஜவ்வாது மலையின் அடிவாரத்தில் இருக்கிற பகுதிகளில், பலாப் பழம் அதிகமாக உற்பத்தி ஆகிறது. அதேபோல, கலசப்பாக்கம் பகுதியில் வாழை அதிகமாக உற்பத்தியாகிறது. போளூர் பகுதியிலே படவேடு, செண்பகத்தோப்பு ஆகிய பகுதிகளிலே வாழை அதிகமாக இருக்கிறது. திருவண்ணாமலை மாவட்டத்திலே, மா, வளர்ச்சிப் பெறுகின்ற ஒரு தொழிலாக இருக்கின்றது. இதைப் பயன்படுத்தி அந்தப் பகுதியிலே பழங்கள் பதப்படுத்துவதற்காக ஒரு தொழிற்சாலை அமைத்து, அதன்மூலமாக ஏற்றுமதி மையம் அமைக்கின்ற ஒரு ஏற்பாடு அரசிடத்திலே இருக்கிறதா என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி,





'அக்ரி' என்ற பட்டத்தை வைத்துக்கொண்டிருக்கிறார். மூலக் கேள்வியே, கிருஷ்ணகிரியில் அரசு சார்பில் மாம்பழக் கூழ் ஏற்றுமதி மையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பது. அவர் ஜவ்வாது மலைக்கெல்லாம் கேட்டிருக்கிறார். அதற்குத் தனிக் கேள்விதான் போட வேண்டும். வேண்டுமானால், அவர் எழுப்பிய அந்தக் கேள்வியை அரசு எடுத்துப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். மணி.

**திரு. எஸ். மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் தெற்கு உழவர் சந்தைக்கு நாளொன்றுக்கு 400 முதல் 500 விவசாயிகள் வந்து அவர்களுடைய பொருட்களை விற்றுச் செல்கின்றனர். அங்கு 500 முதல் 600 டன் காய்கறி வருகிறது. ஆனால், இட வசதி போதுமானதாக இல்லை. அருகில் இட வசதி உள்ளது. அந்த இடத்தை உழவர் சந்தைக்கு எடுத்து விரிவுபடுத்தித் தரும் திட்டம் உள்ளதா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாமல் கேட்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இயங்கக்கூடிய உழவர் சந்தைகளில் அப்படி இட நெருக்கடி ஏற்பட்டால், அதிகமான காய்கறி வரக்கூடிய சூழ்நிலை இருந்தால், அது அரசின் கவனத்திற்கு வருமானால், சந்தையைப் புதிதாக விரிவுபடுத்திக் கட்டித் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 182, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**182—**

### கல்லாறு அணை

*5890—திரு. எம்.ஆர். சுந்தரம்:

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2008 ஏப்ரல் 30

இராமநாயக்கன்பாளையம் கல்லாறு அணைத் திட்டத்தை நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேற்கண்ட திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் என்றாலே விவசாயத்திற்கு ஒரு சிறப்பான இடம் என்பதை, அந்தக் காலத்திலேயே பாடலாசிரியர் கவிஞர் மருதகாசி அவர்கள் பாடியிருக்கின்றார்.

> "ஆத்தூரு கிச்சடி சம்பா பாத்து வாங்கி விதை விதைச்சி
> நாத்து பறிச்சி நட்டுப் போடு செல்லக் கண்ணு;
> தண்ணியை ஏத்தம் பிடிச்சி எறச்சிபோடு சின்னக் கண்ணு"

என்று ஒரு பாட்டே இருக்கிறது. அப்படிப்பட்ட ஆத்தூரிலே, இன்றைக்கு நெல் விளையாத அளவிற்குத் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. 1971 ஆம் வருடத்தில் அப்படி இருந்த காலத்திலே கல்ராயன் மலையின் அடிப்பகுதியிலே அணை கட்டுவதற்காகத் திட்டமிடப்பட்டு, அடிப்படை வேலைகள் ஆய்வு செய்யப்பட்டன. சுமார் 25 இலட்சம் ரூபாய் செலவிலே திட்டமிடப்பட்டு. இந்தத் திட்டம், பல்வேறு நிலைகளின் காரணமாகவும், ஆட்சி மாற்றத்தாலும், அலுவல் காரணமாகவும் நின்றுவிட்டது. அதற்கு என்ன காரணம் என்று சொன்னால், அங்கு இருக்கக்கூடிய வன இலாகாவால் 50 ஏக்கர் நிலம் எடுக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. அப்படிப்பட்ட நிலம் மல்லியக்கரையில் உள்ளது. அரசுக்குச் சொந்தமான தரிசு புறம்போக்கு நிலம் இருக்கின்றது. அதேபோல, நமது தலைவாசல் தொகுதியிலே ஆட்டுப் பண்ணை இருக்கின்றது. அங்கு 2,000 ஏக்கர் சும்மா இருக்கின்றது. அதிலேகூட, 50 ஏக்கர் நிலத்தை நாம் வன இலாகாவிற்குக் கொடுக்கலாம். அப்படிக் கொடுத்தால், ஆத்தூர், தலைவாசலில் உள்ள கிட்டத்தட்ட, 4 இலட்சம் விவசாயிகள் பயன் அடைவார்கள். கிட்டத்தட்ட நன்செய் நிலம் 11,000 எக்டேரும் புன்செய் நிலம் 51,000 எக்டேரும் பயன் அடையும். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், எத்தனையோ அணைகள் கட்டிச்



2008 ஏப்ரல் 30]

சிறப்பித்திருக்கின்றார்கள். பெருந்தலைவர் ஆட்சியைப்போல் நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியும், இப்போது ஒரு பொற்கால ஆட்சியாக இருக்கின்றது. விவசாயிகளுக்கெல்லாம் எவ்வளவோ கடன்களை நாம் தள்ளுபடி செய்கின்றோம். இன்றைக்கு இருக்கின்ற தமிழக முதல்வர் அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அண்ணன் வீரபாண்டியார் அவர்களும் எப்படியாவது இந்தக் கல்லாறு அணைத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமெனக்கேட்டு, அதை நிறைவேற்ற முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, முதல் clarification; 'ஆத்தூரு கிச்சடி சம்பா பாத்து வாங்கி' என்று சொன்னாரே, அது உங்கள் ஆத்தூர் அல்ல; அது திண்டுக்கல் பக்கத்திலே இருக்கிற திரு. ஐ. பெரியசாமியினுடைய ஆத்தூர். அந்த ஆத்தூரிலேதான் கிச்சடி சம்பா; உங்கள் ஊரிலே குச்சிவள்ளிக் கிழங்கு! (சிரிப்பு) ஆக, ஜவ்வரிசி factory-தான் உங்கள் ஊரில் போடலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்தக் கல்லாறு திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று கேட்டார். பரிசீலனையில் இல்லை என்று சொன்னேன். ஆய்வில் இருக்கிறது. அவர் சொன்னார், 10,000 ஏக்கர், 12,000 ஏக்கர் பாசனம் பெறும் என்று சொன்னார், அப்படி அல்ல; ஆய்வில் அப்படி வராது. நீங்கள் பார்க்கும்போது இவ்வளவு பயிரிடலாமே என்று இருக்கும். சினிமாவிலே shooting எடுக்கும்போது, "ஆஹா! பார்த்தால் ரொம்ப அழகாக இருக்கிறதே! இங்கே ஒரு love scene எடுக்கலாமே!" என்று நாம் சொல்லுவோம். அதற்கு naked eye vision என்று பெயர்; திறந்தவெளியிலே எடுப்பது. ஆனால் camera lens vision-லே பார்த்தால், அங்கே சரியாக வரவில்லை என்று சொல்லுவார்கள். ஆக, உங்களுக்கு naked eye vision-லே 11,000 ஏக்கருக்குத் தண்ணீர் பாயும். ஆனால் technical vision-லே என்னவென்று கேட்டால், 360 ஏக்கர்தான் பாசனம் பெறும். இந்த 360 ஏக்கர் பாசனம் பெறுவதற்கு எவ்வளவு செலவாகும் என்று கேட்டால், 10 கோடி ரூபாய் ஆகும். 10 கோடி ரூபாய் என்று 10 ஏரிக்குச் செலவு செய்தால், பல ஆயிரம் கோடி ரூபாயாகிவிடும். அதற்காக நான் இல்லையென்று சொல்லவில்லை.

மூன்றாவதாக, வன நிலம் 60 ஏக்கர் எடுக்கிறோம். இந்த 60 ஏக்கருக்கு 120 ஏக்கர் நிலம் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அதைக்கூட கொடுத்துவிடலாம்; மல்லியக்கரையிலிருந்து கொடுத்துவிடலாம். ஆனால் வனத் துறை என்ன சொல்லும் என்று சொன்னால், "இங்கு தேக்கு மரம் இருந்தது; இங்கு கருங்காலி மரம் இருந்தது; இங்கு சந்தன மரம் இருந்தது; இந்த மரங்கள் வளர்ந்து இருபது வருடங்கள், முப்பது வருடங்களானால் இவ்வளவு rate வரும்; அப்போது rate இவ்வளவு; இப்போது rate இவ்வளவு" என்று சொல்லும். இதைப் போட்டு dam கட்டுவதைவிட, இரண்டு மடங்கு செலவு அவர்களுக்குக் கட்ட வேண்டும். ஆக, இதையெல்லாம் ஏற்றுக்கொண்டு கட்டி முடித்துப் பார்த்தீர்களானால், அதற்கு ஒரு Benefit Economic Cost Ratio என்று போடுவார்கள்; ஒரு ரூபாய் செலவு செய்தால், எவ்வளவு return வருகிறது என்று பார்ப்பார்கள்; ஒரு ரூபாய்க்கு ஒரு ரூபாய் வர வேண்டுமென்பது சட்டம். ஆனால், ஒரு ரூபாய்க்கு 12 பைசாகூட வரவில்லை, இந்தத் திட்டத்திலே. அப்படியென்றால் விட்டுவிடலாமா என்றால், முதல்வர் அவர்கள் இந்த theory-யே தப்பு என்று சொன்னார்கள். விவசாயிக்கு என்ன benefit-ஓ அதைப் பார்க்க வேண்டுமே தவிர, economic ratio, cost ratio அந்த ratio என்றெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது என்று முதல்முறையாக இந்தக் கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்தவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்தான். ஆக, நம்முடைய மாண்புமிகு உறுப்பினருக்கு இல்லையென்று சொல்லமாட்டேன். அது ஆய்வில் இருக்கிறது. இன்னும் அதனுடைய report அரசாங்கத்திற்கு வரவில்லை. வந்த பிறகு, கூடுமானவரையில் சுந்தரம் அவர்களுக்குச் சாதகமான முடிவெடுப்பதற்கு என்னாலான முயற்சிகள் அத்தனையும் எடுப்பேன். அதற்கப்புறம் சட்டம், நீதிமன்றம் என அதற்குத் தக்கபடி முடிவெடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நாங்கள் எல்லாம் கிச்சடி சம்பா நெல், எங்கள் மாவட்டத்தில் உள்ள ஆத்தூரில்தான் விளைந்தது என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும், அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னதற்கு நன்றி. எப்படியாவது இந்தத் திட்டத்தை எங்களுக்குச் செயல்படுத்திக் கொடுக்க வேண்டும். கிட்டத்தட்ட இப்போது உலக அளவிலே உணவுப் பஞ்சம் ஏற்படும் என்று விஞ்ஞானிகள் எல்லாம்



கருதுகின்ற இந்த நேரத்திலே, எப்பாடுபட்டாவது இந்தத் திட்டத்தை எங்களுக்கு நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று, நமது தமிழக முதல்வர் அவர்களையும் மாண்புமிகு அமைச்சர் அண்ணன் வீரபாண்டியார் அவர்களையும் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 300 ஏக்கர் நிலத்திலே விவசாயம் பெருக வேண்டுமென்று விஞ்ஞானிகள் சொன்னதை நாங்கள் அடிப்படையாகக் கொண்டு, உணவு உற்பத்தியைப் பெருக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் ஊர் ஊருக்குப் பார்த்தீர்களேயானால், அவனவன், விளைகின்ற நிலத்தை plot போட்டுவிட்டு விளைவதற்கே நிலம் இல்லாமல் இருக்கிறது. நிலத்தைத் தொழிற்சாலைக்கு எடுக்கக்கூடாது என்கிறார்கள்; அதை நான் ஒத்துக்கொள்கிறேன். வேறு திட்டத்திற்கு எடுக்கக்கூடாது என்கிறார்கள். விவசாய நிலத்தை எடுக்கலாமா? எடுக்கக்கூடாது; ஒத்துக்கொள்கிறேன்; நியாயம். நானும் ஒரு விவசாயி. ஆனால் ஊரைச் சுற்றிப் பார்த்தீர்கள் என்றால், அவனவன் அந்த விவசாயிகளைப் போய் ஏமாற்றுவது; பத்து இலட்சம் ரூபாய் என்பதை 25 இலட்சம் ரூபாய் ஒரு ஏக்கருக்குக் கொடுங்கள் என்று சொல்வது; இவனிடம் 25 இலட்சம் ரூபாய் ஏக்கருக்கு என்று ஒத்துக்கொண்டு, அவனிடம் ஐந்து இலட்சம் ரூபாய் கொடுத்துவிட்டு agreement போட்டுவிட்டு, அதை plot போட்டு ஆறு மாதம், ஒரு வருடம், இரண்டு வருடம், மூன்று வருடம் இழுப்பது என இப்படி நிலங்கள் use-ஏ இல்லாமல் இருக்கின்றன. ஆகையினால், அப்படி ஒரு பக்கம் இருக்கிறது. இந்த 300 ஏக்கரினாலே விளைநிலம் குறைந்துவிடாது; இருந்தாலும் நான் இல்லையென்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி. (குறுக்கீடு) திரு. எம்.ஆர். சுந்தரம், Third supplementary கிடையாது; உட்காருங்கள்.

முற்பகல் 9-50

**திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ராசிபுரம் வட்டத்தில், நாமகிரிப்பேட்டை ஒன்றியம், கருப்பஞ்சோலை ஊராட்சி, மேலக்கோம்பை கிராமம், தோல்பட்டான் என்ற இடத்தில், கொல்லிமலையிலிருந்து மழைக் காலங்களிலே

[2008 ஏப்ரல் 30

வருகின்ற ஆற்று நீரைத் தேக்கி வைக்கக்கூடிய நிலை இல்லாத காரணத்தால், அந்த ஆற்றிலே ஆறு மாதங்களுக்கு மேலாக நீர் வீணாகச் செல்கிறது. அதே ஊராட்சியில் பள்ளிப்பாறை என்னும் இடத்தில், வருடந்தோறும் அந்த ஆற்றிலே நீர் வந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த இரண்டு ஆறுகளின் குறுக்கே அணை கட்டினால், அந்தப் பகுதியில் சுமார் 500 ஏக்கருக்கு மேல் மூன்று போகம் விளையக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. நிலத்தடி நீர் தேங்கி, கிணறுகள் வற்றாமலும், குடிநீர்ப் பிரச்சினை தீரவும் வழி உள்ளதால், மேற்படி இரண்டு ஆறுகளின் குறுக்கே அணை கட்டித்தர மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஆக்கப்பூர்வமான யோசனையை அரசுக்குத் தெரிவித்ததற்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன்.

**திரு. எம். அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி வட்டம், குதிரை ஆற்றின் குறுக்கே பஞ்சந்தாங்கி அணைக்கட்டும், செம்பங்குளம் அணைக்கட்டும் தடுப்பணைகளாகக் கட்டப்பட்டு, 900 மற்றும் 700 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. கடந்த டிசம்பர் மாதம் பெய்த மழையினால் ஏற்பட்ட கடும் வெள்ளத்தினால், அந்த அணைகள் சேதமடைந்துள்ளன. அதேபோல, பாலாற்றுக்குப் பொருதலாற்று அணையிலிருந்து தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அந்தப் பொருதலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்பட்டுள்ளதால், அ.கலையம்புத்தூருக்கும், சி. கலையம்புத்தூருக்கும் குடிநீர் ஆதாரமாக இருக்கிறது. அந்த அணைக்கட்டும் கடந்த டிசம்பர் மாதம் பெய்த மழையால் சேதமடைந்துவிட்டது. இவற்றை விரைவில் சரி செய்துதர, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரிமை வழங்குவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.



2008 ஏப்ரல் 30]

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதெல்லாம், repair works; சில, mini constructions. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய முக்கியமான கோரிக்கை, பச்சையாற்றிலே அணை கட்டவேண்டுமென்பது. அதுகுறித்து அரசு அதிகாரிகள் மட்டத்திலே ஆய்வு நடத்த உத்தரவிடப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் நகரையொட்டியுள்ள பாலாற்றிலிருந்து சென்னை மற்றும் காஞ்சிபுரத்தில் கட்டடங்கள் கட்டுவதற்கு அதிக அளவில் மணல் எடுக்கப்பட்டு வருவதால், நிலத்தடி நீர் குறைந்து, விவசாயம் பாதித்து, குடிநீர்ப் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது. ஆகவே, காஞ்சிபுரம் அருகேயுள்ள காவலூர் கிராமத்தில் பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி, பாலாற்றுக் குடிநீரைத் தேக்கி, மக்கள் பயன்பெறும் வகையில், காஞ்சிபுரம் மக்களின் தாகம் தீர்க்கப்படுமா என்று அமைச்சர் அவர்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்திற்குக் கிழக்கே வயலூர் என்ற இடத்திலே, அணை ஒன்று கட்டுவதற்கு, சென்ற ஆட்சிக் காலத்திலேயே திட்டமிடப்பட்டு, டெண்டர் விடப்பட்டது. பிறகு பல்வேறு காரணங்களால், பணி நின்றுபோய்விட்டது. பிறகு உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று, பிரச்சினை வந்தவுடன்--குடிநீர் வடிகால் வாரியத்தின் deposit work அது--இப்போது அணை கட்டுகின்ற உத்தேசம் இல்லை; பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், அதேநேரத்தில் வேறு இடத்திலே அந்த அணையைக் கட்டலாமா என்று ஆய்வு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்த முடிவு வந்த பிறகு, குறுக்கே ஓர் அணை கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 183, மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**183—**

## பேருந்து வசதி

***38024—திரு. த.அ. மேகநாதன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரியிலிருந்து, காவேரிப்பட்டினம் தொகுதி, சின்னவரட்டம்பட்டிக்குக் கொத்தளம் வழியாகப் புதிய நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காவேரிப்பட்டினம் தொகுதி, கிருஷ்ணகிரி-சின்னவரட்டம்பட்டி (வழி) கொத்தளம் தடத்தின் நீளம் 42 கிலோ மீட்டர் ஆகும். தற்போதுள்ள அரசாணைப்படி, யாதொரு பேருந்து வசதியும் பெறாத கிராமங்களுக்கு மட்டுமே 35 கிலோ மீட்டரிலிருந்து 40 கிலோ மீட்டர் வரை நகரப் பேருந்து வசதி செய்திட இயலும். தற்போது கோரியுள்ள வழித் தடமானது, கிருஷ்ணகிரியிலிருந்து காவேரிப்பட்டினம்-ஏரிக்கரை-கொத்தளம் சென்று, பின்னர் கொத்தளத்திலிருந்து ஏரிக்கரை வந்து, அதன் பின்னர் பெட்ரஹள்ளி கிராஸ் வழியாக சின்னவரட்டம்பட்டி செல்வதாக இருப்பதால், ஏரிக்கரை-கொத்தளம் 5 கிலோ மீட்டர் தொலைவில், அதே வழித் தடத்தில் மீளத் திரும்ப வரவேண்டியுள்ளது. இதனால், நேரடிப் பயணிகளுக்குப் பயணக் கட்டணம் மற்றும் பயண நேரம் அதிகரிக்கும். இருப்பினும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், தருமபுரி மண்டலம் மூலம் கிருஷ்ணகிரி-சின்னவரட்டம்பட்டி, (வழி) காவேரிப்பட்டினம், ஏரிக்கரை வழியாக நகரப் பேருந்து 6 நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும், கிருஷ்ணகிரி-பாறைக்கொட்டாய் (வழி) காவேரிப்பட்டினம், ஏரிக்கரை, கொத்தளம் நகரப் பேருந்து நாளொன்றுக்குப் பத்து நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு பகுதிவாரியாகப் பேருந்து வசதி உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.



**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதியில், கொத்தளம், கொண்டங்காடு, பெட்ரஹள்ளி, பாறைக்கொட்டாய் போன்ற இருபதுக்கும் மேற்பட்ட மலைக் கிராமங்கள் உள்ளன. அங்குள்ள மக்கள் கிருஷ்ணகிரி மற்றும் காவேரிப்பட்டினத்திற்குத்தான் வரவேண்டும். அவர்களுடைய விளைபொருட்களைக் கொண்டுவர வேண்டுமென்றால்கூட, இந்த நகரங்களுக்குத்தான் வரவேண்டும். மேலும், பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், தொழிலாளர்கள் ஆகியோர் ஒரே பேருந்தில் கூரைமேலே ஏறி வருகிறார்கள். கடந்த மூன்று மாதங்களுக்கு முன்புகூட கூரைமீது அமர்ந்து வந்ததால், அந்த பஸ் உருண்டு ஒருவர் இறந்திருக்கிறார்; பலர் காயமுற்றிருக்கிறார்கள். எனவே, புதிதாக ஒரு பேருந்தைக் கூடுதலாக 3, 4 நடைகள் கிருஷ்ணகிரியிலேயிருந்து அந்த வழியாக இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரியிலிருந்து சின்னவரட்டம்பட்டிக்குக் கொத்தளம் வழியாக எனக் கேட்ட கேள்விக்குத்தான் இந்த பதில். ஏற்கெனவே இருக்கின்ற பேருந்துகளின் நடை போதாது என்று சொன்னால், மேற்கொண்டு கூடுதலாகப் பேருந்துகள் விடுவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. எனவே, கிருஷ்ணகிரியிலிருந்து காவேரிப்பட்டினம்-ஏரிக்கரை-கொத்தளம் வழித் தடத்தில் தனிப் பேருந்தும், அதேபோல், கிருஷ்ணகிரியிலிருந்து நேரடியாகச் சின்னவரட்டம்பட்டிக்குத் தனிப் பேருந்தும் விடுவதற்கு உடனடியாக இந்த அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நான் கேட்கிற கேள்வியே கிருஷ்ணகிரியிலிருந்து காவேரிப்பட்டினம் வழியாக மேற்கண்ட மலைக் கிராமங்களுக்குப் புதிதாக ஒரு பேருந்து இயக்க வேண்டும் என்பதுதான். எனவே,

[2008 ஏப்ரல் 30

கேட்டதையெல்லாம் கொடுக்கக்கூடிய நம்முடைய அமைச்சர் அவர்கள், இந்தக் கோரிக்கையையும் ஏற்று அந்தக் கிராம மக்கள் பயன்பெறும் வகையிலே பேருந்து விடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்ட கேள்வி கிருஷ்ணகிரியிலிருந்து சின்னவரட்டம்பட்டிக்கு. இப்போது, அந்த மலைக் கிராமங்களிலிருந்து வெளியிலே வருவதற்குப் புதிய பேருந்து கேட்டிருக்கிறார்கள். அங்கு விரைவில் பேருந்து விடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், குளச்சல் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளிலுள்ள நூற்றுக்கணக்கான மீனவர்கள் மீன்பிடி தொழில் செய்வதற்காகக் கேரள மாநிலத்திலுள்ள கொல்லம், கொச்சி, எர்ணாகுளம் போன்ற பகுதிகளுக்குத் தினந்தோறும் சென்று கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் குளச்சலிலிருந்து நேரடியாக அந்தப் பகுதிகளுக்குச் செல்வதற்குப் பேருந்து வசதி இல்லை. எனவே, இந்த மீனவ மக்களுடைய நலன் கருதி, குளச்சலிலிருந்து எர்ணாகுளத்திற்கு விரைவுப் பேருந்து வசதி செய்யப்படுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயபால் அவர்கள் நன்றாக அறிவார்கள். கேரள மாநிலத்திற்கும், தமிழ்நாடு மாநிலத்திற்கும் இடையே புதிய போக்குவரத்து ஒப்பந்தம் இப்பொழுது ஏற்பட்டு, தமிழ்நாட்டிலிருந்து கூடுதலாக 6,800 கிலோ மீட்டர் வரை அங்கு செல்லலாம் என்று அனுமதி அளித்திருக்கிறார்கள். ஆனால், கேரள மாநிலத்திலே பேருந்துக் கட்டணம் அதிகம்; தமிழ்நாட்டினுடைய பேருந்துக் கட்டணம் குறைவு என்ற காரணத்தால், கேரள மாநிலத்துக்காரர்கள், தங்களுடைய பேருந்துகள் தமிழ்நாட்டிற்குள் வருவதை விரும்புவதில்லை. தமிழ்நாட்டுப் பேருந்துகள் கேரளாவிற்குச் செல்வதையும் அந்த அரசு விரும்புவதில்லை. எனவே, நேரடிப் பேருந்து வசதி என்பது கொஞ்சம் சிரமமான விஷயம். இருந்தாலும், உங்களுக்கு connected bus service இருக்கின்றவகையிலே, இங்கிருந்து சென்றவுடன் அங்கு பேருந்து கிடைக்கின்றவகையிலே, தமிழ்நாடு அரசின் சார்பாக உங்களுக்குப் பேருந்து வசதி செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2008 ஏப்ரல் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே ஓடக்கூடிய ஆட்டோக்களில் புதிதாகப் பொருத்தப்பட்டிருக்கிற மீட்டர்கள் அடிக்கடி பழுது ஏற்படுவதாகப் புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. மேற்படி புகார், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா? வந்திருந்தால், அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலின்படி, ஆட்டோக்களுக்குப் புதிய கட்டண விகிதம் நிர்ணயித்து, அனைத்து ஆட்டோக்களிலும் Digital Meter பொருத்தப்பட வேண்டுமென்று அரசு சார்பாகச் சொல்லப்பட்டு, அந்த Digital Meters 9 நிறுவனங்களிடமிருந்து வாங்கப்பட்டன. Standard Meter, Pricol Meter, Right Meter, Sunshine Meter, Diamond Meter, Perfect Meter, Paris Meter, Aswin Meter, Super Meter என்று 9 நிறுவனங்களின்மூலமாக அத்தனை ஆட்டோக்களிலும் மீட்டர் பொருத்தப்பட்டது. இப்பொழுது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, சில நாட்களுக்கு முன்பு நேரடியாக எனக்கு ஒரு கடிதம் வந்து, அந்தக் கடிதத்தை வைத்து நம்முடைய போக்குவரத்துத் துறை ஆணையர் அவர்களிடம் விளக்கம் கேட்கப்பட்டது. சென்னை

[2008 ஏப்ரல் 30

மாநகரை ஆறு பகுதிகளாகப் பிரித்து, ஆறு பகுதிகளிலும் வெகு விரைவிலே இந்த மீட்டர் தயாரித்த நிறுவனங்களே நேரடியாக வந்து, அதே இடத்திலேயே ஆட்டோக்களைப் பார்த்துச் சரிசெய்து தருவதாகச் சொல்லியிருக்கின்றன. இன்னும் இரண்டு வார காலங்களில் சென்னை மாநகரத்திலிருக்கின்ற 40,000 ஆட்டோக்களையும் சரிசெய்கின்ற அப்படிப்பட்ட பணி தொடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் வரகூர் தொகுதிக்குட்பட்ட கிராமங்களுக்கு அரியலூரிலிருந்து குன்னம்-வேப்பூர்-பெருமத்தூர் வழியாகத் தொழுதூருக்கும், அதேபோல, பெரம்பலூரிலிருந்து கீழப்புலியூர்-முருக்கங்குழி-பெருமத்தூர் வழியாக லப்பைகுடிகாடுக்கும் இரண்டு நகரப் பேருந்துகளை இயக்குவதற்கு அரசு முன்வருமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகுறித்துக் கடந்த முறை சட்டமன்றத்தில் கேள்வி கேட்டபோதே, அவர்களிடம் தங்கள் பகுதியிலே எந்தப் பகுதிக்குப் பேருந்துகள் வேண்டுமென்று எழுதித் தாருங்கள்; அதுகுறித்து உடனடியாகக் கவனிக்கப்படும் என்று நான் பதில் சொல்லியிருக்கிறேன். அரியலூரிலிருந்து லப்பைகுடிகாட்டிற்கு ஏற்கெனவே பல பேருந்துகள் ஓடிக்கொண்டிருப்பதை நானும் நன்றாக அறிவேன். அனைத்து ஊர்களையும் அறிவேன். எனவே, பயணிகள் அடர்வு சரியாக இருக்குமானால், 35 கிலோ மீட்டருக்குள் இருக்குமானால், நிச்சயமாக அந்தப் பேருந்து வசதி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் செய்து தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 184, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.



2008 ஏப்ரல் 30]

**184—**

## கண் சிகிச்சைப் பிரிவு

***11222—திரு. இரா. மாணிக்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை அரசு மருத்துவமனையில் கண் சிகிச்சைப் பிரிவு துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டத்தில், குளித்தலை தாலுகா மருத்துவமனைக்கு அருகில், திருச்சி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும், கரூர் அரசுத் தலைமை மருத்துவமனையும் கண் சிகிச்சைப் பிரிவுடன் அனைத்து சிறப்புச் சிகிச்சை வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், குளித்தலை அரசு மருத்துவமனைக்குத் தற்போது கண் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்த அவசியம் எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.

**திரு. இரா. மாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை அரசு மருத்துவமனை, நம்முடைய முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்கள், இரண்டாவது முறையாக முதல்வராக இருந்த காலத்திலே, அப்போது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்த, நம்முடைய பேராசிரியர் அவர்களால் தொடங்கப்பட்டது. குளித்தலை மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலே, சுமார் ஒரு இலட்சம் பொது மக்கள் அந்த ஒரு மருத்துவமனையையே சிகிச்சைக்காக நம்பியிருக்கிறார்கள். மேலும், நாள்தோறும் 2,000-க்கும் மேற்பட்ட பொது மக்கள் வெளிநோயாளிகளாக வந்து அந்த மருத்துவமனையிலே சிகிச்சை பெற்று வருகிறார்கள். அந்த மருத்துவமனைக்குக் கண் சிகிச்சைப் பிரிவு வேண்டுமென்பது பொது மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையாகும். காரணம், கண் சிகிச்சை பெறவேண்டுமென்று சொன்னால், 50 கி.மீ. தூரம் கரூருக்கும், திருச்சிக்கும் சென்று கண்

[2008 ஏப்ரல் 30

அறுவை சிகிச்சைப் பெறுவதற்காகப் பொது மக்கள் செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்கள், இரண்டாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்றிருந்த காலத்திலே, அவர்களுடைய பிறந்த தின விழாவிலே, ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு திட்டத்தை அறிவித்துச் செயல்படுத்தினார்கள். அதேபோல, 1971 ஆம் ஆண்டு, தன்னுடைய 48 ஆவது பிறந்த தின விழாவிலே, தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு இல்லங்களைத் திறந்தார்கள். 1972 ஆம் ஆண்டு, தன்னுடைய 49 ஆவது பிறந்த நாள் விழாவிலே கண்ணொளி வழங்குகின்ற திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். 1973 ஆம் ஆண்டு அவர்களுடைய . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. இரா. மாணிக்கம்:** 50-வது பிறந்த நாள் விழாவிலே, ஏழை மக்களுக்கு ஒளி ஏற்றுகின்ற நல்ல திட்டங்களை அளித்துக் கொண்டிருக்கின்ற முதல்வர் கலைஞர் அவர்களுடைய நல்லாட்சியில், பொற்கால ஆட்சியில், குளித்தலை அரசு மருத்துவமனையிலே கண் சிகிச்சைப் பிரிவு தொடங்கப்படுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே முதல்முறையாக 1972 ஆம் ஆண்டில், பார்வையிழந்தோருக்குக் கண்ணொளி வழங்கும் திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டு, இலவசக் கண் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டன. கண்ணாடிகளும் இலவசமாக வழங்கப்பட்டன. கரூர் மாவட்டத் தலைமை மருத்துவமனையிலிருந்து நடமாடும் கண் மருத்துவக் குழுவினர் மாதம் இருமுறை குளித்தலை மருத்துவமனைப் பகுதிகளுக்கு வந்து, கண் சிகிச்சை அளிப்பதுடன் அவர்களுக்கு மேல் சிகிச்சை தேவைப்பட்டால் கரூர் அரசுத் தலைமை மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கவும் ஏற்பாடு செய்யப்படுகிறது. மேலும், கரூர் மாவட்டத்தில் 9-க்கும் மேற்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனியார் மருத்துவமனைகள் அரசு நிதியுதவியுடன் மாவட்டம் முழுவதும் அவ்வப்போது கண் சிகிச்சை



2008 ஏப்ரல் 30]

முகாம்களை நடத்தி, நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்து வருகின்றன. எனவே, குளித்தலை அரசு மருத்துவமனையில் தற்போது கண் சிகிச்சைக்கெனத் தனிப் பிரிவு ஏற்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.

**திரு. இரா. மாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை அரசு மருத்துவமனையில், தற்போது கண் சிகிச்சைப் பிரிவு தொடங்குவதற்கு வாய்ப்பில்லை என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கின்றார்கள். வருங்காலத்திலாவது, அங்குக் கண் சிகிச்சைப் பிரிவைத் தொடங்குவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன், அந்த மருத்துவமனையில் 66 படுக்கை வசதிதான் உள்ளது. அதனை 100 படுக்கை வசதி கொண்டதாகத் தரம் உயர்த்தித் தரவும், அதேபோல அங்கே காலியாகவுள்ள நான்கு மருத்துவர் பணியிடங்களை நிரப்பித் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் தொகுதியில், போளூருக்குப் பிறகு பெரிய கிராமமாக இருப்பது களம்பூர். அந்தக் களம்பூர் பகுதியைச் சுற்றி 25 கிராமங்கள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 25 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். அங்கே அந்த மருத்துவமனையிலே சுமார் 400 முதல் 800 பேர் வரை தினமும் சிகிச்சை பெறுகிறார்கள். ஆனால், அங்கே படுக்கை வசதி இல்லை. எனவே, 30 பேர் கொண்ட படுக்கை வசதியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். அந்தக் கோரிக்கை நிறைவேறுமா என்பதை அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

[2008 ஏப்ரல் 30

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. திருநாவுக்கரசு.

**திரு. கே. திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டையிலுள்ள அரசுப் பொது மருத்துவமனை, சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் உள்ளது. இப்பகுதியில் வேப்பூரிலிருந்து அரசூர் வரை அடிக்கடி விபத்துகள் நடைபெற்று, தினமும் உயிர் இழப்புகள் அதிகரித்து வருகின்றன. விபத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் அவசர சிகிச்சைக்குக்கூட கடலூர், விழுப்புரம், பாண்டிச்சேரி மருத்துவமனைகளை நாட வேண்டி உள்ளது. எனவே, இதுபோன்ற விபத்துகளினால் பாதிக்கப்பட்டவர்களின் உயிரைக் காப்பாற்ற உளுந்தூர்பேட்டை அரசுப் பொது மருத்துவமனையை நவீன முறையில் விரிவுபடுத்த, அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டைக்கும், விழுப்புரத்திற்கும் தூரம் குறைவுதான். விழுப்புரத்தில் இப்போது அவசர சிகிச்சை மையம் திறக்கப்பட்டுள்ளது. மேலும், மருத்துவக் கல்லூரியும் தொடங்க இருக்கிறது. உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனை தரம் உயர்த்தப்பட்டு, நவீன சிகிச்சை அரங்குகள் எல்லாம் அவற்றில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மேலும் தேவைப்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.



2008 ஏப்ரல் 30]

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கழுக்குன்றம் வட்டத் தலைமை மருத்துவமனையிலே சிறப்பு மருத்துவர்கள் யாரும் இல்லை. அந்தப் பகுதியிலே திருக்கழுக்குன்றம் வட்டம், திருப்போரூர் பகுதி, செய்யூர் பகுதியிலேயிருந்து ஏராளமான நோயாளிகள், புற நோயாளிகள் வருகிறார்கள். எனவே, அந்தப் பகுதியிலே கண் சிறப்பு மருத்துவர்களை நியமிப்பதற்கு அரசு முன்வருமா என்று கேட்டு, அதேபோன்று, செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே புதிதாகக் கண் வங்கியை அமைப்பதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண் மருத்துவமனை, அனைத்து மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் இருக்கின்றன. அதேபோல, 54 அரசு மருத்துவமனைகளிலும் கண் மருத்துவச் சிகிச்சை மையங்கள் இருக்கின்றன. மேலும், தனியார் தொண்டு நிறுவனங்கள் இதில் அதிகமாக ஆர்வம் எடுத்துக்கொண்டு, அவர்கள் சிசிச்சை அளிக்கிற காரணத்தால், அந்த மருத்துவமனைக்குக் கூடுதலாகத் தேவை இருக்காது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 185, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**185—**

**தொழிற்பேட்டை**

***33820—திரு. த. தியோடர் ரெஜினால்டு:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பத்மநாபபுரம் தொகுதி, கப்பியறை பேரூராட்சியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2008 ஏப்ரல் 30

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் ஒன்றியத்தில் புதிதாகத் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு.

**திரு. த. தியோடர் ரெஜினால்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டம் சிறிய மாவட்டம். படித்தவர்கள் நிறைந்த மாவட்டம். ஆனால், தொழிற்சாலைகள் எதுவுமே இல்லாத மாவட்டம். குறிப்பாக, மேற்குப் பகுதியில் கல்குளம், விளவங்கோடு தாலுகாக்களில் அதிகமானவர்கள் படித்து வேலையில்லாமல் இருக்கிறார்கள். மாவட்டத்தின் மத்தியப் பகுதியான என்னுடைய தொகுதியில் உள்ள கப்பியறை பகுதியிலே அரசுப் புறம்போக்கு நிலங்கள் ஏராளமாக உள்ளன. எனவே, படித்து வேலையில்லாத இளைஞர்கள் பயன்பெறுகின்ற வகையில், தாய் உள்ளம் கொண்ட நம்முடைய தலைவர் கலைஞருடைய அரசு, அங்குப் புதிய தொழிற்பேட்டை அமைக்க முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கோணம் மற்றும் மார்த்தாண்டம் ஆகிய இரண்டு இடங்களில் "சிட்கோ" மூலம் தொழிற்பேட்டைகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், தொழிற்பேட்டை வேண்டுமென்று சொன்னால், தொழில் தொடங்க ஆர்வம் உள்ள இருபது தொழில் முனைவோர்கள், தகுந்த தொழில் திட்டங்கள் மற்றும் போதுமான நிதி ஆதாரங்கள் ஆகியவற்றுடன் திருப்பித் தரப்படாத ஒப்பளிப்புத் தொகையினை D.D. மூலம் கட்ட முன்வந்தால், புதிதாகத் தொழிற்பேட்டை அமைப்பதற்கான நிலம், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு, மாவட்ட ஆட்சியர், பொது மேலாளர் (மாவட்டத் தொழில் மையம்) மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஆகியோருடன்



2008 ஏப்ரல் 30]

கலந்தாலோசித்து, கருத்தாய்வு செய்து, மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு.

**திரு. த. தியோடர் ரெஜினால்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்திலாவது விதிகளைத் தளர்த்தி, அங்குத் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மூலம் இல்லாவிட்டாலும்கூட, 'சிட்கோ' நிறுவனம்மூலம் தொழிற்பேட்டைகள் உருவாக்கப்படுவது ஒருபுறம் இருக்க, தனியார்களும் தொழிற்பேட்டைகளை உருவாக்குவதை ஊக்குவிக்கும்முகமாக, இந்த அரசு, சென்னை நகரின் மையப் பகுதியிலிருந்து 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால், 50 ஏக்கர் மற்றும் அதற்கு அதிகமான பரப்பில், தனியார் தொழிற்பேட்டை அமைவதற்கான அடிப்படைக் கட்டுமானச் செலவில், 20 விழுக்காடு, அதிகபட்சம் ஒரு கோடி ரூபாய் வரை, அடிப்படைக் கட்டமைப்பு மானியம் வழங்கப்படும் என நமது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், கடந்த 22-2-2008-ல் வெளியிட்ட சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்கொள்கையில் அறிவித்திருக்கின்றார்கள். ஆகவே அந்த வாய்ப்பையும் தனியார் பயன்படுத்திக்கொள்ளலாம்.

முற்பகல் 10-10

மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த செண்பகராயன்புதூர் கிராமத்தில் 250 ஏக்கர் நிலப் பரப்பில் இரப்பர் பூங்கா அமைக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டு, முதற்கட்டமாக 150 ஏக்கர் நிலம் இப்போது கையகப்படுத்தப்பட்டு, Tamil Nadu Industrial Park for Rubber என்ற தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான TIDCO மற்றும் தனியார் கூட்டமைப்பின்மூலம் பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, 150 ஏக்கரில் இரப்பர், இரப்பர் சார்ந்த பொருட்கள் தயாரிப்புக்கென ஒட்டுமொத்த இரப்பர் பால் பதப்படுத்தும் நிறுவனம், பொது மாசுக்

[2008 ஏப்ரல் 30

கட்டுப்பாட்டுச் சாதனங்கள் போன்ற வசதிகளுடன் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைப்பதற்கென முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு, மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும் அதற்கான அனுமதி, வரும் செப்டம்பர் 2008-ல் கிடைக்கவுள்ளது என்ற நல்ல செய்தியையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 186, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி, மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**186—**

**கட்டட வசதி**

***14585—திரு. வே. செந்தில் பாலாஜி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் தொகுதி, கரூர் கிளைச் சிறைச்சாலையினைப் புதிய இடத்திற்கு மாற்றிடவும், புதிய கட்டடம் கட்டவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கரூர் தொகுதி, கரூர் கிளைச் சிறை தற்பொழுது அமைந்துள்ள இடம், சிறைவாசிகளை நீதிமன்றம் மற்றும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வசதியாக உள்ளதாலும், சிறைவாசிகளின் உறவினர்கள் நேர்காணல் செய்திட வசதியாக உள்ளதாலும், இக்கிளைச் சிறையினை வேறு இடத்திற்கு மாற்றிடவோ, புதிய கட்டடம் கட்டவோ அவசியம் தற்போது எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் கிளைச் சிறைச்சாலை, 19-10-1983 ஆம் ஆண்டுமுதல் திருச்சி மத்தியச் சிறைச்சாலையினுடைய கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றது. 54 பேர் இருக்கக்கூடிய கரூர் கிளைச் சிறைச்சாலையில்,



2008 ஏப்ரல் 30]

இரண்டாம் நிலைக் காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்கள்
என 11 பேர் பணியாற்றி வருகின்றனர். அங்கே பணியாற்றுகின்ற
காவலர்களுக்குக் குடியிருப்பு வசதி அறவே இல்லை;
பாதுகாவலருக்கெனத் தனியாக அறைகள் இல்லை; அதேபோல,
பணியாளர்களுக்குக் கழிப்பிட வசதி சுத்தமாக இல்லை; கம்ப்யூட்டர்
வசதி இல்லை; அந்தக் கிளைச் சிறைச்சாலைக்கு வாகன வசதி
இல்லை; மருத்துவ வசதிகள் இல்லை; சமையலர் பணியிடம் காலியாக
உள்ளது; துப்புரவுப் பணியிடமும் காலியாக உள்ளது; அலுவலக்
உதவியாளர்கள் இல்லை. இப்படிக் கரூர் தாலுகா அலுவலகக்
கட்டடத்தின் உள்ளே இயங்கி வருகின்ற அந்தக் கரூர்
சிறைச்சாலையை, வேறு இடத்தில் அனைத்து வசதிகளுடன்கூடிய
புதிய கட்டடமாகக் கட்டுவதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
மறுபரிசீலனை செய்வார்களா என்று தங்கள்வாயிலாக அறிய
விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கரூர் கிளைச் சிறைச்சாலையைப் பொறுத்த அளவில்,
மாண்புமிகு உறுப்பினரவர்கள் இங்கே சில விவரங்களைத்
தந்திருக்கின்றார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், அங்கே
அரசின் சார்பாக மொத்தம் 36 பேர்களைத்தான் அடைப்பதற்கு
அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. தற்சமயம் 32 பேர்கள்தான்
இருக்கின்றார்கள். ஏற்கெனவே, 2004-2005-ல் அந்தக் கிளைச்
சிறைச்சாலைக்கு ஏறக்குறைய 4½ இலட்சம் ரூபாய் செலவு
செய்யப்பட்டுப் பழுதுகள் நீக்கப்பட்டிருக்கின்றன. 2006-2007 ஆம்
ஆண்டு அந்தக் கிளைச் சிறைச்சாலைக்குச் சுற்றுச் சுவர்
எழுப்புவதற்காக அரசின் சார்பாக 7½ இலட்சம் ரூபாய்
வழங்கப்பட்டு, அந்தப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.
மாண்புமிகு உறுப்பினர் வைத்திருக்கின்ற கோரிக்கைகளில், சிறைக்
காவலர்களுக்கு வீடுகள் இல்லை; வீடுகளைக் கட்டித்
தரவேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதுபற்றி
வருங்காலத்தில் அரசு பரிசீலிக்கும். வேறு சில அடிப்படை
வசதிகளான உதவியாளர்கள் நியமனம், கணினி வசதி மற்றும் சில
பிரச்சினைகளைப் பற்றி இங்கே கோரிக்கையாக வைத்திருக்கின்றார்கள்.
அவற்றையெல்லாம் ஆய்வு செய்து, வருங்காலத்தில் அரசு அதற்குரிய
நடவடிக்கையை எடுக்கும்.

[2008 ஏப்ரல் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் கிளைச் சிறைச்சாலை, கரூர் தாலுகா அலுவலகக் கட்டடத்தின் உள்ளே இயங்கி வருகின்றது. தாலுகா அலுவலகத்திற்கு வருகின்ற பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுகின்ற வகையிலேயும், பொது மக்கள் மிகவும் சிரமப்படுகின்ற வகையிலும் சிறைச்சாலை அமைந்திருக்கின்றது. அதேபோல, அங்கே பணியாற்றுகின்ற காவலர்களுக்கும் கைதிகளைச் சிறைக்கு அழைத்துச் செல்வதில் மிகுந்த பாதிப்பு ஏற்படக்கூடிய வகையிலே, நகரத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ளதால், சிறைச்சாலையை புதிய இடத்திற்கு மாற்றவேண்டும். அதேபோல, கரூர் மாவட்டம், தனி மாவட்டமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே உருவாக்கப்பட்டது. எனவே, கிளைச் சிறைச்சாலையை, மாவட்டச் சிறைச்சாலையாகத் தரம் உயர்த்துவதோடு, புதிய கட்டடம் கட்டுவதற்கும் மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன். மேலும், மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறிய பதிலிலே 32 பேர்கள்தான் தற்போது உள்ளதாகத் தெரிவித்தார்கள். ஆனால், 41 பேர்கள் கரூர் கிளைச் சிறையில் இருக்கின்றார்கள். ஆகவே, அதனை வேறு இடத்திற்கு மாற்றி, புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், தாலுகா அலுவலகத்திலே கிளைச் சிறைச்சாலை இயங்குவது என்பது, தமிழ்நாடு முழுக்க எல்லா தாலுகா அலுவலகங்களிலும்--மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும்--தாலுகா அலுவலக இடத்திலேதான் அங்கே மருத்துவமனை இருக்கும், அங்கே எல்லாமே, தாலுகா அலுவலகத்திற்குள்ளேதான் சிறைச்சாலைகள், ஆரம்ப காலத்திலே அமைக்கப்பட்டிருந்தன. தமிழ்நாட்டிலே இருக்கின்ற கிளைச் சிறைச்சாலைகள் பெரும்பாலும் தாலுகா அலுவலகத்திற்குள்ளேதான் இருக்கும். புதிதாக உருவாக்கப்பட்ட



2008 ஏப்ரல் 30]

மாவட்ட சிறைச்சாலைகள் வேண்டுமென்றால் வெளியிடத்தில் இருக்கலாம். மத்திய சிறைச்சாலைகள் தனியாக இருக்கலாம். ஆனால், உறுப்பினர் கேட்கின்ற கேள்வி, கரூர் தனி மாவட்டமாகிவிட்டது; திருச்சி அருகிலே இருந்த காரணத்தினாலேதான், மத்திய சிறை இருந்த காரணத்தினாலேதான், கரூர் கிளைச் சிறைச்சாலையாக இதுவரை பராமரிக்கப்பட்டு வருகின்றது; இப்போது, மாவட்டச் சிறைச்சாலை அந்தஸ்து வேண்டுமென்று கேட்கிறார். ஏற்கெனவே நாகப்பட்டினத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்திலும் அதற்காக நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு, மாவட்டச் சிறைச்சாலைகள் திறப்புவிழா செய்யப்படுகின்ற நிலையிலே இருக்கின்றது. ஏற்கெனவே, நான்கு மாவட்டச் சிறைச்சாலைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. அதைத் தொடர்ந்து வருகின்ற காலங்களிலே கரூர் மாவட்டத்திற்கும், மாவட்டச் சிறைச்சாலை அமைப்பது குறித்து அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 187, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**187—**

## சிறப்பு நிதி

**•28100—திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர் கோயில்களைச் சீரமைக்க சிறப்பு நிதி வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) ஒவ்வோர் ஆண்டும் அரசு செய்யும் அறிவிப்பினைத் தொடர்ந்துதான் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்துள்ளது. தமிழகத்தில், ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்கள் வசிக்கும் பகுதிகளிலுள்ள இந்து சமய அறநிலையத்

துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத, சிறு கோயில்களில் திருப்பணி செய்வதற்கான திட்டத்தின்கீழ், திருக்கோயில் ஒன்றிற்கு ரூபாய் 25,000 வீதம் நிதி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதி முழுவதும் அரசு நிதியல்ல; நிதி வசதி உள்ள திருக்கோயில்களிலிருந்து நிதியைப் பெற்று இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. மேலும், இத்திட்டத்தின்கீழ், கடந்த ஆண்டு 2007 ஆம் ஆண்டுவரை, அரசால் அறிவிக்கப்பட்டபடி, 14,000 திருக்கோயில்களுக்குத் தலா ரூபாய் 25,000 வீதம் உபரி நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் நிதியிலிருந்து, மொத்தமாக 35 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டும் இந்தத் திட்டம் தொடரும். ஆயிரம் கோயில்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றிற்கு ரூபாய் 2.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்களுக்கான திருக்கோயில்கள் ஆண்டுதோறும் கட்டப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டும், ஓர் ஆயிரம் கோயில்களைச் சீரமைப்பதற்காக, 2.5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். தொடர்ந்து 25 ஆயிரம் ரூபாய் என்பது பல ஆண்டுக் காலமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. இன்றைய விலைவாசிக்கு ஏற்ப 25 ஆயிரம் ரூபாய் என்பது போதாது. அது கூடுதலாக்கப்படவேண்டுமென்ற கோரிக்கைகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. இங்கே சட்டமன்றத்தில் பேசுகின்றபோதுகூட, பல உறுப்பினர்கள் அதை வலியுறுத்தினார்கள். ஆகவே, என்னைப் பொறுத்தவரையில் அந்தத் திருக்கோயில்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் என்று இருப்பதை அதிகரிக்க வேண்டும்; குறைந்தது ஒரு இலட்சம் ரூபாயாவது கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையைத் தங்கள்மூலமாக அமைச்சருக்குத் தெரிவித்து, அதற்கு ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏற்கெனவே நடைமுறையில் இருந்த ஒரு திட்டம். அந்தத் திட்டத்தின்படிதான் இந்த ஆண்டு, நிர்ணயிக்கப்பட்ட அதே தொகையான ரூபாய் 25 ஆயிரம்வீதம், ஆயிரம் கோயில்கள் தேர்வுசெய்யப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்



குறிப்பிடுவதைப்போல, விலையேற்றத்திற்கு ஏற்ப, ஏற்படக்கூடிய பற்றாக்குறை நிதியை அந்தப் பகுதியில் இருக்கக்கூடியவர்கள்மூலமாகப் பெற்றும் இதை நிறைவேற்றலாம். இருந்தாலும், எதிர்காலத்தில் இது பற்றிப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியதைப்போல, இப்போதும் அதைத்தான் செய்துகொண்டிருக்கிறார்கள். 25 ஆயிரம் ரூபாய் என்பது எந்த வகையிலும் போதுமானதாக இல்லை. அங்கே இருக்கின்றவர்கள் வசூல் செய்து ஒரு இலட்சம், ஒன்றரை இலட்சம் ரூபாய் அளவிற்குத்தான் அந்தச் சிறு கோயில்களைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பளு அதிகமாக இருக்கிறது என்பது எல்லோருக்குமே தெரியும். ஆகவே, 25 ஆயிரம் ரூபாய் என்பதை, ஏதாவது ஓர் அளவிற்கு உயர்த்தித் தருவதற்கு அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-20

**திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின்கீழ், ஏற்கெனவே 14 ஆயிரம்; இப்போது ஓர் ஆயிரம்; 15 ஆயிரம் திருக்கோயில்களுக்கு இந்த நிதி வழங்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு அளவிலே இருக்கக்கூடிய பஞ்சாயத்துகளை எடுத்துப்பார்த்தால், ஏறத்தாழ 12,600 பஞ்சாயத்துகள் இருக்கின்றன. ஒரு பஞ்சாயத்திற்கு ஒரு திருக்கோயில் என்று எடுத்துக் கொண்டால்கூட, ஆதி திராவிடர் பகுதிகளுக்கு அது போதுமானதாகவும் இருக்கிறது. இப்போது அந்தத் திருக்கோயில்களுக்குக் கேட்புகள் அந்த அளவிற்கு இல்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்தக் கேள்வியே, ஆதி திராவிடர் கோயில்களைச் சீரமைப்பதற்கான சிறப்பு நிதி பற்றித்தான். ஆகவே, புதிதாகக் கோயில்களை ஆங்காங்கே கட்ட வேண்டும் என்பதைவிட, இருக்கக்கூடிய திருக்கோயில்களைச் சீரமைத்துத் திருப்பணிகளைச் செய்கிற அந்தப் பணியை, இந்த

25 ஆயிரம் ரூபாய் என்பதைத் துறையின் சார்பில் வழங்கப்படுகிற நிதியாக ஏற்று, அதைச் செய்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, இந்த நிதி அரசு நிதியும் அல்ல; பல்வேறு திருக்கோயில்களிலிருந்து வரக்கூடிய உபரி நிதி. அந்த நிதியை மற்றக் கோயில்களிலிருந்து திருப்பி, இந்தப் பணியைச் செய்வதன் காரணமாக, ஏறத்தாழ 35 கோடி ரூபாய் கடந்த ஆண்டுவரை அப்படி எடுக்கப்பட்டிருக்கிறது. அதனால், வருவாய் வரக்கூடிய அந்தத் திருக்கோயில்களுக்குச் செய்யக்கூடிய பணிகளும் பாதிக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்ந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, இதுவரையிலும் 15 ஆயிரம் ஆலயங்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் வீதம் 35 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். முந்தைய ஆட்சிக் காலத்தில் எவ்வளவுத் திருக்கோயில்களுக்கு இந்தப் பணம் ஒதுக்கப்பட்டது என்றும், இப்போது நீங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு எவ்வளவு ஆலயங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அதேபோல அந்த 25 ஆயிரம் ரூபாய் வழங்குகிறபோது, அதற்கு ஒரு வரையறை வகுக்கப்பட்டிருக்கிறது; அந்த நிதி ஒதுக்கப்படுகிறபோது இப்படித்தான் இந்த design இல்தான் கட்டப்பட வேண்டும் என்று வரையறை இருப்பதை மாற்றி, அங்கே இருக்கிறவர்கள், பொது மக்களிடமிருந்து நிதியைத் திரட்டிச் சேகரிக்கிறபோது, அவர்கள் எப்படி வேண்டுமானாலும் அந்த 25 ஆயிரம் ரூபாயைப் பயன்படுத்திக்கொள்கிறார்களா என்பதை அறிந்து, அதுபோன்று வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும் உங்கள்மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு சிறப்புத் திட்டமாக கடந்த ஆட்சியின்போது எடுக்கப்பட்டது. அந்த வகையிலே முதலாம் ஆண்டு, ஓர் 6 ஆயிரமும், அடுத்த ஆண்டு ஓர் 6 ஆயிரமும், பிறகு 2 ஆயிரமும் என்று 14 ஆயிரம் திருக்கோயில்களுக்கு அது





வழங்கப்பட்டு, இப்போது, இந்த ஆண்டு ஓராயிரம் கோயில்களைத் தேர்வு செய்திருக்கிறோம். ஆகவே இந்த நிதியை வழங்கும்போது, அங்கே ஒரு குழுவினை அமைத்து அந்தக் குழுவின்மூலமாகத்தான் துறையைச் சார்ந்த அதிகாரிகள் மூலமாகத்தான் அந்த நிதி, வழங்கப்படுகிறது. வழங்கப்படுகிற நிதி முறையாகப் போய்ச் சேருகிறது. இப்போது இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி, வருவாய் வரக்கூடிய திருக்கோயில்களிலிருந்து எடுக்கக்கூடிய காரணத்தாலே, ஆங்காங்கே இருக்கக்கூடிய அந்த வருவாய் வரக்கூடிய கோயில்களின் வளர்ச்சிப் பணிகளும் பாதிக்கப்படுகின்றன. அடிப்படை வசதிகள் செய்வதற்குத் தடையாக இருக்கிறது. ஆகவே, குறிப்பாக இந்த ஆண்டு கல்விக்காகக் கூடுதலான நிதியை நாம் ஒதுக்கி இருக்கிறோம். குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால், இந்தத் துறையின் சார்பிலே நடத்தப்படுகிற 36 உயர்நிலைப் பள்ளிகள் வரை இருக்கக்கூடிய பள்ளிகளுக்கு 5 கோடி ரூபாயைச் சிறப்பு நிதியாக ஒதுக்கி இருக்கிறோம். அதேபோல, நடைபெறுகிற 3 கல்லூரிகள், நிதிநிலையால் சிக்கி, அதற்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்வதற்கு நிதி இல்லாமல் இருந்த காரணத்தாலே இந்த நிதியிலிருந்து ஒரு 5 கோடி ரூபாயை மாற்றி இருக்கிறோம். குறிப்பாக நூலகங்கள்--திருக்கோயில்களின் சார்பிலே ஒரு 100 நூலகங்களைத் திறப்பதற்கு இந்த மானியக் கோரிக்கையிலே அறிவித்திருக்கிறோம். யோகாசனம் நடத்துவதற்கு 50 இடங்களைத் தேர்வு செய்து அறிவித்திருக்கிறோம். கருணை இல்லங்கள்--ஏற்கெனவே இருக்கக்கூடிய 42 கருணை இல்லங்களோடு சேர்த்து மேலும் ஒரு 10 கருணை இல்லங்களை நடத்துவதற்கு இப்போது நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த ஆதி திராவிடர் பகுதியிலே இருக்கக்கூடிய கோயில்களுக்கு ஏறத்தாழ போதுமான அளவிற்கு இப்போது நிதி சென்றிருக்கிறது. ஆகவே இன்னும் கூடுதலாகப் புதிய கோயில்களைக் கட்ட வேண்டும் என்பதைவிட, இதுபோன்ற பணிகளைச் செய்வது ஏதுவாக இருக்கும். இருக்கக்கூடிய அந்தக் கோயில்களுக்குத் திருப்பணிகளைச் செய்தால் போதுமானது என்று துறை கருதுகிறது என்பதைத் தங்கள் கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லாமல்...

[2008 ஏப்ரல் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியென்றால் உட்கார்ந்துவிடுங்கள்.

**திரு. அருள் அன்பரசு:** ஒரே ஒரு வரி. இது முக்கியமான கேள்வி. 'ரோப் கார்' அமைத்துத் தரப்படும் என்று இந்த அரசு பதவியேற்றவுடன் அறிவித்து 2 ஆண்டுகள் கடந்துவிட்டன. இன்னும் அதற்கான பணிகள் சோளிங்கர் அருள்மிகு யோகநரசிம்மர் ஆலயத்தில் துவக்கப்படவில்லை. அதேபோல, அமைச்சருடைய பதிலுரையிலும் அது இடம்பெறவில்லை. என்ன ஆயிற்று அந்தத் திட்டம்? அது இந்த அரசின் பரிசீலனையில் இருக்கிறதா? பணிகள் துவக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து இந்தக் கேள்வியை வலியுறுத்திக் கொண்டே வந்திருக்கிறார்கள். நானும் தொடர்ந்து பதில்களைச் சொல்லிக் கொண்டே இருக்கிறேன். கடந்த மானியக் கோரிக்கையின்போதுகூட, அவர் தன்னுடைய உரையிலே குறிப்பிட்டிருந்தார். அதற்குப் பதிலளிப்பதற்குக் கால அவகாசம் இல்லாத காரணத்தினாலே, நான் சொல்ல இயலாமல் போய்விட்டது. ஆகவே, அந்த வாய்ப்பை இப்பொழுது அவர் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். அந்தத் திருக்கோயிலைப் பொறுத்தவரையில், அவருடைய கோரிக்கையான 'ரோப் கார்' அமைக்கக்கூடிய திட்டம் நிச்சயமாக நிறைவேற்றப்படும். அதற்கு ஏற்கெனவே 'Rites India' என்ற அந்தக் கம்பெனிக்கு நாம் அந்தத் திட்டத்தைப்பற்றிய ஒப்புதலைப் பெறுவதற்காக அனுப்பியிருந்தோம். அவர்கள் 5.5 கோடி ரூபாய் அதற்குச் செலவாகும் என்றும், இதை அமைப்பது இலாபகரமானதாக இருக்காது என்றும் அவர்கள் கருத்தை அறிவித்திருந்தார்கள். இருந்தாலும்கூட, நாம் வங்கிகளில் இருந்து கடனாகப் பெறுவது போன்ற காரியங்களில் ஈடுபடாமல், அந்த நட்டத்தைச் சமாளிப்பதற்கு, மற்றத் திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். நிச்சயமாகச் செய்து தரப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சற்று அவசரப்பட வேண்டாம். அதைச் செய்து தருவதற்கு நான் இங்கே உறுதியளிக்கிறேன்.



2008 ஏப்ரல் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 188, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**188—**

### தரம் உயர்த்துதல்

**•5147—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்மலையனூர் தொகுதி, கடலியில் உள்ள ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தங்கள் அனுமதியோடு திருத்திய விடையினைப் படிக்கிறேன்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை நிலை எண் 202, பள்ளிக் கல்வி, நாள், 10-8-2007-ல், 2007-2008 ஆம் கல்வியாண்டில் 'அனைவருக்கும் கல்வி' என்ற மைய அரசின் திட்டத்தின்கீழ், விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, கடலியில் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மேல்மலையனூர் தொகுதியிலுள்ள கடலி ஆரம்பப் பள்ளியைக் கடந்த ஆண்டு நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திய நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு அந்தக் கடலி ஊராட்சி மக்களின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேவேளையில், அந்தப் பள்ளியின் அடிப்படைத் தேவைகளான கட்டடங்கள், சுற்றுச் சுவர், போதிய ஆசிரியர் நியமனம் உள்ளிட்டவற்றை நிறைவேற்றிட அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

[2008 ஏப்ரல் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்திருக்கக்கூடிய விவரங்களின்படி இப்போது ஒரேயொரு பட்டதாரி ஆசிரியர் பணியிடம் மாத்திரம் அந்தப் பள்ளியிலே காலியாக இருக்கிறது என்று அறிகிறேன். மிக விரைவில் அந்தப் பணியிடமும் நிரப்பப்படும். அங்கே போதுமான இட வசதிகள் இருக்கின்றன. எனவே, வரக்கூடிய ஆண்டுகளிலே தேவைப்படக்கூடிய வகுப்பறைகளையும் உருவாக்கக்கூடிய முயற்சிகளை அரசு நிச்சயமாக மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பள்ளிக் கல்வித் துறைக்குப் பல்வேறு மாற்றங்களை நவீன காலத்திற்கேற்ப, கல்வி முறையை தமிழ்நாட்டிற்கு வழங்கி வருகிற நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களுடைய செயல்களை எங்களுடைய மருத்துவர் அய்யா அவர்கள்கூட பாராட்டியிருக்கிறார்கள். எனவே, அந்த அடிப்படையிலே தொடர்ந்து அவருடைய பணிகள் சிறக்க, நானும் இந்த நேரத்திலே என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியானது மிக மிகப் பின்தங்கிய மக்கள் வாழ்கிற பகுதி. எனவே, அங்கே பல்வேறு பள்ளிகள் இப்போது தரம் உயர்த்தப்பட வேண்டிய நிலை இருந்தாலும்கூட, குறிப்பாக, நொச்சலூர் என்கிற ஊராட்சியில் ஒரு நடுநிலைப் பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளியில் ஏறக்குறைய 361 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். அங்கேயிருந்து அவர்கள் மேல் கல்வியைப் பெற வேண்டும் என்று சொன்னால், 7 கிலோ மீட்டருக்கு மேல் பக்கத்தில் இருக்கிற அவலூர்ப்பேட்டை மேல்நிலைப் பள்ளிக்குச் சென்றுதான் கல்வி பெற வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. இந்த ஆண்டிலே 8 ஆம் வகுப்பிலே மட்டும் 76 மாணவர்கள் கல்வி பயின்று கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்த வேண்டுமென்று கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னதாக முன்மொழிவுகளும் அதற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்த ஆண்டிலே அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்த . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகச் சொல்லுங்கள்.



2008 ஏப்ரல் 30]

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** எனவே, அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்த நம்முடைய அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய முன்மொழிவுகள் இருக்கும் என்று சொன்னால், அவலூர்ப்பேட்டை சென்று வரக்கூடிய அவலத்தைத் தீர்ப்பதற்கு அரசு நிச்சயமாக முயற்சி செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 189, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**189—**

## புறவழிச் சாலை

***8246—திரு. ஆ. அருண்மொழிதேவன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகரில் புறவழிச் சாலை அமைக்கும் பணியைத் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன் :

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகரில் புறவழிச் சாலை அமைக்கும் பணி துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இந்தப் பணி, 31-12-2008 ஆம் தேதிக்குள் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் நகரம், அருள்மிகு நடராஜர் திருக்கோயில்

[2008 ஏப்ரல் 30

அமைந்துள்ள நகரமாகும். இந்தக் கோயிலுக்கு இந்தியாவிலிருந்து மட்டுமல்லாமல், உலகத்தின் பல்வேறு நாடுகளிலிருந்தும், பக்தர்களும், சுற்றுலாப் பயணிகளும் வந்து செல்கின்றனர். அதேபோல, அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் உள்ளது. சிதம்பரம் நகரத்திற்கு அருகில், உலகத்திலே இரண்டாவது பெரிய mangrove காடுகள் அமைந்துள்ள சுற்றுலாத் தலமான பிச்சாவரமும் அமைந்துள்ளது. அலுவலக நேரங்கள், விடுமுறைக் காலங்கள், நம்முடைய தேர்த் திருவிழா, நாட்டியாஞ்சலி போன்ற விழாக் காலங்களில் மட்டுமின்றி, தினந்தோறும் கடுமையான போக்குவரத்து நெரிசல் மிகுந்த நகரமாகச் சிதம்பரம் நகரம் சிக்கித் தவிக்கிறது. நவக்கிரக கோயில்களுக்கும் காரைக்காலுக்கும், வேளாங்கன்னி, நாகூர் போன்ற ஸ்தலங்களுக்கும் . . .

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** சிதம்பரம் நகரத்தின் வழியாகத்தான் செல்ல வேண்டும். எனவே, அந்தப் பணியை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் உலக வங்கியினுடைய ஒத்துழைப்போடு கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகருக்குப் புறவழிச் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. ஒரு பணியைச் செய்வதற்கு ஏற்கெனவே அதிகாரிகளால் திட்டமிடப்பட்டு, அந்தப் பணியினுடைய தன்மைக்கேற்ப ஒப்பந்ததாரர்களுக்குக் கால அவகாசம் வழங்கப்படுகிறது. அந்தக் கால அவகாசத்தின் அடிப்படையில், வரக்கூடிய டிசம்பர் மாதம் வரை அந்த ஒப்பந்ததாரருக்குப் பணி முடிக்கக் காலம் இருக்கிறது. எனவே, முடிந்த அளவு--ஏனென்று சொன்னால், சுமார் 17 கி.மீ. நீளம் கொண்டது அந்த புறவழிச் சாலை. அதிலே இடையிலேகூட வெள்ளாற்றின் குறுக்கே ஓர் உயர்மட்ட பாலம் அமைக்கப்பட வேண்டி உள்ளது. எனவே, அதிலேகூட ஏறத்தாழ 315 மீட்டர் நீளம் கொண்ட அந்தப்



2008 ஏப்ரல் 30]

பாலம் ஏறத்தாழ 84 தாங்குதூண்கள் கொண்ட பாலமாக அமைக்கப்பட இருக்கிறது. அதிலே 14 தூண்களினுடைய பணி நடைபெற்று இருக்கிறது. மீதம் இருக்கிற பணியும் விரைவுபடுத்தப்பட்டு இருக்கிறது. புறவழிச் சாலைக்கான மண் தளம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. எனவே, முடிந்த அளவு டிசம்பர் மாதத்திற்கு முன்பாகவே அந்தப் பணியை முடிக்க நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. அருண்மொழிதேவன்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** புறவழிச் சாலை அமைக்கின்ற பணியை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, சிதம்பரம் நகர எல்லையில் இருந்து கொள்ளிடம் சாலையில் உள்ள பாலங்கள், சிறு, குறு பாலங்களாக உள்ளதால் அடிக்கடி விபத்து ஏற்படுகிறது. அவற்றைப் பெரிய பாலங்களாக அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நம்முடைய சிதம்பரத்தில் இருந்து அண்ணாமலை நகர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் செல்லக்கூடிய இடத்தில் இரயில்வே மேம்பாலம் கட்டுகின்ற பணி மிகவும் மெதுவாக ஆமை வேகத்தில் நடைபெறுவதாக மக்கள் கருதுகிறார்கள். அந்தப் பணியை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் நகரத்தில் இருந்து செல்லக்கூடிய சாலையின் பாலங்கள் பழுதடைந்துள்ளதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுபற்றி நிச்சயமாக இந்த அரசு பரிசீலிக்கும். அதற்குரிய தக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல, இரயில்வே மேம்பாலப் பணியைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இரயில்வே மேம்பாலப் பணியையும், ஒவ்வொரு ஆய்வுக் கூட்டத்திலும், துரிதமாகச் செய்ய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு இருக்கின்றோம். அதேபோல, இரயில்வே பகுதியைப் பொறுத்த அளவிலே, அதிலே நடைபெறுகின்ற பணி குறித்து, அதுசம்பந்தப்பட்ட நடுவண் அரசினுடைய தொடர்வண்டித் துறையின் இணை அமைச்சர் மாண்புமிகு திரு. இரா. வேலு அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. அவரும் அதற்குரிய நடவடிக்கை எடுத்திருக்கிறார். இந்த அரசு அமைந்த

[2008 ஏப்ரல் 30

பிறகு, இரண்டு முறை தலைமைச் செயலகத்திலேயே மாண்புமிகு இரயில்வே துறை அமைச்சரை அழைத்து, ஆய்வுக் கூட்டத்தை நடத்தி, இரு தரப்பினரும் கலந்து பேசி, அதில் என்னென்ன பணிகளைச் செய்ய வேண்டுமோ அதை முடிந்த அளவிற்கு வேகப்படுத்தி நடத்திக் கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலேதான், இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு மட்டும், கிடப்பிலே கிடந்த 8 இரயில்வே மேம்பாலங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, சிதம்பரம் நகரத்திலே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தப் பாலமும் விரைவுபடுத்தப்பட்டு, விரைவில் பொது மக்களினுடைய பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் இருந்து கன்னியாகுமரி வரை, கிழக்குக் கடற்கரைச் சாலை விரிவுபடுத்தப்படும்; நீட்டிக்கப்படும் என்று ஏற்கெனவே அரசு பல்வேறு காலக்கட்டங்களில் அறிவித்திருந்தது. ஆனால் தற்போது அது பாண்டிச்சேரி வரையில் அந்த இருவழிச் சாலை கொண்டு வரப்பட்டு, அதிலிருந்து தொடங்கி கன்னியாகுமரி வரையில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் அப்படியே இருக்கிறது. எதிர்வரும் காலங்களில், சென்னையில் இருந்து கன்னியாகுமரி வரை கடற்கரையோரக் கிராமங்கள் செல்கின்ற வழியில், நெடுஞ்சாலையை விரிவுபடுத்துவதற்கான திட்டம் அரசிடம் இருக்கிறதா; எப்போது இந்தத் திட்டம் தொடங்கும் என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கையிலும் விளக்கமாக அந்தத் திட்டத்தைப்பற்றிச் சொல்லி இருக்கின்றேன். உலக வங்கியினுடைய ஒத்துழைப்போடு அந்தத் திட்டம் நடைபெற்று வருகிறது. அதற்கெனத் தனி அமைப்பையே தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் என்கிற ஒரு பிரிவையே ஏற்படுத்தி, அதில் பணி செய்து கொண்டு வருகிறார்கள். உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், 11 மாவட்டங்களில் தொடர்புடைய திட்டமாக நடந்துகொண்டு வருகிறது. வேலூர் மாவட்டம், ஆற்காட்டில் தொடங்கி, வேலூர்,



2008 ஏப்ரல் 30]

திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், அதேபோல அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மீண்டும் திருவாரூர், மீண்டும் தஞ்சாவூர் மாவட்டத்தைக் கடந்து புதுக்கோட்டை, இராமநாதபுரம், வழியாகத் தூத்துக்குடி வரை அந்தப் பணி நடைபெற்று வருகிறது. 742 கி.மீ. நீளம். இரண்டாவது பகுதியாக, தூத்துக்குடியில் இருந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கன்னியாகுமரி வரை கிழக்குக் கடற்கரைச் சாலைப் பகுதியாக அமைய வேண்டும் என்று சொல்லி இருக்கிறார். ஏற்கெனவே கிழக்குக் கடற்கரைச் சாலை மாநில நெடுஞ்சாலையாக இருந்ததை பாண்டிச்சேரி வரை, அது நம்முடைய தமிழ்நாடு சாலை மேம்பாட்டுக் கம்பெனி - Tamilnadu Road Development Company - என்கின்ற அமைப்பின்மூலம் இருவழிச் சாலையாக அமைக்கப்பட்டு வரி வசூல் செய்யப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகிறது. மீதம் இருக்கக்கூடிய பகுதியான ஏற்கெனவே இந்த வினாவிலே வந்த சிதம்பரம் தொகுதியினுடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, அந்த தேசிய நெடுஞ்சாலை 45-ஏ விழுப்புரத்திலிருந்து கடலூர், அதேபோல பாண்டிச்சேரி-தரங்கம்பாடி வழியாக நாகப்பட்டினம் வரை செல்லக்கூடிய அந்த தேசிய நெடுஞ்சாலையும் ஏறத்தாழ 14 கி.மீ. ஒருவழிச் சாலையாக இருந்தது. தமிழ்நாட்டிலேயே ஒருவழிச் சாலையாக இருக்கக்கூடிய அந்தச் சாலை, ஒரு தேசிய நெடுஞ்சாலை. அதையும் இருவழிச் சாலையாக மாற்ற வேண்டும் என்று சொல்லி மத்திய அரசினுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று அங்கு நிலம் கையகப்படுத்தப்படுகிற பணியும் நடைபெற்று வருகின்றது. அந்தப் பணியும் முடிவுற்ற பிறகு நாகப்பட்டினத்திலிருந்து தூத்துக்குடி வரை செல்லக்கூடிய அந்தக் கிழக்குக் கடற்கரைச் சாலையை, 2-வது பாகமாக, தூத்துக்குடியிலிருந்து கன்னியாகுமரி வரை செல்லக்கூடிய வகையிலே உலக வங்கிக்கு இந்த அரசு பரிந்துரை செய்யும் என நம்முடைய மானியக் கோரிக்கையிலும் தெரிவித்திருக்கின்றோம். தொடர்ந்து அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. முருகவேல்.

**திரு. கே. முருகவேல்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடி-தஞ்சாவூர் மாநில

[2008 ஏப்ரல் 30

நெடுஞ்சாலை எண் 29, முதுகுளத்தூர் நகரத்தின் குறுகிய சாலை வழியாகச் செல்ல வேண்டியிருப்பதால் புறவழிச் சாலை அமைப்பதற்கு 2006-ல் கருத்துரு அனுப்பப்பட்டது. தற்போது அதன் நிலை என்ன என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் அரசு பொறுப்பேற்ற பிறகு, கடந்த நிதிநிலை ஆண்டில் ஏறத்தாழ 10 நகராட்சிப் பகுதிகளிலே புறவழிச் சாலை அமைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு, நிலம் கையகப்படுத்தப்பட்ட பிறகுதான் அந்தப் பணியும் துவக்கப்பட வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையிலே நிலம் கையகப்படுத்துகின்ற பணி, அந்தந்த மாவட்டத்தின்மூலமாக நடைபெற்று வருகிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற மாநில நெடுஞ்சாலை, தமிழகத்திலேயே அதிக நீளம் கொண்ட ஒரு மாநில நெடுஞ்சாலையாகும். தஞ்சாவூரிலிருந்து துவங்கி, தஞ்சாவூர், பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, பரமக்குடி வழியாக சாயல்குடி வரை செல்கிறது. அந்தச் சாலையை நான் நேரடியாகக் கடந்த ஒரு வருடத்திற்கு முன்பே ஆய்வு செய்தேன். அப்போதுதான் பரமக்குடியிலிருந்து சாயல்குடி வரை செல்கின்ற நேரத்திலேதான் அதிலே ஒரு தவறு ஏற்பட்டிருப்பதைக் கண்டறிந்தேன். அதிலே இடது புறமாக மைல் கல் அமைக்கப்பட்டிருந்த நேரத்தில் அதில் உள்ள எண்ணையும் பார்த்தேன். நான் வைத்திருந்த ஏட்டின் எண்ணையும் பார்க்கின்றபோது, 28-க்குப் பதிலாக மாநில நெடுஞ்சாலை எண் 29 என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தத் தவறு களையப்பட்டு, இப்போது அது மாநில நெடுஞ்சாலை எண் 28 ஆக மாற்றப்பட்டிருக்கிறது. அந்தச் சாலையிலேகூட, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், மழையால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திக்கின்ற நேரத்தில், அந்தச் சாலை வழியாக நானும் அவரோடு சென்றிருந்தேன். அந்த நகரத்திலே குறுகிய சாலையாக இருப்பதால் விபத்துகள் அதிகமாக நடக்கின்றன. போக்குவரத்து நெரிசலும் ஏற்படுவதை நேரடியாக இரண்டு முறை நான் பார்த்திருக்கிறேன். எனவே, எதிர்காலத்திலே அந்தப் புறவழிச் சாலையை அமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.



2008 ஏப்ரல் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 190, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**190—**

### சாதிச் சான்றிதழ்

**•1176—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பரமேஸ்வரபுரம், சிதம்பரபுரம் ஊராட்சிப் பகுதிகளில் வாழும் கொண்டாரெட்டியார் இன மக்களுக்குப் பழங்குடியினர் எனச் சாதிச் சான்றிதழ் வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன் :

11-11-1981-க்குப் பிறகு பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் வழங்கிடும் அதிகாரம், கோட்டாட்சியருக்கு அளிக்கப்பட்ட பிறகு, கடந்த 20 ஆண்டுகளாக சேரன்மகாதேவி கோட்டத்திலுள்ள அம்பாசமுத்திரம், நாங்குநேரி மற்றும் ராதாபுரம் வட்டங்களில் கொண்டாரெட்டி சாதிச் சான்றிதழ் பெறத் தகுதியான நபர்கள் யாரும் இல்லாததால், இதுவரை ஒருவருக்கும் வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொண்டாரெட்டியார் என்ற சாதிச் சான்று, 1981-க்குப் பிறகு வழங்கப்படவில்லை என்று அறிவித்தார்கள். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வரான போதுதான், முதன்முதலாக ராதாபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பரமேஸ்வரபுரம், சிதம்பரபுரம் ஆகிய இரண்டு ஊர்களிலும் கொண்டாரெட்டியார்

வகுப்பைச் சேர்ந்த பழங்குடியின மக்கள் வாழ்ந்து வந்தார்கள் என்பதற்குப் பல சான்றுகள் எல்லாம்--ஏற்கெனவே 100 ஆண்டுகள், 200 ஆண்டுகளுக்குரிய சான்றுகள் எல்லாம்--இருப்பதாக அறிந்து, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில்தான் அவர்களுக்குக் கொண்டாரெட்டியார் சான்று வழங்கப்பட்டது. 1981-க்குப் பிறகு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோன்று நிறுத்தப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே அவர்கள் நீதிமன்றம் சென்று நீதிமன்றத்திலேயும் அவர்கள் கொண்டாரெட்டியார்தான் என்பதை அவர்களுடைய சான்றுகளை எல்லாம் பார்த்து உறுதி செய்த பின்பும், இதுவரை வழங்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு டாக்டர் கலைஞருடைய நல்லாட்சியில் மீண்டும் மறுபரிசீலனை செய்து, பரமேஸ்வரபுரம், சிதம்பரபுரம் ஆகிய ஊர்களில் வாழும் கொண்டாரெட்டியார் மக்களுக்குப் பழங்குடியினச் சான்று வழங்க முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு விரிவான விளக்கத்தை அளிக்க வேண்டியிருக்கிறது. மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பழங்குடியினர் எண்ணிக்கை 1950-ல் ஒன்றுமே இல்லை. 1961-ல் 703 பழங்குடியினரும், 1971-ல் 1,614 பழங்குடியினரும், 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பரமேஸ்வரபுரம் கிராமத்தில் மட்டும் 36 சதவிகிதம் முதல் 50 சதவிகிதம் வரை பழங்குடியினர் வசிப்பதாகவும் 2001 ஆம் ஆண்டு கணக்கின்படி 638 பழங்குடியினர் வசிப்பதாகவும், கூறப்பட்டுள்ளது. ஆனால், இந்தப் பழங்குடியினர் எந்த உட்பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிடப்படவில்லை. 1971 ஆம் ஆண்டு பழங்குடியினர் எண்ணிக்கையைக் கணக்குப் பார்த்தபோது, பரமேஸ்வரபுரத்தில் 1-5-1976-ல் தமிழகத்தில் கொண்டாரெட்டி இனத்தவர்களுக்குப் பழங்குடியினர் சலுகை வழங்கப்பட்டதன் பின்னர், சலுகைபெறும் நோக்கத்தில் முற்பட்ட வகுப்பைச் சார்ந்த ஒரு குறிப்பிட்ட உட்பிரிவைச் சேர்ந்தவர்கள், பழங்குடியினருக்கான சலுகை பெறும்





நோக்கத்தில் அளித்த தவறான புள்ளிவிவரங்களால், 1981 முதல் 2001 வரையான மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் பரமேஸ்வரபுரம் கிராமத்தில் பழங்குடியினர் வசிப்பதாகக் கூறப்பட்டுள்ளது. இருப்பினும், இந்தப் பழங்குடியினர், எந்த உட்பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிடப்படவில்லை. பரமேஸ்வரபுரம், சிலாத்திக்குளம் கிராமங்களுக்கு 1960 ஆம் ஆண்டுக்கு முந்தைய மற்றும் பிந்தைய வருவாய்த் துறை ஆவணங்கள் மற்றும் கல்வெட்டுக்களை ஆய்வு செய்து பார்த்ததிலும், விரிவான களப் பார்வை மேற்கொண்டதிலும், இந்தக் கிராமங்களில் பழங்குடியினர் வசித்ததற்கான மற்றும் வசிப்பதற்கான ஆதாரங்கள், அதிலும் குறிப்பாக கொண்டாரெட்டி இனத்தவர் வசித்ததற்கான ஆதாரங்கள் ஏதும் இல்லை. 1989-க்குப் பின்னர் வட்டாட்சியர்கள் மற்றும் பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் வழங்கிடும் அதிகாரம் பெற்ற அதிகாரிகள் இருந்த காலத்தில், சிலர் தவறான தகவல்களை அளித்து, கொண்டாரெட்டி சான்றிதழ்களைப் பெற்றுள்ளனர். இவ்வாறு சான்றிதழ்களைப் பெற்றவர்கள் அரசுப் பணியில் சேரும்போது, சாதி மெய்த்தன்மை ஆராயப்பட்டு வெவ்வேறு மாவட்ட ஆட்சித் தலைவர்களாலும், சாதிச் சான்றிதழ் சரிபார்க்கும் குழுவினராலும் இச்சான்றிதழ் மெய்த்தன்மையற்றது என அறிவிக்கப்பட்டு, இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்து. வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறுக்கீடுகள்)

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோன்று, யாராவது ஒருவர் கொண்டாரெட்டியார் சான்றிதழைத் தவறாகப் பெற்றிருந்தால், அதைக் காரணமாகக் காட்டி, தகுதிவாய்ந்த அந்த இரண்டு ஊர்களில் மட்டும் வாழ்கின்ற கொண்டாரெட்டியார் மக்களுக்குச் சான்றிதழ் கொடுக்காமல் இருப்பது, நீதிக்குப் புறம்பானது என்றுதான் நான் கருதுகிறேன். ஆகவே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர்

[2008 ஏப்ரல் 30

அவர்களுடைய நல்லாட்சியில் மீண்டும் அவர்களுக்கு வழங்குவதற்கு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நெல்லை மாவட்டத்தில் குளுவர் இன மக்கள் திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேலப்பாளையம், பேட்டை, அதேபோன்று அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி, கடையநல்லூர், காரைக்குறிச்சி, அதேபோன்று வீரவநல்லூர், கல்லிடைக்குறிச்சி, பத்தமடை, முக்கூடல், நாங்குநேரி, டோனாவூர், ஏர்வாடி, லப்பை, காவல்கிணறு, அழகபப்புரம் போன்ற ஊர்களில் மிக அதிகமாகக் குளுவர் இன மக்கள் வாழ்கின்றார்கள். அவர்களுக்கு, இதற்கு முன்னர் காட்டுநாயக்கர் என்று (மணியடிக்கப்பெற்றது) சான்றிதழ் வழங்கப்பட்டது. தற்போது அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. கடந்த பல ஆண்டுகளாக. பக்கத்தில் இருக்கின்ற கன்னியாகுமரி மாவட்டத்தில் அந்தக் குளுவர் இன மக்களுக்கு 'டொம்பன்' என்று சான்று வழங்கப்படுகிறது. அதேபோல், திருநெல்வேலி மாவட்டத்தில் வாழ்கின்ற குளுவர் இன மக்களுக்கும் காட்டுநாயக்கர் என்ற சான்றிதழ் வழங்கி--அவர்கள் தருமம் எடுத்துத்தான் பிழைக்கின்றார்கள்; குரங்குகளை வைத்துக்கொண்டு பிழைத்துக் கொண்டிருக்கின்றார்கள்--ஆகவே, தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, குளுவர் இன மக்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் வாழ்கின்றவர்களுக்குக் காட்டுநாயக்கர் என்ற சான்று வழங்க வேண்டுமென்று மறுபடியும் அன்போடு கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விரிவான பதிலில் இவற்றுக்கு நான் விளக்கம் அளித்திருக்கிறேன். அதாவது பரமேஸ்வரபுரம், சிலாத்திக்குளம் கிராமங்களில் 1960-க்கு முந்தைய மற்றும் பிந்தைய வருவாய்த் துறை ஆவணங்களையும் கல்வெட்டுக்களையும் ஆராய்ச்சி செய்தபோது கொண்டாரெட்டி இன மக்கள் இல்லை என்று வசிப்பதற்கான ஆதாரங்கள் இல்லை என்று சான்றிதழ் கொடுத்திருக்கிறார்கள். மற்றும், பல்வேறு பகுதிகளில் வசிக்கின்ற குளுவர் இன மக்களுக்குச் சான்றிதழ் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியுள்ளார்கள். மனுதாரர்கள்



2008 ஏப்ரல் 30]

குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவர்கள் என்று உறுதி செய்துகொண்ட பிறகே, சம்பந்தப்பட்ட அலுவலரால் சாதிச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. மனுதாரர்கள் உரிய சான்றிதழ்களை அளிப்பார்களேயானால் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) வாகனங்களில் சிவப்பு விளக்கைப் பயன்படுத்துதல்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், திரு. சி. ஞானசேகரன். என்ன? சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தங்களிடம் நம்முடைய தமிழகத்தில் தங்களுடைய கார் போன்ற வாகனங்களிலே யாரெல்லாம் சிவப்பு விளக்கைப் பொருத்திக்கொள்ளலாம் என்று தமிழக அரசு அறிவித்திருக்கிறது எனக் கேட்டு அறிவிப்புக் கொடுத்திருந்தேன். தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள், அமைச்சர் பெருமக்கள், அதேபோல, இந்த அவையினுடைய சபாநாயகராகிய தாங்கள் மற்றும் துணை சபாநாயகர் மற்றும் இங்கே இருக்கக்கூடிய கொறடா மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் இருக்கக்கூடிய செயலாளர்கள் இப்படிப்பட்டவர்கள் மட்டுமே சிவப்பு விளக்கைப் போட்டுக்கொண்டு போகலாம் என்று விதி இருப்பதாக நாங்கள் அறிகிறோம். ஆனால், இப்போது சட்டமன்ற உறுப்பினர்கள்-equal to the

Chief Secretary according to the protocol-அவர்களுக்கே அந்தத் தகுதியில்லை. ஆனால், first grade municipality-யினுடைய ஆணையர்களுக்கு இணையாக வைக்கப்பட்டிருக்கிற மாவட்டப் பஞ்சாயத்துத் தலைவர்கள் மற்றும் சில பேர், D.S.P. போன்றவர்கள், R.D.O. போன்றவர்கள் எல்லாம் தங்கள் கார்களில் சிவப்பு விளக்கைப் பொருத்திக் கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல், சொல்லப் போனால், சில நேரங்களிலே, கடத்தலுக்கும், மற்றவற்றுக்கும் உரிய சில சமூக விரோதிகள்கூட சிவப்பு விளக்கைப் போட்டுக்கொண்டு, check post வருகிறபோது நேராகப் போய்க்கொண்டிருக்கக்கூடிய நிலையைப் பார்க்கிறபோது, நமக்கு வருத்தமாக இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், traffic constable அந்த சிவப்பு விளக்கைப் பார்த்தவுடன் யார் உள்ளே இருக்கிறார்கள் என்று தெரியாமலே, salute அடிக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் (குறுக்கீடு) one minute. நீங்கள் எப்போது பார்த்தாலும் சிவப்பு விளக்கு, சிவப்பு விளக்கு என்று சொல்லிக்கொண்டேயிருக்கிறீர்கள்! முதலில் விஷயம் என்ன என்று சீக்கிரம் அதைச் சொல்லி முடியுங்கள். (சிரிப்பு)

முற்பகல் 10-45

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிடுவது காரில் உள்ள சிவப்பு விளக்கை மட்டுமே; மற்ற சிவப்பு விளக்குப் பகுதிகளுக்குள்ளே நான் போக விரும்பவில்லை. (சிரிப்பு).

இங்கே, தமிழகத்தில் இருக்கக்கூடிய சட்ட திட்டங்களுக்கு, விதிமுறைகளுக்குட்பட்டு யார் யாரெல்லாம் சிவப்பு விளக்கைப் பொருத்திக்கொள்ளலாம் என்பதைத் தமிழக அரசு இந்த அவையின் மூலமாகத் தெளிவாகத் தெரிவிக்கவேண்டும். ஏற்கெனவே, மதுரை உயர் நீதிமன்றத்தினுடைய கிளையிலே இதுகுறித்து ஒரு வழக்கறிஞர் ஒரு வழக்கைத் தொடுத்து, அந்த வழக்கிலும்கூட ஒரு தீர்ப்பு தெளிவாக வந்திருக்கிறது. ஆனால், அந்தத் தீர்ப்பினுடைய அடிப்படையிலும் சரி, அல்லது அந்த விதிமுறையின் அடிப்படையிலும்கூட, தகுதியில்லாதவர்கள் பல பேர் இப்போது தமிழகத்திலே சிவப்பு விளக்கைப் போட்டுக்கொண்டு வலம் வந்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைக்கு நீங்கள் முற்றுப்புள்ளி வைக்கவில்லை என்று சொன்னால், நிச்சயமாகப் பெருத்த சந்தேகம் ஏற்படும். யார் யாரோ அவ்வாறு





போகக்கூடாதவர்கள் எல்லாம் சிவப்பு விளக்கைப் போட்டுக்கொண்டு சென்றுகொண்டிருக்கின்ற ஒரு நிலை வந்துகொண்டிருக்கிற காரணத்தால், ஒரு பெரிய குழப்பம் நிலவுகிறது. சொல்லப் போனால், நமது பக்கத்தில் இருக்கக்கூடிய கேரளா, ஆந்திரா ஆகிய மாநிலங்களிலே அங்கீகரிக்கப்பட்ட எதிர்க் கட்சியினுடைய தலைவர்கள்கூட சிவப்பு விளக்கைப் பொருத்திக்கொள்ளலாம் என்று விதி இருக்கிறது. ஆனால், நம்முடைய தமிழகத்தில் அது இல்லை. அப்படி இருக்கிறபோது, நான் நம்முடைய மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், தமிழக அரசு சார்பாக அந்த விதிமுறைகளின்படி, யார் யாரெல்லாம் தமிழகத்திலே சிவப்பு விளக்கைப் பொருத்திக்கொள்ளலாம் என்பதை இந்த அவையின் மூலமாகத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும். அப்படி விதிகளை மீறி சிவப்பு விளக்கைப் பொருத்திக்கொள்கின்றவர்கள்மீது அரசு என்ன கடுமையான நடவடிக்கை எடுக்கப் போகிறது; எப்படி அதைத் தடை செய்யப்போகிறது என்பதை விளக்க வேண்டும் என்று கோரி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழக அரசின் சார்பாக, யார் யாரெல்லாம் சிவப்பு விளக்கைப் பொருத்திக்கொள்ளலாம் என்று அரசு ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. ஆனால், நீங்கள் இப்போது சொல்வதுபோல், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள்கூட அந்தச் சிவப்பு விளக்கைப் பொருத்திக்கொள்கிறார்கள். இப்போது இருக்கின்ற சட்டப்படி, Chief Secretary-க்குக்கூட, அந்த சிவப்பு விளக்கைப் பொருத்திக்கொள்ள அனுமதி இல்லை. 19 பதவிகளுக்கு மட்டும்தான் உள்ளது. Governor இல் ஆரம்பித்து அமைச்சர்கள் வரை அதைப் பொருத்திக்கொள்ளலாம் என்று இருக்கிறது. இதற்குத் தெளிவான அரசு ஆணை ஏற்கெனவே வெளியிடப்பட்டிருக்கிறது. இப்போது மத்திய அரசின் சார்பாக ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு, அந்தக் கமிட்டியில் மூன்று அமைச்சர்கள், மத்திய அரசில் உள்ள செயலாளர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து ஆலோசித்து இந்தியா முழுவதும் ஒரே அளவில் சட்டம் கொண்டு வருவதற்கு ஒரு முயற்சி எடுக்கப்பட்டு, இரண்டு மூன்று கூட்டங்கள் நடந்து முடிந்திருக்கின்றன. வெகுவிரைவிலே மத்திய அரசு சார்பாக அதை அறிவிக்க இருக்கிறார்கள். எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

கேட்டுக்கொண்டதைப்போல, தமிழ்நாடு அரசு சார்பாக யார் யாரெல்லாம் சிவப்பு விளக்கைப் பொருத்திக்கொள்ளலாம் என்ற அரசு ஆணையை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுடைய மேசையிலே அதை வைக்கிறேன். பார்த்துக்கொள்ளுங்கள். யார் யாரெல்லாம் சிவப்பு விளக்கைப் போட்டுக்கொண்டு போகக்கூடாதோ, அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவும் இந்தச் சபையின் மூலமாக இப்போது நீங்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நடவடிக்கை எடுத்து, வைக்கக்கூடாதவர்கள் வைக்காத அளவிற்கு நடவ்டிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

## (ஆ) வேளாண் பட்டம்/பட்டயம் பெற்றவர்களின் வேலைவாய்ப்பிற்கு வயது வரம்பைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன், என்ன ?

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிவிப்பிலே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, வேளாண்மைத் துறையில் பட்டம் படித்தவர்களுக்கும், டிப்ளோமா படித்தவர்களுக்கும் 1,707 பேர்களுக்கு 18 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு, வேலை நியமன உத்தரவு விரைவிலே வழங்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டார்கள். 18 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு, அந்த வேலை நியமன உத்தரவு வழங்கப்படும் என்ற அறிவிப்பு வந்த காரணத்தினால், அந்த வேளாண்மைப் பட்டப் படிப்புப் படித்தவர்களுக்கு வயது முதிர்ந்து இருக்கிறது; அவர்கள் அந்த வயது வரம்பைத் தளர்த்த வேண்டும் என்று கோரிக்கை வைத்துப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், P & AR துறையின் பொறுப்பு வகிக்கின்ற மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களும், மற்றவர்களுக்கு முன் உதாரணமாக இருப்பதைப்போல் அந்த வேளாண்மைப் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு, அதற்கான வயது வரம்பைத் தளர்த்தி அரசு ஆணை வெளியிட்டு, அவர்கள் வாழ்வில் ஒளியேற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள்மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.



***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பி.எஸ்.சி., (அக்ரி.) பட்டப் படிப்புப் படித்தவர்களுக்கு வயது வரம்பு கிடையாது. டிப்ளோமா (அக்ரி.) படித்தவர்களுக்கு வயது வரம்பு உண்டு. கடந்த ஆட்சியில், ஐந்து ஆண்டுக் காலம் பணி நியமனத் தடைச் சட்டம் இருந்த காரணத்தினால், அவர்களுக்கு வயது வரம்பு கடந்துவிட்டது என்று, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வயது வரம்பு கடந்துவிட்டது; ஐந்து ஆண்டுக் காலம் அவர்கள் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது என்று, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 30 வயதிலிருந்து 35 வயதாகவும், தாழ்த்தப்பட்ட எஸ்.டி. வகுப்பின மக்களுக்கு 35-லிருந்து 40 வயதாகவும் உயர்த்தி அவர்களுக்குப் பணி நியமன வாய்ப்பு அளிக்கப்பட்டது. ஆனால், இப்போதுதான் அவர்களை 18 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு நாம் நியமனம் செய்கிறோம்.

ஆகவே, அவர்களுக்கு ஒரு 10 ஆண்டுக் காலம் நீட்டித்துக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கை இருக்கிறது. அது வேளாண்மைத் துறையின்மூலம் பரிசீலனை செய்து 10 ஆண்டுக் காலம் இல்லாவிட்டாலும், ஏற்கெனவே ஆதி திராவிட, மலைவாழ் மக்களுக்கு 40 வயது இருப்பதைப்போல, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 35 வயதிலிருந்து 40 வயது வரை கொடுத்தாலும்கூட அவர்களில் சில பேர் பணியிலே சேரக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கும் என்று கோப்பு அனுப்பப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைப் பார்வையிட்டு, ஏற்கெனவே 5 வருடம் நாம் வாய்ப்பு அளித்திருக்கின்றோம், அதற்கு மேல் வழங்குவது சாத்தியம் இல்லை என்று முடிவு செய்திருக்கின்றார்கள். இருந்தாலும், முதலமைச்சரிடத்திலே மீண்டும் பேச இருக்கிறேன்.

முற்பகல் 10-50

## (இ) மூவேந்தர் முன்னேற்றக் கழகத் தலைவர் டாக்டர் சேதுராமன் அவர்களை விடுதலை செய்யக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் தேவர் மக்களின் பல்வேறு

கோரிக்கையை வலியுறுத்தி அகில இந்திய மூவேந்தர் முன்னேற்றக் கழக நிறுவனத் தலைவர் டாக்டர் சேதுராமன் அவர்கள் ஒரு கறுப்புக் கொடி போராட்டம் என்ற முறையில் காவல் துறையிடம் அனுமதி கேட்டார். அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. அனுமதி வழங்கப்படாத நேரத்தில், அவர் அந்தப் போராட்டத்திலும் கலந்துகொள்ளவில்லை. ஆனால், அவர் வீட்டிலே இருக்கின்றபோது முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்ற முறையில், *25-4-2008* இரவு *9-00* மணிக்கு அவரைக் கைது செய்தார்கள். கைது செய்ததற்குப் பிறகு *26-4-2008* அன்று *11-00* மணியளவில் அவர் சிறைப்படுத்தப்பட்டார். வீட்டிலே இருக்கின்றவரை அழைத்துச் சென்று, அவர்மீது போடப்பட்டிருக்கிற வழக்கு, Non-bailable Sections என்ற முறையில் *151, 7*(b) என்ற Section-களின்கீழ் வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன.

இதேபோன்ற போராட்டத்தை, உங்களுடைய கூட்டணிக் கட்சிகளில் இருந்த திரு. கார்த்திக் போன்றவர்கள் நடத்தியபோது, அவர்களைக் கைது செய்து, மாலையிலே விடுவித்தார்கள். ஆனால், போராட்டமே நடத்தாத இவரைக் கைது செய்து உள்ளே வைத்திருப்பது எப்படி நியாயமாக இருக்கும்? ஆகவே, கூட்டணியிலே இருக்கின்றவர்களுக்கு ஒரு முறை, எதிர்ப்பாக இருக்கின்றவர்களுக்கு ஒரு முறை என நடத்துவது, எப்படி நியாயமாக இருக்கும்? அதைப் போலத்தான் கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சார்ந்தவர்கள், சாலை மறியல் செய்தார்கள்; அவர்களை மாலையிலே விடுவித்தார்கள். ஆனால், அவர்களுடைய கூட்டணி என்றால் மாலையிலே விடுவிப்பதும், அவர்களுடைய கூட்டணி இல்லையென்றால், மாற்று எதிர்முகாமிலே இருக்கிறார் என்று சொன்னால், அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதும் எப்படி நியாயமாக இருக்கும் என்பதை நான் உங்கள்மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஆகவே, கைது செய்தவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வலியுறுத்தி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அ.தி.மு.க கொறடா அவர்கள் டாக்டர் சேதுராமன் அவர்களைக் கைது செய்தது குறித்து இங்கே ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தார்கள். திரு. கார்த்திக்





அவர்களைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். திரு. கார்த்திக் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியிலே இல்லை. ஆனால், அவர் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த நேரத்தில் சட்டசபையிலேயே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "தேவர் திருமகன் சிலைக்கு தினந்தோறும் காவலர்கள் பாதுகாப்பாக இருப்பார்கள்" என்று அறிவித்தவுடனே, அதைப் பாராட்டிவிட்டு, போராட்டத்தை நிறுத்திவிட்டார். அதற்குப் பிறகும் இரண்டு நாட்கள் கழித்து டாக்டர் சேதுராமன் அவர்கள், முதலமைச்சர் அவர்கள் மதுரைக்குச் செல்கின்ற நேரத்தில் ஒரு போராட்டத்தை அறிவித்திருந்தார். ஆகவேதான், காவல் துறையினர் சட்டப்படி நடவடிக்கை எடுத்தார்களே தவிர, இதிலே ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்ற எந்தக் கருத்து வேறுபாடும் கிடையாது. அவர்கள் தங்களுடைய கடமையைச் செய்திருக்கிறார்கள். ஆளும் கட்சியாக நீங்கள் இருந்தபோது, நான்கூட போராட்டம் என்று அறிவித்துவிட்டு, திராவிட முன்னேற்றக் கழகம் spot-க்குப் போவதற்கு முன்னாலேயே, இரவு நேரத்திலே *1-00* மணிக்கெல்லாம் என்னைக் கைது செய்து சிறைச்சாலைக்குக் கொண்டு போனார்கள். நான் bail-இலேதான் வந்தேன். அதைப்போல, bail-இலே வருவதற்கு எல்லா உறுப்பினர்களுக்கும் உரிமை இருக்கிறது. மாண்புமிகு சேதுராமன் அவர்கள், bail-இலே வரும் விண்ணப்பம் போட்டால் நிச்சயமாக அவரை விடுவார்கள். அப்படியும் அங்கே விடவில்லையென்றால் High Court-க்குப் போகலாம். இப்படி பல வாய்ப்புகள் இருக்கின்ற நேரத்தில் அன்றாட நடவடிக்கைகளிலே--நம்முடைய மாண்புமிகு கொறடா அவர்களுக்குத் தெரியாதது இல்லை--இதை ஒரு பிரச்சினையாக ஆக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் *10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், அது only preventive arrest. பெரிய offence-ஏ கிடையாது. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) பெரிய குற்றம் பண்ணக்கூடாது; தப்புப் பண்ணக்கூடாது என்பதற்காகப் போலீஸ் எடுக்கக்கூடிய நடவடிக்கை. (குறுக்கீடு) உங்களுக்குத் தெரியாது; இந்தப் பக்கம் இருக்கக்கூடியவர்கள் அவ்வளவு பேரும், நிறையப் பேர் அவ்வாறு போய்விட்டு வந்திருப்பவர்கள். (குறுக்கீடு) திரு. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிறபோது, அவர் bail—இலே வரலாம் என்று சொன்னார்கள்.

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2008 ஏப்ரல் 30

அவர் bail move பண்ணியிருக்கிறார். இருந்தாலும்கூட, காவல் துறை அதிகாரிகள் அவரை விடக்கூடாது என்று வற்புறுத்தி, அவர் வரமுடியாத சூழ்நிலையை உருவாக்கி வருகிறார்கள். ஆகவேதான் இதை நாங்கள் வலியுறுத்துகிறோமே தவிர, அவர் bail-இலே வருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார். ஆனால் காவல் துறை அதற்கு முழு எதிர்ப்புத் தெரிவித்து, அவரை bail-இலே விடக்கூடாது என்று கட்டாயப்படுத்திக் கொண்டிருக்கிற நிலை இருக்கிறது. அதைப்போல, அங்கேயிருக்கிற, நீதிமன்றத்திலே இருக்கிற அரசு வழக்கறிஞரும் அதையே வலியுறுத்திக்கொண்டிருக்கிற காரணத்தால், அவரை உடனடியாக விடுதலை செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தி, அமர்கிறேன். (குறுக்கீடு)

### (ஈ) வினாக்கள்–விடைகள் — உரிய நேரத்திற்குள் முடிக்கக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. டி. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கமாக, கேள்வி நேரம் ஒரு மணி நேரம் நடப்பது வழக்கம். ஆனால் கேள்வி நேரம் அதிகமாக நீடித்துக்கொண்டு போகிறது. கேள்வி கேட்கின்ற உறுப்பினர்கள் இரண்டு வரிகளிலேதான் கேட்க வேண்டும். ஆனால் அவர்கள் உரை நிகழ்த்துவது போன்று இந்த அவையிலே பேசிக்கொண்டிருக்கின்றார்கள். அதனாலே நாங்கள் பேசுகின்றபோது 5 நிமிடங்கள், 7 நிமிடங்கள் என்று பேச வேண்டிய ஒரு நிலை ஏற்படுகிறது. இனிமேலாவது இப்படிப்பட்ட நிலை ஏற்படாமல் எங்களுக்கு ஒவ்வொரு மானியத்திலும் ஒதுக்கப்பட்டிருக்கின்ற, 23 நிமிடங்களை நீங்கள் ஒதுக்கித் தர வேண்டும்; கேள்வி நேரத்தை 10-30 மணிக்குள்ளாக முடிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, மணியடித்து உட்கார வைத்துவிடுவோம்! (குறுக்கீடு)

### (உ) ஸ்ரீபெரும்புதூர், ஹூண்டாய் நிறுவனத் தொழிலாளர்களை விடுதலை செய்யக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.



2008 ஏப்ரல் 30]

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளைய தினம் மே ஒன்றாம் தேதி, தொழிலாளர்களுடைய தினம். இத்தகைய மே தினத்தில் தொழிலாளிகள் -- குறிப்பாகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட இயக்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னதாகவே, பல ஆண்டுக் காலத்திற்கு முன்னால், தொழிலாளிகள் மே தினத்தைக் கொண்டாட வேண்டும், கோரிக்கைகள் வைக்க வேண்டுமென்று அன்றைக்கே பிரச்சாரங்கள் செய்தார்கள்; நூல் வெளியிட்டார்கள். அதற்காக இயக்கமே நடத்தப்பட்டது. அப்படிப்பட்ட அந்த உன்னத நாள் நாளைய தினம் வரக்கூடிய சூழ்நிலையில், ஸ்ரீபெரும்புதூரில், ஹூண்டாய் கம்பெனியில் நான்காவது முறையாகத் தொழிற்சங்கக் கொடியை ஏற்றச் சென்ற C.I.T.U.-வினுடைய தலைவரும் 500 தொழிலாளர்களும் இன்றைக்கு அந்த நிருவாகத்தினுடைய அடியாட்களால் தாக்கப்பட்டிருக்கிறார்கள். காவல் துறையினரும் அங்கே தொழிலாளர்கள்மீது தடியடியை நிகழ்த்தியிருக்கிறார்கள். இதனால் தொழிலாளர்கள் சிலர் படுகாயமடைந்து, ஒருவர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். தொழிலாளர்கள்மீது வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. இத்தகைய சூழ்நிலையிலே 500 பேர் கைது செய்யப்பட்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி பாலபாரதி, அறிவிப்பு ஏதாவது கொடுத்திருக்கிறீர்களா?

**செல்வி கே. பாலபாரதி:** கொடுத்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வரவில்லையே?

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய சூழ்நிலையில் நீதிமன்றத்தினுடைய அனுமதியைப் பெற்று, கடந்த மூன்று முறைகள் தொழிற்சாலைக்கு முன்னால் கொடியேற்றச் சென்றும், நிர்வாகம் அனுமதிக்கவில்லை. ஏற்றிய கொடியை அப்புறப்படுத்துகிறார்கள். தொழிலாளர்கள்மீது அடியாட்களை ஏவுகிறார்கள். இத்தகைய சூழ்நிலையிலே அந்த நிருவாகத்தின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். தொழிலாளர்கள் கொடியேற்றுவதற்கு உரிமை படைத்தவர்கள். ஒரு தேசத்திற்குக் கொடி எவ்வளவு முக்கியமோ, அதேபோன்று தொழிலாளர்களுக்குத் தொழிற்சங்கக் கொடி என்பது முக்கியம். வரலாற்றிலும், இலக்கியத்திலும் கொடியேற்றுவது என்பது ஒரு இயல்பான காரியமாகவே இருந்து வருகிறது. ஆகவே, மதிப்பிற்குரிய நமது மாண்புமிகு முதல்வர்

அவர்கள் தொழிலாளர் நலக் கோரிக்கையில் தொழிலாளர்களுக்குச் சாதகமானப் பல முடிவுகளை அறிவித்திருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், இந்தப் பிரச்சினையிலே அரசும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் உடனடியாகத் தலையீடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசே ஒரு தொழிலாளர் நல அரசுதான். திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதும் தொழிலாளர்கள் பக்கம் இருக்கக்கூடிய அரசே தவிர, (மேசையைத் தட்டும் ஒலி) எந்த முதலாளிக்கும் ஆதரவு தரக்கூடிய அரசு அல்ல. ஆனால் அங்கே நடைபெற்ற சம்பவம் என்னவென்றால், நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள், அது ஹுண்டாய்க்குச் சொந்தமான நிலம் என்று நினைத்துக்கொண்டு, ஒரு கொடியை நட்டிருக்கிறார்கள். அந்தக் கொடியை எங்கே நட்டிருக்கிறார்கள் என்று கேட்டால், சிப்காட்டுக்குச் சொந்தமான நிலத்திலே நட்டிருக்கிறார்கள். SIPCOT நிறுவனம் பல தொழிற்சாலைகளுக்கு நிலம் கொடுக்கக்கூடிய நிறுவனம். அவர்கள் தங்களுடைய நிலத்திலே கொடியேற்றியதைப் பார்த்துவிட்டு காவல் துறைக்குப் புகார் செய்திருக்கிறார்கள். காவல் துறையினர் அங்கே வந்திருந்து, அங்கே கொடியேற்றியவர்களை அகற்றியிருக்கிறார்கள். மற்ற விவரங்கள் அரசுக்குக் கிடைக்கவில்லை. அந்தத் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டிருந்தால் அரசாங்கம் அவர்களை விடுதலை செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும். *(குறுக்கீடு)*

*முற்பகல் 11-00*

### (அ) வாகனங்களில் சிவப்பு விளக்கைப் பயன்படுத்துதல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) திரு. கோ. அரி, ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்



திரு. சி. ஞானசேகரன் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, இங்கே பதிலளிக்க விரும்புகிறேன். யார் யார் தமிழ்நாட்டிலே வாகனங்களில் சிவப்பு விளக்கைப் பொருத்திக்கொள்ளலாம் என்று அரசாணை இருக்கிறது.

"Governor, Chief Minister, Speaker, Mayors of all Corporations, Ministers, Chief Justice and Judges of High Court, Director General of Police conferred to Chief, Police Commissioner in Cities, Ambulance, Pilot and Escort Vehicles, District Collectors, Superintendent of Police, Range Deputy Inspector General of Police, State Election Commissioner, The Chairman, Tamil Nadu Public Service Commission, Inspector General of Police (Law and Order), Chennai, Inspector General of Police (Law and Order), Southern Zone at Madurai, Chairman and Members of Advisory Board, N.S.A. and Article 14 of 1982, Arcot Nawab"—இந்த 19 பதவிகளில் உள்ளவர்கள் மட்டும்தான் சிவப்பு விளக்கைப் பொருத்திக்கொள்வதற்கு அரசு அனுமதித்திருக்கிறது. மற்றவர்கள் பொருத்தியிருப்பார்களேயானால், அது தவறு. அவர்கள்மீது நடவடிக்கை எடுத்து, சிவப்பு விளக்கைப் பொருத்திக்கொள்ளாத அளவிற்கு ஏற்பாடு செய்யப்படும். *(குறுக்கீடுகள்)*

### (ஊ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. அரி, இல்லை, இல்லை. அடுத்த அலுவலுக்குப் போகலாம். நேற்று நீங்கள் கொடுத்தது சரி. (குறுக்கீடுகள்) அதற்குப் பதில் வரவேண்டும். (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. அரி, உட்காருங்கள். நீங்கள் கொடுத்திருப்பதை Monday அன்று எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) திரு. அரி, அதனை இன்னொரு நாள் திரும்பவும் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும்; இரண்டு நாட்களும் அதையே எடுத்துக்கொள்ள முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு) திங்கட்கிழமை அன்று எடுத்துக்கொள்வோம் என்று சொல்கிறேன், அல்லவா? உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

## 3. கவன ஈர்ப்பு

### (அ) மன்னார்குடி, திருமக்கோட்டை மின் உற்பத்தி நிலையக் கழிவு நீரினால் ஏற்பட்ட பாதிப்புக்கு இழப்பீட்டுத் தொகை கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்) திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், நீங்கள் முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள். (குறுக்கீடுகள்)

(இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்கள் திரு. என். நன்மாறன், செல்வி கே. பாலபாரதி எழுந்து நின்று தொடர்ந்து ஏதோ பேசிக்கொண்டிருந்தனர்.)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மன்னார்குடி தொகுதி, திருமக்கோட்டை மின் உற்பத்தி நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் இரசாயனக் கழிவு நீரினால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்குத் தமிழ்நாடு மின்சார வாரியம் இழப்பீட்டுத் தொகை வழங்காதது குறித்து' மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கின்றேன்.

(இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளியேறினர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

#### அறிக்கை

திருமக்கோட்டை (கோவில்களப்பால்) எரிவாயு சுழலி மின் நிலையத்திற்குத் தேவைப்படும் நீர், ஆறு ஆழ்குழாய்க் கிணறுகள்மூலம் தமிழ்நாடு நிலத்தடி நீர்க் குழுமக் கட்டுப்பாட்டு விதிகளுக்கிணங்க,



250 மீட்டர் ஆழத்திலிருந்து எடுக்கப்படுகிறது. நிலையத்தின் ஆரம்ப கட்டக் காலங்களில், ஆறு ஆழ்குழாய்க் கிணறுகளும் ஆர்டீசியன் ஊற்றுகளாக இருந்தன. மின்நிலையத்திற்குத் தேவையான நீர் (நாளொன்றுக்கு சுமார் 3,600 கன மீட்டர்) உபரியாகக் கிடைத்தது. ஆகையால், இம்மின் நிலையத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நீரைச் சுமார் 1½ ஆண்டுக் காலம், எந்தவித பாதிப்புமின்றி விவசாயத்திற்குப் பயன்படுத்தி வந்தனர்.

மேற்படி, ஆர்டீசியன் ஊற்றின்மூலம் கிடைத்து வந்த உபரி நீர், நாளடைவில் குறையத் தொடங்கியதால், மின் நிலையத்திலிருந்து வெளியேறும் கழிவுநீரின் உப்புக் கரைதிறன் கூடி, விவசாயத்திற்குப் பயன்படுத்த முடியவில்லை. இந்நிலையைத் தவிர்க்க, தமிழ்நாடு மின்சார வாரியம், "பின்னோக்கி சவ்வூடு பரவல்" நிலையத்தை (Reverse Osmosis Plant) மே திங்கள் 2006 ஆம் ஆண்டு நிறுவிச் செயல்படுத்தத் தொடங்கியதால், வெளியேற்றப்படும் கழிவுநீர் மாதமொன்றிற்கு 150 கன மீட்டராகக் குறைந்தது. நிலைமை இவ்வாறு இருந்தபோதிலும், சில விவசாயிகள் இந்நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தியதால் நிலத்தின் தன்மை பாதிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

"பின்னோக்கி சவ்வூடு பரவல்" நிலையம் செயல்படத் தொடங்கிய பின், மின் நிலையத்திலிருந்து வெளியேறும் கழிவுநீரின் இரசாயனப் பொருட்களின் அளவு மிகக் குறைவாக உள்ளது. இருந்தபோதிலும், தமிழ்நாடு மின்சார வாரியம் சுமார் 5 ஏக்கர் நிலப் பரப்பில் "சூரிய வெப்ப ஆவியாதல்" குளங்களை (Solar Evaporation Pond) நிறுவி, நிலையத்திலிருந்து வெளியேறும் கழிவுநீரை ஆவியாக்கி, சுற்றுப்புறச் சூழல் மாசுபடாத வண்ணம் நிறுவத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்திற்காக ஒப்பந்த ஆணை 17-4-2008 அன்று வழங்கப்பட்டு வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்தப் பணி ஆறு மாதங்களுக்குள் முடிக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பிறகு, இரசாயனம் கலந்த எந்தக் கழிவுநீரும் மின் நிலையத்திலிருந்து வெளியேற்றப்படமாட்டாது.

தற்சமயம் நீராவிச் சுழலியிலிருந்து வெளியேற்றப்படும் நீரின் வெப்பம் குளிர்விப்புக் கோபுரம்மூலம் குளிர்விக்கப்பட்டு வெளியேற்றப்படுகிறது. இதன்மூலம் இந்நீரின் வெப்ப அளவு குறைக்கப்பட்டும் வெளியேறும் நீரின் உப்புக் கரைதிறன்

அனுமதிக்கப்பட்ட அளவிற்குள்ளேயே இருக்குமாறும் கண்காணிக்கப்பட்டு வெளியேற்றப்படுகிறது. இதன்படி, இம்மின் நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் குளிர்நீர், சுற்றுச்சூழல் மாசுபடா வண்ணம் பராமரிக்கப்படும்.

மேற்கூறிய "சூரிய வெப்ப ஆவியாதல்" குளங்கள் பயன்பாட்டிற்கு வந்தவுடன், இம்மின் நிலையத்திலிருந்து எந்தவித இரசாயனம் கலந்த கழிவுநீரும் வெளியேற்றப்படமாட்டாது. வெளியேற்றப்படும் குளிர்நீரின் வெப்பத் தன்மை குறைக்கப்பட்டு, சுற்றுச்சூழல் மாசுபடாத வண்ணம் வெளியேற்றப்படும்.

மேற்கூறப்பட்ட நிலைப்பாட்டின்படி, தமிழ்நாடு மின்சார வாரியம் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளபடியால், இழப்பீட்டுத் தொகை வழங்கவேண்டிய நிலைப்பாடு ஏற்படவில்லை. எனினும், மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் நடந்த கலந்தாய்வில், சம்பந்தப்பட்ட துறைகளின் ஆலோசனை அறிக்கைகளைப் பெற்று, இதுசம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடுகள்) திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உட்காருகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) திரும்பத் திரும்பச் சொல்கிறேன்; முதலில் நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பி.கே. சேகர்பாபு, உட்காருங்கள், இன்றைக்கு எடுத்துக்கொள்ள முடியாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதிக்க முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. வை. சிவபுண்ணியம், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அவைமுன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். (குறுக்கீடுகள்) இந்த அறிக்கையிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருப்பதற்கும், அங்கே நடைபெற்றிருக்கிற சம்பவங்களுக்கும் நிரம்ப வித்தியாசம் இருக்கிறது. குறிப்பாக, அந்தத் திருமக்கோட்டையிலே இயங்கி வருகிற நமது தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமான எரிவாயு சுழலி மின் உற்பத்தித் திட்டத்தின்மூலமாக, உற்பத்தி செய்யப்படுகிறது.



## 4. உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி அவையிலிருந்து வெளியேற்றம்

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி, அவரது இருக்கையைவிட்டு வேறோர் உறுப்பினரின் இருக்கையில் அமர்ந்துகொண்டு ஏதோ பேசிக்கொண்டிருந்தார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.ம. வேலுசாமி, நீங்கள் உங்களுடைய இடத்தைவிட்டு மாறி வேறொருவரின் இருக்கையில் அமர்ந்துகொண்டு, அவசியமில்லாமல் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். அன்றைக்கே எச்சரித்து இருக்கிறேன்; அதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) திரும்பத் திரும்ப நான் எச்சரித்து எச்சரித்து விட்டுக் கொண்டிருக்கிறேன் என்று நினைத்துக் கொண்டிருக்காதீர்கள். எங்கே வந்து உட்கார்ந்து, எங்கேயிருந்து சத்தம் போடுகிறீர்கள் நீங்கள்? மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி அவர்களை அவையிலிருந்து வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) அவரது இருக்கையைவிட்டு, வேறோர் இருக்கைக்கு வந்து அவையை நடத்தவிடாமல், இடைஞ்சல் செய்து கொண்டிருக்கிறார்; வெளியேற்றுங்கள் அவரை. (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. செ.ம. வேலுசாமியை அவையிலிருந்து வெளியேற்றுங்கள். (குறுக்கீடு) திரு. செ.ம. வேலுசாமி, அவருடைய இடத்தைவிட்டு மாறிப் போய் உட்கார்ந்துவிட்டு, சபையை நடத்த விடாமல் இடைஞ்சல் பண்ணிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) பல முறை எச்சரித்தும் அவர் வேண்டுமென்றே இப்படிச் செய்துகொண்டிருக்கிறார். இதற்கப்புறமும் என்னை என்ன பண்ணச்சொல்கிறீர்கள்? நான் பல முறை எச்சரித்துவிட்டேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் *11-05*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் ஆணையிட்ட பிறகு, காவலர்கள் ஓர் உறுப்பினரை வெளியேற்றப் போகிறபொழுது, மற்ற உறுப்பினர்கள் அந்தக் காவலர்களை உள்ளே வர விடாமல் தடுப்பது, ஒட்டுமொத்தமாக அவைக்கு இழைக்கப்படும் ஒழுங்கீனமாகும். மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். குறிப்பிட்ட ஓர் உறுப்பினருடைய பெயரை மாண்புமிகு தலைவர்

சொல்லியிருக்கிறார். அவரை வெளியேற்றுவதற்குத் தாங்கள் வழிவகுக்க வேண்டும். இல்லாவிட்டால், முடியாது என்று சொன்னால் எல்லோரையும் வெளியேற்றுவதா என்பது குறித்து மாண்புமிகு தலைவர்தான் முடிவு செய்ய வேண்டும். It is highly irregular to touch the officials. அரசு அலுவலர்களை, காவலர்களை அவர்கள் பணி செய்யவிடாமல் தடுப்பது இந்த அவைக்கு இழைக்கப்படும் மிகப் பெரிய குற்றம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், திரு. பன்னீர்செல்வம்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினை இரண்டு தரப்பிலும் எழுந்தது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இரண்டு தரப்பிலும் இல்லை. (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் சொல்லி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) என்ன இது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படிப் பிரச்சினை இரண்டு தரப்பிலும் இல்லை.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** என்னை நீங்கள் சொல்லக்கூட விடமாட்டேன் என்கிறீர்களே? முதலிலே எல்லோரையும் உட்காரச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் ஏன் பேசக்கூட முடியாதா? என்ன இது? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.ம. வேலுசாமி, அவர் இருக்கையைவிட்டு வேறு இடத்தில் உட்கார்ந்துகொண்டு, அவையை நடத்தவிடாமல் இடைஞ்சல் பண்ணிக்கொண்டிருந்தார். பல முறை நான் அவரை எச்சரித்துவிட்டேன். அதேமாதிரி தொடர்ந்து அவர் பண்ணிக்கொண்டிருக்கிறார். அவர் இந்த அவையில் இருந்தால் இந்த அவையை நடத்த முடியாத நிலை உருவாகும்.



**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், திரு. செ.ம. வேலுசாமி அவர்களை வெளியேற்ற வேண்டுமென்று நீங்கள் உத்தரவு தந்தீர்கள். அவர் ஒருவரை வெளியேற்றுவதற்கு 100 பேர், ஆண் காவலர்கள், பெண் காவலர்கள் என வரிசையாக அணி வகுத்துச் செல்வது எந்தவிதத்தில் நியாயம் என்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒருவரை மட்டும்தான் நான் வெளியேற்றச் சொல்லியிருக்கிறேன். வேறு யாரையும் வெளியேற்றவில்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. திரு. செ.ம. வேலுசாமியை மட்டும்தான் வெளியேற்றுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி, பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பெற்றார்.)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்களை விட்டு ஓர் உறுப்பினரை வெளியேற்றச் சொல்கிறபோது, எத்தனை காவலர்களை உள்ளே அனுப்புவது, யார், யாரை அனுப்புவது, பெண் காவலர்களை அனுப்புவதா அல்லது ஆண் காவலர்களை அனுப்புவதா என்பது உங்களுடைய purview. அது சபாநாயகர் அவர்களுடைய உத்தரவு. காவலர்கள் பத்துப் பேராகப் போகிறபோதே அவர்களைப் போகவிடாமல் தடுக்கிறபோது, ஒரு உறுப்பினரை வெளியேற்ற ஒரே ஒரு காவலர் போனால் என்ன ஆகும் என்பதை மாண்புமிகு முன்னாள் முதலமைச்சராக இருந்தவர் தெரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### (அ) மன்னார்குடி, திருமக்கோட்டை மின் உற்பத்தி நிலையக் கழிவு நீரினால் ஏற்பட்ட பாதிப்புக்கு இழப்பீட்டுத் தொகை கோருதல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருமக்கோட்டை மின் உற்பத்தி நிலையத்தின்மூலமாக வெளியேற்றப்படுகிற அந்தக் கழிவு நீரில் இரசாயனம் கலந்து இருக்கிற காரணத்தினால், சுமார் 200 ஏக்கர் நிலம் கடந்த 6 ஆண்டுக் காலமாகப் பாதிக்கப்பட்டுவிட்டது. இதனால் அவர்களால் எந்தவிதமான விவசாயப் பணிகளையும் அதிலே செய்ய இயலவில்லை. இதுகுறித்து அந்தப் பகுதியிலே தொடர் போராட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. அந்தப் போராட்டங்கள் நடைபெறுகிறபோதெல்லாம் வட்டாட்சியர், கோட்டாட்சியர்கள் எல்லாம் நேரிலே சென்று, அதற்குச் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தி, இழப்பீடு வழங்கப்படும் என்று அறிவிக்கிறார்கள். ஆனால், இதுவரையிலும் வழங்கப்படவில்லை. கடந்த ஆண்டு, திரும்பவும் மிகப் பெரிய போராட்டமாக அது உருவெடுத்து, சாலை மறியலாக அது நடைபெற்றபோது, மாவட்ட ஆட்சியரே நேரடியாக அந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டு, கோட்டாட்சியருக்கு உத்தரவிட்டு, கோட்டாட்சியரும் அந்த இடத்தைப் பார்வையிட்டு, சுமார் 150 ஏக்கருக்கு மேலே பாதிக்கப்பட்டிருக்கிறது என்று அந்த இடங்களையெல்லாம் ஆய்வு செய்து, உண்மை என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆனால் இந்த அறிக்கையிலே குறிப்பிட்டுச் சொல்லியிருப்பது என்பது அந்த நீரை விவசாயிகள் பாய்ச்சிய காரணத்தினாலே கெட்டுவிட்டது என்று மின்சார வாரியம் சொல்லுகிறது. இது ஒரு அபத்தமான செய்தியாக இருக்கிறது. ஆனால் பாசன வாய்க்கால்களில் அந்த மின்சார வாரியத்தினுடைய கழிவுநீர் கலக்கின்ற காரணத்தினாலேதான் அங்கே விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே முரண்பட்ட தகவல்களை மின்சாரத் துறை அதிகாரிகள் இதிலே வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.



முற்பகல் 11-10

மாவட்ட ஆட்சியர் தெளிவாக அவர்களுடைய அறிக்கையிலே குறிப்பிட்டு இங்கே அனுப்பியிருக்கிறார். "பாதிக்கப்பட்ட அந்த விவசாயிகளுக்கு வருடவாரியாகவோ அல்லது ஒட்டுமொத்தமாக ஆறு ஆண்டுகளுக்கோ இழப்பீட்டுத் தொகை வழங்கலாம் என்று சிபாரிசு செய்கிறேன்" என்று மாவட்ட ஆட்சியர் 13-9-2007 ஆம் தேதியன்றே அறிக்கை அனுப்பியிருக்கிறார். கிட்டத்தட்ட ஏழரை மாதங்கள் கடந்துவிட்டன. இதுவரையிலும் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாத காரணத்தினாலே அந்த விவசாயிகள், சாதாரண ஏழையெளிய விவசாயிகளாக இருக்கிற காரணத்தினாலேயே மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குரிய இழப்பீட்டுத் தொகையை மின்சார வாரியம் வழங்க வேண்டும். இதிலே சுற்றுச்சூழல் பாதிப்பு இருப்பதைப்பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்லப்படுகிறது. இந்த ஆண்டுதான் அதற்குரிய மாற்றுத் திட்டத்தைப்பற்றி ஆய்வு செய்து, அது இன்னும் ஆறு மாதகாலத்திற்குள்தான் முடிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. ஆகவே இன்றையவரையிலும் அது பாதித்துக் கொண்டிருக்கிறது என்பதுதான் இந்த அறிக்கையின்மூலமாகச் சொல்லப்படுகிற செய்தி. ஆகவே இதிலே பாதிக்கப்பட்டிருப்பவர்கள் விவசாயிகள்; கிட்டத்தட்ட 100 பேர்களுக்கு மேலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மின்சார வாரியம் சொல்லுகிற காரணம் பொருத்தமானதாக இல்லை. இந்தக் காரணத்தைச் சொல்லுவது என்பது, அந்தப் பகுதியில் இப்பொழுது அது வெளிப்படுகிறபோது, மேலும் ஒரு பிரச்சினையை, ஒரு கொந்தளிப்பான நிலையை ஏற்படுத்துவதற்குரிய வாய்ப்பு அதிலே அமைந்துவிடாமல் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாகத் தனிச் சிறப்புக் கவனம் எடுத்து அவர்களுக்கு உதவித் தொகை, இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள் எழுப்பிய அந்தப் பிரச்சினை குறித்து சுருக்கமாகவே சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே அங்கே வெளியேறிய கழிவுநீரில் உப்புக் கரைதிறன்கூடிய நீர், விவசாயத்திற்குப் பயன்படுத்த முடியவில்லை என்றும், ஆகவே அதற்கு மாற்று வழி

கண்டுபிடிக்க வேண்டும் என்றும் மின்சார வாரியம் கருதியபோது, 2006 ஆம் ஆண்டு மே திங்கள் 'பின்னோக்கி சவ்வூடு பரவல்' என்ற ஒரு திட்டத்தை Reverse Osmosis Plant ஒன்றை அப்பொழுதே போட்டு அதன்மூலமாக ஒரு நாளைக்கு 3,600 கன மீட்டர் தண்ணீர் வெளியேறிக்கொண்டிருந்ததற்கு மாறாக 150 கன மீட்டர் தண்ணீர்தான் ஒரு மாதத்திற்கு வெளியேறக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட அந்த 150 கன மீட்டர் கழிவுநீர்கூட ஒரு மாதத்திற்கு வெளியேறக்கூடாது என்பதற்காகப் புதிதாக -- Solar Evaporation Pond -- 'சூரிய வெப்ப ஆவியாதல்' சூரிய வெளிச்சத்தின்மூலமாக அந்த நீரை அப்படியே ஆவியாக்கக்கூடிய ஒரு கருவியை அங்கே பொருத்தி ஐந்து ஏக்கர் நிலத்திலே அதற்கான நடவடிக்கைகளை மின்சார வாரியம் எடுத்துக்கொண்டிருக்கிறது. அது இன்னும் ஆறு மாதங்களிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, பொருத்தப்பட்டு நீராவியாக அந்த நீர் ஆக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அதற்குள்ளாக அங்கே ஒரு 100 விவசாயிகள் பாதிக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர், வேளாண்மைத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள், மின்சார வாரிய அதிகாரிகள் எல்லோரையும் ஒரு குழுவாக நியமித்து இழப்பு அங்கே ஏற்பட்டிருக்குமானால், அந்த இழப்பீட்டினுடைய அளவை ஆராய்ந்து மின்சார வாரியம் மூலமாக உரிய உதவிகள் அவர்களுக்குச் செய்து தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் நான் திரும்பவும் சொல்வது என்னவென்றால், மாவட்ட ஆட்சியர் நம்முடைய அரசுக்கும், குறிப்பாக சிறப்பு ஆணையர், வருவாய் நிருவாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்புத் துறைக்கும் இந்த அறிக்கையை அனுப்பியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட ஏழரை மாதங்கள் ஆகின்றன. நான் கேட்பது, திரும்பவும் மாவட்ட ஆட்சியருக்கு நீங்கள் அனுப்பினால், அங்கே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் என்பது அநேகமாக இல்லை என்று ஆகிவிடும். அதுவே ஒரு பிரச்சினையாகத் திரும்ப உருவெடுப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. நான் சொல்லுவது, தயவுசெய்து நம்முடைய மின்சார





வாரியம் திரும்பவும் அந்த உயர் அதிகாரிகளை அதிலே தலையிடச் செய்து அதற்குரிய பாதிப்பைப்பற்றிச் சொல்ல வேண்டும். நீங்கள் குறிப்பிட்டபடி, இப்போது செய்யப்படுகின்ற இந்தப் பணிகளிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. இப்போதுதான் டெண்டர் விடப்பட்டு 13 நாட்கள்தான் ஆகின்றன. இன்னும் ஆறு மாத காலத்திற்குப் பின்னாலேதான் அந்தப் பணிகள் நிறைவேறப்போகின்றன. அப்படிச் சொல்லுகிற காரணத்தினாலே, அந்தப் பாதிப்பு என்பது உண்மையாகிறது. இதிலே மாற்றுக் கருத்தோ, அல்லது வேறுவிதமாகவோ, பொய்யாகவோ சொல்ல வேண்டிய அவசியம் இல்லாத நிலை என்பதற்காக நான் இதைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறேன். ஆகவே சுற்றுச்சூழல் பாதிக்காத வண்ணம் ஏற்கெனவே இதையெல்லாம் செய்திருக்க வேண்டும் அந்த நிறுவனம். ஏனோ செய்யவில்லை. இருந்தாலும் அதைப்பற்றி நான் உள்ளே செல்லவில்லை. அதன் காரணத்தால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள், விவசாயிகள். சாதாரண ஏழையெளிய விவசாயிகள் என்ற காரணத்தினாலே, அவர்களுக்குரிய இழப்பீடு என்பது, குறைந்தபட்சம் 50 இலட்சம் ரூபாய் அளவிற்குக் கொடுக்க வேண்டிய நிலையிருக்கிறது. அந்த இழப்பீட்டுத் தொகையை வழங்கினால்தான், ஆறாண்டுக் காலமாகச் சாகுபடி செய்யாமல் இருப்பவர்களைப் பாதுகாக்க இயலும். இல்லையென்றால், அவர்களே வேறொரு நிலைக்குச் செல்லவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டுவிடுவார்கள் என்ற அபாயம் இருக்கிறது. தயவுசெய்து மீண்டும் பரிசீலித்து, அவர்களுக்குரிய நிவாரணத்தை விரைவாக வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் விரைவான நடவடிக்கையை மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அனுப்பியிருக்கின்ற அறிக்கையைப் பற்றி இங்கே திரும்பத் திரும்பச் சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிக்கை அனுப்பியிருந்தாலும்கூட, மின்சார வாரியத்தைக் கலந்தாலோசிக்காமல், வேளாண்மைத் துறையைக் கலந்தாலோசிக்காமல், எவ்வளவு இழப்பு ஏற்பட்டிருக்கும் என்பதைப்பற்றி ஆராயாமல், பொதுவாக ஓர் அறிக்கையை

அனுப்பியிருக்கிறார். எனவேதான், இந்த மூன்று துறைகளையும் சேர்ந்த அதிகாரிகளை உடனடியாக நியமித்து, ஓர் ஆய்வறிக்கையை மின்சார வாரியத்திற்குத் தரச்சொல்லி, அவர்கள் அறிக்கை தந்தவுடனேயே இழப்பீடு எவ்வளவு வழங்க வேண்டும் என்பதைத் திட்டமிட்டு, அதற்குரிய நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் உறுதியளிக்க விரும்புகின்றேன்.

## (ஆ) கபிலர்மலை, பொத்தனூர் ஆதி திராவிடர் காலனி வீட்டு மனைகள் ஆக்கிரமிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. டாக்டர் க. நெடுஞ்செழியன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

***டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கபிலர்மலை தொகுதி, பொத்தனூர் ஆதி திராவிடர் காலனியில், வீட்டு மனை பெற்றுக் குடியிருப்பவர்களை அப்புறப்படுத்தி, அந்நிலத்தினைச் சிலர் ஆக்கிரமிக்க முயற்சிப்பது" குறித்த, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

### அறிக்கை

நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் வட்டம், பொத்தனூர் கிராமத்தில் வசித்து வரும் வீடில்லாத ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டு மனைகள் வழங்குவது சம்பந்தமாக, பொத்தனூர் கிராமத்தில் உள்ள பட்டா புன்செய் நிலங்களைத் தேர்வு செய்து, மத்திய நில எடுப்புச் சட்டம் 1894-ன்படி, நாமக்கல் ஆதி திராவிடர் நல தனி வட்டாட்சியரால் நில எடுப்பு செய்ய, பிரிவு 4(1), 6, 7-ன் கீழான விளம்பரங்கள் அரசினால் ஒப்புதலளிக்கப்பட்டு, தமிழ்நாடு அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்டது. தீர்ப்பு விசாரணையின்போது நில





உரிமையாளர் திரு. ஈஸ்வர அய்யர் குமாரர் திரு. லாடமணி அய்யர் என்பவர் இந்த நில எடுப்பை ஆட்சேபணை செய்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் W.P. எண் 9795/91-ல் வழக்குத் தொடுத்து நிலத்தை சுவாதீனம் எடுக்க இடைக்காலத் தடையாணை பெற்றார். தனி வட்டாட்சியரால் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு, இழப்பீட்டுத் தொகை ரூ. 3,17,815/-ஐ நாமக்கல் சார்பு நீதிமன்றத்தில் நில எடுப்புச் சட்டம் பிரிவு 30, 31 (2)-ன்படி வைப்பீடு செய்யப்பட்டது. பின்னர், சென்னை உயர் நீதிமன்றம், W.P. எண் 9795/91 என்ற வழக்கை 15-6-1999-ல் தள்ளுபடி செய்தது.

2. நில எடுப்பின்போது இருந்த 36 பயனாளிகளில், 4 நபர்கள் மட்டும் தகுதியுடையவர்களாக இருந்தனர் என்று விசாரணை செய்து, தகுதியான பயனாளிகள் பட்டியலையும், வீட்டு மனை வரைபடத்தையும் அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டது. நாமக்கல் ஆதி திராவிடர் நல தனி வட்டாட்சியர், 61 நபர்களைத் தேர்வு செய்து அதன்மீது நாமக்கல் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அவர்களின் ஒப்புதல் பெற்று 61 பயனாளிகளுக்கு 2 சென்ட்வீதம் இலவச வீட்டு மனைகள் 30-4-2003-ல் வழங்கப்பட்டன. ஆனால், வீடுகள் கட்ட மனைகளை அடையாளம் காட்ட நடவடிக்கை மேற்கொள்ளும்போது, இந்த வீட்டு மனைகள் தகுதியற்றவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதெனவும், மேற்படி 61 மனைப் பட்டாக்களையும் இரத்து செய்து, புதியதாக இணைக்கப்பட்ட 59 நபர்களுக்கு வீட்டு மனைகள் வழங்கக் கோரி, சேலம் எவர்பிரைட் டெவலப்மென்ட் சென்டர் தலைவர் திரு. பாலசுப்ரமணியம், சென்னை உயர் நீதிமன்றத்தில் W.P. எண் 7541/2005-ல் வழக்குத் தொடுத்தார். இதனால் பயனாளிகளுக்கு வீடுகள் கட்ட, lay-out—படி வீட்டு மனை எண்படி மனைகள் அடையாளம் காட்டப்படவில்லை. பயனாளிகள் வீட்டு மனைப் பட்டாக்களைப் பெற்றுக்கொண்டு, தங்களது இஷ்டம்போல், lay-out மற்றும் மனை எண்படி இல்லாமல், கூரை மற்றும் வில்லை வீடுகளைக் கட்டிக் கொண்டனர்.

3. சேலம், சிங்காரவேலு என்பவர், வழங்கப்பட்ட மேற்படி 61 மனைப் பட்டாக்களும் தகுதியில்லாத நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன எனவும், மேற்படி 61 மனைப் பட்டாக்களை இரத்து செய்துவிட்டு, புதியதாகக் கொடுத்துள்ள பயனாளிகள் பட்டியல்படி, வீட்டு மனைகள் வழங்கக் கோரி, ஆட்சேபணை மனுவை நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் நேரில் 24-7-2006 அன்று கொடுத்தார்.

4. மேற்கண்ட காரணங்களால், வீட்டு மனைகள் வழங்கப்பட்ட 61 நபர்களின் உண்மைத் தன்மையை விசாரித்து, அறிக்கை அனுப்புமாறு பரமத்திவேலூர் வட்டாட்சியர் கேட்டுக்கொள்ளப்பட்ட நிலையில், அவர் தனது அறிக்கையில், பயனாளிகள் 61 நபர்களில் 28 நபர்கள் மட்டும் தகுதியானவர்கள் என்றும், மீதமுள்ள 33 நபர்கள் தகுதியில்லாதவர்கள் என்றும் பரமத்திவேலூர் வட்டாட்சியர் தெரிவித்தார். இதன் அடிப்படையில் 61 மனைப் பட்டாக்களையும் நாமக்கல் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரால் 15-12-2003 அன்று இரத்து செய்து உத்தரவிடப்பட்டது. மேலும், மேற்படி வீட்டு மனைகளுக்கு மின் இணைப்பு வழங்கக்கூடாது என்றும், வீட்டு வரி வசூல் செய்யக்கூடாது என்றும் மின் வாரியத்திற்கும், பேரூராட்சிக்கும் உத்தரவுகள் அனுப்பப்பட்டன.

5. இதன் பின்னர், சம்பந்தப்பட்ட அதிகாரியின் உத்தரவின்றி, சுமார் 100 நபர்கள் சிறு சிறு குடிசைகள் போட்டு, போக வர பாதையில்லாமல், தற்காலிகக் குடிசைகள் போட்டனர். இந்த நிலையில், ஆர்ஜித நிலங்களின் உரிமையாளர் திரு. லாடமணி அய்யர் குமாரர் திரு. பாலசுப்ரமணியம் என்பவர், ஆர்ஜிதம் செய்யப்பட்ட 2.29 ஏக்கருக்குப் பதிலாக பொத்தனூருக்கு அருகில் உள்ள புஞ்சை இடையார் மேல்முகம் மற்றும் வீராணம்பாளையம் கிராமங்களில் கீழ்க்கண்ட புன்செய் நிலங்களை நில எடுப்பு செய்துகொள்ளச் சம்மதம் தெரிவித்து நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் முன்பாக நேரில் மனு கொடுத்தார்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| புஞ்சை இடையார் மேல்முகம் | ச.எண் 154/1ஏ | புன்செய் | விஸ்தீரணம் | 0.84.5 | எக்டேர் |
| வீராணம்பாளையம் | ச.எண் 201/2 | புன்செய் | விஸ்தீரணம் | 0.42.5 | எக்டேர் |
| வீராணம்பாளையம் | ச.எண் 201/4 | புன்செய் | விஸ்தீரணம் | 0.38.0 | எக்டேர் |
| | மொத்தம் | | | 1.65.0 | எக்டேர் |

6. நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், திரு. பாலசுப்ரமணியம் என்பவரது மனுவை ஏற்று, அரசுக்குப் பரிந்துரை செய்து 30-9-2005, 30-10-2006 மற்றும் 17-12-2007 தேதிகளில் அரசுக்கு அறிக்கை அனுப்பினார். நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரையை ஏற்று, மாற்று நிலம் நில எடுப்பு செய்யவும், ஆர்ஜித நிலங்களை நில உரிமையாளருக்குத் திரும்ப வழங்கவும், அரசாணை (3ப) எண் 14, ஆதி திராவிடர் மற்றும்



பழங்குடியினர் நலத் துறை, நாள் 12-4-2007-ல் ஆணையிடப்பட்டது. இந்த அரசு உத்தரவையும், 61 மனைப் பட்டாக்களை இரத்து செய்ததையும் ஆட்சேபணை செய்து, 61 பயனாளிகளில் சில நபர்களால் உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. வழக்கு நிலுவையில் உள்ளது. சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்துள்ளதால், எவரையும் அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சென்னை உயர் நீதிமன்ற ரிட் மனுக்கள்மீது தீர்ப்பு வரப் பெற்றதும் மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். 1990 ஆம் ஆண்டு, அதாவது 18 ஆண்டுகளுக்கு முன்பு, ஏழையெளிய வீடில்லாத ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டு மனைகள் வழங்க, பொத்தனூர் கிராமத்தில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, 13 ஆண்டுகளுக்குப் பின், 30-4-2003 அன்று 61 நபர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டது. ஆட்சேபணையின் காரணமாக, ஆய்வு செய்யப்பட்டு, 61 நபர்களில் 28 நபர்கள் பட்டா பெறத் தகுதியானவர்கள் என்று வட்டாட்சியர் அவர்களின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையிலே, ஏழையெளிய ஆதி திராவிட மக்கள் கூரை, வில்லை வீடுகளைக் கட்டிக் கொண்டு வசித்து வருகிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், நாமக்கல் மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர், தனது 15-12-2003 அன்று அளித்த அறிக்கையின் அடிப்படையில், வழங்கப்பட்டுள்ள பட்டாக்கள் அனைத்தும் இரத்து செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நான்கு ஆண்டுகள் கடந்த நிலையில், 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட இலவச வீட்டு மனைப் பட்டாக்களை வழங்கி, கருணைக் கடலாக ஆட்சி செய்து கொண்டிருக்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, கொடுக்கப்பட்ட பட்டாக்கள் அனைத்தையும் இரத்து செய்து, மாற்று நிலம் அளிக்க ஆணையிடப்பட்டதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு, வீடுகளைக் கட்டிக் குடியிருந்து வருபவர்களுக்கு இரத்து செய்யப்பட்ட பட்டாக்களை மீண்டும் வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, பரமத்திவேலூர் வட்டம், பொத்தனூர் கிராமத்தில் புல எண்கள் 134/2, 137/1ஏ, மற்றும் 137/1பி ஆகியவற்றில் உள்ள 2.29 ஏக்கர் நிலம், மத்திய நில எடுப்புச் சட்டம் 1894-ன்படி 7-12-1992 அன்று நிலம் கையகப்படுத்தப்பட்டது. நில உரிமையாளர் வழக்குத் தொடர்ந்ததனால், சென்னை உயர் நீதிமன்றத்தில் அரசுக்குச் சாதகமாக 15-6-1999-ல் தீர்ப்பு வழங்கப்பட்டது. தீர்ப்பு வழங்கப்பட்ட பிறகு, 61 நபர்களுக்கு 3-4-2003-ல் பட்டா வழங்கப்பட்டது. வீடுகள் கட்ட, மனைகள் அடையாளம் காட்ட நடவடிக்கை மேற்கொள்ளும்போது, வீட்டு மனைகளைப் பெறத் தகுதியற்ற நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்ற புகாரின் அடிப்படையில், 15-12-2003-ல் இரத்துச் செய்யப்பட்டது. தற்போது அந்த இடத்தில் பட்டா இரத்துச் செய்யப்பட்ட 61 நபர்களும், ஆக்கிரமிப்பு செய்துள்ள 60 நபர்களும் மற்றும் சேலம் எவர்பிரைட் டெவலப்மென்ட் சென்டர் என்ற அமைப்பு கோரிய 59 பயனாளிகளும் அதே இடத்தில் பட்டா வழங்க வேண்டுமெனக் கோரி 2005 ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றத்தில், நீதிப் பேராணை எண் 7541-ல் தாக்கல் செய்துள்ளனர். இந்த 59 நபர்களையும் சேர்த்து, அந்த இடத்தில் 180 நபர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். அந்த 180 நபர்களுக்கும் பொத்தனூர் கிராமத்தில் 2.29 ஏக்கர் நிலத்தில் போதுமான பட்டா வழங்குவதற்கு இட வசதி இல்லை. இந்த 180 நபர்களில் ஒரு சிலருக்கு மட்டும் பட்டா வழங்கினால் அங்கு சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை ஏற்படும். அதனால், நிலத்தின் உரிமையாளர் 2.29 ஏக்கர் நிலத்தை, கிரயத் தொகை ரூபாய் 3,17,8.51/-ஐப் பெற்றுக்கொண்டு மாற்று இடம், அதாவது இரு மடங்கு பரப்பளவு கொண்ட 4.03 ஏக்கர் நிலத்தைத் தர, உரிமையாளர் சம்மதம் தெரிவித்துள்ளார். இந்த இடம் ஐந்து கிலோ மீட்டர் தூரத்தில்தான் அமைந்துள்ளது. இங்கு கலைக் கல்லூரியும், சாலை வசதியும் உள்ளது. இந்த 2.29 ஏக்கர் நிலத்தில் ஆக்கிரமிப்புச் செய்துள்ள 180 நபர்கள் சம்மதித்தால், அவர்களில் தகுதியானவர்கள் அனைவருக்குமே 4.03 ஏக்கர் நிலத்தினைப் பட்டா வழங்குவதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். ஆனால், தற்பொழுது நிலப் பட்டா வழங்குவதற்கு மாற்று இடத்தைப் பெற்றுக்கொண்டு பிரதான நிலம் முழுவதையும் உரிமையாளருக்குத்





திரும்பவும் வழங்கலாம் என்று அரசு ஆணை வெளியிட்டதை எதிர்த்து 46 நபர்கள் வழக்குத் தொடர்ந்துள்ளனர். வழக்குத் தொடர்ந்ததையடுத்து நிலத்தைத் திரும்பப் பெற, உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடையும் வழங்கியுள்ளது. எனவே, சென்னை உயர் நீதிமன்றத்தில் தற்போது நிலுவையிலுள்ள நீதிப் பேராணைமீது தீர்ப்பு வரப்பெற்றவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, தற்போது யாரையும் அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Real Estate தொழில் நாடு முழுவதும் கொடி கட்டிப் பறந்துகொண்டிருக்கிற வேளையிலே தாறுமாறான விலையேற்றத்தின் காரணமாக, ஏழை எளிய மக்களுக்கு அவர்களுடைய அடிப்படைத் தேவையான குடியிருக்கும் இடம் எட்டாக் கனியாகவும், கனவாகவும் ஆகின்ற நேரத்திலே 20 ஆண்டுகளுக்கு முன் அரசால் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்கு மாற்று நிலம் வழங்க நில உரிமையாளர்களுக்கு வாய்ப்பு அளிப்பது என்ற கொள்கையை நில உரிமையாளர்கள் நீதிமன்றம் செல்வதற்கு முன்னாலேயே எடுத்திருக்க வேண்டும்; அல்லது அவர்களுக்கு அந்த மாற்று இடம் அளிக்க வழங்கப்பட்ட கால அவகாசத்தை அரசு மறு பரிசீலனை செய்து, இந்த ஆணையை இரத்து செய்து, ஏற்கெனவே அங்கே வீடு கட்டிக் குடியிருப்பவர்களுக்குப் பட்டா வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நெடுஞ்செழியன், நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது. சொல்ல வேண்டிய விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்லுங்கள். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடத்தில் 2.29 ஏக்கர் நிலம்தான் உள்ளது. அங்கு குடியிருப்பவர்கள், ஆக்கிரமிப்புச் செய்தவர்கள் 180 பேர் இருக்கிறார்கள். அந்த 180 பேரில், ஒரு சிலருக்குக் கொடுத்து, ஒரு சிலருக்குக் கொடுக்காமலிருந்தால், அங்கு சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை ஏற்படும். அதனால்தான் மாற்று இடத்தைத் தேர்வு செய்து, அந்த

இடத்தை வழங்கலாம் என்று அரசு ஆணையிட்டிருக்கிறது. மேலும் இது சம்பந்தமான வழக்கு நிலுவையிலுள்ள காரணத்தினால், தீர்ப்பு வந்த பிறகு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (எ) தொண்டாமுத்தூர் அருள்மிகு அனுவாவி சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் காவலாளி, யானைக் கூட்டம் தாக்கி இறந்தது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன்.

***திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், தொண்டாமுத்தூர் தொகுதியிலுள்ள அருள்மிகு அனுவாவி சுப்பிரமணியசுவாமி கோயிலில் நேற்று முன்தினம் இரவு 28-4-2008 அன்று, இரவுக் காவலாளி சுப்பிரமணியம் என்பவர் அங்கே பணியாற்றிக் கொண்டிருந்த நேரத்தில், பக்கத்திலே வனப் பகுதியிலேயிருந்து ஒரு யானைக் கூட்டம் அந்தக் கோயிலுக்குள் நுழைந்து அவரைத் தாக்கி சின்னாபின்னப்படுத்தியது. காலையிலே ஆறு மணிக்குமேல் அந்தக் கோயிலுக்குச் சென்றவர்கள் பார்த்த பிறகுதான் காவலாளி இறந்து கிடந்ததுகூட தெரிந்தது. அதனால், அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள் மிகப் பெரிய அதிர்ச்சிக்கும், பீதிக்கும் ஆளாகியிருக்கின்றார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த அந்த அறிவிப்பு, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச். செல்லப்பட்டிருக்கிறது. அதற்கு நிவாரண உதவிகள் வழங்க வேண்டுமென்றால், மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் அறிவிக்க வேண்டும். ஆகவே, முதல்வர் அவர்கள் அறிவிக்க வேண்டியிருப்பதால், பின்னால் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) பின்னால் சேர்த்து எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள், உட்காருங்கள்.



## 5. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

***திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நூற்றேழு முதல் நூற்றுப் பதினாறு வரையிலான பத்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கையினை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்றேழாவது அறிக்கையினைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11-25

## 6. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 6 -** **கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)**

**(ஆ) கோரிக்கை எண் 7 -** **மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வள்ம் மற்றும் மீன் வளத் துறை)**

**(இ) கோரிக்கை எண் 8 -** **பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)**

### (அ) கோரிக்கை எண் 6 – கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008-2009 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 6—கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு,

பால் வளம் மற்றும் மீன் வளத் துறை), மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.250,40,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.33,11,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 6, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.250,40,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 218, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.250,40,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9028, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.250,40,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14471, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.250,40,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16770, திரு. விடியல் எஸ். சேகர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1698, திரு. பெ. மோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2181, திரு. டி. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10720, திரு. கு. பாண்டுரங்கன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11473, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 13309, திரு. சி. சண்முகவேலு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 17097, திரு. சு.ப. வேலுமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5350, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.250,40,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6143, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.250,40,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7615, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.250,40,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9488, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.250,40,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9831, திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.250,40,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10936, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.250,40,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11181, திரு. கே.எல். இளவழகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11427, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.250,40,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12090, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.250,40,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13558, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.250,40,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13996, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.250,40,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14828, திரு. த.அ. மேகநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 13677, திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 15708, திரு. சி. கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 15962, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.250,40,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14970, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.250,40,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1227, திரு. ஆர்.கே. பாரதி மோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1468, டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செய்யாறில் உள்ள குத்தனூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.250,40,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1812, திரு. போ. சின்னப்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10754, திரு. பி. பலராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1865, திரு. தா. மலரவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2451, திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2975, திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திட்டக்குடி வட்டத்திலுள்ள கால்நடை மருத்துவமனைக்கு டாக்டர்கள் நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.250,40,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3584, திருமதி ஜி. லதா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3921, திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4086, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் உள்ள கால்நடை மருத்துவமனையில் கால்நடைகளுக்கு அனைத்து வகையான மருந்துகளை இலவசமாக வழங்கி சிகிச்சை அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.250,40,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4895, திருமதி ரா. லீமா றோஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5137, திரு. ம. குணசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5650, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.250,40,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6689, திரு. து. ரவிக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6701, திருமதி எஸ். தேன்மொழி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6707, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி பேரூராட்சிப் பகுதியில் இயங்கிவரும் கால்நடை மருத்துவமனை, சுற்றுச் சுவர் இல்லாமல் மிகவும் மோசமாக உள்ளது. ஆதலால் சுற்றுச் சுவர் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.250,40,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6748, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோளிங்கர் தொகுதிக்குட்பட்ட ஒன்றியத்தில் கால்நடை மருத்துவமனை ஒன்றைக் கால்நடை பராமரிப்புத் துறைமூலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.250,40,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6805, திரு. இரா. குமரகுரு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7822, திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8815, திரு. இ. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9169, திரு. மா. தண்டபாணி.



**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேடசந்தூர் தொகுதியிலுள்ள கால்நடை மருத்துவமனைகளுக்குக் கூடுதலாக மருத்துவர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.250,40,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9657, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, தேவனாம்பட்டு கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

அதேபோல, கரியகோயில் dam-ஐ ஒட்டி, பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான 2½ கிலோ மீட்டர் நீளமுள்ள ஒரு சாலை உள்ளது. அந்தச் சாலையினை உள்ளாட்சித் துறையின்மூலமும் போட முடியவில்லை; அதை நெடுஞ்சாலைத் துறையிலேயும் எடுத்துச் செய்ய முடியவில்லை. அதைத் தார்ச் சாலையாகப் புதுப்பித்துத் தர வேண்டும்.



வீராணம் காவல் நிலையம் வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகிறது. அதற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். அதேபோல, வாழப்பாடி தாலுக்காவில் உள்ள காவல் நிலையமும் ஓட்டுக் கட்டடத்தில் உள்ளது. அதற்கும் புதிய கட்டடம் கட்டித் தரப்பட வேண்டும். வாழப்பாடி தாலுக்காவில் ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தித் தர வேண்டும்.

அதேபோல, 5 பஞ்சாயத்துக்களுக்கு ஒரு கால்நடை hospital ஏற்படுத்தித் தர வேண்டும். அதேபோல, நமது கால்நடை மருத்துவர்கள் சென்று வருவதற்கான வாகனம் தற்போது மிகவும் பழைய வாகனமாக உள்ள சூழ்நிலையில், அதற்குப் பதிலாக ஒரு புதிய வாகனத்தை வாங்கித் தர வேண்டும்.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1989 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றபோது, 20 குடும்பங்கள் இருந்தாலும் அல்லது 50 குடும்பங்கள் இருந்தாலும் ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டலாம் என்ற கொள்கையின்கீழ் மேல்நிலைத் தொட்டிகள் பல்வேறு இடங்களில் கட்டப்பட்டுள்ளன. அந்த மேல்நிலைத் தொட்டிகளுக்கெல்லாம் தனியாக operator-கள் இல்லை. 4 கிலோ மீட்டருக்கு ஒரு operator என்ற நிலையில் நியமித்துவிட்டால், நல்லபடியாக தண்ணீர் ஏற்றும் சூழ்நிலை ஏற்படும். உள்ளாட்சியில் நல்லாட்சி செலுத்தும் உள்ளாட்சி நாயகர் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள், தற்போது 10 கிலோ மீட்டர், 15 கிலோ மீட்டருக்கு ஒரு மேல்நிலைத் தொட்டி என்று உள்ளதை 4 கிலோ மீட்டருக்கு ஒரு மேல்நிலைத் தொட்டி என்று மாற்றி, அவற்றுக்கு operator-களையும் நியமிக்க வேண்டுகிறேன். தற்போது அந்த மேல்நிலைத் தொட்டிகளுக்கு operator-கள் இல்லாததால், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள் பெரிதும் அவதிப்படுகிறார்கள்.

தலைவர் அவர்களே, உள்ளாட்சியில் நல்லாட்சி நல்கும் மாண்புமிகு அண்ணன் தளபதி அவர்கள், அந்த மேல்நிலைத் தொட்டிகளுக்கெல்லாம் operator-களைப் போட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்த மரியாதைக்குரிய தலைவர் அவர்களுக்கு நன்றிகூறி விடை பெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் *12-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால்.

***திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண்கள் *6, 7* மற்றும் *8* ஆகியவற்றைக் கொண்ட கால்நடை, மீன் வளம், பால் வளம் ஆகிய துறைகளின்மீதான மானியக் கோரிக்கைகள்மீது பேச வாய்ப்புத் தந்த தங்களுக்கும், எங்கள் சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் மாண்புமிகு திரு. சுதர்சனம் அவர்களுக்கும், காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றக் கொறடா மாண்புமிகு திரு. பீட்டர் அல்போன்ஸ் ஆகியோருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடை, மீன் வளம், பால் வளம் இந்த மூன்று துறைகளுமே கிராமங்கள் சம்பந்தப்பட்ட துறைகள். ஆனால், அனைத்துத் தரப்பு மக்களுக்கும் உதவுகின்ற துறைகள். எனவே, இந்தத் துறைகளுக்கு அரசு அதிக முக்கியத்துவம் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். துறைகள் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளின் கொள்கைப் பேரேடுகளில் நல்ல நடவடிக்கைகள் எல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. எனவே, துறை அமைச்சர்களை நான் இந்த நேரத்தில் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனது குளச்சல் தொகுதி மக்களின் நீண்ட நாள் கனவை நனவாக்கும் வகையில், *27* கோடி ரூபாய் மதிப்பீட்டில் குளச்சல் மீன்பிடி துறைமுகத் திட்டத்திற்கு அனுமதி பெறப்பட்டு, இந்த ஆண்டு பணி தொடங்கப்படும் என்ற அறிவிப்புக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு எங்கள் மாவட்ட மக்கள் சார்பாக, குறிப்பாக மீனவ மக்கள் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல் அதற்கு ஒத்துழைப்பு தந்த மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் திரு. கே.பி.பி. சாமி அவர்களுக்கும், எங்கள் மாவட்ட அமைச்சர் மாண்புமிகு திரு. சுரேஷ் ராஜன் ஆகியோருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது பரிசீலனையிலுள்ள, ஏற்கெனவே கடந்த பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட தேங்காய்ப்பட்டணம் மீன்பிடி துறைமுகத்தையும் உடனே துவக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல், எங்கள் மாவட்டத்திலே தனியார் மீன்பிடி துறைமுகங்களான முட்டம் மற்றும்



ராஜாக்கமங்கலம் மீன்பிடி துறைமுகங்களுக்கான பணிகளைத் தொடங்குவதற்கு உடனடியாக அனுமதி வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

*2006* ஆம் ஆண்டு தமிழக முதல்வராக கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றவுடன், முடங்கிக் கிடந்த சுனாமி நிவாரணப் பணிகளையெல்லாம் முடுக்கிவிடும் வகையில், சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி, திட்டங்களை வகுத்ததன் மூலமாக *35,268* வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. கடலிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரம் வரை இருந்த நலிந்த வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் திட்டம் வரவேற்புக்குரியது. இதன்மூலம், *52,000* வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவது பாராட்டுக்குரியது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு *33,700* கனரக மிதிவண்டிகள் *60,000* உயிர் காக்கும் கவசங்கள், *4,000* மறுமின்னூட்ட விளக்குகள் வழங்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. அதேவேளையில், எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ *1,400* மீனவர்களுக்கு இந்தப் பலன்கள் கிடைக்கவில்லை. அவர்களுடைய பெயர்கள் விடுபட்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தப் பலன்களை அவர்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மீனவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தவர் கலைஞர் அவர்கள். மீனவர்கள் நல வாரியம் அமைத்தவர் கலைஞர் அவர்கள். சுனாமி நிவாரணப் பணிகள்மூலம் மீனவர்களுக்கு மறுவாழ்வு தந்தவர் கலைஞர் அவர்கள். எனவே, உண்மையான மீனவ நண்பராக விளங்கும் கலைஞர் ஆட்சியில், மீனவர் நலன் உயர்த்தப்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

அதேவேளையில், பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான், மீன் வளத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு லூர்தம்மாள் அவர்கள் முதன்முதலாக தமிழகத்திலே மீனவப் பெருங்குடி மக்களுக்கு மானியத்தோடு விசைப் படகு வழங்கினார் என்பதை இந்த நேரத்திலே அவையின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஆட்சிக் காலத்தில், மீனவப் பெருங்குடி மக்களுக்கு மரியாதை ஏற்படுத்துகின்ற வகையில் மீனவ

சமுதாயத்தைச் சேர்ந்த முதல் பெண் அமைச்சரைப் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்திலேதான் நியமித்தார்கள் என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விவசாயத்திற்கு அடுத்தபடியாக, தமிழகத்தின் முக்கியமான தொழில், மீன்பிடி தொழில்தான். எனவே, இந்தத் தொழில் முன்னேற அதிக நிதி ஒதுக்கி, முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கேரளாவில் லிட்டர் ஒன்றுக்கு ரூ.9.70 பைசா விலையில் permit ஒன்றுக்கு 150 லிட்டர் மண்ணெண்ணெய் மானியமாக வழங்கப்படுவதுபோல தமிழக மீனவர்களுக்கும் மானிய விலையில் மண்ணெண்ணெய் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-10*

7,000 கோடி ரூபாய் விவசாயக் கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்து, விவசாயிகளின் வயிற்றில் பால்வார்த்த முதல்வர், மீனவ மக்களின் கூட்டுறவுச் சங்கக் கடன்களையும் முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவ மக்களின் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கக் கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும். அடிக்கடி கடலில் காணாமல் போகின்ற மீனவர்களைத் தேடிக் கண்டுபிடித்து மீட்பதற்கு வசதியாகக் குமரி மாவட்டக் கடலோரத்தில் ஹெலிகாப்டர் தங்குதளம் அமைக்க வேண்டும். அதைப்போன்று மீட்புப் படகுகளும், மீட்புப் பணியில் ஈடுபடும் வீரர்கள் குழுவும் எப்போதும் தயார் நிலையில் இருக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்கள் அதிகமாக வசிக்கின்ற குமரி மாவட்டத்தில் மீன் வளக் கல்லூரி தொடங்க வேண்டும்.

நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள நவீன மீன்பிடி தொழில்நுட்பப் பயிற்சி மையத்தை எனது தொகுதியிலுள்ள முட்டம் மீனவக் கிராமத்தில் அமைக்க வேண்டும். அதற்குரிய இட வசதி அங்கே உள்ளது என்பதையும் கவனப்படுத்துகிறேன்.

ஆண்டுதோறும் ஏப்ரல் 15 முதல் மே 31 வரை ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்குத் தடை விதிக்கப்படும் 45 நாட்களுக்கும் மீனவ மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏறக்குறைய 1,000 விசைப் படகுகள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளன. குமரி மாவட்டத்தில் தொழில் செய்வதற்கு வசதியாக மீன்பிடி துறைமுகங்கள், படகு இறங்கு தளங்கள், மீனவக் கிராமங்களில் இல்லாததால் சுமார் 600-க்கு அதிகமான விசைப் படகுகளை கேரளாவுக்குக் கொண்டு சென்று மீன்பிடி தொழில் செய்கின்றனர். அதனால், எங்களுடைய மாவட்டத்திற்கு ஏறத்தாழ ஓராண்டுக்கு 50 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, குமரி மாவட்ட மீனவர்கள் தங்கள் சொந்த மாவட்டத்தில் தொழில் செய்வதற்கு வசதியாக கடலோர மீனவக் கிராமங்களில் மீன்பிடி துறைமுகங்களும், படகு இறங்கு தளங்களும் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தில் காலிப் பணியிடங்களாக உள்ள 2 மீன் துறை உதவி இயக்குநர், 4 மீன் துறை ஆய்வாளர் பணியிடங்களை உடனே நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு, அரசுப் பணியாளர்களைப்போல பணிக்கொடை வழங்கி 3,000 ரூபாயாக சம்பளத்தை உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுயநிதிக் கல்லூரிகளில் படிக்கின்ற, சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோர மாணவர்களுக்கு 2 ஆம் ஆண்டு கல்விக் கட்டணம் இந்த ஆண்டு வழங்கப்படவில்லை. எனவே, உடனடியாக அதை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குளச்சல் தொகுதியில் அழிக்கால், கடியபட்டனம், பெரியவிளை, புதூர், மண்டைக்காடு, கொட்டிப்பாடு ஆகிய ஊர்களில் புதிய தூண்டில் வளைவுகள் அல்லது படகு இறங்கு தளங்கள் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குளச்சலில் இடிந்து விழும் நிலையில் உள்ள குளச்சல் மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குத் தற்போது அரசு வழங்கும் நிவாரணப் பொருட்கள் கிடைக்காமல் விடுபட்டவர்களுக்கும் மீண்டும் வழங்க வேண்டும்.

கால்நடைத் துறையைப் பொறுத்தவரையில் ... (குறுக்கீடு)

[2008 ஏப்ரல் 30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். என்ன point of order ? (குறுக்கீடுகள்) Sir, ஒரு நிமிடம்; point of order என்ன?

***திரு. பி.கே. சேகர்பாபு:** நேற்றைக்கும், இன்றைக்கும் பத்திரிகையில் பார்க்கின்றபோது மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலில் உருவாகி இருக்கின்ற அந்தப் புயலுக்கு நர்கீஸ் என்று பெயர் சூட்டப்பட்டு இருப்பதாகப் பத்திரிகையில் செய்திகள் வந்திருக்கின்றன. இந்தப் புயல் என்றாலே ஆழிப் பேரலை, புயல் போன்ற சம்பவங்களால் மக்களுக்கு அதிகமான பாதிப்புகள் உண்டாக்குகின்ற ஒரு சூழ்நிலை உருவாகும். ஆனால், அந்த நர்கீஸ் என்ற பெயருக்குச் சொந்தக்காரராக இருப்பவர் ஒரு பழம்பெரும் நடிகர், குணச்சித்திர நடிகர் என்ற தகவல் இருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நடிகை.

**திரு. பி.கே. சேகர்பாபு:** நடிகை என்று கூறப்படுகிறது. அப்படிக் கலை உலகிலே அனைவரையும் மகிழ்விக்கின்ற, அனைவராலும் கவரப்படுகின்ற ஒரு நடிகையினுடைய பெயரை இந்தப் புயலுக்கு வைத்ததை, யார் தேர்வு செய்தார் என்பதை அறிகின்ற அதே நேரத்தில் ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதி, அமைதி; அவர் என்ன சொல்கிறார் என்று பார்ப்போம்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** எதையும் நல்லதையே பேச விடமாட்டோம் என்கிறீர்களே அப்பா!

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இதற்கு அமைச்சர் பதில் சொல்வார். (குறுக்கீடு) சரி, time தருகிறேன்; சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** சுனாமி, கத்தரினா இதுபோன்ற பெயர்களைப் போன்று, இன்றைக்கு இந்த வங்கக் கடலிலே உருவாகியிருக்கிற இந்தப் புயலுக்கும் இந்தப் பெயரை வைத்திருப்பது ஏற்புடையதுதானா? இதை யார் முடிவு செய்தார் என்பதை அறிகின்ற அதேவேளையில், இந்தப் புயல் அறிவிப்புக்குப் பிறகு, புயல் அடிக்காமல் வேகமான காற்று வீசியதால் அரசாங்கத்திற்கு மின்சாரம் போன்ற சேமிப்பு ஏதாவது, காற்றின் வாயிலாக வந்ததா என்பதையும் இந்தப் பேரவையிலே அறிவிக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



2008 ஏப்ரல் 30]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பெயரை வானிலை நிபுணர்கள்தான் வைத்திருக்கிறார்கள். அந்தப் பெயர் வைத்த காரணத்தினாலோ என்னவோ யாருக்கும் எந்தவிதமான ஆபத்தும் இல்லாமல், அந்தப் புயலாலே யாரும் பாதிக்கப்படாமல், அதேநேரத்திலே தமிழ்நாட்டிலே 55 கிலோ மீட்டர் வேகத்திலே காற்று வீசுகின்ற காரணத்தால் நமக்கு தினந்தோறும் 1,000 மெகா வாட் மின்சாரம் காற்றாலை மூலமாகக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு உறுப்பினர் மகிழ்ச்சி அடையவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. (குறுக்கீடு)

**திரு. பி.கே. சேகர்பாபு:** அந்தப் பெண்ணைப்பற்றிக் கேட்டுவிடுவோம். பெண் என்று சொன்னார் அல்லவா? அதற்காக.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** புயலுக்குப் பெண் பெயரை வைக்கிறார்களே அது நியாயமா என்று கேட்கிறார்!

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது பாகிஸ்தான்காரர்கள் வைத்தது.

**திரு. எஸ். ஜெயபால்:** கால்நடை துறையைப் பொறுத்தவரையில், அது கிராமப் பொருளாதார மறுமலர்ச்சிக்கு வழிவகுக்கும் துறையாகும். எனது குளச்சல் தொகுதியில் திங்கள் நகரில் உறைவிந்துக் குச்சிகளைப் பதப்படுத்தி இருப்பு வைத்துப் பாதுகாக்க, திரவ நைட்ரஜன் உற்பத்தி நிலையம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கால்நடை தீவனங்களுக்கு மானியம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குமரி மாவட்டம் கீரிப் பாறையில் கலப்புப் பண்ணை அமைத்து இஸ்ரேலி, பிரீசியன், ஜெர்சி போன்ற கலப்பினப் பசுக்களை வளர்த்து குமரி மாவட்டத்தின் பால் வளத்தைப் பெருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தில் ஒரு இலட்சத்துப் பத்தாயிரம் மாடுகள், பல இலட்சம் கோழிகள், ஒரு இலட்சத்து இருபதாயிரம் ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோய்க்கான தடுப்பூசி போடும் பணியாளர்கள் இல்லை. 40 பேர் இருந்த இடத்தில் 7 பேர் மட்டுமே உள்ளனர். எனவே அவர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கால்நடை பராமரிப்பு உதவியாளர் பணியிடங்கள் 75 சதவீதம் காலியாக உள்ளது. எனவே காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பி.வி.எஸ்.சி. படித்த மருத்துவப் பட்டதாரிகளைத் தொகுப்பூதிய அடிப்படைச் சம்பளத்திலாவது கால்நடைக் கிளை நிலையங்கள், மருந்தகத்தில் பணியில் அமர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசு வழங்குவதைப்போன்று மனிதர்களுக்குச் சிகிச்சையளிக்கும் மருத்துவர்களுக்கு இணையான சம்பளத்தை கால்நடை மருத்துவர்களுக்கும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கேரளாவில் கால்நடைகளை வளர்க்கும் விவசாயிகளுக்கு ரூ.12,400 மானியம் வழங்குவதைப் போன்று தமிழகத்திலும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நடமாடும் கால்நடை மருந்தகங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கால்நடை மருந்தகங்களுக்கு மருந்துகள் கொள்முதல் செய்ய கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கால்நடைகளை வளர்க்கின்ற விவசாயிகளுடைய நலன் கருதி, மாட்டு வண்டித் தொழிலாளர்களுக்கு நல வாரியம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்மூலம் ஏழை விவசாயிகளுக்குப் பசு மாடுகள் மானியத்துடன் வாங்கக் கடன் வழங்கி, பால் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

தினந்தோறும் 50,000 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்ட குமரி மாவட்டத்தில் தற்போது 10,000 லிட்டருக்குக் கீழாக உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே இந்தத் தட்டுப்பாட்டைப் போக்குவதற்காக, பக்கத்து மாவட்டங்களிலே கொள்முதல் செய்து குமரி மாவட்டத்து மக்களுக்கு ஆவின் பால் சீராகக் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலே, குமரி மாவட்ட மக்களின் நீண்டகாலக் கனவினை நனவாக்கிட குமரியில் படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்புப் பெற்றிட (மணியடிக்கப்பெற்றது) தொழிற்துறையில் பின்தங்கிய குமரி மாவட்டம்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Sir, subject-ஐயொட்டிப் பேசுங்கள். Sir, நிறைய பேர் உங்கள் ஊரிலே படித்திருக்கிறார்கள்!

**திரு. எஸ். ஜெயபால்:** பின்தங்கிய குமரி மாவட்டம் தொழில் வளம் பெருகிட குளச்சல் வர்த்தகத் துறைமுகம் அமைக்கும் பணியைத் துரிதப்படுத்த மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியில் முன்னணி மாவட்டமாகத் திகழும் குமரி மாவட்டத்தில் அரசுப் பொறியியல் கல்லூரியை இந்த நிதியாண்டிலே தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டிலே, குமரி மாவட்டத்திலே சித்தா மருத்துவக் கல்லூரியை உடனே தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன் அவர்கள். (குறுக்கீடு) திரு. சேகர்பாபு, நீங்கள் என்ன, நர்கீஸ் இரசிகர் மன்றத் தலைவரா? நீங்கள் நர்கீஸ் இரசிகர் மன்றத் தலைவரா என்கிறேன்?

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னை... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜெயபால், நேரமில்லை.

**திரு. பெ. கண்ணன்:** இந்தச் சபையில் பேச வாய்ப்பளித்த சமூக நீதிக் காவலர், 27 சதவீத இட ஒதுக்கீட்டு நாயகர், எங்களுடைய மருத்துவர் அய்யாவையும், மாண்புமிகு சின்ன அய்யா அவர்களையும், இங்கு பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் அவர்களையும் வணங்கி, பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நாட்டின் ஆதாரமான தொழிலாக வேளாண்மை உள்ளது. அது நலிவடைந்ததன் காரணமாக விவசாயிகளுக்குப் பால் வளத்தைப்

பெருக்க வேண்டிய தேவை மிகவும் அவசியமாயிற்று. எனவே, சிறு,
குறு விவசாயிகளுக்கு ஆடு, மாடு, கோழி, காடை, முயல் வளர்ப்புக்கு
மானியத்துடன்கூடிய கடன் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் பசு இனம் அழிந்துகொண்டே வருகிறது. காரணம்,
மாடு மேய்ப்பதற்கு வனத் துறை அனுமதிப்பதில்லை. கிராமத்தில்
மேய்ச்சல் தரையெல்லாம் குடியிருப்புப் பகுதியாக மாறிவிட்டது.
அதனால் மேய்ப்பதற்கு வனத் துறை அனுமதி கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நாட்டுப் பசு இனத்தை
அபிவிருத்திச் செய்வதற்கு அரசு ஊக்குவிக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-20*

அதேபோல, அரசுக் கால்நடை மருத்துவமனைகளில் போதிய
மருத்துவர்களும், மருத்துவப் பணியாளர்களும் இல்லாத
காரணத்தினால், நோய் தாக்கும் சமயத்தில் மருத்துவர்கள்
உடனடியாகச் சென்று சிகிச்சை அளிக்க முடிவதில்லை. மாறாக,
கூட்டுறவுப் பால் உற்பத்தி செய்யும் சொசைட்டிமூலமாக, இந்தக்
கால்நடைகளுக்குச் சிகிச்சை அளித்து வருகிறார்கள். இதை அரசு
தவிர்த்து, உடனடியாக அனைத்துக் கால்நடை மருத்துவமனைகளிலும்
மருத்துவர்களை நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
தமிழக அளவில் இறைச்சிக் கூடங்கள் எத்தனை கட்டப்பட்டுள்ளன;
இவற்றில் கால்நடை மருத்துவர்கள், அலுவலர்கள்
பணியமர்த்தப்பட்டுள்ளார்களா என்பதைத் தெரிவிக்கக்
கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி, பெரம்பலூர், புதுக்கோட்டை, கிருஷ்ணகிரி
மண்டல இணை இயக்குநர் அலுவலகங்களை வரும் ஆண்டிலேயே
தொடங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 10 ஆயிரம்
கால்நடைகள் இருந்தால்தான் ஒரு மருந்தகம் என்ற விதியைத்
தளர்த்தி, 5 ஆயிரம் கால்நடைகள் இருந்தாலே, ஒரு மருந்தகம்
தொடங்கலாம் என்று இந்திய தேசிய வேளாண்மை ஆணையம்
2000 ஆம் ஆண்டில் பரிந்துரை செய்திருக்கிறது. அதைத் தமிழகத்தில்
அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது
கால்நடை மருந்தகம் தொடங்க 8 கிலோ மீட்டர் இடைவெளி
வேண்டும் என்ற விதியைத் தளர்த்தி, அதை 5 கிலோ மீட்டராகக்
குறைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.



எங்களுடைய தாரமங்கலத்தில் கால்நடை மருந்தகம் 1977-ல்
கட்டப்பட்டு, மிகவும் பழுதடைந்துள்ளது. ஒரு ஏக்கர் நிலத்தில் இந்த
மருந்தகம் இருக்கிறது. இதில் அறுவைச் சிகிச்சைக் கூடமும் உள்ளது.
கடந்த வருடம் இங்கே 20 ஆயிரம் கால்நடைகள் சிகிச்சை
பெற்றிருக்கின்றன. அதனால், இந்தக் கால்நடைகளின் நலனைக்
கருதி, உடனடியாக நவீன மருத்துவமனை ஒன்றைக் கட்டிக்
கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில்,
மேச்சேரி ஒன்றியம், புக்கம்பட்டியிலும், தாரமங்கலம் ஒன்றியம்,
செலவடை, பாப்பம்பட்டி ஊராட்சிப் பகுதிகளில் புதிய கால்நடை
மருத்தகங்களைத் தொடங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மீன் வளத் துறை; நம்முடைய மீனவர்களுக்குப் பாதுகாப்பு
இல்லை; மீனவர்களைக் காக்கவேண்டும். இன்றைய சூழ்நிலையில்,
இலங்கை அரசின் காரணமாக நம்முடைய மீனவர்கள் மீன் பிடித்து
வாழ்வதைவிட, உயிர் வாழமுடியுமா என்று பயந்து வாழ்ந்து
கொண்டிருக்கிறார்கள். தன்னுடைய குழந்தைகளாக இருக்கட்டும்;
தன்னுடைய மனைவியாக இருக்கட்டும்; அவர்களைப் பிரிந்து
கடலுக்குச் செல்லும்போது, தன்னுடைய கணவன் உயிரோடு திரும்பி
வருவாரா? இல்லை, பிணமாக வருவாரா? இல்லை, இலங்கை அரசு
கொண்டுசென்று சிறையில் அடைக்குமா? இதுபோலத்தான்,
நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மீனவர்களை இலங்கை
அரசு அத்துமீறி அழித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், இதுவரை
நாம் யாரும் அதை எதிர்க்கவில்லை. தமிழைப்பற்றிப் பேசுகிறோம்;
ஆனால் இங்குள்ள தமிழர்கள் அங்குள்ள தமிழனைக் காக்க இன்னும்
முன்வரவில்லை. இந்த அரசு, தமிழக மீனவர்களை எப்படியாவது
காக்கவேண்டும். ஏனென்று சொன்னால், இலங்கை அரசின்
கடற்படை அவர்கள்மீது தாக்குதல் நடத்தி அவர்களைக் கொல்வதும்,
சுட்டுத்தள்ளுவதுமாக அத்துமீறி நடந்து கொண்டிருக்கிறது. இரண்டு
நாட்களுக்கு முன்புகூட, நடுக் கடலில் மீன்பிடித்தபோது, மீனவர்கள்
ஆறு பேரைக் கைது செய்து, படகோடு இலங்கைக்குக் கொண்டு
சென்று, சிறையில் அடைத்திருக்கிறார்கள். அவர்களை யாழ்ப்பாணம்
மத்தியச் சிறையிலிருந்து உடனடியாக விடுவிக்க நடவடிக்கை
எடுக்கவேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது தமிழக மக்களின் மனதில் நீங்கா இடம்
பெற்றிருக்கக்கூடிய 'மக்கள் தொலைக்காட்சி', கடலில் மீன் எந்த
இடத்தில் இருக்கிறது என்று அறிவிப்பதால், மீனவர்கள் அலைச்சல்
இல்லாமல், எரிபொருள்களைச் சிக்கனப்படுத்தி, மீன்களைப்

பிடித்துக்கொண்டு வருகிறார்கள். அதைப்போல, இந்த மீன் வளத் துறையும் மீனவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-25*

எங்களுடைய தொகுதியில், காவிரி நீர் வேண்டுமென்று நாங்களும் காலங்காலமாகக் கத்திக் கொண்டிருக்கிறோம். எங்களுக்கு மட்டுமல்ல; நம்முடைய மாண்புமிகு துணை சபாநாயகருடைய தொகுதிக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தண்ணீர் சென்றால்தான், உண்மையாக அங்குள்ளோரின் வாழ்க்கைத் தரம் முன்னேறும். அதற்காகக் காவிரித் தண்ணீரை, அந்த உபரி நீரை எப்படியாவது பாசனத்திற்குக் கட்டாயம் சேலம் மாவட்டத்திற்குத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

✓ காவிரித் தண்ணீர் வேண்டுமென்று எங்களுடைய தொகுதியிலிருந்து நிறைய மனுக்களை நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பியிருக்கிறோம். எப்படியாவது அந்தத் தண்ணீரை சேலம் மாவட்டப் பாசனத்திற்கு அனுப்ப உடனடியாக இந்த அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து அவர்கள். (குறுக்கீடு)

***திரு. வி.பி. கலைராஜன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு வாய்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏன் இப்போது குறுக்கீடு? திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை, மீன் வளம், பால் வளம் ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது நான் சார்ந்திருக்கக்கூடிய மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துகளைப் பதியவைக்க விரும்புகிறேன்.

நான் மானியக் கோரிக்கைகளுக்குச் செல்வதற்கு முன்பாக, நாகை மாவட்டம் சம்பந்தமாக ஒரு கோரிக்கையை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். நாகை மாவட்டம், கீவலூர் தாலுகா, ராதாமங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே விவசாயிகளுக்குப் பயிர் நிவாரணம் கொடுப்பதில்



காலதாமதம் ஆவதைக் கண்டித்து, நேற்றைக்கு முன்தினம் விரைவாக வழங்கவேண்டுமென வலியுறுத்தி, 13 விவசாயிகள் சாத்வீகமான முறையில் போராட்டம் நடத்தியபோது, நாகை மாவட்டக் காவல் துறை, அந்த 13 விவசாயிகளையும் சிறையிலே அடைத்திருக்கிறது. காவல் துறையினுடைய இத்தகைய அத்துமீறல்களைக் கண்டித்து நேற்றையதினம் நாகை மாவட்டம் முழுவதும் 4,000-க்கும் மேற்பட்ட மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய விவசாயிகள் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். கீவலூரில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில், காவல் துறை நடத்திய தடியடியின் காரணமாக வளர்மதி, எல்லம்மாள் என்கிற இரண்டு பெண்கள் இன்றைக்கு மருத்துவமனையிலே சிகிச்சை பெற்றுவருகிறார்கள். எனவே, நாகை மாவட்டக் காவல் துறையினுடைய இத்தகைய அத்துமீறலை மாநில அரசு உடனடியாகத் தடுத்து நிறுத்துவதோடு, சிறைச்சாலையிலே அடைத்து வைக்கப்பட்டிருக்கூடிய அந்த விவசாயிகளை உடனடியாக விடுதலை செய்வதற்கு அரசு முன்வரவேண்டுமென வலியுறுத்துகிறேன்.

*2004* ஆம் ஆண்டு தமிழகத்திலே ஏற்பட்ட சுனாமிப் பேரலையால், பல்லாயிரக்கணக்கான மீனவர்கள் மாண்டு போயிருக்கிறார்கள். மாண்டுபோன மீனவர்களுக்கு மத்திய அரசு ஒரு இலட்சம் ரூபாய், மாநில அரசு ஒரு இலட்சம் ரூபாய் நிவாரணம் என்று அறிவிக்கப்பட்டதற்குப் பின்னால், மூன்று ஆண்டுகள் கழிந்ததற்குப் பின்னால், பல நூற்றுக்கணக்கான மீனவர்களுக்கு மத்திய அரசால் வழங்கப்படுகிற ஒரு இலட்சம் ரூபாய் இதுவரை வழங்கப்படவில்லை. இது மனிதாபிமானமற்ற செயலாகும். 3 ஆண்டுகளுக்குப் பிறகுகூட அந்த மீனவர்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லையென்று சொன்னால், மாநில அரசு உடனடியாகத் தலையிட்டு, மத்திய அரசின்மூலமாக வர வேண்டிய அந்தத் தொகையைப் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கிடைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்துகிறேன். தமிழகத்தினுடைய மீனவர்கள், நீண்டகாலமாக வலியுறுத்தி வரக்கூடியது, தற்பொழுது மீன் பிடிக்கத் தடை செய்யப்பட்டிருக்கக்கூடிய காலத்தைப் பற்றியது. இந்த 45 நாட்களுக்கு, அருகே இருக்கக்கூடிய பாண்டிச்சேரியில் 90 கிலோ அரிசி, 750 ரூபாய் பணம், விசைப் படகுகளைப் பராமரிப்பதற்கு 15 ஆயிரம் ரூபாய் நிதி என்று வழங்கப்படுகிறது. அதே அடிப்படையில் தமிழக மீனவர்களுக்கும் 100 கிலோ அரிசி என்பதை வழங்க வேண்டும். 1,500 ரூபாய் நிவாரணம் வழங்க வேண்டும். விசைப் படகுகளைப் பராமரிப்பதற்கு 30 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

இப்போது மீனவர்களுக்கும், உள் நாட்டு மீனவர்களுக்கும் சிங்காரவேலர் வீடு கட்டும் திட்டத்தின் அடிப்படையில் வீடுகள் கட்டப்படுகின்றன. ஏறத்தாழ 210 சதுர அடியில் 37 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வீடுகள் கட்டப்படுகின்றன. கட்டுமானப் பொருட்களினுடைய விலை உயர்வு கடுமையாக உயர்ந்திருக்கக்கூடிய நிலையில், 37 ஆயிரம் ரூபாயில் வீடு கட்டுவது என்பது இன்றைய நிலையில் சாத்தியமற்றது. சுனாமி வீடுகள்கூட ஏறத்தாழ 1½ இலட்சம் ரூபாய், 2 இலட்சம் ரூபாய் அளவில் கட்டப்படக்கூடிய நிலையில், இன்றைக்கு மீனவர்களுக்குக் கட்டப்படக்கூடிய அந்தத் திட்டத்தின் அடிப்படையில் 37 ஆயிரம் ரூபாய் என்பதை 2 இலட்சம் ரூபாயாக உயர்த்த வேண்டும். 210 சதுர அடியிலிருந்து 325 சதுர அடிகளாக மாற்ற வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

*பிற்பகல் 12-30*

அதைப்போல, இந்தத் திட்டத்தின்கீழ் உள்நாட்டு மீனவர்களுக்கு வீடு கட்ட வேண்டுமென்று சொன்னால் அவர்களிடம் மூன்று சென்ட் நிலம் சொந்தமாக இருக்க வேண்டுமென்று சட்டம் சொல்லுகிறது. உள்நாட்டு மீனவர்களுக்கு மூன்று சென்ட் நிலம் இல்லாத அந்த மீனவர்களுக்கு, எப்படி மனையில்லாதவர்களுக்கு மனை வழங்குகிற திட்டத்தை மாநில அரசு நிறைவேற்றி வருகிறதோ, அப்படிப்பட்ட திட்டத்தின்மூலமாக உள்நாட்டு மீனவர்களுக்கும் வீடு கட்டுவதற்குண்டான மனையை அரசே ஒதுக்கீடு செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல உள்நாட்டு மீனவர்கள் பயன்படுத்தும் மின்சாரத்திற்கு வணிகத்திற்குரிய கட்டணம் என்பது இப்போது வசூலிக்கப்படுகிறது. விவசாயம் சார்ந்த சாதாரண விவசாய உள்நாட்டு மீன் உற்பத்தியாளர்களுக்கு ஒரு குதிரைத் திறனுக்கு ஆண்டுக்கு 250 ரூபாயென அரசு தீர்மானிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். உள்நாட்டு மீனவர்களுக்கும் தொழிலை அபிவிருத்தி செய்ய இரு சக்கர வாகனங்கள் மானியத்துடன் கிடைப்பதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள்மூலமாக அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென வலியுறுத்துகிறேன்.

அதேபோல, சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் வீடு கட்டுவதற்காக society மூலமாக வாங்கியிருக்கக்கூடிய கடன்களைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்கிற கோரிக்கை அவர்களிடமிருக்கிறது. அதை அரசு பரிசீலிக்க வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

இப்போது கடலோர மீனவர்கள், கடலிலே அட்டை, சங்குகள் பிடிப்பதற்கு மத்திய அரசு தடை விதித்திருக்கிறது. வன விலங்குகள்



சட்டத்தின் அடிப்படையில், அட்டைகள், சங்குகள் போன்றவற்றைப் பிடித்தால் ஏழாண்டுகள் சிறைத் தண்டனை என்று சட்டம் சொல்லுகிறது. சுற்றுலாப் பயணிகள் சங்குகளை விரும்பி வாங்குகிற இன்றையச் சூழலில், வன விலங்குகள் சட்டத்தின் அடிப்படையில் சங்கு, அட்டைகளுக்கு மத்திய அரசு விலக்கு அளிக்க வேண்டுமென மாநில அரசு வலியுறுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மீனவர்களுக்குப் புயல்கால நிவாரணம் வழங்கப்படுகிறது. தொழிலாளி ஒரு பங்கு, மாநில அரசு ஒரு பங்கு, மத்திய அரசு ஒரு பங்கு என்கிற நிலை கடந்த காலத்தில் இருந்தது. ஆனால் இன்றைய நிலையில் தொழிலாளி ஒரு பங்கு, மத்திய மாநில அரசுகள் இணைந்து ஒரு பங்கு என்கிற நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. அது மீனவர்களுக்குச் சாதகமானதாக இல்லை. எனவே, கடந்தகால நடைமுறையை அமல்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கடலோர ஒழுங்குமுறைச் சட்டம் சம்பந்தமாக எம்.எஸ்.சுவாமிநாதன் குழு அளித்திருக்கக்கூடிய அறிக்கை என்பது மீனவ வாழ்வாதாரங்களைப் பறிக்குமெனத் தமிழக மீனவர்கள் அஞ்சுகிறார்கள். எனவே, சுவாமிநாதன் குழு அறிக்கை சம்பந்தமாக மாநில அரசினுடைய கருத்தை அவையில் தெரிவிக்க வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. கு. பிச்சாண்டி தலைமை)*

அதேபோல 1994 ஆம் ஆண்டு அமைப்புச் சாரா தொழிலாளர் நல வாரியத்தில் மீனவர்கள் இணைகிறபோது 60 வயது பூர்த்தியடைந்தால் அவர்களுக்குப் பென்ஷன் கிடைக்கும் என்கிற நிலை இருந்தது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** ஒரு நிமிடத்தில் உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. வே. மாரிமுத்து:** உரையை முடித்துவிடுகிறேன். ஆனால் மீனவர்களுக்குத் தனி வாரியம் அமைக்கப்பட்டதற்குப் பின்னால் இன்றைக்கு 65 வயது வரை சேரலாம் என்பது இருக்கிறது. அப்படியென்றால் அவர்களுக்குப் பென்ஷன் எப்போது கிடைக்கும்?

கால்நடை மருந்தகக் கிளை நிலையங்களுக்கு தற்போது வருடத்திற்கு 9,000 ரூபாய் அளவில் மருந்து வழங்கப்படுகிறது. இது

போதுமானது அல்ல. இன்னும் கூடுதல். ஒதுக்கீடு வேண்டும். ஏழாண்டுகளாக மூடப்பட்டிருந்த கால்நடை ஆய்வாளர்கள் பயிற்சி இந்த அரசு வந்ததற்குப் பின்னால் மீண்டும் துவக்கப்பட்டுள்ளது. 2,000 பணியிடங்கள் காலியாக உள்ள நிலையில் 450 பேருக்கு முதற்கட்டப் பயிற்சி வழங்கப்படுகிறது. மேலும் ஆயிரம் பேருக்கு . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன். (குறுக்கீடு) நேரம் இல்லை. மூன்று மானியங்களுக்கு மூன்று அமைச்சர்கள் பதிலளிக்க வேண்டியிருப்பதால் அதிக நேரம் அளிக்க முடியாது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன். (குறுக்கீடு)

**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** திரு. வே. மாரிமுத்து, ஒரு நிமிடத்தில் நிறைவு செய்யுங்கள்.

**திரு. வே. மாரிமுத்து:** வேலூர் மாவட்டத்தில் இரத்த அழுத்த நோய் காரணமாக ஒரே நாளில் 27 மாடுகள் இறந்திருக்கின்றன. அதற்கு நிவாரணம் வழங்க வேண்டும். கால்நடை தீவனங்கள் மானிய விலையில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்தில் 7,558 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. 22,498 ஊழியர்கள் பணிவரன்முறை செய்யப்படாமல் இருக்கிறார்கள். பணிவரன்முறை உடனடியாகச் செய்யப்பட வேண்டும். மாநிலம் முழுவதும் ஆவின் பால் பண்ணையில் பணிபுரியும் சுமார் 8,000 தொழிலாளர்களுக்கு முறையான பென்ஷன் திட்டம் இல்லை. அரசு ஊழியர்களுக்கு வழங்குவதைப்போல பென்ஷன் திட்டம் இவர்களுக்கும் வழங்குவதோடு 15 ஆண்டுகளுக்குமேலாக தற்காலிகப் பணியில் உள்ளவர்களை உடனடியாகப் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, ஆவின் பால் விற்பனையாளர்களுக்குக் கடந்த 8 ஆண்டுகளாகக் கமிஷன் உயர்த்தப்படவில்லை. அவர்களுக்கும் கமிஷன் உயர்த்தப்பட வேண்டுமென வலியுறுத்தி தந்த வாய்ப்புக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன்.





**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய பொதுக் கணக்குக் குழுவின் சார்பாக நாங்கள் எல்லாம் ஓசூர் கால்நடைப் பண்ணைக்குச் சென்றோம். அப்படிப் பார்க்கிறபோது இன்றைக்கு அழிந்து வரும் இனமாக காங்கேயம் காளைகள், மணப்பாறை காளைகள் எல்லாம் இருக்கின்றன. அந்த இனங்கள் இதோடு அழிந்துவிடாமல் வளர்ப்பதற்கு அல்லது இனப் பெருக்கத்தை அதிகப்படுத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல மீன் உணவு. மீன் உணவு வளர்ப்புக் கெண்டைகள் எல்லாம் (குறுக்கீடு) இருங்கள் ஒரு நிமிடம், அண்ணன் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இதற்குப் பதில் சொல்வார்கள், அதற்காகத்தான் கேட்கிறேன் . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மூன்று அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

*பிற்பகல் 12-35*

• **திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மீன் வளம், பால் வளம் மற்றும் கால்நடை பராமரிப்பு ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகளின்மீது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துகளை முன்வைக்க விரும்புகின்றேன். மூன்று துறைகளுமே உழைக்கும் மக்கள் துறைகளாகும். ஆகவேதான், பால் உற்பத்தியாளர்களிடமிருந்து, லிட்டருக்கு இரண்டு ரூபாயை அதிகமாகக் கொடுத்து, பாலை வாங்குவதற்கு அரசு உத்தரவிட்டிருக்கின்றது. அதற்கு நன்றி கூறுகின்றேன்.

அதேபோல, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய் என்று அறிவித்தார்கள். இது மனிதர்கள் சாப்பிடக்கூடியது. அதேநேரத்தில், பால் உற்பத்தி செய்யும் மாடுகளுக்கான தீவனத்தின் விலை, ஒரு கிலோ 11 ரூபாய்க்கு விற்கப்படுகின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கும், தீவனத்தின் விலை 11 ரூபாய்க்கும் விற்கப்படுவதை மக்கள் பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, அந்த தீவனத்தை நியாய விலைக் கடைகளின் மூலமாகக் குறைந்த விலைக்கு வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

நாளொன்றுக்கு 26.27 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகின்றது. 21-6-2007 அன்று, ஒரேநாளில், சுமார் 30 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, மிகப் பெரிய அளவில் வெற்றி பெற்றிருக்கின்றது. பால் விற்பனையில், கூட்டுறவுத் துறையைச் சார்ந்த ஆவின் நிறுவனம் பெரும் பங்கு வகிக்கிறது என்று கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதை மறுக்க முடியாது. இந்த அடிப்படையில், பால் கூட்டுறவுச் சங்கங்களைப் பலப்படுத்தி, பால் உற்பத்தியாளர்களை வளப்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

இதில் பெரும் பங்காற்றிவரும் ஆவின் நிறுவனம் மற்றும் அதில் பணிபுரியும் பணியாளர்கள்பற்றிச் சிந்திக்க வேண்டுகின்றேன். அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்பட இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்பதை வேதனையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். குறிப்பாக, ஆவின் ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் குறித்து, பலமுறை விவாதிக்கப்பட்டும் எந்த முடிவும் எடுக்கப்படாமல், கிடப்பிலே உள்ளதாகச் சொல்லப்படுகின்றது. ஆகவே, உடனடியாக அந்த ஆவின் ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும்.

அடுத்து, பதவி உயர்வு என்று சொன்னாலே, அதிகாரிகளுக்குத்தான் முதன்மையிடம் கொடுக்கப்படுகின்றது. அங்கே பணிபுரிகின்ற சாதாரணத் தொழிலாளர்கள், குறிப்பாக ஆப்பரேட்டர்கள் என்று சொல்லக்கூடியவர்களுக்கு, அவர்கள் பல ஆண்டுகளாகப் பணிபுரிந்தும், டெக்னிக்கல் என்ற அடிப்படையில் அவர்களுக்குப் பதவி உயர்வு மறுக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதைப்போல, சென்ற மானியக் கோரிக்கையின்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்களால், 1,000 பேர் பணி நியமனம் செய்யப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டது. இதுவரையில் அது நிறைவேற்றப்படவில்லை. தொழில்நுட்ப ஊழியர்களுக்கு மறு ஊதிய நிர்ணயம் செய்யப்படவில்லை. ஆகவே, அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டவற்றை உடனடியாக அமல்படுத்தப் வேண்டுமென்று இந்த அவையிலே கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அதைப்போல, சென்னை மற்றும் கோவையில் வேலைசெய்யும் தினக் கூலித் தொழிலாளர்கள் நிரந்தரம் செய்யப்பட வேண்டும்.



இன்னும்கூட, மாத அடிப்படையில் 18 ரூபாய் என்றும், 20 ரூபாய் என்றும் அடிப்படைச் சம்பளம் வாங்கிக்கொண்டு சில ஊழியர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய வேதனையைக் கணக்கிலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், அந்தப் பணியாளர்களுக்கு உடனடியாகச் சம்பள உயர்வு கொடுக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, 10,000 கால்நடைகள் இருந்தால்தான் ஒரு மருந்தகம் அமைக்கப்படும் என்றிருப்பதை, 5,000 ஆகக் குறைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். 8 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு மருந்தகம் என்றிருப்பதை, 5 கிலோ மீட்டர் தூரமாகக் குறைத்து, அனைத்துப் பகுதிகளுக்கும் கால்நடை மருந்தகம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இன்னும் ஒரு நிமிடத்தில் தன்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளவும்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தாலுகா தலைமையிடங்களில் கால்நடை உதவி இயக்குநர் அலுவலகம் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு கால்நடைப் பண்ணைகளுக்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் உள்ளது. அந்த நிலங்களை அரசின் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், பண்ணைகளைப் புனரமைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12-40*

மீன் வளத் துறையைப்பற்றிச் சொல்கின்றபோது, மீனவர்களுடைய துயரங்களை நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகின்றேன். இன்றைக்குக் கச்சத் தீவு என்பது, தமிழ்நாட்டிலுள்ள மீனவர்கள் சென்று அல்லது அங்கே பக்தர்கள் சென்று அங்கே தங்கியிருந்து வழிபட வேண்டிய இடமாக திருமதி இந்திரா காந்தி-ஸ்ரீமோவோ அவர்களுடைய ஒப்பந்தம் கூறுகிறது. ஆனால், இப்போது கச்சத் தீவுக்குப் போக முடியாத ஒரு நிலை இருக்கின்றது. எனக்கு முன்னால் பேசிய பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் சொன்னதைப்போல பிணங்களாக வருவோமோ என்ற அச்சம் இன்றைக்கு இருக்கின்றது. ஆகவே, இதற்கு உடனடியாக மத்திய அரசிடம் பேசி . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன். (குறுக்கீடுகள்)

***திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கம்பம் தொகுதியில். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினர் எந்த நேரத்திலே பேசத் தொடங்குகிறார்; குறிப்பிட்ட நேரத்திலே முடித்துவிட்டாரா என்று நேரத்தைக் தலைவர்தான் முடிவு செய்ய வேண்டுமே தவிர, மாண்புமிகு உறுப்பினர்கள் உட்கார்ந்த இடத்திலே இருந்து, "நேரம் ஆகவில்லை, ஆகவில்லை" என்று சொல்லிக்கொண்டிருப்பது மரபு அல்ல. நீங்களெல்லாம் senior Members. நீங்களே இப்படித் தவறு பண்ணக்கூடாது.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கம்பம் தொகுதியில், ராயப்பன்பட்டி கிராமத்தில். . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஐந்து நிமிடங்கள்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மூன்று அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கின்ற காரணத்தினால் நேரம் இல்லாத காரணத்தால், ஐந்து நிமிடங்கள்தான் வழங்கப்பட்டிருக்கிறது. ஐந்து நிமிடங்களாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** சரி, தலைவர் சொல்கிறார், முன்னால் ஏழு நிமிடங்கள் என்று நிர்ணயிக்கப்பட்டது. பிறகு நேரத்தின் அருமை கருதி, பல உறுப்பினர்கள் பேசவேண்டும்; அமைச்சர்கள் மூன்று பேர் பதில் சொல்லவேண்டும் என்பதற்காக அதை ஐந்து நிமிடங்களாகக் குறைத்திருக்கிறார்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** நான் சொல்வதற்குப் பொதுவான காரணம், எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசுகிறபோதுதான் இப்படி நடைபெறுகிறது. இதோடு மூன்று முறை இதுபோன்று நான் பதிவு செய்திருக்கிறேன். இதுபோன்ற முறை சரியில்லை.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** அதைத் தனியாக நீங்கள் பேரவைத் தலைவருடைய அறைக்குச் சென்று விவாதிக்கலாம். ஆனால், இங்கே வந்து அவ்வாறு கேட்பது சரியல்ல.



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** திரு. இராமகிருஷ்ணன், ஐந்து நிமிடங்கள் பேசுவார். (குறுக்கீடு) இல்லை, இதற்குப் பிறகு பேசுகிற உறுப்பினர்கள் அனைவருக்கும் ஐந்து நிமிடங்கள்தான். மூன்று அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. நேரம் அதிகமாகிவிட்டது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** அதுபோன்று குறைக்க வேண்டிய அவசியம் இருந்தால், எங்களிடம் கேட்கவேண்டியதுதானே? அது மாதிரிக் கேட்காமல் . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** திரு. இராமகிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கம்பம் தொகுதி, ராயப்பன்பட்டி கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையத்தினைக் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தித் தரவேண்டுமென்றும், கம்பத்திலே இருக்கின்ற கால்நடை மருந்தகத்தைக் கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

தேனி மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான குக்கிராமங்களும், கிராமங்களும் இருக்கின்றன. கால்நடைகள் அதிகமாக வளர்க்கப்படுகின்றன. கால்நடை மருந்தகங்களும், மருத்துவமனைகளும் இல்லாத அந்தக் கிராமங்களில் பல்வேறு நோய்களால் கால்நடைகள் இறப்புக்கு ஆளாகின்றன. ஆந்த்ராக்ஸ் நோய், தொண்டை அடைப்பான் நோய், சப்பை நோய், வாய் காணை மற்றும் கால் காணை நோய்களால் இளங்கன்றுகள், பால் தருகின்ற பசுக்கள் பலியாவது வேதனைக்குரியது. இதனைத் தடுக்கும்பொருட்டு, மாவட்டந்தோறும் நடமாடும் கால்நடை மருந்தகங்களை அமைத்து, அதன்மூலமாகக் கால்நடை இனத்தை விருத்தி செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு, கறவை மாடுகள் திடீரென்று நோய் தாக்குதலால் இறந்து, பால் உற்பத்தி குறைந்தது. கால்நடைகள் இறப்பினைத் தவிர்க்கும்பொருட்டும், கால்நடை வளர்ப்போர் பயன்பெறும்பொருட்டும் ஒவ்வொரு மாவட்டத்திலும் கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவு அலுவலகம் அமைய வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

நோய்த் தாக்குதலால் இறக்கின்ற கால்நடைகளுக்குக் கால்நடை பராமரிப்புத் துறையிலிருந்து நிவாரணம் வழங்க வேண்டும். தேனி மாவட்டத்தில், தேனியில் 1,10,000 லிட்டர் பால் சேமித்து வைக்கின்ற குளிரூட்டும் நிலையம் இருக்கின்றது. ஆனால் உற்பத்தித் திறன் 1,60,000 லிட்டர். எனவே, அந்த 60,000 லிட்டர் பாலைக் குறைந்த விலைக்குக் கேரளாவிற்கு விற்கின்றார்கள். பந்த் போன்ற காலங்களில் பால் வீணாகின்றது. இதையெல்லாம் கருத்திற்கொண்டு, கம்பத்தில் 50,000 லிட்டர் சேமித்து வைக்கின்றவகையிலே ஒரு குளிரூட்டும் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே அமைச்சர் அவர்களை நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12-45*

மேலும், தேனி மாவட்டத்தில் கால்நடைகளுடைய எண்ணிக்கை 1,40,000. எருமை 7,000. செம்மறி ஆடு 1,23,000. வெள்ளாடு 1,00,000. கோழி 12,58,000. மேலும், நாய், குதிரை, கழுதை மற்றும் வாத்து, முயல் ஆகியவற்றைச் சேர்த்து 16,55,137 என்று புள்ளிவிவரம் மிகத் தெளிவாகச் சொல்கிறது. ஆனால், டாக்டர்கள் மிகவும் குறைவாக இருக்கின்றார்கள். மூன்று கால்நடை மருத்துவமனைகள் இருக்கின்றன. 26 கால்நடை மருந்தகங்கள் இருக்கின்றன. 68 கிளை நிலையங்கள் இருக்கின்றன. பார்வை நிலையங்கள் 5 இருக்கின்றன. ஆனால், டாக்டர்கள் குறைவாக இருக்கிறார்கள். உதவியாளர்கள் குறைவாக இருக்கிறார்கள். ஆகவே, டாக்டர்களை நியமிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். தாலுகாதோறும் உதவி இயக்குநர் அலுவலகங்களை அமைத்து, மாவட்டத்திற்கு ஒரு இணை இயக்குநர் பணியிடத்தை அமைத்துத் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, எல்லாக் கால்நடை மருந்தகங்களுக்கும், கடந்த ஆண்டில் கை தொலைபேசி கொடுக்கப்பட்டது. விடுபட்டுப்போன அந்த 800 கால்நடை மருத்துவர்களுக்கும் கை தொலைபேசியை உடனடியாக நீங்கள் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டந்தோறும் நகராட்சியால் கட்டப்பட்ட, அல்லது கட்டப்பட்டு வருகின்ற இறைச்சிக் கூடங்களில் அவசியம் ஒரு கால்நடை உதவி மருத்துவரை நியமித்திட வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.



கிராமப்புறங்களில் பணியாற்றுகின்ற கால்நடை உதவி மருத்துவர்களுக்கு மருத்துவத் துறையில் தருவதுபோல, Rural Allowance தரவேண்டும்.

அதைப்போல, தமிழ்நாடு அரசு கால்நடை உதவி மருத்துவர்களுக்கு -- மத்திய அரசு கால்நடை உதவி மருத்துவர்களுக்கு இணையாக ஊதியம் கேரளாவில் வழங்குகிறார்கள் -- பாண்டிச்சேரி, பஞ்சாப், ஹரியானா போன்ற மாநிலங்களில் வழங்குவதைப்போல, இணையான சம்பளத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கச்சத் தீவை மீட்க வேண்டும்; தமிழக மீனவர்கள் இலங்கையிலே சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்களை இந்த அரசு உடனடியாக மீட்க வேண்டுமென்கிற கோரிக்கையினை வைத்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.கே.ஆர். சூரியகுமார், நீங்கள் 5 நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

**திரு. என்.கே.ஆர். சூரியகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காந்திக்கு ஒரு கண்ணாடி, பெரியாருக்கு ஒரு தாடி, இராஜாஜிக்கு ஒரு கைத்தடி, அண்ணாவுக்கு ஒரு தம்பி போல, எங்களுக்கென்று ஒரு தலைவர் என ஏற்றமாய் விளங்கும் எங்கள் எழில் முதல்வர், வந்த விருதுகளுக்கு எல்லாம் ஏற்றம் தந்து, வராத விருதுகளுக்கு ஏக்கத்தைத் தந்த, நேர்படப் பேசும் போர்க்குணப் படைப்பு, அறிவாலயத் திருக்கோயிலின் இராஜகோபுரம், உடன்பிறப்பே என அழைத்த பின்பு, உதயசூரியனை உலா வரச் செய்யும், எங்கள் இயற்கைச் சூரியன், மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு நிதியமைச்சர் இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) இளைஞர்களின் இன்றைய காலப் பெட்டகம், கழகத்தின் நாளையக் கருவூலம், உதயசூரியனின் ஒளிக்கீற்று, எங்கள் வழிகாட்டி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதியார் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) என்னை ஒன்றியச் செயலாளராகவும், ஒன்றியக் குழுத் தலைவராகவும், மக்கள் பிரதிநிதியாகவும் மன்றத்தில் நிறுத்தி, தாயாய், தந்தையாய் என்னை வழிநடத்திடும், எங்கள் மண்ணின் மைந்தர் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களே, நம் தலைவருக்கு ஒரு அண்ணா இருந்ததுபோல, எனக்கும் ஒரு

அண்ணனாய் இருந்து, நல்வழி நடத்தும் எங்கள் மாவட்டக் கழகத்தின் செயலாளர், இராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் அண்ணனார் காந்தி அவர்களே, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை மீதான மானியங்களில் பேச எனக்கு வாய்ப்பு நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் என்னுடைய வணக்கத்தைச் சொல்லி, என்னுடைய தொகுதிக்குத் தேவையான கோரிக்கைகளை, முதலிலே வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

என்னுடைய தொகுதியில், வெலக்கல்நத்தம் ஊராட்சியில், சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் வசிக்கிறார்கள். இங்கு பத்துக்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இந்தக் கிராமத்திலே அவர்கள் வாழ்வாதாரத்திற்கு வழிவகுக்கும் கால்நடைகளைப் பராமரிக்கவென்று ஒரு கால்நடை மருந்தகம் அங்கே இல்லை. எனவே, கால்நடைகளின் நலன்களைப் பாதுகாத்திட வெலக்கல்நத்தத்தில் ஒரு கால்நடை மருந்தகம் அமைத்துத் தரவேண்டுமாய் சென்ற ஆண்டு கோரிக்கை வைத்திருக்கிறேன். அதை இந்த ஆண்டு நிறைவேற்றித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-50*

அதேபோல, என்னுடைய நாட்ராம்பள்ளி தொகுதியிலே, சென்ற ஆண்டு ஆந்திர அரசால் நிறுத்தப்பட்ட தகரகுப்பம், ஜோதி நகர், நாராயணபுரம் ஆகிய ஊர்களில், கோரிக்கை வைத்த 15 நாட்களிலேயே மின்னிணைப்பை அந்தப் பகுதியினுடைய விவசாயிகளுக்கு வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய நாட்ராம்பள்ளி துணை மின் நிலையத்தில் தற்போதுள்ள 8 எம்.வி.ஏ. டிரான்ஸ்ஃபார்மர், இங்குள்ள விவசாய நிலங்களுக்குப் போதுமானதாக இல்லை. எனவே, இன்னொரு 8 எம்.வி.ஏ. டிரான்ஸ்ஃபார்மரை உடனே இங்கு அமைத்துத் தர வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தொகுதியின் பிரதான ஊரான நாட்ராம்பள்ளியில் உள்ள 33 கே.வி. துணை மின் நிலையத்தை 110 கே.வி. துணை மின் நிலையமாகவும், வெங்கலாபுரத்தில் உள்ள 110 கே.வி. துணை மின் நிலையத்தை 230 கே.வி. துணை மின் நிலையமாகவும் மாற்றித் தர வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். திம்மாம்பேட்டை, பச்சூர், வெலக்கல்நத்தம், கந்திலி, சுந்தரம்பள்ளி ஆகிய ஐந்து ஊர்களிலும் துணை மின் நிலையங்கள் வேண்டுமெனக் கோரும் கருத்துரு, ஏற்கெனவே அரசின்



பரிசீலனையில் உள்ளது. இந்தத் துணை மின் நிலையங்களைக் கூடிய விரைவிலே அமைத்துத் தர வேண்டுமாய் மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிருஷ்ணகிரியிலிருந்து பர்கூர் தொகுதி வரை வெட்டப்பட்டுள்ள படேதளா கால்வாய் என்னுடைய தொகுதியின் எல்லை வரையில் வெட்டப்பட்டுள்ளது. இதற்கு ஒரு கிலோ மீட்டர் தூரத்திலேயே வெலக்கல்நத்தம், காக்கங்கரை ஆகிய பெரிய ஏரிகள் உள்ளன. இந்த ஏரிகளோடு அந்தக் கால்வாயை இணைத்தால் அப்பகுதியில் உள்ள விவசாய நிலங்கள் முழுவதும் பயனடையும். எனவே, இந்தக் கால்வாயை வெட்டித் தர வேண்டுமாய் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்ராம்பள்ளியில் உள்ள பாலாற்றில் ஆவாரங்குப்பம், ராமநாயக்கன்பேட்டை, அம்பலூர் ஆகிய மூன்று இடங்களில் கொடையாஞ்சியில் கட்டியுள்ளதுபோல், ஆற்றின் உள்ளே பூமிக்கடியில் தடுப்புச் சுவர் கட்டித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். இதனால் அந்தப் பகுதியில் உதயேந்திரம், வாணியம்பாடி, திருப்பத்தூர், நாட்ராம்பள்ளி, சர்க்கரை ஆலை, ஜோலார்பேட்டை ஆகிய பகுதிகளுக்குக் குடிநீர்ப் பஞ்சம் தீரும் என்பதால் அந்தத் தேவைகளை உடனடியாகப் பூர்த்தி செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நாட்ராம்பள்ளி பேரூராட்சிப் பகுதியில் அமைந்துள்ள பொதுப் பணித் துறையின் கொட்டாறு ஓய்வு இல்லம் முற்றிலுமாகப் பழுதடைந்துள்ளது. இதை முழுவதுமாக இடித்துவிட்டு, அங்கே ஒரு பயணியர் விடுதியை அமைத்துத் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். தேசிய நெடுஞ்சாலையில் உள்ள இந்த இல்லம் புதுப்பிக்கப்பட்டால், அவ்வழியே பயணிக்கும் அனைத்துப் பெருமக்களுக்கும் அது உதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, ஜவ்வாது மலையடிவாரம் உள்ள மேற்கத்தியானூர், ஆந்திர எல்லையோரம் உள்ள தாசிரியப்பனூர் பகுதிகளில், உயர்நிலைப் பள்ளிகள் மட்டுமே உள்ளன. அந்த உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமாய் ஏற்கெனவே கோரிக்கை வைத்திருக்கிறேன். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அதேபோல, தகரகுப்பம், நாயனசெருவு, வேட்டப்பட்டு . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் பேசுகிற வாய்ப்பை நல்கிய தங்களுக்கும், எங்களுடைய கட்சியின் தலைவர் திரு. சுதர்சனம் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுடைய வேடசந்தூர் தொகுதியில் நீதிமன்றம் அமைப்பதற்காக 223 இலட்சம் ரூபாயை ஒதுக்கி, நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றிய தமிழக முதல்வர் அவர்களுக்கும், சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்களுடைய மாவட்டத்தினுடைய அமைச்சர் மாண்பிற்குரிய அண்ணன் I.P. அவர்களுக்கும், கொறடா திரு. சக்கரபாணி அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, அந்தப் பகுதியினுடைய விவசாயிகளுடைய கோரிக்கையாக, என்னுடைய தொகுதி மட்டுமல்ல; அரவக்குறிச்சி தொகுதி மக்களுக்கும் பயன்படுகிற குடகனாறு அணைக்கு 125 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து, அது செப்பனிடப்பட்டுச் சரி செய்கின்ற நிலையை உருவாக்கித் தந்திருக்கிற அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றிகூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், அந்த அணைக்கு இன்னும் இரண்டு கோடி ரூபாயை ஒதுக்கிக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும் என்ற கோரிக்கையையும் நான் இந்த நேரத்திலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, என்னுடைய வேடசந்தூர் தொகுதி என்பது வறண்ட பகுதி. குடிநீர் என்பது கிடைக்காமல் அவதிப்படுகிற நேரத்தில் உள்ளாட்சியில் நல்லாட்சி காண்கிற அமைச்சர் நம்முடைய மாண்புமிகு தளபதியார் அவர்கள், என்னுடைய தொகுதி முழுமைக்கும், எல்லாக் கிராமங்களுக்கும் காவிரிக் குடிநீர்த் திட்டத்தைக் கொணர்ந்து இன்றைக்கு அது நடைமுறையில் இருக்கிறது. ஆனால், அந்தப் பணிகள் எல்லாம் ஆமை வேகத்தில் நடைபெற்றுக்கொண்டிருப்பதைப்போல நாங்கள் உணர்கிறோம். ஆகவே, துரிதப்படுத்தி, எங்களுடைய பகுதிக்கு விரைந்து தண்ணீரைத் தர வேண்டுமென்ற கோரிக்கையை இந்த நேரத்தில் வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

என்னுடைய தொகுதி என்பது வறட்சியான தொகுதி மட்டுமல்ல; கல்வி நிலையிலே பின்தங்கி இருக்கிற தொகுதி. ஆகையினால், அங்கு



ஒரு கல்லூரியை உருவாக்கித் தர வேண்டும். கல்லூரிகளே இல்லாத தொகுதி என்கிற காரணத்தால் ஏதாவது ஒரு கல்லூரியை உருவாக்கித் தர வேண்டுமென்ற கோரிக்கையை இந்த நேரத்தில் வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகள் நிறைந்து இருக்கிற என்னுடைய தொகுதியில் அதிகமாக சூரியகாந்தியும் மக்காச் சோளமும்தான் பயிரிடுகிறார்கள். இந்த விதைகள் எல்லாம் விற்பனை செய்யப்பட வேண்டுமென்று சொன்னால் வெள்ளக்கோவிலுக்குச் செல்கிற அவல நிலை ஏற்படுகிறது. கிட்டத்தட்ட 250 கிலோ மீட்டருக்கு அப்பால் சென்று விற்பனை செய்ய வேண்டிய நிலை இருக்கிற காரணத்தால், விவசாயிகளுக்குப் பெரும் துன்பங்கள் ஏற்படுகின்றன. ஆகவே மாண்பிற்குரிய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களை நான் மன்றாடிக் கேட்டுக்கொள்வதெல்லாம், வேடசந்தூரிலே ஓர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை அவசியம் உருவாக்கித் தர வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இந்த நேரத்திலே வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12-55

என்னுடைய தொகுதியைப் பொறுத்த அளவில், மிகுந்த பரந்த தொகுதியாக இருக்கின்றது. சாலைகளெல்லாம் செப்பனிடப்படாமல் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, மாண்பிற்குரிய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்வது, என்னுடைய தொகுதிக்கு அதிகமான நிதியை ஒதுக்கித் தந்து, அங்கிருக்கின்ற சாலைகளையெல்லாம் செப்பனிட்டுத் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

கால்நடைகளைப் பொறுத்தவரை, ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும் அந்தத் துறை ஒன்றியிருக்கின்ற ஒரு துறை என்பதை யாரும் மறுக்கமுடியாது. இந்தக் கால்நடைகளின் உதவியால்தான் நான் படிக்க முடிந்தது. கால்நடைகளின் உதவியால்தான் நான் சட்டமன்ற உறுப்பினராக வர முடிந்தது. எப்பொழுதெல்லாம் என்னுடைய படிப்புக்குப் பணம் கட்ட வேண்டிய நிலை வந்ததோ, அப்பொழுதெல்லாம் என்னுடைய தாய், ஓர் ஆட்டை விற்றுதான் எனக்குப் பள்ளியிலே பணம் கட்டியிருக்கின்றார்கள். எப்பொழுதெல்லாம் நான் உயர்ந்து நிற்கின்றேனோ, அப்பொழுதெல்லாம் எனக்கு இந்தக் கால்நடைகள்தான் மிக உதவியாக இருந்திருக்கின்றன என்பது மட்டுமல்ல; இன்றைக்கும்

நான் கால்நடைகளை வைத்துக்கொண்டுதான் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன் என்று சொல்கின்றபோது, இந்த கால்நடை பராமரிப்புத் துறை மானியக் கோரிக்கையிலே நான் பேசுவதிலே பெருத்த மகிழ்ச்சியடைகின்றேன். ஆகவே, நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில், கிட்டத்தட்ட 2-1/2 கோடி கால்நடைகள் இந்த மண்ணிலே வாழ்ந்துகொண்டிருப்பதாக நாம் அறிகிறோம். எனவே, கால்நடைகளுக்குத் தேவையான தீவனங்கள் கிடைக்கும் தரிசு நிலங்கள், மிகவும் குறைந்து வருகின்றன. பல்வேறு காரணங்களினால் தரிசு நிலங்கள் எல்லாம் குறைந்து, அதனால் கால்நடைகளுக்குத் தேவையான தீவனங்களைத் தர முடியாத நிலை இருந்துகொண்டிருக்கின்றது. இந்த அரசாங்கம் அதைத் தடுத்து நிறுத்தி, கால்நடைகளுக்குப் போதிய அளவு தீவனங்கள் கிடைக்க ஆவன செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளைக் காப்பாற்றவேண்டிய மாபெரும் பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கின்றது என்ற காரணத்தால், இன்றைக்குப் பல்வேறு முயற்சிகளை எடுத்து, ஆங்காங்கே கால்நடைகளை அதிகப்படுத்தி, அவற்றுக்கு ஏற்படும் நோய்களைத் தடுப்பதற்கு, இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு, கிட்டத்தட்ட 5,192 முகாம்களை நடத்தி, 63 இலட்சம் கால்நடைகளுக்குத் தடுப்பூசி போட்டதன்மூலம் தமிழகத்திலே எங்கும் கால்நடைகள் இறக்கவில்லை என்ற நிலையை உருவாக்கிக் கொடுத்த பெருமை நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல; இந்தப் பணிகளைச் செய்வதற்கு 261 கால்நடை மருத்துவர்களையும், 1,317 பராமரிப்பு உதவியாளர்களையும் நியமித்து, கால்நடைத் துறையை சிறப்பாக நடத்தியிருக்கின்ற பெருமை நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும் என்று சொன்னால் அது மிகையாகாது. அதேநேரத்தில், இன்னும் இத்துறைக்கு 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட உதவியாளர்கள், அதாவது கால்நடை ஆய்வாளர்கள் தேவையென்று கருதுகிறோம். இப்போது அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் ஆண்டுக்கு 107 பேர்களுக்கு மட்டும்தான் பயிற்சி கொடுக்கின்றார்கள். இது போதுமானதாக இல்லை. ஆகவே வருடத்திற்கு 500 பேருக்காவது பயிற்சி கொடுத்தால்தான் உண்மையிலேயே இதிலுள்ள குறைகளை நீக்கமுடியும். ஆகவே அதை இந்த அரசு கவனிக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



அடுத்து, கால்நடைகளில் நமக்குப் பிரதானமாக இருப்பது கோழியினம். கோழி ஒரு பக்கம் நமக்கு முட்டையை அளிக்கின்றது; மற்றொரு புறம் கறிக்கோழியாகவும் உதவுகிறது. ஆகவே பல்வேறு வழிகளில் கோழிகள் உதவிக்கொண்டிருக்கின்ற காரணத்தினால், அதிகமாக முட்டைகள் உற்பத்தியாகின்ற காரணத்தால்தான், இப்போது வெளிநாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதி செய்கின்ற நிலையை இந்த அரசு உருவாக்கியிருக்கின்றது. இன்னும் சொல்லவேண்டுமென்று சொன்னால், பள்ளிகளில் படிக்கின்ற குழந்தைகளுக்குச் சத்துணவில் வாரத்திற்கு மூன்று முட்டைகளை வழங்குகின்றோம். நான்கூட பள்ளி விழாவிலே கலந்துகொண்டு பேசும்போது சொன்னேன். "மாணவர்களுக்குச் சத்துணவில் முட்டை ஏன் வழங்குகின்றார்கள் எனத் தெரியுமா?" என்று கேட்டு, (மணியடிக்கப்பெற்றது)-- ஒரே ஒரு நிமிடத்தில் சொல்லிவிடுகின்றேன்--அவர்களிடத்திலே நான் சொன்னேன்; "கலைஞர் என்கின்ற அந்த ஒன்றுக்குப் பின்னால், மூன்று முட்டைகளைச் சேர்த்தால், ஆயிரம். ஆகவே, பிளஸ் 2 வரை படிக்கின்ற நீங்கள், 1,200 மதிப்பெண்களுக்கு 1,000 மதிப்பெண்களைப் பெறவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடுதான், நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், சத்துணவில் வாரத்திற்கு 3 முட்டைகளை வழங்குகின்றார்கள்" என்ற செய்தியை மாணவர்களிடம் சொல்லியிருக்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்து, பால் வளம். இதுவும் பிரதானமாக இருக்கின்றது. நகர்ப்புறமாக இருந்தாலும் சரி, கிராமப்புறமாக இருந்தாலும், மக்களுக்குப் பால் மிக அவசியமான ஒன்றாக இருக்கின்ற காரணத்தால், பால் கூட்டுறவுச் சங்கம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. கடந்த ஆண்டு தமிழக அரசு 374 பால் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கியிருக்கின்றது. இதிலே என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், கூட்டுறவுச் சங்கத்திற்குப் பால் வழங்குகின்ற அந்தப் பால் உற்பத்தியாளர்களுக்கு, வாரா வாரம் பால் பணம் பட்டுவாடா செய்தால்தான் சிறப்பாக இருக்கும். தமிழகத்திலே பல்வேறு தனியார் சொசைடிகள் இருக்கின்றன. ஆந்திராவிலே முன்னாள் முதல்வர் சந்திரபாபு நாயுடு அவர்கள்கூட, ஹெரிடேஜ் என்ற பால் பண்ணையை வைத்திருக்கின்றார்கள். அது இலாபகரமாக இயங்கிக் கொண்டிருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தண்டபாணி, உரையை முடியுங்கள்.

**திரு. மா. தண்டபாணி:** ஒரே ஒரு நிமிடத்தில் சொல்லி முடித்துவிடுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, ஒரு நிமிடம், ஒரு நிமிடம் என்று சொல்லி, பேசிக்கொண்டேயிருக்கின்றீர்கள்!

**திரு. மா. தண்டபாணி:** வாரா வாரம் அவர்களுக்குப் பால் பணம் பட்டுவாடா செய்யவேண்டுமென்ற நிலை இருந்தால்தான் விவசாயிகளுடைய வாழ்வில் நாம் ஒளியேற்றியதாக இருக்க முடியும். ஆகவே, அந்தப் பால் வளத்தைப் பெருக்குவதற்காக நம்முடைய தமிழக அரசாங்கம், இப்போது பத்தாயிரம் உயர் கலப்பின மாடுகளைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நன்றி தெரிவித்து, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கும் நன்றி தெரிவித்து அமர்கின்றேன்.

பிற்பகல் *1-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி செல்வி ராமஜெயம், உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13 நிமிடங்கள் என்று சொன்னார்கள். (குறுக்கீடுகள்) 2008-2009 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், மீன் வளம் மற்றும் கால்நடை பராமரிப்பு, பால் வளம் ஆகிய துறைகளின்மீதான மானியக் கோரிக்கைகளில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த, பெண் குலத்திற்குப் பெருமை சேர்க்கும், தன்னிகரில்லா ஒப்பற்ற தலைவி, ஏழைகளின் இதய தெய்வம், தங்கத்தாரகை, புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினையும், நன்றிகலந்த வணக்கத்தையும் உரித்தாக்கிக்கொண்டு, என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் வளத் துறையின் நோக்கம், கடற்பகுதி மற்றும் உள்நாட்டுப் பகுதியிலுள்ள மீன்வளத்தைப் பெருக்குதலும், அதனைச் சார்ந்துள்ள மீனவர்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்துதலும் ஆகும். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில், மீனவர் நலனுக்காகக் கீழ்க்கண்ட திட்டங்களைக் கொண்டுவந்து சிறப்பாகச் செயல்பட்டுள்ளார்கள். அவற்றில் சிலவற்றை மட்டும் இந்த மாமன்றத்தில் பதிவுசெய்ய விரும்புகிறேன். மீனவர்கள் இலவச வீட்டு



வசதித் திட்டம், மீனவர்கள் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம், மீனவர்கள் குழுக் காப்புறுதித் திட்டம், மீனவ மகளிர் காப்புறுதித் திட்டம், மீனவர்கள் தனி நபர் விபத்துக் காப்புறுதித் திட்டம், மீனவர்கள் டீசல் மானிய நிவாரணத் திட்டம், இலங்கை கடற்படையினரால் பிடிபடும் தமிழக மீனவர்கள் குடும்பங்களுக்கு நிதியுதவி போன்ற பல்வேறு நலத் திட்ட உதவிகளை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் சிறப்பாகச் செய்துள்ளார்கள்.

ஆனால், உங்கள் ஆட்சியில் மீனவர்களுக்கென்று எந்தப் புதிய திட்டமும் இல்லை. உங்களது ஆட்சியில் எந்தப் புதிய திட்டமும் மீனவர்கள் நல்வாழ்விற்கும், முன்னேற்றத்திற்கும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நூற்றாண்டும், சென்ற நூற்றாண்டும், ஆழிப் பேரலை என்றோ, சுனாமி என்ற சொல்லையோ கண்டும், கேட்டும் இல்லாத நிலையில் இருந்த தமிழகத்தில், எங்கிருந்தோ வந்த திடீர் தாக்குதலில் உயிரிழந்து, உற்றாரை இழந்து, பிள்ளைகளை இழந்து, பொருள்களையும் இழந்து, கண்ணீரோடு நின்ற தம் மக்களைக் காண, அடுத்து ஒரு சுனாமி வர இருக்கிறது என்ற அச்சம் ஒளிபரப்பாய்ப் பரப்பிக்கொண்டிருந்தபோதும், தம் மக்களை காப்பது ஒன்றே தம் வாழ்வின் தலையாய கடமை என்று, விரைந்து சென்று, அன்னையாய் நான் இருக்கிறேன் என்று, துன்பம் களைந்து மீனவர்கள் இல்லங்களிலே இன்பத்தை கண்டிட்ட இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை மீனவச் சமுதாயம் ஒருபோதும் மறக்காது.

2008-2009 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் பக்கம் 52-ல் தொடங்கும் மீனவர் நலன் என்ற தலைப்பில், பக்கம் 53-ல் மீனவர்களுக்கான சிறப்புப் பயிற்சி மையம் அமைப்பதற்காக ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதுவும் டாடாவை வைத்து பயிற்சி அளிப்பது என்பது, மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக் கொடுப்பதுபோல் உள்ளது. மீனவச் சமுதாய மக்களுக்கு வேறு எந்தத் திட்டங்களும் இதில் இல்லை. இது மீனவச் சமுதாய மக்களுக்கு, இந்த அரசு செய்திருக்கும் மாபெரும் அநீதியாகும். மீன் வளத் துறை அலுவலகத்திற்கு ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர், பேசுங்கள்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** கீழ்க்கண்ட கோரிக்கைகளை மீனவ மக்கள், நம்முடைய அரசிடம் எதிர்பார்க்கிறார்கள். அவற்றை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மீன் வளர்ச்சிக்காகவும், மீன் உற்பத்திக்காகவும், தமிழக மீனவர்கள் ஒவ்வோர் ஆண்டும், 45 நாட்கள் ஏப்ரல் மாதம் 15 ஆம் தேதி முதல் மே மாதம் 31 வரை கடலுக்குச்சென்று மீன் பிடிக்கத் தடை விதிக்கப்பட்ட நாட்களாக இருந்துவருகின்ற நாட்களில், மீனவத் தொழிலாளர்கள் மீன்பிடி தொழில் செய்து வாழ்வதற்கு வழியில்லாமல், மிகவும் சிரமப்பட்டு வாழ்ந்துவருகின்ற சூழ்நிலையில் உள்ளார்கள். அதுபோலவே, தடை செய்யப்பட்ட காலத்தில், விசைப் படகு உரிமையாளர்கள் விசைப் படகுகளை நிறுத்திவைப்பதால், விசைப் படகுகளைப் பராமரித்து மறுபடியும் தொழிலுக்குச் செல்லும்போது, சுமார் 2 இலட்சம் ரூபாய் செலவாகிறது. இவர்களுடைய துன்பத்தையும், துயரத்தையும் போக்கிடும் வகையில், அண்டை மாநிலமான புதுச்சேரியில், மீனவக் குடும்பங்களுக்கு 90 கிலோ அரிசியும், ரூபாய் 300-உம், விசைப் படகுகளைப் பராமரிக்க படகு ஒன்றுக்கு ரூபாய் 15,000-மும் தரப்படுகிறது. அதுபோல, தமிழக மீனவத் தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு 100 கிலோ அரிசியும், 1,500 ரூபாய் நிவாரணமும் தடைசெய்யப்பட்ட காலத்தில் விசைப் படகைப் பராமரிக்க விசைப் படகு ஒன்றுக்கு ரூபாய் 30,000-மும் தரவேண்டும்.

தமிழக அரசு, மீன்பிடி விசைப் படகுகளுக்கு ஒவ்வொரு மாதமும் வழங்கும் 1,500 லிட்டர் விற்பனை வரி தள்ளுபடி டீசலை, அண்டை மாநிலமான ஆந்திர மாநிலத்தில் வழங்குவதுபோல் 3,000 லிட்டராக உயர்த்தித் தரவேண்டும்.

*பிற்பகல் 1-05*

26-12-2004 அன்று ஏற்பட்ட சுனாமிப் பேரழிவு, இந்திய வரலாற்றில் இல்லாத ஒன்று. அப்போது, ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் மானியத்துடன்கூடிய கடன் வழங்கப்பட்டது. தமிழகத்திலுள்ள கட்டுமரம், F.R.B., வள்ளம் மற்றும் விசைப் படகுகளுக்கு மொத்தக் கடனாக 62.32 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டது. இந்தக் கடனைத் தள்ளுபடி செய்ய தமிழக அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து, மீனவர் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும். 62.32 கோடி ரூபாய் என்பது மாநில அரசுக்குப் பெருந்தொகையல்ல. மாநில அரசு மத்திய அரசின் நிதியை எதிர்நோக்கி இருக்காமல், மாநில அரசே அக்கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



2007-2008 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின்போது வலைகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்த அளவு இருக்க வேண்டும்; எந்தெந்த மாவட்டத்தில் என்னென்ன மீன்கள் கிடைக்கும் என்பதனை உணர்ந்து அந்தந்த மாவட்ட மீன் வள அதிகாரிகளை வைத்து ஆய்வு செய்து, அதன்படிதான் அந்த வலைகள் வழங்கப்பட இருக்கின்றன என்று அமைச்சர் கூறினார். நான் அதற்கு அரசு, மத்தி வலை வழங்க இருப்பதாக மீனவர்கள் கருதுகிறார்கள்; அவர்களுக்கேற்றவாறு வலை வழங்க வேண்டும் என்று கூறியதை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ரூபாய் 100 கோடியில் வலை, கை விளக்குகள் உயிர்காக்கும் கவசங்கள் போன்றவற்றை வழங்குவதற்காக நிதி ஒதுக்கப்பட்டு டெண்டர் விடப்பட்டு, இன்னும் வழங்கப்படாத நிலையில் இருப்பதாகத் தெரிவித்தார்கள். இதுவரை எந்த மீனவர்களுக்கும் வலை வழங்கப்படாமல் உள்ளது என்பதுதான் உண்மை. கடந்த இரண்டாண்டுகளில் ஆமை வேகத்தில்கூட இந்தத் துறை நகரவில்லை என்பதுதான் உண்மை.

மேலும், தாங்கள் வழங்கியுள்ள சைக்கிள், மீனவர்களுக்கு உபயோகமில்லாதது. ஏனென்றால் மீனவர்கள் கடலுக்குச் சென்று மீன் பிடிக்கிறார்கள். மீனவப் பெண்கள் அவர்கள் பிடித்த மீனை எடுத்துச் சென்று வியாபாரம் செய்கிறார்கள் என்பது மீனவரான அமைச்சருக்குத் தெரியவில்லை போலும்! அமைச்சரின் புதிய கண்டுபிடிப்பு, ஆண்கள் மீன் விற்க வேண்டும் என்பதா? பொதுவாக, ஆண்கள் மீன் பிடிப்பார்களே தவிர, மீன்களை அங்காடிகளுக்குச் சென்று விற்க மாட்டார்கள் என்பதுதான் அடிப்படை உண்மை. இந்த அடிப்படை உண்மைகூட தெரியாமல் இருப்பது வேதனைக்குரியது. அரசு கொடுத்த சைக்கிளில் சென்று எந்த மீனவராவது மீன் விற்பனை செய்வதை அமைச்சர் காட்டினால், எனது ஒரு மாத சம்பளத்தைப் பரிசாகத் தருவதற்குத் தயாராக உள்ளேன். மீனவர்களுக்கு 'ஒதுக்கப்படுகிற நிதி இப்படி விரயமாகிறது என்பதுதான் வேதனையான விஷயம். மேலும் பரங்கிப்பேட்டை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா.

**•திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் ஒரு மாத சம்பளத்தை ஒதுக்கி வைத்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆண்கள், சைக்கிள் பின்னால் கூடையில் மீன்களை வைத்து எங்கள் பகுதியில் வடபழனி,

கோடம்பாக்கம் போன்ற பகுதிகளில் எல்லாம் மீன் வியாபாரம் நடத்துகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் போகவில்லை என்றுதான் நான் சொன்னேன். மாற்று இனத்தைச் சேர்ந்தவர்கள்தான் மீன் வாங்கி விற்கிறார்கள். ஆனால் மீனவர்கள் மீன்தான் பிடிக்கிறார்களேயொழிய, மீனை எடுத்துக் கொண்டு போய் அவர்கள் விற்பதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் நேரத்தைக் கருதி, மண்புமிகு உறுப்பினர் பேசியதற்குப் பிறகு நான் என்னுடைய பதிலுரையில் சொல்லலாம் என்று நினைத்தேன். அனைத்துமே அவர் முன்னுக்குப் பின் முரணாகவே பேசிக் கொண்டிருக்கிறார். மீனவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபடுபவர்கள், மீன் வியாபாரத்திலும் செயல்படுகிறார்கள் என்பதனை நான் அறிவேன். நான் பிறப்பால் மீனவன், உழைப்பால் மீனவன், பிழைப்பால் மீனவன். மீனவர்களைப் பற்றி நன்கு உணர்ந்தவன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு அதைப் பற்றித் தெரிய வாய்ப்பில்லை. நான் கடலிலே 15 ஆண்டுக் காலம் மீன்பிடித்துக் கடினமாக உழைத்து வாழ்ந்தவன் என்பதனை இந்த மாமன்றத்திலே அந்த உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் மீனவராக வாழ்ந்திருக்கிறார். நான் மீனவர்களோடு மீனவராக வாழ்ந்திருக்கிறேன். என்னுடைய தொகுதியிலுள்ள 15 கிராமங்களுக்கு மேற்பட்ட கிராமங்கள் மீனவக் கிராமங்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர் எடுத்துக் கொண்டிருக்கிற நேரத்தைக் கணக்கிலே எடுத்துக்கொள்ளாமல் எனக்கு அந்த நேரத்தையும் சேர்த்து ஒதுக்க வேண்டும் என்று கூறிக் கொள்கிறேன்.

மீனவர்களுக்கு ஒதுக்கப்படுகிற நிதி விரயமாகிறது என்பதுதான் வேதனையான விஷயம். மேலும், பரங்கிப்பேட்டை பேரூராட்சிக்குச் சொந்தமான கட்டடத்தில், சுமார் 2,000-க்கும் மேற்பட்ட சைக்கிள்கள் அடுக்கி வைக்கப்பட்டு, துருப்பிடித்த நிலையில் உள்ளன.



மீனவர்களுக்குக் கொடுத்த சைக்கிள்களைப் பாதி விலைக்கு விற்றுவிட்டார்கள் என்பதுதான் உண்மை.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் மீன் வளர்ச்சிக்காகவும், மீன் உற்பத்திக்காகவும் சுருக்குவலைமூலம் மீன் பிடிப்பது தடை செய்யப்பட்டிருந்தது. ஆனால் இந்த ஆட்சி வந்ததிலிருந்து சுருக்குவலைமூலம் மீன் பிடிப்பதைக் கண்டும் காணாமல் இருக்கிறது. இதனால் 80 சதவிகித சிறிய நாட்டுப் படகுமூலம் தொழில் செய்யும் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். பிரச்சினை உள்ள இடங்களில் மீனவர்கள் பாதிக்கப்படாமல் இருதரப்பினரும் ஏற்றுக்கொள்ளுமாறு அரசு தீர்வு காண முயற்சிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

2006-2007 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையிலும், 2007-2008 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையிலும் சாமியார்பேட்டையில் சுனாமி சிறப்பு நிவாரண நிதியில் இருந்தும், உலக வங்கியின்மூலம் நிதியுதவி பெற்றும் பரங்கிப்பேட்டை, அன்னங்கோயில் பகுதியில் மீன்பிடி துறைமுகங்கள் கட்டப்படும் என்று அறிவித்திருந்தீர்கள். ஆனால், அறிவிப்பு அறிவிப்பாகத்தான் உள்ளது. ஒரு அடிக்கல் நாட்டுவிழாகூட இதுவரை நடைபெறவில்லை. இந்த இரண்டு இடங்களிலும் மீன்பிடி துறைமுகம் அமைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில், பரங்கிப்பேட்டையில் கட்டத் தொடங்கிய (மணியடிக்கப்பெற்றது) மீன் வளப் பயிற்சி மையம், அரசு மருத்துவமனைக் கட்டடம், அரசு மேல்நிலைப் பள்ளிக் கட்டடம் ஆகியவை கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்படாமல் உள்ளன. அவற்றை உடனடியாகத் திறந்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு விடவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். அன்னங்கோயில் முரசலோடை, சின்னவாய்க்கால் பகுதிகளில், நிரந்தரத் தீர்வாக முகத்துவாரத்தை ஆழப்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மீனவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ இந்திய எல்லையைத் தாண்டும்போது, இலங்கைக் கடற்படை, கொடூரமான முறையில் நம் மீனவர்களைக் கடத்தியும், அவமானப்படுத்தியும் வருகின்றது. மாநில அரசும், மத்திய அரசும் இதைக் கண்டும் காணாமலும் உள்ள நிலை. அதே இலங்கை மீனவர்கள் நமது கடல் எல்லைக்குள் மீன் பிடிக்கின்றபோது நமது கடலோரக் காவல் படையும், மாநில அரசும் எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை. சமீபத்தில், சென்னை இராயபுரம்

மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து சென்னைக்கு நேர் கிழக்கே நமது கடல் எல்லைக்குள் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது, இலங்கை மீனவர்கள் நமது கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்ததோடு, நமது மீனவர்களையும் கொடூரமாகத் தாக்கிக் கடலில் வீசி எறிந்துள்ளார்கள். நடுக் கடலில் பாதிக்கப்பட்ட மீனவர்கள், படகில் இருந்து உரிமையாளருக்குத் தகவல் கொடுத்து, உரிமையாளரும், விசைப் படகுச் சங்கத்திற்குத் தகவல் கொடுத்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உறுப்பினர், இன்னும் 3 அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) ஒரே வார்த்தையில் உரையை முடியுங்கள்.*

**திருமதி செல்வி ராமஜெயம்:** கடந்த மாதம் பெய்த மழையின் காரணமாக, எங்கள் பகுதியில் உளுந்துப் பயிர்கள் சேதமடைந்து, மிகுந்த பாதிப்புக்குள்ளாயின. அந்த உளுந்துப் பயிர்கள் அழுகி, வயல்களில் துர்நாற்றம் அடித்து, அதன்மூலம் கொசு உருவாகி, அந்தக் கொசுக்கள்மூலம் கால்நடைகள் தாக்கப்பட்டு, நூற்றுக்கும் மேற்பட்ட கால்நடைகள் இறந்துவிட்டன. அந்தத் தகவலை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கூறி, உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டேன். கொசு மருந்து மட்டும் கிராமங்கள்தோறும் அடிக்கப்பட்டது. இறந்துபோன கால்நடைகளைக் கால்நடை மருத்துவர்கள் பரிசோதனை செய்தும் பிரேதப் பரிசோதனை நடத்தியும், முறையாக கிராம நிர்வாக அலுவலர் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு) 10 நிமிடங்கள்தான் ஒதுக்கப்பட்டது; 12 நிமிடங்கள் பேசி இருக்கிறீர்கள். (குறுக்கீடு) 10 நிமிடங்கள் என்று சொல்லி, அதற்குமேலே பேசிவிட்டீர்கள்.*

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'காமஞ் செப்பாது கண்டது மொழிமோ?' என்னும் கருத்திற்கேற்ப, நடுநிலையோடு அவையை நடத்தும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கம்.

ஓடாச்சேரி என்னும் சிற்றூரில், விவசாய திராவிடர் கழகக் குடும்பத்தில் பிறந்த என்னை, திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஈர்த்து, ஊராட்சி மன்றத் தலைவராக, ஒன்றியப் பெருந்தலைவராக, இன்று அமைச்சராக ஆக்கி, மூன்றாம் ஆண்டின் மானியக் கோரிக்கையை, இம்மாமன்றத்தில் என்னை ஆற்றுப்படுத்துகிற, உலகத்



தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) திருக்குவளை ஈன்றெடுத்த திருவிளக்கு, திக்கெட்டும் தமிழ் மொழி பரப்பும் ஒளிவிளக்கு, திருவாரூர் மண் வாசனை, தமிழருக்கோ நல்ல ஆலோசனை, நீ நடந்தால் ஆரூர் ஆழித் தேர், நீ நிமிர்ந்தால் வெற்றியின் சின்னம் உதய சூரியன், நீ சிரித்தால் விண்ணில் வெண்ணிலா, நீ விழித்தால் தமிழ் மண்ணில் திருவிழா, நீ கையசைத்தால் உடன் பிறப்பின் கரகோஷம், நீ வாழுகிற காலம் எல்லாம் தமிழ் மண்ணில் விசேஷம், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வழியில் நின்று, சிறப்பாகப் பணியாற்றக்கூடிய நம்முடைய இனத்தின் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் இனம், சுய மரியாதை பெற்றிட, நல்ல கொள்கைக்குரியவராய், நம்மையெல்லாம் வழி நடத்தும் தலைவர் கலைஞர் அவர்களுக்கு அண்ணனாய், உற்ற தோழனாய், மாமன்றத்தில் சமயோசித அறிவாளராய் விளங்கும் தமிழகத்தின் நிதி அமைச்சர் கழகத்தின் மாண்புமிகு பொதுச் செயலாளர், அய்யா இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், இன்னும் 50 ஆண்டுக் காலத்திற்குக் கழகத்தையும், தமிழ் இனத்தையும் கட்டிக் காத்து வழிநடத்திட கிடைக்கப்பெற்ற இளஞ்சூரியன், இளந்தலைவர்

*"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்*
*வாய்நாடி வாய்ப்பச் செயல்"*

என்று சொன்னாரே வள்ளுவர், அந்தக் கொள்கைக்கேற்ப, கருத்திற்கேற்ப, நபிகள் நாயகம் சொல்வார்கள்; "ஏழைகளைப் பார், அவர்களிடம் மரியாதையைச் செய், அவர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்" என்று சொல்வார்; அந்தக் கருத்துகளுக்கு ஏற்ப, ஏழைகளை நாடிச் செல்கிறார்; அவர்களைப் பார்த்து விசாரிக்கிறார்; அவர்களுடைய தேவைகளைக் கேட்கிறார்; தேவைகளுக்குத் திட்டங்களைத் தீட்டுகிறார்; அந்தத் திட்டங்களை நிறைவேற்றி மன நிறைவோடு ஆட்சிப் பரிபாலனம் செய்கிற எங்கள் அண்ணன் தளபதியார் அவர்களுக்கும், அனைவருக்கும் மரியாதைக்குரிய கழகத்தின் பொருளாளர் மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுக்கும், ஓய்வறியா உழைப்பாளி, எங்கள் சோழ மண்டலத்தின் தளபதி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நாகை நாடாளுமன்ற உறுப்பினர், நாகை மாவட்ட

திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர், எனது அன்பிற்கினிய சகோதரர் திரு. ஏ.கே.எஸ். விஜயன், எம்.பி. அவர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்து, காலத்திற்கேற்ற உற்ற நண்பனாய், உயிர்த் தோழனாய், என் உயர்வுக்கு ஊன்று கோலாய் என் உணர்வோடு கலந்திருக்கும் என் உள்ளத்தில் குடிகொண்ட, மறைந்த மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய செயலாளர் அண்ணன் பூண்டி கலைச்செல்வன் அவர்களை என் நினைவிற்குக் கொண்டுவருகிறேன்.

பிற்பகல் *1-15*

*50* ஆண்டுகளுக்கு மேலாக இந்த மாமன்றத்தில் உறுப்பினராக, கொறடாவாக, எதிர்க்கட்சித் தலைவராக *5* முறை முதலமைச்சராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றி, இவருக்கு யாரும் இணையில்லை; இவரேதான் இவருக்கு இணை என உலகிற்கு உணர்த்திய தலைவர், எங்கள் தலைவர். பாரதத்தில் எந்த மாமன்றத்திற்கும் கிடைக்காத பெருமை, இம் மாமன்றத்திற்கு இருக்கிறது. *50* ஆண்டுக் காலத்திற்குமேல் தொடர்ந்து பணியாற்றிய உறுப்பினரைக் கொண்ட ஒரே மாமன்றம், இந்த மாமன்றம்தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழால் பாரதிக்குப் பெருமை, பாரதியால் தமிழுக்குப் பெருமை என்பதைப்போல தலைவரால் இந்த மாமன்றத்திற்குப் பெருமை. இந்த மாமன்றத்தால் தலைவருக்குப் பெருமை. கொள்கையில் தந்தை பெரியாரைப்போல், செயல்பாட்டில் பேரறிஞர் அண்ணாவைப்போல் இன்றைக்குப் பணியாற்றுகிற எங்கள் தலைவரை நான் வணங்குகிறேன்.

இன்றைக்கு என்னுடைய மானியக் கோரிக்கையைச் சமர்ப்பிக்கிற இன்றைய நாள், பாரதிதாசன் பிறந்த தினத்திற்கு மறுநாள்;. மே தினத்தினுடைய முன்னாள்; இந்த் *30*-வது நாளில், என்னுடைய பிறந்த நாளில், இன்னும் சொல்லப்போனால், என்னுடைய *50*-வது வயதில் இந்த மானியக் கோரிக்கையை வைத்து நிறைவேற்றுவதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு வாய்ப்பளித்திருக்கிற தமிழ் இனத்தினுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இந்த அவையின் சார்பாக வாழ்த்துக்கள்! (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** பேரவைத் தலைவர் அவர்களுக்கும், என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பால் வளம், தமிழகத்தில் சீரான பொருளாதார மாற்றங்களை



உருவாக்கி, கிராமப்புறப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. பால் வளம், ஆண்டு முழுவதும் நிலையான வருமானத்தைத் தந்து கிராம மக்களின், குறிப்பாக, கிராமப்புறப் பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது. கிராமப்புறப் அமைப்புகளில் உள்ள பால் உற்பத்தியாளர்கள், பால் கூட்டுறவு அமைப்புகளில் உள்ள பால் உற்பத்தியாளர்கள், பால் கொள்முதல் விலையாக சங்கங்களிலிருந்து சராசரியாக நாளொன்றுக்கு *2* கோடியே *62* இலட்சம் ரூபாய் வருவாயைப் பெறுகிறார்கள். பால் உற்பத்தி செய்யும் முன்னணி மாநிலங்களில் ஒன்றாகத் தமிழகம் திகழ்கிறது. தமிழகத்தில் பால் கூட்டுறவு *3* அடுக்கு அமைப்பாகச் செயல்பட்டு வருகிறது. முதல் நிலையில் கிராமச் சங்கங்கள் அமைந்துள்ளன. *7,833* பிரதமக் கூட்டுறவுச் சங்கங்களில், சுமார் *22.02* இலட்சம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இதில் *1,309* மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் *59* பிரதமப் பால் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகும். *2007-2008* ஆம் ஆண்டில் *364* புதிய பால் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் *129* சங்கங்கள் மகளிர் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாவட்ட அளவில், தமிழகத்தில் *31* மாவட்டங்களை உள்ளடக்கி *17* மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் செயல்பட்டு வருகின்றன. மாநில அளவில் இவ்வொன்றியங்களை உறுப்பினர்களாகக் கொண்டு தமிழ்நாடு உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம், ஆவின், மாநில அளவில் செயல்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் பால் வளத் துறை மேற்கொண்ட நிலைபாடுகளை இம்மாமன்றத்திற்குத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன். தமிழகத்தில் பால் கூட்டுறவு அமைப்புகள்மூலம், பால் கொள்முதல் அதிகரித்துள்ளது. *2007-2008* ஆம் ஆண்டில் பால் கூட்டுறவு அமைப்புகளின்மூலம் சராசரியாக கொள்முதல் செய்யப்பட்ட பால், நாளொன்றுக்கு *26.27* இலட்சம் லிட்டர் ஆகும். பால் வளத் துறை, *21-6-2007* அன்று அதிகபட்சமாக *29.40* இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்துள்ளது. தமிழகத்தில் ஆவின் நிறுவனம், நுகர்வோருக்கு எந்தவிதத் தங்குதடையுமின்றி பால் விற்பனை செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்வதுடன், சென்ற ஆண்டோடு ஒப்பிடுகையில் ஒரு இலட்சம் லிட்டர் பால் அதிகரித்துள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். பால் உற்பத்தியாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் பரிவுடன் பரிசீலித்து, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுடைய துணையோடு கலந்து பேசி,

10-3-2008 முதல் பசும் பால் லிட்டர் ஒன்றுக்கு 2 ரூபாயும், முன் எப்போதும் இல்லாத அளவுக்கு எருமைப் பால் லிட்டர் ஒன்றுக்கு 4 ரூபாயும், விலை உயர்த்தி அறிவித்து உள்ளார் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கழக ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, கடந்த 2 ஆண்டுகளில் பாலின் ஆரம்பத் தரத்தை மேம்படுத்துவதற்காக 44 இடங்களில் பால் மொத்த குளிர்விப்பான்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும், அரசின் பகுதி 2 திட்டத்தின்கீழ் மற்றும் இதர திட்டங்கள் மூலமாக 131 இடங்களில் மொத்த பால் குளிர்விப்பான்கள் அமைக்கப்படவிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். பால் உற்பத்தியாளர்கள் நலனைக் கருதி, பால் கூட்டுறவுச் சங்கங்களின் உள்கட்டமைப்பு வளர்ச்சிக்காக ரூபாய் 418 இலட்சம் நிதி வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மொத்தம் உள்ள 7,830 சங்கங்களில் 7,148 சங்கங்கள் இலாபத்தில் இயங்கி வருகின்றன. கடந்த ஆண்டில், 1,500 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த 3,20,841 பால் உற்பத்தியாளர்களுக்கு ஈவுத் தொகை, போனஸ், கூடுதல் கொள்முதல் விலைமூலமாக 524 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

*பிற்பகல் 1-20*

புனரமைப்புத் திட்டத்தின்கீழ், ஈரோடு மாவட்ட பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பால் பணத்தில், லிட்டருக்கு 50 காசு எனச் செய்யப்பட்டுவந்த பிடித்தம், பால் உற்பத்தியாளர்களின் நலனைக் கருதி, 10-3-2008 முதல் இரத்து செய்யப்பட்டுள்ளது.

பணியின்போது, உயிரிழந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குச் சென்ற ஆட்சிக் காலத்தில் பணி நியமனத் தடைச் சட்டம் இருந்த காரணத்தால், பணியிலமர்த்தப்பட முடியவில்லை. புதிதாகப் பணியில் சேருவது மாத்திரமல்ல; ஒரு குடும்பத்தில் ஒருவர் உத்தியோகம் பார்க்கிற நேரத்தில் அவர் இறந்துவிட்டால், அந்தக் குடும்பம் நிராயுதபாணியாக வீதியிலே நின்றது. ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள் 5-வது முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்து அவர்களுடைய குடும்பத்திற்குக் கருணை அடிப்படையில் வேலை கொடுத்து, அவர்களுடைய வயிற்றிலே பால் வார்த்திருக்கிறார் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதுவரை 86 நபர்களுக்குப் பணி நியமன ஆணைகளை வழங்கியிருக்கிறோம். நேற்றையதினம், நம்முடைய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும்



உள்ளாட்சித் துறையினுடைய அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அண்ணன் தளபதியார் அவர்கள் 21 நபர்களுக்கு ஆணை வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

கடந்த ஆண்டு மானியக் கோரிக்கை அடிப்படையில் பல ஆண்டுகளாக தினக் கூலிகளாகப் பணியாற்றிவந்த பணியாளர்களின் கோரிக்கை, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் கனிவுடன் பரிசீலிக்கப்பட்டு, 28-9-2007 அன்று 202 பணியாளர்களுக்குப் பணி வரன்முறை ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

1-2-1981 அன்று துவக்கப்பட்ட இணையத்தின் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்குப் பணி விதிகள் வகுக்கப்படாமல் இருந்ததைக் கருத்தில்கொண்டு, இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர், அதற்கென்று ஒரு குழுவை அமைத்து, சிறப்புத் துணை விதிகள் தயாரிக்கப்பட்டு, அதனடிப்படையில் 170 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களுக்குச் சிறப்புத் துணை விதிகள் உருவாக்கும்பொருட்டு ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவினுடைய அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. இதுநாள்வரை, பொங்கல் திருநாளன்று, ஒன்றியம் மற்றும் இணையத்தின் பணியாளர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டுவந்த நெய் மற்றும் இனிப்பு போன்ற பரிசுப் பொருட்களை, கிராமப்புற பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் சுமார் 25,000 பணியாளர்களுக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இணையம் மற்றும் ஒன்றியப் பணியாளர்களுக்குக் கடந்த 2007-2008 ஆம் ஆண்டில் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு 20 சதவீத போனஸ், ரூபாய் 5,97,00,000/- வழங்கப்பட்டுள்ளது. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பால் கூட்டுறவு அமைப்புக்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகையாக ரூபாய் 3,17,00,000/- வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் அனுமதியுடன் இந்த ஆண்டினுடைய அறிவிப்புகளுக்குச்@ செல்வதற்கு முன்பாக, ஒரு சிறப்பான அறிவிப்பாகப் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நூற்றாண்டு விழாவைக் குறிக்கும்பொருட்டு, இந்த வருடத்தில் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு கிராமப்புற மகளிர் பால் பண்ணைத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம். தமிழ்நாட்டில் பால் உற்பத்தியை மேலும் பெருக்கவும், பால் உற்பத்தி செய்யும் விவசாயக் குடும்பங்கள் கூடுதல் வருவாய் பெறும் வகையிலும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 10,000 உயர் கலப்பினக் கறவை மாடுகள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் 200 கிராமங்களில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம்மூலமாக ரூபாய் 22 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் முதன்முதலாகத் திருக்குவளையில் அறிமுகப்படுத்தப்படும். (குறுக்கீடு)-- 10 நிமிடம்; அதிலே 8 நிமிடம்தான் ஐயா பேசியிருக்கிறேன்; கொஞ்சம் கூடுதலாக time, 15 நிமிடங்கள் கேட்டேன். (குறுக்கீடு) இல்லை ஐயா, நிறைய விஷயங்கள் இருக்கின்றன -- 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்குவளையில் முதன்முதலாகத் துவக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பால் உற்பத்தியாளர்களின் நலனைக் கருதி. பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு பால் உற்பத்தியாளர் நல நிதி. ஒரு ரூபாயில் ஒரு இலட்சம் ரூபாய். ஒவ்வொரு உற்பத்தியாளரும் ஒரு ரூபாய் செலுத்துகிற நேரத்தில் அவர்களுக்கு இறப்பு ஏற்பட்டால் ஒரு இலட்சம் ரூபாய் திட்டத்தினையும், அவரது குடும்பத்தில் பள்ளியில் குழந்தைகள் படிப்பதற்கான பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தவிருக்கிறோம். இதனை அண்ணா அவர்களுடைய பெயரால் தொடங்கவிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாதவரம் பால் பண்ணையில் அமைந்துள்ள பழத் தோட்டத்தில் அறுவடை செய்யப்படும் பழங்களைப் பாதுகாக்க, சேகரிப்புக் கிடங்கு ஒன்று; (குறுக்கீடு)--ஐயா, முக்கியமான விஷயங்கள் நிறைய இருக்கின்றன; கொஞ்சம் சொல்லிவிடுகிறேன்--10 இலட்சம் ரூபாய் அரசு மானியத்தில் நிறுவப்படும்.

---

@ 649 முதல் 654 வரையிலான பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.



நீலகிரி மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தில் பாலாடைக் கட்டியிலிருந்து பிரித்தெடுக்கப்படும் புரதச் சத்து மிகுந்த திரவப் பொருளைப் பயன்படுத்தி whey drink குளிர்பானம் தயாரிக்கும் இயந்திரம், ரூபாய் 35 இலட்சம் அரசு மானியத்தில் ஊட்டியில் நிறுவப்படும்.

2007-2008 ஆம் ஆண்டு தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 100 சதவீத மானியத்தோடு நடப்பாண்டில் அரசால் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள், எருமைக் கிடாரிக் கன்றுகள் வளர்க்கும் திட்டத்தின்கீழ் பால் உற்பத்தியாளர்களுக்கு 810 கன்றுகளுக்குத் தீவனம், மருந்து மற்றும் மருத்துவ உதவிகள் ரூபாய் 162 இலட்சம் செலவில் முழு மானியத்தில் வழங்கப்படும்.

பிற்பகல் 1-25

ஈரோடு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் செறிவூட்டப்பட்ட புரதச் சத்துத் தீவனம் (By Pass Protein) தயாரிக்கும் ஆலை, ரூபாய் 100 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

ஈரோடு மற்றும் திருநெல்வேலி மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தில் கறவை இனங்களுக்குத் தேவையான தாது உப்புச் சத்துக்கள் நிறைந்த தீவனக் கலவைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

பால் வளத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள மாதவரம் பால் பண்ணையின் பால் மற்றும் பால் உபபொருட்கள் தரப் பரிசோதனை கூடம், ரூபாய் 222/- இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

30 தானியங்கி பால் கறவை இயந்திரங்கள், ஒவ்வொன்றும் ரூ. 70,000/- விலையில் மொத்தம் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 100 சதவீத மானியத்தில் வழங்கப்படும்.

கணினியுடன் கூடிய தானியங்கி எடை மற்றும் பாலின் சத்துக்களின் தரத்தைக் கண்டறியும் 107 இயந்திரங்கள், ஒவ்வொன்றும் ரூ.1.69 இலட்சம் மதிப்பீட்டில் குளிரூட்டும் நிலையங்கள் மற்றும் பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும். இதன் மொத்த மதிப்பீடு ரூபாய் 181 இலட்சம் ஆகும்.

விவசாயிகள் மற்றும் களப் பணியாளர்களின் திறமையை மேம்படுத்தத் தமிழ்நாடு கால்நடை வளர்ச்சி முகமைமூலம் ரூபாய் 54 இலட்சம் மதிப்பீட்டில் பயிற்சி அளிக்கப்படும்.

ரூபாய் 27 இலட்சம் மானியத்தில் பால் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த 550 முன்னோடி விவசாயிகள், வெளி மாநிலங்களில் உள்ள பால் பண்ணைகளைப் பார்வையிட அழைத்துச் செல்லப்படுவார்கள்.

2008-2009 ஆம் ஆண்டில், 250 புதிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்படும். மேலும், 100 செயல்படாத பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் புத்துயிரூட்டப்படும்.

பால் உற்பத்தியாளர்களிடம் நிருவாகச் செலவினமாகப் பிடிக்கப்படும் 10 பைசாவில், குறைந்தபட்சம் 2½ பைசா பிடித்தம் செய்யப்படும் வகையில் கிடைக்கும் ரூ.1 கோடியே 80 இலட்சம் ரூபாயினைக் கால்நடை மருந்துகள் மற்றும் மருத்துவச் செலவுகளுக்குப் பயன்படுத்தப்படும். இதன்மூலம் நடமாடும் கால்நடை சிகிச்சைப் பிரிவுகளை மேலும் அதிகரித்து, உற்பத்தியாளர்களின் கால்நடைகளுக்கு மருத்துவச் சிகிச்சையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மாநில அளவிலான தமிழ்நாடு பாடத் திட்ட +2 தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் இணையம் மற்றும் ஒன்றியங்களில் பணிபுரியும் நிரந்தரப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு, ஓர் ஆண் மற்றும் ஒரு பெண் குழந்தைக்கு 5 ஆண்டுகள் அல்லது அவர்களது பட்டப் படிப்புக் காலம் இதில் எது குறைவோ, அதுவரை மாதம் ரூ.1000/- வீதம் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும்.

மாநில அளவில் நடைபெறும் தமிழ்நாடு பாடத் திட்ட +2 தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் இணையம் மற்றும் ஒன்றியப் பணியாளர்களின் குழந்தைகளில், 5 ஆண் மற்றும் 5 பெண் குழந்தைகள் ஒவ்வொருவருக்கும், ஒரு கணினி வழங்கப்படும்.

இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களில் பணிபுரியும் முறையான பணியாளர்களின் 2 குழந்தைகளுக்கு, அவர்கள் பி.வி.எஸ்ஸி., (தமிழ்நாடு கால்நடை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகம்) அல்லது பி.டெக். (பால் வளத் தொழில்நுட்பம்) அல்லது பி.எஸ்ஸி., (பால் வள அறிவியல்) போன்ற பட்டப் படிப்புகளை நன்மதிப்பு பெற்ற நிறுவனங்களில் படிப்பதற்கும் அல்லது தமிழ்நாடு கால்நடை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகத்தில், பால் வள அறிவியலில் முதுநிலை பட்டப் படிப்புப் படிப்பதற்கும், அதிகபட்சமாக ஆண்டொன்றுக்கு ரூ.40,000 வீதம் அல்லது அவர்கள் செலுத்திய உண்மையான தொகை இதில் எது குறைவோ அத்தொகை வழங்கப்படும்.



மாநில அளவில் நடைபெறும் தமிழ்நாடு மாநிலப் பாடத் திட்ட +2 தேர்வில் அதிக மதிப்பெண்கள் எடுக்கும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பாலூற்றும் உறுப்பினர்களின் குழந்தைகளில் ஓர் ஆண் மற்றும் ஒரு பெண் குழந்தைக்கு மாதம் ரூ.1000/- வரை கல்வி உதவித் தொகை வழங்கப்படும். இத்தொகை, 5 ஆண்டுகள் அல்லது பட்டப் படிப்பு காலம் இதில் எது குறைவோ அதுவரை வழங்கப்படும்.

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த, அதிகமாக பால் ஊற்றும் பத்து சங்க உறுப்பினர்களுக்கு அந்த நிதியாண்டில் ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

மாநகரப் பால் பண்ணைகளில் கண்காணிப்பு முறையை மேம்படுத்தும் பொருட்டு, சோதனை அடிப்படையில், அம்பத்தூர் பால் பண்ணையின் பணிகளைத் தொலைக்காட்சிமூலம் கண்காணிக்கும் முறை (Closed Circuit T.V. Monitoring System) ஏற்படுத்தப்படும்.

இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களில் பணிபுரியும் தொழில்நுட்பப் பணியாளர்களுக்குப் பணியிடைக் காலப் பயிற்சி அளிக்க, மாதவரத்தில் ஒரு தொழில்நுட்பப் பயிற்சி மையம் அமைக்கப்படும்.

ஒவ்வொரு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தைச் சார்ந்த, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பால் வழங்கும் உறுப்பினர்களின் குழந்தைகளில், தமிழ்நாடு மாநிலப் பாடத் திட்ட +2 தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் ஒரு குழந்தைக்கு ஒரு கணினி வீதம் 17 ஒன்றியங்களில் உள்ள குழந்தைகளுக்கு 17 கணினிகள் வழங்கப்படும்.

ஒவ்வொரு மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திலும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திலுமுள்ள பாலின் தரம் மற்றும் அதிக பால் உற்பத்தி செய்வதில் திறம்பட செயல்படும் 3 செயலாளர்களுக்குப் பரிசுத் தொகையும், சான்றிதழும் வழங்கப்படும். மேலும், மாநில அளவில் அதிகத் தரம் மற்றும் அதிக பால் உற்பத்தி செய்யும் 3 தலைசிறந்த சங்கங்களின் செயலாளர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்குப் பரிசுத் தொகையும், சான்றிதழும் வழங்கப்படும்.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் மற்றும் ஒன்றியப் பணியாளர்களுக்கு இரவு நேரப் பணிப் படி, தையற்கூலி மற்றும் சோப்பு ஆகியவை கூடுதலாக வழங்கப்படும்.

பிரதமப் பால் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் தையற்கூலி உயர்த்தி வழங்கப்படும்.

அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியக் களப் பணியாளர்களுக்கு நிரந்தரப் பயணப் படி, தற்பொழுது வழங்கப்படும் நிலையிலிருந்து ரூ.100 உயர்த்தி வழங்கப்படும்.

அனைத்துப் பிரதமப் பால் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கும், தொகுப்பு ஊதியம் பெறுபவர்கள் உட்பட, இடைக்கால நிவாரணத் தொகையாக மாதந்தோறும் ரூ.100 ஏப்ரல் 2008 முதல் வழங்கப்படும்.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்திற்கு 5 புதிய கனரகப் பால் ஊர்திகள், ரூ.60 இலட்சம் செலவில் வாங்கப்படும். பெண் பணியாளர்களின் நலனுக்காகத் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் 2 குழந்தைகள் காப்பகம் (creche) அமைக்கப்படும்.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** பிரதமப் பால் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களின் பணிநிலைத் திறன், பணியாளர் சிறப்புத் துணை விதி, பணி வரன்முறைப்படுத்துதல் மற்றும் ஊதிய விகிதம் நிர்ணயித்தல் ஆகியவை அரசின் கவனத்தை ஈர்த்து வருகிறது. அதன் பொருட்டு, ஒரு குழு அமைக்கப்பட்டு, அதன் அறிக்கை மற்றும் பரிந்துரைகள் ஆறு திங்களுக்குள் எதிர்பார்க்கப்படுகின்றன. அதற்குப் பிறகு, அதற்கான முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகரத்தில் பால் விநியோகம் கணினிமயமாக்கப்பட்டு, பால் அட்டைகள் இணையதளத்தின்மூலம் புதுப்பிக்கும் முறை செயல்படுத்தப்படும். சென்னை நுகர்வோர்களுக்கு நன்மை பயக்கும் நுண்ணுயிரிகளாலான கொழுப்புச் சத்து குறைந்த புதிய வகை புரோ-பயாட்டிக் தயிர் அறிமுகப்படுத்தப்படும். இது செரிமானத்திற்கும்,



உடல் ஆரோக்கியத்திற்கும் மிகச் சிறந்த உணவுப் பொருளாக அமையும்.

இன்றைக்கு அன்புக்குரிய சகோதரர்கள், மாமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும், இந்தத் துறையிலே முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கும், சிறப்பான நிருவாகத்தைக் கொடுப்பதற்கும் எனக்கு உற்ற துணையாக இருக்கும் மரியாதைக்குரிய துறையின் செயலாளர் செல்வி லீனா நாயர் அவர்களுக்கும், துறையின் ஆணையர் மற்றும் நிருவாக இயக்குநர் திரு. அபூர்வவர்மா அவர்களுக்கும், இணை இயக்குநர் திரு. சுப்பையன் அவர்களுக்கும், இணைச் செயலாளர் திரு. முத்துசாமி அவர்களுக்கும், துறையின் ஆணையர் திரு. ரவிக்குமார் அவர்களுக்கும், துறையைச் சார்ந்த அலுவலர்களுக்கும், கூட்டுறவுத் துறை அலுவலர்களுக்கும், எனது உதவியாளர்களுக்கும், என்னுடைய அலுவலக உதவியாளர்களுக்கும், பால் உற்பத்தியாளர் சங்கத் தலைவர்களுக்கும், தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாமன்ற உறுப்பினர்கள் 294 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அரிய கருத்துகளைக் கூறியிருக்கிறார்கள். பலவற்றை நாங்கள் நிறைவேற்றியிருக்கிறோம், நிறைவேற்றுவதற்குத் தயாராக இருக்கிறோம். இருப்பினும், நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய எண்ணத்திற்கு, உங்களுடைய கருத்துகளையெல்லாம் எடுத்துச் சென்று பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவோம் என்பதைக் கூறிக்கொண்டு, தாங்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். தலைவரைத் தேடித்தான் தொண்டர்கள் செல்வார்கள். ஆனால், தலைவர் அண்ணா, திருவாரூர் தேடி வந்து அன்று வளர்த்த பயிர், இன்று தமிழகத்தின் உயிர்; நமது தலைவர் கலைஞர். தந்தை பெரியார் அவர்கள் பாண்டிச்சேரியில் தலைவர்

கலைஞர் அவர்களின் காயத்திற்கு மருந்திட்டு கையோடு அழைத்துச் சென்று, ஈரோட்டில் அன்று புகட்டிய பகுத்தறிவு, இன்று பாருக்கே அரசியல் பாடம் புகட்டுகிறது. சிவப்பு நிறத்திற்குத் தன் இரத்தம் தந்து, தமிழகத்திலுள்ள விருப்பு வெறுப்புகளைக் களைய கருப்பு, சிவப்பு இரு வண்ணக் கொடியை உருவாக்கி அழகுபெற ஏற்றி, அழகு பார்த்தார் அன்று. மூவண்ணக் கொடியைக் கோட்டையில் ஏற்றி, ஐந்தாம் முறை முதல்வராக சாதனை படைத்த சரித்திர நாயகராகத் திகழ்கிறார் இன்று. புதிதாகக் கட்ட இருக்கும் தமிழகத்தின் தலைமைச் செயலகக் கோட்டையில், நாளையும் கொடியேற்றி சாதனை படைப்பார் நம்முடைய வரலாற்று முதல்வர், அய்யா கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்குத் தமிழனின் வரலாற்றுப் பொன்னேடு, அவர் எழுப்பும் புதிய கோட்டையில் வைரமாய்ப் புகழ் பதிக்கும். 'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்' என்பதுபோல், அவர் எழுப்பும் கோட்டையின் ஒவ்வொரு கல்லும் நமது உயிர்த் தலைவர் கலைஞரின் புகழ்பாடும்.

ஊருக்கும் உலகுக்கும் வழிகாட்டும் உன்னதத் தலைவர் கலைஞர் அவர்களின் உழைப்பால், உதவியால் உணர்வு பெற்றவர்கள் பல கோடி. அவர்களில் எளியவன் சாமி, ஒரு கடைகோடி. இந்தத் தொண்டனையும் ஆட்கொண்ட என் அன்புத் தலைவர் பிறப்பால் மனிதன், நாட்டால் இந்தியன், மொழியால் தமிழன் என்று உலகத் தமிழருக்கே வரலாற்றுப் பெருமை சேர்த்த மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர், நமது உயிரனைய தலைவர் அய்யா கலைஞர் அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட இயக்கத்தின் மூத்த ஆசான், இவரின் நாப்பிறழா தமிழ் உச்சரிப்பால் உலகமே வியக்கும். எந்நிலையிலும் தன்னிலை மாறாத கழகப் பொதுச் செயலாளர் மாண்புமிகு நிதியமைச்சர், எங்கள் இனமானப் பேராசிரியர் அவர்களே வணக்கம்.

"நடந்துவந்த பாதையை நாள்தோறும் எண்ணிப் பார்; நடக்க வேண்டிய பாதையைத் தேர்ந்து திட்டமிடு; துணிந்து முன்னேறு; வெற்றி உனக்கே! வெற்றியின் பயன் தமிழுக்கே; தமிழ் மக்களுக்கே; தமிழ் மண்ணுக்கே!" என எனக்கும் என்னைப்போன்ற இலட்சோப இலட்சத் தமிழக இளைஞர்களுக்கும் தன்னுடைய சொல்லால், செயலால் வழிகாட்டும் எங்கள் இதயம் நிறைந்த உதய சூரியன்; நானிலமே போற்றும் தமிழ் மாநிலத்தின் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், வருங்காலத் தமிழ்ச் சமுதாயத்தைத் தலைமையேற்று வழிநடத்திச் செல்லக்கூடிய ஒரே ஆற்றல்மிகு தமிழ்த் தலைவர், சிங்கத்



தமிழர், எங்கள் உயிரில் கலந்த உறவு, தங்கத் தளபதி அவர்களே, வணக்கம்.

பிற்பகல் 1-35

தமிழகம் ஒளிபெற்று உயர, தலைவருக்கு உறுதுணையாக நாளும் உழைப்பவர்; அவருடைய அன்பால், பண்பால், பாசத்தால் அனைவரையும் அரவணைத்து, எங்கள் தோளுக்கு வலிமை சேர்க்கும் தூயவர், மாண்புமிகு மின் துறை அமைச்சர் கழகப் பொருளாளர் அய்யா ஆற்காட்டார் அவர்களுக்கு வணக்கம். தலைவர் கலைஞரின் கையெழுத்தாகவே தன் வாழ்க்கையை அமைத்துக்கொண்ட பொதுப் பணித் துறை அமைச்சர் அண்ணன் துரைமுருகன் அவர்களுக்கும் வணக்கம். என்னைத் தேர்ந்தெடுத்து இம்மாமன்றத்திற்கு அனுப்பிவைத்த திருவொற்றியூர் தொகுதி மக்களுக்கு என் இதயங்கனிந்த வணக்கத்தைத் தெரிவித்து, என் தந்தை பரசுராமன் அவர்களை வணங்கி, என் மானியக் கோரிக்கையின்மீதான பதிலுரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரைப்படங்களிலே மீனவர்களைப்பற்றிப் பாடல்கள் பாடுவார்கள். "ஒரு நாள் போவார், ஒரு நாள் வருவார், ஒவ்வொரு நாளும் துயரம்" என்றும் "ஐலசா, கட்டுமரம், அலையடித்தால் மெட்டு வரும், கடலைத் தாண்டிப் போய் வந்தால் கைநிறைய துட்டு வரும்" என்றும், "மீனவர்கள் வாழ்க்கை முள்ளுமேலே வாழைதான், சூறைக்காற்று ஆட்டிவைக்கும் சின்ன தென்னம்பாளைதான்" என்றும் பாடல்களை எழுதியவர்கள், பாடலைப் பாடியவர்கள், படத்தில் நடித்தவர்கள்கூட மீனவச் சமுதாயத்தின்மேல் கொள்ளாத அக்கறையை, நமது வரலாற்று முதல்வர் அய்யா கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தன்னுடைய அரசியல் பயணத்தில், பல்வேறு தருணங்களில் மீனவ மக்களுக்குப் பல்வேறு உதவிகளைச் செய்து சரித்திர சாதனைகளை நிகழ்த்தியிருக்கிறார். நானும் பிறப்பால் மீனவன், உழைப்பால் மீனவன், பிழைக்கின்ற பிழைப்பால் மீனவன் என்கின்ற உணர்வோடு நம்முடைய வரலாற்று முதல்வர் அய்யா கலைஞர் அவர்களுக்கு நன்றி கூறுவது எனது கடமையாகும்.

காலத்தின் அருமை கருதி, இந்த அவையிலே ஒன்றைமட்டும் நான் பதிவுசெய்ய விரும்புகிறேன். கடந்த 2-11-2007 அன்று நாகை மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் சென்றபோது, இலங்கைக் கடற்படையினர், 17 விசைப் படகுகளைக் கைப்பற்றி, அதில் மீன்

பிடிக்கச் சென்ற 97 மீனவர்களையும் கைது செய்துவிட்டனர். இந்தச் செய்தி, விழுப்புரம் மாவட்டத்தில் மரக்காணம் ஒன்றியத்தில் நொச்சிக்குப்பம் கிராமத்தில், சுனாமி வீடுகள் திறப்பு விழவில் நான், மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களோடு கலந்துகொண்டபோது, இரவு 8.00 மணியளவில் நாகை மாவட்ட மீனவப் பிரதிநிதிகள் என்னிடம் தொலைபேசிமூலமாகத் தொடர்புகொண்டு தகவலைத் தெரிவித்தார்கள். நான் உடனடியாகச் சென்னை விரைந்து வந்து, மாண்புமிகு முதல்வரைச் சந்திக்க அவரது இல்லத்திற்குச் சென்றேன். அப்போது இரவு மணி 11-30. முதல்வர் இல்லத்தில் நம்முடைய மின் துறை அமைச்சர் இருந்தார். அவரிடம் இந்தச் சம்பவம் குறித்துத் தெரிவித்தேன். அவர் உடனடியாக முதல்வரிடம் என்னை அழைத்துச் சென்றார். நான், நாகை மாவட்டத்தில் மீன் பிடிக்கச் சென்ற 97 மீனவர்கள், 17 விசைப் படகுகளோடு இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட விவரத்தைத் தெரிவித்தேன். அப்போது முதல்வர் அவர்கள், "நீ கவலைப்படாமல் வீட்டிற்குச் செல். நான் மத்திய அமைச்சருடன் பேசி, அவர்களை விடுவிக்க, கூடியவரையில் ஏற்பாடு செய்கிறேன்" என்று சொல்லி, என்னை வீட்டிற்கு அனுப்பிவைத்தார். நான் முதல்வர் வீட்டிலிருந்து, எனது வீடு இருக்கும் அடையாறு செல்வதற்குள், சுமார் 25 நிமிடத்திற்குள், எனக்கு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அய்யா ஆற்காட்டார் அவர்கள், என்னுயை கை தொலைபேசி மூலமாக 97 மீனவர்களும், 17 விசைப் படகுகளோடு கலைஞருடைய பெருமுயற்சியால் விடுதலை செய்யப்பட்டுவிட்டார்கள் என்ற தகவலை (மேசையைத் தட்டும் ஒலி) என்னிடம் தெரிவித்தார்கள். எனக்கோ மிகுந்த வியப்பாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது. மறுநாள் காலையில் இதுசம்பந்தமாக மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்து நான் நன்றி தெரிவித்தேன். அதற்கு முதல்வர் அவர்கள் சொன்ன பதில், "யோவ், நான்தானய்யா உனக்கு நன்றி சொல்ல வேண்டும். நீ 11-30 மணிக்கு என்னை வந்து பார்த்துச் சொன்னதனால்தான் நான் மத்திய வெளியுறவுத் துணை அமைச்சர் அகமது அவர்களோடு தொடர்புகொண்டு பேசுவதற்கும், அவர் இலங்கை அமைச்சரோடு பேசுவதற்கும் எளிதாக இருந்தது. ஆகவே, நான்தானய்யா உனக்கு நன்றி சொல்ல வேண்டும்" என்று சொன்னார். இதையெல்லாம் நான் இங்கே எடுத்துக்காட்டுவது எதைக் காட்டுகிறது? மீனவ மக்கள்மீது அய்யா டாக்டர் கலைஞர் அவர்கள், எந்த அளவிற்குப் பரிவும், பாசமும், பற்றும் கொண்டுள்ளார்கள் (மேசையைத் தட்டும்



ஒலி) என்பதனை இங்கே இந்த மாமன்றத்திற்கு நான் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசியவர்கள் எல்லாம்கூட மீனவச் சமுதாயத்திற்கு ஏற்படுகின்ற இடர்ப்பாடுகளை எல்லாம் பேசினார்கள். நீங்களெல்லாம் எண்ணிப் பார்த்திட வேண்டும். இதைப்போன்ற நிகழ்வுகள், கடந்த ஆட்சியில் நடந்தபோது, நள்ளிரவு 11-00 மணியளவில் முதல்வராய் இருந்தவரை யாராவது சந்திக்க முடியுமா அல்லது அவரைச் சந்திக்கத்தான் நினைக்க முடியுமா? (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் எல்லாம் இதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1-40

அதோடுமட்டுமல்ல; அதற்கடுத்து, கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் நம்முடைய இராமேஸ்வரம் பகுதிகளில் கைது செய்யப்பட்ட மீனவர்களை உடனுக்குடன் விடுவித்த பெருமை நம்முடைய முதல்வர் அய்யா கலைஞர் அவர்களைச் சாரும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

*"நித்தம் நித்தம் மாறுகின்றது எத்தனையோ!*
*நெஞ்சில் நினைத்ததெல்லாம் நடந்ததுதான் எத்தனையோ!*
*கோடுபோட்டு வாழ்ந்தவர்கள் எத்தனையோ!*
*கொண்ட குறியும் தவறிப் போனவர்கள் எத்தனையோ!"* (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. ஜெயக்குமார், என்ன?

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 10 நிமிடங்கள் அவர் பேசியிருக்கிறார். இப்போது தமிழ்நாட்டினுடைய மீனவர்கள் கண்ணீரிலே இருக்கின்ற ஒரு சூழ்நிலையிலே, அவர்களுக்கு என்ன செய்யப்போகிறோம் என்பதை இந்த அவையிலே தெரிவிக்காமல், சம்பந்தமில்லாமல், 'முதல்வராய் இருந்தவரைச் சந்திக்க முடியுமா?' என்று அமைச்சர் சொன்ன அந்த வார்த்தையை, தயவுசெய்து அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** தான் கொண்ட கொள்கையை மாற்றாமல், தன் திருக்கரங்களால் உயர்த்திப் பிடித்த கொடியை இறக்காமல், எந்த நிலையிலும் தான் நினைத்ததை முடித்துக் காட்டிய பெருமை, நம்முடைய வரலாற்று முதல்வர் அய்யா கலைஞர்

ஒருவரையே சாரும் என்பதனை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். இனிவரும் காலங்களில், மீனவ மக்கள் தலைவர் கலைஞர் அவர்கள் செய்த உதவிக்கு, நன்றியினை மறவாமல், அவரின் கமல மலர்ப் பாதங்களுக்கு நன்றியைக் காணிக்கையாக்க இருக்கிறார்கள் என்பதனை இந்த அவையில் பதிவுசெய்ய விரும்புகிறேன்.

2004 ஆம் ஆண்டு மீனவர்களை அல்லலுக்கு ஆளாக்கியது ஆழிப் பேரலை; சுனாமி. ஒரே நொடியில் உற்றார் உறவினர்களின் உயிர்களைப் பறிகொடுத்து, உடைமைகளையும், வீடுகளையும் இழந்து தவித்தார்கள் கடலோர மீனவர்கள். அவர்களுக்கு ஒரு வீடுகூட அன்றைக்கு இருந்த ஆட்சி, அரசு செலவில் கட்டித் தரவில்லை. (குறுக்கீடுகள்) 2006-ல் ஆட்சிக்கு வந்து, 2004-ல் ஆழிப் பேரலையால் வீடிழந்த மீனவ மக்களுக்கு 35,268 . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது பதிலுரையில், இப்போதுதான் துறை சம்பந்தப்பட்ட விவரங்களுக்கு வந்திருக்கிறார். கடந்த 2004 ஆம் ஆண்டு சுனாமி ஏற்பட்டதற்குப் பின்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 8,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருந்தன என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அமைச்சர் அவர்கள் தொடர்ந்து தவறான தகவலைத் தந்துகொண்டிருக்கிறார். ஏற்கெனவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் சுட்டிக்காட்டிய அந்த வார்த்தையை நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'அவரைச் சந்திக்க முடியுமா?' என்றுதான் கேட்டார். 'அவரைச் சந்திக்க முடியும்' என்று நீங்கள் சொல்லிவிட்டுப் போங்களேன்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்ன அந்த 8,000 வீடுகளும் தொண்டு நிறுவனங்களால் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளேதவிர, (மேசையைத் தட்டும் ஒலி)



அரசு நிதியிலிருந்து கட்டிக் கொடுக்கப்பட்டவை அல்ல என்பதனை நான் இந்த மாமன்றத்தில் பதிவுசெய்ய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இப்படி ஒவ்வொரு வார்த்தைக்கும் எழுந்து நின்றீர்களென்றால், மூன்று மணி ஆகிவிடும். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** தேவையில்லாமல் பேசுகிறார். 8,000 வீடுகளை நாங்கள் கட்டிக் கொடுத்திருக்கிறோம். தொண்டு நிறுவனங்களுக்கு நிலம் கொடுத்தது யார்? நிலத்தை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Controversy இல்லாமல் subject போகட்டும். (குறுக்கீடுகள்) சரி.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** 2006-ல் ஏற்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு, மீனவ மக்களுக்கு 35,268 வீடுகளைக் கட்டித் தந்து, மேலும் 25 ஆயிரம் வீடுகளைக் கட்டி வருகிறது என்பதனை இந்த அவையில் பதிவுசெய்ய விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. ஜெயக்குமார், ஓயாமல் சந்தேகம் வரக்கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Controversy இல்லாமல் subject போகட்டும் என்று நான்தான் சொல்லிவிட்டேன் அல்லவா? அதோடு விடுங்கள். (குறுக்கீடு) திரு. டி. ஜெயக்குமார், கடைசியாகப் பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடு) இல்லை, கடைசியாகச் சொல்லிக்கொள்ளலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) நான்தான் சொல்கிறேன் அல்லவா? கடைசியாகப் பேசிக்கொள்ளலாம், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** சுனாமி பாதித்த 13 மாவட்டங்களில், மீனவர்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகள் குறித்து, மாவட்ட ஆட்சியாளர்களை அழைத்து ஒருமுறைகூட ஆய்வு செய்யாத ஆட்சி, முந்தைய ஆட்சி. (குறுக்கீடுகள்) 2006-ல் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், 13 கடலோர மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களைக் கூட்டி, சுனாமி நிவாரணப் பணிகளை... (குறுக்கீடுகள்) இருக்கிற உண்மையைத்தானே நான் சொல்கிறேன்? (குறுக்கீடு)

பிற்பகல் 1-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) தயவுசெய்து நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நாம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு என்ன செய்தோம் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்தால் போதும்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** 2006 ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் 13 கடலோர மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கூட்டி, சுனாமி நிவாரணப் பணிகளை ஆய்வு செய்து, புதிய நிவாரணத் திட்டங்களை அறிவித்து நிறைவேற்ற ஆணையிட்டவர் நம்முடைய வரலாற்று முதல்வர், அய்யா கலைஞர். 110 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில், சுனாமி பாதித்த மீனவர்களுக்குக் கூடுதல் நிவாரண உதவிகள் வழங்க ஆணையிட்டவர் முதல்வர் கலைஞர். அதன்படி கனரக மிதிவண்டிகள், உயிர்காக்கும் கவச உடைகள், மறு மின்னூட்ட விளக்குகள், குளிர் உறைவுப் பெட்டிகள் ஆகியவை 42 ஆயிரம் மீனவர்களுக்கு 12-10-2007 முதல் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

இங்கேகூட எதிர்க் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எதுவும் செய்யவில்லை, அ.தி.மு.க. ஆட்சியிலேதான் செய்தோம் என்று சொன்னார்கள். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர், அண்ணன் தளபதியார் அவர்கள்மூலமாக, சுனாமியால் பாதிக்கப்பட்ட, 38 ஆயிரத்து 195 மீனவ மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் சுனாமி சுழற்சி நிதியாக ஒவ்வொரு குழுவிற்கும் 30 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 102 கோடி ரூபாய் வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) மீனவ சமுதாய மகளிரின் வாழ்வில் திருவிளக்கு ஏற்றி வைத்தவர் நம்முடைய திருக்குவளை தந்த தவப் புதல்வர், அய்யா கலைஞர் அவர்கள்.



தமிழ்நாட்டில், சுனாமியால் பாதிக்கப்பட்ட 13 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த ஒன்றாம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை முடிய, ஒரு இலட்சத்து 73 ஆயிரத்து 308 மாணவ மாணவிகளுக்குக் கல்வி உதவித் தொகையாக மாதம் 300 ரூபாய் வீதம் 41 கோடியே 67 இலட்சத்து 24 ஆயிரம் ரூபாயை வழங்கியது நம்முடைய கலைஞருடைய ஆட்சி. இங்கே நான் பேசினால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோபப்படுகிறார்கள். 2004-ஆம் ஆண்டில் சுனாமி ஏற்பட்டது. 2006-ல் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி ஏற்பட்டது. ஆனால், கல்வியாக இருந்தாலும், மகளிர் சுய உதவிக் குழுக்களாக இருந்தாலும், முதல்வர் கலைஞர் செய்த அந்த நற்காரியங்களை நீங்கள் செய்யத் தவறினீர்களா, இல்லையா என்பதனை உங்களுடைய மனச்சாட்சிக்கே நான் விட்டுவிடுகிறேன்.

பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்பு சிறப்புத் திட்டத்தில் 12 கடலோர மாவட்டங்களில், மீன் விற்பனை செய்கின்ற மகளிரில் ஒருவருக்கு 3,500 ரூபாய் வீதம், மொத்தம் 5,000 மகளிருக்கு ஒரு ஐஸ் பெட்டி, ஒரு அலுமினிய அன்னக் கூடை, ஒரு எடைக் கருவி, ஒரு குடை, ஒரு கத்தி ஆகியவை ஒரு கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் மகளிருடைய மேம்பாட்டுக்காக வழங்கிச் சிறப்பிக்க இருக்கின்றவர் நம்முடைய வரலாற்று முதல்வர் அய்யா கலைஞர் அவர்கள்.

சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் ஒவ்வொன்றும் தலா 5 கோடி ரூபாய் வீதம், மொத்தம் 50 கோடி ரூபாய் செலவில் தமிழகத்தின் கடலோரங்களில் 10 இடங்களில், மீன் இறங்கு தளங்களை அமைத்திட ஆணையிட்டது தலைவர் கலைஞருடைய அரசு.

தமிழ்நாட்டில், மத்திய மாநில பங்களிப்புத் திட்டத்தின்கீழ் 27 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில், குளச்சல் மீன்பிடி துறைமுகம் அமைத்திட ஒப்புதல் வழங்கியுள்ளவர் தலைவர் கலைஞர் அவர்கள். ஒட்டுமொத்த மீனவச் சமுதாய மக்கள் சார்பாக மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்ப்பட்டினத்தில், 30 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் மீன்பிடி துறைமுகம் அமைக்க நிருவாக அனுமதி தந்துள்ளவர் தலைவர் கலைஞர் அவர்கள். மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டதும், தேங்காய்ப்பட்டினத்திலும் மீன்பிடி துறைமுகம், கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்கு தலைவர் கலைஞர் அரசின் பரிசாக அமையவிருக்கின்றது. அய்யா, கலைஞர் அவர்களின்

இதயத்தில் நீங்காத இடம்பிடித்த பூம்புகார் மீன்பிடி துறைமுகமாக அமைய, தலைவர் கலைஞர் அவர்களின் அரசு ஆவன செய்து வருகிறது. மாதிரி ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு, தொல்லியல் கடல் ஆய்வுத் துறையின் அறிக்கை பெற்றவுடன் அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை இப்பேரவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, கன்னியாகுமரி மாவட்டம், முட்டம் மற்றும் ராஜாக்கமங்கலம் துறையில் 'BOOT' முறையின் அடிப்படையில், மீன்பிடி துறைமுகம் அமைத்திட, தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது என்பதையும் இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் *1-50*

அதைப்போல, திருவள்ளூர் மாவட்டம் முதல் கன்னியாகுமரி மாவட்டம் வரை முடியவுள்ள கடலோரப் பகுதிகளில் மீன்பிடி படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்தி வைக்க தூண்டில் வளைவுகள் அமைக்க சாத்தியக்கூறுகள் எங்கெங்கு உள்ளனவோ அங்கெல்லாம் அமைப்பதற்குத் தலைவர் கலைஞர் அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது என்பதனையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

புதிய அறிவிப்புகள்@. இங்கேகூட பேசினார்கள். ஒரேயொரு அறிவிப்பை மட்டும் நான் இங்கே படித்துக் காட்ட விரும்புகிறேன். இங்கே பேசியவர்கள் எல்லோரும் சொன்னார்கள்.

தமிழகத்தில் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 15 ஆம் தேதி முதல் மே 29 ஆம் தேதி வரை கிழக்குக் கடற்கரைப் பகுதியிலும், ஜூன் 15 ஆம் தேதி முதல் ஜூலை 29 ஆம் தேதி வரை மேற்குக் கடற்கரைப் பகுதியிலும் விசைப் படகுகளில் மீன்பிடிப்பது, மீன் இனப் பெருக்கத்தினைக் கருத்தில் கொண்டு தடை செய்யப்படுகிறது. எனினும், இத்தடைக் காலத்தில் கட்டுமரம் மற்றும் சிறிய படகுகளில் மீன்பிடிக்கத் தடை ஏதும் விதிக்கப்படுவது இல்லை. 45 நாட்களுக்கு மீன்பிடிப்பது தடை செய்யப்படுவதால், தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகக் கூறி, விசைப் படகு மீனவர்கள் தங்களுக்கு

@ 655 முதல் 662 வரையிலான பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.



மீன் பிடிப்புத் தடைக் காலத்தின்போது அரசு நிதி உதவி வழங்கி நிவாரணம் அளிக்க வேண்டுமென நீண்ட நாட்களாகக் கோரிக்கை வைத்து வருகின்றனர். அவர்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள நமது மாண்புமிகு முதல்வர் அய்யா கலைஞர் அவர்கள், இக்கோரிக்கையினைக் கனிவுடன் பரிசீலித்து தமிழகத்தில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 2 இலட்சம் மீனவக் குடும்பங்களுக்கு இந்தத் தடைக்காலத்தின்போது நிவாரணமாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் 500 ரூபாயை வாரி வழங்கி ஆணையிட்டுள்ளார்கள். இதனால் அரசுக்கு சுமார் 10 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

*"ஆண்டுக்கு ஆண்டு, தேதிக்குத் தேதி*
*ஆயிரம் இருக்குது சுப தினம்,*
*அடுத்தவர் நலத்தை நினைப்பவர் தமக்கு*
*ஆயுள் முழுவதும் சுப தினம்"*

என்ற பாடலைக் கேட்டிருக்கின்றோம். தமிழகத்தில் வாழுகின்ற ஒவ்வொரு இன மக்களுக்கும் நாளும் ஒவ்வொரு திட்டத்தை இயற்றி, சிறப்புற இந்தியத் திருநாட்டிற்கே தமிழகத்தை முதல் மாநிலமாக வளர்த்துக் கொண்டிருக்கின்ற நம்முடைய அருந்தவத் தலைவர் உயிர்த் தலைவர் அய்யா கலைஞர் அவர்கள் வாழ்கின்ற ஒவ்வொரு நாளும் அவர்களுக்குச் சுப தினமாக இருக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே நான் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இங்கே பேசினார்கள், நம்முடைய டாடா நிறுவனத்தைப் பற்றி. காலத்தின் கட்டாயம். இது நவீன உலகம். ஆகவே மீன் வளத் துறைமூலமாக மீன்களை எப்படிப் பிடிப்பது, கடலிலே வருகின்ற இடர்ப்பாடுகளை, சுனாமி போன்ற இடர்ப்பாடுகளை, இனி வர இருக்கின்ற புயல் சீற்றங்களை இடர்ப்பாடுகளை நாம் எப்படிச் சமாளிப்பது போன்றவற்றிற்காக, நம்முடைய மீனவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி அவர்களது வருமானத்தைப் பெருக்கும் நடவடிக்கையில் இந்த அரசு தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. அதற்காகவே அரசு, சங்கம் ஒன்றைத் தனியே ஆரம்பித்து உலகத் தரம் வாய்ந்த மீனவர் பயிற்சி மையம் ஒன்று சென்னைக்கு அருகில் உள்ள முட்டுக்காட்டில் அமைக்க உள்ளது. இச்சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு டாடா போன்ற தனியார் நிறுவனங்கள், எப்படி நமக்குச் சுனாமியின்போது பல நிறுவனங்கள் வந்து நம்முடைய சமுதாயத்திற்காக, மீனவர்களுக்காக உதவி செய்தனவோ, அதைப்போலத்தான் டாடா நிறுவனம் வந்து

உதவுகிறதேயொழிய, வேறு உள்நோக்கம் இல்லை என்பதனை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, நார்வே நாட்டின் தொழில்நுட்ப வல்லுநர்களை அழைத்து, தலைமைச் செயலாளர் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர் எங்களுடைய அன்புச் சகோதரி திருமதி கனிமொழி அவர்கள், துறைச் செயலாளர் மற்றும் அரசு அதிகாரிகள் கொண்ட ஆலோசனைக் கூட்டம், கடந்த *28-4-2008* அன்று நடைபெற்றது. அதன்படி, ஆரம்ப கட்ட சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து மீன்பிடி தொழில்நுட்பங்களான கடல் மீன் வளர்ப்பு, வழக்கமான மீன்பிடி முறைகளுக்கு மாற்று மீன்பிடி முறைகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் மேற்படி புதிய வழிமுறைகளைப் பின்பற்ற மீனவர் சுய உதவிக் குழுக்களை உருவாக்கி ஊக்குவித்தல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். அதை அவர் படித்ததாக இந்த அவையிலே பதிவு செய்துகொண்டு, மானியக் கோரிக்கைகள்மீதான வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொள்ளலாம்.

*பிற்பகல் 1-55*

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் வளத் துறை மானியக் கோரிக்கையின்மீது, சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் பல கோரிக்கைகளை வைத்துள்ளார்கள். அவர்களுடைய கோரிக்கைகளுக்கு முடிந்த வரை நான் பதில் கூறியுள்ளேன். இங்கே *304* வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றையெல்லாம் படித்து, முடிந்த வரை இந்த மாமன்றத்தில் பதில் சொல்லியுள்ளேன். மற்ற உறுப்பினர்களின் கருத்துகளையும் என் மனதில் நினைவில் வைத்துக்கொண்டு, வருங்காலத்தில் மீனவ மக்கள்மீது அக்கறைகொண்டுள்ள நம்முடைய முதல்வர் அய்யா கலைஞர் அவர்களுடைய ஆலோசனையின்படியும், அறிவுரையின்படியும் தேவையான திட்டங்களை வகுத்துச்



செயல்படுத்துவோம். எனவே, உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையில் அரசு கோரியுள்ள தொகையை வழங்க அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

*"எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும்;*
*இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்"*

என்று நாளும் உழைத்திடும் நம்முடைய கலைஞர் அவர்களுடைய அரசு வாழ்க, வாழ்க, வாழ்கவென வாழ்த்தி, வாய்ப்பிற்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ், தமிழன், தமிழினம், தமிழ்நாடு என்று, சிந்தனை, செயல், சொல் அனைத்தாலும் உலகத் தமிழினத்திற்காகத் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்துகொண்டிருக்கும் பெரியாரின் தொண்டராய், பேரறிஞர் அண்ணாவின் தம்பியாய், தொண்டர்களுக்குத் தலைவராய், எதிரிகளையும் மதிக்கும் பண்பாளராய் விளங்கும் தமிழக முதல்வரே, உதைப்பவனைக்கூட அன்பால் உமது இதயத்தில் மதிப்பவரே, வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள சாலமோன் ராஜாவைப் போன்ற ஞானத்தினால், அறிவுத் திறமையினால், வற்றிய கண்ணுடைய ஏழை எளியோரும் வாழ்வாங்கு வாழ்வதற்கு நல்ல பல திட்டங்களைத் தீட்டி, *2006* ஆம் ஆண்டு இருண்டு கிடந்த தமிழகத்தை ஒளிபெறச் செய்துள்ள ஞானியாகிய கலைஞர் அவர்களே, உமக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தமிழக மக்களின் வாழ்விற்காகத் தலைவர் கலைஞர் வழியில் கண் இமைக்காமல் பாடுபடும் சிந்தனையாற்றல், செயலாற்றல், சகிப்புத் தன்மை, குறைந்த பேச்சு, நிறைந்த உழைப்பு, இளைஞர் கூட்டத்தை ஒருங்கிணைக்கும் தலைமைப் பண்பு, ஏழையெளியோர்பால் மெய்யான பரிவு, இளைய தலைமுறையின் காவல் அரண், அன்போடு பண்போடு அனைவரையும் அரவணைத்து வழிகாட்டும் ஒளிவிளக்கு, எங்களது தளபதியார் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

எனக்கு அவ்வப்போது நல்லாலோசனைகளையும், வழிகாட்டுதல்களையும் நல்கிவரும் மாண்புமிகு நிதி அமைச்சர், இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, மானியக் கோரிக்கை எண் 6, கால்நடை பராமரிப்புத் துறை சார்பான என் பதிலுரையைத் தொடங்குகிறேன்.

2006 ஆம் ஆண்டு, ஐந்தாவது முறையாகத் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, கால்நடை மருத்துவர்கள், கால்நடை ஆய்வாளர்கள் மற்றும் அரசு அலுவலர்களின் பற்றாக்குறையினால், பொலிவிழந்து, இருள் சூழ்ந்திருந்த இத்துறை, மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களால் ஒளியூட்டப்பட்டு, தற்பொழுது ஒளிபெற்று விளங்குகிறது.

இத்துறை மேற்கொண்டுள்ள பணிகளில், முக்கியமானவற்றை மட்டும் நான் நினைவுகூர விரும்புகிறேன். இந்த ஆண்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் 220 கால்நடை உதவி மருத்துவர்களும், 41 ஆராய்ச்சி உதவி மருத்துவர்களும் புதியதாகப் பணியமர்த்தப்பட உள்ளனர். 1,280 கால்நடை பராமரிப்பு உதவியாளர்களின் பணியிடங்கள் மாவட்ட வேலைவாய்ப்பகம் மூலமும், தினக் கூலிப் பணியாளர்களை நிரந்தரம் செய்வதன்மூலமும் நிரப்பிட அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அதுபோல, பணியாளர் சீரமைப்பைச் சீராக வைத்திருக்கவும், சிறந்த கால்நடை மருத்துவச் சேவையை அளிக்கவும், கால்நடை பராமரிப்புத் துறையின் நிருவாக அமைப்பினை மறு சீரமைப்பு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இங்கே பேசிய அநேக உறுப்பினர்கள், தாலுகா தலைமையிடங்களுக்குத் தனி அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றெல்லாம் கோரிக்கை வைத்தார்கள். அதற்கேற்றாற்போல், நம்முடைய துறையின் நிருவாக அமைப்பினை மறு சீரமைப்பு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல, வாயில்லா ஜீவன்களுக்கு இலவசமாக நோய்த் தடுப்பு மற்றும் மருத்துவ சிகிச்சை அளிப்பதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களால், 18-1-2000 அன்று தொடங்கப்பட்ட முன்னோடித் திட்டம்தான் கால்நடை பாதுகாப்புத் திட்டமாகும். தற்பொழுது இலவச முகாம்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டும், நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டும் கால்நடை பாதுகாப்புத் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த



இரண்டாண்டுகளில் 8,195 முகாம்கள் நடத்தப்பட்டு, ஒரு கோடியே, 4 இலட்சத்து 44 ஆயிரம் கால்நடைகளும், 28 இலட்சத்து 75 ஆயிரம் விவசாயிகளும் பயனடைந்துள்ளனர். 2008-2009 ஆம் ஆண்டு 5,500 முகாம்கள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதுபோல, தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் கால்நடைப் பண்ணை மேம்பாட்டுத் திட்டம்மூலமாக, 2008-2009 ஆம் ஆண்டில் பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்க இத்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதை, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன் அவர்கள், கோரிக்கையாக வைத்திருந்தார்கள்.

அதேபோல, H5N1 என்ற நச்சுயிரியினால் பரவும் உயிர்க்கொல்லி நோயான பறவைக் காய்ச்சல், இந்தியாவில் இதுவரை 5 நோய்க் கிளர்ச்சிகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த ஆண்டு தொடக்கத்தில் மேற்கு வங்காள மாநிலத்தில் பறவைக் காய்ச்சல் நோய் பாதிப்பு ஏற்பட்டபொழுது, கலைஞர் அரசு தீவிரமாகக் கண்காணித்து, அந்நோய் தமிழகத்தில் பரவாமலும், நோய்பற்றிய வதந்தியினால் கோழி முட்டை மற்றும் கோழி இறைச்சி உற்பத்தி பாதிக்கப்படாமலும் இருக்க நடவடிக்கை எடுத்தது. இந்நோய் நம் மாநிலத்தில் கண்டறியப்படாவிட்டாலும், இத்துறை கோழிப் பண்ணைகள், புழக்கடை கோழி வளர்ப்புப் பகுதிகள் மற்றும் பறவைகள் சரணாலயங்களில் தீவிரக் கடுங் கண்காணிப்பை மேற்கொண்டு வருகிறது. நோய்க் கிளர்ச்சியினால் ஏற்படும் அவசர நிலைமையை எதிர்கொள்ள இந்த அரசு முழுமையாகத் தயார் நிலையில் உள்ளதோடு, நோய் பரவாமல் தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கவும் தயார் நிலையிலுள்ளது.

பிற்பகல் 2-00

தமிழகத்திலுள்ள கோழிப் பண்ணைகளிலிருந்து முட்டை, முட்டைப் பொருட்கள் மற்றும் கோழி இறைச்சி ஏற்றுமதி, சுமார் 100 கோடி ரூபாய் அளவிலான அன்னியச் செலாவணியை ஈட்டக்கூடிய அளவில் உள்ளது. ஆனால், பறவைக் காய்ச்சல் நோய் இந்தியாவின் வேறு மாநிலங்களில் ஏற்பட்டாலும், தமிழகத்திலிருந்து கோழிக் கறி, முட்டை மற்றும் முட்டை சார்ந்த பொருட்களை இறக்குமதி செய்யும் நாடுகள் தடை விதிக்கின்றன. இதனால் தமிழகத்துக்குப் பெரும் இழப்பு ஏற்படுகிறது. ஆகவே, நமது மாநிலத்திலுள்ள கோழிப் பண்ணைகளை 'பறவைக் காய்ச்சல் நோய்

இல்லாத பண்ணைப் பகுதி' என உருவாக்கும் திட்டம் தயாரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தை உலக வர்த்தக அமைப்பு மற்றும் பன்னாட்டு விலங்கின நோய்ப் பாதுகாப்பு அமைப்பு ஆகியவற்றின் விதிமுறைகளுக்குட்பட்டு உருவாக்க, இந்த அரசால் திட்டமிடப்பட்டுள்ளது.

2007-2008 ஆம் ஆண்டு கோமாரி நோய்க் கிளர்ச்சியின்போது இத்துறையின்மூலம் 85 இலட்சத்து 63 ஆயிரம் மாடுகளுக்குக் கோமாரி நோய்த் தடுப்பூசிப் போடப்பட்டு, நோய், கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. 2008-2009 ஆம் ஆண்டு மழைக் காலத்திற்கு முன்பாக, மூன்று வார காலத்திற்கு சிறப்பு முகாம்கள் நடத்தி, தீவிர கோமாரி நோய்த் தடுப்பூசித் திட்டத்தின்மூலம் 95 சதவிகிதம் கால்நடைகளுக்குக் கோமாரி நோய்த் தடுப்பூசி போடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதுபோல, உள்நாட்டு இனங்களைப் பராமரிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கலைராஜன் அவர்கள், உள்ளிட்ட பல்வேறு உறுப்பினர்கள் கோரிக்கை வைத்தார்கள். இத்துறையின்மூலம் உள்நாட்டினங்களைப் பாதுகாப்பதற்காக, ஓசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையில் 286 காங்கேயம் இனக் கால்நடைகளையும், கொருக்கைப் பண்ணையில் 302 உம்பளாச்சேரி இன கால்நடைகளையும் இத்துறை பராமரித்து வருகிறது.

அதேபோல, பர்கூர், ஆலம்பாடி மலைமாடு மற்றும் புலிக்குளம் ஆகிய நாட்டினங்களைப் பாதுகாப்பதற்காக தமிழ்நாடு கால்நடை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகத்தின் மரபியல் துறைமூலம் இவ்வினங்களைக் கணக்கெடுத்தல், குணாதிசயங்கள் மற்றும் பண்புகளைக் கண்டறிதல் ஆகிய ஆய்வுப் பணிகளை 9 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் இத்துறை மேற்கொண்டு வருகிறது.

கால்நடைப் பண்ணைகளில், தமிழ்நாடு வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ஒரு புதிய பண்ணைக் கொள்கையை இத்துறை உருவாக்கி வருகிறது. பல்வேறு உறுப்பினர்கள் பேசும்பொழுது அந்தக் கோரிக்கையை வைத்திருந்தார்கள். இதன்படி, கால்நடைப் பண்ணைகளில் கால்நடை இனங்களைப் பராமரிப்பதற்காகவும், பண்ணைகளிலுள்ள பரந்த நிலப் பரப்பில் நில அபிவிருத்தி மற்றும் தீவன அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்காகவும், கால்நடை இனங்களை அவற்றின் இருப்பிடங்களிலேயே பெருக்குவதற்காகவும் ஒவ்வொரு பண்ணையிலும் அதன் இருப்பிடத்திற்கு ஏற்றவாறு மரபுக் கலப்பைத் தவிர்க்கவும், மரபணுத் தூய்மையைப் பராமரிக்கவும் ஒன்று



அல்லது அதிகபட்சமாக இரண்டு இனங்கள் மட்டுமே பராமரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அதுபோல, பால் உற்பத்தியை அதிகப்படுத்துதல் மற்றும் மாடுகளின் தனிப்பட்ட உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான செயற்கை முறைக் கருவூட்டல் வசதியை அனைத்துப் பகுதிகளுக்கும் ஏற்படுத்துவதற்காகவும் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமைமூலம் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

முக்கியமாக, இந்த ஆண்டு மாநிலத்தில் 3,258 செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்கள்மூலம் 34,79,000 செயற்கை முறைக் கருவூட்டல்கள் செய்யப்பட்டன. இதன்மூலம் 12.01 இலட்சம் தரமான கன்றுகள் பிறந்துள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல, தமிழ்நாட்டில் சேலம், கோவை, நாமக்கல், ஈரோடு மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் இம்முகமைமூலம் பால் கறவை திறன்கொண்ட பசு மற்றும் எருமைகளுக்கு 50 சதவிகிதம் அரசு மானியத்துடன்கூடிய கால்நடை காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2007-2008-இல் 1,19,032 பசு மற்றும் எருமைகள் காப்பீடு செய்யப்பட்டன. 2008 மார்ச் இறுதிவரை, பயனாளிகளுக்கு ரூபாய் 2 கோடியே 8 இலட்சம் அளவில் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

ஆசியாவிலேயே கால்நடை மருத்துவத்திற்கான முதல் பல்கலைக்கழகம், 1989 ஆம் ஆண்டு தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகம் ஆகும். இப்பல்கலைக்கழகம் இக்கால 'நாலந்தாவாக' இந்தியாவிற்கே வழிகாட்டியாகத் திகழ்கிறது. இப்பல்கலைக்கழகம், கால்நடை மருத்துவர்களை உருவாக்குவதோடு மட்டுமல்லாமல் கால்நடை, கோழியின மற்றும் மீன் இனங்களுக்கு நுண்ணுயிரிகளால் ஏற்படக்கூடிய நோய்களைக் கண்டறித்ல், சிகிச்சை அளித்தல், அதற்குத் தடுப்பு மருந்துகள் கண்டுபிடித்தல், ஊட்டச் சத்துள்ள தீவனம் மற்றும் புதிய தொழில்நுட்பங்களைக் கண்டுபிடித்து, விவசாயிகளுக்கு அதை விரிவாக்கக் கல்விமூலம் பரப்புதல் ஆகிய பணிகளின்மூலம் சிறந்து விளங்குகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் இப்பல்கலைக்கழகம்மூலம் சுமார் 34,672 விவசாயிகளுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இப்பல்கலைக்கழகம், 964 வகையான அமெரிக்காவின் மெக்சிகன் நகரப் பல்கலைக்கழகத்தோடும், அமெரிக்க

வெர்ஜீனியா மேரிலேண்ட் மண்டலக் கால்நடை மருத்துவக் கல்லூரியோடும் இணைந்து 2007-இல் இரண்டு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. இந்த ஒப்பந்தங்களின்மூலம் ஆராய்ச்சி மற்றும் கல்வி தொடர்பாக ஆசிரியர்களும், மாணவர்களும் தகவல்கள் மற்றும் தொழில்நுட்பங்களைப் பரஸ்பர பரிமாற்றம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதுபோல, இப்பல்கலைக்கழகத்தில், E-Learning, E-Course என்னும் ஒரு புதிய மின்னணுக் கல்வித் தொகுப்பினை ஒரு கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவில் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் அனுமதி பெறப்பட்டு அதன் உதவியோடு செயல்படுத்த வழி செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் இந்தியாவிலுள்ள அனைத்து மாணவர்களும் இம்மின்னணுத் தொகுப்பினைக் கணினிமூலம் தொடர்பு கொண்டு கற்க வசதி செய்யப்பட்டுள்ளது.

*பிற்பகல் 2-05*

தற்சமயம் கால்நடை பராமரிப்புத் துறை சம்பந்தமாகப் புதிய அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிக்க விரும்புகிறேன்.

சிறந்த தரமான மருத்துவச் சேவை கிராமப்புறக் கால்நடைகளுக்கு வழங்குவதற்காகவும், பட்டம் பயின்ற கால்நடை மருத்துவர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திடும்வகையிலும், விவசாயிகளின் நலனில் அக்கறைகொண்ட தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள், கால்நடை ஆய்வாளர்களின் பதவிக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு, 888 நிலை-1 கால்நடை கிளை நிலையங்களைத் தரம் உயர்த்தி, கால்நடை மருத்துவர்களை, இளநிலை கால்நடை மருத்துவர்களாகப் பணியமர்த்திட உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதில், இந்த ஆண்டு 444 கிளை நிலையங்களைத் தரம் உயர்த்திட அனுமதி அளித்துள்ளார்கள் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கு பேசிய அனைத்து உறுப்பினர்களும் 2,000-க்கும் மேற்பட்ட காலியிடங்கள் உள்ளதாகக் கூறினார்கள். 5,000 கால்நடைகளுக்கு ஒரு மருத்துவ நிலையம் அமைக்க வேண்டுமென்றும் தரமான மருத்துவச் சேவை அளிக்கப்பட வேண்டுமென்றும் கோரிக்கை வைத்துள்ளார்கள். அதுபோல 8 கி.மீ.-க்குள் ஒரு மருந்தகம் என்ற விதியைத் தளர்வு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள். அதுபோல பி.வி.எஸ்.சி. படித்த மருத்துவர்களைக் கிளை நிலையத்தில் பணியமர்த்த வேண்டுமென்றும் கேட்டார்கள். ஆகவே, அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த அனைத்து உறுப்பினர்களின் கோரிக்கைகளை



நிறைவேற்றும்வண்ணமாக, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இந்த உத்தரவை நல்கியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கிராமப்புறப் பெண்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் 23 ஊராட்சி ஒன்றியங்களில் பரீட்சார்த்த முறையில் 345 மகளிருக்கு, மகளிர் ஒருவருக்கு 20 பெட்டை மற்றும் 1 கிடா வீதம் 7,245 செம்மறியாடுகள், 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 50 சதவிகித மானியத்துடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2008-2009 ஆம் ஆண்டில், தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் முதன்முறையாகத் தமிழ்நாட்டில், இன விருத்திக்கு உகந்த மாடுகளின் இருப்பிடங்களைக் கண்டறிவதற்காக, ஒரு கோடியே 57 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் 9 இலட்சம் மாட்டினங்களுக்குக் கணிப்பொறி உபயோகத் தனி எண் (unique number) கொண்ட அடையாளம் (tagging) இடப்படும். இதன்பயனாக, மாடுகளின் உடல் நலத்தைக் கண்காணிக்கவும், சினைப் பிடிப்பு விகிதத்தைக் கண்காணித்து உற்பத்தித் திறனை உயர்த்தவும், மற்றும் விவசாயிகள் பொருளாதார ரீதியாக அதிக பயனை அடையவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கிராமப்புற ஏழைப் பெண்களுக்கு வாழ்வாதாரத்தினை ஏற்படுத்தக்கூடிய வகையில், பரீட்சார்த்த முறையில், தூத்துக்குடி, இராமநாதபுரம், சிவகங்கை, திண்டுக்கல் மற்றும் புதுக்கோட்டை ஆகிய 5 மாவட்டங்களில் உள்ள 198 சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 2,970 மகளிருக்கு, 9 பெட்டைகள் மற்றும் ஒரு சேவல் கொண்ட புழக்கடை கோழி அலகுகளை, 15 இலட்சம் ரூபாய் செலவில், இலவசமாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

செம்மறியாடுகளைத் தாக்கி உயிரிழப்பை ஏற்படுத்தும் நீலநாக்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்காக, திருநெல்வேலி, தூத்துக்குடி, மதுரை, திண்டுக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் 15 இலட்சம் ரூபாய் செலவில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் புகைமூட்டக் கருவிகள் 5 வீதம், மொத்தம் 25 கருவிகள் வாங்கி, நோய்த் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள இந்த அரசு திட்டமிட்டுள்ளது.

அதுபோல, பசுந்தீவனம் வீணாவதைத் தவிர்க்கும்பொருட்டு, திண்டுக்கல், தூத்துக்குடி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் ஈரோடு மாவட்டங்களில், ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு புல் வெட்டும் கருவி வீதம் 60 கறவை மாடுகள் வளர்க்கும் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ஆறு இலட்சம் ரூபாய் செலவில் புல் வெட்டும் கருவி இலவசமாக வழங்கப்படவுள்ளது.

பறவைக் காய்ச்சல் நோயைக் கட்டுப்படுத்தி, அதைக் கட்டுப்பாட்டுக்குள் வைப்பதற்காக, மத்திய அரசு நிதி 85 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய் உதவியுடன் நம்முடைய கால்நடை மருத்துவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

தற்போது, நாமக்கல் (ஆண்டகலூர் கேட்) மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் உள்ள கோழியின நோய் கண்டறியும் ஆய்வுக் கூடங்களையும், உலக வங்கி உதவியுடன் உயிர்காப்பு நிலை-2 தரத்திற்கு உயர்த்த, மைய அரசு 44 இலட்சம் ரூபாய் நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல, கன்னியாகுமரி மற்றும் வேலூர் மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து நடமாடும் கால்நடை மருந்தகங்கள், தக்கலை மற்றும் குடியாத்தம் பகுதிகளில் தொடங்கப்படவுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகத்திற்குச் சுமார் 74 இலட்சம் ரூபாய் செலவில், அம்மை நோய் மற்றும் கருச்சிதைவு நோய் போன்ற நோய்களை ஆராய்ந்து அவற்றிற்குத் தடுப்பூசி கண்டுபிடிப்பதற்காகவும், கடல்வாழ் உயிரினங்களிலிருந்து மருந்தாகப் பயன்படும் உயிர் வேதிப் பொருட்களைத் தயாரிக்கவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அதுபோல, தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகத்தின்மூலமாக, ஒரு முன்னோடித் திட்டமாக, வேலூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும், 500 வெள்ளாடுகள் வீதம் இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் அவற்றின் மரபுவழித் தரம் உயர்த்த, செயற்கைமுறைக் கருவூட்டல் பணி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



அதுபோல, மாநிலத்தில் சந்தை மேம்பாடுகள் குறித்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்கள் எல்லாம் கொடுத்திருந்தார்கள். ஆகவே, இந்த ஆண்டு, மாநிலத்தில் உள்ள 263 கால்நடை சந்தைகளில், 1,000-க்கு மேற்பட்ட கால்நடைகள் விற்பனை செய்யப்படும் 105 சந்தைகளைத் தேர்ந்தெடுத்து, உலக வங்கி நிதியுதவியுடன் கால்நடை கொட்டகைகள் கட்டுதல், சாய்தள மேடை, முதலுதவி நிலையங்கள் கட்டுதல் மற்றும் தண்ணீர்த் தொட்டிகள் கட்டுதல் ஆகிய பணிகள்மூலம் 105 சந்தைகளை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு, கால்நடை பராமரிப்புத் துறை முன்னேற்றம் மற்றும் செயல்பாட்டில் என்னோடு உறுதுணையாக இருந்து பணியாற்றிவரும் அரசுச் செயலர் செல்வி லீனா நாயர், இ.ஆ.ப. அவர்களுக்கும், ஆணையர் திரு. சம்பத், இ.ஆ.ப. அவர்களுக்கும், பிற அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-10

இறுதியாக, 'வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்' என்ற தலைவர் கலைஞர் அவர்களின் கூற்றுக்கிணங்க, தலைவர் கலைஞர் பின்னே அணி வகுப்போம், தமிழ் இனத்தைக் காப்போம், ஒற்றுமையை வளர்ப்போம் (மேசையைத் தட்டும் ஒலி) என்று உறுதியிட்டுக் கூறி, மாண்புமிகு உறுப்பினர்கள் அரிய கருத்துகளை எடுத்து வைத்துள்ளார்கள்; பேசிய உறுப்பினர்களுக்கெல்லாம் நான் பதில் வைத்திருக்கிறேன்; ஆனால் எல்லோரும் பசி என்றும், நேரம் ஆயிற்று என்றும் கூறுவதால் இத்துடன் முடிக்க விரும்புகிறேன். அநேகமாக அனைவருடைய கோரிக்கைகளுக்கும் பதில் அளித்து உள்ளேன் என்று எண்ணுகிறேன். உங்களுடைய மேலான கருத்துகளையும், நல்ல ஆலோசனைகளையும் கவனத்தில்கொண்டு, தொடர்ச்சியாக இத்துறை மென்மேலும் சிறக்க, இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள 344 வெட்டுத் தீர்மானங்களையும் திரும்பப் பெற்றுக்கொண்டு, கால்நடை பராமரிப்புத் துறை மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டு அமைகிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004 ஆம் ஆண்டு, சுனாமி ஆழிப் பேரலை தமிழகக் கடற்கரையோரத்தைத் தாக்கியபோது, மீனவர்களுடைய மறுவாழ்வுக்காகப் பல்வேறு திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்தியதில், அதிலே இருப்பிடம் மிக மிக முக்கியமாக இருக்கின்ற ஒரு சூழ்நிலையில், அந்த இருப்பிடம் கட்டுவதற்குத் தேவையான அரசாணைகள், அதேபோன்று நிதி உதவிகள் எல்லாம் அளிக்கப்பட்டு, 2004 டிசம்பர் என்று சொல்லும்போது, 2006 ஆம் ஆண்டு மே மாதம் வரையில், ஒன்றரை வருட காலத்தில் 8,000 வீடுகள் அந்தக் காலத்திலே கட்டி முடிக்கப்பட்டன. ஆனால் அன்றைக்கு அரசாணை போடப்பட்டு, அதன் தொடர்ச்சியாக நிதியும் ஒதுக்கப்பட்ட சூழ்நிலையில்தான் உங்களுடைய ஆட்சி, அதை continue செய்கின்ற ஒரு நிலையிலே நீங்கள் ஒரு கணக்கைக் காண்பிக்கின்றீர்கள். எனவே, நான் தெரிந்துகொள்ள விரும்புவது, தெளிவாக, உங்கள் அரசு பொறுப்பேற்றவுடன் எத்தனை அரசாணைகள் வீடு கட்டுவதற்குப் போட்டீர்கள்? உடைமை உரிமை மாற்றம் -- நிலவுடைமை உரிமை மாற்றம் செய்து எத்தனை வீடுகள் கட்டினீர்கள்? உதாரணத்திற்கு எங்களுடைய வட சென்னைப் பகுதியை எடுத்துக்கொண்டால், H.L.L. பகுதி— Hindustan Lever Limited பகுதிக்குச் சொந்தமான நிலத்திலே பல மாடிக் கட்டடம் பல கோடி ரூபாயிலே கட்டினோம். அதேபோன்று என்னுடைய தொகுதியிலே கிட்டத்தட்ட 5 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் 590 குடியிருப்புகளைக் கட்டினோம். அதேபோல, எண்ணூர் பகுதியிலே கட்டினோம். அதையெல்லாம்கூட நீங்கள் கணக்கிலே சேர்த்து 28,000 என்று சொன்னால் அது ஏற்றுக்கொள்ளக்கூடிய விஷயம் அல்ல. எனவே, அரசாணை எப்போது போடப்பட்டது; எப்போது நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது; எப்போது பணிகள் ஆரம்பிக்கப்பட்டன; எப்போது அந்த நிலவுடைமை உரிமை மாற்றம் எல்லாம் செய்யப்பட்டது என்பது குறித்துச் சொன்னால் அது நலமாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எப்போது முடிப்பீர்கள்? (சிரிப்பு)

**திரு. டி. ஜெயக்குமார்:** அதே நேரத்திலே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, 2004 டிசம்பர் மாதம் 26 ஆம் தேதி வீசிய அந்த சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கடந்தகால ஆட்சியிலே நீங்கள் என்ன செய்தீர்களோ, அதைத் தொடர்ந்து இந்த ஆட்சியில் இன்னும் கொஞ்சம் வேகமாகச் செய்தோம்; அவ்வளவுதான்! (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேகமாகத்தான் நடக்கிறது எல்லாம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 6 - கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 6- கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.250,40,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.33,11,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

**(ஆ) கோரிக்கை எண் 7 - மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 7 - மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.100,53,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.20,19,45,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

**(இ) கோரிக்கை எண் 8 - பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 8 - பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)



வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.32,69,98,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.36,13,89,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பிற்பகல் 2-15

## 7. அறிவிப்பு

### பேரவைத் தலைவரின் மே தின வாழ்த்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பத்திரிகை, தொலைக்காட்சி நண்பர்கள், தொழிலாளர் நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் மே தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் (5-5-2008) திங்கட்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-15 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

[2008 ஏப்ரல் 30

# 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*53. 2006-2007* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*154.* மானியக் கோரிக்கை எண் 6-கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2008-2009*. (தமிழ், ஆங்கிலம்)

*155.* கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், *2008-2009*. (தமிழ், ஆங்கிலம்)

*156.* மானியக் கோரிக்கை எண் 7-மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2008-2009*. (தமிழ், ஆங்கிலம்)

*157.* மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், *2008-2009*. (தமிழ், ஆங்கிலம்)

*158.* மானியக் கோரிக்கை எண் 8-பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2008-2009*. (தமிழ், ஆங்கிலம்)

*159.* வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தின்போது மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2008-2009*. (தமிழ்)

*160.* பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2008-2009*. (தமிழ்)



2008 ஏப்ரல் 30]

*161.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்றேழாவது அறிக்கை. *(2007-2008)*

*162.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்றெட்டாவது அறிக்கை. *(2007-2008)*

*163.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்றொன்பதாவது அறிக்கை. *(2007-2008)*

*164.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்றுப் பத்தாவது அறிக்கை. *(2007-2008)*

*165.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்றுப் பதினொன்றாவது அறிக்கை. *(2007-2008)*

*166.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்றுப் பன்னிரண்டாவது அறிக்கை. *(2007-2008)*

*167.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்றுப் பதின்மூன்றாவது அறிக்கை. *(2007-2008)*

*168.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்றுப் பதினான்காவது அறிக்கை. *(2007-2008)*

*169.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்றுப் பதினைந்தாவது அறிக்கை. *(2007-2008)*

*170.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்றுப் பதினாறாவது அறிக்கை. *(2007-2008)*

*171.* பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்றேழாவது அறிக்கை. *(2007-2008)*

## இணைப்பு I

*(386 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 6—கால்நடை பராமரிப்புத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009

**முன்னுரை**

கால்நடை பராமரிப்பு இந்தியப் பொருளாதாரத்தில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. கால்நடைகள், கிராமப்புற மக்களின் வாழ்க்கையில் இன்றியமையாத பங்காற்றி வருகின்றன. கால்நடைகள் மற்றும் கோழிகளின் உற்பத்தித் திறன் அதிகரித்த காரணத்தால் கால்நடை வளர்ப்பு, பொருளாதார ரீதியில் இலாபகரமானதாகவும், வருமானம் அளிப்பதாகவும் உள்ளது. இதன்மூலம் உப தொழிலாக இருந்துவந்த கால்நடை பராமரிப்பானது, தற்பொழுது பெரும்பாலான கிராமப்புற ஏழை வேளாண் குடிமக்களுக்கு வருவாய் ஈட்டும் முக்கிய மூலாதாரமாக மாறியுள்ளது. கால்நடை பராமரிப்புத் துறையானது, வரையறுக்கப்பட்ட இனவிருத்திக் கொள்கைகள் மூலமாக மரபியல் முன்னேற்றம், உயர் ரக சத்துமிக்க பசுந்தீவனம் அளித்தல், நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சைமூலம் கால்நடைகளின் உடல் நலம் காக்கப்படுதல் ஆகியவற்றின்மூலமாகக் கால்நடை மேம்பாட்டில் பல திட்டங்களை நடைமுறைபடுத்தி வருகிறது.

கால்நடை மருத்துவப் பணிகளின் தரத்தினை உயர்த்தும் பொருட்டு காலியாக உள்ள அனைத்துப் பணியிடங்களையும் நிரப்புவதற்கு இத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. 2007-2008 ஆம் ஆண்டில், இத்துறை 245 கால்நடை உதவி மருத்துவர்களைப் பணிக்கு அமர்த்தி கால்நடைகளுக்கும் விவசாயிகளுக்கும் சிறந்த மருத்துவ சேவை கிடைக்க உறுதி செய்துள்ளது. கால்நடை மருத்துவ வசதி சென்றடையாத தொலைவில் உள்ள விவசாயிகளின் கால்நடைகளுக்கு, 55 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் சேவை செய்து

[2008 ஏப்ரல் 30

வருகின்றன. மேலும் மாநிலம் முழுவதும் பரவியுள்ள 20 கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவுகள், நோய்ப் பரவலை முறையாகக் கண்காணித்து அவற்றைக் கண்டறிந்து கட்டுப்படுத்தி ஒடுக்க, உடனடி நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன.

தேசிய பொருளாதாரம் மற்றும் குடும்பத்தின் உணவுப் பாதுகாப்பில் போற்றத்தகும் வகையில் பங்களிப்பதன்மூலம் கால்நடை பராமரிப்புப் பிரிவின் முன்னேற்றமானது பிரதிபலிக்கிறது. மாநிலத்தின் மதிக்கத்தக்க மொத்த விளைவில் கால்நடைகள் ரூ. 9,654.33 கோடியை அளித்துள்ளது. மொத்த மாநில உள்நாட்டு உற்பத்திக்கு 2.62 சதவீதத்தையும், வேளாண்மை மற்றும் சார்புத் தொழில்களுக்கு 23.50 சதவீதத்தையும் கால்நடைப் பிரிவு பங்காக அளித்துள்ளது. இக்குறிப்பிட்ட வளர்ச்சிக்கு கால்நடை மற்றும் கோழிப் பிரிவுகள் முக்கியப் பங்கு வகித்துள்ளன. மாநிலத்தில் பால் மற்றும் முட்டை உற்பத்தி முறையே 55.60 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும், 8,044 மில்லியனாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இதைப்போன்று ஒரு நபருக்கு ஒரு நாளைக்குக் கிடைக்கும் பாலின் அளவு 234 கிராமாகவும், ஒரு ஆண்டுக்குக் கிடைக்கும் முட்டைகளின் எண்ணிக்கை 123 ஆகவும் உள்ளது. தமிழ்நாடு, நாட்டின் மொத்த பால் உற்பத்தியில் 5.5 சதவீதத்தையும், முட்டை உற்பத்தியில் 16 சதவீதத்தையும் பங்களிப்பாகக் கொண்டு, பால் உற்பத்தியில் 8-வது இடத்திலும், முட்டை உற்பத்தியில் 2-வது இடத்திலும் உள்ளது.

**பொது நிருவாகம்**

கால்நடை பராமரிப்புத் துறையானது, கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையர் அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. ஆணையரகத்தில், 3 கூடுதல் இயக்குநர்கள் மற்றும் ஓர் இணை இயக்குநர் ஆகியோர், வெவ்வேறு தொழில்நுட்பத் துறைப் பணிகளில், ஆணையர் அவர்களுக்கு உதவி புரிந்து வருகின்றனர். மாநிலம் 25 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றும் ஒரு மண்டல இணை இயக்குநரின் தலைமையிலும், மற்றும் 65 நிருவாகக் கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஓர் உதவி இயக்குநரின் தலைமையின்கீழ் நிருவகிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் தங்களது ஆளுகையின்கீழ் உள்ள பகுதிகளில் துறை நடவடிக்கைகளுக்கு முழுப் பொறுப்பு ஆவார்கள்.



2008 ஏப்ரல் 30]

2007-08 ஆம் ஆண்டில், துறை நிருவாகத்தை மேம்படுத்திட கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன:

- கால்நடை பராமரிப்புத் துறையின் செயல்பாட்டை வலுப்படுத்துவதற்காக, 245 கால்நடை உதவி மருத்துவர்கள் புதியதாகப் பணியமர்த்தப்பட்டனர்.
- 4 ஆராய்ச்சி உதவியாளர்கள் உதவி ஆராய்ச்சி அலுவலர்களாக, 4 உதவி ஆராய்ச்சி அலுவலர்கள் ஆராய்ச்சி அலுவலர்களாக, 14 உதவி இயக்குநர்கள் துணை இயக்குநர்களாக, 19 துணை இயக்குநர்கள் இணை இயக்குநர்களாக, 3 இணை இயக்குநர்கள் கூடுதல் இயக்குநர்களாக, 1 முதுநிலை ஆராய்ச்சி அலுவலர், இராணிப்பேட்டை, கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலைய இயக்குநராகவும், ஆக மொத்தம் 45 தொழில்நுட்ப அலுவலர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. ஒரு நிர்வாக அலுவலருக்கு துணை இயக்குநராகவும் (பணியாளர்), 5 மேலாளர்களுக்கு நிர்வாக அலுவலகர்களாகவும் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. மேலும், 66 சார்பு தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் 86 அமைச்சுப் பணியாளர்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டது.
- 7 தட்டச்சர்கள், 37 கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள், 15 இளநிலை உதவியாளர்கள், 2 பதிவறை எழுத்தர்கள், 7 ஆய்வுக்கூட உடனாள் மற்றும் 1 மின்னாளர் ஆக மொத்தம் 69 பணியாளர்கள் புதியதாகப் பணியமர்த்தப்பட்டனர்.
- 425 நபர்களைத் தேர்ந்தெடுத்து கால்நடை ஆய்வாளர் பயிற்சி அளிக்க அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதில் 110 நபர்கள் கருணை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு மாவட்ட கால்நடைப் பண்ணை, ஒசூரில் பயிற்சிக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.
- சிறந்த நிருவாகத்தினைக் கருத்தில் கொண்டு நாமக்கல் மாவட்டத்தில், ஒரு புதிய மண்டல இணை இயக்குநர் அலுவலகம் ரூ. 3.42 இலட்சத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.
- 79 துறை அலுவலர்களின் ஆற்றலை மேம்படுத்திட, நாட்டின் பல்வேறு நிலையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டது.
- கால்நடை மருத்துவர்களுக்கு ரூ. 18.10 இலட்சம் நிதி செலவில் 385 அலைபேசிகள் வழங்கப்பட்டுள்ளன.

[2008 ஏப்ரல் 30

**தீவனம் மற்றும் பசுந்தீவனம்**

கால்நடைகளின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் தீவனம் மற்றும் பசுந்தீவனம் பெரும் பங்கு வகிக்கிறது. கால்நடை பராமரிப்பு, பொருள்ாதார ரீதியாக வெற்றி பெறுவதில் தீவனம் மற்றும் பசுந்தீவனம் ஆகியவற்றின் பங்களிப்பு இன்றியமையாதது. ஏனெனில், கால்நடைப் பண்ணையின் மொத்தச் செலவினத்தில் தீவனச் செலவு 65-70 விழுக்காடாக அமைகிறது. மேலும் கால்நடைகளின் திறனை மேம்படுத்த போதிய தீவனம் மற்றும் பசுந்தீவனம் வழங்குவது இன்றியமையாததாகும். மாநிலத்தில் உள்ள மொத்த மாட்டினத்திற்கு ஒரு வருடத்திற்கு 166.80 இலட்சம் மெட்ரிக் டன்கள் உலர்தீவனமும், 500.52 இலட்சம் மெட்ரிக் டன்கள் பசுந்தீவனமும் தேவைப்படுகிறது. 1.103 இலட்சம் ஹெக்டேர் நிலம், நிரந்தரப் புல்வெளிகளாகவும் மற்றும் இதர மேய்ச்சல் நிலங்களாகவும் உள்ளன. இது மாநிலத்திலுள்ள மொத்த நிலப்பரப்பில் 0.8 சதவீதமாகும்.

**2007-2008 ஆம் ஆண்டில் நாட்டின் பசுந்தீவன இருப்பு**

| | உலர் தீவனம் (இலட்சம் மெட்ரிக் டன்) | பசுந்தீவனம் (இலட்சம் மெட்ரிக் டன்) |
|---|---|---|
| தேவை | 166.80 | 500.52 |
| கிடைக்கும் அளவு | 171.628 | 385.823 |
| பற்றாக்குறை அளவு | சாதாரண பருவ காலத்தில் போதுமானதாக உள்ளது | 114.697 |
| பற்றாக்குறை சதவீதம் | இல்லை | 22.92 |

பசுந்தீவன உற்பத்தி, உணவு சங்கிலியில் அத்தியாவசிய இணைப்பாக இருந்த போதிலும், இன்றும் வேளாண்மை உற்பத்திக்கு துணையானதாகவே கருதப்படுகிறது. கால்நடை வளர்ப்பு, மனிதனுக்குத் தேவைப்படாத வைக்கோல், கதிர், அரிசி தவிடு, சிறு சிறு தானியக் குறுணைகள், எண்ணெய் வித்துக்கள்மூலம் கிடைக்கும் பிண்ணாக்கு மற்றும் பருத்திக் கொட்டை போன்றவற்றைச்



2008 ஏப்ரல் 30]

சார்ந்துள்ளது. ஊட்டச் சத்து குறைவாக உள்ள, அறுவடைக் கழிவுகளான சோளத் தட்டை மற்றும் வைக்கோல், பசுக்கள் மற்றும் எருமைகளுக்குப் பெரும்பான்மை உணவாக அமைந்துள்ளன. கால்நடைகளுக்குத் தேவையான பசுந்தீவனமானது, புல்வெளிகள், மேய்ச்சல் நிலங்கள், சாகுபடி செய்யப்பட்ட நிலங்களில் வளரும் பசுந்தீவனப் பயிர்கள், களைகள், வரப்பிலுள்ள புற்கள், மர இலைகள் மற்றும் கலப்புத் தீவனப் பயிர்கள்மூலமாகவும் கிடைக்கின்றன. பசுந்தீவனம் குறிப்பிட்ட பருவ காலங்களில், குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே கிடைக்கின்றது

மேய்ச்சல் நிலங்களை எந்தவித வேற்றுமையுமின்றி வேறு வகையான நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதால் அவை தரங் குறைந்து போவதுடன், வெறுமையாய்ப் போவதைத் தவிர்க்கும் பொருட்டு, மேய்ச்சல் நிலத்தை வேறு எந்த வகையான பயன்பாட்டிற்கும் மாற்றக் கூடாது என்றும், அவ்வாறு மாற்ற வேண்டுமெனில், அதே மாவட்டத்தில், மாற்றப்படும் மேய்ச்சல் நிலத்திற்குச் சமமான பரப்பளவுள்ள வேறு நிலத்தை மேய்ச்சல் நிலமாக மேம்படுத்தி ஒதுக்கப்பட்டாலன்றி மாற்றக் கூடாது என்ற நிபந்தனையை அரசு விதித்துள்ளது. நிலமற்ற மற்றும் ஏழை விவசாயக் குடும்பங்களைக் கால்நடை பராமரிப்புப் பணிகளில் ஈடுபடுத்த, சமுதாய தீவன மற்றும் பசுந்தீவன வங்கிகளை உள்ளூர் சுய உதவிக் குழுக்களின் உதவியுடன் ஏற்படுத்தி தீவன வசதிகளைப் பெருக்க ஊக்குவிக்கப்படுகிறது. நீண்ட கால பசுந்தீவன வகையைச் சார்ந்ததும் அதிக மகசூல் அளிக்கக்கூடியதுமான நேப்பியர், உயர் ரக கோ-1, கோ-3, பாரா புல் மற்றும் கினியா புல் வகை ஆகியவற்றைப் பயிரிட ஊக்குவிக்கப்படுகிறது. காராமணிப் பயறு வகை, ஸ்டைலோ சாந்தஸ், கோ-3 புல் வகைகளை, தென்னை மற்றும் மாந்தோப்புகளிடையே ஊடுபயிராக விளைவிக்க ஊக்குவிக்கப்படுகிறது. தீவன விதைகள் அடங்கிய சிறு பைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. 2007-2008ஆம் ஆண்டில் காரிப் மற்றும் ராபி பருவங்களில் முறையே 8,546 மற்றும் 10,500 பலதரப்பட்ட பசுந்தீவன விதைகள் அடங்கிய விதைப் பைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

இத்துறையில் தீவன விதைகள் மற்றும் புல் கரணைகள் படப்பை விதைப் பண்ணையிலும், மாவட்ட கால்நடைப் பண்ணைகளான ஓசூர், செட்டிநாடு, அபிஷேகப்பட்டி, ஈச்சங்கோட்டை, ஒரத்தநாடு

[2008 ஏப்ரல் 30

மற்றும் உதகமண்டலத்திலும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தப் பண்ணைகளிலிருந்து ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு, தீவன உற்பத்தியினைப் பெருக்க புல் கரணைகள் விநியோகம் செய்யப்படுகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் 71.98 இலட்சம் புல் கரணைகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

பசுந்தீவனம் கிடைப்பதை அதிகரிக்கும் பொருட்டு, மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 8 மாவட்டங்களில் 1,224 ஏக்கர் நிலம், பசுந்தீவன சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. இதுதவிர, தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ், முதல் கட்டமாக 9 உப வடிநிலப் பகுதிகளில் 1,925 ஏக்கர் நிலமும் சாகுபடிக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

மேலும், அரசின் பல்வேறு திட்டங்களின்கீழ், மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் 4,261 ஏக்கர் நிலத்தையும், விவசாயிகளின் 3,275 ஏக்கர் நிலத்தையும், தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ், 14 உப வடிநிலங்களில், 1,450 ஏக்கர் நிலத்தையும், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 400 ஏக்கர் நிலத்தையும் சாகுபடிக்குக் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் 2008-2009 ஆம் ஆண்டு, 1.50 இலட்சம் மெட்ரிக் டன் தீவனம் கூடுதலாக உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கால்நடை அபிவிருத்தி

### கால்நடைகள் மற்றும் கோழிகள் எண்ணிக்கை

கால்நடைகளின் குறுகிய வாழ்க்கையைக் கருத்தில் கொண்டு கால்நடைகள், கோழிகள், வேளாண் உபகரணங்கள் மற்றும் மீன் வளம் பற்றிய கணக்கெடுப்பு 1951 முதல் ஐந்தாண்டுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது. 18-வது ஐந்தாண்டு கால்நடைகள் மற்றும் கோழிகள் கணக்கெடுப்பு முடிக்கப்பட்டு, சேகரிக்கப்பட்ட புள்ளிவிவரங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றன. மைய அரசின் ஒப்புதலுடன் அது விரைவில் வெளியிடப்படும். இத்துறையால் 2003-2004ஆம் ஆண்டில் 17-வது கால்நடை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. 17-வது கால்நடை மற்றும் கோழியினக் கணக்கெடுப்பின்படி, மாநிலத்தில் கால்நடைகள் மற்றும் கோழிகளின் இன வாரியான எண்ணிக்கை, முந்தைய கணக்கெடுப்புடன் ஒப்பீட்டு விழுக்காடு மற்றும் அடர்த்தி விவரம் கீழ்வருமாறு:



2008 ஏப்ரல் 30]

| இனம் | எண்ணிக்கை | அடர்த்தி (ஒரு ச.கி.மீ-க்கு) | முந்தைய கணக்கெடுப்புடன் ஒப்பிடுகையில் கூடுதல்/குறைவு |
|---|---|---|---|
| பசுவினம் | 91,41,043 | 70 | 1.04 % |
| எருமையினம் | 16,58,415 | 13 | (-)39.51 % |
| செம்மறியாடுகள் | 55,93,485 | 43 | 6.35 % |
| வெள்ளாடுகள் | 81,77,420 | 63 | 27.45% |
| பன்றிகள் | 3,20,868 | 2 | (-)47.29% |
| இதரவை | 50,798 | 1 | (-)5.56 % |
| மொத்த கால்நடைகள் | 2,49,42,029 | 192 | 3.38% |
| மொத்த கோழிகள் | 8,65,91,273 | 666 | 137.16% |

2004 கணக்கெடுப்பின் சில முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

- கால்நடைகளின் எண்ணிக்கை 1997 ஆம் ஆண்டில் 241.26 இலட்சமாக இருந்தது. 2004 ஆம் ஆண்டில் 3.38 சதவீதம் அதிகரித்து 249.42 இலட்சத்தை எட்டியுள்ளது.
- கோழி இனங்களின் எண்ணிக்கை 1997 ஆம் ஆண்டில் 365.11 இலட்சமாக இருந்தது. 2004 ஆம் ஆண்டில் 137.16 சதவீதம் என்ற கணிசமான அளவு அதிகரித்து 865.91 இலட்சத்தை எட்டியுள்ளது.
- மொத்த கறவைப் பசுக்களின் எண்ணிக்கையில் 1997 ஆம் ஆண்டில் 28.67 சதவீதமாக இருந்த கலப்பினக் கறவைப் பசுக்களின் பங்கு 2004 ஆம் ஆண்டில் 63.15 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- செம்மறியாடுகளின் எண்ணிக்கை 1997 ஆம் ஆண்டில் 52.59 இலட்சமாக இருந்தது. 2004 ஆம் ஆண்டில் 6.35 சதவீதம் அதிகரித்து 55.93 இலட்சத்தை எட்டியுள்ளது.

[2008 ஏப்ரல் 30

- வெள்ளாடுகளின் எண்ணிக்கை 1997 ஆம் ஆண்டில் 64.16 இலட்சமாக இருந்தது. 2004 ஆம் ஆண்டில் 27.45 சதவீதம் அதிகரித்து 81.77 இலட்சத்தை எட்டியுள்ளது.
- எருமைகளின் எண்ணிக்கை 1997 ஆம் ஆண்டில் 27.41 இலட்சமாக இருந்தது. 2004 ஆம் ஆண்டில் 16.58 இலட்சமாகக் குறைந்துள்ளது.
- பன்றிகளின் எண்ணிக்கை 1997 ஆம் ஆண்டில் 6.09 இலட்சமாக இருந்தது. 2004 ஆம் ஆண்டில் 3.21 இலட்சமாகக் குறைந்துள்ளது. இது 47.29 சதவீதம் குறைவாகும்.

**கால்நடைப் பண்ணைகள்**

தேர்ந்தெடுக்கப்பட்ட தரமான அறிவியல் பூர்வமான இனப்பெருக்கம்மூலம் குறிப்பிட்ட இனக் கால்நடைகளை உற்பத்தி செய்யும் பொருட்டு கால்நடைப் பண்ணைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பண்ணைகள் செயல் விளக்கப் பண்ணைகளாகவும், பயிற்சி மையங்களாகவும், தரமான கால்நடைகளைத் தேவையான விவசாயிகளுக்கு வழங்குகின்ற ஆதாரமாகவும் செயல்பட்டு வருகின்றன. மாநிலத்தில் 11 கால்நடைப் பண்ணைகள் உள்ளன. அவற்றில் 3 ஆட்டுப் பண்ணைகளாகும். இத்துடன், கோழி இனப்பெருக்கம் மேற்கொள்ள தனியாக ஒரு பண்ணை உள்ளது.

**புதிய பண்ணைக் கொள்கை**

11 கால்நடைப் பண்ணைகளில் கால்நடை இனங்களைப் பராமரிப்பதற்காகவும், 11 பண்ணைகளில் பரந்த நிலப்பரப்பில், நில அபிவிருத்தி மற்றும் தீவன அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்காகவும், தமிழ்நாடு அரசு ஒரு புதிய பண்ணைக் கொள்கையை உருவாக்கி வருகிறது. இதற்காக கால்நடை இனங்களை அவற்றின் இருப்பிடங்களிலேயே பெருக்குவதற்காக ஒவ்வொரு பண்ணையிலும் அதன் அமைவிடத்திற்கு ஏற்றவாறு மரபு கலப்பைத் தவிர்க்கவும், மரபணு தூய்மையைப் பராமரிக்கவும் ஒன்று அல்லது அதிகபட்சமாக இரண்டு இனங்கள் மட்டுமே பராமரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளன.

இதற்காக உள்ளூர் மற்றும் பெருகிவரும் கால்நடை சந்தையின் தேவைகள் கருத்தில் கொள்ளப்படும். மாநிலக் கால்நடைப் பண்ணைகளின் மூலமாக விவசாயிகளுக்கு இனவிருத்திக்காகக் காளைகளை இயன்ற அளவுக்கு உற்பத்தி செய்து விற்பனை



2008 ஏப்ரல் 30]

செய்வதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். இது தவிர, எல்லா பண்ணைகளிலும் கிடைக்கும் இடத்தைப் பயன்படுத்தி நில அபிவிருத்தி செய்து, தொழில்நுட்பச் செயல் விளக்கத்திற்காகவும், விவசாயிகள் அதிக இலாபம் ஈட்டுவதற்காக தங்களது நிலங்களில் மாற்றுப் பயிர் செய்ய அறிவுறுத்தவும், மாநிலத்தில் விநியோகம் செய்யப்படும் தீவனத்தின் தரத்தையும் அளவையும் அதிகரிக்கும் பொருட்டு தேவையான கரணைகள் மற்றும் விதைகளை விநியோகம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மாவட்டக் கால்நடைப் பண்ணைகளிலுள்ள அனைத்து வள ஆதாரங்களை அதிக அளவு பயன்படுத்தும் முயற்சியாக, கால்நடை அலகுகளின் எண்ணிக்கையை விரிவுபடுத்துதல், பண்ணைகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் பசுந்தீவனம் / தீவன விதைகள் உற்பத்திக்காக அதிகபட்ச நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவருதல் போன்றவை மேற்கொள்ளப்படும். இதன்மூலம் அனைத்துப் பண்ணைகளும் மிகச் சிறந்த உபயோகத்திற்கு உட்படுத்தப்படும்.

எதிர்காலத்தில் துறைப் பண்ணைகளில் பராமரிக்கப்படும் கால்நடை இனங்கள் பின்வருமாறு:

| வ. எண் | பண்ணையின் பெயர் | பராமரிக்க திட்டமிடப்பட்டுள்ள இனங்கள் | |
|---|---|---|---|
| 1 | அயலினக் கால்நடை பெருக்குப் பண்ணை, ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்) | மாட்டினம் | - ஜெர்சி, ஜெர்சி கலப்பினம், உம்பளாச்சேரி, முர்ரா |
| 2 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒசூர் (கிருஷ்ணகிரி மாவட்டம்) | மாட்டினம் | - ஜெர்சி கலப்பினம், ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினம், ஜெர்சி, சிகப்பு சிந்தி, காங்கேயம் |
| | | செம்மறியாடு | - மேச்சேரி, திருச்சி கருப்பு |
| | | வெள்ளாடு | - கொடியாடு, தலைச்சேரி |
| | | பன்றியினம் | - லார்ஜ் ஒய்ட் யார்க்ஷயர் |
| | | கோழியினம் | - கிரிராஜா, அசில், வெள்ளை லெக்கார்ன், வான்கோழி |
| | | குதிரையினம் | - கத்தியவார், தாரோ இனம் |

[2008 ஏப்ரல் 30

| வ. எண் | பண்ணையின் பெயர் | பராமரிக்க திட்டமிடப்பட்டுள்ள இனங்கள் |
|---|---|---|
| 3 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, அபிஷேகப்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்) | மாட்டினம் - ஜெர்சி கலப்பினம், சாகிவால்<br>செம்மறியாடு - கீழகரிசல்<br>பன்றியினம் - லார்ஜ் ஒய்ட் யார்க்ஷயர், லேண்ட்ரேஸ், லேண்ட்ரேஸ் கலப்பினம்<br>கோழியினம் - நந்தனம் கலர் பிராய்லர் |
| 4 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்) | மாட்டினம் - ஜெர்சி, ஜெர்சி கலப்பினம், ஹோல்ஸ்டீன் பிரிசியன், ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினம் |
| 5 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்) | மாட்டினம் - ஜெர்சி கலப்பினம்<br>செம்மறியாடு - இராமநாதபுரம் வெள்ளை<br>வெள்ளாடு - ஜமுனாபாரி<br>பன்றியினம் - லேண்ட்ரேஸ் |
| 6 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒரத்தநாடு (தஞ்சாவூர் மாவட்டம்) | எருமையினம் - முர்ரா<br>பன்றியினம் - லார்ஜ் ஒய்ட் யார்க்ஷயர் |
| 7 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, செட்டிநாடு (சிவகங்கை மாவட்டம்) | மாட்டினம் - ஜெர்சி கலப்பினம், தர்பார்க்கர்<br>செம்மறியாடு - இராமநாதபுரம் வெள்ளை<br>வெள்ளாடு - ஜமுனாபாரி<br>பன்றியினம் - லார்ஜ் ஒய்ட் யார்க்ஷயர் |
| 8 | கால்நடைப் பண்ணை, கொருக்கை (திருவாரூர் மாவட்டம்) | மாட்டினம் - உம்பளாச்சேரி |
| 9 | ஆட்டுப் பண்ணை, சின்னசேலம் (விழுப்புரம் மாவட்டம்) | செம்மறியாடு - மேச்சேரி, சென்னை சிகப்பு<br>வெள்ளாடு - தலைச்சேரி, சேலம் கருப்பு |
| 10 | ஆட்டுப் பண்ணை, முகுந்தராயபுரம் (வேலூர் மாவட்டம்) | செம்மறியாடு - சென்னை சிகப்பு |
| 11 | ஆட்டுப் பண்ணை, சாத்தூர் (விருதுநகர் மாவட்டம்) | செம்மறியாடு - வேம்பூர்<br>வெள்ளாடு - கன்னி |
| 12 | கோழிப் பண்ணை, காட்டுப்பாக்கம் (காஞ்சிபுரம் மாவட்டம்) | கோழியினம் - நந்தனம் கலர் கோழி / காரி நிர்பீக், நந்தனம் வான்கோழி-I |



2008 ஏப்ரல் 30]

**பசுவின அபிவிருத்தி**

மாநிலத்தில் மொத்தம் உள்ள மாட்டினங்களில் பசுவினம் 84.64 சதவீதமாகும். இதில் அயலினம், கலப்பினம், நாட்டினம் மற்றும் உள்நாட்டு தூய்மை மரபினம் முறையே 0.44%, 55.79%, 6.01% மற்றும் 37.76 சதவீதமாகும். இனப்பெருக்கத்திற்கு உகந்த பசுக்களின் எண்ணிக்கை மற்றும் அதன் விழுக்காடு கீழ்வருமாறு:

| வ. எண் | இனம் | இனவிருத்திக்கு உகந்த பெண் மாட்டின எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | 16-வது கால்நடை கணக்கெடுப்பு 1997 (இலட்சத்தில்) | 17-வது கால்நடை கணக்கெடுப்பு 2004 (இலட்சத்தில்) | கூடுதல் அல்லது குறைவு சதவீதம் |
| 1 | அயலினம் | 0.16 | 0.23 | 43.75 |
| 2 | கலப்பினம் | 9.91 | 25.66 | 158.93 |
| 3 | உள்நாட்டு தூய்மை மரபுடையவை | 5.05 | 1.80 | –64.36 |
| 4 | நாட்டினம் | 20.17 | 13.48 | –33.17 |
| | மொத்தம் | 35.29 | 41.17 | –16.66 |

நாட்டினங்கள் நோய் எதிர்ப்புச் சக்தியுடன் அதிக வெப்ப நிலையைத் தாங்கக் கூடியதாக இருந்தாலும், முதல் கன்று ஈனும் வயது அதிகமாகவும், பால் கொடுக்கும் காலம் குறைவாகவும், குறைந்த பால் உற்பத்தித் திறனும், ஒரு கன்றுக்கும் மறு கன்று ஈனுவதற்கும் இடைப்பட்ட காலம் அதிகமாகவும் உள்ளனவாக இருக்கின்றன. ஆனால், அயலினங்கள் நீண்ட காலத்திற்குப் பால் தருவனவாகவும், விரைவில் பருவமடைவதுடன் கூடுதலாகப் பால் தருவனவாகவும், குறுகிய வற்றுக் காலம் மற்றும் குறுகிய இடைவெளியில் கன்று ஈனும் காலம் உடையனவாகவும் விளங்குகின்றன. ஆனால் இவற்றிற்கு நோய் எதிர்ப்புத் திறனும் தட்ப வெப்ப நிலையைத் தாங்கும் தன்மையும் குறைவாக உள்ளது. நாட்டினங்களில் காணப்படும் இப்பொருளாதார அம்சங்களை மேம்படுத்துவதுடன் அவற்றில் காணப்படும் நோய் எதிர்ப்பு மற்றும் தட்பவெப்ப நிலையைத்

[2008 ஏப்ரல் 30

தாங்குவது போன்ற திறன்களைக் குறுகிய காலத்தில் ஏற்கத்தக்க செலவில் பாதுகாப்பதற்குக் கலப்பினப் பெருக்கம் செய்வது ஒன்றே சிறந்த வழியாகும். உள்நாட்டு தூய்மை மரபுடைய இனங்களான காங்கேயம் மற்றும் உம்பளாச்சேரி, அதிக வெப்ப நிலையின் கடுமை, நோய்களைத் தாங்குதல், தீவனத்தைச் சிறப்பான பொருட்களாக மாற்றுதல் மற்றும் பிறப்பிடங்களுக்கு ஏற்றவாறு மாற்றிக்கொள்ளும் தன்மை ஆகியவைகளுக்கான அணுக்களைக் கொண்டுள்ளன.

1997 ஆம் ஆண்டு கால்நடை கணக்கெடுப்பின்படி 9.91 இலட்சமாக இருந்த இனவிருத்திக்கு உகந்த கலப்பினப் பசுவினங்களின் எண்ணிக்கை, 2004 ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் 25.66 இலட்சமாக அதிகரித்துள்ளது. இது 15.9 சதவீதம் அதிகமாகும். இதே காலக்கட்டத்தில், உள்நாட்டினங்களின் எண்ணிக்கை 20.17 இலட்சத்திலிருந்து 13.48 இலட்சமாக குறைந்துள்ளது. இது 33 சதவீதம் குறைவாகும். நாட்டினங்களின் எண்ணிக்கை குறைந்திருந்த போதிலும் கலப்பினப் பசுக்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க வகையில் உயர்ந்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் ஆண்டு வளர்ச்சி விகிதம் 18.79 ஆக இருந்துள்ளது. செயற்கைமுறைக் கருவூட்டல் பணியை வெற்றிகரமாக செயல்படுத்துவதே இதற்கு முக்கிய காரணமாகும்.

அரசு, பால் உற்பத்தித் திறனைப் பெருக்கவும், பால் வளப் பிரிவின் வளர்ச்சியினை நிலைப்படுத்தவும் ஒரு புதிய பசுவின இனப் பெருக்கக் கொள்கையை வகுத்துள்ளது.

❖ காங்கேயம் இன மாடுகளை ஈரோடு, கோயம்புத்தூர், கரூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களிலும், உம்பளாச்சேரி இன மாடுகளை நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களிலும் தேர்ந்தெடுத்த முறையில் இனப் பெருக்கம் செய்தல்.

❖ புலிகுளம், பர்கூர், ஆலம்பாடி மற்றும் மலைமாடுகளை அவற்றின் இனப்பெருக்க தடங்களிலேயே தேர்ந்தெடுத்த முறையில் இனப்பெருக்கம் செய்தல்.

❖ ஜெர்சி மற்றும் பிரிசியன் போன்ற அயலின பொலிகாளைகளைக் கொண்டு, குறைவான உற்பத்தியைக் கொண்ட நாட்டினப் பசுக்களில், வேளாண் தட்பவெப்ப நிலைக்கேற்ப கலப்பினப் பெருக்கம் செய்தல். தூய மரபுடைய ஜெர்சி இனம் தவிர, உயர் பண்புடைய இந்திய பால் மாடுகளான சிகப்பு சிந்தி மற்றும் தர்பார்க்கர் இன மாடுகளையும் உபயோகப்படுத்தலாம். இதேபோல், ஹோல்ஸ்டீன் பிரிசியன் இனத்திற்கு பதிலாக சாஹிவால் இனத்தை உபயோகப்படுத்தலாம்.



2008 ஏப்ரல் 30]

❖ கலப்பின ஜெர்சி இன மாடுகள் 50 சதவீதம் ஜெர்சி இன பொலிகாளைகளின் விந்தினைக் கொண்டும், கலப்பின ஹோல்ஸ்டீன் பிரிசியன் மாடுகள் 50 சதவீத ஹோல்ஸ்டீன் பிரிசியன் பொலிகாளைகளின் விந்தினைக் கொண்டும் இனப்பெருக்கம் செய்யப்படும்.

## எருமையின அபிவிருத்தி

எருமையினம், மாநிலத்தில் மொத்தமுள்ள மாட்டினங்களில் 15.36 சதவீதமும், மொத்த கால்நடைகளில் 7 சதவீதமாகவும் உள்ளது. இனப்பெருக்கத்திற்கு உகந்த எருமைகளின் எண்ணிக்கை மற்றும் அதன் விழுக்காடு கீழ்வருமாறு:

| வ. எண் | இனம் | இனவிருத்திக்கு உகந்த பெண் மாட்டின எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | 16-வது கால்நடை கணக்கெடுப்பு 1997 (இலட்சத்தில்) | 17-வது கால்நடை கணக்கெடுப்பு 2004 (இலட்சத்தில்) | கூடுதல் அல்லது குறைவு சதவீதம் |
| 1 | முர்ரா | 0.24 | 0.62 | 158.33 |
| 2 | தரம் உயர்த்தப்பட்டவை | 2.75 | 2.27 | –17.45 |
| 3 | நாட்டினம் | 10.90 | 6.12 | –43.85 |
| | மொத்தம் | 13.89 | 9.01 | –35.13 |

எருமையின அபிவிருத்திக்காகக் கால்நடைப் பண்ணைகளில் இதுவரை 62 முர்ரா பொலிகாளை கன்றுகள் வாங்கப்பட்டுள்ளன.

எருமையின அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்கத்துடன், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சம்மேளனம், எருமைப் பாலுக்குச் சிறப்பு விலையை நிர்ணயித்துள்ளது. மேலும் இச்சம்மேளனம் மூலமாக

[2008 ஏப்ரல் 30

810 எருமையினக் கன்றுகளைத் தேர்ந்தெடுத்து அவற்றிற்கு 100 சதவீத மானியத்துடன் 32 மாத வயது அல்லது முதல் கன்று ஈனும் வரை அடர்தீவனம் வழங்கப்பட உள்ளது. சராசரியாக 4,740 கிலோ அடர்தீவனம் வழங்கப்பட உள்ளது.

எருமையின புதிய இனப்பெருக்கக் கொள்கையைக் கீழ்க்கண்ட பரிந்துரைகளுடன் அரசு வகுத்துள்ளது:

- முர்ரா இனத்தினைக் கொண்டு நாட்டினம் மற்றும் தரம் உயர்த்தப்பட்ட எருமைகளை தரம் உயர்த்துதல்.
- நீலகிரி மலைப் பகுதியில் உள்ள தோடா இன எருமைகளைத் தூய இனப்பெருக்கம் செய்தல்.

**செயற்கைமுறைக் கருவூட்டல்**

கறவை மாடுகளின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் சிறப்புமிக்க உயர்தர மரபு ஆதாரங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. மேலும், குறுகிய காலத்தில் குறைந்த செலவில் சிறப்புமிக்க உயர்தர மரபு ஆதாரங்களை மாட்டினங்களில் புகுத்த, செயற்கைமுறைக் கருவூட்டல் தொழில்நுட்பம்தான் ஒரே வழி என நிரூபிக்கப்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, பசு மற்றும் எருமைகளின் மரபுத் திறனை அதிகரிக்க அயலினம் மற்றும் தரம் உயர்த்தப்பட்ட இனங்களின் திரவ விந்தைக் கொண்டு செயற்கைமுறைக் கருவூட்டல் பணி 1948 முதல் இத்துறையினால் மேற்கொள்ளப்படுகிறது. 1975 ஆம் ஆண்டு உறைவிந்தைக் கொண்டு செயற்கைமுறைக் கருவூட்டல் பணி அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, 1993 ஆம் ஆண்டிலிருந்து அனைத்து செயற்கைமுறைக் கருவூட்டல் நிலையங்களிலும் உறைவிந்தை மட்டுமே பயன்படுத்தும் வகையில் திரவ விந்து பயன்படுத்துதல் படிப்படியாகக் குறைத்து முற்றிலுமாக நிறுத்தப்பட்டது.

மாநிலத்தில் இனவிருத்திக்கு உகந்த கால்நடைகளின் பால் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காகவும், உயர் ரக பால் உற்பத்தி பண்புகளை விரைந்து பெருக்குவதற்காகவும் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்திக் கழகத்தின்மூலமாக அதிக பலன் தரும் மரபணுக்களுடன் உயர் ரக உறைவிந்துக் குச்சிகளைக் கால்நடை பராமரிப்புத் துறை தற்போது கொள்முதல் செய்து வருகிறது.

மேற்கண்ட பணி, மாநிலத்தில் உள்ள 3,258 செயற்கைமுறைக் கருவூட்டல் நிலையங்கள்மூலம் மேற்கொள்ளப்படுகிறது.



2008 ஏப்ரல் 30]

அதுமட்டுமல்லாமல் செயற்கைமுறைக் கருவூட்டல் பணியானது, மலடு நீக்க சிகிச்சை முகாம்களிலும், கால்நடைப் பாதுகாப்புத் திட்ட முகாம்களிலும், குக்கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு நடமாடும் கால்நடை மருந்தகம்மூலமும் மற்றும் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் வாயிலாகப் பயிற்சிப் பெற்ற தனிநபர் மூலமும் மேற்கொள்ளப்படுகிறது.

2007-2008 ஆம் ஆண்டில், 34.79 இலட்சம் செயற்கைமுறைக் கருவூட்டல் செய்யப்பட்டன. மேலும் 2008-09 ஆம் ஆண்டில், 36.69 இலட்சம் செயற்கைமுறைக் கருவூட்டல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**உறைவிந்து உற்பத்தி**

மாநிலமெங்கும் பரவியிருக்கும் 3,258 செயற்கைமுறைக் கருவூட்டல் நிலையங்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன், கீழ்க்கண்ட 3 இடங்களில் உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவை:

- அயலினக் கால்நடை பெருக்குப் பண்ணை, ஈச்சங்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.
- மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.
- மாவட்டக் கால்நடைப் பண்ணை, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்.

மேற்கண்ட நிலையங்களில் ஜெர்சி, ஹோல்ஸ்டீன் பிரிசியன், கலப்பினம், காங்கேயம் மற்றும் முர்ரா ஆக 197 இனவிருத்தி பொலிகாளைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேற்கண்ட உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் சிறிய உறைவிந்துக் குச்சிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில், மேற்கண்ட பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் உறைவிந்துக் குச்சிகளின் தரத்தை உயர்த்துவதற்காகக் குறைந்தபட்ச தர அளவை எட்டாத 27 பொலிகாளைகள் கழிவு செய்யப்பட்டன. மேற்கண்ட பண்ணைகளை சர்வதேச தரக் கட்டுப்பாட்டுக்கு இணையாக மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2008 ஏப்ரல் 30

உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் பராமரிக்கப்படும் இனவிருத்தி பொலிகாளைகள்:

| வ. எண் | பண்ணையின் பெயர் | ஜெர்சி | ஹோல்ஸ்டீன் பிரிசியன் | சிந்தி | ஜெர்சி கலப்பினம் | ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினம் | காங்கேயம் | சிவப்பு சிந்தி கலப்பினம் | முர்ரா | உம்பளாச்சேரி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | அயலினக் கால்நடை பெருக்குப் பண்ணை, ஈச்சங்கோட்டை | 31 | - | - | 32 | - | - | - | 48 | - | 111 |
| 2 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒசூர் | - | - | 12 | 5 | 9 | 10 | 11 | - | - | 47 |
| 3 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, உதகமண்டலம் | 14 | 12 | - | 3 | 10 | - | - | - | - | 39 |
| | மொத்தம் | 45 | 12 | 12 | 40 | 19 | 10 | 11 | 48 | - | 197 |

2007-2008 ஆம் ஆண்டில், 19.85 இலட்சம் உறைவிந்துக் குச்சிகள் மேற்கண்ட உறைவிந்து நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்டன. 2008-2009 ஆம் ஆண்டில், இத்துறை 25.32 இலட்சம் ஹோல்ஸ்டீன் பிரிசியன், ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினம், ஜெர்சி, ஜெர்சி கலப்பினம், முர்ரா மற்றும் காங்கேயம் போன்ற பல்வேறு இன உறைவிந்துக் குச்சிகளை உற்பத்தி செய்யும்.

### உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் வாரியாக 2007-2008 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட உறைவிந்துக் குச்சிகள் மற்றும் 2008-2009 ஆம் ஆண்டில் உற்பத்தி குறியீடு

| வ. எண் | உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் | உற்பத்தி 2007-08 எண்ணிக்கை (இலட்சத்தில்) | குறியீடு 2008-09 எண்ணிக்கை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | அயலினக் கால்நடை பெருக்குப் பண்ணை, ஈச்சங்கோட்டை | 6.76 | 10.08 |
| 2 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒசூர் | 7.75 | 8.80 |
| 3 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, உதகமண்டலம் | 5.34 | 6.44 |
| | மொத்தம் | 19.85 | 25.32 |



2008 ஏப்ரல் 30]

### திரவ நைட்ரஜன் உற்பத்தி மற்றும் விநியோகம்

திரவ நைட்ரஜன் உற்பத்தி ஆலைகள் ஈச்சங்கோட்டையில் 2 எண்ணிக்கையிலும், ஒசூர், உதகமண்டலம், சைதாப்பேட்டை (சென்னை) மற்றும் திருப்பரங்குன்றம் (மதுரை) ஆகிய இடங்களில் தலா ஒன்றும் ஆக மொத்தம் 6 செயல்படுகின்றன. இவை உற்பத்தி செய்யப்பட்ட உறைவிந்துக் குச்சிகளை உறைய வைக்கவும் வீரியம் குறையாமல் பாதுகாக்கவும் பயன்படுகின்றன.

மாநிலத்தில் வேலூர், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, தருமபுரி, திருநெல்வேலி, தஞ்சாவூர், கடலூர், சிவகங்கை, சென்னை, திண்டுக்கல் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம் 12 உறைவிந்து சேமிப்பு வங்கிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. திரவ நைட்ரஜன் மற்றும் உறைவிந்தினைப் பாதுகாத்து, பல இடங்களில் உள்ள கால்நடை நிலையங்கள் மற்றும் கிளை நிலையங்களில் செயற்கைமுறைக் கருவூட்டல் பணி நடைபெற உதவி வருவதே இவற்றின் முக்கியப் பணியாகும்.

2007-2008 ஆம் ஆண்டில், துறையில் செயற்கைமுறைக் கருவூட்டல் பணியை ஒழுங்குபடுத்துவதற்காக, 10 சைலோ கலன்கள் (3,000 முதல் 3,500 லிட்டர் கொள்ளளவு) மற்றும் பல்வேறு கொள்ளளவில் 3,880 திரவ நைட்ரஜன் கொள்கலன்கள் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமைமூலமாகக் கொள்முதல் செய்யப்பட்டன.

2007-2008 ஆம் ஆண்டில், மேற்கண்ட நிலையங்களில் 1.87 இலட்சம் லிட்டர்கள் திரவ நைட்ரஜன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

### 2007-2008 ஆம் ஆண்டில் ஆலை வாரியாக திரவ நைட்ரஜன் உற்பத்தி மற்றும் 2008-2009 குறியீடு

| வ. எண். | திரவ நைட்ரஜன் ஆலை | ஆலைகளின் எண்ணிக்கை | உற்பத்தி 2007-08 (இலட்சத்தில்) | இலக்கு 2008-09 (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | அயலினக் கால்நடை பெருக்குப் பண்ணை, ஈச்சங்கோட்டை | 2 | 0.62 | 0.85 |
| 2 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒசூர் | 1 | 0.70 | 0.85 |

[2008 ஏப்ரல் 30

| வ. எண் | திரவ நைட்ரஜன் ஆலை | ஆலைகளின் எண்ணிக்கை | உற்பத்தி 2007-08 (இலட்சத்தில்) | இலக்கு 2008-09 (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 3 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, உதகமண்டலம் | 1 | 0.21 | 0.30 |
| 4 | சைதாப்பேட்டை | 1 | 0.27 | 0.30 |
| 5 | திருப்பரங்குன்றம் | 1 | 0.07 | 0.30 |
| | மொத்தம் | 6 | 1.87 | 2.60 |

**உள்நாட்டினங்களைப் பாதுகாத்தல்**

பசுவினம், மாநிலத்தில் மொத்தமுள்ள கால்நடைகளில் 36.65 சதவீதமாகவும், மொத்த மாட்டினத்தில் 84.64 சதவீதமாகவும் உள்ளது. மொத்த பசுவினங்களின் எண்ணிக்கையானது அயலினம் மற்றும் கலப்பினத்தில் 56.23 சதவீதமாகவும், உள்நாட்டு தூய்மை மரபுடைய இனத்தில் 6.01 சதவீதமாகவும் மற்றும் நாட்டினத்தில் 37.76 சதவீதமாகவும் உள்ளன. நாட்டினங்கள் நோய் எதிர்ப்பு சக்தி, அதிக வெப்ப நிலையைத் தாங்கக்கூடியதாக இருந்தாலும், முதல் கன்று ஈனும் வயது அதிகமாகவும், பால் கொடுக்கும் காலம் குறைவாகவும், குறைந்த பால் உற்பத்தித் திறனும், ஒரு கன்றுக்கும் மற்றொரு கன்று ஈனுவதற்கும் இடைப்பட்ட காலம் அதிகமாகவும் இருக்கின்றன. நாட்டினங்களில் காணப்படும் நோய் எதிர்ப்பு மற்றும் தட்ப வெப்ப நிலையைத் தாங்குவது போன்ற திறன்களைப் பாதுகாத்து மற்ற திறன்களை மேம்படுத்த, நாட்டினங்களை அவற்றின் சொந்த பிறப்பிடங்களிலேயே வளர்த்து அவற்றின் மரபணு பாதுகாக்கப்பட்டுப் பேணப்படுகின்றன. காங்கேயம் மற்றும் உம்பளாச்சேரி ஆகிய இரண்டும் நாட்டின உழவு மாடுகளாகும்.

இத்துறை ஓசூர், மாவட்டக் கால்நடைப் பண்ணையில் 286 காங்கேயம் இனக் கால்நடைகளையும், கொருக்கை கால்நடைப் பண்ணையில் 302 உம்பளாச்சேரி இனக் கால்நடைகளையும் பராமரித்து வருகிறது. 2007-08 ஆம் ஆண்டில், 3.19 இலட்சம் உறைவிந்துக் குச்சிகள் உள்நாட்டினப் பொலிகாளைகளில் இருந்து உற்பத்தி செய்யப்பட்டன.

பர்கூர், ஆலம்பாடி மற்றும் புலிக்குளம் நாட்டினங்களைப் பாதுகாப்பதற்காக, தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை,



2008 ஏப்ரல் 30]

தமிழ்நாடு கால்நடை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகத்தின் கால்நடை இனவிருத்தி மற்றும் மரபியல் துறையின் ஒருங்கிணைப்புடன் ரூ.9.50 இலட்சம் செலவில் இவ்வினங்களைக் கணக்கெடுத்தல் மற்றும் பண்புகளைக் கண்டறிதல் பணியினை மேற்கொண்டு வருகின்றது.

**செம்மறியாடுகள் அபிவிருத்தி**

செம்மறியாடு வளர்ப்பு பெரும்பாலான நிலமற்ற வேளாண் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த முக்கிய ஆதாரமாகவும், அவர்களின் வருவாயினை அதிகரிக்கவும் உதவுகிறது. இறைச்சி மற்றும் தோல்மூலம் கிடைக்கும் வருமானம் தவிர நிலத்தினை வளப்படுத்துவதற்காக செம்மறியாட்டினங்களை வயல் வெளிகளில் விட்டுப் பராமரிப்பதால் சிறிது வருமானம் கிடைக்கிறது.

செம்மறியாடுகள், மொத்தமுள்ள ஆடுகளில் 41 சதவீதமாக உள்ளன. இதில் கலப்பினம் 14 சதவீதமும் உள்நாட்டு தூய்மை மரபுடைய இனங்கள் 86 சதவீதமாகவும் உள்ளன. இத்துறைப் பண்ணைகளில் கீழ்க்கண்ட ஆட்டினங்கள் பராமரிக்கப்படுகின்றன:

| வ. எண் | பண்ணைகள் | இனம் |
|---|---|---|
| 1 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, செட்டிநாடு | கீழக்கரிசல் |
| 2 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை | இராமநாதபுரம் வெள்ளை |
| 3 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஓசூர் | மாண்டியா, கோரிடேல் கலப்பினம் |
| 4 | ஆட்டுப் பண்ணை, சாத்தூர் | வேம்பூர், கீழக்கரிசல் |
| 5 | ஆட்டுப் பண்ணை, சின்னசேலம் | மேச்சேரி, சென்னை சிகப்பு |

இப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் தரமான கிடா மற்றும் கிடேரிகள் உள்ளூர் விவசாயிகளுக்கு உள்ளூர் ஆடுகளின் ஈற்றின் தரத்தினை உயர்த்தும் பொருட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

[2008 ஏப்ரல் 30

இனப்பெருக்கத்திற்காகவும் ஆடுகள் விற்கப்படுகின்றன. கால்நடை பராமரிப்புத் துறையானது, அறிவியல் பூர்வமான இனப்பெருக்கம், தீவனம் மற்றும் மேலாண்மை யுக்திகளைக் கையாள்வதன்மூலம் இறைச்சி உற்பத்தியைப் பெருக்கிடவும், விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானம் ஈட்டித் தரவும், ஆடு வளர்ப்போருக்கு உதவுகிறது.

திண்டுக்கல், மதுரை, தேனி, திருநெல்வேலி, விருதுநகர், கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செம்மறியாடு அலகுகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**வெள்ளாடுகள் அபிவிருத்தி**

வெள்ளாடு ஒரு தரம் மிக்க கால்நடை ஆகும். இது மாநிலத்தில் உள்ள மொத்த செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகளில் 59 சதவீதமாக உள்ளன. விரைவில் இனப்பெருக்கம் ஆகும் தன்மை, கூடுதல் வளர்ச்சி விகிதம் மற்றும் எளிதில் சந்தையில் விலை போகுதல் ஆகியவை இதற்கு முக்கியக் காரணங்களாக விளங்குகின்றன. மேலும் பல்வேறு கால்நடைப் பண்ணை பராமரிப்பு முறைகளில் வெள்ளாடு வளர்த்தல் மிகச் சிறந்த இலாபம், குறைந்த செலவு விகிதம் கொண்ட தொழிலாக விளங்குகிறது.

வெள்ளாடுகளைக் குறைந்த முதலீட்டில் கொட்டில்களில் அல்லது வெளியில் மிகுதியாக மேய்ச்சலுக்கு விட்டு இலாபகரமாக வளர்க்க முடியும். மோசமான சுற்றுப்புறச் சூழல் மற்றும் குறைவான மேய்ச்சல் ஆதாரங்கள் உள்ள இடங்களிலும் வெள்ளாடுகள் நல்ல உற்பத்தித் திறனைக் கொண்டுள்ளது. செம்மறியாடுகள்போல் இல்லாமல் வெள்ளாடுகளைச் சிறு அலகுகளாகப் பராமரிக்க முடியும். மேலும் அவை குறைந்த பராமரிப்புத் தேவைகளைக் கொண்டுள்ளது. மேலும் இவை அதிக குட்டிகளை ஈனுவதால் அவற்றின் எண்ணிக்கை விரைவாக அதிகரிக்கின்றது. மாநிலத்தில் உண்பதற்கு அதிகமாக விரும்பப்படும் இறைச்சி வெள்ளாட்டின இறைச்சி ஆகும். சந்தையில் அதிக விலை கிடைப்பதும் இதற்குத்தான்.

மாநிலத்தில் கன்னி ஆடு, கொடியாடு, சேலம் கருப்பு மற்றும் மோலையாடு ஆகிய இனங்கள் காணப்படுகின்றன. துறையிலுள்ள பண்ணைகளில் கீழ்க்காணும் வெள்ளாட்டினங்கள் பராமரிக்கப்படுகின்றன:



2008 ஏப்ரல் 30]

| வ. எண் | பண்ணைகள் | இனம் |
|---|---|---|
| 1 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, செட்டிநாடு | ஜமுனாபாரி |
| 2 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை | தலைச்சேரி, ஜமுனாபாரி |
| 3 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒசூர் | கொடிவள்ளி, ஜமுனாபாரி |
| 4 | ஆட்டுப் பண்ணை, சின்னசேலம் | ஜமுனாபாரி |
| 5 | ஆட்டுப் பண்ணை, சாத்தூர் | கன்னி வெள்ளாடு, ஜமுனாபாரி, கொடிவள்ளி |

உள்ளூரிலுள்ள வெள்ளாடுகளின் தரத்தை அதிகரிக்கும் பொருட்டு, இந்த ஆடுகள் ஈன்ற குட்டிகள் உள்ளூர் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. 31-03-2008 அன்றைய நாளில் மேற்கண்ட பண்ணைகளில் 74 ஆண், 332 பெண், 92 குட்டிகள் உள்ளன. மொத்தம் 329 வெள்ளாட்டுக் குட்டிகள் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டன.

திண்டுக்கல், மதுரை, தேனி, திருநெல்வேலி, விருதுநகர், கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வெள்ளாடு அலகுகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**ஆட்டின தீவிர மருத்துவ சேவை திட்டம்**

செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகள், பெரும்பாலும் மேய்ச்சலை நம்பியே இருப்பதால் அவற்றிற்குக் குடற்புழு தாக்கம் ஏற்பட்டு பல தொல்லைகள் ஏற்பட வாய்ப்புள்ளன. அதன் காரணமாக உடல் எடை குறைவு, காலம் கடந்து இனவிருத்திக்குத் தயாராகுதல், அதிக அளவிலான இறப்பு சதவீதம், குறைவான இனப்பெருக்க சதவீதம் போன்ற பல உடல் கோளாறுகள் ஏற்பட வாய்ப்புள்ளன. மேலும் வேறு பல நோய்களும் ஏற்படக் காரணமாகிறது. இது இறைச்சியின் தன்மை, தோல் தன்மை மற்றும் இறைச்சி எடை ஆகியவற்றில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது.

[2008 ஏப்ரல் 30

குடற்புழுவால் ஏற்படும் மேற்கூறிய இன்னல்களிலிருந்து செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகளைக் காப்பாற்ற, அவற்றைக் காலமுறைப்படி குடற்புழு நீக்கம் செய்யப்பட வேண்டும். இதனைக் கருத்திற் கொண்டு ஏழை விவசாயிகள் பராமரிக்கும் செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகளுக்கு இத்துறையின்மூலம் தீவிர உடல்நலம் பேணும் திட்டத்தின்கீழ், காலமுறைப்படி, 1982-1983 ஆம் ஆண்டு முதற்கொண்டு முறையாகக் குடற்புழு நீக்கம், சென்னை, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலாக பிற மாவட்டங்களில் இலவசமாக செய்யப்பட்டு வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகளுக்குக் குடற்புழு நீக்கம் செய்ய ரூ.40.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது.

## இதர கால்நடை அபிவிருத்தி

***பன்றி அபிவிருத்தி:*** பன்றி வளர்ப்பின்மூலமாக சுய வேலைவாய்ப்பும், சத்து மிக்கதுமான இறைச்சி, நகர்புறத் தேவைக்கு ஏற்ப கிடைக்கவும், இத்துறை பன்றி வளர்ப்பினை கிராமப்புற ஏழை மக்களிடம் ஊக்குவித்து வருகிறது. லார்ஜ் வெள்ளை யார்க்ஷயர் பன்றி இனங்கள் ஒரத்தநாடு, ஓசூர், அபிஷேகப்பட்டி, செட்டிநாடு மற்றும் புதுக்கோட்டை மாவட்டக் கால்நடைப் பண்ணைகளில் பராமரிக்கப்படுகின்றன. 31-03-2008 அன்றைய தேதியில் மேற்கண்ட பண்ணைகளில், 77 ஆண், 122 பெண் மற்றும் 304 குட்டிகள் உள்ளன. 2007-2008 ஆம் ஆண்டில், 1,406 பன்றிகள் இனப்பெருக்கத்திற்காக விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டன. திருநெல்வேலி, மாவட்டக் கால்நடைப் பண்ணையில் உள்ள பன்றி வளர்ப்புப் பிரிவு ரூ.33.92 இலட்சம் செலவில் வலுப்படுத்தப்பட்டு வருகிறது.

***குதிரை வளர்ப்பு:*** குதிரைகளின் இனப்பெருக்கத்தைப் புனரூட்டவும் அவற்றைப் பாதுகாக்கவும், குதிரை வளர்ப்புப் பிரிவு ஒன்று ஓசூர், மாவட்டக் கால்நடைப் பண்ணையில் இயங்கி வருகிறது. இப்பிரிவில் கத்தியவார் மற்றும் தாரோ இன குதிரைகள் பராமரிக்கப்படுகின்றன. தாரோ இன மற்றும் கத்தியவார் ஆண் குதிரைகள் இயற்கைமுறைக் கருவூட்டலுக்கு அனுமதிக்கப்படுகின்றன. தற்போது இந்தப் பிரிவில் 5 ஆண் குதிரைகள், 5 பெண் குதிரைகள் மற்றும் 12 குட்டிகள் உள்ளன.

***நாய் வளர்ப்பு:*** தமிழ்நாட்டில் உள்ளூர் இனங்களான இராஜபாளையம், கோம்பை மற்றும் சிப்பிப்பாறை போன்ற இனங்களுக்கு மக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது. இவ்வினங்கள் அழியாமல் காக்க சென்னை,



2008 ஏப்ரல் 30]

சைதாப்பேட்டை நாய் வளர்ப்புப் பிரிவில் 1980-1981 முதல் இவை வளர்க்கப்படுகின்றன. இப்பிரிவினை வலுப்படுத்தும் நோக்குடன் லேப்ரடார் மற்றும் டாபர்மேன் போன்ற இனங்கள் 1997-1998 முதல் சேர்க்கப்பட்டன. விரும்பி வளர்க்கக் கேட்கும் பொதுமக்களுக்கு நாய்க் குட்டிகள் விற்பனை செய்யப்படுகின்றன. நாட்டின நாய் இனங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி அவற்றை நாய் வளர்க்க பிரியப்படுபவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன், இத்துறை நாய் கண்காட்சிகளிலும் கலந்து கொள்கிறது. தற்போது இந்தப் பிரிவில் 7 ஆண், 8 பெண் மற்றும் 2 குட்டிகள் உள்ளன.

## கோழியின அபிவிருத்தி

புழைக்கடையில் மட்டுமே வளர்க்கக் கூடியதாக இருந்த கோழி வளர்ப்பு தற்போது வர்த்தக ரீதியான தொழிலாக மாறிவிட்டது. 1960 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஆழ்கூளம் முறை அறிமுகப்படுத்தப்பட்டதன்மூலம், கோழி வளர்ப்பு மிகப் பெரிய முன்னேற்றம் காண வழிவகுக்கப்பட்டது. புதுவித அறிவியல் தொழில்நுட்பங்கள், புதிய இனக் கோழிகள் மற்றும் கலிபோர்னியா கூண்டுமுறை கோழிவளர்ப்பு போன்றவற்றின் வருகையினால் கோழி வளர்ப்புத் தொழிலில் புரட்சி ஏற்பட்டுள்ளது.

கோழி விரிவாக்க நிலையங்கள், இச்செயல்முறையை விரைவுபடுத்தியதுடன் அவை செயல்விளக்கப் பண்ணைகளாகவும், விரிவாக்க நிலையங்களாகவும் செயல்பட்டு, கோழிப் பண்ணைத் தொழிலை நடத்துவதற்கு விவசாயிகளுக்குப் பயிற்சி நிலையமாகவும் விளங்கின. மேலும், வெள்ளைக் கழிச்சல் நோயிலிருந்து காத்திட மேற்கொள்ளப்பட்ட பரவலான தடுப்பூசி போடுதல், தரமான தீவனம் எளிதில் கிடைத்தல் ஆகியவை கோழி வளர்ப்பிற்குப் பெரும் பங்காற்றி இது ஒரு தொழிலாக மேன்மையடையச் செய்தது. இதனால் இதுவரை குடிசைத் தொழிலாக இருந்த கோழி வளர்ப்பு தற்போது நாமக்கல், சேலம், ஈரோடு, கோயம்புத்தூர் மாவட்டங்களில் பல இடங்களில் பெரிய அளவிலான தொழிலாக வளர்ச்சி அடைந்துள்ளது.

முட்டைகள், முட்டை உற்பத்திப் பொருட்கள் மற்றும் உறையவைத்த கோழி இறைச்சி ஆகியவற்றை நமது மாநிலத்திலிருந்து வளைகுடா நாடுகள், ரஷ்யா போன்ற அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு ஏற்ற சிறந்த சூழ்நிலை இங்கு நிலவுகிறது. எனவே, இந்திய ஏற்றுமதி ஆய்வுக் குழுவின் ஆலோசனை மற்றும் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தின்படி, இத்துறை வணிக ரீதியிலான

[2008 ஏப்ரல் 30

கோழிப் பண்ணைகளுக்குப் பல நலச் சான்றிதழ்களை வழங்கியுள்ளது. இதன்மூலம் முட்டைகள் ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

**கோழி முட்டைகளை பாதுகாக்க குளிர்பதன வைப்பறை நிறுவுதல்**

முட்டைகள் வளமாக உற்பத்தியாகும் காலத்தில் தேவைக்கு அதிகமாக உள்ள முட்டைகளைச் சேமிக்கவும், போக்குவரத்து இடர் பாடுகள் மற்றும் பறவைக்காய்ச்சல் நோய்க் கிளர்ச்சியின்போது முட்டைகளின் ஏற்றுமதிக்குத் தடை ஏற்படுதல் போன்ற காரணங்களினால், அதிக அளவில் முட்டைகள் தேங்குவதினால் ஏற்படும் இழப்பினைத் தவிர்க்கவும், ஒரு குளிர்பதன வைப்பறை நிறுவுவது தமிழ்நாடு கோழிப் பண்ணையாளர்களின் நீண்டகால தேவையாக இருந்து வந்தது. இத்தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, நாமக்கல்லில் ஒரு குளிர்பதன வைப்பறையினை ரூ.10.00 கோடி செலவில் பொதுத் துறை மற்றும் தனியார் பங்களிப்புடன் இணைந்து நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக **ஒரு கோடி ரூபாயினை** அரசின் பங்காகத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு (TIDCO) வழங்கியுள்ளது. இப்பணி தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தினால் தொடங்கப்பட்டுள்ளது.

**புழைக்கடை கோழியின அபிவிருத்தி**

தமிழ்நாட்டில் கோழி வளர்ப்பானது, பண்டைக்காலம் தொட்டே இலாபகரமான பாரம்பரிய புழைக்கடை கோழிவளர்ப்பாக இருந்து வருகின்றது. இது தற்போது பல ஏழை விவசாயிகளின் வாழ்வாதாரமாக கிராமப்புறத்தில் தொடர்ந்து இருக்கின்றது. மாநிலத்தின் மொத்த முட்டை உற்பத்தியில் 5 சதவிகிதத்தைப் பங்களிப்பாக அளித்துள்ளது. குறைந்த நிலம் மற்றும் குறைந்த முதலீட்டுடன் புழைக்கடை கோழி வளர்ப்பினால் விரைவில் இலாபம் கிடைக்கப்பெறுவதால், இது மற்ற தொழில்களில் இருந்து மாறுபட்ட நலன்பயக்கும் தொழிலாக உள்ளது. ஆரம்ப முதலீடு மிகக்குறைவாக இருப்பினும் நிலமற்ற வேளாண் விவசாயிகள் இந்தச் சிறு தொகையினையும் முதலீடு செய்ய கடினமாக உணர்கின்றனர். எனவே இத்தகையான மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், அவர்கள் குடும்பத்தின் ஊட்டச்சத்தை அதிகரிக்கவும் கிரிராஜா பறவை அலகுகள், புழைக்கடையில் வளர்க்க மேற்குத் தொடர்ச்சி மற்றும் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டங்களின்மூலமாக அளிக்கப்படுகின்றன. இந்தப் புழைக்கடை கோழி வளர்ப்பானது



2008 ஏப்ரல் 30]

வணிக ரீதியாக கோழி வளர்ப்பு மேற்கொள்ளப்படாத மாவட்டங்களில் மேற்கொள்ளப்படுகிறது.

*2007-2008* ஆம் ஆண்டில், நீலகிரி மாவட்டத்தில் உள்ள *200* விவசாயிகளுக்கு கிரிராஜா கோழிகள் *50* சதவீத மானியத்தில் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளன. திண்டுக்கல், மதுரை, தேனி, திருநெல்வேலி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு கிரிராஜா இனக் கோழிகளை வழங்கவும், கோழி வளர்ப்பில் பயிற்சி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தக் கோழிகள் வெளியில் மேய்வதால், உயிருக்கு மிகவும் ஆபத்தான வெள்ளைக் கழிச்சல் நோய் தாக்குதலுக்கு உள்ளாகின்றன. இந்நோயிலிருந்து கோழிகளைப் பாதுகாப்பதற்கு இத்துறை அனைத்து கால்நடை நிலையங்கள் மற்றும் கிளை நிலையங்களில் வாரத்திற்கு ஒருமுறை குறிப்பிட்ட நாளில் தடுப்பூசி போட்டு வருகின்றன. இந்நோய் தொடர்பாக கிராம மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடனும், நோயிலிருந்து கோழிகளைக் காக்கும் பொருட்டும், இத்துறையால் ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி மாதத்தில் மாநில அளவிலான வெள்ளைக் கழிச்சல் தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்படுகிறது. கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்களிலும் இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. *2007-2008* ஆம் ஆண்டில், *38.40* இலட்சம் கோழிகள் இந்த இருவார சிறப்புத் தடுப்பூசி முகாம்கள் மூலம் பயனடைந்துள்ளன.

**மாநில கோழிப் பண்ணைகளுக்கு உதவி**

கிராமப்புற மக்களிடம் புழைக்கடை கோழி வளர்ப்பினை ஊக்கப்படுத்தி அவர்களின் பொருளாதாரம் மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், குறு விவசாயிகள், நிலமற்ற தொழிலாளர்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் சமுதாயத்தில் பின்தங்கிய பிரிவினருக்குக் கூடுதல் தொழில்களை உருவாக்கவும், வேலைவாய்ப்பும், துணை வருவாயை ஈட்டவும், இத்துறை மத்திய மாநிலப் பங்களிப்புத் திட்டத்தின்கீழ் *(80:20)* காட்டுப்பாக்கம், கோழிப் பண்ணையில் ரூ*74.69* இலட்சம் ஒதுக்கீட்டிலும், ஓசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையில் ரூ. *85.00* இலட்சம் மொத்த ஒதுக்கீட்டிலும் இத்திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின்மூலம் கொட்டகைகள் மற்றும் பண்ணை உள் கட்டமைப்புகள் வலுப்படுத்தப்பட்டு வருகின்றன. இத்துடன் வனராஜா/கிரிராஜா கோழிகளின் பெற்றோர் இருப்புப் பண்ணையில் சேர்க்கப்பட்டுள்ளது. இவை தவிர பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, கோழி வளர்ப்பில் ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். பயனாளிகளுக்கு 10 பெட்டைகள் மற்றும் ஒரு சேவல் கொண்ட அலகுகள் வழங்கப்படும். 2007-2008 ஆம் ஆண்டில், மேற்கண்ட திட்டம் ஒரத்தநாடு மற்றும் செட்டிநாடு மாவட்டக் கால்நடைப் பண்ணைகளில் ஒவ்வொரு பண்ணைக்கும் ரூ.85.00 இலட்சம் செலவில் விரிவுபடுத்தப்பட உள்ளது.

**வான்கோழி வளர்ப்பு**

புழைக்கடை வான்கோழி வளர்ப்பு, ஒரு இலாபகரமான தொழில் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடனும் இதைக் கிராமப்புற விவசாயத் தொழிலாகப் பிரபலப்படுத்தவும், சுய வேலைவாய்ப்பை உருவாக்கவும் காட்டுப்பாக்கம் கோழிப் பண்ணை மற்றும் ஓசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணை ஆகியவற்றில் வான்கோழி வளர்ப்புப் பிரிவுகளை இத்துறை பராமரித்து வருகின்றது. 2007-2008 ஆம் ஆண்டில், 207 வான்கோழிகள் மேற்கண்ட பிரிவுகளில் வளர்க்கப்படுகின்றன.

**பறவைக் காய்ச்சல்**

2003 ஆம் ஆண்டிலிருந்து $H_5N_1$ வகை நச்சுயிரியினால் பரவப்படும் உயிர்க்கொல்லி நோயான பறவைக் காய்ச்சல் ஆப்ரிக்கா, ஆசியா மற்றும் ஐரோப்பா கண்டங்களில் 45 நாடுகளில் பரவி, 250 மில்லியன் பறவைகளுக்கு மேலாக இறப்பினை ஏற்படுத்தியது மட்டுமின்றி, 14 நாடுகளில் 220-க்கும் மேலான மனிதர்கள் இறப்பதற்குக் காரணமாகியுள்ளது. இந்நோய் இந்தியாவில் 5 நோய்க் கிளர்ச்சிகளை ஏற்படுத்தியுள்ளது. முதல் 2 நோய்க் கிளர்ச்சிகள் மகாராஷ்டிரா, குஜராத் மற்றும் மத்தியப்பிரதேச மாநிலங்களில் பிப்ரவரி 2006 முதல் ஏப்ரல் 2006 வரையிலும், மூன்றாவது நோய்க் கிளர்ச்சியானது மணிப்பூரில் ஜூலை 2007 ஆம் மாதத்திலும், நான்காவது நோய்க்கிளர்ச்சியானது மேற்கு வங்காளத்தில் ஜனவரி 2008 முதல் பிப்ரவரி 2008 வரையிலும், ஐந்தாவது நோய்க் கிளர்ச்சியானது திரிபுரா மாநிலத்திலும் ஏற்பட்டுள்ளது. கால்நடை பராமரிப்புத் துறையானது கோழிப் பண்ணைகள், புழைக்கடை கோழி வளர்ப்புப் பகுதிகள் மற்றும் பறவைகள் சரணாலயங்களில் தீவிரக் கடுங்கண்காணிப்பினை மேற்கொண்டு வழக்கத்திற்கு மாறாக ஏதாவது நோய்நிலை அல்லது



கோழிகள் இறப்பு அல்லது இடம்பெயரும் பறவைகளில் இறப்பு ஏற்படுகிறதா என கவனித்து வருகிறது. இம்மாநிலம் நோய்க் கிளர்ச்சியினால் ஏற்படும் அவசர நிலைமையை எதிர்கொள்ள முழுமையாகத் தயார்நிலையில் உள்ளதோடு, நோய்ப் பரவாமல் தடுக்க உடனடி நடவடிக்கையை விரைவாக எடுக்கவும் தயாராக உள்ளது. கீழ்க்கண்ட நடவடிக்கைகள் இந்த அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளன:—

- மாநில அளவிலான உயர் மட்டக் குழு, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் தலைமையின்கீழ் பறவைக் காய்ச்சல் நோயினைத் தடுப்பதற்காக இம்மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் கடுங்கண்காணிப்பு மற்றும் முன்னேற்பாடு பணிகளைக் கண்காணித்து வருகிறது. கால்நடை பராமரிப்புத் துறை தவிர இக்குழுவில் உள் துறை, பொது சுகாதாரத் துறை, வனத் துறை, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திலிருந்து அங்கத்தினர்கள் உள்ளனர். இந்த மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுவானது நெருக்கடி நிலை ஏற்படும்போதெல்லாம் மேற்கொள்ளப்பட வேண்டிய செயல்பாடுகள் மற்றும் நடவடிக்கை திட்டங்களை வகுக்கும்.

- அனைத்து மாவட்டங்களிலும் ஒரு மாவட்ட உயர் மட்டக் குழுவானது மாவட்ட ஆட்சியர் தலைமையில், மாவட்ட அளவிலான அலுவலர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு அம்மாவட்டத்தில் பறவைக் காய்ச்சல் நோய்த் தடுப்பு கடுங்கண்காணிப்பு மற்றும் முன்னேற்பாட்டுப் பணிகளை கண்காணித்து வருகிறது.

- அரசுக் கால்நடை உதவி மருத்துவர்கள், அனைத்துக் கோழிப் பண்ணைகளையும் நேரில் பார்வையிட்டு வழக்கத்திற்கு மாறாக கோழிகளின் நோய்நிலை அல்லது இறப்பு ஏற்படுகிறதா என கடுங்கண்காணிப்புப் பணியின் ஒரு பகுதியாக ஆய்வு செய்கின்றனர்.

- இம்மாநிலத்திலுள்ள அனைத்துப் பறவைகள் சரணாலயங்களும் வனச் சரக அலுவலர்கள் மற்றும் கால்நடை உதவி மருத்துவர்களால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு இடம் பெயரும் பறவைகளின் உடல்நலம் பரிசோதிக்கப்படுகிறது.

[2008 ஏப்ரல் 30

- மாதந்தோறும் ஊநீர் மாதிரிகள் இம்மாநிலம் முழுவதும் 800 பறவைகளில் இருந்து சுற்று மாதிரிச் சோதனை முறையில் சேகரிக்கப்பட்டு, பெங்களூருவில் உள்ள இந்திய அரசு ஆய்வுக் கூடத்திற்குப் பறவைக் காய்ச்சல் நோய் கண்டறிய அனுப்பப்படுகிறது.

- மாநிலத்தில் 200 துரித செயல்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டு, பறவைக் காய்ச்சல் நோய்க் கிளர்ச்சி ஏதேனும் ஏற்பட்டால் அதனை எதிர்கொள்ளவும், நோய் பரவாமல் தடுக்க பறவைகளை அழிக்க, கிருமிநாசினி செய்வது குறித்தும் தேவையான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

- அனைத்துக் கால்நடை மருத்துவர்களுக்கும் பறவைக் காய்ச்சல் நோயினைத் தடுப்பது மற்றும் கட்டுப்படுத்துவது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசின் பறவைக் காய்ச்சல் நோய் கட்டுப்படுத்துதல் தொடர்பான நடவடிக்கை திட்ட புத்தகங்கள் அனைத்துக் கால்நடை மருத்துவர்களுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

- பறவைக் காய்ச்சல் நோய் தொடர்பாக, கோழிப் பண்ணையாளர்கள் மற்றும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. கோழிப் பண்ணைகளில் நோய்க் கிருமிகள் நுழையாமல் தடுப்பதற்கு மேற்கொள்ளவேண்டிய உயிர்ப் பாதுகாப்பு முறைகள் பற்றிய துண்டுப் பிரசுரங்கள் மற்றும் விளம்பரப் பதாகைகள்மூலம் விரிவான பிரச்சாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

- தனிமனிதப் பாதுகாப்புக் கவசங்கள், தெளிப்பான்கள், தீ உமிழ் துப்பாக்கிகள், நோய்க் கிருமிநாசினி மற்றும் இதர சாதனங்கள் நோய்க் கிளர்ச்சியை எதிர்கொள்ள முன்னேற்பாடாகக் கொள்முதல் செய்யப்பட்டு அனைத்துக் களப்பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

- நோய் பரவாமல் தடுப்பதற்காகப் பறவைகளைக் கட்டாயத்தின்பேரில் அழிக்க வேண்டியிருப்பின், உடனடி நிவாரணமாக கோழி வளர்ப்போருக்கு வழங்குவதற்காக ரூ.50.00 இல்ட்சம் வங்கியில் வைக்கப்பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 30]

- மற்ற மாநிலங்களில் பறவைக் காய்ச்சல் நோய்க் கிளர்ச்சி ஏற்படும்போதெல்லாம் சோதனைச் சாவடிகள் உடனடியாக மாநில எல்லையில் ஏற்படுத்தப்பட்டு கோழிகள், முட்டைகள், கோழித் தீவனங்கள், கோழிக் கழிவுகள் மற்றும் இதரபொருட்கள் பாதிக்கப்பட்ட மாநிலங்களிலிருந்து வராமல் தடை செய்யப்படுகின்றன. பிற மாநிலங்களிலிருந்து வரும் வாகனங்கள் முழுமையாக சோதனை செய்யப்பட்டு கிருமிநாசினி தெளிக்கப்பட்ட பின்னரே அனுமதிக்கப்படுகின்றன. இருப்புப்பாதை நிலையங்கள் மற்றும் முக்கிய விமான நிலையங்கள் இதுசம்பந்தமாக விழிப்படையச் செய்யப்பட்டு, நோய்க் கிருமிகள் நுழையாமல் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**சிறப்புத் திட்டங்கள்**

கால்நடை வளர்ப்பு, கிராமப்புற மக்களின் பொருளாதாரத்தை முன்னேற்றம் செய்ய முக்கிய ஆதாரமாக உள்ளது. அவை அவர்களின் பொருளாதாரம் மற்றும் சமூக நிலையில் உயர் தகுதி அளிக்க பெரும் துணை புரிகிறது. பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்பவும், விவசாய நிலங்களின் விலை ஏற்றத்தினாலும், குறைந்து வரும் நீர் ஆதாரங்களினாலும், அறிமுகப்படுத்தப்பட்ட நல்ல உற்பத்தித் திறன் கொண்ட கால்நடைகளினாலும், விவசாயிகள் தங்கள் வாழ்க்கையை நடத்திட ஏதாவது ஒரு கால்நடை வளர்ப்பில் கவனம் செலுத்துகின்றனர். ஆகையால் இப்பிரிவினருக்கு வேலைவாய்ப்பினை அளிக்கவும், ஏழை மக்களைக் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுத்தி, அவர்களின் துயர்துடைக்கவும், இத்துறை பயனாளிகள் பயன்பெறும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

D V211,31 p08 p08.51.2

**1. கால்நடை பாதுகாப்புத் திட்டம்**

- கால்நடை பாதுகாப்புத் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றத்தில் 18-01-2000 அன்று தொடங்கப்பட்ட முன்னோடித் திட்டமாகும்.

- இத்திட்டத்தின்கீழ் குக்கிராமங்களில் வளர்க்கப்படும் கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு முழுமையான கால்நடை மருத்துவ வசதி அளிக்கும் [illegible] முகாம்கள் நடத்தப்படுகின்றன.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228 386.
சென்னை-600 008

[2008 ஏப்ரல் 30

- இச்சிறப்பு முகாம்கள் 385 ஊராட்சி ஒன்றியங்களிலும், முகாம் ஒன்றுக்கு ரூ.5,000/- மொத்த செலவில் மாதத்திற்கு ஒன்று வீதம் நடத்தப்படுகின்றன.
- முகாம் நடத்துவதற்கு முன் தினம், முகாம் நடைபெற இருக்கும் கிராமத்திலும் மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களிலும் முகாம் நடைபெறுவது குறித்து விரிவான பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது. அப்போது முகாமில் நடைபெறவுள்ள செயல்பாடுகள் குறித்து துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்படுகின்றன.
- மேலும், உள்ளூர் ஊராட்சி மன்றத் தலைவர், ஊராட்சி ஒன்றியத் தலைவர் மற்றும் கால்நடை பராமரிப்பில் ஆர்வமுள்ளவர்களின் உதவியும் விளம்பரம் மற்றும் பிரச்சார பணிக்குப் பயன்படுத்தப்படுகிறது.
- இவ்வகை முகாம்களில் உடல்நலம் பேணுதல், நோய்த் தடுப்பு, குடற்புழு நீக்கம், ஆண்மை நீக்கம், செயற்கை முறைக் கருவூட்டல், சினைப் பரிசோதனை மற்றும் மலடு நீக்க சிகிச்சை போன்ற பணிகள் இலவசமாக மேற்கொள்ளப்படுகின்றன.
- கால்நடைகளுக்கு ஏற்படும் பலவிதமான நோய்கள் பற்றிய விளக்கங்கள், நோய்த் தடுப்பு முறைகள் மற்றும் தீவன உற்பத்தி முறைகள் போன்றவை செயல் விளக்கத்துடன் கண்காட்சியில் வைக்கப்பட்டு கிராம மக்களிடையே விழிப்புணர்வு உண்டாக்கப்படுகிறது. நடப்பாண்டில் ஒவ்வொரு முகாமிலும் கன்றுகள் பேரணி என்ற புதிய நிகழ்ச்சி அறிமுகப்படுத்தப்பட்டு சிறந்த கன்றுகளுக்கு ரூ.400/-வீதம் பரிசு வழங்கப்பட்டு வருகிறது.
- 2007-2008 ஆம் ஆண்டில், 5,500 முகாம்கள் நடத்தப்பட்டு, 67.00 இலட்சம் கால்நடைகள் மற்றும் கோழியினங்களுக்கு மருத்துவ சேவைகள் மற்றும் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, 16.98 இலட்சம் விவசாயிகள் பயனடைந்தனர்.



2008 ஏப்ரல் 30]

- இந்த முகாம்களினால் பயன்பெறும் பயனாளிகள், முகாம் நடத்தப்படும் கிராமங்கள் மற்றும் அவற்றைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள கால்நடை வளர்க்கும் விவசாயிகளாவர். அனைத்துச் சேவைகளும் விவசாயிகளின் இருப்பிடத்திலேயே இலவசமாகக் கிடைப்பதால், இத்திட்டம் விவசாயிகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.
- 2008-2009 ஆம் ஆண்டில், முகாமொன்றுக்கு ரூ.5,000/- வீதம் 5,500 முகாம்கள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**2. தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்**

உலக வங்கி உதவியுடன்கூடிய தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தைச் செயல்படுத்தும் தொடர்புத் துறைகளில் கால்நடை பராமரிப்புத் துறையும் ஒன்றாகும். இத்திட்டம் 2007 ஆம் ஆண்டு முதல் 6 ஆண்டு கால அளவில் செயல்படுத்தப்பட உள்ளது. வேளாண்மை மற்றும் சார்புத் தொழில்களில் ஒவ்வொரு அலகு நீரின் பயன்பாட்டை மேம்படுத்தி, இறுதியில் பண்ணை வருவாயை அதிகரிப்பதே இத்திட்டத்தின் முதன்மை நோக்கமாகும். உலக வங்கி, திட்டக்காலத்தில் 63 உப வடிநிலங்களில் கால்நடை பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள, ரூ.3,938 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

இத்திட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் நோக்கங்கள் பின்வருமாறு:—

- உப வடிநிலங்களில் உள்ள கால்நடைகளின் உற்பத்தித் திறனை அதிகரிப்பது.
- விவசாயிகளின் இருப்பிடங்களில் அல்லது மிக அருகில் கால்நடை மருத்துவ சேவை மற்றும் இனப்பெருக்க உதவியை அளிப்பது.
- முழுமையான கால்நடை பாதுகாப்பினை - நோய்த் தடுப்பு மற்றும் குணப்படுத்துதல் உறுதிப்படுத்துவது.
- மாட்டினங்களின் சினைப் பிடிப்பு மற்றும் கன்று பிறப்பு சதவீதத்தினை அதிகரிப்பது.
- பசுந்தீவனத் தேவை மற்றும் கிடைக்கும் அளவிற்கான இடைவெளியைக் குறைப்பது.
- சிறந்த கால்நடை பராமரிப்பு முறைகள் / தொழில்நுட்பம் பற்றிய விவசாயிகளின் அறிவாற்றலை மேம்படுத்துவது.

[2008 ஏப்ரல் 30

உப வடிநிலங்களில், துறை மேற்கொள்ள உள்ள செயல்பாடுகள் பின்வருமாறு:—

- வேலையில்லாக் கால்நடை மருத்துவப் பட்டதாரிகளின் சேவைகளைப் பயன்படுத்தி, சேவையில்லாப் பகுதிகளில் விவசாயிகளால் வளர்க்கப்படும் கால்நடைகளுக்குக் கால்நடை மருத்துவ சேவை மற்றும் இனப்பெருக்க உதவி, உப வடிநில கால்நடை மருத்துவப் பிரிவுகள் ஏற்படுத்தி வழங்குதல்.
- கால்நடை நிலையங்களுக்குத் தேவையான அத்தியாவசிய உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தி, தரமான கால்நடை மருத்துவ சேவை மற்றும் நோய் ஆய்வை வழங்குதல்.
- செயற்கைமுறைக் கருவூட்டலுக்கு அதிக பலன் தரக்கூடிய உறைவிந்து குச்சிகளைப் பயன்படுத்துதல்.
- கூடுதல் பகுதிகளைப் பசுந்தீவன சாகுபடிக்குக் கொண்டு வந்து, பசுந்தீவனம் கிடைப்பதை அதிகரித்தல்.
- மலடு நீக்கம் மற்றும் முழுமையான கால்நடை மருத்துவ சேவை முகாம்கள் மற்றும் தாதுக் கலவை வழங்குவதன் வாயிலாக முழுமையான கால்நடை மருத்துவ சேவையை உறுதிப்படுத்துவது மற்றும் சினைப் பிடிப்பு சதவீதத்தினை அதிகரித்தல்.
- பல்வேறு தகவல், படிப்பு மற்றும் தகவல் தொடர்பு பிரச்சாரங்கள் மற்றும் பயிற்சிகள் வாயிலாக விவசாயிகளுக்குச் சிறந்த கால்நடை பராமரிப்பு முறைகள் / தொழில்நுட்பம் பற்றிய அறிவாற்றலை மேம்படுத்துதல்.

2007-2008 ஆம் ஆண்டில், இத்திட்டம், வராகநதி, மேல்வெள்ளாறு, தெற்கு வெள்ளாறு, பாலாறு (பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம்), ஆழியாறு (பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம்), பாம்பாறு, அர்ஜுனா நதி, மணிமுத்தாறு மற்றும் கோட்டைக்கரையாறு ஆகிய 9 உப வடிநிலங்களில் முதல் கட்டமாக ரூ.262.62 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட உள்ளது.

2007-2008 ஆம் ஆண்டில், கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:—

- 27 உப வடிநில கால்நடை மருத்துவப் பிரிவுகளை ஏற்படுத்தி, விவசாயிகளின் வீடுகளிலோ அல்லது மிக அருகிலோ வேலையில்லாக் கால்நடை மருத்துவப் பட்டதாரிகளின் சேவைகளைப் பயன்படுத்தி, இனப்பெருக்க உதவி மற்றும் கால்நடை மருத்துவ சேவைகள் வழங்கப்படுகின்றன.



2008 ஏப்ரல் 30]

- தீவன உள்ளீடுகளான கோ-3 கரணைகள், கொழுக்கட்டை மற்றும் பல தீவனங்கள் வழங்கி, 770 ஹெக்டேர் நிலம் பசுந்தீவன சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.
- 600 மலடு நீக்கம் மற்றும் முழுமையான மருத்துவ சேவை முகாம்கள் நடத்தி முடிக்கப்பட்டன.
- 800 இரவு கூட்டங்கள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.
- துண்டுப் பிரசுரங்கள் விநியோகம், விளம்பரப் பலகைகள் நிறுவுதல் மற்றும் சுவர் விளம்பரம் மூலமாக தகவல், கல்வி மற்றும் தகவல் தொடர்பு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- 3,600 விவசாயிகளுக்கு சிறந்த கால்நடை பராமரிப்பு பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டது.

2008-2009 ஆம் ஆண்டில், 9 உப வடிநிலப் பகுதிகளுடன், கவுண்டின்ய நதி, பொய்னி, ஸ்வேதா நதி, சின்னாறு, ஆணைவாரி ஓடை, அக்னியாறு, அம்புலியாறு, தெற்காறு, மேல் வைகை, மேல் குண்டாறு, செங்கோட்டையாறு, கலிங்கலாறு, நிசபநதி, பொன்னையாறு மற்றும் வறட்டாறு-நாகலாறு ஆகிய 15 உப வடிநிலங்களும் செயல்படுத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளன.

**திட்டமிடப்பட்டுள்ள செயல்பாடுகள்:**

- விவசாயிகளின் வீடுகளிலோ அல்லது மிக அருகிலோ இனப்பெருக்க உதவி மற்றும் கால்நடை மருத்துவ சேவைகள், பொதுத் துறை மற்றும் தனியார் பங்களிப்புடன் வேலையில்லாக் கால்நடை மருத்துவப் பட்டதாரிகளின் சேவைகளைப் பயன்படுத்தி 15 கூட்டு உப வடிநிலப் பிரிவுகள் ஏற்படுத்தி வழங்கப்படும்.
- தீவன உள்ளீடுகளான கோ-3 கரணைகள், கொழுக்கட்டை, தீவன சோளம், தீவன மக்காச் சோளம் போன்றவற்றை இலவசமாக வழங்கி 580 ஹெக்டேர் தனியார் நிலம் பசுந்தீவன சாகுபடிக்குக் கொண்டுவரப்படும்.
- இத்துடன் அசோலா வளர்ப்பு ஊக்குவிக்கப்படும்.

[2008 ஏப்ரல் 30

- ❖ 14 இலட்சம் ஆடுகளுக்கு இலவசமாகக் குடற்புழு நீக்கம் செய்வதன்மூலம் காலமுறையில் குடற்புழு நீக்கம் செய்யும் வழக்கத்தைக் கொண்டுவருதல்.
- ❖ இலவசமாக அடையாளமிடுதல்மூலம் இனவிருத்திக்கு உகந்த மாடுகளை முறையாகக் கண்டறிதல்.
- ❖ மலடு நீக்க மற்றும் உடல் நல சிகிச்சை முகாம்கள் நடத்துவதன் மூலம் இனவிருத்தி மற்றும் உடல் நலத்தை மேம்படுத்துதல்.
- ❖ அரையாண்டுக்கொருமுறை விவசாயிகளுடன் தொடர்புக் கூட்டங்களை நடத்தி விவசாயிகளின் அறிவாற்றலை மேம்படுத்துதல்.
- ❖ துண்டுப் பிரசுரங்கள் விநியோகம், விளம்பரப் பலகைகள் நிறுவுதல் மற்றும் சுவர் விளம்பரம்மூலமாகத் தகவல், கல்வி மற்றும் தகவல் தொடர்பு பிரச்சாரங்கள் மேற்கொள்ளுதல்.
- ❖ சிறந்த கால்நடை வளர்ப்பு பற்றி விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல்.
- ❖ கால்நடை மருத்துவர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சி அளித்தல்.

**3. கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக மாநிலங்களுக்கு உதவித் திட்டம் (அஸ்காட்):**

பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த கால்நடைகளைத் தாக்கும் நோய்களைக் கட்டுப்படுத்த, மத்திய அரசு உதவியுடன் "கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக மாநிலங்களுக்கு உதவி" என்ற திட்டம் 75 சதவீதம் மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இதில், "பயிற்சி/ கருத்தரங்குகள்" மட்டும் 100 சதவீத உதவியுடன் செயல்படுத்தப்படுகின்றன.

2007-2008 ஆம் ஆண்டில், கீழ்க்கண்ட பணிகள் நிறைவேற்றப்பட்டன:-

- ☑ திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 20.00 இலட்சம் கால்நடைகளுக்குத் **தொண்டை அடைப்பான் நோய் தடுப்பூசிகள்** போடப்பட்டன.
- ☑ காஞ்சிபுரம், புதுக்கோட்டை, சிவகங்கை, விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் 20.00 இலட்சம் கால்நடைகளுக்குத் **சப்பை நோய்த் தடுப்பூசிகள்** போடப்பட்டன.



2008 ஏப்ரல் 30]

- ☑ திண்டுக்கல், மதுரை, தஞ்சாவூர், விழுப்புரம், திருவண்ணாமலை, தேனி, திருநெல்வேலி மற்றும் வேலூர் மாவட்டங்களில் 31.51 இலட்சம் மாடுகள், செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகளுக்கு **அடைப்பான் நோய்த் தடுப்பூசிகள்** போடப்பட்டன.
- ☑ **கோமாரி நோய்,** கால்நடைகளைத் தாக்கி விவசாயிகளுக்குப் பொருளாதார இழப்பை ஏற்படுத்தும் ஒரு நச்சுயிரி நோயாகும். 2007-2008 ஆம் ஆண்டு நோய்க் கிளர்ச்சியின்போது, இத்துறை கோமாரி நோய்த் தடுப்பூசி போட்டு மாநிலத்தை முழுமையாகப் பாதுகாத்துள்ளது. மொத்தத்தில் 82.06 இலட்சம் மாடுகளுக்குத் தடுப்பூசி போடப்பட்டு, நோய் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. 2008-2009 ஆம் ஆண்டில் 95 சதவீத கால்நடைகளுக்குக் கோமாரி நோய்த் தடுப்பூசி போடத் திட்டமிடப்பட்டுள்ளது.
- ☑ மாநிலத்தில் 43.44 இலட்சம் செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகளுக்கு **ஆட்டுக்கொல்லி நோய்த் தடுப்பூசிகள்** போடப்பட்டன.
- ☑ இராணிப்பேட்டை, கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் உள்ள கோழித் தடுப்பூசி ஆய்வுக் கூடத்தை நல்ல தயாரிப்பு வழிமுறைகள் தரத்திற்கு மேம்படுத்திட, ரூ.155.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- ☑ 60 கால்நடை உதவி மருத்துவர்களுக்குப் பல்வேறு நோய் கண்டறியும் வழிமுறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்படும்.
- ☑ பறவைக் காய்ச்சல் நோய்க்கு எதிராக துரித செயல்பாட்டுக் குழுக்களுக்குத் தேவையான பொருட்கள் வாங்க மற்றும் பயிற்சிக்கு ரூ.4.88 இலட்சம் வழங்கப்பட்டது.

இத்துடன் பல்வேறு நோய்கள் மற்றும் தடுப்பு முறைகள் குறித்த துண்டுப் பிரசுரங்கள் மற்றும் சிறு புத்தகங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

**4. மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்:**

**செயல்படுத்தப்படும் பகுதி:** கோயம்புத்தூர், திண்டுக்கல், தேனி, மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, ஈரோடு மற்றும் விருதுநகர் ஆகிய 8 மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி மாவட்டங்களின் 135 நீர்ப்பிடிப்புப் பகுதிகள்.

[2008 ஏப்ரல் 30

2008-2009 ஆம் ஆண்டில், இத்திட்டம் கீழ்க்கண்ட செயல்பாடுகளுடன் நிறைவேற்றப்படும்:—

- ✓ தீவன அபிவிருத்தி
- ✓ விவசாயிகளுக்குப் பயிற்சி
- ✓ கிரிராஜா கோழி அலகுகள் விநியோகம்
- ✓ கலப்பினக் கிடேரிக் கன்றுகள் விநியோகம்
- ✓ ஆடு அலகுகள் விநியோகம்
- ✓ மலடு நீக்க சிகிச்சை முகாம்கள் நடத்துதல்.

**5. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்:**

**செயல்படுத்தப்படும் பகுதி:** நீலகிரி மாவட்டம்

**செயலாக்க முறை:**

- ❖ சாகுபடி செய்ய இயலாத நிலத்தினைத் தீவன உற்பத்திக்கு ஏற்ற வகையில் மாற்றுதல்.
- ❖ 25 சதவீத மானியத்தில் கிரிராஜா கோழிகள் வழங்குதல்.
- ❖ உயர் ரகக் கலப்பினக் காளைகளை இனப்பெருக்கத்திற்காகவும், கலப்பினக் கிடேரிக் கன்றுகளையும் தாழ்த்தப்பட்ட மலைவாழ் பயனாளிகளுக்கு வழங்குதல்.
- ❖ சோலூர்மட்டத்தில் புதிய கால்நடை மருந்தகம் கட்டுதல் மற்றும் எருமாடு கால்நடை கிளை நிலையத்தில் பழுதுகள் மேற்கொள்ளுதல்.
- ❖ 2007-2008-ல், மேற்கண்ட திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக அரசு ரூ. 16.91 இலட்சத்தை வழங்கியுள்ளது.

**6. கோமாரி நோய்த் தடுப்புத் திட்டம்:**

**செயல்படுத்தப்படும் பகுதி :** 2004 முதல் கன்னியாகுமரி மாவட்டத்தில்.

**செயலாக்க முறை:**

- ☑ மத்திய அரசு வழிகாட்டுதலின்படி, திட்டப் பகுதியில் கோமாரி நோய் தாக்கக்கூடிய கால்நடைகளுக்கு முறையாக தடுப்பூசி போடுதல்.



2008 ஏப்ரல் 30]

- ☑ 2004-2005 வரை, கோமாரி நோய்த் தடுப்பூசி பணி நான்கு கட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது.
- ☑ 2005-2006 ஆம் ஆண்டில், திட்டப் பகுதியில் கோமாரி நோய்த் தடுப்பூசி பணி மேற்கொள்ள அரசு ரூ. 40.61 இலட்சமும் மற்றும் ஒரு இலட்சம் தடுப்பூசியும் வழங்கி இப்பணி நிறைவேற்றப்பட்டது.
- ☑ 2006-2007 ஆம் ஆண்டில், இத்திட்டப் பணிகளை மேற்கொள்ள அரசு ரூ. 12.88 இலட்சம் வழங்கியுள்ளது.
- ☑ 2007-2008 ஆம் ஆண்டில், கன்னியாகுமரி மாவட்டத்தில் இத்திட்டப் பணிகளை மேற்கொள்ள அரசு ரூ. 10.00 இலட்சம் வழங்கியுள்ளது.

**7. மாதிரி வரைவுத் திட்டம்:**

**செயல்படுத்தப்படும் பகுதிகள்:** 1977 முதல் அனைத்து மாவட்டங்கள்.

**செயலாக்க முறை:**

- ⏩ ஒருங்கிணைந்த மாதிரி வரைவுத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும் 50 சதவீதம் மத்திய அரசு உதவியுடன்கூடிய திட்டமாகும். இது கால்நடை உற்பத்திப் பொருட்களான பால், முட்டை மற்றும் இறைச்சி ஆகியவை பற்றி நம்பகமான புள்ளிவிவரங்களை உரிய நேரத்தில் கிடைக்கச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- ⏩ மேலும் இது கால்நடை மேலாண்மை முறைகளை ஆண்டுதோறும் மற்றும் பருவம் வாரியாக தொடர்ந்தாற்போல் விவரங்களைப் பெற்று ஆய்வு செய்து வருகிறது. இவ்வாறு களத்திலிருந்து பெறப்பட்ட புள்ளிவிவரங்களைப் பகுப்பாய்வு செய்வதன்மூலம் பால் உற்பத்தி மற்றும் இதர கால்நடை பொருட்கள் பற்றி மதிப்பீடு செய்கிறது.
- ⏩ 2007-2008 ஆம் ஆண்டில், பல்வேறு இனங்களில் இறைச்சி உபபொருட்களின் உற்பத்தி விகிதத்தை மதிப்பிடுவதற்காக ஒரு ஆய்வை இத்துறை மேற்கொண்டுள்ளது.

[2008 ஏப்ரல் 30

**2006-2007 ஆம் ஆண்டில் பால், முட்டை, இறைச்சி உற்பத்தி மதிப்பீடு மற்றும் 2007-2008-க்கான இலக்கு**

| இனம் | சாதனை 2006-07 | குறியீடு 2007-08 |
|---|---|---|
| பால் (இலட்சம் மெட்ரிக் டன்கள்) | 55.60 | 55.90 |
| முட்டை (மில்லியன்களில்) | 8,044 | 8,366 |
| இறைச்சி (மில்லியன் கிலோ) | 220 | 229 |

இது இத்துறையினால் தொடங்கப்பெற்று செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு கால்நடை மேம்பாடு பற்றிய செயல்பாடுகளின் தாக்கத்தைக் கணக்கிடவும், கண்காணிக்கவும் உதவுகின்றது. இந்த ஆய்வு அளிக்கும் அடிப்படைப் புள்ளிவிவரங்கள் எதிர்காலத்தில் நிறைவேற்றுவதற்கான திட்டங்களைத் திட்டமிட உதவுகின்றது.

**கூட்டுறவுச் சங்கங்கள்**

ஆடு, கோழி மற்றும் பன்றி வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள், 1964 முதல் இத்துறையில் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களின் செயல்முறைப் பதிவாளராக கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையர் உள்ளார். நலிவுற்ற பிரிவினரைச் சங்கத்தின் உறுப்பினர்களாக்கி அவர்களின் பொருளாதார நிலைமையை உயர்த்துவதே சங்கங்களின் நோக்கமாகும். 31-03-2008 அன்று உள்ளபடி, இத்துறையில் மொத்தம் 338 சங்கங்கள் இருந்தன. இதில் 81 சங்கங்கள் செயல்படுபவை; மற்றும் 257 சங்கங்கள் செயல்படாதவை.

**தமிழ்நாடு கோழி அபிவிருத்திக் கழகம்**

தமிழ்நாடு கோழி அபிவிருத்திக் கழகம் 12 ஜூலை 1973 ஆம் ஆண்டில், கம்பெனி சட்டத்தின்படி வரையறுக்கப்பட்டது. தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கி வந்ததால் அதன் செயல்பாட்டை முடிவுக்குக் கொண்டு வர அரசு முடிவெடுத்துள்ளது. பிரிவு 25 (ஓ) தொழில் தகராறுகள் சட்டத்தின்படி 20-12-2000 முதற்கொண்டு இக்கழகத்தை மூடிவிட தகுதியுடைய தொழிலாளர் நல ஆணையர் அனுமதி வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு கோழி அபிவிருத்திக் கழகத்தின் பல இடங்களில் இருக்கும் இடம்பெயரும் மற்றும் இடம்பெயரா சொத்துக்கள்



2008 ஏப்ரல் 30]

அனைத்தும் அரசு உத்தரவின்பேரில் கால்நடை பராமரிப்புத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. தமிழ்நாடு கோழி அபிவிருத்திக் கழகம் தொடக்க காலத்திலிருந்து அரசுக்குத் திரும்பச் செலுத்த வேண்டிய கடன், முன்பணம் மற்றும் அதன் வட்டியும் சேர்த்து ரூ. 8,52,35,844/- தள்ளுபடி செய்வதற்கான பிரேரணை பரிசீலனையில் உள்ளது. நிறுவன சட்டத்தின்படி தமிழ்நாடு கோழி அபிவிருத்திக் கழகத்தினைக் கலைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**கால்நடை மருத்துவப் பணிகள்**

கால்நடை பராமரிப்புத் துறை, மாநிலத்தில் உள்ள கால்நடைகள் மற்றும் கோழிகளுக்குத் தேவைப்படும் கால்நடை மருத்துவ உதவி, உடல் நலம் பேணுதல் மற்றும் இனப்பெருக்க உதவியை அளிக்கும் பணியில் முக்கிய அங்கம் வகிக்கின்றது. இதன்மூலம் செயற்கைமுறைக் கருவூட்டல், சினைப் பிடிப்பு ஆய்வு, நோயுற்ற கால்நடைகளுக்கு சிகிச்சையளித்தல், தடுப்பூசி, குடற்புழு நீக்கம், ஆண்மை நீக்கம், விரிவாக்கப் பணிகள் மற்றும் பல்வேறு திட்டச் செயலாக்கம் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பல்வேறு தரத்தில் இயங்கி வரும் பல்வேறு நிலையங்கள் வாயிலாக இந்த வசதிகள் அளிக்கப்படுகின்றன. அந்தக் கால்நடை நிலையங்கள்:

| | | |
|---|---|---|
| பன்முக மருத்துவமனை | : | 6 |
| பிரதம கால்நடை மருத்துவமனை | : | 22 |
| கால்நடை மருத்துவமனை | : | 139 |
| கால்நடை மருந்தகம் | : | 1,207 |

மேற்கண்ட நிலையங்களோடு அல்லாமல் 1,829 கால்நடை கிளை நிலையங்கள் முதலுதவியையும் கருவூட்டல் சேவையையும் அளிக்கின்றன. மேற்கூறிய நிலையங்களில் பன்முக மருத்துவமனைகள் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகின்றன. இவை ஈனியல் சிறப்பு மருத்துவ சிகிச்சை, அறுவை சிகிச்சை மற்றும் மருத்துவம் போன்ற சிறப்பான மருத்துவ வசதிகளை அளிப்பதோடு உள்நோயாளி வசதியையும் கொண்டுள்ளன. உள்நோயாளி வசதிகள் அனைத்துப் பிரதம மருத்துவமனைகள் மற்றும் கால்நடை மருத்துவமனைகளிலும் உள்ளன. நாமக்கல் மற்றும் தஞ்சாவூர் தவிர, மாவட்டத் தலைமையிடங்களில் செயல்படும் அனைத்துக் கால்நடை நிலையங்களிலும் ஊடுகதிர் வசதி உள்ளது. மேலும், சென்னை,

[2008 ஏப்ரல் 30

கோயம்புத்தூர் மற்றும் மதுரை பன்முக மருத்துவமனைகளில் நுண்ணொலி (ultrasound scan) வசதி ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மாநிலத்தில் பட்டதாரி கால்நடை மருத்துவ நிலையங்கள் சேவை செய்யும் சராசரி கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 9,570 ஆகும். கோயம்புத்தூர், தருமபுரி, ஈரோடு, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், சேலம், சிவகங்கை, திருவள்ளூர், திருவண்ணாமலை, திருவாரூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் மாவட்ட பட்டதாரி கால்நடை மருத்துவ நிலையங்கள், மாநில சராசரியைவிட கூடுதலான கால்நடை அலகுகளுக்கு சேவை செய்கின்றன. ஒவ்வொரு பட்டதாரி கால்நடை மருத்துவ நிலையமும் சேவை செய்யும் சராசரி கிராமங்களின் எண்ணிக்கை 9 ஆகும்.

2007-2008 ஆம் ஆண்டில், மேற்கண்ட நிலையங்கள்மூலம் பயனடைந்த கால்நடைகளின் எண்ணிக்கை பின்வருமாறு:

| வ. எண் | கால்நடை நிலையங்கள் | 2007-2008 ஆம் ஆண்டில் பயனடைந்த கால்நடைகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கால்நடை நிலையங்கள் | 156.68 |
| 2 | நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் | 2.68 |
| 3 | கால்நடை கிளை நிலையங்கள் | 36.92 |
| | மொத்தம் | 196.28 |

**இருப்பிடங்களிலேயே கால்நடை மருத்துவ சேவை வழங்குதல்**

மாநிலம் முழுவதிலும் குக்கிராமங்களில் வசிக்கும் வேளாண் குடிமக்களால் வளர்க்கப்படும் கால்நடைகளுக்குத் தடுப்பூசி, குடற்புழு நீக்கம், இனவிருத்திக்காக செயற்கைமுறைக் கருவூட்டல் போன்ற மருத்துவ உதவிகள் பெற கால்நடை மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல முடியாததால், கால்நடை மருத்துவப் பணிகளை வழங்க 55 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. இப்பிரிவுகள் அவற்றிற்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் நிலையான கால அட்டவணைப்படி செயல்பட்டு வருகின்றன. 2007-2008ஆம் ஆண்டு, இப்பிரிவின் சேவைகளை மேம்படுத்திட,



2008 ஏப்ரல் 30]

கோயம்புத்தூர், ஈரோடு, மன்னார்குடி, கோவில்பட்டி, சீர்காழி மற்றும் மயிலாடுதுறை ஆகிய இடங்களில் உள்ள நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு ஊர்திகள் ரூ. 28.50 இலட்சம் செலவில் மாற்றப்பட்டுள்ளன. மக்களின் இருப்பிடத்திலேயே அவர்களுக்குச் சேவை கிடைப்பதால் இப்பிரிவின் சேவைகள் பொது மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன.

தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ், 9 உப வடிநிலங்களில் கால்நடை மருத்துவ சேவை மற்றும் கருவூட்டல் சேவை கிடைக்கப்பெறாத இடங்களில் சேவை அளிப்பதற்காக வேலையில்லாக் கால்நடை மருத்துவப் பட்டதாரிகளால் 50 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.

**பயிற்சித் திட்டங்கள்**

கால்நடை மருத்துவ சேவைகளின் தரத்தை உயர்த்தவும், கால்நடை பராமரிப்பின் முக்கியத் தொழில்நுட்ப கருத்துக்களைப் பரப்பவும், இத்துறை கால்நடை மருத்துவர்கள், சார்பு தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் விவசாயிகளுக்குப் பயிற்சிகளை நடத்தியுள்ளன. 2007-2008 ஆம் ஆண்டு, **தொழில்நுட்பப் பணியாளர்களுக்காகக்** கீழ்க்கண்ட பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன:

✓ மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள், 07-12-2007 அன்று சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில், புதியதாகப் பணியில் சேர்ந்த கால்நடை உதவி மருத்துவர்கள் மற்றும் கள கால்நடை உதவி மருத்துவர்களுக்குக் கருத்தரங்கு மற்றும் புத்தாக்கப் பயிற்சியினைத் தொடங்கி வைத்தார்கள். இதேபோன்ற பயிற்சிகள் விழுப்புரம், சேலம், தஞ்சாவூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் நடத்தப்பட்டு 245 புதிய கால்நடை உதவி மருத்துவர்கள் பயனடைந்துள்ளனர்.

✓ அஸ்காட் திட்டத்தின்கீழ் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியில் பறவைக் காய்ச்சல் நோய் பற்றிய பயிற்சி நடத்தப்பட்டு, கோழிகள் அதிகமாக உள்ள பகுதியிலிருந்து 10 கால்நடை உதவி மருத்துவர்கள் பயனடைந்துள்ளனர்.

✓ 2 மண்டல இணை இயக்குநர்கள், 42 உதவி இயக்குநர்கள் மற்றும் 35 கால்நடை உதவி மருத்துவர்கள் உள்ளிட்ட மொத்தம் 79 அலுவலர்களுக்கு, நாட்டிலுள்ள பல்வேறு நிலையங்களில், பலதரப்பட்ட தொழில் திறன் வளர்ப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

[2008 ஏப்ரல் 30

✓ 425 நபர்களுக்குக் கால்நடை ஆய்வாளர் பயிற்சி அளிக்க அரசு அனுமதி அளித்துள்ளது. இதன் முதற்கட்டமாக 110 நபர்களுக்கு ஓசூர், மாவட்டக் கால்நடைப் பண்ணையில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**விவசாயிகளுக்குப் பயிற்சி**

2007-2008 ஆம் ஆண்டு, பல்வேறு திட்டங்களின்கீழ் விவசாயிகளுக்குக் கீழ்க்கண்ட பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன:

- தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டத்தின்கீழ் 3,600 விவசாயிகளுக்குச் சிறந்த கால்நடை பராமரிப்பு பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- அவசர சுனாமி மறுசீரமைப்புத் திட்டத்தின்கீழ், 82 உள்ளூர் வேலையில்லா இளைஞர்களுக்கு முதலுதவி, குடற்புழு நீக்கம், தடுப்பூசி பணி மற்றும் இனப்பெருக்க உதவி பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதுதவிர, 10,000 விவசாயிகளுக்குச் சிறந்த கால்நடை பராமரிப்பு முறைகள் பற்றிய பயிற்சி அளிக்கப்பட உள்ளது.
- அஸ்காட் திட்டத்தின்கீழ், 385 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள விவசாயிகளுக்கு நோய் பற்றிய விழிப்புணர்வு முகாம்களும் 19 மாவட்டங்களில் உள்ள 100 விவசாயிகளுக்கு மாவட்ட அளவிலான முகாம்களும் நடத்தப்பட்டுள்ளன.

**தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு) உதவியுடன் கால்நடை நிலையங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்**

மாநிலத்தில் பல கால்நடை நிலையங்கள் போதிய உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாமல் செயல்பட்டு வந்தன. இதனால் விவசாயிகளின் கால்நடைகளுக்குத் தரமான மருத்துவ சேவை அளிப்பதில் சிரமம் ஏற்பட்டது. மேம்படுத்தப்பட்ட உள்ளிருப்புகளினால் சிறப்பான கால்நடை சேவையை கிராமப்புறங்களில் அளித்து, கால்நடை நோய் நிகழ்வுகளைக் குறைப்பதோடு, ஒட்டுமொத்த உற்பத்தியை அதிகரிக்கவும், இதன்மூலம் குறிப்பிடும்படியான கிராம வளர்ச்சியை அடையவும் முடியும். எனவே கிராமப்புற வளர்ச்சியை முடிவான இலக்காகக் கொண்டு, வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் ஊரக உள்ளிருப்பு வசதி மேம்பாட்டு நிதி உதவியுடன், துறையின் உள்ளிருப்பு வசதிகள் மேம்படுத்தப்படுகின்றன.



2008 ஏப்ரல் 30]

- **பத்தாவது ஊரக உள்ளிருப்பு வசதி மேம்பாட்டு நிதி:** கீழ்க்கண்ட பணிகளுக்காக, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் பத்தாவது ஊரக உள்ளிருப்பு வசதி மேம்பாட்டு நிதியின்கீழ் ரூ.5,978.92 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
  - 89 கால்நடை மருந்தகங்கள், 13 கால்நடை மருத்துவ மனைகள், 9 விந்து வங்கிகள், 23 கள கண்காணிப்புப் பிரிவுகள், 10 நோய் கண்டறியும் பிரிவுகள், 97 சிகிச்சைக் கூடங்கள், 152 உள்நோயாளிப் பிரிவுகள் மற்றும் 19 ஊடுகதிர் பிரிவுகள் கட்ட ரூ. 4,380.38 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.
  - 1,327 கால்நடை நிலையங்கள் மற்றும் 18 நோய் கண்டறியும் நிலையங்களுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்க ரூ. 1,374.54 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
  - 95 கால்நடை நிலையங்கள் மற்றும் 17 நோய் கண்டறியும் நிலையங்களுக்குத் தேவையான அறையணிகள் வாங்க ரூ. 224.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இவற்றுள் தற்போது 297 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மற்ற ஏனைய கட்டடப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. மேலும் இவற்றுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் அறையணிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் நடப்பாண்டில் முடிக்கப்படும்.

- **பதினோறாவது ஊரக உள்ளிருப்பு வசதி மேம்பாட்டு நிதி:** தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் பதினோறாவது ஊரக உள்ளிருப்பு வசதி மேம்பாட்டு நிதியின் கீழ் ஓசூர், உதகமண்டலம், ஈச்சங்கோட்டை ஆகிய கால்நடைப் பண்ணைகளில் பொலிகாளை கொட்டகைகள் கட்டுவதற்காகவும், ஓசூர் மற்றும் உதகமண்டலம் கால்நடைப் பண்ணைகளில் தரக் கட்டுபாடு ஆய்வுத் கூடங்கள் கட்டுவதற்காகவும், ரூ. 304.47 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. பணிகள் நடைபெற்று வருகின்றன.

**அவசர சுனாமி மறுசீரமைப்புத் திட்டம்**

உலக வங்கி உதவியுடன் கூடிய அவசர சுனாமி மறுசீரமைப்புத் திட்டம் ரூ. 866.702 இலட்சம் செலவில் மாநிலத்தின் 13 கடலோர மாவட்டங்களில் கீழ்க்கண்ட நோக்கங்களுடன் செயல்படுத்தப்படுகிறது:

[2008 ஏப்ரல் 30

- கடலோரப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி கால்நடை மருத்துவ சேவை தரத்தினை அதிகரித்தல்.
- கடலோரப் பகுதி சமூகத்தினரிடையே கால்நடை வளர்ப்பில் நல்ல வழிமுறைகள் பற்றி பயிற்சி அளித்து அவர்களுக்கு மாற்று வேலை மற்றும் வருவாய் ஈட்டிட வழிவகுத்தல்.
- தீவன வங்கிகளை ஏற்படுத்தி, தீவனப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்.

திட்டப் பகுதியில் 3 கால்நடை மருத்துவமனைகள், 9 கால்நடை மருந்தகங்கள், 13 மாவட்டக் கால்நடை விரிவாக்க நிலையங்கள், 2 தீவன வங்கிகள், 12 சமூகம் சார்ந்த கால்நடை பணியாளர் நிலையங்கள் மற்றும் 70 கிளை நிலையங்கள் கட்டப்படுவதற்கும், 4 பழுதடைந்த கட்டடங்கள் சீரமைக்கப்படுவதற்கும், ஆக மொத்தம் 113 கட்டடங்கள் கட்டப்படுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றில் தற்போது 88 இடங்களில் கட்டுமானப் பணிகள் முடிந்துவிட்டன. எஞ்சிய இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், இந்நிலையங்கள் முழுமையாகச் செயல்படத் தேவையான அனைத்து உபகரணங்கள் மற்றும் அறையணிகள் வழங்கப்படும். இத்துடன் மாற்று வாழ்வாதார வாய்ப்புகளை ஏற்படுத்திட கால்நடை வளர்ப்பில் ஆர்வமுள்ள 82 இளைஞர்களுக்கு முதலுதவி, குடற்புழு நீக்கம், தடுப்பூசி மற்றும் இனப்பெருக்க உதவி பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதுதவிர 10,000 விவசாயிகளுக்குக் கால்நடை வளர்ப்பு பற்றிய பயிற்சி அளித்திட பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். உலக வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதால் இந்தப் பயிற்சியானது விரைவில் அளிக்கப்படும்.

**நோய்த் தடுப்பு கண்டறிதல், கட்டுப்படுத்துதல் மற்றும் ஒழித்தல்**

"கால்நடை நலம் தேசத்தின் சொத்து". நோய்க் கிளர்ச்சி ஏற்படுவதால் கால்நடைகள் இறக்க நேரிடுகின்றன. இதனால் உற்பத்தித் திறன் குறைந்து விவசாயிகளுக்குப் பெரும் பொருளாதார இழப்புகள் ஏற்படுகின்றன. நோய்க் கிளர்ச்சிகள் வசதியானவர்களைத் தாக்குவதைக் காட்டிலும், சமூகப் பொருளாதாரத்தில் பின்தங்கிய சமூகத்தினரையே பாதிப்பதாய் அமைகின்றது. பல்வேறு கால்நடை நோய்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் அறவே ஒழித்தல் இலாபகரமான கால்நடை உற்பத்திக்கு அவசியமானது மட்டுமின்றி,



2008 ஏப்ரல் 30]

நமது கால்நடைகளும், கால்நடைப் பொருட்களும், உலக அளவில் ஏற்றுக்கொள்வதாய் அமைவதற்கும் இது இன்றியமையாததாகிறது. பொதுவாக விவசாயிகள், நோய் வராமல் தடுப்பதிலும், தடுப்பூசி போட்டு அவற்றைக் கட்டுப்படுத்துவதிலும், ஆர்வம் காட்டாமல் நோய் கண்டபின் சிகிச்சைமூலம் நோயைக் குணப்படுத்துவதிலேயே ஆர்வம் காட்டுவதால், இத்துறை நோய் வராது தடுப்பதிலும், அவற்றை அறவே ஒழிக்கும் பணிகளிலும் பெரும் பங்காற்றுகிறது. நோய்களை முறையாகக் கட்டுப்படுத்தி, முதலில் படிப்படியாக குறைப்பதால், இறுதியில் அவை அறவே ஒழிக்கப்பட்டுவிடும்.

**(அ) நோய்த் தடுப்பு**

**இராணிப்பேட்டை, கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம் (IVPM)**

"நோய் வரும்முன் காத்தல்" என்ற சொல்லுக்கு இணங்க இத்துறையில் கால்நடைகள் மற்றும் கோழியினங்களுக்கு முக்கியத்துவம் தரப்பட்டு நோய்த் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கால்நடைகள் மற்றும் கோழியினங்களைக் காக்க தடுப்பூசி மற்றும் உயிர்காக்கும் மருந்துகள், வேலூர் மாவட்டத்தில் உள்ள இராணிப்பேட்டை, கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையத்தில் தற்போது 5 வகையான நுண்ணுயிரித் தடுப்பு மருந்துகள், 5 வகையான நச்சுயிரித் தடுப்பு மருந்துகள், 5 வகையான நோய் ஆய்வுக் கலவைகள், 4 வகையான மருந்துகள் மற்றும் ஒரு கரைப்பான் தயாரிக்கப்படுகின்றன. இத்துடன், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக உதவியுடன் கோமாரி நோய்க்கான அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டம், கோமாரி நோய்க் கிளர்ச்சியை ஆய்வு செய்வதற்காகவும், நச்சுயிரியை வகைப்படுத்துவதற்காகவும் செயல்படுகிறது.

**1. நுண்ணுயிரித் தடுப்பு மருந்துகள்**

1. தொண்டை அடைப்பான் தடுப்பூசி (ஆலம்)
2. சப்பை நோய்த் தடுப்பூசி (ஆலம்)
3. துள்ளுமாரி தடுப்பூசி (ஆலம்)
4. அடைப்பான் தடுப்பூசி
5. புரூசெல்லா அபார்ட்டஸ் தடுப்பூசி

[2008 ஏப்ரல் 30

**2. நச்சுயிரித் தடுப்பு மருந்துகள்**

1. ஆட்டம்மை தடுப்பூசி
2. கோழிக் கழிச்சல் 'எப்' தடுப்பூசி
3. கோழிக் கழிச்சல் லசோட்டா தடுப்பூசி
4. கோழிக் கழிச்சல் 'கே' தடுப்பூசி
5. வாத்துக் கழிச்சல் தடுப்பூசி

2007-2008 ஆம் ஆண்டில், ரூ. 3.96 கோடி மதிப்பிலான பொருட்கள் இந்நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்டன. 2007-2008 ஆம் ஆண்டில், தயாரிக்கப்பட்ட பொருட்களின் மதிப்பு மற்றும் 2008-2009 ஆம் ஆண்டில், உத்தேசமாகத் தயாரிக்கப்பட இருக்கும் பொருட்களின் மதிப்பு பின்வருமாறு:

| இனங்கள் | 2007-2008 ஆம் ஆண்டில், உற்பத்தி மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | 2008-2009ஆம் ஆண்டில் உற்பத்தி மதிப்பு குறியீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| நுண்ணுயிரித் தடுப்பு மருந்துகள் | 283.01 | 353.50 |
| நச்சுயிரித் தடுப்பு மருந்துகள் | 110.72 | 122.80 |
| நோய் ஆய்வுக் கலவைகள் | 0.24 | 0.75 |
| மருந்துகள் | 0.72 | 2.50 |
| கரைப்பான் | 1.49 | 1.21 |
| மொத்தம் | 396.18 | 480.76 |

தடுப்பூசி உற்பத்தியில் சர்வதேச தரத்தினை எய்திட, தடுப்பூசி உற்பத்தி செய்யும் ஆய்வுக் கூடங்கள், நல்ல தயாரிப்பு வழிமுறைகள் தரத்திற்கு மேம்படுத்தப்பட வேண்டும். இதன் முதற்கட்டமாக அஸ்காட் திட்டத்தின்கீழ், கோழி தடுப்பூசி உற்பத்தி ஆய்வுக் கூடம் நல்ல தயாரிப்பு வழிமுறைகள் (GMP) தரத்திற்கு மேம்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையத்தின் மற்ற தடுப்பூசி தயாரிக்கும் ஆய்வுக் கூடங்கள் மற்றும் தரக் கட்டுப்பாட்டு பிரிவு, நபார்டு உதவியுடன் நல்ல தயாரிப்பு வழிமுறைகள் தரத்திற்கு மேம்படுத்தப்பட உள்ளது.



2008 ஏப்ரல் 30]

**(ஆ) நோய் கண்டறிதல்:**

நோய்க் கிளர்வுகள் பற்றிய முன்னெச்சரிக்கை சமிக்ஞைகளை அளிக்க, ஒரு நோய் கடுங்கண்காணிப்பு முறை அவசியமாகும். அதே வேளையில் நோய்த் தொற்று அறிவியல் முறையாக நோய்கள் பற்றிய பகிர்வு மற்றும் உடல் நலக் கேட்டிற்கான பிரச்சினைகள் எவற்றில் உண்டாகின்றன என்பதை உறுதி செய்திட உதவுகிறது. இதன் பொருட்டு, மாநிலத்தில் 20 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுடன் இணைக்கப்பட்ட நான்கு நடமாடும் ஆய்வுக் கூடங்கள் மதுரை, வேலூர், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலும், இரண்டு கோழி நோய் கண்டறியும் ஆய்வுக் கூடங்கள், ஒன்று நாமக்கல் மாவட்டத்தில் ஆண்டகலூர்கேட்டிலும் மற்றொன்று ஈரோட்டிலும் செயல்பட்டுவருகின்றன.

**(i) கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள்:** இந்த பிரிவுகள், முக்கியத்துவம் வாய்ந்த அனைத்துக் கால்நடை மற்றும் கோழியின நோய்களைக் கடுங்கண்காணிக்க, மாநிலத்தில் ஒரு சீரிய முறையை உருவாக்குவதில் முக்கியப் பங்காற்றி வருகின்றன. இதன் விளைவாக சரியான தடுப்பு நடவடிக்கைகளை வகுக்க உதவுகின்றன. நோய்க் கிளர்வுகள் பற்றிய தகவல்கள் மற்றும் புள்ளிவிவரங்களைச் சேகரிப்பதன்மூலம், அவை உண்டாகக்கூடிய இடங்கள் கண்டறியப்படுகின்றன. இப்பிரிவுகளின் வழிகாட்டுதலின்படி, களக் கால்நடை மருத்துவர்கள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முன்கூட்டியே மேற்கொள்கின்றனர். இத்துடன், நோய்க் கிளர்ச்சி ஏற்படும்போது, நோய்களைக் கண்டறிய மற்றும் கட்டுப்படுத்த களப்பணியாளர்களுக்கு தொழில்நுட்ப உதவி செய்து வருகின்றன.

மாநிலத்தில் கீழ்க்கண்ட 20 கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவுகள் செயல்படுகின்றன :

| வ. எண் | கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவு | உள்ளடங்கிய மாவட்டங்கள் |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் |
| 2 | கடலூர் | கடலூர் |
| 3 | திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 4 | ஈரோடு | ஈரோடு |

[2008 ஏப்ரல் 30

| வ. எண் | கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவு | உள்ளடங்கிய மாவட்டங்கள் |
|---|---|---|
| 5 | காஞ்சிபுரம் | சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் |
| 6 | கரூர் | கரூர் |
| 7 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி |
| 8 | மதுரை | மதுரை, தேனி |
| 9 | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம், திருவாரூர் |
| 10 | சேலம் | சேலம், நாமக்கல் |
| 11 | சிவகங்கை | சிவகங்கை, இராமநாதபுரம் |
| 12 | தஞ்சாவூர் | தஞ்சாவூர், புதுக்கோட்டை |
| 13 | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 14 | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர் |
| 15 | திருநெல்வேலி | திருநெல்வேலி, கன்னியாகுமரி |
| 16 | உதகமண்டலம் | உதகமண்டலம் |
| 17 | வேலூர் | வேலூர், திருவண்ணாமலை |
| 18 | விழுப்புரம் | விழுப்புரம் |
| 19 | விருதுநகர் | விருதுநகர் |
| 20 | தருமபுரி | தருமபுரி |

2007-2008 ஆம் ஆண்டில், மேற்கண்ட பிரிவுகளில் பல்வேறு நோய்களுக்கான 3.21 இலட்சம் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டன.

**(ii) கோழி நோய் கண்டறியும் ஆய்வுக் கூடங்கள்:** கோழிகள் அதிகமாக வளர்க்கப்படும் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு உதவும்பொருட்டு 2 கோழி நோய் கண்டறியும் ஆய்வுக் கூடங்கள், ஒன்று நாமக்கல் மாவட்டத்தில் ஆண்டகலூர்கேட்டிலும் மற்றொன்று ஈரோட்டிலும் செயல்பட்டு வருகின்றன. இவை, பிரேதப் பரிசோதனை செய்வது, மலம், இரத்தம் மற்றும் இதர மாதிரிகளைப் பரிசோதனை செய்து நோய்களைத் துல்லியமாகக் கண்டறிவதில் ஈடுபட்டுள்ளன. இத்துடன் நோய்த் தடுப்பு, நோய் கண்டறிவது மற்றும் பல்வேறு தொற்று நோய்கள் மற்றும் ஒட்டுண்ணி நோய்களைக் கட்டுப்படுத்துவது பற்றி



2008 ஏப்ரல் 30]

விவசாயிகள் அறிய தொழில்நுட்ப உதவிகளை அளித்து வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில், 1,292 கோழிப் பண்ணைகளும், 1,097 கிராமங்களும் பார்வையிடப்பட்டு, 8,238 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டன. 2007-2008 ஆம் ஆண்டில், இந்த 2 கோழி நோய் கண்டறியும் ஆய்வுக் கூடங்களையும் உயிர்காப்பு நிலை-2 தரத்திற்கு உயர்த்துவதற்காக, உலக வங்கி உதவியுடன்கூடிய, "பறவைக் காய்ச்சல் தயார்நிலை, கட்டுப்படுத்துதல் மற்றும் கட்டுக்குள் வைத்திருத்தல்" திட்டத்தின்கீழ், மைய அரசு ரூ. 44.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

**(iii) மத்திய தொடர்பு ஆய்வுக் கூடம்:** தலைமை ஆய்வகமான மத்திய தொடர்பு ஆய்வுக் கூடம், கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் கோழி நோய் கண்டறியும் ஆய்வுக் கூடங்களின் பணிகளை ஒருங்கிணைக்கவும், களப் பணியாளர்களுக்கு நோய் ஆய்வு தொடர்பான பணிகளில் உதவுவதிலும் ஈடுபட்டு வருகிறது. இந்த ஆய்வுக் கூடம், ஆட்டுக்கொல்லி நோய்க்கான "எலிசா" சோதனையையும், பண்ணைகளில் உள்ள கால்நடைகளில் பல்வேறு நோய்களைக் கண்டறியவும், கால்நடை ஏற்றுமதி பொருட்களைப் பரிசோதிக்கவும் மற்றும் நலச் சான்று வழங்குவதிலும் ஈடுபட்டுள்ளது. இந்த ஆய்வுக் கூடம் பறவைக் காய்ச்சல் நோய் பற்றி கோழிப் பண்ணையாளர்களுக்கு விழிப்புணர்ச்சி மற்றும் அவசர காலத்தில் களக் கால்நடை மருத்துவர்கள் (துரித செயல்பாட்டுக் குழுக்கள்) செயலாக்கம் குறித்து பயிற்சி அளிப்பதில் முக்கியப் பங்காற்றி வருகின்றது. 2007-2008 ஆம் ஆண்டில், 3,025 மாதிரிகள் பல்வேறு நோய்களுக்காகப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. இத்துடன் கால்நடைப் பண்ணைகளில் 1,739 கால்நடைகளுக்கு காசநோய், கருச்சிதைவு மற்றும் இதர நோய்கள் கண்டறியும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இது மட்டுமல்லாமல், பறவைக் காய்ச்சல் நோய் உள்ளதா என்று கண்டறிய, 9,750 ஊநீர் மாதிரிகள் பெங்களூருவில் உள்ள தெற்கு மண்டல நோய் ஆய்வுக்கூடத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

### (இ) நோய் கட்டுப்படுத்துதல் மற்றும் அறவே ஒழித்தல்:

பல்வேறு தொற்று நோய்களான தொண்டை அடைப்பான், சப்பை நோய், அடைப்பான், துள்ளுமாரி மற்றும் வெள்ளைக் கழிச்சல் போன்ற நோய்களைக் கட்டுப்படுத்துவதில் கால்நடை

[2008 ஏப்ரல் 30

பராமரிப்புத் துறை குறிப்பிடத்தக்க சாதனையை எய்தியுள்ளது. மாடுகள் மற்றும் ஆடுகளின் மிகப் பெரிய அளவில் இறப்பை ஏற்படுத்தி வந்த வெக்கை நோயை அடியோடு ஒழித்தது, அடையாளம் கண்டுகொள்ளத்தக்க மிக முக்கியமானதாகவும், பெரும் திருப்புமுனையாகவும் அமைந்தது. 1993-1994ஆம் ஆண்டு முதல் தேசிய வெக்கை நோய் ஒழிப்புத் திட்டத்தினைச் செயல்படுத்தியதன் விளைவாக இச்சாதனையை அடைய முடிந்தது. 2004 ஆம் ஆண்டு மே திங்களிலிருந்து நமது மாநிலம் வெக்கை நோயில்லா மாநிலமாக அறிவிக்கப்பட்டது. இந்த நோயைத் திறமையுடன் கட்டுப்படுத்த இத்துறை மேற்கொண்ட நடவடிக்கைகள் முக்கிய மைல் கல்லாக அமைந்துள்ளது.

பெரும்பாலான கால்நடை நோய்களைக் கட்டுப்படுத்துவது உற்பத்தித் திறனை அதிகரிக்க உதவுகிறது. அதாவது, தற்போதைய உற்பத்தி மற்றும் உண்மையான உற்பத்தித் திறனுக்கான இடைவெளியைக் குறைத்து, கிராமப்புற ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திட உதவும். மேலும், தொற்று நோய்களால் பன்னாட்டு ஏற்றுமதி சந்தையை நமது நாடு முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள இயலவில்லை. ஏனெனில் இந்தியக் கால்நடைகள் மற்றும் கால்நடைப் பொருட்கள், ஏற்றுமதியைப் பெருக்க "Office International Epizootics" என்ற பன்னாட்டு நிறுவனம் நிர்ணயித்துள்ள விலங்கியல் சுகாதாரக் குறிப்பீடு மற்றும் தரத்தினை உறுதி செய்யும்போதுதான் அவை உலக சந்தையில் நுழைந்து போட்டியிட இயலும்.

விவசாயிகளுக்குப் பெரும் பொருளாதார இழப்பினை ஏற்படுத்தும் பல்வேறு கால்நடை நோய்களிலிருந்து கால்நடைகளைக் காத்திட, முறையான மற்றும் காலமுறைப்படி தடுப்பூசிப் பணி மேற்கொள்வது அவசியமாகும். இப்பணிக்குத் துறை அதிக முக்கியத்துவம் கொடுத்து, பாதிக்கப்படும் எனக் கருதப்படும் கால்நடைகள் மற்றும் கோழி இனங்களுக்கு எல்லாக் கால்நடை நிலையங்கள், கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்கள், மக்கள் தொடர்பு முகாம்கள் மற்றும் ஆஸ்காட் திட்டத்தின்கீழ் தடுப்பூசிப் பணி மேற்கொண்டு வருகிறது. 2007-2008 ஆம் ஆண்டில், 496.39 இலட்சம் தடுப்பூசிகள் போடப்பட்டன. 2008-2009 ஆம் ஆண்டில், கால்நடை நிலையங்கள் மற்றும் இதர திட்டங்கள்மூலம் 525.00 இலட்சம் தடுப்பூசிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 30]

**தடுப்பூசிகள்**

| வ. எண் | தடுப்பூசி | இலக்கு 2007-2008 (இலட்சத்தில்) | சாதனை 2007-2008 (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | தொண்டை அடைப்பான் | 22.00 | 25.43 |
| 2 | சப்பை நோய் | 22.00 | 22.62 |
| 3 | அடைப்பான் | 30.00 | 42.32 |
| 4 | கோமாரி நோய் | 83.50 | 85.63 |
| 5 | ஆட்டுக்கொல்லி | 60.00 | 43.44 |
| 6 | துள்ளுமாரி | 3.50 | 2.64 |
| 7 | ஆட்டம்மை | 2.50 | 0.91 |
| 8 | கோழிக் கழிச்சல் | 250.00 | 272.89 |
| 9 | மற்றவை | 1.55 | 0.51 |
| | **மொத்தம்** | **475.05** | **496.39** |

நோய் அதிகம் தாக்கக்கூடிய பகுதிகளில் உள்ள பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய கால்நடைகளுக்குத் தடுப்பு நடவடிக்கையாக தடுப்பூசிப் பணி காலமுறைப்படி மேற்கொள்ளப்படுவதால் மாநிலத்தில் நோய்க் கிளர்ச்சி குறைந்துள்ளது. வெக்கை நோய் அறவே ஒழிப்பு, நுண்ணுயிரி மற்றும் நச்சுயிரி நோய்கள் கட்டுப்படுத்தல் மற்றும் பல்வேறு இதர நடவடிக்கைகளால், நமது மாநிலம் பெரும்பாலான கால்நடை நோய்களில் இருந்து விடுதலை பெற்று முன்னேறிக் கொண்டுள்ளது.

**கால்நடை பொது சுகாதாரம்**

மனிதனுக்குப் பரவும் தொற்று நோய்களில் 4/5 பங்கு விலங்குகளிலிருந்து பரவுகின்றன. இவை மனித மற்றும் விலங்கினத்திற்கிடையே நோய் பரவுதல் எனப்படும். பல இலட்சக் கணக்கான கிராம மக்கள் வாழ்க்கை நடத்திட, கால்நடை வளர்ப்பு முக்கிய ஆதாரமாக உள்ளதால், மனிதன் மற்றும் விலங்கினத்திற்கிடையே நோய் பரவுவதைத் தடுப்பதில் கால்நடை பொது சுகாதாரம் முக்கியப் பங்கு வகிக்கின்றது.

[2008 ஏப்ரல் 30

இப்பொருளோடு தொடர்புடைய சில பணிகள் கீழே விரிவாகக் கூறப்பட்டுள்ளன:

**(அ) வெறிநாய்க்கடி நோய்த் தடுப்புத் திட்டம்:**

தமிழ்நாட்டில் 27.17 இலட்சம் நாய்கள் உள்ளன. இதில் வீட்டு நாய்கள் மற்றும் தெரு நாய்கள் முறையே 73 சதவீதம் மற்றும் 27 சதவீதமாகும். நாட்டிலுள்ள மனித விலங்கினத்திற்கிடையே பரவும் நோய்களுள் வெறிநாய்க்கடி நோய் இன்றும் முக்கியமானதாகும். மேலும், கால்நடைகளுக்கு இந்நோயைப் பரப்புவதில் நாய்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆகையால் வெறிநாய்க்கடியை ஒழிப்பதன்மூலம் மனிதர்கள் மற்றும் இதர கால்நடைகளுக்கு இந்நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துதல் சிறந்த வழியாகும். இக்குறிக்கோளுடன், வெறிநாய்க்கடி நோய்த் தடுப்புப் பிரிவு மதுரை மற்றும் திருநெல்வேலியில் இயங்கி வருகின்றது.

இத்திட்டப் பிரிவுகளின் முக்கியப் பணிகள்:

- முறையான மற்றும் காலமுறைப்படி, வீடுவீடாகச் சென்று வளர்ப்பு நாய்களுக்கு, மருந்துக்கு உரிய கட்டணம் வசூலிப்பதன் பேரில் வெறிநாய்த் தடுப்பூசி போடுதல்;
- நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடைகள் மற்றும் நாய்களுக்கு இலவசமாகத் தடுப்பூசி போடுதல்; மற்றும்
- பொது மக்களிடையே இந்நோய் பற்றிய விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையில் துண்டுப் பிரசுரங்கள் மற்றும் விளக்கக் குறிப்புகள் விநியோகித்தல் மற்றும் நாய் கண்காட்சி நடத்துதல் மூலமாகத் தகுந்த விளம்பரம் மற்றும் பிரச்சாரம் செய்தல்.

*2007-2008*-ல், இந்நிலையங்களில் மொத்தம் *6,074* தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

**(ஆ) பெருமளவில் தடுப்பூசி போடுதல் மற்றும் குடற்புழு நீக்கம்:**

கால்நடை மற்றும் கோழிகளுக்கு முறையாகத் தடுப்பூசி போடுதல் மற்றும் குடற்புழு நீக்கம் ஆகிய பணிகளை இத்துறை இலவசமாக செய்து வருகின்றது. இதனால் அடைப்பான், கன்று வீச்சு, நாடாப் புழு, ஸ்டிராங்கைலாசிஸ் (Strongylosis), ஆம்பிஸ்டோமியாசிஸ் (Ampistomiasis), போன்ற அபாயகரமான நோய்கள் மேலும் பரவாமல் தடுக்கப்படுகிறது. மேலும் நிலையான அல்லது இடையூட்டுயிராக



2008 ஏப்ரல் 30]

மனிதன் செயல்படும் ஒட்டுண்ணிகளின் வாழ்க்கை சுழற்சி தடைபடுகிறது.

*2007-2008* ஆம் ஆண்டில், *223.18* இலட்சம் கால்நடைகள் மற்றும் *272.89* இலட்சம் கோழிகளுக்குத் தடுப்பூசி போடப்பட்டது. மேலும், *30.65* இலட்சம் பசுவினம், *5.21* இலட்சம் எருமைகள், *97.82* இலட்சம் வெள்ளாடுகள் மற்றும் *4.53* இலட்சம் செம்மறியாடுகள், *77.63* இலட்சம் கோழிகளுக்குக் குடற்புழு நீக்கம் செய்யப்பட்டது.

**(இ) இறைச்சித் தரம் ஆய்வு:**

உள்ளாட்சி மன்றங்களின் கட்டுப்பாட்டில் இயங்கும், *110* பதிவு செய்யப்பட்ட இறைச்சிக் கூடங்களில் முறையான இறைச்சி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனால் இறைச்சியை உண்ணும் பொது மக்கள் நாடாப் புழு மற்றும் தசைப் பகுதிக்குள் வளரும் ஒட்டுண்ணிகள் போன்ற நோய்களிலிருந்து காக்கப்படுகிறார்கள்.

**விரிவாக்கப் பணிகள்**

முறையான விரிவாக்கப் பணியும், பிரச்சாரப் பணியும் இன்றி புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் அறிவியல் கண்டுபிடிப்புகளை முழுவதுமாக பயன்படுத்த இயலாது. சிறந்த விரிவாக்கப் பணிகளால் கால்நடை பராமரிப்பு முறைகளில் ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றங்கள் பற்றி அறிந்து கொள்வதற்கும், இத்துறையின் திட்டங்களும், செயல்முறைகளும் பற்றி பொது மக்கள் வெளிப்படையாகத் தெரிந்து கொள்ளவும் முடிகிறது. மேலும் பல்வேறு களப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், கால்நடைகளை அச்சுறுத்தும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த முக்கிய நோய்களைக் கட்டுப்படுத்தவும் வழிவகுக்கும்.

“காண்பதே கற்றல்” என்ற கொள்கையின்படி, பல்வேறு கால்நடை பராமரிப்பு முறைகள் மற்றும் நோய் கண்டறிதல் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைக்க இத்துறை, கிடைக்கும் எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொண்டு வருகிறது. கால்நடை பராமரிப்பு மற்றும் தொடர்புடைய தொழில்கள் பற்றிய விவரங்களைச் சேகரித்துப் பொது மக்களுக்கு வழங்குவதற்காக இத்துறை பொருட்காட்சிகள் மற்றும் விழாக்களை நடத்தி வருகிறது. நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்படுத்துதல், கால்நடைகளைத் தாக்கும் அபாயகரமான நோய்களைப் பற்றிய அறிவு மற்றும் பொது சுகாதார முக்கியத்துவம், குடற்புழு நீக்கம், தடுப்பூசிகள், செயற்கைமுறைக்

[2008 ஏப்ரல் 30

கருவூட்டல், கன்று வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மேய்ச்சல் நில மேலாண்மை, இறைச்சி ஆய்வு, சுகாதார நடவடிக்கைகள், கால்நடைகளின் உடல்களை அப்புறப்படுத்துதல் மற்றும் அழித்தல், நோய் தொற்றியுள்ள பகுதிகளில் கிருமி நாசினி தெளித்தல் போன்றவை விவசாயிகளுக்கும், கால்நடை வளர்ப்போருக்கும் வழங்கப்படுகின்றன.

*2007-2008* ஆம் ஆண்டில், கண்காட்சி நடத்துவதற்காக அரசு, கால்நடை பராமரிப்புத் துறைக்கு ரூ.*3.25* இலட்சம் ஒதுக்கியுள்ளது. கீழ்க்கண்ட கண்காட்சிகளில் இத்துறை கலந்துகொண்டது:

- திண்டுக்கல் - கொடைக்கானல் - கோடை விழா
- ஏற்காடு - கோடை விழா
- கிருஷ்ணகிரி - மாங்கனி விழா
- விழுப்புரம் - கல்வராயன் மலை - கோடை விழா
- கடலூர் - வெள்ளி கடற்கரை விழா
- வேலூர் - ஏலகிரி - கோடை விழா
- திருவண்ணாமலை - தீபத் திருவிழா
- சென்னை - தீவுத்திடல் - பொருட்காட்சி
- மதுரை - பொருட்காட்சி
- கோயம்புத்தூர் - பொருட்காட்சி
- திருநெல்வேலி - பொருட்காட்சி

இவை மட்டுமல்லாமல், இத்துறையின் சார்பில் குடியரசு தின விழா அணிவகுப்பில் கலந்து கொள்ள ரூ.*80,000*/- செலவில் அலங்கார ஊர்தி தயார் செய்து பயன்படுத்தப்பட்டது.

தொலைக்காட்சி, அகில இந்திய வானொலி நிலையம் மற்றும் செய்தித்தாள்கள் போன்ற தகவல் தொடர்பு சாதனங்கள் வாயிலாக புதிய தகவல்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. இத்துறை தகவல் தொடர்பு சாதனங்களை அதிகபட்ச அளவிற்குப் பயன்படுத்திக் கொள்கிறது. இத்துடன் கால்நடை பராமரிப்புத் துறை



2008 ஏப்ரல் 30]

ஒவ்வொரு சனிக்கிழமையும் இரவு *7.30* மணி முதல் *8.00* மணி வரை அகில இந்திய வானொலியில் *720* கிலோ ஹெர்ட்ஸ் அலைவரிசையில் "வீடும் வயலும்" நிகழ்ச்சியில் சிறந்த கால்நடை மேலாண்மை முறைகள், கால்நடைகளைத் தாக்கும் நோய்கள் மற்றும் அதனைக் கட்டுப்படுத்துதல், பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்டங்கள் பற்றிய விவரங்களை ஒலிபரப்பி வருகின்றது.

## பிராணி நலத் திட்டங்கள்

கால்நடைகள் கொடூரமான முறையில் நடத்தப்படுவதைத் தடுக்கவும், அவற்றை மனிதாபிமான முறையில் நடத்தவும் தமிழக அரசு பிராணிகள் நல வாரியத்துடன் ஒருங்கிணைந்து இப்பிரச்சினைகளைக் களைய செயல்பட்டு வருகிறது:

இத்துறை எடுத்துள்ள பிராணிகள் நலத் திட்ட நடவடிக்கைகள் சில பின்வருமாறு:

- தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் பிராணிகள் வதை தடுப்புச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை தலைமையின்கீழ் மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு ஒன்று, கால்நடைகளுக்கு இழைக்கப்படும் வதை பற்றி ஆராய்வதற்காக அமைக்கப்பட்டுள்ளது. எல்லா மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியாளரின் தலைமையின்கீழ் மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## தெரு நாய்களின் பிறப்பு விகிதத்தைக் கட்டுப்படுத்தும் திட்டம்

நகராட்சி மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் தெரு நாய்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த மத்திய அரசு, கால்நடை பிறப்பு தடுப்பு (நாய்கள்) விதிகளை ஏற்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன:

- தெரு நாய்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துதல்.
- வெறி நாய்க் கடி நோயால் ஏற்படும் நிகழ்வுகளைக் குறைத்தல்.
- ஆரோக்கியமான தெரு நாய்கள் கொல்லப்படுவதைத் தடுத்தல்.

[2008 ஏப்ரல் 30

இத்திட்டத்தின்கீழ் தெரு நாய்கள் மனிதாபிமான முறையில் பிடிக்கப்பட்டு, கருத்தடை செய்யப்பட்டு, வெறிநாய்க் கடி தடுப்பூசி போடப்பட்டு அவை பிடித்து வரப்பட்ட பகுதிகளிலேயே மறுபடியும் விடப்படுகின்றன. நகராட்சி நிர்வாகத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் இந்திய கால்நடை நல வாரியம் ஆகியவை ஒருங்கிணைந்து, 5 மாநகராட்சிகள் மற்றும் 50 நகராட்சிகளை உள்ளடக்கி 2.03 இலட்சம் நாய்களில், தெரு நாய்களின் பிறப்பு விகிதத்தைக் கட்டுப்படுத்தும் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

### 2007-2008 ஆம் ஆண்டில் அறிவித்த திட்ட செயல்பாடுகளின் முன்னேற்றம்

1. 2007-2008 ஆம் ஆண்டில், கால்நடை மருத்துவ சேவைகளை விரிவுபடுத்துவதற்காகவும், மாநிலத்தில் அதிக எண்ணிக்கையிலான விவசாயிகளுக்குப் பயனளிப்பதற்காகவும், கிராமப்புற ஏழை வேளாண் குடிமக்களுக்குப் பல்வகையில் உதவிகரமாக விளங்கும் கால்நடை செல்வங்களை நோய்களிலிருந்து பேணிப் பாதுகாக்கவும், 40 புதிய கால்நடை மருந்தகங்கள் திறக்கப்பட்டுள்ளன.

2. ஒரத்தநாடு மற்றும் அபிசேகப்பட்டி மாவட்டக் கால்நடைப் பண்ணைகளில் முறையே ரூ.21.50 இலட்சம் மற்றும் ரூ.16.09 இலட்சம் செலவில் தீவன அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. புல்வெட்டும் கருவி மற்றும் பசுந்தீவன அறுவடைக் கருவிகள் வாங்கப்பட்டுள்ளன. ஆழ்துளை கிணறு மற்றும் நீர் தெளிப்பான் பாசன வசதி அமைக்க வேளாண்மை பொறியியல் துறையிடம் பணி ஒப்படைக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

3. முட்டைகள் வளமாக உற்பத்தியாகும் காலத்தில் தேவைக்கு அதிகமாக உள்ள முட்டைகளைச் சேமிக்கவும், போக்குவரத்து இடர்ப்பாடுகள் மற்றும் பறவைக் காய்ச்சல் நோய்க் கிளர்ச்சியின்போது முட்டைகளின் ஏற்றுமதிக்குத் தடை ஏற்படுதல் போன்ற காரணங்களினால், அதிக அளவில் முட்டைகள் தேங்குவதினால் ஏற்படும் இழப்பினைத் தவிர்க்கவும், நாமக்கல்லில் ஒரு குளிர்பதன வைப்பறையினை ரூ.10.00 கோடி செலவில் பொதுத் துறைமற்றும் தனியார் பங்களிப்புடன் இணைந்து நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ஒரு கோடி ரூபாயினை அரசின் பங்காகத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு (TIDCO) வழங்கியுள்ளது.



2008 ஏப்ரல் 30]

4. பன்றி வளர்ப்பின்மூலமாக சுய வேலைவாய்ப்பும், நகர்ப்புற தேவைக்கேற்ப சத்துமிக்க இறைச்சியும் கிடைப்பதால் இத்துறை கிராமப்புறங்களில் பன்றி வளர்ப்பினை ஊக்குவித்து வருகிறது. இந்நோக்கத்திற்காக, திருநெல்வேலி மாவட்டம், அபிசேகப்பட்டி கால்நடைப் பண்ணையில் உள்ள பன்றி வளர்ப்புப் பிரிவு ரூ.33.92 இலட்சம் செலவில் வலுப்படுத்தப்பட்டு வருகிறது.

5. நிருவாகத்தினை செம்மைப்படுத்துவதற்காக நாமக்கல் மாவட்டத்தில், ஒரு புதிய மண்டல இணை இயக்குநர் அலுவலகம் ரூ.3.42 இலட்சத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

6. நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவின் சேவைகளை மேம்படுத்திட, கோயம்புத்தூர், ஈரோடு, மன்னார்குடி, கோவில்பட்டி, சீர்காழி மற்றும் மயிலாடுதுறை ஆகிய இடங்களில் உள்ள நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு ஊர்திகள் ரூ.20.85 இலட்சம் செலவில் மாற்றப்பட்டுள்ளன.

7. கால்நடைகளுக்கான நோய்களைக் கண்காணித்துக் கட்டுப்படுத்திட, தருமபுரி மாவட்டத்தில் ஒரு கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவு தோற்றுவிக்கப்பட்டு இயங்கி வருகிறது. தேவையான வேதிப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் சேவைக் கழகத்தின்மூலம் வழங்கப்படவுள்ளன.

8. ஊராட்சி ஒன்றியத் தலைமையிடத்தில் உள்ள 385 கால்நடை மருந்தகங்களுக்குத் தகவல் தொடர்பு வசதி ஏற்படுத்துவதற்காக, ரூ.18.10 இலட்சம் செலவில் 385 அலைபேசிகள் கால்நடை மருத்துவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

9. சென்னை, அடையாறிலுள்ள செல்லப் பிராணிகள் சிகிச்சை மையமானது ஊடுகதிர் வசதி, அறுவை சிகிச்சை மேடை போன்ற உள்கட்டமைப்பு வசதிகளுடன் ரூ.20.00 லட்சம் செலவில் மேம்ப்டுத்தப்பட்டு வருகிறது.

10. முதலுதவி மற்றும் கருவூட்டல் வசதியை மேம்படுத்துவதற்காக 55 பார்வை கிளை நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

11. 425 நபர்களுக்கு கால்நடை ஆய்வாளர் பயிற்சி அளிக்க அரசு ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதில் கருணை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 110 நபர்கள் மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஓசூரில் பயிற்சிக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

## 2008-2009 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

### தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம்

மாடுகளின் சினைப்பிடிப்பு விகிதத்தைக் கண்காணித்து உயர்த்தும் பொருட்டு, இனவிருத்திக்குகந்த மாடுகளின் இருப்பிடங்களைக் கண்டறிவதற்காக ரூ. 1.57 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை 9 இலட்சம் மாட்டினங்களுக்குச் செயல்படுத்துவதன் மூலம் பெரும்பாலான விவசாயிகள் பயனடைவர்.

### பகுதி-2 திட்டங்கள்

1. தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள 23 ஊராட்சி ஒன்றியங்களில் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 60.00 இலட்சம் அரசுப் பங்குடன் 50 சதவீத மானிய விலையில் 20 பெட்டை மற்றும் ஒரு கிடாவைக் கொண்ட, செம்மறியாட்டு அலகுகளை அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2. கிராமப்புற ஏழைகளுக்கு வாழ்வாதாரத்தினை ஏற்படுத்தக்கூடிய வகையில் திண்டுக்கல், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 15.00 இலட்சம் செலவில் புழைக்கடை கோழிப் பிரிவுகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

3. நீலநாக்கு நோய் செம்மறியாடுகளைத் தாக்கும் ஒரு நச்சுயிரி நோயாக இருப்பதாலும், அது தமிழகத்தின் தென்மாவட்டங்களில் நிலவி, சிறு பிராணிகளிடையே உயிரிழப்பையும் தொற்றையும் ஏற்படுத்துவதாலும், நீலநாக்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்காக திருநெல்வேலி, தூத்துக்குடி, மதுரை, திண்டுக்கல் மற்றும்





ஈரோடு மாவட்டங்களில் ரூ.15.00 இலட்சம் செலவில், நோய்த் தொற்றுக் கட்டுப்பாட்டு நடவடிக்கையை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை செம்மறியாடுகளைக் காப்பாற்ற போதிய அளவு தடுப்பூசி மருந்துகள் இல்லாததால், நோய் தொற்றைக் கட்டுப்படுத்துவதே, நோயைத் தடுப்பதற்கான சிறந்த வழியாகும்.

4. கால்நடைகள் பசுந்தீவனம் உண்ணும்போது விலை மதிக்கத்தக்க அத்தீவனத்தின் பெரும்பகுதி வீணாகின்றது. மேலும் தீவனத்தை (பசுந்தீவனம் மற்றும் உலர் தீவனம்) வெட்டி உண்ணக் கொடுக்கும்போது அதன் பயன்பாடு அதிகரிப்பதோடு, உணவு மாற்றுத் திறனும் அதிகரிக்கிறது. எனவே, பசுந்தீவனம் வீணாவதைத் தவிர்க்கும்பொருட்டு ரூ. 6.00 இலட்சம் செலவில் புல்வெட்டும் கருவி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

5. தொலைபேசி தகவல் தொடர்பு வசதியற்ற 16 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளுக்கு ரூ. 2.24 இலட்சம் செலவில் தகவல் தொடர்பு வசதி ஏற்படுத்தித் தர திட்டமிடப்பட்டுள்ளது. இவைகளின்மூலமாக நோய் கிளர்ச்சி தொடர்பான தகவல் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டு நோய் கட்டுப்படுத்துதல் நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்படும். மேலும் அனைத்துக் கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவுகள் இணையதள வசதியுடன்கூடிய கணினி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளமையால் இவற்றின் உதவியுடன் நோயினைக் கட்டுப்படுத்த, பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் மற்றும் மரபுசீர் முறைகள் பற்றிய சமீபத்திய தகவல்களைப் பெற முடியும்.

6. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் உதவியுடன் ஒரு முன்னோடித் திட்டமாக, வேலூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ரூ.2.00 இலட்சம் செலவில் செயற்கைமுறைக் கருவூட்டல்மூலம் வெள்ளாடுகளின் மரபுவழி தரம் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 30

## தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை

### முன்னுரை

தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை, மாட்டினம் மற்றும் எருமையின இனப்பெருக்கப் பணிகளை ஒருங்கிணைக்கும்பொருட்டு நிறுவப்பட்ட தன்னாட்சி செயல்பாடு கொண்ட நிறுவனமாகும். இம்முகமை தேசிய பசு மற்றும் எருமையின இனவிருத்தித் திட்டத்தினை தமிழ்நாட்டில் 09.01.2003 முதல் செயல்படுத்தி வருகிறது.

பால் உற்பத்தி, தனி நபருக்குக் கிடைக்கப்பெறும் பால் அளவு மற்றும் மாடுகளின் தனிப்பட்ட உற்பத்தித் திறனை மேம்படுத்துவதே இம்முகமையின் பிரதான குறிக்கோளாகும்.

செயற்கைமுறைக் கருவூட்டல் மற்றும் பொலிகாளைகள்மூலம் அனைத்து இனப்பெருக்க வயதிலுள்ள பசு மற்றும் எருமைகளை இனப்பெருக்கத் திட்டத்தின்கீழ் கொண்டுவருவதும் இம்முகமையின் குறிக்கோளாகும்.

### குறிக்கோள்

1. விந்து உற்பத்திக்கு உயர்ந்த மரபியல் தன்மை கொண்ட தரமான காளைகளை அறிமுகப்படுத்துதல்.
2. விந்து உற்பத்தி நிலையங்கள் மற்றும் விந்து வங்கிகளைத் தரக்கட்டுப்பாட்டுடன் இயக்குதல்.
3. தரமான மரபியல் தன்மை கொண்ட இடுபொருட்களை வழங்குதல்.
4. வம்சாவழி சோதனை திட்டத்தினைத் தீவிரமாகச் செயல்படுத்துதல்.
5. கறவை மாடுகளின் பால் உற்பத்தித் திறனைப் பதிவு செய்து சிறந்த பசுக்களைத் தேர்வு செய்தல்.
6. இனப்பெருக்க வசதிகளைக் கீழ்க்கண்ட வழிகளில் அதிகரித்தல்:
   - ❖ கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சி மற்றும் தேவையான உபகரணங்களை வழங்கி புதிய நடமாடும் செயற்கைமுறைக் கருவூட்டல் மையங்களைத் துவக்குதல்.



2008 ஏப்ரல் 30]

   - ❖ வீடுகளுக்குச் சென்று கால்நடைகளுக்கு இனப்பெருக்கப் பணி மேற்கொள்வதை ஊக்குவித்தல்.
   - ❖ நிலையான செயற்கைமுறைக் கருவூட்டல் நிலையங்களை நிலையான மற்றும் நடமாடும் நிலையங்களாக மாற்றி அமைக்க வசதி செய்தல்.
7. உறைவிந்து மற்றும் செயற்கைமுறைக் கருவூட்டலுக்கான உபகரணங்களைக் கொள்முதல் செய்து வழங்குதல்.
8. திரவ நைட்ரஜன் சேமிப்பு மற்றும் விநியோக முறையைச் சீர்படுத்துதல்.
9. பாரம்பரிய உள்நாட்டு கால்நடை இனங்களைப் பாதுகாத்தல்.
10. முறையான பயிற்சிகளின்மூலம் மனித வளத்தை மேம்படுத்துதல்.

### தர உறுதி

மரபுத் திறன் வாய்ந்த உயர்ரகக் காளை கன்றுகளைக் கொள்முதல் செய்தும், பொலிகாளைகள் உறைவிந்து உற்பத்திக்கு உட்படுத்தப்படுமுன் அவைகளுக்கு ஏதேனும் மரபினக் கோளாறுகள் உள்ளதா எனவும், உறைவிந்து உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பொலிகாளைகள் காசநோய், ஜோனஸ் நோய், கருச்சிதைவு போன்ற நோய் உள்ளனவா என வருடா வருடம் பரிசோதிக்கப்பட்டும், உற்பத்தி நிலையங்களின் கட்டுமான வசதிகள் மற்றும் உறைவிந்து பரிசோதனைக் கூடங்களை மேம்படுத்தியும், உறைவிந்து உற்பத்திக்கான குறைந்தபட்ச தரச் செயல்முறைகளை அமல்படுத்தியும், உற்பத்தி செய்யப்பட்ட உறைவிந்துக் குச்சிகளைத் தரக் கட்டுப்பாட்டு பரிசோதனைக்குட்படுத்தப்பட்டும், தரம் வாய்ந்த உறைவிந்து உற்பத்தி செய்யப்பட்டு செயற்கைமுறைக் கருவூட்டலுக்காக விநியோகிக்கப்படுகிறது.

செயற்கைமுறைக் கருவூட்டல் நிலையங்கள் மற்றும் உறைவிந்து சேமிப்பு வங்கிகளுக்குப் போதுமான திரவ நைட்ரஜன் சேமிப்புக் குடுவைகள், உறைவிந்து மற்றும் திரவ நைட்ரஜன் விநியோகிப்பதற்காக விநியோகக் குடுவைகள் வழங்கப்பட்டும், திரவ நைட்ரஜன் தடையின்றியும், சீராகவும் வழங்கும் வகையில் திரவ நைட்ரஜன் சேமிப்புக் கொள்கலன்கள் நிறுவப்பட்டும், உறைவிந்தின் தரம் உற்பத்தியிலிருந்து அதனை உபயோகிக்கும் வரை உறுதி செய்யப்பட்டு வருகிறது.

[2008 ஏப்ரல் 30

**மாற்றியமைக்கப்பட்ட மாட்டின இனவிருத்திக் கொள்கை**

1982 ஆம் ஆண்டு முதல் இருந்து வரும் பசுவின இனவிருத்திக் கொள்கை வல்லுநர் குழு மற்றும் பங்குதாரர்கள் கூடி ஆய்வு செய்து, பின்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது:

**(அ) உள்நாட்டு மாட்டினங்கள்**

இனத்திற்கேற்ப (காங்கேயம் மற்றும் உம்பளாச்சேரி) அதே இனத்தின் வழி தேர்ந்தெடுக்கப்பட்ட இனப்பெருக்கம் செய்யப்பட வேண்டும். இவ்வகை மாடுகளை விரும்பிப் பாதுகாத்து வரும் கால்நடை வளர்ப்போருக்கும் இந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட இனப்பெருக்க முறையினைப் பரிந்துரை செய்யலாம். புலிகுளம், பர்கூர், ஆலம்பாடி மற்றும் மலை மாடு போன்ற பெரிய அளவில் அறிந்திராத இனங்களை சர்வே செய்து அவற்றின் குணாதிசயங்களை அறியவும் அவற்றைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த இன மாடுகளைப் பராமரிக்கும் இடங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட இனப்பெருக்க முறையினைப் பின்பற்ற வேண்டும்.

**(ஆ) எந்த இனத்தையும் சாராத மாட்டினங்கள்**

குறைந்த கறவைத் திறன் கொண்ட, எந்த இனத்தையும் சாராத பசுக்களை ஜெர்சி அல்லது பிரிசியன் இனங்களுடன் இனப்பெருக்கம் செய்ய வேண்டும். சம நிலப்பரப்பில் பராமரிக்கப்பட்டுவரும் எந்த இனத்தையும் சாராத பசுக்களை ஜெர்சி இனத்துடனும், அதிக மழை பெய்யும் பகுதிகளிலும் மலைப் பிரதேசங்களிலும் ஹோல்ஸ்டைன் பிரிசியன் இனத்துடன் இனப்பெருக்கம் செய்யவேண்டும். எந்த இனத்தையும் சாராத பசுக்களை அயலினக் காளைகளின் விந்தினைக் கொண்டு இனப்பெருக்கம் செய்யும்போது, அயலினப் பாரம்பரியத்தின் அளவு 50 சதவீதத்திலேயே வரையறுக்கப்பட வேண்டும்.

தூய ஜெர்சி இனமட்டுமல்லாது பாரம்பரியமிக்க இந்திய கறவை மாட்டினங்களான சிவப்பு சிந்தி மற்றும் தார்பார்க்கர் ஆகியவற்றையும் எந்த இனத்தையும் சாராத பசுக்களை இனப்பெருக்கம் செய்வதற்குப் பயன்படுத்தலாம். அதேபோல், ஹோல்ஸ்டைன் பிரிசியன் இனத்தைப் பயன்படுத்தக்கூடிய பகுதிகளில் சாகிவால் இனத்தைக் கொண்டு எந்த இனத்தையும் சாராத பசுக்களை இனப்பெருக்கம் செய்யலாம்.



2008 ஏப்ரல் 30]

**(இ) கலப்பினம் / தரம் உயர்த்தப்பட்ட மாட்டினம்**

ஜெர்சி கலப்பினம்/தரம் உயர்த்தப்பட்ட பசுக்களை 50 சதவீத ஜெர்சி பாரம்பரியம் கொண்ட பொலிகாளைகளுடன் இனப்பெருக்கம் செய்ய வேண்டும். ஹோல்ஸ்டைன் பிரிசியன் கலப்பினம்/தரம் உயர்த்தப்பட்ட பசுக்களை 50 சதவீத ஹோல்ஸ்டைன் பிரிசியன் பாரம்பரியம் கொண்ட பொலிகாளைகளுடன் இனப்பெருக்கம் செய்ய வேண்டும்.

**மாற்றியமைக்கப்பட்ட எருமையின இனவிருத்திக் கொள்கை**

**(அ) தரம் உயர்த்தப்பட்ட / எந்த இனத்தையும் சாராத எருமைகள்**

எந்த இனத்தையும் சாராத எருமைகளை முர்ரா இனத்தைக் கொண்டு இனப்பெருக்கம் செய்து தரம் உயர்த்துதல் வேண்டும். தரமான முர்ரா எருமைகளை முர்ரா இனத்துடன் இனப்பெருக்கம் செய்ய வேண்டும்.

**(ஆ) தோடா எருமைகள்**

நீலகிரி மாவட்டத்திலுள்ள தோடா எருமைகளைத் தூய இனப்பெருக்க முறையின்மூலம் இனப்பெருக்கம் செய்ய வேண்டும்.

**மரபியல் மேம்பாட்டிற்கு தரமான இடுபொருட்கள் கொள்முதல்**

தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை, மாட்டின அபிவிருத்திக்கான இடுபொருட்கள் கொள்முதல் செய்து வழங்க பிரதான முகமையாக நியமிக்கப்பட்டுள்ளது. தரமுள்ள உறைவிந்து கொள்முதல் செய்து விநியோகிக்கும் வகையில் உயர்ந்த மரபுத் தன்மை கொண்ட கன்றுகளை உற்பத்தி செய்யவல்ல மரபியல் வம்சாவழி கொண்ட பொலிகாளைகளின் திறன் அடிப்படையில் கொள்முதல் செய்ய, தொழில்நுட்பக் குழுவினரால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டு சிறந்த மரபியல் தன்மை கொண்ட பொலிகாளைகளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட 6.36 இலட்சம் உறைவிந்துக் குச்சிகள் கால்நடை பராமரிப்புத் துறைக்குக் கொள்முதல் செய்து வழங்கப்பட்டுள்ளது. 2008-2009-ம் ஆண்டு 24 இலட்சம் உறைவிந்துக் குச்சிகள் ஜெர்சி, கலப்பின ஜெர்சி, ஹோல்ஸ்டைன் பிரிசியன் மற்றும் கலப்பின ஹோல்ஸ்டைன் பிரிசியன் உறைவிந்துக் குச்சிகள் கொள்முதல் செய்து வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 30

இவ்வாண்டு, மாட்டின மற்றும் எருமையின அபிவிருத்திப் பணிகளை செயல்படுத்த மத்திய அரசு ரூ.6.00 கோடி விடுத்துள்ளது.

**2007-2008–ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட திட்டப் பணிகள்**

**1. உறைவிந்து உற்பத்தி நிலையங்களைப் பலப்படுத்துதல்**

(அ) உதகை மாவட்ட கால்நடைப் பண்ணையில், உறைவிந்து சோதனைக் கூடம் மற்றும் உறைவிந்து சேகரிக்கும் நிலைய கட்டுமானப் பணிகள் ரூ.40.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) ஈச்சங்கோட்டை உயரின கால்நடைப் பெருக்குப் பண்ணையில், உறைவிந்து சோதனைக் கூடம் மற்றும் உறைவிந்து சேகரிக்கும் நிலையம் ரூ.48.00 இலட்சம் செலவில் பலப்படுத்தப்பட்டுள்ளது.

(இ) உதகை மாவட்ட கால்நடைப் பண்ணைக்கு 10 தரம் வாய்ந்த ஜெர்சி பொலிகாளைக் கன்றுகள் மற்றும் ஈச்சங்கோட்டை உயரின கால்நடை பெருக்குப் பண்ணைக்கு 18 தரம் வாய்ந்த கலப்பின ஜெர்சி பொலிகாளைக் கன்றுகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

(ஈ) ஈச்சங்கோட்டை உயரின கால்நடை பெருக்குப் பண்ணை மற்றும் உதகை மாவட்ட கால்நடைப் பண்ணை ஆகிய உறைவிந்து உற்பத்தி நிலையங்களுக்கு சர்வதேச தரச் சான்றிதழ் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது.

**2. புதிய நடமாடும் செயற்கைமுறைக் கருவூட்டல் நிலையங்களை ஏற்படுத்தி மாநிலத்தில் செயற்கைமுறைக் கருவூட்டல் பணி அமைப்பினை பலப்படுத்துதல்.**

(அ) 18 சுயமாகப் பணியாற்றும் கால்நடை மருத்துவப் பட்டதாரிகளைக் கொண்டு (Self Employed Veterinary Graduates) வீட்டிற்கே சென்று கால்நடைகளுக்குச் செயற்கைமுறைக் கருவூட்டல் பணி செய்யும் வகையில் புதிய செயற்கைமுறைக் கருவூட்டல் நிலையங்கள் 2007-2008-ம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளன.

(ஆ) 102 படித்த கிராமப்புற இளைஞர்களுக்கு, வீடுகளுக்கே சென்று செயற்கைமுறைக் கருவூட்டல் பணி மேற்கொள்ள 2007-2008ஆம் ஆண்டில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இவர்களின்மூலம் புதிய நடமாடும் செயற்கைமுறைக் கருவூட்டல் நிலையங்கள் துவக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



2008 ஏப்ரல் 30]

(இ) 30 ஓய்வு பெற்ற கால்நடை மருத்துவர்கள் மற்றும் கால்நடை ஆய்வாளர்களுக்கு வீடுகளுக்கே சென்று கால்நடைகளுக்குச் செயற்கைமுறைக் கருவூட்டல் பணியினை மேற்கொள்ள தேவையான இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ஈ) 1700 நிலையான செயற்கைமுறைக் கருவூட்டல் நிலையங்களை நிலையான மற்றும் நடமாடும் செயற்கைமுறைக் கருவூட்டல் நிலையங்களாகச் செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**3. திரவ நைட்ரஜன் விநியோக முறையினைச் சீர்படுத்திப் பலப்படுத்துதல்**

10 எண்ணிக்கை 6000 லி. கொள்ளளவு கொண்ட திரவ நைட்ரஜன் சேமிப்புக் கலன்களைக் கொள்முதல் செய்து நிறுவும் பணி நடைபெற்று வருகிறது.

**4. பயிற்சித் திட்டங்கள்**

தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை 2007-2008ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பயிற்சிகளை அளிக்க வழிவகை செய்துள்ளது:

அ) கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தினைச் சார்ந்த உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் பணியாற்றும் 3 கால்நடை மருத்துவர்கள் மற்றும் 28 தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு, கேரளா கால்நடை மேம்பாட்டு வாரியத்தில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

ஆ) உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் பணியாற்றும் 6 தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு, குஜராத்தில் உள்ள சபர்மதி ஆஸ்ரமம் கௌசாலா, பீடஜில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

**5. வம்சாவழி சோதனைத் திட்டம்**

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின்மூலம் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் நிதி உதவியுடன், ஈரோட்டைத் தலைமையிடமாகக் கொண்டு 8 மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின்கீழ் செயல்படும் 160 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் வம்சாவழி சோதனைத் திட்டம் 15 வருவாய் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மூன்றாவது அணி சோதனை முடிக்கப்பட்டு முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. நான்காவது

[2008 ஏப்ரல் 30

அணியில் 13 ஜெர்சி கலப்பினக் காளைகளும், ஐந்தாவது அணியில் 23 ஜெர்சி கலப்பினக் காளைகளும் மற்றும் ஆறாவது அணியில் 20 ஜெர்சி கலப்பினக் காளைகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

**6. சிறந்த கறவை மாடுகளின் பால் உற்பத்தித் திறனை பதிவு செய்யும் திட்டம்**

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின்மூலம் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் நிதி உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 13 வருவாய் மாவட்டங்களில் உள்ள 7 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின்கீழ் செயல்படும் 150-க்கு மேற்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில், 1400 சிறந்த கலப்பின ஜெர்சி பசுக்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இப்பசுக்கள், காசநோய், ஜோனீஸ் நோய் மற்றும் கருச் சிதைவு நோய்க்கான ஆய்வு செய்து கறவைத் திறன் பதிவு செய்யப்படுகிறது. திறன் உறுதி செய்யப்பட்ட பொலிகாளைகளிலிருந்து பெறப்பட்ட உறைவிந்துமூலம் இப்பசுக்கள் கருவூட்டல் செய்யப்பட்டு இதன்மூலம் அதிக பால் கறவை கொண்ட பசுக்களுக்குப் பிறக்கும் கன்றுகள் தேர்வு செய்யப்பட்டு உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் உறைவிந்து உற்பத்திக்காக வளர்க்கப்படுகின்றன. இத்திட்டத்தின்மூலம் இதுவரை 18 பொலிகாளைக் கன்றுகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

**7. பாரம்பரிய பசு மற்றும் எருமை இனங்களைப் பாதுகாத்தல்:**

2007-2008 ஆம் ஆண்டில், பாரம்பரிய இனமான ஆலம்பாடி, பர்கூர் மற்றும் புலிகுளம் ஆகியவற்றின் ஆய்வு தமிழ்நாடு கால்நடை அறிவியல் மற்றும் மருத்துவப் பல்கலைக்கழகம் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**8. பிரச்சாரம் மற்றும் விளம்பரம்**

தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் நிதியுதவியுடன் 2007-2008ஆம் ஆண்டில் சென்னை பிரசார் பாரதி வானொலி மூலமாக, 'கால்நடைச் செல்வம்' என்ற பெயரில் ஒவ்வொரு சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு, 30 நிமிட நேர நிகழ்ச்சியாகத் தொழில்நுட்ப வல்லுநர்களின் உரை, கால்நடை பராமரிப்பு பற்றிய கலந்துரையாடல், கால்நடை பராமரிப்பு வல்லுநர் மற்றும் கால்நடை பண்ணையாளர்களுடன் நேர்முகக் கலந்துரையாடல் ஆகியவை ஒலிபரப்பப்பட்டது.



2008 ஏப்ரல் 30]

**கால்நடை காப்பீட்டுத் திட்டம்**

தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை, கால்நடை காப்பீட்டுத் திட்டத்தைத் தமிழ்நாட்டில் செயல்படுத்தும் நிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் சேலம், கோவை, நாமக்கல், ஈரோடு மற்றும் வேலூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் இரண்டாவது கட்டமாக 2007-2008ஆம் ஆண்டில் அதிக பால் கறவைத் திறன் கொண்ட பசு மற்றும் எருமைகள் கால்நடை காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இக்காப்பீடு செய்ய தேவையான தொகையில் 50 சதவீதம் அரசு மானியமாகவும் மீதி உள்ள 50 சதவீதம் தொகையைக் கால்நடை வளர்ப்போர்களிடமிருந்தும் பெறப்படுகிறது. 2007-08ஆம் ஆண்டில், 1,19,032 அதிக பால் கறவை திறன் கொண்ட பசு மற்றும் எருமைகள் காப்பீடு செய்யப்பட்டுள்ளன. காப்பீட்டு நிறுவனங்கள் ரூ.2.08 கோடி இழப்பீட்டுத் தொகையாகப் பயனாளிகளுக்கு வழங்கியுள்ளது.

**2008-2009 ஆம் ஆண்டு கீழே குறிப்பிடப்பட்ட பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன :**

1. உறைவிந்து உற்பத்தி நிலையங்களைப் பலப்படுத்துதல்.
2. செயற்கைமுறைக் கருவூட்டல் அமைப்பை பலப்படுத்துதல்.
3. புதிய தனியார் கருவூட்டல் நிலையங்களை உருவாக்குதல்.
4. நிலையான கருவூட்டல் நிலையங்களை, நிலையான மற்றும் நடமாடும் கருவூட்டல் நிலையங்களாக மாற்றுதல்.
5. திரவ நைட்ரஜன் விநியோகத்தைச் சீராக்குதல் மற்றும் பலப்படுத்துதல்.
6. கால்நடை சார்பணியாளர்கள் மற்றும் செயற்கைமுறைக் கருவூட்டல் பணியாளர்களுக்கான பயிற்சி அளித்தல்.
7. வம்சாவழி சோதனை திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துதல்.
8. கால்நடை உற்பத்தித் திறனைப் பதிவு செய்யும் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துதல்.
9. மலடு நீக்க முகாம் நடத்துதல்.

[2008 ஏப்ரல் 30

## தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**முன்னுரை**

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் 1989-இல் உருவாக்கப்பட்டது. இது இந்தியாவிலேயே கால்நடை மருத்துவத்திற்கான முதல் பல்கலைக்கழகம் ஆகும். இதனை நிறுவிய பெருமை, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களையே சாரும். இப்பல்கலைக்கழகத்தின் நோக்கங்களாவன:—

- இளங்கலை, முதுகலை மற்றும் முனைவர் பட்டம் பெறுவோருக்கு கால்நடை மருத்துவம், விலங்கினம் மற்றும் மீன்வள அறிவியலில் சிறந்த கல்வியை அளித்தல்;
- கால்நடை மற்றும் மீன் உற்பத்தி, பாதுகாப்பு மற்றும் அவற்றிலிருந்து பெறப்படும் பொருட்கள் பற்றிய ஆராய்ச்சி மேற்கொள்ளுதல்; மற்றும்
- கால்நடை, கோழியினம் மற்றும் மீன் வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் உரிய தொழில்நுட்பக் கல்வியை, கால்நடை பராமரிப்புத் துறையைச் சார்ந்தவர்களுக்கும், பண்ணையாளர்களுக்கும் கல்விமூலம் பரப்புதல்.

**பல்கலைக்கழகத்தின் அங்கங்கள்**

இப்பல்கலைக்கழகத்தின் அங்கங்கள் பற்றிய விவரம் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகள்**

இப்பல்கலைக்கழகத்தின் கல்வி, ஆராய்ச்சி, மருத்துவம் மற்றும் விரிவாக்கக் கல்வி இவற்றின் செயல்பாடுகளின் விவரம் பின்வருமாறு:

**கல்வி**

❖ இப்பல்கலைக்கழகத்தில் 2007-2008 ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவர் சேர்க்கைப் பட்டியல் பின்வருமாறு:



2008 ஏப்ரல் 30]

| பாடப்பிரிவு | சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல் | மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி | உணவு மற்றும் பால் வளத் தொழில்நுட்ப நிலையம், கொடுவள்ளி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பி.வி.எஸ்சி. & ஏ.எச். | 142 | 73 | - | - | 215 |
| பி.எஃப்.எஸ்சி. | - | - | 34 | - | 34 |
| பி.டெக். (உணவு பதனிடுதல்) | - | - | - | 18 | 18 |
| எம்.வி.எஸ்சி. | 62 | 12 | - | - | 74 |
| எம்.எஃப்.எஸ்சி. | - | - | 11 | - | 11 |
| பி.எச்டி. (கால்நடை) | 14 | 4 | - | - | 18 |
| பி.எச்டி. (மீன்வளம்) | - | - | - | - | - |
| உயிர்த் தகவல் நுட்பவியலில் முதுகலைப் பட்டயப் படிப்பு | 1 | - | - | - | 1 |
| உயிர்த்தொழில் நுட்பவியலில் எம்.ஃபில். படிப்பு | 6 | - | - | - | 6 |
| மொத்தம் | 225 | 89 | 45 | 18 | 377 |

❖ இந்தியாவின் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகமும், அமெரிக்காவின் மிச்சிகன் நகரப் பல்கலைக்கழகமும் இணைந்து 2006 இல் கையெழுத்திட்ட கூட்டு பல்கலைக்கழகமும் உடன்படிக்கையின்படி, இப்பல்கலைக்கழகத்தின் ஐந்து

மாணாக்கர்கள் பயிற்சி மருத்துவப் படிப்பை மேற்கொள்ளவும் இரண்டு ஆசிரியர்கள் பயிற்சித் திட்டத்தில் பயிற்சி பெறவும் அமெரிக்காவின் மிச்சிகன் நகரப் பல்கலைக்கழகத்திற்கு 2007 இல் அனுப்பப்பட்டுள்ளனர்.

❖ இந்தியாவின் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகமும், அமெரிக்காவின், வெர்ஜீனியா மேரிலாண்ட் மண்டலக் கால்நடை மருத்துவக் கல்லூரியும் இணைந்து கூட்டு உடன்படிக்கை ஒன்றினை 07-05-2007 அன்று கையெழுத்திட்டன. இந்த ஒப்பந்தத்தின்படி, ஆராய்ச்சி மற்றும் கல்வி தொடர்பாக ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் தகவல்களைப் பரஸ்பர பரிமாற்றம் செய்து அவர்களது கல்வித் தரம் மேம்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக, சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 21-08-2007 முதல் 23-08-2007 வரை "பறவை நச்சுயிரி நோய்களின் நுட்பத்திறனை மிகுவித்தல் மற்றும் கால்நடை உயிர்த் தொழில்நுட்பப் பயன்பாடுகள்" எனும் பன்னாட்டுப் பணியரங்கை நடத்தின. இந்த உடன்படிக்கையின்படி, இப்பல்கலைக்கழகத்தின் நான்கு மாணாக்கர்கள், பயிற்சி மருத்துவப் படிப்பை மேற்கொள்ளவும், ஆசிரியர் ஒருவர், பயிற்சித் திட்டத்தில் பயிற்சி பெறவும், அமெரிக்காவின் வெர்ஜீனியா மேரிலாண்ட் மண்டலக் கால்நடை மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பட்டுள்ளனர்.

❖ "கால்நடை மற்றும் கோழி வளங்களில் கணினிசார் ஊடகங்களை ஒருங்கிணைத்தல்மூலம் ஊரக மேம்பாடு" எனும் தேசியப் பணியரங்கு, இந்திய அரசின் தகவல் தொடர்பு மற்றும் செய்தித் தொழில்நுட்ப அமைச்சகத்தின்கீழ் இயங்கும் தேசிய தகவல் மையத்தின் நிதி உதவியுடன் இப்பல்கலைக்கழகம் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 24-11-2007 அன்று நடத்தியது.

❖ நம் நாட்டில் தனியார் மற்றும் அரசுசார் நிறுவனங்கள் ஒருங்கிணைந்து செயல்படும் கூட்டு முயற்சியை ஊக்குவிக்கும் பொருட்டு உயிர்த் தொழில்நுட்பவியல் துறை, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம், புதுதில்லி அறிமுகப்படுத்தியுள்ள "ஆராய்ச்சியோடு இணைந்து சிறு தொழில் முனைதல்" எனும் இப்புதிய திட்டத்தினை விளக்கும் கூட்டம் ஒன்றினை 10-12-2007 அன்று இப்பல்கலைக்கழகம் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தியது.





❖ தூத்துக்குடி மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மீன் வளப் பட்டப்படிப்பு இறுதியாண்டு பயிலும் மாணவர் ஒருவர் அஸ்ஸாம், கௌஹாத்தியில் உள்ள பணியாளர் மேலாண்மைக் கல்லூரியில் 01-11-2007 முதல் 03-11-2007 வரை நடைபெற்ற "பாலிமர் விஞ்ஞான தொழில்நுட்பத்தின் எல்லைகள்" என்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் "சிறந்த இளம் விஞ்ஞானி" என்ற பட்டத்தை வென்றார். கருத்தரங்கில் "மீன் செல்கள் மற்றும் கழிவுகளிலிருந்து உணவுப் பொதிதலுக்கான தேர்ந்த பாலிமர் தயாரிப்பு" என்ற தலைப்பில் அவர் வழங்கிய அறிவியல் கட்டுரைக்கு மேற்கண்ட விருது வழங்கப்பட்டது.

❖ மும்பையைச் சேர்ந்த மீன் வளப் பட்டதாரிகள் கழகம் நடத்திய 5 வெவ்வேறு விதமான தேர்வுகளில் தேர்ச்சி பெற்று, 2007ஆம் ஆண்டிற்கான இந்தியாவிலேயே சிறந்த மீன் வளப் பட்டதாரிகளுக்கான முதல் மற்றும் இரண்டாம் இடத்தை தூத்துக்குடி மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் பெற்றுள்ளனர்.

❖ பாவேந்தர் பாரதிதாசன் அறக்கட்டளைச் சார்பில் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற 2007 ஆம் ஆண்டிற்கான அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்கான போட்டிகளில் கலந்துகொண்ட நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இரண்டு மாணவர்கள் கட்டுரைப் போட்டியில் முதல் மற்றும் இரண்டாம் பரிசுகளையும், ஒரு மாணவர் கவிதைப் போட்டியில் மூன்றாம் பரிசையும் பெற்றார்.

❖ பாவேந்தர் பாரதிதாசன் அறக்கட்டளைச் சார்பில் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற 2007 ஆம் ஆண்டிற்கான அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்கான போட்டிகளில் கலந்துகொண்ட தூத்துக்குடி மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இரண்டு மாணவர்கள் தமிழ் பேச்சுப் போட்டியில் இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகளை வென்றனர். மேலும், இக்கல்லூரியைச் சார்ந்த இரண்டாம் ஆண்டு மாணவர் தமிழ்க் கவிதைப் போட்டியில் இரண்டாம் பரிசை வென்றார்.

## ஆராய்ச்சி

### புரவலர் ஆராய்ச்சித் திட்டங்கள்

2007-2008 ஆம் ஆண்டில் பதினேழு புரவலர் ஆராய்ச்சித் திட்டங்கள் ரூபாய் 455.59 இலட்ச மதிப்பீட்டில் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

### திட்டங்கள்

பல்கலைக்கழகத் திட்டத்தின்கீழ் உயர்கல்வி அளித்தல், புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்குதல், ஆராய்ச்சிகளை மேம்படுத்துதல் மற்றும் கண்டுபிடிப்புகளைப் பகிர்ந்தளித்தல் போன்றவற்றை மேற்கொள்ள வளாக வசதியை வலுப்படுத்தும் பொருட்டு 87 திட்டங்கள் ரூ.2256.37 இலட்ச மதிப்பீட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

### பகுதி-2 திட்டம்

2007-2008-க்கான பகுதி-2 திட்டத்தில் கீழ்க்கண்ட இரண்டு திட்டங்கள் இப்பல்கலைக்கழகத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளன:

1. ரூ.18.00 இலட்ச மதிப்பீட்டில் தஞ்சாவூரில் உள்ள கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலமாக மரபுசார் மூலிகை மருத்துவ முறைகளுக்கான ஆய்வு மற்றும் பயிற்சிக் கூடம் நிறுவுதல்.
2. ரூ. 17.01 இலட்ச மதிப்பீட்டில் கோலிபார்ம் நுண்கிருமியால் ஏற்படும் மடிவீக்க நோய்க்குத் தடுப்பூசி தயாரித்தல்.

### கால்நடை அறிவியலில் ஆராய்ச்சி சாதனைகள்

### கால்நடை உற்பத்தி

### நீலகிரி செம்மறியாட்டினை மரபணு மூலக்கூறுகளைக் கொண்டு பண்பேற்றக் குறிப்பீடு செய்தல்

தென்னிந்தியாவின் கம்பளி உற்பத்தி செய்யும் ஒரே இனமான நீலகிரி செம்மறியாட்டினத்தின் மரபு வேற்றுமையைக் கண்டறிய மைக்ரோசாட்டிலைட் டி.என்.ஏ. மரபணுக் காரணிகளைக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. வீட்டு விலங்கினங்களின் மரபு வேற்றுமையைக் கண்டறிய மைக்ரோசாட்டிலைட் மரபணுக் காரணிகள் பயன்படுத்தப்படுகின்றன.



தொடர்பற்ற 48 நீலகிரி செம்மறியாடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட டி.என்.ஏ., பன்முறைப் படியாக்கமுறைக்கு உட்படுத்தப்பட்டது. இந்த ஆய்வில் மரபணுக்களின் எண்ணிக்கையானது 3-லிருந்து 8-வரையில் இருந்தது. இவற்றின் சராசரி 5-ஆகக் கணக்கிடப்பட்டது. இவ்வகை செம்மறியாட்டில் 72 முதல் 228 மூல அளவு வரை உள்ள மரபணு மாறிகள், இருப்பது தெரியவந்தது. இருபத்தைந்து மைக்ரோசாட்டிலைட் பகுதிகளை ஆராய்ந்ததில் மொத்தம் 125 மரபணு மாறிகள் காணப்பட்டன.

### இறந்த கோழிகளைக் காற்றோட்டத்துடன்கூடிய முறையில் மட்கச் செய்தல்

இறந்த கோழிகளைக் கோழி எரு அல்லது தொழு உரத்துடன் சேர்த்து மட்கச் செய்வதற்கான ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் பெறப்படும் இலாபத்தினைக் கணக்கிட்டபொழுது, கோழி எரு சேர்த்து மட்கச் செய்யும்போது கிலோ ஒன்றிற்கு 39 பைசா முதல் 46 பைசா வரை இலாபமும், தொழு உரத்துடன் சேர்த்து மட்கச் செய்யும் பொழுது கிலோ ஒன்றிற்கு 10 பைசா முதல் 14 பைசா வரை இலாபமும் கிடைக்கும் என்று அறியப்பட்டது.

### கரும்புத் தோகையில் உள்ள ஊட்டச் சத்துகளின் மதிப்பு மற்றும் இதனால் மாடுகளின் இனப்பெருக்கத்தில் ஏற்படும் விளைவுகள்

பசும்புல் மற்றும் கரும்புத் தோகை ஊறுகாய் சம அளவில் அல்லது 100 சதவிகிதம் கரும்புத் தோகையைத் தீவனமாகத் தருகையில் இரத்தத்திலுள்ள இனப்பெருக்கத்திற்குத் தேவையான (அதிகம் மற்றும் குறைவாகத் தேவைப்படும்) தாது உப்புகளின் அளவில் மாற்றம் காணப்படவில்லை என்பது அறியப்பட்டது. கரும்புத் தோகை ஊறுகாய் தீவனத்தில் 5.81% செரிமானம் ஆகும் புரதமும், 47.43% மொத்த செரிமான ஊட்டச் சத்துக்களும் உள்ளன. 1% யூரியா மற்றும் 0.5% உப்பு கலந்த 2% சர்க்கரைப் பாகு ஆகியவற்றைச் சேர்ப்புப் பொருட்களாகச் சேர்த்து கரும்புத் தோகை ஊட்டச் சத்து மிகுந்த கரும்புத் தோகை ஊறுகாயாகத் தயாரிக்கப்படுகிறது.

### கறிக்கோழி தீவனத்தில் எதிர் உயிரிக்கு மாற்றாக ஆதரவு நுண்மங்கள்

எல். அசிடோபைலஸ் மற்றும் எல். பைரோஜென்ஸ் ஆகிய இரு வகையான ஆதரவு நுண்மங்கள் கலந்த தீவனத்தைக் கொடுத்து இறைச்சிக் கோழிகளில் ஒப்பீடு செய்யப்பட்டது. மேலும் ஆதரவு நுண்மங்கள் உட்கொண்ட கோழிகளின் இறைச்சி மற்றும் இரத்த கொலஸ்டிரால் அளவுகள் குறைவாக இருந்தது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

**கால்நடை நலம்**

## கோழிப் பண்ணைகளில் உயிரிகளைப் பயன்படுத்தி ஈக்களைக் கட்டுப்படுத்துதல்

வீட்டு ஈக்களின் இளம்பருவப் புழுக்களைக் கொல்லுவதற்கு பிடிஐ ஸ்போர்களை *2* கிராம் என்ற அளவில் பயன்படுத்தியதில் *76* விழுக்காடு இறப்பு உள்ளது கண்டறியப்பட்டது. பிடிஐ ஸ்போர்களைப் பயன்படுத்தாத கோழிப் பண்ணைகளில் வீட்டு ஈக்களின் புழுக்கள் *4* சதவிகிதமே இறந்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சிமூலம் ஈக்களைக் கட்டுப்படுத்துவதில் இளநீரில் வளர்க்கப்பட்ட *பெசில்லஸ் துரிஞ்சியன்ஸ்* வகை பூஞ்சைகள் எளிதில் கிடைக்கக்கூடியவை, செலவு குறைந்தவை மற்றும் சுற்றுச்சூழலுக்குகந்தவை எனவும் அறியப்பட்டுள்ளது. அடைகாக்குங் காலமான மூன்று நாட்கள் கழித்து, *பெசில்லஸ் துரிஞ்சியன்ஸ்* சேர்க்கப்பட்ட இளநீரைத் திறந்து, இளநீரை உரத்தில் தெளித்து ஈக்களின் இனவிருத்தி புழுப் பருவத்திலேயே, கட்டுப்படுத்தப்படுகிறது. இந்த ஆராய்ச்சிமூலம் *மடாரைசியம் அனைசோபிளியே* வகை பூஞ்சைகள் வீட்டு ஈக்களின் முட்டை, புழுப் பருவம் மற்றும் முதிர்ந்த ஈக்களைக் கட்டுப்படுத்த உதவும் என்பது கண்டறியப்பட்டது.

## சென்னையைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகளில் செம்மறியாடு மற்றும் வெள்ளாடுகளில் புருஸெல்லா நோயின் நிகழ்வு பற்றி ஆராய்ச்சி

சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள *231* செம்மறியாடுகள் மற்றும் *181* வெள்ளாடுகளில் *"புருஸெல்லா மெலிட்டன்ஸிஸ்"* என்ற நோய்க் கிருமியின் நிகழ்வைப் பற்றி நவீன முறைகளில் ரோஸ் பெங்கால் சோதனை (RBT), சோதனைக் குழாய் ஓட்டுத் திரள்வு சோதனை (STAT) மற்றும் மறைமுக எலைசா சோதனை (I-ELISA) மூலம் பரிசோதிக்கப்பட்டது. ரோஸ் பெங்கால் சோதனைமூலம் சோதனைக்குட்படுத்தப்பட்ட *231* செம்மறியாட்டு ஊநீர் மாதிரிகளில், *32* ஊநீர் மாதிரிகளில் (*13.85* சதவிகிதம்) நோயின் தாக்கம் உள்ளது எனவும் மற்றும் *181* வெள்ளாட்டு மாதிரிகளைச் சோதனைக்குட்படுத்தியதில் *32* ஊநீர் மாதிரிகளில் (*17.68* சதவிகிதம்) நோயின் தாக்கம் உள்ளது எனவும் கண்டறியப்பட்டது. சோதனைக் குழாய் ஓட்டுத் திரள்வு சோதனைமூலம் சோதனை செய்யப்பட்ட போது *23* வெள்ளாட்டு ஊநீர் மாதிரிகள் (*9.96* சதவிகிதம்) மற்றும் *29* செம்மறியாட்டு ஊநீர் மாதிரிகளில் (*16.02* சதவிகிதம்) நோயின் தாக்கம் உள்ளது எனக் கண்டறியப்பட்டுள்ளது. மறைமுக எலைசா





சோதனைமூலம் சோதனை செய்யப்பட்டபோது *47* வெள்ளாட்டு ஊநீர் மாதிரிகள் (*20.35* சதவிகிதம்) மற்றும் *45* செம்மறியாட்டு ஊநீர் மாதிரிகளில் (*24.86* சதவிகிதம்) நோயின் தாக்கம் உள்ளது எனக் கண்டறியப்பட்டுள்ளது. விவசாயப் பெருமக்களுக்கு இந்நோயினால் ஓராண்டிற்கு ஒரு கால்நடைக்கு ரூ. *570*/- வீதம் பொருளாதார இழப்பு ஏற்படுகிறது.

## ஆட்டுக் கொள்ளை (பி.பி.ஆர்.) நோய்க்கான வீரியம் குறைக்கப்பட்ட நச்சுயிரிகளைக் கொண்ட தடுப்பூசி தயாரித்தல், அதன் மதிப்பீடு மற்றும் தர நிர்ணயம் செய்தல்

ஆட்டுக் கொள்ளை (பி.பி.ஆர்.) நோய்க்கான வீரியம் குறைக்கப்பட்ட அரசூர் *87* தடுப்பூசி *20,000* ஆடுகளுக்குத் தேவையான அளவு தயாரிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் வழியாக *14,700* ஆடுகளுக்கான தடுப்பூசி, களநிலையில் பரிசோதிக்கப்பட்டது. தடுப்பூசி போடப்பட்ட ஆடுகளின் எதிர்க்காரணி அளவு, நீயூட்ரலைசேஷன் சோதனைமூலம் அறியப்பட்டு இந்தத் தடுப்பூசி, வீரியம் மிக்கது எனக் கண்டறியப்பட்டது.

## அசைபோடும் சிறு விலங்கினங்களைத் தாக்கும் அடைப்பான் நோய்க்கு பாதுகாப்பான வீரியம் மிக்க தடுப்பூசி தயாரித்தல்

இந்த ஆய்வுத் திட்டத்தில் பாதுகாப்பான திறன் கொண்ட அடைப்பான் தடுப்பூசி தயாரிக்கப்பட்டுள்ளது. ஸ்டேர்ன் வகை அடைப்பான் நுண்ணுயிரியை முதன்மைப் பொருளாகப் பயன்படுத்தி மாண்டனைடு கொண்டு கலவை செய்யப்பட்டது. இந்த தடுப்பூசி ஆய்வக சோதனைகளில் சிறப்பானதாக இருந்தது. ராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய்த் தடுப்பு நிலையத்தில் வெள்ளாடுகளில் ஆய்வு செய்யப்பட்டு திறன் உறுதி செய்யப்பட்டது. தடுப்பூசி அளிக்கப்பட்டபின் உருவாகும் நோய் எதிர்க்காரணிகளைக் கண்டறிய அகார் ஜெல் டிப்யூஷன் முறை உருவாக்கப்பட்டது.

## செம்மறி ஆட்டம்மைக்குத் திசு வளர்ப்பு முறை சார்ந்த தடுப்பூசி உருவாக்குதல்

செம்மறி ஆட்டம்மைத் தடுப்பூசி நச்சுயிரியானது, (ராணிப்பேட் வகை) வீரோ செல்களில் *40* முறை வளர்க்கப்பட்டு இந்த நச்சுயிரியின் அளவானது $10^{6.5}$ என கணக்கிடப்பட்டுள்ளது. ஊநீர் நியூட்ரலைஷேசன் சோதனை செய்தபோது, தடுப்பூசி அளிக்கப்பட்ட

[2008 ஏப்ரல் 30

பெரும்பாலான கால்நடைகளில் தடுப்பூசி அளிக்கப்பட்ட 14 நாட்களுக்குப் பிறகு செம்மறியாட்டம்மை நச்சுயிரிக்கு எதிரான நோய் எதிர்காரணிகள் இருப்பது கண்டறியப்பட்டது. பி, சி மற்றும் டி எனும் மூன்று குழு கால்நடைகளில் தடுப்பூசி அளிக்கப்பட்ட 14 நாட்களுக்குப் பிறகு ஊநீர் எலைசா நோய் எதிர்காரணிகள் இருப்பது கண்டறியப்பட்டது. குழு ஏ-வில் உள்ள கால்நடைகளில் 21 நாட்களுக்குப் பிறகும் ஊநீர் எலைசா நோய் எதிர்காரணிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது. வீரியமிக்க தடுப்பூசி ஆய்வில், தடுப்பூசி அளிக்கப்படாத கால்நடைகளுக்கு தீவிர தோல் அழற்சி நோய்த் தாக்கம் ஏற்பட்டு கால்நடைகள் இறந்தது கண்டறியப்பட்டது. தடுப்பூசி அளிக்கப்பட்ட கால்நடைகளில் தோல் அழற்சி நோயின் பாதிப்பு குறைவாக இருப்பது கண்டறியப்பட்டது.

**வீரியம் நீக்கப்பட்ட நீலநாக்கு நோய் நச்சுயிரி வகைகள் 1, 2, 15, 18 மற்றும் 23–ஐ உள்ளடக்கிய தடுப்பூசி தயாரித்தல்**

1, 2, 15, 18 மற்றும் 23 செயலிழக்கப்பட்ட நீலநாக்கு வகை நச்சுயிரிகள் பிரித்தெடுக்கப்பட்டன. செயலிழக்கப்பட்ட பின், மாண்டனைடு ஐஎஸ்ஏ 206 துணையூக்கி சம அளவில் சேர்க்கப்பட்டது. இந்த செயலிழக்கப்பட்ட ஐவகை நீலநாக்குத் தடுப்பூசி எதிர்ப்புச் சக்திமிக்க மற்றும் 180 நாட்களுக்குப் பிறகும் திறன் மிக்கவையாகவும் உள்ளது. இந்த ஐவகைத் தடுப்பூசி களப்பணி உபயோகத்திற்காகத் தயார் நிலையில் உள்ளது.

**நாய்களுக்குச் செயற்கைமுறைக் கருவூட்டல்**

டாபர்மென் மற்றும் ஜெர்மன் செப்பர்டு இனத்தைச் சேர்ந்த இரண்டு பொலிவு நாய்கள் வாங்கப்பட்டு அவை விந்து சேகரிப்பிற்குப் பழக்கப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சி திட்டத்தில் புதிதாகச் சேகரிக்கப்பட்ட விந்துவைக் கொண்டு, 21 டாபர்மென் மற்றும் 43 ஜெர்மன் செப்பர்ட் இன நாய்களுக்குச் செயற்கைமுறைக் கருவூட்டல் செய்யப்பட்டது. இதில் 6 டாபர்மென் மற்றும் 22 ஜெர்மன் செப்பர்ட் இன நாய்கள் சினையாகி குட்டி ஈன்றுள்ளன.

**தமிழகத்தில் கால்நடை வள மேம்பாட்டிற்கான மூலாதாரக் கூறுகளைக் கண்டறிதல் - ஒரு புவித் தகவல் முறைமை**

சேலம், கோயம்புத்தூர், விழுப்புரம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வளர்ச்சி வட்டம் அளவிலான புவியியல் எல்லை மென் வரைப்படங்கள் ஜியோ மீடியா 6.0 என்ற மென்பொருள்மூலம் வரையறுக்கப்பட்டன. புவியியல் அமைப்பு அளவிடும் கருவிமூலம்



2008 ஏப்ரல் 30]

கால்நடை பன்முக மருத்துவமனைகள், கால்நடை மருத்துவமனைகள், கால்நடை மருந்தகங்கள் மற்றும் கால்நடைக் கிளை நிலையங்கள் ஆகியவற்றின் புவியியல் அமைவுகள் பதிவு செய்யப்பட்டு தகவல் தொகுப்பு ஒன்று, மைக்ரோசாஃப்ட் அக்ஸஸ் (Microsoft Access) என்ற மென்பொருள்மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.

**தொழில்நுட்பம் சார்ந்த நாட்டுக்கோழி வளர்ப்புமூலம் கிராம மகளிர் திறன் மேம்பாடு மற்றும் சுய தொழில்**

ஓர் ஆயிரம் கிராம மகளிர்க்கு நாட்டுக்கோழி வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. நூறு கிராம மகளிர்க்கு சிறிய குஞ்சு பொரிப்பான் மூலம் கோழிமுட்டைகளைப் பொரிக்க திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டது. குஞ்சு பொரிக்கும் இயந்திரம் இந்த மையத்தில் அளிக்கப்பட்டு செயல் முறை விளக்கங்கள் அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி, 5 கிராமங்களில் 20 சிறிய குஞ்சு பொரிப்பான் இயந்திரங்கள் மற்றும் 20 பறவை கூண்டுகள் அமைக்கப்பட்டன.

**சிகிச்சையியல்**

கால்நடை மருத்துவப் பயிற்சி மற்றும் மருத்துவமனைகளைக் கொண்ட சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்; அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் மைய சிகிச்சையியல் ஆய்வகம் கொண்ட சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி; மாதவரத்தில் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் புறநகர் மருத்துவமனை போன்ற தனித்துவம் மிக்க வளாக வசதிகள் மற்றும் கால்நடை சிகிச்சையியல் மருத்துவம், இனப்பெருக்க மற்றும் ஈனியல் மருத்துவம், கால்நடை மருத்துவ அறுவைச்சிகிச்சை மற்றும் ஊடுகதிரியல், கால்நடை மருந்தியல் மற்றும் நச்சூட்டியல் போன்ற துறைகளில் சிறந்த மருத்துவ நிபுணர்களின் உதவியுடன் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், கால்நடை மற்றும் செல்லப்பிராணிகளின் சிகிச்சைக்காக இரவு பகலாகப் பணியாற்றி வருகிறது. சிகிச்சையியல் பற்றிய விவரம் பின்வருமாறு:

**வளாக வசதிகள் மற்றும் மருத்துவ சாதனங்கள் விவரம்**

1. நுண் ஒலி அலை வரைபடக் கருவி
2. சிறு மற்றும் பெரிய விலங்கினங்களுக்கான உடல் உள்நோக்கு கருவிப் பிரிவு
3. 24 மணி நேர இருதயத் துடிப்பைக் கண்காணிக்கும் ஹால்டர் கணினி காட்டி

[2008 ஏப்ரல் 30

4. கண் உள்விழிச் சோதனை மற்றும் அறுவைச் சிகிச்சைப் பிரிவு
5. தீவிர சிகிச்சைப் பிரிவு
6. நாய்களுக்குச் செயற்கைமுறைக் கருவூட்டல்
7. இனப்பெருக்கத் தொழில்நுட்ப உதவி ஆய்வகம்
8. பெரிய வகை விலங்கினங்களுக்கான சிகிச்சைப் பணிகள் (செயற்கைமுறைக் கருவூட்டல், மலட்டுத் தன்மையை அறியும் ஆய்வகம், மலட்டுச் சிகிச்சையகம், ஈனியல் பிரிவு, அசையூண் வயிற்றுப் பரிசோதனைக் கூடம், கால்நடைகளின் குளம்பு பராமரிப்பு மற்றும் நலனைப் பரிசோதிக்கும் ஆய்வகம்)
9. கிராமத்திலுள்ள பண்ணை விலங்கின நலனைக் காக்கும் பொருட்டு "நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தி" உடன் கால்நடைகளுக்கான நடமாடும் சிகிச்சைப் பணிகள்
10. அவசர சிகிச்சைப் பிரிவு

**2007-2008 ஆம் ஆண்டில் அளிக்கப்பட்ட சிகிச்சை விவரம்**

| இனம் | மருத்துவமனைகள் | | | | |
|---|---|---|---|---|---|
| | சென்னை | | மாதவரம் | | நாமக்கல் |
| | வெளிப்புற சிகிச்சை | நடமாடும் மருந்தகம் | வெளிப்புற சிகிச்சை | நடமாடும் மருந்தகம் | |
| குதிரை | 1296 | - | 10 | - | 13 |
| கறவை மற்றும் எருமையினம் | 12331 | 367 | 2132 | 27 | 5236 |
| செம்மறியாடு மற்றும் வெள்ளாடு | 2674 | 192 | 918 | 14 | 2034 |
| நாய்கள் | 43193 | 6 | 9052 | 1596 | 3732 |
| பூனைகள் | 1407 | - | 182 | 30 | 41 |
| கோழியினம் | 135 | - | 643 | 47 | 17 |
| மற்றவை | 718 | 18 | 107 | 12 | 40 |
| மொத்தம் | 61754 | 583 | 13044 | 1726 | 11113 |



2008 ஏப்ரல் 30]

**அக நோயாளிகள் பிரிவு வசதிகள்**

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் அக நோயாளிகள் பிரிவில் பெரிய மற்றும் சிறிய பிராணிகளுக்கெனத் தனித்தனியாகத் தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. 453 பெரிய மற்றும் சிறிய பிராணிகள் அகநோய்ப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டன. நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் அகநோய்ப் பிரிவில் 1906 பெரிய மற்றும் சிறிய பிராணிகள் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டன. வெறி நோயுற்ற நாய்களைக் கண்காணிக்க, தனியாகக் கண்காணிப்பு அறைகள் கட்டப்பட்டுள்ளன. 3266 செயற்கைமுறைக் கருவூட்டல் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டன.

**ஆய்வகப் பணிகள்**

- **கால்நடைத் தீவனம் மற்றும் கால்நடைப் பொருட்களின் நச்சுப்படிவறி மைய ஆய்வகம், மாதவரம்**

  இந்தத் தனிச் சிறப்பு வாய்ந்த ஆய்வகம் மைக்ரோடாக்சின், அப்ளாடாக்சின்-A, சிட்ரினின், பெனிசிலிக் அமிலம் போன்ற நச்சுக்களைத் துரிதமாக அறிதல்; ஆர்கனோக்ளோரின் போன்ற பூச்சிக் கொல்லிகள் மற்றும் க்ளோரம்பெனிகால், ஃப்யூரோசோலிடோன், ஃப்யூரால்டோன், செமிகார்பசைட், டெட்ராசைக்லின் மற்றும் சல்போனாமைட் போன்ற நுண்மக் கொல்லி எதிருயிரிகளை அறிதல் போன்ற பணிகளைக் கால்நடை மற்றும் கோழியினத் தொழில் முனைவோர்களுக்கு ஆற்றுகிறது. 2007-2008ஆம் ஆண்டில் 3094 மாதிரிகள் ஆய்விற்குட்படுத்தப்பட்டு தகுந்த ஆலோசனைகளுடன் ஆய்வு முடிவுகள் அவரவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

**கால்நடைத் தீவனப் பகுப்பாய்வு மற்றும் தரக் கட்டுப்பாட்டு ஆய்வுக் கூடம், நாமக்கல்**

இந்த ஆய்வகம் கால்நடை தீவனம் மற்றும் தீவன மூலப் பொருட்களில் உள்ள ஊட்டச் சத்துக்கள், கலப்படப் பொருட்கள், பூஞ்சான நச்சுகள் போன்றவற்றினை அறிய ஆய்வுகளை மேற்கொள்கிறது. இவ்வகையில் 2007-2008 ஆம்

ஆண்டில் 15,668 மாதிரிகளை ஆய்வுக்குட்படுத்தினர். இதில் 36,963 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. நாமக்கல் பகுதி கோழிப் பண்ணையாளர்களுக்கென, வாரத்திற்கு இருமுறை, வானிலை முன்னறிவிப்பு குறித்த செய்தி அறிவிப்பு வெளியீடுகள் 103 வெளியிடப்பட்டுள்ளன.

- **லெப்டோஸ்பைரோசிஸ் ஆராய்ச்சி ஆய்வகம், மாதவரம்**

2007-2008 ஆம் ஆண்டில், இந்த ஆய்வகத்தில் 2,154 கால்நடை ஊநீர் மாதிரிகளில் லெப்டோஸ்பைரோசிஸ் நோய் நுண்கிருமி பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இவற்றில் 1,171 மாதிரிகளில் நோய் நுண்கிருமி உள்ளது எனக் கண்டறியப்பட்டது. இதைத் தவிர, இந்த ஆய்வகத்தில் 9,781 மனித ஊநீர் மாதிரிகளில் லெப்டோஸ்பைரோசிஸ் நோய் நுண்கிருமி பரிசோர்தனை மேற்கொள்ளப்பட்டது. இவற்றில் 7,897 மாதிரிகளில் நோய் நுண்கிருமி உள்ளது எனக் கண்டறியப்பட்டது.

- **ஆணினவியல் ஆய்வகம், சென்னை**

2007-2008 ஆம் ஆண்டில், இந்த ஆய்வகத்தில் 418 மாதிரிகளில் மரபுத் திரியியல் சோதனை, 154 மாதிரிகளில் ஹேம்ஸ்டர் முட்டை ஊடுருவல் பரிசோதனை மற்றும் 409 மாதிரிகளில் விந்தணு பகுப்பாய்வு சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன.

**கால்நடை அறிவியலில் விரிவாக்கப் பணிகள்**

இப்பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மற்றப் பல்கலைக்கழக அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து அவர்களின் ஒத்துழைப்புடன் சிறந்த குறிக்கோள் கொண்ட ஆக்கப்பூர்வமான அனைத்து விரிவாக்கத் திட்டங்களையும் இப்பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்ககம் நிறைவேற்றி வருகிறது. இந்த இயக்ககம் கால்நடை பராமரிப்புத் துறை, தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை போன்ற அரசு சார்ந்த துறைகளுடனும் இணைந்து செயலாற்றி வருகிறது. விரிவாக்கக் கல்வி இயக்ககத்தின் செயல்பாடுகள் பின்வருமாறு:





**பயிற்சிகள் அளித்த விவரம் (2007-2008)**

| பயிற்சிகளின் தலைப்பு | பயிற்சிகளின் எண்ணிக்கை | | பயனடைந்தோர் விவரம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் | | மற்றவர்கள் | | மொத்தம் |
| | உள்ளிருப்பு பயிற்சிகள் | வெளிப்புற பயிற்சிகள் | ஆண்கள் | பெண்கள் | ஆண்கள் | பெண்கள் | |
| கறவை வளர்ப்பு | 103 | 100 | 622 | 1856 | 2438 | 3791 | 8707 |
| வெள்ளாடு மற்றும் செம்மறியாடு வளர்ப்பு | 75 | 49 | 436 | 842 | 1516 | 1265 | 4059 |
| கோழி வளர்ப்பு | 57 | 47 | 389 | 655 | 775 | 1218 | 3037 |
| வான்கோழி வளர்ப்பு | 27 | 4 | 155 | 219 | 462 | 231 | 1067 |
| ஜப்பானியக் காடை வளர்ப்பு | 32 | 4 | 167 | 216 | 338 | 255 | 976 |
| பன்றி வளர்ப்பு | 30 | 7 | 144 | 90 | 355 | 119 | 708 |
| முயல் வளர்ப்பு | 20 | 2 | 75 | 72 | 238 | 110 | 495 |
| பால் மற்றும் பால் பொருட்கள் | 16 | 13 | 34 | 122 | 351 | 480 | 987 |
| மனையியல் | 16 | 18 | 41 | 208 | 334 | 346 | 929 |
| தோட்டப் பயிர் | 14 | 16 | 96 | 68 | 763 | 372 | 1299 |
| ஒருங்கிணைந்த கால்நடை வளர்ப்பு | 22 | 87 | 431 | 1178 | 794 | 1757 | 4160 |
| மீன் வளர்ப்பு/ அலங்கார மீன் வளர்ப்பு | 15 | 17 | 139 | 116 | 411 | 401 | 1067 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பயிர் அறிவியல் | 10 | 4 | 94 | 49 | 383 | 155 | 681 |
| வேளாண் இயந்திரவியல் | 18 | 31 | 82 | 126 | 817 | 689 | 1714 |
| தீவனம் மற்றும் தீவனப் பயிர் வளர்ப்பு | 12 | 12 | 96 | 113 | 247 | 209 | 665 |
| விலங்கறிவியல் | 14 | 11 | 123 | 195 | 456 | 319 | 1093 |
| கன்று வளர்ப்பு | 6 | 7 | 19 | 28 | 201 | 79 | 327 |
| நோயறிதல் மற்றும் மேலாண்மை | 3 | 15 | 118 | 182 | 147 | 349 | 796 |
| இறைச்சிப் பொருட்கள் | 5 | - | 8 | 46 | 50 | 143 | 247 |
| கலப்பினங்களில் தோன்றும் இனப்பெருக்க இடர்ப்பாடுகள் மற்றும் மேலாண்மை முறைகள் | 5 | 7 | 9 | 38 | 11 | 65 | 123 |
| கால்நடை மற்றும் மீன் பராமரிப்பு முறைகள் | - | 9 | 32 | 767 | 78 | 519 | 1396 |
| தாதுக் கலவை | - | 2 | 12 | 8 | 32 | 5 | 57 |
| தீவன ஊறுகாய் தயாரித்தல் | - | 2 | 13 | 15 | 54 | - | 82 |
| மொத்தம் | 500 | 464 | 3335 | 7209 | 11251 | 12877 | 34672 |





**பிற விரிவாக்கப் பணிகள்**

| **பண்ணையாளர்களின் வினாக்கள் தொடர்பாக** | |
|---|---|
| அஞ்சல் வழியாக | 4171 |
| நேரடியாக | 13260 |
| களப்பணி ஆய்வு | 2367 |
| தொலைபேசி வழியாக | 3791 |
| மின்னஞ்சல் மூலமாக | 724 |
| தொடுதிரை கணினி மூலமாக | 2520 |
| **வானொலி நிகழ்ச்சிகள்** | **93** |
| **தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்** | **97** |
| **கண்காட்சிகள்** | **265** |

**தொழில்நுட்ப வெளியீடு**

**பொருட்கள்**

1. **முட்டையிட்டோய்ந்த கோழிகளை உலர் உருக்கி வடித்தல் முறை மூலம் செல்லப் பிராணிகளுக்கான உணவில் பயன்படுத்துதல்**

   முட்டையிட்டோய்ந்த கோழி இறைச்சிகளை 10-20 சதவிகிதம் கலந்து நாய்களுக்கான சத்தான மற்றும் விரும்பி உண்ணக்கூடிய செல்லப் பிராணி உணவினைத் தயாரிக்கலாம். 10 சதவிகித முட்டையிட்டோய்ந்த கோழி இறைச்சியினைச் சேர்த்து செல்லப் பிராணி உணவு தயாரிக்க ஆகும் செலவு கிலோ ஒன்றிற்கு ரூ.18/- மற்றும் 20 சதவிகித முட்டையிட்டோய்ந்த கோழி இறைச்சியினைச் சேர்த்து செல்லப் பிராணி உணவு தயாரிக்க ஆகும் செலவு கிலோ ஒன்றிற்கு ரூ.22.75 ஆகும்.

**2. முட்டையிட்டோய்ந்த கோழியிறைச்சியிலிருந்து பாரம்பரிய முறையிலான ஊறுகாய்**

வினிகர் கலந்த முட்டையிட்டோய்ந்த கோழி இறைச்சிகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஊறுகாய், அனைவரும் விரும்பும் வண்ணமும், அறை தட்பவெப்ப நிலையில் 90 நாட்கள் கெடாமல் இருக்கும் தன்மையினையும் உடையதாக உள்ளது.

**3. வெள்ளாடு மற்றும் செம்மறியாடுகளுக்கான தாது உப்புக் கட்டி**

வெள்ளாடு மற்றும் செம்மறியாடுகளுக்கான நக்கி உண்ணக் கூடிய பல்வேறு பேரூட்டம் மற்றும் நுண்ணூட்டம் அடங்கிய தாது உப்புக் கட்டி தயாரிக்கப்படுகிறது. மாதமொன்றிற்கு 20 ஆடுகளுக்கு ஒரு கிலோ கட்டி என்ற வகையில் பரிந்துரைக்கப்படுகிறது. இத்தகைய நுண்ணூட்டச் சத்து குறைபாடுகளை நீக்கும் பொருட்டு, பல்வேறு நுண்ணூட்டச் சத்துக்கள் அடங்கிய தாது உப்புக் கட்டியாக தயாரிக்கப்படுகிறது.

**4. நந்தனம் கினி கோழி I**

நந்தனம் கினி கோழி I சுவை மிகுந்த இறைச்சியைப் பெறவும் நீண்ட நாட்கள் வாழும் தன்மையையும் கொண்டவை. புழைக்கடை வளர்ப்பிற்கு மிகவும் உகந்தவை.

**5. ஈமு திடத் தீவனம்**

ஈமு முட்டைக் கோழி மற்றும் வளர்பருவக் கோழிகளுக்கென ஈமு திடத் தீவனம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்தீவனம் ஈமு கோழிகளுக்கு அளிப்பதற்கு எளிதாக உள்ளது.

**6. கொழுப்பு குறைந்த முக்கூட்டுக் கலப்பின வீரிய பன்றிகள் தயாரித்தல்**

புரதம் மிகுந்த மற்றும் குறைந்த பின் கொழுப்பு (2.46 செ.மீ.) கொண்ட இறைச்சியினை அளிப்பதே இந்தக் கொழுப்பு குறைந்த முக்கூட்டுக் கலப்பின வீரிய பன்றிகளின் சிறப்பம்சம் ஆகும்.

**7. மதிப்பூட்டம் செய்யப்பட்ட கரும்புத் தோகை ஊறுகாய்**

1% யூரியா, 2% சர்க்கரைப் பாகு மற்றும் 0.5% உப்பு கலந்து சேர்ப்புப் பொருட்களாக சேர்த்து கரும்புத் தோகையினை ஊட்டச் சத்து மிகுந்த கரும்புத் தோகை ஊறுகாயாக தயாரித்து தீவனத் தட்டுப்பாட்டின்போது மாட்டிற்கு அளிக்கலாம்.





**8. குறைந்த விலையில் யோகர்ட் தயாரிக்கும் கருவி**

இச்சாதனத்தைப் பயன்படுத்தி வீட்டிலேயே யோகர்ட்டினைத் தயாரிக்கலாம்.

**9. ஆயத்த மீன் மக்ரோனி**

மீன் மக்ரோனி புரதச் சத்து மிகுந்த தேநீர் உணவாகும். சாதாரண முறையிலே இதனைச் சமைத்து உண்ணலாம்.

**தடுப்பூசிகள்**

**10. அடைப்பான் நோய்க்கு மாண்டனைடு சேர்க்கப்பட்ட தடுப்பூசி**

வெள்ளாடு மற்றும் செம்மறியாடு போன்ற அசைபோடும் சிறு பிராணிகளுக்கு இந்தத் தடுப்பூசி உகந்தவை. இது பிராணிகளிடத்தில் எவ்விதப் பின்விளைவினையும் ஏற்படுத்தாததோடு அதிக எதிர்ப்புச் சக்தி வாய்ந்தவையாகவும் உள்ளது. ஆய்வக மற்றும் களப் பரிசோதனையின்போது இத்தடுப்பூசி பாதுகாப்பானதாகவும் சிறந்த திறனுடையதாகவும் உள்ளதென அறியப்பட்டுள்ளது.

**நோயறி சாதனங்கள்**

**11. சிடிவி செக் டிஸ்டெம்பர் நச்சுயிரிக்கெதிரான எதிர்புரதத்தை நாய்களின் ஊநீரில் கண்டறியும் சோதனைப் பெட்டி**

நாய் ஊநீரில் நச்சுயிரிக்கெதிரான எதிர்புரதத்தைக் கண்டறிய இச்சாதனம் உதவுகிறது. இச்சாதனம் தடுப்பூசியின் பின்விளைவுகளை நாய்களில் கண்டறியவும் உதவுகிறது. இச்சோதனையைக் களப்பணியிலும் மேற்கொள்ளலாம்.

**12. அகார் ஜெல் எதிர்புரதப் பரவுதல் சோதனை மூலம் கம்போரோ நோயைக் கண்டறிய உதவும் சோதனைப் பெட்டகம்**

குறைந்த வசதிகளைப் பெற்ற ஆய்வகத்திலும் கோழிப் பண்ணைகளிலும் இச்சாதனத்தைப் பயன்படுத்தி கம்போரோ நோயை எளிதில் கண்டறியலாம்.

**13. அடைப்பான் தடுப்பு மருந்தினால் ஏற்படும் ஊநீர் எதிர்பொருள் கண்டறியும் அகார் ஜெல் சோதனைப் பெட்டி**

ஆந்த்ராக்ஸ் தடுப்பூசியின் நோய் எதிர்ப்புத் தன்மையைக் களத்திலே கண்டறிய இச்சாதனம் உதவுகிறது.

மற்றவை

**14. இறந்த கோழிகளைக் காற்றோட்டமான முறையில் மட்கு உரமாக்குதல் - சுற்றுச்சூழல் நட்பு முறை**

கோழிப் பண்ணைகளில் இறந்த கோழிகளைச் சுகாதாரமான முறையில் வெளியேற்றுவதற்கென கோழி எரு அல்லது தொழு உரத்துடன் சேர்த்து மட்கச் செய்யும்போது 60 முதல் 120 நாட்களில் மட்கச் செய்யலாம். இந்த உரத்தினை விவசாயத்திற்குப் பயன்படுத்தலாம்.

**15. கோழிக் கழிவின் மூலம் மண்புழு உரம் தயாரித்தல்**

கோழிக் கழிவுகளைப் பண்படுத்தி மண்புழு உரம் தயாரித்து செடிகளுக்குக் கரிம உரமாகப் பயன்படுத்தலாம். இது மிகவும் விலைக் குறைந்தது. இம்மண்புழு உரம், டன் ஒன்றின் விலை ரூ.1,400/- ஆகும்.

**16. மின்சாரம்மூலம் இயங்கக்கூடிய கொய்யாச் செடிகளில் கவாத்து செய்யும் கருவி**

இச்சாதனத்தைப் பயன்படுத்துவதன் மூலம் கூலியாட்கள் செலவினம் ஏக்கர் ஒன்றிற்கு ரூ.1400/- குறைய வாய்ப்புள்ளது.

**17. கால்நடைகளுக்கான பசுந்தீவனம் வெட்டு மற்றும் அடர்தீவனம் அரைக்கும் இயந்திரம்**

இச்சாதனம் மின்சாரத்தைப் பயன்படுத்தி எளிதில் எடுத்துச் செல்லக் கூடியதாக உள்ளது. இச்சாதனம் ஒரு மணிநேரத்திற்கு 150 கிலோ புல்லை வெட்டவும் 50 கிலோ அடர்தீவனத்தை அரைக்கவும் உதவும். இச்சாதனத்தின் விலை ரூ.20,000/-.

**18. தமிழக கால்நடை வளத்திற்கான தலம்சார் தகவல் அமைப்பகம்**

இத்தகவல் குறுந்தகட்டில், தமிழகத்தில் கால்நடை பராமரிப்பு குறித்த அனைத்துத் தகவல்களும் இடம்பெற்றுள்ளன.

**19. விஞ்ஞான முறையில் வான்கோழி வளர்ப்பது தொடர்பான தொகுப்பு**

விஞ்ஞான முறையில் வான்கோழி வளர்க்கும் முறையானது கால்நடைப் பண்ணையாளர் எளிதில் பின்பற்றக் கூடியவை.





**20. கால்நடை தீவனம் அளிப்பதில் சிக்கனம் மற்றும் உள்ளூர் தீவனப் பொருட்களைப் பயன்படுத்துதல் பற்றிய படிப்பதற்குகந்த குறுந்தகடு**

கால்நடை தீவனம் குறித்த இந்த மென்சாதனத்தைப் பயன்படுத்தி, கிடைக்கக்கூடிய தீவன உபப் பொருட்களைப் பயன்படுத்தி, குறைந்த செலவிலான தீவனம் தயாரிக்கும் முறையினை அறிய ஏதுவாகும்.

**21. மாட்டினங்களில் மூட்டு அழற்சிக்கான அழுத்த மூட்டு சுத்திகரிப்பு சிகிச்சை**

மூட்டு அழற்சிக்கான இந்தச் சிகிச்சை, கள ஆய்வில் மேற்கொள்ள ஏதுவாக இருக்கிறது.

## மீன் வள அறிவியலில் முக்கிய ஆராய்ச்சி சாதனைகள்

### நன்னீர் இறால் குஞ்சு உற்பத்தி

பண்ணைக் குளங்களில் இருந்து பெறப்பட்ட சினை இறால்கள் 1 : 6 (ஆண் : பெண்) என்ற விகிதத்தில் இருப்பு செய்யப்பட்டுப் பராமரிக்கப்பட்டன. இத்தகைய அதிக இருப்படர்த்தியாலும் அவை தொடர்ந்து இனக்கூடுகையிலும், முட்டைகளிலும் எவ்விதக் குறைபாடின்றி அதிக முறை முட்டை தாங்கிய சினை இறால்கள் பெறப்பட்டு இறால் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டன.

### கெளுத்தி மீன் குஞ்சு உற்பத்தி

சினை கெளுத்தி மீன்கள் ஒரிசா மாநிலத்தில் புவனேஸ்வரில் இயற்கை சூழ்நிலையில் சேகரித்து உயிருடன் தூத்துக்குடியில் உள்ள மீன் வளக் கல்லூரிக்குக் கொண்டு வரப்பட்டன. சிமெண்ட் தொட்டிகளில் சினை மீன்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றது. கோழிக் குடல்கள் உணவாகத் தரப்பட்டு வருகின்றது. தூண்டுதல் முறையில் இனப்பெருக்கம் செய்து கெளுத்தி மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டன.

### மன்னார் வளைகுடாவில் உள்ள சிங்கிறால் வளத்தைப் பாதுகாத்தல்

மன்னார் வளைகுடாவில் நடத்தப்பட்ட முட்சிங்கிறால் சிற்றினங்களின் எண்ணிக்கை மற்றும் அவை பிடிக்கப்படும் அளவு பற்றிய சர்வேயின்படி, இப்பகுதியில் *பானுலிரஸ் ஹோமாரஸ், பா. ஆர்னேடஸ், பா. வெர்ஸிகோலர்* போன்ற முட்சிங்கிறால்

இனங்கள், வருடம் முழுவதும் கிடைக்கப்பெறுகின்றன. இம்மூன்று சிற்றினங்களில் *பா. ஹெமாரஸ்* மற்றும் *பா. ஆர்னேடஸ்* ஆனது அதிக அளவில் கிடைக்கப் பெற்றது. இவ்வாறு கிடைக்கப்பெற்ற சிங்கிறால் இளம் உயிரிகளானது, மன்னார் வளைகுடாவில் அமைந்துள்ள தூத்துக்குடி கடற்கரைப் பகுதிகளுக்கு அருகில் திறந்தவெளி கடற்பகுதிகளில் சிங்கிறால் வளத்தைப் பெருக்கும் பொருட்டு இருப்பு செய்யப்பட்டன.

**முதுகெலும்பில்லா கடல் உயிரினங்களின் ஓட்டுக் கழிவுகளிலிருந்து, கைட்டின், கைட்டோசன் (Chitin and Chitosan) மற்றும் கால்சியம் சத்துப் பொருள் தயாரிப்பு பற்றிய தொழில்நுட்பங்களைக் கண்டறிந்து பெண்களின் சுய வேலைவாய்ப்பைப் பெருக்குதல்**

ஓட்டுக் கழிவுகளிலிருந்து ஹைட்ரோ குளோரிக் அமிலம் மற்றும் சோடியம் ஹைட்ராக்ஸைடு கொண்டு கைட்டின் மற்றும் கைட்டோசன் தயாரிக்கும் முறைகள் வரையறுக்கப்பட்டன. மேலும் பப்பாளி, அன்னாசிப் பழம் மற்றும் மீன்களின் உடல் கழிவுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட நொதிகளைக் கொண்டு கைட்டின் மற்றும் கைட்டோசன் தயாரிக்கும் முறைகள் கண்டறியப்பட்டன. இந்த ஆராய்ச்சியின் கண்டுபிடிப்பு முறைகள் தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள தொழில் முனைவோர் மற்றும் சுய உதவிக் குழு மகளிருக்குப் பயிற்சிகள்மூலமாக வழங்கப்பட்டன. கைட்டின் சார்ந்த தொழில் ஆரம்பிக்க விரும்புவோர்க்குத் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

## 2007-2008 திட்ட செயல்பாடுகள் முன்னேற்றம்

- கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தஞ்சாவூர் மூலமாக மரபுசார் மூலிகை மருத்துவ முறைகளுக்கான ஆய்வு மற்றும் பயிற்சிக் கூடம் அமைத்தல் ரூ. 18.00 இலட்ச மதிப்பீட்டில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில், 300 கால்நடைப் பண்ணையாளர்களுக்கு மரபுசார் மூலிகை மருத்துவ முறைகள் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. மரபுசார் மூலிகை மருத்துவ முறைகள் குறித்து மூன்று கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. 50 கால்நடை மருத்துவர்களுக்கு மரபுசார் மூலிகை மருத்துவ முறைகள் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் மூலிகை மருத்துவம் என்ற தலைப்பில் கால்நடை நலம் பேணுதல் தொடர்பாகப் பணியரங்கு, கால்நடை மருத்துவ அறிவியல் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தஞ்சாவூரில் 22-11-2007 அன்று நடத்தப்பட்டது. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரிடமிருந்து 0.40.5 ஹெக்டேர் நிலம் கட்டடம் கட்டும் பொருட்டு பெறப்பட்டுள்ளது. முதலாமாண்டு நிதி ஒதுக்கீடான ரூ.15.15 இலட்சம் முழுவதும் செலவிடப்பட்டுள்ளது.



கோலிபார்ம் நுண்கிருமியால் ஏற்படும் மடிவீக்க நோய்க்குத் தடுப்பூசி தயாரித்தல், ரூ.17.01 இலட்ச மதிப்பீட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 2007-2008 ஆம் ஆண்டில் நுண்கிருமிகள் மடிவீக்க நோயிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு அதன் குணநலன்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. முதலாமாண்டு நிதி ஒதுக்கீடான ரூ.2.63 இலட்சம் முழுவதும் செலவிடப்பட்டுள்ளது.

## 2008-2009-க்கான புதிய பகுதி-2' திட்டங்கள்

கீழ்க் குறிப்பிட்டுள்ள மூன்று திட்டங்களை 2008-2009 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டமாகச் செயல்படுத்த உத்தேசித்து உள்ளது:—

1. ரூ.20.50 இலட்சம் செலவில் வெள்ளாடுகளைத் தாக்கும் அம்மை நோய்க்குத் தடுப்பூசி தயாரித்தல்
2. ரூ.26.36 இலட்சம் செலவில் மாடுகளுக்கு ஏற்படும் கருச்சிதைவு நோயைக் (புருசெல்லோசிஸ்) கண்டறிய உதவும் பக்கவாட்டுப் பரவுதல் ஆய்வகப் பெட்டியை உருவாக்குதல்
3. ரூ.28.14 இலட்சம் செலவில் கடல்வாழ் உயிரினங்களில் இருந்து மருந்தாகப் பயன்படும் உயிர்வேதிப் பொருட்களைத் தயாரித்தல்.

## எதிர்காலத் திட்டங்கள்

### கால்நடை

- மேய்ச்சல் நிலங்கள் சுருங்கிவரும் நிலையில் மாற்றுத் தீவன வளத்தினை அறிய முனைதல்
- மரத் தீவனத்தைப் பயன்படுத்துதல்

[2008 ஏப்ரல் 30

- தீவனங்களை ஊட்டச் சத்து மிகுந்த தீவனமாக்குதல்
- ஆண்டு முழுவதும் இலவசமாக தீவன நாற்றுகளை அளிப்பதற்கென கிராமம் / வட்டந்தோறும் தீவன வங்கிகளை அமைத்தல்
- தொற்று நோய்களைத் துரிதமாகவும், துல்லியமாகவும் அறிவதற்கென அணுத்திரள்சார் நோயறி சாதனங்களை உருவாக்குதல்
- அணுத்திரள்சார் நுண்ணுயிரியல் ஆய்வகத்தை நிறுவுதல்
- கணநீரியல் ஆய்வகத்தை நிறுவுதல்

**மீன் வளம்**

- இறால்களைத் தாக்கும் நோய்களுக்கான தடுப்பூசிகளை உருவாக்குதல்
- கடலுணவுகளைத் தர நிர்ணயம் செய்தல்
- கடல்வாழ் விலங்கினங்களிலிருந்து உயிரி கூட்டு கொண்ட மருந்தகத் தன்மையை அறிந்து மேம்படுத்துதல்



2008 ஏப்ரல் 30]

## இணைப்பு

- **கல்லூரிகள்**

  சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை.

  கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்.

  மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி.

- **உயர்கல்வி மையங்கள்**

  மருத்துவ சிகிச்சையியல் மற்றும் நோய் நீக்கியல், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை.

  கோழியின அறிவியல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்.

- **உயராய்வு மையம்**

  கால்நடை உயிர்த் தொழில்நுட்பவியல் மற்றும் நோய் எதிரியியலில் உயராய்வு மையம், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை.

- **ஆராய்ச்சி மையங்கள்**

  ✓ கோழியின ஆராய்ச்சி நிலையம், சென்னை

  ✓ கால்நடை ஆராய்ச்சி நிலையம், காட்டுப்பாக்கம், காஞ்சிபுரம்

  ✓ மேச்சேரி செம்மறியாட்டு ஆராய்ச்சி நிலையம், பொத்தனேரி, சேலம்

  ✓ செம்மறியாட்டு இனப்பெருக்க ஆராய்ச்சி நிலையம், பொத்தனேரி, சேலம்

  ✓ பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலையம், மாதவரம், சென்னை

  ✓ உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்ப நிறுவனம், கொடுவள்ளி, சென்னை

  ✓ கால்நடை ஊட்டச்சத்தியல் நிறுவனம், காட்டுப்பாக்கம், காஞ்சிபுரம்

[2008 ஏப்ரல் 30

- **கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள்**

1. கோயம்புத்தூர்
2. தருமபுரி
3. திண்டுக்கல்
4. ஈரோடு
5. கரூர்
6. மதுரை
7. மேல்மருவத்தூர்
8. பறக்கை
9. கடலூர்
10. இராஜபாளையம்
11. சேலம்
12. தஞ்சாவூர்
13. திருநெல்வேலி
14. திருப்பூர்
15. திருச்சி
16. வேலூர்

- **கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக மண்டல வள மையம், புதுக்கோட்டை**
- **மீன் வள பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்**

1. பறக்கை, கன்னியாகுமரி மாவட்டம்
2. தஞ்சாவூர்

- **கோழியின நோய் ஆய்வுக் கூடம்**

1. நாமக்கல்
2. தலைவாசல்

- **ஆய்வகங்கள்**

  - கால்நடை தீவனப் பகுப்பாய்வு மற்றும் தரக் கட்டுப்பாட்டு ஆய்வுக் கூடம், நாமக்கல்
  - கால்நடை தீவன மற்றும் கால்நடைப் பொருட்களின் நச்சுப்படிவறி மைய ஆய்வகம், சென்னை
  - பல்கலைக்கழக மைய ஆய்வகம், மாதவரம் பால் பண்ணை, சென்னை.
  - லெப்டோஸ்பைரோசிஸ் நோயறி ஆய்வகம், மாதவரம் பால் பண்ணை, சென்னை



2008 ஏப்ரல் 30]

  - இறால் நோயறி ஆய்வகம், மாதவரம் பால் பண்ணை, சென்னை
  - நுண்ணுயிரியல் தடுப்பூசி ஆராய்ச்சி மையம், மாதவரம் பால் பண்ணை, சென்னை
  - நச்சுயிரித் தடுப்பூசி ஆராய்ச்சி மையம், மாதவரம் பால் பண்ணை, சென்னை
  - மைய ஆய்வுக் கருவிக் கூடம், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை.
  - மைய சிகிச்சையியல் ஆய்வுக்கூடம், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை.
  - கால்நடைகளுக்கான உயிர்த்திசு பாதுகாப்புக் கூடம் / இரண்டாம் நிலை (உலக சுகாதார மையத் தரம்), மாதவரம் பால் பண்ணை, சென்னை

- **உழவர் பயிற்சி மையம்**

1. காஞ்சிபுரம்
2. தேனி
3. திருவாரூர்

- **வேளாண் அறிவியல் மையம்**

1. காட்டுப்பாக்கம்
2. குன்றக்குடி
3. நாமக்கல்

[2008 ஏப்ரல் 30

## இணைப்பு II

(386 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 7—மீன் வளத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009

**முன்னுரை**

தமிழ்நாடு கிழக்குக் கடற்கரையில் 13 கடலோர மாவட்டங்களுடன், 591 மீன்பிடி கிராமங்களையும், 1,076 கிலோ மீட்டர் நீள கடற்கரையையும் கொண்ட ஒரு மாநிலம். தேசிய அளவில் மீன் உற்பத்தியில் நான்காவது நிலையில் உள்ள மாநிலமாகும். தமிழகம் 41,412 சதுர கிலோ மீட்டர் கடற்படு நிலத்தொடரும், 0.19 மில்லியன் சதுர கிலோ மீட்டர் தனி உரிமைப் பொருளாதார மண்டலமும் (Exclusive Economic Zone) கொண்டுள்ளது.

மாநிலத்தின் ஒட்டுமொத்த மீன்பிடிப்பில் கடல் மீன்பிடிப்பின் பங்கு அதிகமாக உள்ளது. தமிழ்நாட்டின் கடற்கரை நான்கு பகுதிகளாக அமைந்துள்ளது.

I. வடக்கே பழவேற்காடு முதல் தெற்கே கோடிமுனை வரை சுமார் 357.2 கிலோ மீட்டர் நீளமுள்ள மற்றும் அலைகள் மிகுந்த சோழமண்டலக் கடற்கரை.

II. கோடிமுனை முதல் தனுஷ்கோடி வரை சுமார் 293.9 கிலோ மீட்டர் நீளமுள்ள பாக் ஜலசந்தி.

III. தனுஷ்கோடி முதல் கன்னியாகுமரி வரையிலான பல்வகை உயிரின மாறுபாடுடைய, கடல் உயிரினங்கள் மிகுதியாக உள்ள 364.9 கிலோ மீட்டர் நீளமுள்ள மன்னார் வளைகுடா.

IV. கன்னியாகுமரி முதல் நீரோடி மீனவ கிராமம் வரை 60 கிலோ மீட்டர் நீளமான, அரபிக்கடலில் உள்ள மேற்குக் கடற்கரை.

இந்த பரந்த மீன் வள ஆதாரங்கள் இன்னமும் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை. கடல் மீன் வளத்தைப் பொறுத்தமட்டில், அண்மைக்கடல் மீன் வளம் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டு விட்டது. தூரக்கடல் மற்றும் ஆழ்கடல் மீன்வள ஆதாரங்கள் இன்னமும் உகந்த அளவில் பயன்படுத்தப்படவில்லை.



மீன் உற்பத்தியை அதிகரித்தல், மீன் வளத்தைப் பாதுகாத்து நிலை நிறுத்துதல் மற்றும் மீனவர்களின் சமூக பொருளாதாரத் தரத்தை மேம்படுத்துதல் ஆகியவை மீன் துறையின் முதன்மைப் பொறுப்பாகும்.

இந்த அரசு, மீனவர்களின் நலனில் அக்கறை கொண்டு அன்றாடம் அவர்கள் சந்திக்கும் இயற்கை இடர்ப்பாடுகளைக் களைந்திடும் பொருட்டு அவர்களது வாழ்வாதாரங்களைப் பெருக்கிட விவசாயத் தொழிலாளர்களுக்கென நல வாரியம் உள்ளதைப் போன்று மீனவர்களுக்குத் தேவையான சமூகப் பாதுகாப்பு மற்றும் அனைத்து உதவிகளும் வழங்கும் பொருட்டு மீனவர்களுக்கென தனியே நல வாரியம் அமைத்துள்ளது.

**நிர்வாக அமைப்பு**

மீன் வளத் துறை ஆணையர், துறையின் தலைவராகவும், தமிழ்நாடு அரசின் நிறுவனமான தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநராகவும் உள்ளார். மேலும், தமிழ்நாடு மாநிலக் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் உட்பட அனைத்து மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பதிவாளராகவும் செயல்பட்டு வருகிறார்.

மீன் வளத் துறையானது 2007-2008 ஆம் ஆண்டில் சிறப்பாகச் செயல் புரிந்தமைக்காகப் பெருமைப்படத்தக்க விருதுகளைப் பெற்றுள்ளது.

பிப்ரவரி 2008-ல் நடைபெற்ற நீர்வாழ் உயிரினக் கண்காட்சியில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் பின்வரும் 3 விருதுகளைப் பெற்றுள்ளது.

(i) சிறந்த அரங்க அமைப்புக்கான விருது

(ii) கடல்வாழ் மீன்களின் காட்சிக்கான சிறந்த விருது

மற்றும்

(iii) வண்ண மீன் உபகரணங்கள் விற்பனைக்கான சிறந்த விருது

குழு விபத்துக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களில் அதிகபட்சமாக 5,55,744 மீனவர்/மீனவ மகளிரை உறுப்பினர்களாகச் சேர்த்தமைக்காகத் தமிழ்நாடு மீன் வளத் துறை முதல் பரிசினைப் பெற்றது. இதனைப் பாராட்டி புது தில்லியில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் கேடயம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் மீன் துறை ஆணையருக்கு வழங்கப்பட்டது.

[2008 ஏப்ரல் 30

மீன் வளத் துறை ஆறு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, 3 மீன் துறை மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் 3 மீன் துறை மண்டல துணை இயக்குநர்களின் தலைமையில், மீன் துறை உதவி இயக்குநர்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல், மீனவர் நலத் திட்டங்கள் உட்பட பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டுகளில் பணி நியமனங்களுக்குத் தடை இருந்த காரணத்தால் பணியிடங்கள் நிரப்பப்படாத் நிலையில் நலத் திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் செயல்படுத்துவதில் மீன் துறைக்குப் பெரும் சிரமம் ஏற்பட்டது. 2006-07ஆம் ஆண்டில் பணி நியமன தடை அரசால் விலக்கிக்கொள்ளப்பட்டு, 2007-08ஆம் ஆண்டில் கீழ்க்காணும் பணியிடங்கள் நிரப்பப்பட்டன.

| வரிசை எண் | பதவியின் பெயர் | நிரப்பப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மீன் துறை இணை இயக்குநர் | 2 |
| 2 | மீன் துறை துணை இயக்குநர் | 7 |
| 3 | மீன் துறை உதவி இயக்குநர் | 31 |
| 4 | நேர்முக உதவியாளர் | 5 |
| 5 | மீன் துறை ஆய்வாளர் | 25 |
| 6 | மீன் துறை சார் ஆய்வாளர் | 14 |
| 7 | கண்காணிப்பாளர் | 37 |
| 8 | உதவியாளர் | 12 |
| 9 | இளநிலை உதவியாளர் | 5 |
| 10 | மீன் வள மேற்பார்வையாளர் தரம்-I | 26 |
| 11 | மீன் வள மேற்பார்வையாளர் தரம்-II | 18 |
| 12 | மாவட்ட ஆட்சியர் மூலம் தற்காலிக நியமனம் (தட்டச்சர்) | 8 |
| 13 | பிற துறைகளிலிருந்து நியமனம் (சுருக்கெழுத்துத் தட்டச்சர்) | 1 |
| 14 | கருணை அடிப்படையிலான நியமனம் (அனைத்துப் பிரிவுகள்) | 15 |
| 15 | டெக்ஸ்கோ மூலம் நியமனம் (ஊர்தி ஓட்டுநர்) | 4 |
| | மொத்தம் | 210 |



2008 ஏப்ரல் 30]

**மீன் வளத் துறையின் நோக்கங்கள்**

❖ கடல் பகுதிகளில் பயன்படுத்தப்படாத மீன் வள ஆதாரங்களைப் பயன்படுத்தவும், அண்மைக்கடல் பகுதியில் அதிக அளவு மீன்பிடிப்பைக் குறைக்கவும் ஊக்குவித்தல்

❖ மீன் வளங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள், மீன் இருப்பை அதிகரித்தல், செயற்கை மீன் உறைவிடங்கள் அமைத்தல் போன்றவற்றின்மூலம் அண்மைக்கடல் பகுதிகளில் நீர்வாழ் உயிரின உற்பத்தி ஆதாரங்களைப் பெருக்குதல்

❖ நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த, நீர்வாழ் உயிரின வளர்ப்பு நடவடிக்கைகளை ஊக்குவித்தல்

❖ மீன்களைக் கரை இறக்குவதற்காகவும், விற்பனைக்காகவும் உட்கட்டமைப்பு வசதிகளை, இடர்கள் பற்றிய ஆய்வு மற்றும் தரக் கட்டுப்பாடு மதிப்பீட்டளவு (HACCP) மற்றும் ஐரோப்பியக் கூட்டமைப்பு (European Union) வரையறைகளின்படி வலுப்படுத்துதல்

❖ மீனவ மக்களுக்கான நலத் திட்டங்கள் மற்றும் வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதன்மூலம் அவர்களுடைய சமூக, பொருளாதார நிலையினை மேம்படுத்துதல்

❖ நடைமுறையில் உள்ள மீன் வளச் சட்டங்களை மீனவர்களின் தேவைக்கேற்ப மாற்றியமைத்தல் மற்றும் மீன் வளத்தைப் பாதுகாத்தல்

❖ வண்ண மீன் வளர்ப்பு மற்றும் சூரை மீன் பிடிப்பு உட்பட ஆழ்கடல் மீன்பிடிப்பினை ஊக்குவித்தல்

**குறிக்கோள்களை எய்துவதற்கான முயற்சிகள்**

➢ கடல் மீனவர்களுக்குப் பாரம்பரிய மீன்பிடி கலன்களை இயந்திரமயமாக்கும் பொருட்டு வெளிப்பொருத்தும் இயந்திரம் வாங்க மானியம் வழங்குதல் மற்றும் கூண்டுகளில் நன்னீர் இறால்களுடன் கூடிய ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு முறைகளை அறிமுகப்படுத்துதல்

➢ தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டம், (Tamil Nadu Marine Fishing Regulation Act) 1983-ன் கீழ், 45 நாட்களுக்கு இயந்திரமயமாக்கப்பட்ட படகுகளின்

[2008 ஏப்ரல் 30

மீன்பிடிப்பைத் தடை செய்தல், மீன்பிடி வலைகளின் கண்ணி அளவுகளை ஒழுங்குபடுத்துதல், சுருக்குமடி மற்றும் இரட்டைமடி வலைகளைத் தடை செய்தல் மற்றும் கடலில் இறால் குஞ்சுகளை இருப்பு செய்தல், நீர்த்தேக்கங்களில் மீன்பிடி வலைகளின் கண்ணி அளவுகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் குறிப்பிட்ட பருவ காலத்தில் மீன்பிடிப்பு மேற்கொள்ளக்கூடாது என அறிவித்தல்.

- பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புச் சிறப்புத் திட்டத்தின் கீழ் 12 கடலோர மாவட்ட மீனவர்களுக்குக் கடல்வாழ் உயிரின வளர்ப்புப் பயிற்சியின்கீழ் கடற்பாசி வளர்த்தல், மிதவைக் கூண்டுகளில் மீன்கள் வளர்த்தல்.
- தற்போதுள்ள மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்களின் தரத்தினை உயர்த்துதல் மற்றும் புதிய மீன்பிடி துறைமுகங்கள்/மீன் இறங்கு தளங்களை உருவாக்குதல், பயன்பாட்டில் உள்ள மீன் குஞ்சு வளர்ப்பிடங்களை மேம்படுத்துதல் மற்றும் மீன் குஞ்சுகளை எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துதல்.
- உள்நாட்டு மற்றும் கடல் மீனவர்களுக்கு இலவச வீட்டு வசதித் திட்டம், பல்வேறு நிவாரண உதவிகள் வழங்குதல் மற்றும் பயிற்சி அளித்தல்.
- தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டம், 1983-ஐச் செயல்படுத்துதல், மீன் வலைக் கண்ணிகளை ஒழுங்குபடுத்துதல், இயற்கை நீர்நிலைகளில் விரலிகளை இருப்புச் செய்தல்.
- மீனவர்களுக்கு வண்ண மீன் வளர்ப்பில் பயிற்சி அளித்தல் மற்றும் மீன்பிடி கலன்களைச் சூரை மீன்பிடி கலன்களாக மாற்றுவதற்கு உதவி செய்தல்.

**11-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கில் மீன் வள மேம்பாடு:-**

2007-2008 முதல் 2011-2012 வரையிலான 11-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மீன் வளத் துறையால் கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன:

- மீனவர்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்துவதோடு கூடிய மீன் வள ஆதாரம் மற்றும் மீன் வள அபிவிருத்திக்கான மாற்று வாழ்வாதாரத் திட்டத்தினை ஏற்படுத்துதல்.



2008 ஏப்ரல் 30]

- மத்திய அரசின் ஏற்றுமதி ஆய்வுக் குழுவின் வழிகாட்டுதல்களின்படி இடர்கள் பற்றிய ஆய்வு மற்றும் தரக் கட்டுப்பாடு மதிப்பீட்டளவு வரையறைகளுக்குட்பட்டு, உலக வர்த்தக நிறுவனத்தின் (World Trade Organisation) கீழ் வாய்ப்புகளைப் பெறும் வண்ணம் மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குதளங்கள் ஆகியவற்றை நவீனப்படுத்துதல்.
- உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வர்த்தக சந்தை தரத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் மீன் உற்பத்தியாளர்களுக்கு அதிகாரம் வழங்குதல்.
- ஒருங்கிணைந்த விற்பனை உட்கட்டமைப்பு வசதிகளை ஊக்குவித்தல் மற்றும் உள்நாட்டில் மீன் விற்பனையைக் குளிர்பதன வசதிகளுடன் நவீனப்படுத்துதல்.
- மீன் வள ஆதாரங்களைப் பாதுகாத்தல், அதிகரித்தல் மற்றும் வரம்பு மீறிய மீன்பிடிப்பு முறைகளைக் குறைத்தல்.
- மீன் வள ஆதாரங்களைப் பாதுகாப்பதற்கும், மாற்று முயற்சிகளை மேற்கொள்வதற்கும் மீன் வளக் கொள்கைகளைத் திருத்தி அமைக்க வழிவகை செய்தல்.
- மீனவர்களின் செயல்திறனை உயர்த்துதல் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அளித்தல் மூலமாக மாற்று வாழ்வாதாரத் திட்டங்களை ஊக்குவித்தல்.
- இயற்கைச் சீற்றங்களை எதிர்கொள்ளவும் மற்றும் தணிக்கவும், பாதிக்கப்படும் இடங்களைக் கண்டறிந்து அதற்கேற்ப அனைத்து விவரங்கள் அடங்கிய திட்டத்தினைத் தயாரித்தல்.
- மீன் வளச் சுற்றுலாவினை மேம்படுத்த வண்ண மீன் காட்சியகம் மற்றும் கடல் அருங்காட்சியகம் அமைத்தல்.

**1. சுனாமி மறுவாழ்வு மற்றும் மறு கட்டமைப்புத் திட்டம்**

2004-ல் ஏற்பட்ட சுனாமி ஆழிப்பேரலை தமிழகத்தின் 13 கடலோர மாவட்டங்களைத் தாக்கி மக்களின் உயிருக்கும், உடைமைக்கும் பெரும் சேதத்தை விளைவித்தது. சுனாமியால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட, மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாகும். கடலோர மாவட்டங்களில் வெகுவாக பாதிக்கப்பட்டவர்கள் மீனவ சமுதாய மக்கள். எனவே, அவர்களுக்கு அரசிடமிருந்தும் மற்றும் தொண்டு நிறுவனங்களிடமிருந்தும் மறுவாழ்வு உதவி தேவைப்பட்டது.

[2008 ஏப்ரல் 30

எனவே, சுனாமி நிவாரணத்துக்கு அரசு அதிக முக்கியத்துவம் அளிக்கும் வகையில் விரிவான நோக்குடன் வீடுகள், மீன்பிடி கலன்கள் மற்றும் தளவாடங்களை இழந்த மீனவர்களுக்கு அதிகபட்ச நிவாரண உதவி வழங்கும் பொருட்டு பல்வேறு வகையான நிவாரண உதவிகளை வழங்கியது. சேதங்களை மதிப்பீடு செய்யவும், நிவாரண உதவிகள் வழங்கிடவும் அரசு விரிவான வழிமுறைகளை வெளியிட்டு, முதல் கட்ட நிவாரணமாக ரூ.151.34 கோடிக்கு ஒப்பளிப்பு செய்து பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**1.1. ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குக் கூடுதல் நிவாரணம் வழங்குதல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட 13 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 42,000 மீனவர்களுக்குக் கூடுதல் நிவாரணம் வழங்கப்படும் என்று அறிவித்தார். இதற்காக, ராஜீவ் காந்தி புனரமைப்புத் திட்டத்தின்கீழ் அரசு ரூ.110.36 கோடிக்கு ஒப்பளிப்பு வழங்கியது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கூடுதல் நிவாரணப் பொருள்களான கனரக மிதிவண்டிகள், உயிர்காக்கும் கவச உடைகள், மறுமின்னூட்ட விளக்குகள் மற்றும் குளிர் உறைவைப்புப் பெட்டிகள் ஆகியவைகளை ஏற்கெனவே பயன்பெற்ற மீனவர்களுக்கு வழங்கும் பணி சென்னையில் 12-10-2007-ல் துவக்கப்பட்டது. இப்பணி ஆகஸ்ட் 2008-ல் முடிவுறும்.

**1.2. பாரதப் பிரதமரின் தேசிய பொது நிவாரண நிதியுதவியின்கீழ் வழங்கப்படும் நிவாரண உதவிகள்**

**(அ) விளையாட்டு சாதனங்கள் வழங்குதல்**

கிரிக்கெட், கைப்பந்து, கால்பந்து, கபடிக்கான முழங்கால் உறை, கேரம் பலகை மற்றும் சதுரங்கப் பலகை போன்ற விளையாட்டுச் சாதனங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

**(ஆ) தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன் வள கூட்டுறவு இணையத்தின் மூலம் மீனவர்கள் பெற்ற கடனைத் தள்ளுபடி செய்தல்**

ஒருங்கிணைந்த கடல் மீன் வள அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகத்திலிருந்து தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன் வளக் கூட்டுறவு இணையத்தில் மீனவர்களுக்கு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்மூலமாக வழங்கப்பட்டு திரும்ப செலுத்தப்படாமல் இருந்த கடன், அசல், வட்டி, அபராத வட்டி



2008 ஏப்ரல் 30]

மற்றும் பங்கு மூலதனத் தொகையான ரூ.19.56 கோடி நிலுவையாக இருந்தது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் துயரினைப் போக்கிட, நிலுவையாக இருந்த ரூ.19.56 கோடியை பாரதப் பிரதமரின் தேசிய பொது நிவாரண நிதியிலிருந்து பெறுவதற்கு அரசு ஆணை வழங்கியுள்ளது.

**(இ) கடல் மீனவர்களின் சமூக உட்கட்டமைப்பு வசதிகளுக்கு உதவிபுரிதல் - முதலுதவிப் பெட்டிகள் வழங்குதல்**

பாரதப் பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து 47,000 முதலுதவிப் பெட்டிகளை வாங்கி வழங்குவதற்காக அரசு ரூ.9.40 கோடி நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது. அதன்படி, முதலுதவிப் பெட்டிகள் வாங்கப்பட்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

**1.3. சென்னை மீன்பிடி துறைமுகம்**

சென்னை மீன்பிடி துறைமுகத்தை நவீனமயமாக்கிட, படகு கட்டும் இடங்களைப் புனரமைத்தல், அலை தடுப்புச் சுவர் விரிவாக்கம் செய்தல், கூடுதல் படகுகள் கட்டும் இடங்களை அமைத்தல் மற்றும் படகு நிறுத்துமிடங்களை அமைத்தல் ஆகியவற்றிற்காக சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத்திற்கு ரூ.19.569 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் 2008-2009 ஆம் நிதியாண்டில் சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகத்தால் முடித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**1.4. பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குதளங்களைப் புதுப்பித்தல்**

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட கன்னியாகுமரி மற்றும் கடலூர் மாவட்டங்களைச் சேர்ந்த மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்கு தளங்களைச் சீரமைக்க மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வந்து, ரூ.4.53 கோடி வழங்கினர்.

அவர்கள் வழங்கிய நிதியின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் பின்வருமாறு :-

I. கன்னியாகுமரி மாவட்டம், சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்தை மறுசீரமைத்தல் - பணி முடிக்கப்பட்டது.

[2008 ஏப்ரல் 30

II. கன்னியாகுமரி மாவட்டம், கோவளத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் - பணி முடிக்கப்பட்டது.

III. கன்னியாகுமரி மாவட்டம், ஆரோக்கியபுரத்தில் படகு நிறுத்தும் இடவசதிகளை ஏற்படுத்துதல் - பணி முடிக்கப்பட்டது.

IV. கன்னியாகுமரி மாவட்டம், இனையம்புத்தன்துறையில் மீன் இறங்கு தளம் அமைத்தல் - வார்ப்பு (wharf) கட்டும் பணியினைத் தவிர மற்ற பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. வார்ப்பு கட்டும் பணி குறித்து பூண்டி நீரியல் ஆய்வு மையத்தால் சாத்தியக்கூறு குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

V. கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டையில் மீன் வளப் பயிற்சி மற்றும் தகவல் மையம் அமைத்தல்.

ரூ.92.50 இலட்சம் மதிப்பீட்டில் பயிற்சி மையம் மற்றும் தங்கும் விடுதி கட்டுதல், பயிற்சிக்கான ஆய்வுக்கூடத்திற்குத் தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**1.5. தேசிய பேரிடர் நிவாரண நிதியின்கீழ் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மீன்பிடி துறைமுகங்கள் / மீன் இறங்கு தளங்களைச் சீரமைக்கும் பணியினை மேற்கொள்ளுதல்**

(i) முடசலோடை, கோட்டைப்பட்டினம், நாகப்பட்டினம், மல்லிப்பட்டினம் ஆகிய இடங்களில் உள்ள மீன் இறங்கு தளங்களின் சீரமைப்புப் பணி மற்றும் கடலூர், தொண்டி, தூத்துக்குடி, சின்னமுட்டம் ஆகிய இடங்களிலுள்ள மீன்பிடி துறைமுகங்களின் சீரமைப்புப் பணி ரூ.718.50 இலட்சம் செலவில் மேற்கொள்ளல் - பணி முடிக்கப்பட்டுள்ளது.

(ii) பழையாறு மீன்பிடி துறைமுகம் - நிர்வாக அலுவலகக் கட்டடம் தவிர மற்ற பணிகள் முடிக்கப்பட்டன. நிர்வாக அலுவலகக் கட்டடப் பணியும் முடிவுறும் தருவாயில் உள்ளது.

(iii) சின்னான்குடி நதியில் தூர் வாருதல் - பணி நடைபெற்று வருகிறது.



2008 ஏப்ரல் 30]

**1.6. சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் 10 மீன் இறங்கு தளங்கள் அமைத்தல்**

தமிழ்நாட்டில் 10 புதிய மீன் இறங்கு தளங்கள், ஒவ்வொன்றும் ரூ.5.00 கோடி செலவில் கீழ்க்கண்ட இடங்களில் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | திரேஸ்புரம் | - தூத்துக்குடி மாவட்டம் |
| 2. | பெரியதாழை | - தூத்துக்குடி மாவட்டம் |
| 3. | கீழக்கரை | - இராமநாதபுரம் மாவட்டம் |
| 4. | உவரி | - திருநெல்வேலி மாவட்டம் |
| 5. | எக்கியார்குப்பம் | - விழுப்புரம் மாவட்டம் |
| 6. | அண்ணாமலைச்சேரி | - திருவள்ளூர் மாவட்டம் |
| 7. | எண்ணூர்முகத்துவாரக்குப்பம் | - திருவள்ளூர் மாவட்டம் |
| 8. | பெரியமாங்கோடு | - திருவள்ளூர் மாவட்டம் |
| 9. | ஆர். புதுப்பட்டினம் | - புதுக்கோட்டை மாவட்டம் |
| 10. | கடலூர்பெரியகுப்பம் | - காஞ்சிபுரம் மாவ்ட்டம் |

திருவாளர்கள். மகேந்திரா ஆலோசனை நிறுவனத்தால் ஆய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டு, அந்நிறுவனம் அளித்த வரைவு விரிவான திட்ட அறிக்கை ஆய்வில் உள்ளது.

**17. உலக வங்கி நிதியுதவியுடன்கூடிய அவசர கால சுனாமி மறுசீரமைப்புத் திட்டம் (ETRP)**

உலக வங்கி நிதியுதவியுடன்கூடிய அவசர கால சுனாமி மறுசீரமைப்பு திட்டத்தின்படி கீழ்க்கண்ட பணிகளுக்காக ரூ.80.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(அ) நான்கு மீன்பிடி துறைமுகங்களை மறுகட்டமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல்**

நான்கு மீன்பிடி துறைமுகங்களின் மறுகட்டமைப்பு மற்றும் நவீனமயமாக்குதல் குறித்த ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள ஆலோசனை நிறுவனம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஆய்வுப் பணி ஒன்பது மாதங்களில் முடிக்கப்பட்டு, வரைவு மாதிரிப் படம் (Draft Conceptual Design) பெறப்பட்டு, பரிசீலனையில் உள்ளது. ஆய்வுப் பணி முடிவுற்றதும், செயலாக்கப் பணி மேற்கொள்ளப்படும்.

**(ஆ) நான்கு முகத்துவாரங்களை நிரந்தரமாகத் திறந்துவைத்தல்**

நான்கு முகத்துவாரங்களை நிரந்தரமாகத் திறந்து வைக்க ஆலோசனை நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு, வரைவு விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டுள்ளது. உலக வங்கியின் இசைவுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படவுள்ளது.

**(இ) இரண்டு புதிய மீன் இறங்கு தளங்கள் அமைத்தல்**

**(i) நாகூர்:**

நாகூரில் புதிய மீன் இறங்கு தளம் அமைப்பதற்கு ஆலோசனை நிறுவனத்தால் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரைவு விரிவான திட்ட அறிக்கை (Draft Detailed Project Report), சுற்றுச்சூழல் மதிப்பீட்டறிக்கை (Environmental Impact Assessment) மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்ட அறிக்கை (Environmental Management Plan) ஆகியவை பெறப்பட்டுள்ளன. இத்திட்டம் 18 மாதங்களில் முடிக்கப்படும்.

**(ii) அன்னன்கோயில்:**

அன்னன்கோயிலில் புதிய மீன் இறங்கு தளம் அமைப்பதற்கு ஆலோசனை நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு, ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரைவு விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டுள்ளது. உலக வங்கியின் இசைவுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படவுள்ளது.

**(ஈ) 13 கடலோர மாவட்டங்களில் கம்பியில்லாத் தொலைத் தொடர்பு (Seamless Communication Network) சாதன வசதிகள் ஏற்படுத்துதல்**

13 கடலோர மாவட்டங்களில் கம்பியில்லாத் தொலைத் தொடர்பு சாதனங்களை நிறுவிட எல்காட் (ELCOT) நிறுவனம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதற்கென மத்திய அரசிடம் ரூ.57.60 கோடி ஒப்பளிப்பு கோரப்பட்டுள்ளது.

**(உ) இறால் பண்ணைகள் மற்றும் பொரிப்பகங்களுக்கு நிதியுதவி அளித்தல்**

சுனாமியால் பாதிக்கப்பட்ட 232.8 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள 68 இறால் பண்ணைகள் மற்றும் பொரிப்பக உரிமையாளர்களுக்கு நிதியுதவியாக ரூ.59,95,258/- மாவட்ட ஆட்சியர்கள்மூலமாக வழங்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.





**1.8. ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன்கூடிய சுனாமி அவசர கால உதவித் திட்டம் (TEAP)**

**(அ) பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்புப் பணிகள்**

கடலூர் மீன்பிடி துறைமுகம், முடசலோடை, சேதுபாவாசத்திரம், கோட்டைப்பட்டினம், ஜெகதாப்பட்டினம் மற்றும் புன்னக்காயல் ஆகிய மீன் இறங்கு தளங்களில் பழுது மற்றும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன்கூடிய சுனாமி அவசர கால உதவித் திட்டத்தின் கீழ் ரூ.74.30 இலட்சம் ஒப்பளித்துள்ளது. அனைத்து இடங்களிலும் பணி முடிக்கப்பட்டுள்ளது. பணி முடிவறிக்கை பெறப்பட்டு ரூ.72.70 இலட்சத்திற்கு தகுதியான தொகை கேட்பு செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) கடலூர், சென்னை நேப்பியர் பாலம் மற்றும் அடையாறு முகத்துவாரத்தில் மீன்பிடி துறைமுகங்கள் அமைக்க ஒருங்கிணைந்த வடிவமைப்பு தயாரித்தல்**

பாரம்பரிய மீன்பிடிப் படகுகள் நிறுத்துவதற்கு ஒருங்கிணைந்த வடிவமைப்பு வசதிகளை ஏற்படுத்த கூவம் மற்றும் அடையாறு முகத்துவாரங்கள் உகந்ததாக இல்லை என கண்டறியப்பட்டது. எனவே, கடலூரில் மட்டும் ஆய்வுப் பணி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. ஆய்வுப் பணி மேற்கொள்ள ஆசிய வளர்ச்சி வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.

**(இ) மீன்பிடித் துறைமுகங்கள் / மீன் இறங்கு தளங்களில் தூர் வாருதல் (பழையாறு மற்றும் சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் முடசலோடை, சேதுபாவாசத்திரம், கோட்டைப்பட்டினம், ஜெகதாபட்டினம் மற்றும் புன்னக்காயல் மீன் இறங்கு தளங்கள்)**

ஆசிய வளர்ச்சி வங்கியின் ஒப்புதலுக்குப் பிறகு சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தால் ரூ.24.00 இலட்சம் செலவில் முதல் கட்டச் சுற்றுச்சூழல் சோதனை மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்ட (Environmental Management Plan) ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. சுற்றுச்சூழல் தடையின்மைச் சான்றிதழ் தேசிய கடலோர மேலாண்மை நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது. மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்களின் தூர் வாரும் பணிகளுக்காக மாதிரி ஒப்பந்தப்புள்ளிப் படிவம் ஆசிய வளர்ச்சி வங்கியின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

## 2. உட்கட்டமைப்பு வசதிகள்

### 2.1. சேதுசமுத்திரக் கப்பல் கால்வாய்த் திட்டம் - கடலோர மீனவர்களின் மேம்பாட்டுத் திட்டம் - மீன்பிடி துறைமுகம் மற்றும் மீன் இறங்கு தளங்கள் அமைத்தல்

சேதுசமுத்திரக் கப்பல் கால்வாய்த் திட்டத்தின்கீழ் உள்ளூர் மீனவர்களின் பயன்பாட்டிற்காக முத்துப்பேட்டை, சேதுபாவாசத்திரம், தொண்டி, இராமேஸ்வரம் மற்றும் மூக்கையூர் ஆகிய இடங்களில் மீன்பிடி துறைமுகங்கள் / மீன் இறங்கு தளங்கள் அமைக்க ரூ.60.00 கோடி நிதி ஒதுக்கீடு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

சேதுசமுத்திரக் கழகம் இத்திட்டத்திற்கான ஆய்வுகளை மேற்கொண்டு திட்ட அறிக்கை தயாரித்திட ஆலோசகரைத் தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது. சாத்தியக்கூறு அறிக்கையின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்படும். முத்துப்பேட்டை, சேதுபாவாசத்திரம், தொண்டி மற்றும் மூக்கையூர் ஆகிய இடங்களுக்கான வரைவு விரிவான திட்ட அறிக்கை மீன் துறையால் பெறப்பட்டு, குறிப்புரை கோரி சேதுசமுத்திரக் கழகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 2.2. இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகம்

சேதுசமுத்திரக் கப்பல் கால்வாய்த் திட்டத்தில் இராமேஸ்வரத்தில் சுமார் ரூ.100.00 கோடி மதிப்பீட்டில் மீன்பிடி விசைப் படகுகள், சரக்குக் கப்பல்கள் மற்றும் சேதுசமுத்திரக் கழகத்திற்குச் சொந்தமான கப்பல்களை நிறுத்திடவும், பழுதுகள் மேற்கொள்ளவும் பல்நோக்குத் துறைமுகம் (Multipurpose Port) அமைத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான ஆய்வுகள் மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்திட ஆலோசகரைத் தேர்ந்தெடுப்பதற்காக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு சி.இ.எஸ். (C.E.S.) ஆலோசக நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு, ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 2.3. தமிழ்நாட்டில் மத்திய / மாநில பங்களிப்புத் திட்டத்தின்கீழ் மீன்பிடித் துறைமுகங்கள் அமைத்தல்

#### (i) குளச்சல் மீன்பிடி துறைமுகம்

குளச்சலில் மீன்பிடி துறைமுகம் அமைப்பதற்கான கருத்துரு மத்திய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டு அனுப்பப்பட்டது. மத்திய அரசு இத்திட்டத்திற்கு ரூ.27.10 கோடிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. பணிகள் இந்த நிதியாண்டில் துவங்கப்படும்.





#### (ii தேங்காய்ப்பட்டினம் மீன்பிடி துறைமுகம்

கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய்ப்பட்டினத்தில் ரூ.30.55 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசு பங்களிப்பு திட்டத்தில் (5:50 பங்களிப்பு முறையில்) மீன்பிடித் துறைமுகம் அமைத்திட தமிழக அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகம், இத்திட்டத்திற்குச் சுற்றுச்சூழல் தடையில்லாச் சான்று வழங்கியுள்ளது. மத்திய அரசு கோரியதற்கிணங்க ரூ.38.10 கோடியில் திருத்திய மதிப்பீடு தற்போதைய விலை விவரங்களின் அடிப்படையில் (current schedule of rates) தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டதும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

#### (iii) பூம்புகார் மீன்பிடி துறைமுகம்

பூம்புகாரில் மீன்பிடி துறைமுகம் அமைப்பதற்காக மாதிரி ஆய்வு, சுற்றுச்சூழல் விளைவு மதிப்பீடு (Environmental Impact Assessment) / சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்ட அறிக்கை (Environmental Management Plan) ஆகியவைகளை தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிலையம் (National Institute of Ocean Technology) சமர்ப்பித்துள்ளது. இவ்வறிக்கை தொல்லியல் துறையுடன் கலந்து ஆலோசிக்கும் பொருட்டு பரிசீலனையில் உள்ளது. தொல்லியல் துறையுடன் நடைபெற்ற கூட்டத்தில் இப்பணிக்கு அனுமதி வழங்குவதற்குமுன், தொல்லியல் கடல் ஆய்வு நடத்தலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

### 2.4. கன்னியாகுமரி மாவட்டத்தில் "பூட்" (BOOT - கட்டுமானம், சொந்தமாக்குதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல்) திட்டத்தின் கீழ் முட்டம் மற்றும் ராஜாக்கமங்கலம்துறையில் மீன்பிடி துறைமுகங்கள் அமைத்தல்

கன்னியாகுமரி மாவட்டத்தில் முட்டம் மற்றும் ராஜாக்கமங்கலம்துறையில் "பூட்" முறையின் அடிப்படையில் மீன்பிடி துறைமுகம் அமைத்திட தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்திற்கான மாதிரி கோரிக்கை வரைவு (Request For Proposal) மற்றும் சலுகை ஒப்பந்த குறிப்புகளுக்கு (Concessionaire Agreement) அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப்பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்பட்டுள்ளன. பணி வழங்குவதற்கான கடிதம்

(Letter of Award) ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. முட்டம் துறைமுகத்திற்கு ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டுள்ளது.

**2.5. 'ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் இதர தொடர்புடைய செயல்பாடுகளுக்கு மாநிலங்களுக்கு நிதி உதவித் திட்டத்தின்' (ASIDE) கீழ் நிதியுதவி பெற்று மீன்பிடித் துறைமுகங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்**

மாநிலங்களுக்கு ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் இதர தொடர்புடைய செயல்பாடுகளுக்கு நிதி உதவி அளிக்கும் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள ரூ.1242.00 இலட்சம் ஒப்பளித்துள்ளது.

(அ) ரூ.638.00 இலட்சத்தில் சென்னை மீன்பிடித் துறைமுகத்தை மேம்படுத்துதல்.

(ஆ) ரூ.504.00 இலட்சத்தில் தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தை மேம்படுத்துதல்.

(இ) ரூ.100.00 இலட்சத்தில் நான்கு மாவட்டங்களில் குளிர்தொடர் வசதிகள் அமைத்தல்.

சென்னைத் துறைமுக மேலாண்மைக் குழு ரூ.121.60 இலட்சத்தில் கூடுதல் பணிகளான சுற்றுச்சுவர் கட்டுதல், கூடுதல் கழிப்பிட வசதிகள் அமைத்தல், மீன்பிடி உபகரணங்கள் விற்பனை செய்யும் அங்காடிகள் கட்டுதல் மற்றும் மின் வசதிக்கான பணிகள் ஆகியவற்றை மேற்கொண்டுள்ளது.

தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தில் முதற்கட்ட மற்றும் இரண்டாம் கட்ட தூர் வாரும் பணியும், கட்டுமானப் பணிகளும் முடிக்கப்பட்டன. வார்ப் மற்றும் ஜெட்டி புதுப்பிக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் முடிக்கப்பட்டு, பூர்வாங்கப் பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

தூத்துக்குடி, புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில், தலா ரூ.25.00 இலட்சம் செலவில் குளிர்தொடர் வசதிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன.





## 3. புதிய திட்டங்கள் - 2008-09

### 3.1. தலைமை அலுவலகத்தில் இடர்ப்பாடு மேலாண்மைப் பிரிவு அமைத்தல்

பருவ மழைக் காலத்தில் தலைமை அலுவலகத்திலுள்ள கட்டுப்பாட்டு அறையில் ஒரு தொலைபேசிமூலம் அனைத்து கடலோர மாவட்டங்களிலிருந்தும், கடலோர காவற்படை மற்றும் கடற்படை ஆகியவைகளிடமிருந்து பெறப்படும் விவரங்களை அரசுக்கு உடனடியாக அனுப்ப இயலவில்லை. எனவே, தலைமை அலுவலகத்தில் ரூ.6.00 இலட்சம் செலவினத்தில் கணினி மற்றும் அனைத்து வசதிகளுடன்கூடிய இடர்ப்பாடு மேலாண்மைப் பிரிவு ஒன்றினை நிறுவி, பெறப்படும் விவரங்களை உடனடியாக அரசுக்கு துரித மின் அஞ்சல் (E-Mail) மூலம் அனுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 3.2. இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் மீனவர்களுக்கு வினைத்திறன் அட்டைகள் (Smart Cards) வழங்குதல்

மாநிலத்தின் தெற்குக் கடலோர மாவட்டங்களில் உள்ள மீனவர்கள் அடிக்கடி வளமான மீன் இருப்புப் பகுதிகளைத் தேடி சர்வதேச கடல் எல்லைக் கோட்டினைத் தாண்டுவதனால் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, துன்புறுத்தலுக்கு ஆளாகின்றனர். சில சமயங்களில் மோசமான வானிலை காரணமாக அவர்கள் திசை மாறிச் செல்கின்றனர். அத்தகைய சமயங்களில் எல்லை தாண்டி மீன்பிடிக்கச் செல்வதால் காணாமல் போகும் மீனவர்களையும் / படகுகளையும் கண்டறிவது கடினமாகிறது. எனவே, இராமநாதபுரம் மாவட்ட இராமேஸ்வரத்திலுள்ள அனைத்து மீனவர்களுக்கும் வினைத்திறன் அட்டைகள் வழங்குவதன்மூலம் சர்வதேச எல்லைக் கோட்டைத் தாண்டுபவர்களையும், காணாமல் போகும் மீனவர்களையும் கண்டறிந்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள ரூ.10.00 இலட்சம் செலவில் இம்முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்படும்.

### 3.3. 13 கடலோர மாவட்டங்களில் உள்ள மீன் துறை உதவி இயக்குநர் (கடல்வளம்) அலுவலகங்களுக்கு இன்வெர்ட்டர் சாதனங்கள் வழங்குதல்

13 கடலோர மாவட்டங்களில் மீன் துறை உதவி இயக்குநர் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. வானிலை எச்சரிக்கை, காணாமல் போகும் மீனவர்களைத் தேடும் பணி மற்றும் செயல்படுத்தப்படும் பல்வேறு சமூகப் பொருளாதாரத் திட்டங்கள்

[2008 ஏப்ரல் 30

குறித்த செய்திகளை அறிய வேண்டியுள்ளதால், ரூ.7.00 இலட்சம் செலவில் மேற்படி கடலோர மாவட்ட மீன் துறை உதவி இயக்குநர் (கடல் வளம்) அலுவலகங்களுக்கு இன்வெர்ட்டர் சாதனம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**3.4. 11 மீன் இறங்குதளங்களில் தலா 2 சூரிய ஒளி விளக்குகள் அமைத்தல்.**

தமிழகக் கடற்கரைப் பகுதியில் மொத்தம் 363 மீன் இறங்குதளங்கள் உள்ளன. மீனவர்கள் மீன்பிடிப்பினை மேற்கொண்டு இரவு நேரங்களில் கரைக்குத் திரும்புகின்றனர். கடற்கரையிலேயே இரவு நேரத்தில் மீன்களை ஏலம் விடுகின்றனர். இதற்கு வெளிச்சம் தேவை. எனவே, 11 மீன் இறங்குதளங்களில் ரூ.7.00 இலட்சம் செலவில் ஒவ்வொரு மீன் இறங்குதளத்திலும் 2 விளக்குகள் வீதம் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**3.5. தமிழ்நாடு அண்மைக்கடல் பகுதிகளில் செயற்கை மீன் உறைவிடங்கள் நிறுவுதல்.**

செயற்கை உறைவிடம் என்பது கடலுக்குள் கடல்வாழ் உயிரினங்கள் தங்குவதற்காக அமைக்கப்படும் உறைவிடமாகும். இத்தகைய உறைவிடங்களின் அருகில் மீன்கள் உணவிற்காகவும், தங்குவதற்காகவும், இனப்பெருக்கத்திற்காகவும் அதிகம் வந்து சேரும். இதன் காரணமாக மீன் உற்பத்தி அதிகரிக்கும். இத்தகைய செயற்கை உறைவிடங்கள் அமைக்கும் பகுதிகளில் விசைப்படகுகள் இழுவலைகளைப் பயன்படுத்த முடியாது. எனவே, தமிழகத்தில் செயற்கை உறைவிடங்களை அமைப்பது மீன் வள இருப்பினை அதிகரிக்கும் திட்டமாகும். காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் தலா 1 வீதம் 2 செயற்கை உறைவிடங்கள் ரூ.20.00 இலட்சம் செலவில் நிறுவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மீன் இனங்களான கலவா, கொடுவா மற்றும் பல்வேறு வகையான மீன்கள் வசிப்பதற்குப் பல்வேறு வகையான மாதிரிகள் வடிவமைக்கப்பட்டு, அண்மைக்கடற்பகுதிகளில் 20 பாதம் (Fathom) ஆழத்தில் அமைக்கப்பட்டுள்ளன. செயற்கை உறைவிடங்கள் அமைக்க அலைகள் மிகுந்த சோழ மண்டலக் கடற்கரைப் பகுதி மிகவும் உகந்ததாக உள்ளது.



2008 ஏப்ரல் 30]

**3.6. கடலில் இறால் குஞ்சுகளை இருப்புச் செய்து அதிகப்படுத்துதல்.**

கடலில் உயிரின உற்பத்தி மற்றும் கடலோர மீன்வளத்தை அதிகப்படுத்தவும், மீன் வளத்தைப் பாதுகாக்க உதவிடவும், மீன் வளத் துறையால் வணிகரீதியான இறால் குஞ்சுகளை கடலில் இருப்புச் செய்யும் திட்டம் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் ரூ.20.00 இலட்சம் செலவில் .15 முதல் 20 நாள் வரை வளர்ச்சியடைந்த இளம் இறால் குஞ்சுகளை வளர்த்து கடலில் இரண்டு இடங்களில் இருப்புச் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**3.7. உள்நாட்டு நீர்நிலைகளில் கூண்டுகளில் மீன் வளர்ப்பு செயல்முறைக்கான முன்னோடித் திட்டம்.**

தமிழ்நாட்டில் உள்நாட்டு மீன் வள ஆதாரங்கள் 3.7 இலட்சம் ஹெக்டேர் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இதனில் மீன் உற்பத்தியினைப் பெருக்க மிதவைக் கூண்டுகள்மூலம் மீன் வளர்ப்பது உகந்தது. தற்போது நீர்த்தேக்கங்களில் ஒரு ஹெக்டேருக்கு 20 முதல் 25 கி.கி வரை உற்பத்தி செய்யப்படுகிறது. மிதவைக் கூண்டுகளில் மீன் வளர்த்தல்மூலம் இதனை ஹெக்டேருக்கு 150 முதல் 200 கி.கி வரை அதிகரித்திட ரூ.4.80 இலட்சம் செலவில் பொருத்தமான ஒரு இடத்தில் மீன் வளர்ப்பு செய்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**3.8. அரசு மீன் குஞ்சு பண்ணைகளுக்குப் போக்குவரத்து வசதி ஏற்படுத்துதல்.**

நீர்நிலைகளில் இருப்புச் செய்வதற்கு மீன் குஞ்சு வளர்ப்பு நிலையங்களிலிருந்து மீன் குஞ்சுகள் எடுத்துச் செல்லப்படவேண்டும். மீன் குஞ்சுகள் விரைவில் இறக்கும் தன்மை உடையவை. நீண்ட நேரப் பயணங்களுக்கு மீன் குஞ்சுகள் ஏற்றதல்ல. இதனால் மீன் குஞ்சுகளின் பிழைப்புத் தன்மை குறைகின்றது. எனவே, இதற்கென போதிய போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தித் தரவேண்டியுள்ளது. பெருமளவு மீன் குஞ்சு உற்பத்தி செய்யும் மையத்திலிருந்து மீன் குஞ்சுகளை எடுத்துச் செல்வதற்குப் போக்குவரத்து வசதி ஏற்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மீன் குஞ்சுகளுக்குத் தேவையான பிராண வாயுவினை நிரப்பிட பிராண வாயு சிலிண்டர் மற்றும் மீன் குஞ்சுகள் நிரம்பிய பைகளை வைப்பதற்கான கூடுதல் இடம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய ஒரு வாகனம் ரூ.10.00 இலட்சம் செலவில் வாங்கப்பட உள்ளது.

[2008 ஏப்ரல் 30

**3.9. கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள மீன் குஞ்சு உற்பத்திப் பண்ணைகளை மேம்படுத்துதல்.**

1981-82 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட கிருஷ்ணகிரியிலுள்ள மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணையில் பழுதுபார்ப்புப் பணி மேற்கொள்வது அவசியமாகிறது. இப்பணியினை மேற்கொள்வதன்மூலம் சுமார் 7 இலட்சம் விரலிகள் கூடுதலாக வளர்த்தெடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் ரூ.20.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

**3.10. மீன் துறை ஆணையர் அலுவலகத்தில் உள்ள மத்திய நூலகத்திற்கு சர்வதேச மீன் வளம் சார்ந்த இதழ்கள் வாங்குவதற்கு சந்தா செலுத்துதல்.**

மீன் வளத் துறையின் நூலகம் மீன் வளக் கருவூலமாக உள்ளது. இதில் 3000 விலைமதிப்புள்ள புத்தகங்கள், 109 முக்கியப் பிரசுரங்கள், 32 இதழ்கள், 29 துறைவாரியான வெளியீடுகள் மற்றும் முக்கிய அறிவியல் இதழ்கள், MPEDA, CMFRI, CIFRI, CIBA Newsletters, FAO, UNDP, BOBP ஆகியவற்றின் வெளியீடுகள் நூலகத்தில் உள்ளன.

தமிழ்நாடு மற்றும் இதர மாநிலங்களிலுள்ள மாணவர்கள், விவசாயிகள், விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் இந்நூலகத்திலுள்ள புத்தகங்களைப் படித்து பயன்பெறுகின்றனர். மேலும், மீன் வளம் தொடர்பான சர்வதேச வெளியீடுகளுக்குச் சந்தா தொகை செலுத்துவதற்கு ரூ.2.00 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**3.11. தமிழ்நாடு மீனவர் நிலையம் அமைத்தல்.**

மீனவர்களுக்கு தொழில்நுட்ப உதவி மற்றும் கடல் வளத்தில் பயிற்சி, பல்வேறு வகையான மீன்பிடிப்பு முறைகள், கடலில் கூண்டுகளின் மூலம் மீன் வளர்த்தல், நண்டு வளர்த்தல், கடற்பாசி வளர்த்தல், மீன்களை பதப்படுத்துதலில் மீனவ மகளிரை ஈடுபடுத்துதல் ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதற்காக உலகத் தரத்திற்கு ஈடாக, டாடா குழுமம் போன்ற தொழில்நுட்ப நிறுவனங்களின் பங்களிப்புடன் தமிழ்நாடு மீனவர் நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 30]

தமிழ்நாடு மீனவர் நிலையம் அமைப்பதென அரசு அறிவித்ததுடன், துவக்க நிதியாக ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

தமிழ்நாடு மீனவர் நிலையம் கீழ்க்காணும் முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

- கடலில் மீன் வளர்ப்பு.
- சுய உதவிக் குழுக்கள்மூலம் கடற்பாசி வளர்த்தல்.
- நுகர்வோர் விரும்பத்தக்க வகையில் மதிப்பூட்டப்பட்ட மீன் பொருட்களைப் பதப்படுத்துதல்.
- மீன்பிடிக் கலன்களைப் பயன்படுத்தி பல்வேறு வகையான மீன்பிடிப்பு முறைகளை மேற்கொள்ளுதல்.

**3.12. தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் (National Agriculture Development Programme) கீழ் தமிழ்நாட்டில் முக்கிய நகரங்களில் ரூ.30.00 இலட்சம் செலவில் நவீன மீன் விற்பனை நிலையங்கள் அமைத்தல்.**

சில்லறை மீன் விற்பனையை நவீனப்படுத்தும் முக்கிய நடவடிக்கையில், மீன் விற்பனை நிலையங்களைச் சுற்றிலும் சுகாதார வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்காக, அறுவடைக்குப் பின்னர் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதலுக்கான வேளாண் துறை நிதியுதவித் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமானது 4 நவீன மீன் விற்பனை நிலையங்களை சென்னையில் ஏற்படுத்தி உள்ளது. இது பொதுமக்களிடையே பிரபலமடைந்து வருகிறது. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமானது சில்லரை மீன் விற்பனைக்கென ஐந்து விற்பனை நிலையங்களை சென்னையில் இரண்டு இடங்களிலும், மதுரையில் இரண்டு இடங்களிலும் மற்றும் கோயம்புத்தூரில் ஒரு இடத்திலும் ஏற்படுத்திட உத்தேசித்துள்ளது.

**4. கடல் மீன் வளம்.**

**4.1 மீன் வள ஆதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை செய்தல்.**

தமிழகத்தில் மீன் வளத்தினைப் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை செய்யும் பொருட்டு தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டம், 1983-ன்படி கீழ்க்கண்ட நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது:

[2008 ஏப்ரல் 30

- ஒவ்வொரு ஆண்டும், கிழக்கு மற்றும் மேற்குக் கடற்பகுதிகளில் மீன்பிடி விசைப்படகுகளுக்கு 45 நாட்களுக்கு மீன்பிடிப்பு செய்வதற்குத் தடை விதித்தல்.
- எல்லா வகையான கலன்களிலும் சுருக்குமடி, இரட்டைமடி வலைகளைப் பயன்படுத்தத் தடை விதித்தல்.
- செவுள், இறால் மற்றும் மீன் இழுவலைகளின் கண்ணி அளவினைக் கட்டுப்படுத்தல்.

**4.2. கடலோர மீன் வள ஆதாரங்களை அதிகரிக்க கடலில் மீன் குஞ்சுகளை இருப்பு செய்யும் திட்டம்.**

மீன் வள ஆதாரங்களைப் பாதுகாப்பதன் அவசியம் குறித்து மீனவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அதிக அளவில் மீன்பிடிப்பதால் ஏற்படும் பிரச்சனைகளை எதிர்கொள்ளவும், குறைந்து வரும் மீன் வள ஆதாரங்களைப் பெருக்குவதற்காகவும், வணிக முக்கியத்துவம் வாய்ந்த இறால் குஞ்சுகளைக் கடலில் இருப்புச் செய்யும் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்திற்கு அரசு ரூ.128.40 இலட்சம் ஒப்பளிப்பு செய்து, 15 முதல் 20 நாட்கள் வரை வளர்ந்த இறால் குஞ்சுகளை இராமநாதபுரம், புதுக்கோட்டை, நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 5 கடலோர மாவட்டங்களில் 12 இடங்களில் இருப்புச் செய்யப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 48 மில்லியன் இறால் குஞ்சுகள் வளர்த்து இருப்புச் செய்யப்பட்டுள்ளது.

**4.3. செயற்கை மீன் உறைவிடங்கள் நிறுவுதல்.**

தமிழ்நாட்டில் அண்மைக்கடல் பகுதிகளில் 14 செயற்கை மீன் உறைவிடங்கள் நிறுவப்பட்டுள்ளன. தஞ்சாவூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் தலா ஒவ்வொரு இடத்திற்கும் ரூ.10.00 இலட்சம் செலவில் 2 செயற்கை மீன் உறைவிடங்கள் அமைக்கும் பணி தமிழ்நாடு மாநில தலைமை மீன் வள கூட்டுறவு இணையத்திடம் ஒப்படைக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

**4.4. பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை இயந்திரமயமாக்குதல்.**

பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை இயந்திரமயமாக்கும் பொருட்டு, நாட்டுப் படகுகளில் வெளிப்பொருத்தும் இயந்திரங்களை பொருத்துவதற்காக ரூ.20,000/- மானியத்



2008 ஏப்ரல் 30]

தொகையினை மீனவர்களுக்கு அரசு வழங்கி வருகிறது. இதுவரை, 18470 வெளிப்பொருத்தும் / உட்பொருத்தும் இயந்திரங்கள் மீனவர்களுக்கு மீன்வளத் துறையால் வழங்கப்பட்டுள்ளது.

**4.5. சூரை மீன் வளம் கண்டறிதல் மற்றும் மீன்பிடிப்பு செய்தல்.**

சூரை மீன்பிடிப்பு என்பது சுற்றுச்சூழலுக்கு உகந்த குறைந்த சக்தியைப் பயன்படுத்தி கடலின் மேல்மட்ட மீன்பிடிப்பிற்கு உகந்ததாக இருப்பதால், இந்த மீன்பிடிப்பு அனைத்து மட்டத்திலும் ஊக்குவிக்கப்படுகிறது. சூரை மீனுக்கு ஏற்றுமதி வாய்ப்பு நன்றாக இருப்பதால், மீனவர்களிடையே இதுகுறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, கடற்பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சிக் குழுமத்தின் (Marine Products Export Development Authority-MPEDA) மூலம் அவர்களுடைய மீன்பிடிக் கலன்களை சூரை மீன்பிடிப்புக்கு ஏற்றதாக மாற்ற நிதியுதவி அளிக்கவும், 110 மீனவர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் உத்தேசிக்கப்பட்டது. தூண்டில்மூலம் சூரை மீன்பிடிப்பில் முதல் அணிக்கான பயிற்சி சென்னையில் முடிக்கப்பட்டு, நாகப்பட்டினத்தில் நடைபெற்று வருகிறது.

**5. கடல் உயிரின வளர்ப்பு.**

தமிழ்நாடு நீண்ட கடற்கரையினைக் கொண்டு பல்வேறு கடல் உயிரின வளர்ப்பினை மேற்கொள்வதற்கான வாய்ப்புகளைக் கொண்டுள்ளது. இதனால் அண்மைக்கடல் பகுதிகளில் அதிக அளவு மீன்பிடிப்பு குறைவதுடன், ஒரு மாற்று நடவடிக்கையாகவும் செயல்பட உதவுகிறது. கூண்டுகளில் வளர்க்கக்கூடிய தகுதிவாய்ந்த மற்றும் ஏற்றுமதி வாய்ப்புடைய பல்வேறு மீனினங்கள் கடல் உயிரின வளர்ப்புக்கென தேர்வு செய்யப்பட்டுள்ளன.

**5.1 கடற்பாசி வளர்த்தல்.**

சுய உதவிக் குழுக்களை ஈடுபடுத்தி கடற்பாசி வளர்க்கும் தொழில் சில இடங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. அண்மைக்கடல் பகுதிகளில் அதிக அளவில் மீன்பிடிப்பு அழுத்தத்தினைத் தவிர்க்க, கடற்பாசி வளர்த்தல் ஒரு மாற்றுத் தொழிலாக விளங்குகிறது. பொன் விழா கிராம சுய வேலை வாய்ப்பு சிறப்புத் திட்டத்தின் (SGSY) கீழ், 6,000 மீனவர்களுக்குப் பயிற்சியும், 3,000 மீனவர்களுக்குப் பொருளாதார நடவடிக்கை மேற்கொள்ள நிதி உதவியும் மூன்று ஆண்டு காலத்திற்குள்

அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 2007-08 ஆம் ஆண்டில் ரூ.16.69 இலட்சம் செலவில் 2587 மீனவர்களுக்குக் கடற்பாசி வளர்த்தலில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ரூ.357.00 இலட்சம் மானியம் அளித்து பொருளாதார நடவடிக்கையை துவக்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

**5.2. கடலில் மிதவைக் கூண்டின்மூலம் மீன் வளர்ப்பு மேற்கொள்ளுதல்.**

பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்பு சிறப்புத் திட்டத்தின் (SGSY) கீழ் சுய உதவிக் குழுவில் அங்கத்தினர்களாக உள்ள சுமார் 16,700 மீனவ மக்களுக்குச் சிங்கி இறால்/நண்டு கொழுக்க வைத்தல், கடல்பாசி வளர்ப்பு, மட்டி / ஆளிப்பண்ணை அமைத்தல், வண்ண மீன் வளர்ப்பு மற்றும் கூண்டுகளில் கடல் மீன் வளர்ப்பு போன்றவைகளில் மூன்று வருட காலத்தில் பயிற்சி அளித்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வகை மீனினங்கள் ஏற்றுமதி வாணிபத்தில் மிக முக்கியமானவை. எனினும், இவ்வினங்களின் மீன் குஞ்சுகள் குறிப்பிட்ட அளவில் மட்டுமே கிடைப்பதால், கடல் நீரில் மிதவைக் கூண்டின்மூலம் வளர்த்தெடுப்பதில் சிரமம் ஏற்படுகிறது. தற்போது கலவா மீன்களின் மீன் குஞ்சுகள், இயற்கை வளங்களில் மட்டுமே கிடைக்கின்றன. மிதவைக் கூண்டில் மீன் வளர்ப்பு மேற்கொள்ள, மிகக் குறைந்த பௌதீக-இரசாயன மாற்றங்கள் கொண்டுள்ளதும், பெரிய அலைகளற்ற அமைதியான கடலோர வளைகுடா மற்றும் நீர்ப்பரப்பு முக்கியத் தேவையாகும். இந்த மிதவைக் கூண்டுகளை நிறுவ அண்மைக்கடல் பகுதிகளில் அதிக இடம் தேவைப்படுவதால், பாரம்பரிய மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்வதற்காக மீன்பிடிக் கலன்களை இயக்குவதற்குத் தடையாகவும் உள்ளது.

மேற்கண்ட இடர்ப்பாடுகளைக் களையும் நோக்கத்தில் குறிப்பிட்ட, அமைதியான கடற்பரப்பு கொண்ட சில பகுதிகளில் 'பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்பு சிறப்புத் திட்டம்' என்ற திட்டத்தின்மூலம் மீனவர்களின் பங்கேற்புடன் 'மிதவைக் கூண்டில் கலவா மீன்கள் வளர்ப்பு' என்ற முன்னோடித் திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது வெற்றி பெறும் நிலையில், மேலும் பல பகுதிகளில் கலவா மீன்கள் மற்றும் பிற முக்கிய மீன் இனங்களை கடல்வாழ் உயிரின வளர்ப்புமூலம் பரவலாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.





2008-09 ஆம் ஆண்டில் சுமார் 4000 மீனவ மக்களுக்குப் பல்வேறு கடல்வாழ் உயிரின வளர்ப்புப் பயிற்சி அளித்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**6. மீனவர் நலத் திட்டங்கள்.**

**6.1. மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டம்.**

மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் 2000 வீடுகள் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்களுக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

- ❖ மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும் மற்றும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவராக இருக்கவேண்டும்.
- ❖ குடிசை வீட்டில் குடியிருப்பவராக இருக்கவேண்டும்.
- ❖ 3 சென்ட் நிலம் சொந்தமாக வைத்திருக்கவேண்டும்.

இவை தவிர, மத்திய மாநில அரசுகள் பங்களிப்புடன் (50:50 பங்களிப்பு முறையில்) "மாதிரி மீனவ கிராமம் உருவாக்குதல்" திட்டத்தில் (Development of Model Fishermen Village Scheme) வீடுகள், சமுதாய நலக் கூடங்கள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் கட்டுவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

| | | |
|---|---|---|
| **2005-06**<br>(i) மாநிலத் திட்டத்தின்கீழ் ரூ.740.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு உள்ளது | 2000 வீடுகள் கட்டுவதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது. | ஒதுக்கீடு செய்யப் பட்ட வீடுகள் (25+1975) |
| (ii) மத்திய, மாநில அரசு பங்களிப்புத் திட்டத்தின்கீழ் ரூ.74.76 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு உள்ளது. | 2000 வீடுகள், 7 சமுதாய நலக் கூடங்கள் மற்றும் 96 ஆழ்துளைக் கிணறுகள் கட்டுவதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது. | ஒதுக்கீடு செய்யப் பட்ட வீடுகள்-1342. மத்திய அரசிடமிருந்து மீதமுள்ள தொகை பெற்றவுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும். |

| | | |
|---|---|---|
| **2006-07** | | |
| மாநிலத் திட்டத்தின் கீழ் ரூ.740.00 இலட்சம் ஒப்பளிக்கப் பட்டுள்ளது. | 2000 வீடுகள் கட்டு வதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது. | ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகள் (914+1086) = 2000 |
| **2007-08** | | |
| மாநில அரசு பங்கேற்கும் திட்டத்தின்கீழ் 2000 வீடுகள் கட்ட கருத்துரு பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது. மத்திய, மாநில அரசு பங்கேற்கும் திட்டத்தின்கீழ் 3000 வீடுகள், 10 சமுதாய நலக் கூடங்கள் மற்றும் 100 ஆழ்துளைக் கிணறுகள் கட்ட கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிதி விடுவிக்கப்பட்ட பின்னர் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படும். | | |

**6.2. (அ) தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்.**

தமிழ்நாட்டு மீனவர்களுக்கென தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் அரசால் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் ஒவ்வொரு வருடமும் 8 மாதங்களில் மாதம் ஒன்றிற்கு ரூ.75/- வீதம் மீனவர்கள் தங்களது பங்குத் தொகையாக அளிக்கின்றனர். இத்தொகைக்கு சமமாக மத்திய, மாநில அரசின் பங்குத் தொகையாக ரூ.300/- வீதம் அளிக்கப்படுகிறது. இதன்படி மொத்தத் தொகையான ரூ.1200/- மீன்பிடிப்புக்குச் செல்ல இயலாத நான்கு மாதங்களுக்குப் பயனாளிகளுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கென 2007-08 ஆம் ஆண்டில் ரூ.2112.20 இலட்சம் அரசால் ஒப்பளிக்கப்பட்டு 1,76,017 மீனவர்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டம் 2008-09 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**(ஆ) கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்.**

2006-07 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் மாநிலத் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 8 மாதங்களில் மாதம் ஒன்றிற்கு ரூ.75/- வீதம் பயனாளி மீனவ மகளிர் ரூ.600/-ஐ தங்களது பங்குத் தொகையாக அளிக்கின்றனர். மாநில



அரசின் பங்காக ரூ.600/- வழங்கப்படுகிறது. இதன்படி, மொத்தத் தொகையான ரூ. 1200/- கடலில் மீன்பிடிப்பு இல்லாத நான்கு மாதங்களில் மீனவ மகளிர் பயனாளிகளுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கென 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 1260.00 இலட்சம் அரசு ஒப்பளித்துள்ளது. 12 கடலோர மாவட்டங்களில் உள்ள 1,05,534 மீனவ மகளிருக்கு ரூ. 1259.00 இலட்சம் வழங்கப்பட்டு பயனடைந்துள்ளனர். மீதமுள்ள 1 கடலோர மாவட்டத்திற்கு ஜூன் 2008-ல் வழங்கப்படும். இத்திட்டம் 2008-2009 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**6.3. மீனவர் குழு விபத்து காப்புறுதித் திட்டம்.**

இத்திட்டத்தின்கீழ் மீனவரின் ஆண்டுக் காப்புறுதி தவணைத் தொகையான ரூ.14/-ஐ மாநில மற்றும் மத்திய அரசுகள் (ரூ.7/- வீதம்) சமமாக பகிர்ந்து கொள்கின்றன. காப்புறுதித் தவணைத் தொகை மீனவர்களிடமிருந்து வசூல் செய்யப்படுவதில்லை. இத்திட்டத்தின்கீழ், விபத்தினால் இறக்க நேரிடும் / நிரந்தர முழு ஊனமடையும் மீனவர் குடும்பத்திற்கு ரூ..50,000/-ம், பகுதி ஊனமடையும் மீனவருக்கு ரூ.25,000/-ம் வழங்கப்படுகிறது.

2007-2008 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 5,55,744 முழு நேர கடல் மற்றும் உள்நாட்டு மீனவர் / மீனவ மகளிர் பயனாளிகளுக்காக 10-12-2007 முதல் 9-12-2008 வரையிலான காலத்திற்கு சந்தா தொகை செலுத்தி, புது தில்லியிலுள்ள மீனவர் கூட்டுறவு இணையத்தின் மூலமாக காப்புறுதி செய்யப்பட்டு, 127 உறுப்பினர்களுக்கு ரூ. 60.82 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2008-2009 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**6.4. மீனவ சமுதாயத்தைச் சார்ந்த 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ மாணவியருக்கு ரொக்கப் பரிசு வழங்குதல்.**

மீனவ சமுதாயத்தைச் சார்ந்த மாணவ, மாணவிகளை, அவர்கள் கல்வியில் உற்சாகப்படுத்தும் பொருட்டு 10 மற்றும் 12ஆம் வகுப்பு தேர்வில் முதலிடம் பெறும் மாணவ/மாணவியர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கும் திட்டத்தை அரசு அறிவித்துள்ளது. பரிசுத் தொகையினை ரொக்கமாக வழங்குவதற்காக அரசு ரூ.4.12 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. 2005-2006 ஆம் கல்வியாண்டில் முதலிடம் பெற்றமாணவ, மாணவியர்க்கு ரொக்கத் தொகை மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2006-2007 ஆம்

கல்வியாண்டுக்கான ரொக்கத் தொகை ரூ. 4.12 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

**6.5. மீன்பிடி விசைப்படகுகளுக்கு வாங்கும் அதிவேக எரியெண்ணெய்க்கான மத்திய கலால்வரித் தொகையினைத் திரும்ப அளித்தல்.**

மீன்பிடி விசைப்படகு உரிமையாளர்களின் பொருளாதார சிரமங்களைக் குறைக்கும் வகையில், அதிவேக எரியெண்ணெய்க்காக செலுத்தப்படும் கலால் வரி தொகையினை அரசு மானியமாகத் திருப்பி அளித்து, மீன்பிடி விசைப்படகுகளின் இயக்கச் செலவினைக் குறைக்க வழிவகை செய்துள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் 100 சதவீத நிதியுதவியின்கீழ் ரூ. 3.00 கோடியினை மானியமாக மத்திய அரசு வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2007-2008 ஆம் ஆண்டில் இதுவரை 1,537 பயனாளிகளுக்கு ரூ. 2,96,58,075/- வழங்கப்பட்டுள்ளது.

**6.6. மீனவர்களால் மீன்பிடிப்பிற்குப் பயன்படுத்தப்படும் அதிவேக எரியெண்ணெய்க்கு விற்பனை வரி விலக்களித்தல்.**

மீன்பிடி விசைப்படகுகளிலும், இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகுகளிலும் மீன்பிடிக்கும் தமிழக மீனவர்களால் பயன்படுத்தப்படும் அதிவேக எரியெண்ணெய்க்கு 100 சதவீத விற்பனை வரி விலக்களிக்கும் திட்டத்தினை அரசு அறிவித்தது. அதன்படி ஒரு வருடத்திற்கு இயந்திரமயமாக்கப்பட்ட படகு ஒன்றிற்கு 15,000 லிட்டரும் மற்றும் நாட்டுப் படகு ஒன்றிற்கு 3,000 லிட்டரும் விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட டீசல் விநியோகிக்கப்படுகிறது. இதுவரை இயந்திரமயமாக்கப்பட்ட படகுகளுக்கு 74,020.50 கிலோ லிட்டரும், நாட்டுப் படகுகளுக்கு 24,398 கிலோ லிட்டரும், மார்ச் 2008 வரை விநியோகிக்கப்பட்டுள்ளது.

**7. மீனவர்களுக்கான நிவாரண நடவடிக்கைகள்.**

**7.1. பிற நாடுகளில் சிறைவைக்கப்படும் மீனவரின் குடும்பத்திற்கு உதவித் தொகை வழங்குதல்.**

கடலில் மீன்பிடிக்கும் மீனவர்கள் மீன்பிடிக்கையில் அண்டை நாட்டினரால் கைது செய்யப்படும்போது அவர்களின் குடும்பங்களுக்கு உதவும் பொருட்டு அம்மீனவர்கள் திரும்பி வரும் வரை அவர்கள் குடும்பத்தினருக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 50/- வீதம் நிவாரணம் வழங்கப்படுகிறது. இதற்காக அரசு உடனடி நிவாரணமாக





நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 8 மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தலா ரூ. 5.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.

**7.2. காணாமல் போகும் மீனவர் குடும்பத்தினருக்கு நிவாரண உதவி வழங்குதல்.**

அரசாணை எண் 62, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 27-4-2007-ன்படி, கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்கள் கரைக்குத் திரும்பும்வரை நாளொன்றுக்கு ரூ. 50/- அல்லது மாதத்திற்கு ரூ.1,500/- வீதம் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அவர்களின் குடும்பத்திற்கு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(i) பாதிக்கப்பட்ட மீனவர் உண்மையான மீனவராகவும், மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகவும் இருக்கவேண்டும்.

(ii) விண்ணப்பத்துடன், உரிய காவல் துறை உதவி ஆய்வாளர்/ஆய்வாளரின் ஒப்பத்துடன்கூடிய முதல் தகவல் அறிக்கை சம்பந்தப்பட்ட மீன் துறை உதவி இயக்குநருக்கு சமர்ப்பிக்கப்படவேண்டும்.

(iii) வட்டார கிராமப் பஞ்சாயத்திடமிருந்து பெறப்பட வேண்டிய ஆணை உறுதி ஆவணம் பின்வரும் விவரங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

(அ) காணாமல் போன மீனவர் கடற்பயணம் சென்ற நாளிலிருந்து 30 நாட்கள்வரை கரைக்கு திரும்பி இருக்கக் கூடாது.

(ஆ) சம்பந்தப்பட்ட மீனவர் எவ்விதமான சட்ட விரோதமான செயல்களில் ஈடுபட்டவராக இருக்கக்கூடாது.

(இ) காணாமல் போன மீனவர் எவ்விதமான சட்ட விரோதமான செயல்களில் ஈடுபட்டிருப்பது தெரியவந்தாலோ அல்லது இறந்த மீனவருக்கான கருணைத் தொகை பெறுவதற்கான தகுதி பெற்றிருந்தாலோ, மீனவர் குடும்பத்திற்கு வழங்கப்பட்ட தொகை சம்பந்தப்பட்ட மீனவர் குடும்பத்தினரிடமிருந்து திரும்பப் பெறப்படும் என்பதற்கான ஆணை உறுதி ஆவணம் அளிக்க வேண்டும்.

**7.3. இலங்கை கடற்படை தாக்குதலால் இறக்கும் மீனவர் குடும்பங்களுக்கு நிதி உதவி அளித்தல்.**

நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கும்போது சில நேரங்களில் படகின் இயந்திரக் கோளாறு மற்றும் மோசமான வானிலை காரணமாக, சர்வதேச எல்லைக் கோட்டை அவர்கள் தாண்டி இலங்கை கடற்பகுதிக்குள் செல்லும் சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. இவ்வாறு செல்லும் இந்திய மீனவர்கள், இலங்கை கடற்படையால் பிடிக்கப்பட்டோ அல்லது துப்பாக்கிச் சூட்டிற்கு ஆளாகின்றனர். இத்தகைய நிகழ்வுகள் மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, இலங்கை அரசின் உடனடித் தலையீட்டிற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

இலங்கை கடற்படையினரால் சுடப்பட்டு இறக்கும் மீனவக் குடும்பத்ினருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1.00 இலட்சம் கருணைத் தொகையாக வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். அதன்படி உடனடியாக கருணைத் தொகை ரூ.1.00 இலட்சத்தை முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க கடலோர மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

**7.4. மீனவர்களுக்கான கடல் பாதுகாப்புத் திட்டங்கள் - மீன்பிடிப் படகுகளை மறு பதிவு செய்தல்.**

தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டம், 1983-ன்படி, படகுகள் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. கடலில் மீன்பிடிப்பதற்குப் பதிவு செய்த மீன்பிடிப் படகுகளுக்கு மட்டுமே உரிமம் வழங்கப்படும். பழைய பதிவுகளை இரத்துச் செய்து புதிய எண் வழங்க கடலோர மீன் துறை உதவி இயக்குநர்கள் அதிகாரம் பெற்ற அலுவலர் ஆவார்கள்.

சுனாமிக்குப்பின் மேற்கொள்ளப்பட்ட நிவாரணப் பணியில் புதிய படகுகள் பதிவின்போது, ஒரே படகிற்கு இரண்டு உரிமையாளர்கள் இருப்பது, ஒரே படகிற்குப் பல பதிவு எண்கள் இருப்பது ஆகியவை கண்டறியப்பட்டன. எனவே, படகின் நீளத்தை மதிப்பிடவும், வரி விலக்களிக்கப்பட்ட எரியெண்ணெயின் அளவினை அறியவும், காணாமல் போன மீனவர்கள் / படகுகள் கண்டறிவதற்காக கடலோர காவல் படைக்குப் பதிவு விவரங்களை வழங்குவதற்கு ஏதுவாக படகுகளை மறுபதிவு செய்யத் தீர்மானிக்கப்பட்டது.





புதிய பதிவுப் புத்தகங்களில் மாவட்டக் குறியீட்டு எண், கலன்களின் வகைகள், மற்றும் பதிவு எண்கள் ஆகியவைகள் மீன் துறை உதவி இயக்குநர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. 93 சதவீதம் மறுபதிவுப் பணி முடிவடைந்துள்ளது.

**8. உள்நாட்டு மீன் வளம்.**

உள்நாட்டு மீன் வளத்தை மேம்படுத்துவதற்கான அனைத்து உள்ளாற்றலையும் தமிழகம் பெற்றுள்ளது. மாநிலத்தின் மொத்த நீர்வள ஆதாரம் சுமார் 3.7 இலட்சம் ஹெக்டேர் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. பல்வேறு நீர்நிலைகளான நீர்த்தேக்கங்கள், பெரிய மற்றும் பருவ காலங்களில் தண்ணீர் பெறும் பாசனக் குளங்கள், சிறிய மற்றும் குறுகிய கால தண்ணீர் வசதி கொண்ட குளங்கள், ஆறுகள், கழிமுகங்கள், உவர் நீர் மற்றும் உப்பளப் பகுதி ஆகியவைகள் இருந்தாலும், பெரும்பான்மையான மீன் வளர்ப்பு, முதல் மூன்று நீர்நிலைகளில் மட்டுமே மேற்கொள்ளப்படுகிறது. இந்நீர்நிலைகளிலும் 30 முதல் 40 சதவீத நீர்வளங்கள் மட்டுமே மீன் வளர்ப்புக்கு பயன்படுத்தப்படுகிறது. இதற்கு, தமிழ்நாடு பருவ மழையை சார்ந்துள்ளதும், பெரும்பாலான நீர்நிலைகளில் நீர் நிலைத்திருக்கும் காலம் குறைவாக இருப்பதும் முக்கிய காரணங்களாகும்.

இருக்கின்ற நீர்நிலைகளை சிறந்த முறையில் பயன்படுத்தி, அதிக அளவில் உள்நாட்டு மீன் உற்பத்தியைப் பெருக்குவது தமிழக அரசின் குறிக்கோளாகும். இக்குறிக்கோளினை அடையும்பொருட்டு, வேகமாக வளரக்கூடிய வளர்ந்த விரலிகளை சிறிய பருவ நீர்த்தேக்கங்களில் வளர்த்தல், நீர்த்தேக்கங்களில் கூண்டுகளில் மீன் வளர்ப்பு செய்தல் மூலம் உற்பத்தியைப் பெருக்கும் முறையை அறிமுகப்படுத்துதல், இதர மீன்களுடன் நன்னீர் இறால்களை சேர்த்து, வளர்த்து கூடுதல் வருவாயினை ஈட்டுதல் ஆகியவற்றை மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது. காலப்போக்கில் மீன் வளர்ப்பு மேற்கொள்ளப்படாத எந்த நீர்நிலையும் தமிழ்நாட்டில் இல்லை எனும் அரசின் நோக்கத்தினை அடைய மீன் துறை உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

**8.1. நீர்த்தேக்கங்கள்.**

துறையின் கட்டுப்பாட்டில் 53 நீர்த்தேக்கங்கள் உள்ளன. இவைகளில் பின்வரும் முறைகள்மூலம் மீன்பிடித்தல் மேற்கொள்ளப் படுகிறது.

(அ) உரிமச் சீட்டு வழங்கல்.

(ஆ) அருகிலுள்ள உள்நாட்டு மீன் வள கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களைக் கொண்டு பங்கு அடிப்படையில் மீன்பிடித்தல்.

(இ) குத்தகைக்கு விடுதல்.

**8.2. மீன் குஞ்சு உற்பத்தி.**

தமிழ்நாட்டில் சராசரியாக ஆண்டொன்றிற்கு சுமார் 1.29 இலட்சம் டன் மீன் உற்பத்தி செய்யப்படுகிறது. இதை அடைவதற்கு மாநிலத்தின் தேவை 232 மில்லியன் விரலிகள் ஆகும். மீன் துறை மற்றும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் 8 மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்களில் 80 மில்லியன் விரலிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தனியார் பண்ணைகளிலிருந்து சுமார் 80 மில்லியன் விரலிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆக மொத்தம் மாநிலத்தின் மீன் குஞ்சு உற்பத்தி சுமார் 160 மில்லியன் ஆகும். மீதமுள்ள 72 மில்லியன் மீன் குஞ்சுகளின் தேவை அண்டை மாநிலங்களிலிருந்து ஈடு செய்யப்படுகிறது.

மீன் குஞ்சு உற்பத்தி செய்வதில் தன்னிறைவு பெறவும், கூடுதல் நீரப்பகுதிகளை மீன் வளர்ப்பின்கீழ் கொண்டு வரவும், வெவ்வேறு திட்டங்களான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், ராஷ்ட்ரிய சாம் விகாஸ் யோஜனா (RSVY), ராஷ்ட்ரிய கிரிஷ் விகாஸ் யோஜனா (RKVY), தேசிய மீன் வள அபிவிருத்தி வாரியம் (NADP), பாசன வேளாண்மையை நவீனப்படுத்துதல் மற்றும் நீர்நிலைகளைச் சீராக்கி, பராமரித்து, மேலாண்மை செய்தல் (IAMWARM), வேளாண்மைத் தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) ஆகியவைமூலம் அரசுக்குச் சொந்தமான மீன் விதைப் பண்ணைகளை மேம்படுத்தவும், தனியார் மீன் விதைப் பண்ணைகளை இத்திட்டத்தில் ஊக்குவிக்கவும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன.



**8.3. மீன் குஞ்சு உற்பத்தியில் தன்னிறைவு அடைய நடவடிக்கைகள்.**

3.7 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவுள்ள நீர்த்தேக்கங்கள், பெரிய பருவக் கால குளங்கள், கிராமிய செயல்முறை மீன் வளர்ப்புக் குளங்கள், சிறிய பருவக் காலக் குளங்கள் மற்றும் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைக் குளங்கள் ஆகிய மீன் வளர்ப்புக்குத் தகுந்த உள்நாட்டு நீர்நிலைகள் உள்ளன. ஆண்டுக்கு 232 மில்லியன் மீன் குஞ்சுகள் தேவைப்படும்பட்சத்தில், மீன் துறை மற்றும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் 80 மில்லியன் மீன் குஞ்சுகள், தனியார் துறையினரால் 80 மில்லியன் மீன் குஞ்சுகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. அனைத்து நீர்நிலைகளிலும் மீன் குஞ்சு இருப்புத் தேவையினைப் பூர்த்தி செய்ய 72 மில்லியன் இடைவெளி உள்ளது. இந்த இடைவெளியைப் பூர்த்தி செய்திடும் பொருட்டு 15 ஹெக்டேர் பரப்பில் மீன் குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்பிடங்களை மேம்படுத்துவது அவசியமாகிறது. இதற்கு முதலீடாக ரூ.450.00 இலட்சம் மீன் துறை மற்றும் தனியார் துறையிடமிருந்து தேவைப்படுகிறது. அரசு, மீன் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மீன் குஞ்சு உற்பத்திப் பண்ணைகளை பழுதுபார்த்தல் மற்றும் புனரமைப்பு செய்வதற்காக தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (NADP) ரூ. 323.50 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

**8.4. மீன் குஞ்சு வளர்ப்பிடங்கள்.**

16 ஹெக்டேர் பரப்பளவுள்ள 27 மீன் குஞ்சு வளர்ப்புப் பண்ணைகள் உள்ளன. இவற்றில் தற்சமயம் 7.5 ஹெக்டேர் பரப்பளவு மட்டுமே மீன் குஞ்சு வளர்ப்புப் பணியில் உள்ளது. மீன் குஞ்சு உற்பத்தியினை அதிகரிக்க வளர்ப்பிடங்களை படிப்படியாக பழுதுபார்த்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் 3,000 சதுர மீட்டர் பரப்பளவுள்ள வளர்ப்பிடங்கள் பழுதுபார்க்கப்பட்டு, 184.17 இலட்சம் விரலிகள் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது.

**8.5. தீவிர உள்நாட்டு மீன் உற்பத்தி மற்றும் விற்பனைத் திட்டம்.**

தமிழ்நாட்டில், விழுப்புரம், மதுரை, தேனி மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. சுமார் 16,000 ஹெக்டேர் பரப்பளவில் உள்ள பருவ கால மற்றும் பெரிய பாசன குளங்கள் மீன் வள மேம்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படுகிறது. குளங்கள் திறந்த ஒப்பந்தப் புள்ளி மூலம் மீன்பாசி குத்தகைக்கு விடப்படுகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் 9,827.98 ஹெக்டேர் பரப்புள்ள 280 குளங்கள் குத்தகைக்கு விடப்பட்டு

905 மெட்ரிக் டன் மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளன. 2007-08 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 260 குளங்கள் குத்தகைக்கு விடப்பட்டு 875 மெட்ரிக் டன் மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளன.

**8.6 மிதவைக் கூண்டுகளின்மூலம் மீன் வளர்ப்பு மேற்கொள்ளுதல்.**

தமிழகத்தில் உள்ள நீண்ட கால நீர் இருப்பு கொண்ட நீர்நிலைகள்/ நீர்த்தேக்கங்களில் மிதவைக் கூண்டுகளின்மூலம் மீன் வளர்ப்பதற்கு உகந்தவையாகவும் மற்றும் மீன் உற்பத்தியினை உயர்த்துவதாகவும் உள்ளது. மிதவைக் கூண்டுகளில் மீன் வளர்த்தல்மூலம் அதிக மீன் குஞ்சு இருப்புச் செய்வதும், எளிதாகப் பராமரிப்பதும் மற்றும் மீன் உற்பத்தியினை அதிகரிக்கவும் வாய்ப்புகள் உள்ளன. தமிழ்நாட்டில் 52,000 ஹெக்டேர் நீர்ப்பரப்பளவில் மொத்தம் 61 நீர்த்தேக்கங்கள் உள்ளன. உள்நாட்டு நீர்வள ஆதாரங்களில் இது 14 சதவீதம் என கணக்கிடப்பட்டுள்ளது. உள்நாட்டு மீன் வள உற்பத்தியில் நீர்த்தேக்கங்களின் பங்கு 1 சதவீதம் ஆகும். 12 முதல் 42 கிலோ என்ற வகையில் ஹெக்டேர் ஒன்றுக்கு மீன் உற்பத்தி மிகவும் குறைவாக உள்ளது.

கூண்டுகளில் மீன் வளர்ப்பதால், ஹெக்டேருக்கு மீன் உற்பத்தியினைப் பன்மடங்கு அதிகமாக்க முடியும். ஆழியார் நீர்த்தேக்கத்தில் வணிகரீதியான நன்னீர் மீனினங்களை மிதவைக் கூண்டுகளில் வளர்ப்பதற்கான சோதனை அடிப்படையில் முன்னோடித் திட்டம் துவங்கப்பட்டு, அதன் முடிவுகள் ஊக்கமளிப்பதாக இருந்தன. சதுர மீட்டர் ஒன்றுக்கு 20 கிலோ என்ற வகையில் மீன் உற்பத்தியினை அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. மிதவைக் கூண்டுகள்மூலம் மீன்வளர்ப்பது சுய உதவிக்குழுக்களுக்கு ஏற்றதாகும். எனவே, வரும் ஆண்டில் நன்னீர் மீன் வளர்ப்பு எங்கெல்லாம் சாத்தியமோ, அங்கு உள்ளூர் மீனவ சமுதாயத்தினர் மற்றும் சுய உதவிக் குழுக்களை ஈடுபடுத்தி, கூண்டுகளில் மீன் வளர்ப்பு மேற்கொள்ளப்படும்.

**8.7. குளங்கள் மற்றும் நீர்நிலைகளில் ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பினை பிரபலப்படுத்துதல்.**

மீன் வளர்ப்பின்மூலம் பெறக்கூடிய வருவாயை அதிகரித்திட, கூட்டின மீன் வளர்ப்புடன் நன்னீர் இறால் வளர்ப்பையும் ஒருங்கிணைத்து மீன் வளர்ப்போருக்கு வர்த்தக ரீதியாக கூடுதல் வருவாய் அளிக்கும் நன்னீர் இறால் மற்றும் கெண்டை மீன்களை



ஒருங்கிணைத்து வளர்ப்பதே இத்திட்டத்தின் தலையாய குறிக்கோளாகும். இத்திட்டத்தின்படி மீன் வளர்ப்போர்க்கு குளங்களில் இருப்புச் செய்ய வாங்கப்படும் நன்னீர் இறால் குஞ்சுகளுக்கு மானியம் வழங்கப்படும். 2007-2008 ஆம் ஆண்டில் இதுவரை 280 மீன் வளர்ப்போர்க்கு 969.86 ஹெக்டேர் பரப்பளவிற்கு ரூ. 14.97 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**8.8. மீன்கள் பிடிக்கப்பட்ட பின் தேவைப்படும் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.**

மத்திய அரசின் பங்களிப்புத் திட்டத்தின்கீழ், உள்நாட்டு மீன்களை விற்பனை செய்ய தேவையான உட்கட்டமைப்பு வசதிகளைப் பலப்படுத்திட, தமிழக அரசு ரூ. 50.00 இலட்சம் ஒப்பளித்துள்ளது. இத்திட்டத்தில் வெப்பம் கட்டுப்படுத்தப்பட்ட சிறு ஊர்திகள் (Insulated Mini Trucks) குளிர்பதன வசதிகளுடன்கூடிய சுகாதாரமான நவீன சில்லரை விற்பனை அங்காடிகள் அமைப்பது ஆகியவை முக்கிய அங்கங்களாகும். வெப்பம் கட்டுப்படுத்தப்பட்ட 4 சிறு ஊர்திகள் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. நெய்வேலி (தமிழ்நாடு மாநில தலைமை மீன் வள கூட்டுறவு இணையம்), கோயம்புத்தூர், அடையாறு, நந்தனம் மற்றும் வேளச்சேரி (தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்) ஆகிய இடங்களில் நவீன மீன் உணவகங்கள் அமைப்பதற்கான பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசு 2007-2008 ஆம் ஆண்டிற்கு ரூ. 26.25 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. இத்திட்டம் 2008-2009 ஆம் ஆண்டிலும் தொடரும்.

**8.9. வண்ண மீன் வளர்ப்பினை மேம்படுத்துதல்.**

வண்ண மீன் வளர்ப்பு பொதுமக்களிடையே வரவேற்பைப் பெற்று வருவதுடன், ஏற்றுமதிக்கான அதிக வாய்ப்பினைக் கொண்டுள்ளது. வண்ண மீன் உற்பத்திமூலம் ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்பினை உருவாக்கலாம். வண்ண மீன் வளர்ப்பு மிகவும் எளிதான, வீடுகளின் பின்புறத்தில் இருக்கக்கூடிய இடத்தில் குறைந்த முதலீட்டுடன் மேற்கொள்ளக்கூடிய தொழில்நுட்பம் உடையதாகவும் உள்ளது. சென்னைக்கு அருகே கொளத்தூர் பகுதியில் சுமார் 600-க்கு மேற்பட்ட இல்லங்களின் பின்புறத்தில் வண்ண மீன் வளர்ப்பினை மேற்கொண்டுள்ளனர். செம்பரம்பாக்கத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகளைக் கொண்டு, சுய உதவிக் குழுவினர் மற்றும் உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். தற்போது எதிர்நோக்கப்படும் வண்ண மீன் உற்பத்தியாளர்களால்

பல்வேறு பிரச்சினைகளைக் களைய, தண்ணீர் தரச் சோதனை ஆய்வுக் கூடம், உயிர் உணவு வளர்ப்பு முறை, மீன் குச்சுத் தீவனம் தயாரித்தல், மானியம் அளித்தல் போன்றவை குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவை தவிர, வண்ண மீன் வளர்ப்பில் தொழில் நுட்பத்தினை மேம்படுத்தும் பொருட்டு 300 நபர்களுக்கு, பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்பு சிறப்புத் திட்டத்தின் (SGSY) கீழ் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

வண்ண மீன் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதன் முதற்கட்டமாக காஞ்சிபுரம் மாவட்டம், மணிமங்கலத்தில், அப்பூங்கா அமைய உள்ள இடத்தினை இத்திட்டத்தில் ஈடுபாடுள்ள ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் ஏற்றுமதியாளர்களைக் கொண்ட ஜப்பான் குழுவுடன் கடற்பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சிக் குழுமம் மற்றும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக அதிகாரிகள் பார்வையிட்டனர். ஏரியிலிருந்து தண்ணீர் வசதி பெறுவதற்கு அனுமதி வழங்குமாறு பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இரண்டாவது முறையாக நீர் மாதிரி ஆய்வுகள் சேகரிக்கப்பட்டு, கடற்பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சிக் குழுமத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

**8.10. நீர்வாழ் உயிரின வளர்ப்பு மேம்பாட்டிற்காக உள்நாட்டு மற்றும் கடலோர நீர்நிலைகளைக் குத்தகைக்கு விடுதல்.**

கிராமப்புறப் பொருளாதாரத்தில் மீன் வளர்ப்பு முக்கியப் பங்கு வகிப்பதுடன் ஏற்றுமதிமூலம் வருவாய் ஈட்டுவதிலும், வேலை வாய்ப்பினை உருவாக்குவதிலும் மீன் வளம் முக்கியப் பங்கு வகிக்கிறது. உள்நாடு மற்றும் கடல் மீன் உற்பத்திக்கு தகுதிவாய்ந்த ஏராளமான வசதிகளை தமிழ்நாடு கொண்டுள்ளது. மீன் வள ஆதாரங்களை அதிகம் சார்ந்திருத்தல், சுற்றுச்சூழல் பராமரிப்பில் அக்கறை, மீன் வளத்தின் பல்வேறு பிரிவுகளில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப முன்னேற்றம், உலகத் தரத்திற்கு ஏற்ற தரக் கட்டுப்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய மற்றும் எதிர்கால சவால்களை எதிர்கொள்ள ஒருங்கிணைந்த மீன் வளக் கொள்கையை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே, மீன் வள ஆதாரங்களை உரிய முறையில் பயன்படுத்துதல், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், விற்பனை வசதிகளை வலுப்படுத்துதல், நிலையான நீர்வாழ் உயிரின வளர்ப்பினை மேம்படுத்துதல் மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சியை மீனவர்/மீன் வளர்ப்போர்க்கு ஏற்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த மீன் வளக் கொள்கையை அரசு ஏற்படுத்தும்.



நீர்வள ஆதாரங்களைப் பயன்படுத்துவோர், நீர்வளங்களைப் பாதுகாத்து மேம்படுத்தும் பணியைச் செய்து வரும் அரசு சாரா நிறுவனங்கள், மத்திய/மாநில ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் வரைமுறைப்படுத்தும் அமைப்புகள் ஆகியவற்றைக் கலந்தாலோசித்து மீன் வள ஆதாரங்களைப் பாதுகாத்து மேம்படுத்தும் வரைவுக் குத்தகைக் கொள்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

**8.11. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்.**

இத்திட்டத்தின்படி ஒவ்வொரு கிராமத்திலும் ரூ.3.00 இலட்சம் முதல் ரூ.5.00 இலட்சம் வரையிலான செலவில் ஒரு கிராமத்திற்கு ஒரு குளம் மேம்படுத்தப்படும். தண்ணீரை நன்முறையில் சுத்தமாகப் பராமரித்தல், உள்ளாட்சிகளுக்கு அதிக வருவாய் ஈட்டுதல், மகளிர் சுய உதவிக் குழுக்களை ஈடுபடுத்தி மீன் வளர்ப்பு செய்து தொடர்ந்து வருவாய் ஈட்ட உதவுதல், உள்ளாட்சி அமைப்புகளை மீன் வளர்ப்பு மேற்கொள்ளச் செய்து கூடுதல் வருவாய் பெறச் செய்தல் போன்றவை இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டத்தின்படி 25 மாவட்டங்களில் 1,073 கிராமங்களில் உள்ள 1,073 நீர்நிலைகள் தேர்வு செய்யப்பட்டு இதுவரை 9,69,720 மீன் குஞ்சுகள் இக்குளங்களில் இருப்புச் செய்யப்பட்டுள்ளன.

**8.12. பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்பு சிறப்புத் திட்டங்கள் (SGSY).**

ஊரக வளர்ச்சித் துறைமூலம் பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்பு சிறப்புத் திட்டம் ரூ.28.16 கோடி செலவில் செயல்படுத்தப்படும். இத்திட்டம் 3 ஆண்டு காலத்திற்குள் தமிழ்நாட்டில் 12 கடலோர மாவட்டங்களில் இரண்டு நிலைகளாகச் செயல்படுத்தப்படும். பல்வேறு கடல் உயிரின வளர்ப்பு முறையில் திறனை மேம்படுத்துதல், மற்றும் திட்டத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும். இத்திட்டத்தின்கீழ் 42,000 மீனவர்களின் தொழில்நுட்பத் திறமையை மேம்படுத்திக் கூடுதல் பொருளாதார மேம்பாடு அடையச் செய்வது இதன் நோக்கமாகும். இதனால் ஏற்றுமதி வருவாய் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு உற்பத்தி அதிகரிக்கும்.

சிங்கி இறால், நண்டு கொழுக்க வைத்தல், கடற்பாசி வளர்த்தல், வண்ண மீன் வளர்ப்பு, என்ஜின்களைப் பழுதுபார்த்தல், வலை பின்னுதல், மீன் பதப்படுத்துதல் மற்றும் பிடிக்கப்படும் மீன்களின்

[2008 ஏப்ரல் 30

மதிப்பினை அதிகரிக்கச் செய்தல் ஆகியவற்றில் திறமையை மேம்படுத்துவதற்கான பயிற்சி மீனவர் மற்றும் மீனவ மகளிரைக் கொண்ட 8,654 பயனாளிகளுக்கு அளிக்கப்பட்டது. பயிற்சி பெற்றவர்களில் 31 சுய உதவிக் குழுக்கள் கடற்பாசி வளர்த்தலில் ஈடுபட்டு சுய வேலை வாய்ப்புமூலம் பொருளாதார மேம்பாடு அடைந்துள்ளனர். நடப்பாண்டில், ஏற்கெனவே நடைபெற்று வரும் பயிற்சிகளுடன் கூண்டுகளில் கடல் மீன் வளர்த்தல், மட்டி, ஆளி வளர்த்தல், ஆகியவற்றில் செயல்திறன் வளர்த்தலுக்கான பயிற்சி அளிக்கப்படும். நீர்வாழ் உயிரின வளர்ப்பிற்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தின் (CARD) மூலம் பலதரப்பட்ட கடல் மீன் பொறிப்பகம் நிறுவப்படும். உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சூரிய சக்தியால் மீன்களை உலர வைக்கும் 12 இயந்திரங்கள் ஒவ்வொரு கடலோர மாவட்டத்திலும் பொருளாதார நடவடிக்கைக்காக ஏற்படுத்தப்படும். நவீன மீன் பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக் கூட்டுதலில் பயிற்சி பெற்றவர்களுக்கு மீன்களை சுகாதாரமான முறையில் கையாளவும், விற்பனை செய்யவும் ரூ.1.75 கோடி மதிப்புள்ள விற்பனைப் பெட்டிகள் வழங்கப்படும்.

**8.13. பாசன வேளாண்மையை நவீனப்படுத்துதல் மற்றும் நீர்நிலைகளைச் சீராக்கி, பராமரித்து மேலாண்மை செய்தல் (IAMWARM).**

தண்ணீரின் பயன்பாட்டினை ஆதாரமாகக் கொண்டு, பல்வேறு துறைகளின் செயல்பாடுகளை ஒருமுகப்படுத்தி, அதன்மூலம் உற்பத்தித் திறனை அதிகரித்தல் மற்றும் வேளாண்மையின்மூலம் கிடைக்கக்கூடிய வருவாயை கூடுதலாக்க இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் உலக வங்கியின் நிதியுதவியுடன் செயலாக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம்:—

- ❖ தண்ணீர் பயன்பாட்டுத் திறனை அதிகரித்தல்
- ❖ நிலையான பண்ணை வருவாயினை அதிகரித்தல்
- ❖ நீர் ஆதார அமைப்பை மேம்படுத்துதல்

மீன் துறையின்மூலம் 63 உப திட்டப் பகுதிகளில் ரூ.17.3 கோடி செலவினத்தில் திட்டச் செயலாக்கம் செய்து இக்குறிக்கோள்களை அடைய உலக வங்கி ஏற்பளித்துள்ளது. 2007-08 ஆம் ஆண்டில் 9 உப திட்டப் பகுதிகள் தேர்வு செய்யப்பட்டன.



2008 ஏப்ரல் 30]

இத்திட்டத்தின்மூலம் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

(i) பண்ணைக் குட்டைகளில் நீர்வாழ் உயிரின வளர்ப்பு.

(ii) மிதவைக் கூண்டுகளில் மீன்குஞ்சுகளை வளர்த்தல்.

(iii) (அ) அரசு மீன் குஞ்சுப் பண்ணைகளை மேம்படுத்துதல்.

(ஆ) மீன் குஞ்சு இருப்பு வங்கிகள் ஏற்படுத்துதல்.

(iv) வண்ண மீன் வளர்த்தல்.

(v) மீன்பிடி உபகரணங்கள் வழங்குதல்.

(vi) மீன் விற்பனை சிற்றங்காடிகள் அமைத்தல்.

(vii) தகவல், கல்வி மற்றும் தொடர்பிற்கான கொள்திறன் கட்டமைப்பிற்கான (Information Education Communication and Capacity Building) தலைமையிடப் பிரிவு (Headquarters Cell) ஏற்படுத்துதல்.

47 பண்ணைக் குட்டைகளில் மீன் குஞ்சுகள் இருப்புச் செய்யப்பட்டு, மீன் வளர்ப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒரு மீன் குஞ்சு வங்கியினைத் தவிர, வீடூர் மற்றும் பிளவக்கல்லில் உள்ள அரசு மீன் குஞ்சுப் பண்ணைகளில் பழுதுபார்ப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப் பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

2008-09 ஆம் ஆண்டில், 16 உப கோட்டங்களுக்கான திட்டக் கருத்துரு ரூ.253.05 இலட்சத்திற்குத் தயாரிக்கப்பட்டு, பல்நோக்குத் திட்ட அலகுக்கு (MDPU) ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

**8.14. தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ.2.50 இலட்சம் செலவில் வனத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள தடுப்பணைகளில் (Check Dams) கிராம வனக் கவுன்சிலை ஈடுபடுத்தி மீன் வளர்ப்பினை மேற்கொள்ளுதல்.**

இத்திட்டத்தில் மீன் வளத் துறை, வனத் துறையுடன் இணைந்து தகுதிவாய்ந்த 100 ஹெக்டேர் நீர்ப்பரப்பினைத் தேர்வு செய்து, இத்திட்டத்தினை நீலகிரி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, திண்டுக்கல் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் செயல்படுத்தவுள்ளது. 300 கிராம வன கவுன்சில் உறுப்பினர்களுக்கு மீன் வளர்ப்பில் படிப்படியாகப் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**8.15. தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ.35.00 இலட்சம் செலவில் மீன் உற்பத்தியினை அதிகரிக்கவும், அழிந்து வரும் மற்றும் அழியக்கூடிய மீன் இனங்களைப் பாதுகாக்கவும் ஆறுகளில் மீன் குஞ்சுகளை இருப்புச் செய்தல்.**

இத்திட்டத்தில் சிரைனஸ் சிரோசா, கோழி மீன் போன்ற அழிந்து வரும் மீன் இனங்களை உற்பத்தி செய்து, வளர்ப்பதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த அழிந்து வரும் மீன் இனங்களின் சினை மீன்கள் முதலில் வளர்த்தெடுக்கப்படும். இவ்வாறு சினை மீன்களிலிருந்து உருவாக்கப்பட்ட மீன் குஞ்சுகள் இருப்புச் செய்யக்கூடிய அளவிற்கு மேட்டூரில் வளர்க்கப்பட்டு, மேட்டூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள காவிரி ஆற்றின் பல்வேறு இடங்களில் இருப்புச் செய்யப்படும்.

**8.16. தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ.323.50 இலட்சம் செலவில் பயன்பாட்டிலுள்ள மீன் விதைப் பண்ணைகளைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல்.**

இத்திட்டத்தில் பவானிசாகர், மணிமுத்தாறு, கிருஷ்ணகிரி மற்றும் மேட்டூர் அணையிலுள்ள மீன் குஞ்சுப் பண்ணைகளில் உள்ள 3 ஹெக்டேர் நர்சரி வளர்ப்பிடங்களைப் பழுதுபார்க்கவும், புதுப்பிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. உபயோகத்தில் இல்லாத நர்சரி, வளர்ப்புக் குளங்கள் மற்றும் சினை மீன் குளங்களை பழுதுபார்ப்பதன்மூலம் கூடுதலாக மீன் குஞ்சு உற்பத்தியினை அடைய வாய்ப்புள்ளது.

**8.17. தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ.192.00 இலட்சம் செலவில் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நெய்தலூரில் கூடுதலாக இடவசதியினை ஏற்படுத்தி, மீன் குஞ்சுகளைக் கூடுதலாக உற்பத்தி செய்து வளர்த்தல்.**

இத்திட்டத்தில் தற்போதுள்ள துறையின் மீன் குஞ்சுப் பண்ணைகளைப் பலப்படுத்தி, கூடுதல் வளர்ப்பிடங்களை படிப்படியாக ஏற்படுத்துவதன்மூலம் மீன் குஞ்சுத் தேவையில் உள்ள இடைவெளியினை நிரப்பிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்குக் கூடுதல் வளர்ப்பிடங்கள் தேவை. மீன் துறைக்குச் சொந்தமான நெய்தலூர் மீன் பண்ணையில் கூடுதலாக 1 ஹெக்டேர் (0.7 ஹெக்டேர் நீர்ப்பரப்பு) மீன் வளர்ப்பிடம் உருவாக்கப்படும்.





**8.18. தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ.52.50 இலட்சம் செலவில் உள்நாட்டு நீர்நிலைகளில் கூண்டுகளில் மீன் வளர்ப்பு மேற்கொள்ளுதல்.**

இத்திட்டத்தில் எளிய உத்தி, குறைந்த முதலீடு, அதிக வருமானம் அளிக்கக்கூடிய கூண்டுகளில் மீன் வளர்க்கும் முறையினை சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரைச் சென்றடையச் செய்யலாம். நீர்த்தேக்கங்கள், விவசாயப் பாசன வாய்க்கால்கள் மற்றும் ஓடும் நீர்நிலைகள் ஆகியவற்றில் உள்ள மேற்பகுதிகளைப் பயன்படுத்தி உள்நாட்டு மீன் உற்பத்தியினை அதிகரிக்கலாம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. கூண்டுகளில் மீன் வளர்ப்பு என்பது, "விரலிகளை (fingerlings) உண்ணும் அளவு வளர்ந்த மீன்களாக (eatable size)" நீர்ப்பரிமாற்றம் மற்றும் கழிவுகளை நீக்குதல்மூலம் வளர்த்தல் என்பதாகும். இத்திட்டத்தில் ஆழியாறு, கெலவரப்பள்ளி, குண்டேரிப்பள்ளம், ஓடத்துறை மற்றும் பழனி ஆகிய பகுதிகளில் உள்ள 15 இடங்களில் கூண்டுகளில் மீன் வளர்க்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

**9. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்.**

மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் பொருளாதார நிலை மேம்பாட்டிற்காக மத்திய அரசின் நிதியுதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2006-07 ஆம் ஆண்டில், மத்திய அரசு 'பொம்மீன்' குஞ்சு பொரிப்பகம் சோலையார் நீர்த்தேக்கப் பகுதியில் நிறுவிட ரூ.10.00 இலட்சம் ஒப்பளித்துள்ளது. மின் வசதிக்கான பணிகளைத் தவிர அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன. மின் வசதிக்கான பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு, இத்திட்டம் செயல்படுத்தத் துவங்கப்படும். 2007-08ஆம் ஆண்டில், இத்திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ரூ.22.50 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

**10. குளிர் நீர் மீன் வளர்ப்பு மேம்பாடு (Cold Water Fisheries).**

தமிழ்நாட்டில், குளிர் நீர் மீன் வளர்ப்பு மேற்கொள்ள அதிக வாய்ப்புகள் உள்ளன. நீலகிரி மாவட்டத்தில் உள்ள 'டிரௌட்' மீன் குஞ்சுப் பொரிப்பகத்தினை மத்திய மற்றும் மாநில அரசின் நிதியுதவியுடன் ரூ.51.50 இலட்சத்தில் மேம்படுத்திட உத்தேசிக்கப்பட்டது. 2006-07 ஆம் ஆண்டில் மத்திய அரசு ரூ.20.00 இலட்சமும், மாநில அரசு ரூ.5.00 இலட்சமும் வழங்கியது.

நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள உயர்மட்ட நீர்நிலைகளில் விளையாட்டு மீன்பிடிப்பிற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. இந்நீர்நிலைகளில் மீன் துறைமூலம், 'டிரௌட்' இன மீன் குஞ்சுகள் இருப்புச் செய்யப்பட்டு, பொழுதுபோக்கிற்காக மீன்பிடிப்பினை மேற்கொள்பவர்களுக்கு (Anglers) மீன் துறையால் உரிமங்கள் வழங்கப்படுகின்றன. தூண்டில்மூலம் விளையாட்டு மீன்பிடிப்பை அதிகரிக்கும் நோக்கத்துடன் நீர்நிலைகளில் மீன் வள ஆதாரங்களை அதிகரித்து, அதன்மூலம் அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2008-09 ஆம் ஆண்டில் 350 மீன்பிடி உரிமங்கள் வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### 11. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள்.

தமிழ்நாட்டில் உள்நாட்டு மீன் வளர்ப்பு முறைகளை மேம்படுத்தும்பொருட்டு 12 மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் பெரும்பான்மையான மாவட்டங்களை உள்ளடக்கி உள்ளன. அறிவியல் ரீதியான மீன் வளர்ப்பு முறைகளில் பயிற்சி, தொழில்நுட்ப வழிகாட்டுதல் மற்றும் மானியம் வழங்குதல் ஆகியவற்றின்மூலம் மீன் வளர்ப்போர்களை மீன் வளர்ப்புத் தொழிலில் ஈடுபடச் செய்வது இதன் முக்கிய நோக்கமாகும்.

நீர்நிலைகளின் அனைத்து மட்டத்திலும் உள்ள தண்ணீரை முழுமையாகப் பயன்படுத்தி, அறிவியல் ரீதியான மீன் வளர்ப்புப் பணியை மேற்கொள்வதன்மூலம், அதிக அளவில் மீன் உற்பத்தியையும், கிராமப் பகுதிகளிலுள்ள படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை அளிப்பதும், மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளின் முக்கிய நோக்கமாகும். இம்முகமைகள், குளங்கள் மற்றும் மீன் வளர்ப்போரைத் தேர்வு செய்து, அவர்களுக்கு மீன் வளர்ப்பில் பயிற்சி அளித்தல், குத்தகை அடிப்படையில் குளங்களை ஒப்படைத்தல், மீன்களை அறுவடை செய்யும் வரை தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றன. தற்போது, இத்திட்டத்தின்கீழ் 5,000 ஹெக்டேர் பரப்பளவு மட்டுமே உள்நாட்டு மீன் வளர்ப்பின்கீழ் உள்ளது. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் பணிகளை மேம்படுத்த, கிராமப்புற இளைஞர்களுக்கு தீவிர உள்நாட்டு மீன் வளர்ப்பில் பயிற்சி அளிக்கவும், கூடுதலாக ஊராட்சிக் குளங்களை இத்திட்டத்தின்கீழ் கொணர்ந்து முகமையின் பணிகளை விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழக அரசு உள்நாட்டு மீன் வளத்தை மேம்படுத்துவதற்காக மத்திய நிதியுதவித் திட்டத்தின்கீழ்



ரூ.66.67 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. 2006-07 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்மூலம் 162 மீன் வளர்ப்போர் பயன்பெற்றுள்ளனர். 2007-08 ஆம் ஆண்டில், இத்திட்டத்தினைச் செயல்படுத்திட அரசு ரூ.66.25 இலட்சம் (மத்திய அரசு ரூ.50.00 இலட்சம்-மாநில அரசு ரூ.16.25 இலட்சம்) ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்டம் 2008-09 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 12. உவர் நீர்வாழ் உயிரின வளர்ப்பு.

இறால் வளர்ப்பில் மாறி வரும் சூழ்நிலைக்கேற்ப கடலோர இறால் பண்ணைகளைக் கணக்கெடுப்பது அவசியமாகிறது. 2006-2007 ஆம் ஆண்டிலிருந்து அனைத்து இறால் பண்ணைகளைக் கணக்கெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. இறால் வளர்ப்புப் பணியினைப் பெருக்கும் வண்ணம் 2 ஹெக்டேருக்கும் குறைவான நிலமுள்ள சிறு விவசாயிகளுக்கு இறால் வளர்ப்பினை மேற்கொள்ள, ஹெக்டேர் ஒன்றிற்கு ரூ.40,000/- வீதம் மத்திய அரசு பங்களிப்புத் திட்டத்தின்கீழ் அரசு மானிய உதவி வழங்கி வருகிறது.

மாநிலத்தில் தூத்துக்குடி, நாகப்பட்டினம், திருவள்ளூர், இராமநாதபுரம் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் 5 உவர் நீர் மீன் வளர்ப்பு மேம்பாட்டு முகமைகள் செயல்பட்டு வருகின்றன. உவர் நீர் மீன் வளர்ப்பு மேம்பாட்டு முகமைகளின் முதன்மை நிர்வாக அலுவலர்களாக மீன் துறை உதவி இயக்குநர்கள், மாவட்ட ஆட்சியர் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றனர்.

தமிழ்நாட்டில் 56,000 ஹெக்டேர் பரப்புள்ள கழிமுகப் பகுதியும், 14,880 ஹெக்டேர் கடலோர நிலமும் உள்ளது. இதில் 6,335 ஹெக்டேர் பகுதியில் இறால் வளர்க்கப்படுகிறது. தமிழகத்தில் செயல்படுத்தப்படும் இறால் வளர்ப்பிற்காக அமைக்கப்பட்ட கடல் நீர்வாழ் உயிரின ஆணையச் சட்டம், 2005-ன்படி, அனைத்து இறால் பண்ணைகளையும் முறைப்படுத்திடும் பொருட்டு கடல் நீர்வாழ் உயிரின ஆணையத்திடம் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும்.

சிறு விவசாயிகள் மானிய உதவிகள் பெறுவதற்கு இறால் பண்ணைகளை கடல் நீர்வாழ் உயிரின ஆணையத்திடம் பதிவு செய்யவேண்டும் என்பது ஒரு முன் நிபந்தனையாகும். இதுவரை 54 இறால் பண்ணையாளர்களுக்கு ரூ. 20.44 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. கடல் நீர்வாழ் உயிரின ஆணையம் 628 பண்ணைகளைப் பதிவு செய்தலை அங்கீகரித்துள்ளது. மேலும்,

மாநில அளவிலான குழு, 127 இறால் பண்ணை விண்ணப்பங்களைப் பதிவுச் சான்றிதழ் பெறுவதற்கு கடல் நீர்வாழ் உயிரின ஆணையத்திற்குப் பரிந்துரைத்துள்ளது.

### 13. ஆராய்ச்சி.

மீன் துறை, சென்னை மற்றும் தூத்துக்குடியில் இரண்டு ஆராய்ச்சி நிலையங்களை அமைத்துள்ளது. மாநில மீன் வள ஆராய்ச்சிக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட 19 திட்டத் தலைப்புகளில் ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

மத்திய அரசு நிறுவனங்களான, மத்திய நன்னீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம், மத்திய உவர் நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம், மத்திய கடல் வள ஆராய்ச்சி நிலையம் மற்றும் தூத்துக்குடி மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றோடு இணைந்து மீன் துறையில் ஆராய்ச்சிப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:—

(i) பெருரகக் கெண்டை மீன் இனங்களின் விரிவான இனப்பெருக்கம்/பன்முறை இனப்பெருக்கம்.

(ii) நீர்த்தேக்கங்களில் மீன் உற்பத்தியினை மேம்படுத்துதல்.

(iii) சுற்றுச்சூழல் விளைவு மதிப்பீடு.

(iv) கடல் மீன் வளர்ப்பில் செயல்முறை விளக்கம்.

(v) வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த நன்னீர் மீன்கள் / வண்ண மீன்கள் / நன்னீர் இறால்களுக்கான உணவு வகைகளை மதிப்பிட்டு அறிதல்.

(vi) மீன்கள் மற்றும் சிப்பி போன்ற இனங்களுக்கு ஏற்படும் நோய்களைக் கண்டறிதல்.

(vii) நீலகிரி மாவட்டத்தில் டிரவுட் மீன் இன வகைகளை மேம்படுத்துதல்.

### தமிழ்நாடு மாநில மீன் வள ஆராய்ச்சிக் குழு.

தமிழ்நாடு மாநில மீன் வள ஆராய்ச்சிக் குழுவின் 28-வது கூட்டம் மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 29-2-2008 அன்று நடைபெற்றது. அதில், 2004 முதல் 2007 வரையிலான ஆராய்ச்சித் திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டதுடன், 2008 முதல்



2010 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்காக முன்மொழியப்பட்ட எதிர்கால ஆராய்ச்சிப் பணிகள் பின்வருமாறு:-

(i) சுற்றுச்சூழல் மற்றும் உணவு மேலாண்மைமூலமாக பல்வகையான மீன் இனப்பெருக்கத்திற்கான தொழில் நுட்பங்களைத் தரப்படுத்துதல்.

(ii) மலைப் பகுதி நீர்நிலைகளில் பொம்மீன் மீன் வளர்ப்பினை ஏற்படுத்துதல்.

(iii) இறால் பண்ணைக் கழிவுகளினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பினை ஆய்வு செய்தல்.

(iv) இறால்களுக்கு ஏற்படும் நோய்கள் குறித்து ஆய்வு செய்தல்.

(v) நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் சூரை மீன் வள ஆதாரங்களை ஆய்வு செய்தல்.

(vi) செயற்கை உறைவிடங்களில் மீன்களின் குழுமம் குறித்த நிலை மற்றும் ஆய்வு.

(vii) தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் சிங்கி இறால் வளர்த்தல் குறித்த ஆய்வு.

### 14. விரிவாக்கம் மற்றும் பயிற்சி.

பல்வேறு வளர்ப்புப் பணிகளில் பயிற்சி, நண்டு மற்றும் சிங்கி இறால்களை கொழுக்க வைத்தல் குறித்த செயல்முறை விளக்கங்கள், கடற்பாசி வளர்த்தல் ஆகிய பல்வேறு விரிவாக்கத் திட்டங்களை மீன் துறை செயல்படுத்தி வருகிறது. மத்திய அரசு பங்களிப்புத் திட்டத்தின்கீழ் (80:20 விகிதத்தில்), மாநிலத்தில் ஒரு விழிப்புணர்வு மையமும், 3 பயிற்சி நிலையங்களும் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளன.

### 14.1. பயிற்சி நிலையங்கள் அமைத்தல்.

2007-08 ஆம் ஆண்டில் பழவேற்காட்டில் (திருவள்ளூர் மாவட்டம்) ஒரு விழிப்புணர்வு மையமும், இராமேஸ்வரம் (இராமநாதபுரம் மாவட்டம்), குளச்சல் (கன்னியாகுமரி மாவட்டம்) மற்றும் தூத்துக்குடியில் மூன்று பயிற்சி மையங்கள் அமைப்பதற்கு ரூ.65.00 இலட்சத்தில் மத்திய அரசு ரூ.26.00 இலட்சத்தையும், மாநில அரசு ரூ.13.00 இலட்சத்தையும் விடுவித்துள்ளது. பொதுப் பணித் துறையிடம் இப்பணி ஒப்படைக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட செயற்பொறியாளர்கள் இப்பணியை மேற்கொள்வார்கள். இத்திட்டம் 2008-09 ஆம் ஆண்டிலும் தொடரும்.

**14.2.மீனவ இளைஞர்களுக்குப் பயிற்சி.**

மீன் பிடிப் படகுகளை இயக்கவும் மற்றும் பராமரிக்கவும், நவீன மீன்பிடிக் கருவிகளை இயக்கவும் மீனவ இளைஞர்களுக்கு 10 மாத காலப் பயிற்சி நாகப்பட்டினம், மண்டபம், தூத்துக்குடி மற்றும் குளச்சல் ஆகிய நான்கு இடங்களில் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு மையத்திலும் 50 முதல் 60 மீனவ இளைஞர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுமட்டுமன்றி, இப்பயிற்சி நிலையங்களில், இளநிலை இயந்திரக் கம்மியர்களுக்கான பயிற்சியும் வழங்கப்பட்டு வருகிறது. 2006-07 முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் மாதம் ரூ.400/- வீதம் உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 42 மீனவர்களுக்கு இளநிலை கம்மியர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**14.3. அடிப்படைத் தகவல் பரிமாற்றத்தினை வலுப்படுத்துதல்.**

இத்திட்டத்தின்கீழ் ரூ.21.50 இலட்சம் செலவில் 34 கணினிகள் மற்றும் சாதனங்கள் வாங்கப்பட்டு, மாவட்ட துறை அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**14.4. தொடுதிரை வசதிகளை ஏற்படுத்துதல்.**

மீன் துறை இயக்குநர் அலுவலக நூலகத்தில் தொடுதிரை வசதிகளை ஒரு முன்னோடித் திட்டமாக ஏற்படுத்திட அரசு ரூ.2.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. “எல்காட்” நிறுவனத்திடமிருந்து 9-5-2007 அன்று தொடுதிரை பெறப்பட்டது. இதில் துறையின் செயல்பாடுகள் மற்றும் நலத் திட்டங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதற்காக அனிமேஷனுடன்கூடிய புகைப்படங்கள் அடங்கிய சிறப்பு மென்பொருள் வசதிகளை ஏற்படுத்திட நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

**14.5.படித்த மீனவ இளைஞர்களின் செயல்திறனை மேம்படுத்துதல்.**

தமிழ்நாடு அரசு படித்த மீனவ இளைஞர்களுக்கு கடல்சார் கல்வியில் அவர்களின் செயல்திறனை மேம்படுத்த நிதியுதவி வழங்க உத்தேசித்துள்ளது. இதில் முதற்கட்டமாக 10 ஆம் வகுப்பு அல்லது 12 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் இப்படிப்புப் பிரிவை மேற்கொள்வதற்கு ஏதுவாக நிதியுதவி வழங்கக் கருதியுள்ளது. இத்திட்டத்தில் ஆண்டுதோறும் தகுதிவாய்ந்த 100 மீனவ இளைஞர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு தலா ரூ.50,000/-வீதம்



நிதியுதவி வழங்கப்படும். இத்திட்டத்தினை செயல்படுத்திட அரசு ரூ. 50.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.

**14.6. மீன் வளத் துறையின் மத்திய நூலகத்தினை மேம்படுத்துதல்.**

மீன் வளத் துறையின் மத்திய நூலகத்தினை மேம்படுத்திட அரசு ரூ.8.00 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. நூலகப் புத்தகங்கள் அச்சிடப்பட்டு பைண்டிங் செய்தல், கணினிகள் மற்றும் உதிரி பாகங்கள் வாங்குதல், புத்தகங்கள் மற்றும் காலமுறை வெளியீடுகள் வாங்குதல் ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும்.

**14.7. தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் ரூ. 18.00 இலட்சம் செலவில் மீன் வளர்ப்போருக்கான கல்விச் சுற்றுலா.**

அறிவியல்ரீதியான நீர்வாழ் உயிரின வளர்ப்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், அதிநவீன உத்திகளைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்குவதற்காகவும், நமது மாநில மீன் வளர்ப்போரை பிற மாநிலங்களிலுள்ள மத்திய, மாநில மையங்களுக்கு அழைத்துச் சென்று நேரடி பயிற்சி அளித்தல் மற்றும் வணிகரீதியாக வெற்றிகரமாக மீன் வளர்ப்பினை மேற்கொள்ளும் தனியார் நிறுவனங்களுடன் மீன் வளர்ப்போரை நேரடி கலந்தாய்வு செய்தல் ஆகியவை அவசியமாகிறது. தமிழ்நாட்டில் உள்ள வளர்ந்து வரும் மீன் வளர்ப்போரை பிற மாநிலங்களுக்கு அழைத்துச் சென்று, புதிய மீன் உற்பத்தி உத்திகளை பயிலச் செய்து, அவற்றைப் பின்பற்றி மீன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதுடன் விஞ்ஞானிகள் மற்றும் வெற்றிபெற்ற பண்ணையாளர்களுடன் அவர்களை நேர்காணச் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**14.8.தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் ரூ. 50.00 இலட்சம் செலவில் தமிழ்நாட்டிலுள்ள விரிவாக்க மையங்களை மேம்படுத்துதல்.**

இத்திட்டத்தின்கீழ் மீன் துறையின் திட்டங்களை விளக்க விரிவாக்க உபகரணங்கள், பல்வேறு திட்டங்களை விளக்கும் மாதிரிப் படங்கள், மீன்பிடிக் கலன்களின் மாதிரிகள், எஞ்சின்கள், வெளிப்பொருத்தும் மோட்டார்கள், வரைபடங்கள் மற்றும் பெரிதாக்கப்பட்ட உபகரணங்களின் மாதிரி அட்டைகள் ஆகியவற்றைக் கொண்ட ஒலி, ஒளி வசதியுடன்கூடிய ஊர்தி மற்றும் பல்நோக்கு ஊடக உபகரணங்களான கணினிகள், லேப்டாப், எல்.சி.டி புரொஜெக்டர், திரை, டி.வி.டி. பிளேயர், டி.வி.டிக்கள், டிஜிட்டல் கேமரா, டீசலில் இயங்கும் ஜெனரேட்டர்கள், ஆம்ப்ளிபையர், மைக், வினெயில் ப்ளக்ஸ்

[2008 ஏப்ரல் 30

போர்டு (Vinyl Flex Board) வரை பலகைகள், வண்ண எழுதுகோல்கள் மற்றும் ஸ்விட்ச் போர்டுகள் ஆகியவை சென்னை, பரங்கிப்பேட்டை, நாகப்பட்டினம், மதுரை மற்றும் குளச்சலில் உள்ள ஐந்து விரிவாக்க மையங்களுக்கு வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**15. மீன் வள கூட்டுறவுச் சங்கங்கள்**

இம்மாநிலத்தில் வாழும் மீனவர் மற்றும் மீனவ மகளிரை மேம்படுத்துவதில் கூட்டுறவுச் சங்கங்கள் முக்கிய அங்கமாக உள்ளன. மீன் வள கூட்டுறவுச் சங்கங்கள் துறையின் பல்வேறு நலத் திட்டங்களை ஆதார மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விரிவுபடுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. சுமார் 5.64 இலட்சம் மீனவர் / மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ளனர். 54 நியாய விலைக் கடைகள் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுகின்றன.

கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் உறுப்பினர்கள் விவரம் பின்வருமாறு:—

| கூட்டுறவுச் சங்கத்தின் பெயர் | கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை | பதிவு செய்த உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் | 521 | 3,21,106 |
| கடல் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் | 382 | 1,46,239 |
| உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் | 303 | 77,615 |
| உள்நாட்டு மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் | 84 | 10,784 |
| இதர வகை சங்கங்கள் | 21 | 6,628 |
| மாவட்ட மீனவர் கூட்டுறவு இணையங்கள் | 11 | 727 |
| தமிழ்நாடு தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் | 1 | 502 |
| மொத்தம் | 1,323 | 5,63,601 |



2008 ஏப்ரல் 30]

**16. சிறப்புத் திட்டங்கள்.**

**தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம்.**

இத்திட்டம் மத்திய வேளாண் துறையினால் துவக்கப்பட்ட கூடுதல் நிதியுதவி பெறும் ஒரு புதிய திட்டமாகும். 11-வது ஐந்தாண்டுத் திட்ட கால முழுமைக்கும் ரூ.25,000 கோடி இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு செய்யப்பட்டதில், மீன் வளம் மற்ற திட்டங்களுக்கிடையில் ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது. இத்திட்டத்தில் மாவட்ட வேளாண்மைத் திட்டத்தின் பகுதியாக திட்டங்கள் தயாரிப்பதில் மாநில அரசுக்கு நெகிழ்வும், தன்னாட்சியும் வழங்கப்படுவதால் விவசாயம் சார்ந்த துறைகளில் முதலீடு செய்து உற்பத்தியினை அதிகரிக்க வழிவகை செய்துள்ளது.

அரசாணை எண் 129, வேளாண்மைத் துறை, நாள் 19-3-08-ல் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அரசு ரூ.703.50 இலட்சம் நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

மீன் வளத் துறையால் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்கள் பின்வருமாறு:—

(i) நீலகிரி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, திண்டுக்கல் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் உள்ள வனத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள தடுப்பு அணைகளில் (Checks Dams) கிராம வனக் கவுன்சிலை ஈடுபடுத்தி மீன்வளர்ப்பினை மேற்கொள்ளுதல்-ரூ.2.50 இலட்சம்.

(ii) அழிந்து வரும் மற்றும் அழியக்கூடிய மீன் இனங்களைப் பாதுகாப்பதற்கும், மீன் உற்பத்தியினை அதிகரிப்பதற்கான நடவடிக்கையாக ஆறுகளில் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்படுகிறது. அழியக்கூடிய மீன் இனங்களின் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு மேட்டூர் அணை மற்றும் அதனைச் சுற்றியுள்ள காவிரி ஆற்றின் பல்வேறு இடங்களில் இருப்புச் செய்தல் - ரூ.35.00 இலட்சம்.

(iii) பவானிசாகர், மணிமுத்தாறு, கிருஷ்ணகிரி மற்றும் மேட்டூர் அணை ஆகிய இடங்களில் பயன்பாட்டிலுள்ள மீன் குஞ்சுப் பண்ணைகளைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல்-ரூ.323.50 இலட்சம்.

(iv) தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நெய்தலூரில் கூடுதலாக இடவசதியினை ஏற்படுத்தி, மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்து வளர்த்தல் - ரூ.192.00 இலட்சம்.

(v) மீன் வளர்ப்போருக்கான கல்விச் சுற்றுலா- ரூ.18.00 இலட்சம்.

(vi) தமிழ்நாட்டில் சென்னை, பரங்கிப்பேட்டை, நாகப்பட்டினம், மதுரை மற்றும் குளச்சலில் உள்ள விரிவாக்க மையங்களை மேம்படுத்துதல்-ரூ.50.00 இலட்சம்.

(vii) ஆழியாறு, கெலவரப்பள்ளி, குண்டேரிப்பள்ளம், ஒடத்துறை, பழனி ஆகிய இடங்களில் உள்நாட்டு நீர்நிலைகளில் கூண்டுகளில் மீன் வளர்ப்பு மேற்கொள்ளுதல்-ரூ.52.50 இலட்சம்.

(viii) தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களான சென்னையில் 2 இடங்களிலும், மதுரையில் 2 இடங்களிலும் மற்றும் கோயம்புத்தூரில் 1 இடத்திலும், ஆக ஐந்து நவீன மீன் விற்பனை நிலையங்கள் நிறுவுதல் - ரூ.30.00 இலட்சம்.

**17. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்.**

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் 1974-ம் ஆண்டு அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.500.00 இலட்சமாகும். இன்று வரை செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.445.52 இலட்சமாகும்.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் கடந்த 3 ஆண்டுகளில் (2005 முதல் 2008 வரை) ஈட்டிய இலாப விபரம் பின்வருமாறு:—

(ரூபாய் இலட்சத்தில்)

| | | | |
|---|---|---|---|
| 1) | 2005-2006 | 98.32 | (தணிக்கை செய்யப்பட்டது) |
| 2) | 2006-2007 | 108.29 | (தணிக்கை செய்யப்பட்டது) |
| 3) | 2007-2008 | 229.50 | (தணிக்கை செய்யப்படாதது) |

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் கீழ்க்கண்டச் செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

**17.1. நீர்த்தேக்கங்கள்.**

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் கீழ்க்கண்ட நீர்த்தேக்கங்களில் முறையாக மீன் குஞ்சு இருப்பு செய்து வருகிறது. மூன்றில் ஒரு பங்கு என்ற அடிப்படையில் உள்ளூர் மீனவர்களை ஈடுபடுத்தி மீன் பிடிப்பு நடத்தப்படுகிறது.

(அ) சாத்தனூர் அணை (ஆ) பவானிசாகர் (இ) ஆழியார்
(ஈ) அமராவதி (உ) திருமூர்த்தி (ஊ) உப்பாறு
(எ) பாலாறு-பொறந்தலாறு (ஏ) பெரும்பள்ளம்.



2007-2008 ஆம் ஆண்டில், 515.95 டன் மீன்கள் நீர்த்தேக்கங்களில் பிடிக்கப்பட்டு ரூ.146.48 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. பாலாறு-பொறந்தலாறு, உப்பாறு மற்றும் பெரும்பள்ளம் நீர்த்தேக்கங்கள் தனியாருக்கு குத்தகை விடப்பட்டுள்ளது.

**17.2. மீன் குஞ்சு உற்பத்தி.**

இக்கழகம் சாத்தனூர் அணை மற்றும் ஆழியார் அணையிலுள்ள மீன் குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்பு நிலையங்களுடன், அமராவதி, திருமூர்த்தி, பாலாறு-பொறந்தலாறு மற்றும் உப்பாறு ஆகிய இடங்களில் மீன் குஞ்சு வளர்ப்பு நிலையங்களையும் நிர்வகித்து வருகிறது. இப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் மீன் குஞ்சுகளின் பெரும்பகுதி, கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்த்தேக்கங்களில் இருப்புச் செய்யப்படுவதோடு மீன் துறை, மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் மற்றும் தனியாருக்கு மீன் குஞ்சுகள் விற்பனை செய்யப்படுகிறது. 2007-2008ஆம் ஆண்டில் 244 இலட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.9.55 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**17.3.மீன் பதப்படுத்தும் நிலையங்கள்.**

இக்கழகத்தின் கட்டுப்பாட்டில் பனிக்கட்டி உற்பத்தி நிலையங்கள் மற்றும் மீன் பதப்படுத்தும் நிலையங்கள் உள்ளன. குளிர்பதன வசதியுடன்கூடிய மீன்பதப்படுத்தும் நிலையம் திருவாளர்கள். பிரைமியர் மெரைன் ப்ராடெக்ட்ஸ், தனியார் நிறுவனத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ.7.00 இலட்சம் வீதம் மூன்றாண்டுகளுக்கு குத்தகை விடப்பட்டுள்ளது.

**17.4.எரியெண்ணெய் வழங்கும் நிலையங்கள்.**

இக்கழகம் மீனவர்கள் மற்றும் மீன்பிடி விசைப்படகு இயக்குபவர்களின் நலன் கருதி 27 எரியெண்ணெய் வழங்கு நிலையங்களை சோழ மண்டலக் கடற்கரை எண்ணூர் முதல் சின்னத்துறை மேற்குக் கடற்கரை வரையிலுள்ள மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குதளங்களில் இயக்கி வருகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் பகிர்ந்தளித்து பெறப்பட்ட 80,768 கிலோ லிட்டர் எரியெண்ணெயில் 63,107.71 கிலோ லிட்டர் அதிவேக லிட்டர் எரியெண்ணெய் மானியத்தின்கீழும் மற்றும் 8,536.27 கிலோ லிட்டர் அதிவேக எரியெண்ணெயும். மொத்தம் ரூ.19,492.50 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது

[2008 ஏப்ரல் 30

**17.5. மீன் விற்பனை.**

இக்கழகம் மீனவர்கள் நல்ல விலையில் விற்று பயன்பெறவேண்டும் என்பதற்காக சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, பொள்ளாச்சி மற்றும் திருவண்ணாமலை ஆகிய நகரங்களில் சில்லறை விற்பனை நிலையங்கள் மூலமாக மீன்களையும், பொரித்த மீன்களையும் பொதுமக்களுக்கு நியாயமான விலையில் விற்பனை செய்து வருகிறது. 2007-2008 ஆம் ஆண்டு, 828.01 டன்கள் மீன் விற்பனை செய்யப்பட்டு ரூ.581.27 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**17.6. மீன் வலை பின்னும் நிலையம்.**

இராயபுரத்தில் செயல்பட்டுவரும் மீன் வலை பின்னும் நிலையம் ஆண்டொன்றுக்கு 75 டன்கள் வலை தயாரிக்கும் திறன் கொண்டதாகும். 2007-2008ஆம் ஆண்டு 25.17 டன்கள் நைலான் வலைகள் தயாரிக்கப்பட்டு ரூ.69.53 இலட்சத்திற்கு மீனவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**17.7. நீலாங்கரையில் இறால் குஞ்சு பொரிப்பகம்.**

சென்னைக்கு அருகே உள்ள நீலாங்கரையில் ஒரு இறால் குஞ்சு பொரிப்பகம் உள்ளது. இப்பொறிப்பகத்தின் ஒரு பகுதி கடல்வாழ் உயிரின அதிகரிப்புத் திட்டத்திற்காக தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிலையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இறால்குஞ்சு பொரிப்பகம் கடற்பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சிக் குழுமத்தின் பொறுப்பிலுள்ள "ராஜீவ் காந்தி நீர்வாழ் உயிரின மையத்துக்கு" 21-4-2004 முதல் ரூ. 3.50 இலட்சத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

**17.8. காரங்காட்டில் இறால் வளர்ப்புப் பண்ணை.**

காரங்காட்டில் நிறுவப்பட்டுள்ள மாதிரி இறால் பண்ணை தனியாருக்கு வருடத்திற்கு ரூ.5.00 இலட்சத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் பால் கெண்டை, கலவா போன்ற மீன்களை வளர்க்கவும் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**17.9. வண்ண மீன் உற்பத்தி மற்றும் விற்பனை.**

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், ஆழியார் மற்றும் திருமூர்த்தி ஆகிய இடங்களில் வண்ண மீன் உற்பத்தி நிலையங்களை



2008 ஏப்ரல் 30]

அமைத்துள்ளது. மேலும், ஆழியார் மற்றும் திருமூர்த்தி நகரில் வண்ண மீன் விற்பனை மையத்துடன்கூடிய வண்ண மீன் காட்சியகங்கள் செயல்பட்டு வருகிறது. சென்னை மாநகரில் வண்ண மீன் விற்பனை நிலையம் ஒன்றும் இயங்கி வருகிறது. 2007-2008ஆம் ஆண்டு வண்ண மீன் மற்றும் உபகரணங்கள் விற்பனை செய்ததன்மூலம் ரூ.12.22 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது.

**17.10. பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை இயந்திரமயமாக்கிட மானியம் வழங்கும் திட்டத்தின்படி உட்பொருத்தும்/வெளிப்பொருத்தும் என்ஜின்கள் வழங்குதல்.**

பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை, இயந்திரமயமாக்கிட மானியத்துடன் உட்பொருத்தும் / வெளிப்பொருத்தும் என்ஜின்கள் மீனவர்களுக்கு தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் வழங்கி வருகிறது. 2007-2008 ஆம் ஆண்டு 346 என்ஜின்கள் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**17.11. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் மேற்கொள்ளப்படவுள்ள புதிய திட்டங்கள்:-**

- மாநிலத்தில் உள்ள முக்கிய நகரங்களில் நவீன வசதிகளைக் கொண்ட மீன் விற்பனை அங்காடிகளை நிறுவுதல்.
- மத்திய அரசின் வேளாண் அமைச்சகத்தின் நிதி உதவியுடன் நான்கு இடங்களில் தலா ரூ.4.00 இலட்சம் வீதம் மீன் விற்பனை உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல்-ரூ.16.00 இலட்சம்.
- மேற்காணும் திட்டத்தின்மூலம் ரூ.5.00 இலட்சம் வீதம் 3 வெப்பம் கட்டுப்படுத்தப்பட்ட ஊர்திகள் (Insulated trucks) வாங்குதல்-ரூ.15.00 இலட்சம்.
- மத்திய அரசின் வேளாண்மை அமைச்சகத்தின் நிதியுதவியுடன் அறுவடைக்குப்பின் தொழில்நுட்ப அபிவிருத்தி திட்டத்தின்கீழ் தேனாம்பேட்டையில் நவீன மீன் விற்பனையகம், மீன் காட்சியகம் மற்றும் மதிப்புகூட்டு உற்பத்தி பொருட்களை விற்கும் இடம் ஆகியவை அமைக்கும் திட்டம் (ரூ.10.00 இலட்சம் நிதியுதவி)-ரூ.27.40 இலட்சம்.

## 18. தமிழ்நாடு மாநில தலைமை மீன் வள கூட்டுறவு இணையம்.

தமிழ்நாடு மாநில தலைமை மீன் வள கூட்டுறவு இணையம் பதிவுசெய்யப்பட்டு சென்னையை தலைமை இடமாகக் கொண்டு 6-11-1991 முதல் செயல்பட்டு வருகிறது. தற்போது 589 ஆரம்ப நிலை மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும், 9 மாவட்ட மீனவ கூட்டுறவு இணையங்களும் தமிழ்நாடு மாநில தலைமை மீன் வள கூட்டுறவு இணையத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்து, ரூ.89.06 இலட்சம் பங்குத் தொகையாக செலுத்தியுள்ளனர். தமிழ்நாடு மாநில தலைமை மீன் வள கூட்டுறவு இணையம், பாரம்பரிய மீனவர்களின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்தும்பொருட்டு தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தின் (NCDC) நிதியைப் பெற்று, ஒருங்கிணைந்த கடல் மீன் வள மேம்பாட்டு திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி. தமிழ்நாடு மாநில தலைமை மீன் வள கூட்டுறவு இணையம், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தினர்களுக்கு மீன்பிடிக் கலன்கள், என்ஜின்கள் மற்றும் உபகரணங்களை வழங்கியுள்ளது. இதன்படி 147 மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் 5,669 பயனாளி உறுப்பினர்கள் 2,736 மீன்பிடி உபகரணங்களை வாங்கிட ரூ.19.79 கோடி அளித்துள்ளது.

தமிழ்நாடு மாநில தலைமை மீன் வள கூட்டுறவு இணையம், கடல் மீனவர்கள் பயன்பெறும் வகையில் எரியெண்ணெய் விற்பனை நிலையம் அமைத்தல், வெளிப்பொருத்தும் என்ஜின்கள் விற்பனை செய்தல் மற்றும் பழுதுபார்க்கும் பணிமனைகள் அமைத்தல் ஆகிய பலதரப்பட்ட பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

### 18.1. பழுதுபார்க்கும் பணிமனைகள்.

தமிழ்நாடு தலைமை மீன் வள கூட்டுறவு இணையம் இயந்திர உதிரி பாகங்கள், மீன்பிடி உபகரணங்கள் மற்றும் என்ஜின் ஆயில் ஆகியவற்றை விற்பனை செய்வதற்காக தஞ்சாவூர் மாவட்டம், மல்லிப்பட்டினம், தூத்துக்குடி மாவட்டம், தருவைக்குளம் மற்றும் கொம்புத்துறை ஆகிய இடங்களில் ரூ.3.20 இலட்சம் செலவில் 3 பணிமனைகளை துவக்கியுள்ளது.

### 18.2. எரியெண்ணெய் விற்பனை நிலையங்கள்.

மீனவர்களுக்கு எரியெண்ணெய் வழங்குவதற்காக தமிழ்நாடு மாநில தலைமை மீன் வள கூட்டுறவு இணையம் தஞ்சாவூர் மாவட்டம்,



சேதுபாவாசத்திரம், திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு, தூத்துக்குடி மாவட்டம், வேம்பார் மற்றும் தருவைக்குளம், கடலூர் மாவட்டம், அன்னன்கோவில், காஞ்சிபுரம் மாவட்டம், நீலாங்கரை, கன்னியாகுமரி மாவட்டம், சின்னமுட்டம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் ஆகிய இடங்களில் எரியெண்ணெய் விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது. இதுவரை 8,414 கிலோ லிட்டர் உயர்வேக எரியெண்ணெய் மீனவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் விழுப்புரம் மாவட்டம் மரக்காணம், புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாபட்டினம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை ஆகிய இடங்களில் எரியெண்ணெய் விற்பனை நிலையங்களை அமைக்க முயற்சிகள் மேற்கொண்டுள்ளது.

### 18.3. வெளிப்பொருத்தும் என்ஜின்கள் விற்பனை செய்தல்.

தமிழ்நாடு மாநில தலைமை மீன் வள கூட்டுறவு இணையம் வெளிப்பொருத்தும் என்ஜின்கள் மானிய உதவியுடன் தகுதியுள்ள மீனவர்களுக்கு விற்பனை செய்கிறது. 2007-2008ஆம் ஆண்டில் 1,040 வெளிப்பொருத்தும் என்ஜின்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 18.4. மீன் விற்பனை நிலையம்.

தமிழ்நாடு மாநில தலைமை மீன் வள கூட்டுறவு இணையம் நெய்வேலியில் சில்லரை விற்பனை நிலையம் மூலம் உடனடியாக பிடிக்கப்பட்ட மீன்களை விற்பனை செய்து வருகிறது.

## 19. தமிழ்நாடு மீனவர் நல வாரியம்.

20-1-2007 அன்று நடைபெற்ற நிதிநிலைக் கூட்டத்தொடரின்போது, மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் மீன்பிடித்தல் மற்றும் அதன் தொடர்புடைய செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ள மீனவர்களின் நலனைக் காக்க தனியாக தமிழ்நாடு மீனவர் நல வாரியம் அமைக்கப்படும் என்று அறிவித்தார். இதனையடுத்து, சட்டம் மற்றும் விதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரசாணை எண் 91, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் துறை, நாள் 12-6-2007-ல் ரூ.5.00 கோடியை அரசு மானிய உதவியாக ஒப்பளிப்பு செய்துள்ளது.

[2008 ஏப்ரல் 30

வாரியத் தலைவர் மற்றும் அரசு சார் அலுவலர்கள் மற்றும் அரசு சாரா அலுவலர்கள் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். 30-5-2007 மற்றும் 27-2-2008 தேதிகளில் வாரியத்தின் கூட்டம் நடைபெற்று பல்வேறு கோரிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது.

6 இலட்சம் விண்ணப்பங்களும், 3 இலட்சம் அடையாள அட்டைகளும் அச்சிடப்பட்டுள்ளன. இதுவரை 53,629 மீனவர்கள் உறுப்பினர்களாகப் பதிவு செய்யப்பட்டு 19,774 அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மீனவர் நல வாரியத்தால் இதுவரை பெறப்பட்டுள்ள 92 கேட்பு விண்ணப்பங்கள்மீது பரிசீலனைக்குப் பின் விரைவில் நிவாரணம் வழங்கப்படும்.



2008 ஏப்ரல் 30]

## இணைப்பு III

(387ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 8—பால் வளத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009

### முன்னுரை

பால் வளம், தமிழகத்தில் சீரான பொருளாதார மாற்றங்களை உருவாக்கி, கிராமப்புறப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் முக்கியப் பங்கு வகித்து வருகிறது. பெரும்பாலான பால் உற்பத்தியாளர்கள் சிறிய, நடுத்தர மற்றும் ஏழை விவசாயிகள் ஆவர். பால்வளம் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்புகளை உருவாக்கி கிராம மக்களின் வறுமையை நீக்குகிறது. பால் வளம் ஆண்டு முழுவதும் நிலையான வருமானம் தந்து கிராம மக்களின், குறிப்பாக கிராமப்புறப் பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது. கூட்டுறவு அமைப்புகளில் உள்ள பால் உற்பத்தியாளர்கள், பால் கொள்முதல் விலையாக சராசரியாக நாளொன்றுக்கு ரூ.262 இலட்சம் (ஆண்டுக்கு ரூ.95,630 இலட்சம்) பெறுகின்றனர். இதன் வாயிலாக கிராமப்புறப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் இத்துறையின் பங்களிப்பு தெரிய வருகின்றது.

இந்தியா, உலகிலேயே அதிகமாக பால் உற்பத்தி செய்யும் நாடாக விளங்குகிறது. பால் உற்பத்தி செய்யும் முன்னணி மாநிலங்களில் ஒன்றாகத் தமிழகம் திகழ்கிறது. மொத்த வருவாய்க் கிராமங்களில் 50 விழுக்காடுக்கு மேற்பட்ட கிராமங்களில் பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து முதல் இடத்தைத் தமிழகம் பெற்றுள்ளது. 22.10 இலட்சம் உறுப்பினர்கள் அடங்கிய 7,833 பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

2007-2008 ஆம் ஆண்டில், கூட்டுறவு அமைப்புகளின் பால் கொள்முதல், சராசரியாக நாளொன்றுக்கு 26.27 இலட்சம் லிட்டர் ஆகும். பால் கூட்டுறவு வரலாற்றிலேயே அதிகபட்சமாக 21-06-2007 அன்று 29.40 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து, பால் வளத் துறை சாதனை படைத்துள்ளது. தமிழகத்தில் பால் விற்பனையில், கூட்டுறவுகளின் சந்தைப் பங்களிப்பு உயர்ந்து, தமிழகத்தின் சந்தைப் பங்களிப்பில் 'ஆவின்' பெரும்பங்கு வகிக்கிறது.

**பால் வளத் துறை**

தமிழகத்தில் 1958 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பால் வளத் துறையின் இன்றைய வளர்ச்சி, சிறப்பானது மற்றும் குறிப்பிடத்தக்கது. 01-08-1965 முதல் பால் கூட்டுறவுச் சங்கங்களின் நிருவாகம் மற்றும் சட்டரீதியான செயல்பாடுகள், பால் வளத் துறைக்கு மாற்றப்பட்டது. பால் வளத் துறை ஆணையர், இத்துறையின் முதன்மை அலுவலராகவும் சங்கங்களின் செயல் பதிவாளராகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளார். மேலும், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் நிருவாக இயக்குநராகவும் இருந்து வருகிறார். தவிர மாநில அளவில் பால் மற்றும் பால் பொருட்களின் ஆணை 1992-ன்கீழ் மாநிலப் பதிவு அதிகாரியாகவும் இருந்து வருகிறார்.

புதிய சங்கங்களைப் பதிவு செய்தல், செயலிழந்த சங்கங்களைப் புதுப்பித்தல், சங்கங்களை ஆய்வு செய்தல், தண்டவசூல் நடவடிக்கை எடுத்தல், தேர்தல் நடத்துதல், நிருவாகக் குழு அமைத்தல் மற்றும் பொது மக்களின் நலன் கருதி சங்கங்களுக்கு ஆணைகள் பிறப்பித்தல் போன்ற நடவடிக்கைகளை, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் 1983 மற்றும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகள் 1988-ன்படி செயல்படுத்தி வருகின்றார்.

பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் அவர்களின் சட்ட ரீதியான பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கு, துணை பால் ஆணையர் (கூட்டுறவு) மற்றும் மாவட்டவாரியாக நியமிக்கப்பட்டுள்ள 23 துணைப் பதிவாளர் (பால்பதம்) ஆகியோர் உதவியாக உள்ளனர்.

**பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்**

தமிழகத்தில் 7,833 பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 1309 மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் 59 பிரதம பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் அடங்கும். 2007-2008 ஆம் ஆண்டில் 364 புதிய சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 129 சங்கங்கள் மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகும்.

பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் பொருட்டு, விவசாயிகளைப் பால் உற்பத்தியாளர்களாக்கும் திட்டங்களைச் செயல்படுத்துவதுடன் உயர்ரகக் கலப்பினக் கறவையினங்களை உருவாக்க, தொலைநோக்குத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. பால் உற்பத்தியாளர்கள், சங்கங்களில் அங்கத்தினராகவும் உள்ளதால், சங்கங்கள் இலாபம் ஈட்டும்பொழுது, உறுப்பினர்களுக்கு ஈவுத் தொகை, போனஸ் மற்றும் கூடுதல் கொள்முதல் விலை ஆகியவை வழங்கப்படுகின்றன. சங்கங்கள் ஈட்டும் இலாபம் உறுப்பினர்களுக்கே மீண்டும் சென்றடைவது, கூட்டுறவுச் சங்கங்களின் தனிச் சிறப்பாகும். தனியார் நிறுவனங்களைப் போலன்றி, சங்கங்கள் ஈட்டும் இலாபம், உற்பத்தியாளர்களைச் சென்றடைவதால், உற்பத்தியாளர்களுக்கும் சங்கங்களுக்கும் இடையே நல்லுறவு நீடிக்கிறது.



**மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள்**

தமிழகத்தில் 31 மாவட்டங்களை உள்ளடக்கி, 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் செயல்பட்டு வருகின்றன. அந்தந்த மாவட்டங்களின் ஆட்சியர் ஒன்றியத்தின் தனி அலுவலராகச் செயல்பட்டு வருகின்றார். சங்கங்கள் ஒன்றியங்களைச் சார்ந்த உறுப்பினர்களாகச் செயல்படுகின்றன. தூய பால் உற்பத்தி வழிமுறைகளைப் பின்பற்றி, சங்கங்களில் பால் கொள்முதல் செய்தல், தரத்தின் அடிப்படையில் பால் பணம் வழங்குதல், கால்நடைகளைப் பராமரித்தல், கால்நடைகளின் நலன் பேணுதல், கால்நடை தீவனம் மற்றும் பசும் புல் வழங்குதல், பால் உற்பத்தியாளர்கள் நலனைக் கருத்தில் கொண்டு மாநில மற்றும் மத்திய அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துதல், மாவட்ட அளவில் பால் விற்பனை செய்தல், சென்னைக்குத் தேவையான பாலை அனுப்புதல் மற்றும் உபரி பாலிலிருந்து கொழுப்பு நீக்கி, மரபு மற்றும் மதிப்புக்கூட்டிய பால் உப பொருட்களைத் தயாரித்தல் ஆகியவை மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களின் முக்கியப் பணிகளாகும்.

**தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்**

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், 17 மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களின் தலைமை நிறுவனமாகும். இணையம் 01-02-1981 ஆம் நாளில் நிறுவப்பட்டது. இணையத்தின் மூன்று பால் பண்ணைகள், சென்னையில் செயல்பட்டு வருகின்றன. மாநகர பால் பண்ணைகள், கூட்டுறவு ஒன்றியங்களிலிருந்து பாலினைப் பெற்று பதப்படுத்தி பால் பைகளில் நிரப்பி சென்னை மாநகரம் மற்றும் புறநகர்ப் பகுதிகளுக்கு

விற்பனைக்கு அனுப்பி வைக்கின்றன. அம்பத்தூரிலுள்ள நான்காவது பால் பண்ணையில் பால் உப பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.

**பால் மற்றும் பால் உப பொருட்கள் ஆணை 1992**

நுகர்வோருக்குத் தேவையான தரமான மற்றும் சரியான அளவுடன் பால் கிடைக்கச் செய்ய வேண்டும் பொருட்டு அத்தியாவசியப் பொருட்கள் சட்டம் 1955 பிரிவு 3-ன்கீழ், மத்திய அரசு, பால் மற்றும் பால் உப பொருட்கள் ஆணை 1992-ஐ அமல்படுத்தியுள்ளது.

தமிழகத்தில், செயல்பட்டு வருகின்ற அனைத்துத் தனியார் பால் பண்ணைகளும், அரசு பால் பண்ணைகளும், நாளொன்றுக்கு 10,000 லிட்டர் பால் அல்லது பால் பொருட்களிலுள்ள மொத்தச் சத்து வருடத்திற்கு 500 மெட்ரிக் டன்னுக்கு மேலாகக் கையாளும்பொழுது, அவை பால் மற்றும் பால் உப பொருட்கள் ஆணை 1992-ன்கீழ் பதிவுச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

ஆணையர் அவர்களின் நேரடிக் கட்டுப்பாட்டில், துணை பால் ஆணையர் (கூட்டுறவு), அந்தந்த மாவட்ட ஆட்சியர் மற்றும் 23 சரக துணைப் பதிவாளர் (பால்பதம்) ஆகியோருக்குப் பதிவு பெற்ற பால் பண்ணைகளின் செயல்பாட்டினைக் கண்காணிக்கவும், காலமுறை ஆய்வினை மேற்கொள்ளவும், பால் மற்றும் பால் உப பொருட்கள் ஆணை 1992-ஐ அமல்படுத்தவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தேசிய உற்பத்தியாளர் கழகம் (National Productivity Council) மற்றும் இந்திய ஏற்றுமதிக் கழகம் (Export Council of India) ஆகியனவும் இச்சட்டத்தின்கீழ் சோதனை செய்ய அதிகாரம் பெற்றிருக்கின்றன.

பால் உற்பத்தியைப் பெருக்குவதோடு, நுகர்வோருக்குத் தரமான பாலை விநியோகம் செய்யும் நோக்குடன் மத்திய அரசின் மானியத்தில் ஆரம்பிக்கப்பட்ட தரக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைக்கூடம், பால் வளத் துறை ஆணையர் அவர்களின் நேரடிக் கட்டுப்பாட்டில் சென்னை மாதவரம் பால்பண்ணையில் இயங்கி வருகிறது. தரமான பாலை விற்பனை செய்வதனை உறுதி செய்யும் நோக்குடன் 1,210 பால் மற்றும் பால் உப பொருட்கள் மாதிரிகள் இங்கு பரிசோதிக்கப்பட்டுள்ளன. இவ்வாணையின்கீழ் நாளொன்றுக்கு 72.60 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட 37 பால் பண்ணைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.



**பால் வளத் துறையின் குறிக்கோள்கள்**

(1) பால் உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்படும் பாலுக்கு ஆதாயமான விலை கிடைக்க உத்தரவாதம் அளித்தல்.

(2) பால் பண்ணை செயல்பாடுகளைக் கண்காணித்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்.

(3) அமைப்புசாரா பால் தொழிலை ஒருங்கிணைந்த அமைப்புச்சார்ந்த தொழிலாகப் படிப்படியாக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

(4) நுகர்வோருக்குப் பதப்படுத்தப்பட்ட, உணவுப் பாதுகாப்பு வழிமுறைகளின்படி தயாரிக்கப்பட்ட தரமான தூய பால் நியாயமான விலையில் கிடைக்கச் செய்தல்.

(5) நுகர்வோருக்கு நிர்ணயிக்கப்பட்ட தரக் குறியீட்டுடன் சரியான அளவுகளில் பால் மற்றும் பால் பொருட்கள் கிடைக்கச் செய்தல்.

(6) பால் பண்ணை தொழிலில் நம்பிக்கை ஏற்படும் வகையில் வெளிப்படையான நிருவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

**குறிக்கோள்களை நிறைவேற்ற மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**

(1) கறவை மாடுகளின் மேம்பாடு, பால் உற்பத்தித் திறனை உயர்த்துதல் மற்றும் பால் உற்பத்தியை அதிகரித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளுதல்.

(2) பால் உற்பத்தியாளர்களுக்குச் சொந்தமான கறவை மாடுகளுக்கு மருத்துவ சிகிச்சை, தீவனம் வழங்குதல், காப்பீடு செய்தல் போன்ற மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

(3) அதிக தரமான பசும்புல் விளைவித்து பால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலையில் வழங்குதல்.

(4) நவீன கால்நடை பராமரிப்பு மற்றும் நடைமுறைப் பயிற்சியினை கல்விச் சுற்றுலா மூலம் விவசாயிகளுக்கு அளித்து ஊக்குவித்தல்.

(5) தூய பால் உற்பத்தித் திட்டத்தைச் செயல்படுத்துதல் மற்றும் பாலின் தரத்தை உயர்த்தும்பொருட்டு மொத்த பால் குளிர்விப்பான்கள் எண்ணிக்கையை அதிகரித்தல்.

[2008 ஏப்ரல் 30

(6) துருவுறா எஃகினாலான பால் கேன்கள், பால் சேகரிக்கும் உபகரணங்கள், செயற்கைமுறைக் கருவூட்டல் உபகரணங்கள், பால் பரிசோதனைக் கருவிகள் ஆகியவற்றை வழங்க நடவடிக்கை எடுத்தல்.

(7) சங்கப் பணியாளர்களுக்குக் கூட்டுறவுப் பணியமைப்பு, முதலுதவி மற்றும் செயற்கைமுறைக் கருவூட்டல் போன்ற பயிற்சிகளை அளித்தல்.

(8) பால் உற்பத்தியாளர்களுக்கு, சரியான நேரத்திற்குப் பால் பணம் பட்டுவாடா செய்வதை உறுதிப்படுத்துதல்.

(9) குளிர்வூட்டப்பட்ட பாலை, பால் பதப்படுத்தும் பண்ணைக்குப் பால் லாரிகள் மூலம் கொண்டு செல்லுதல்.

(10) கூட்டுறவுப் பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, தூய பால் மற்றும் பால் உப பொருட்களைத் தயாரித்து நுகர்வோருக்கு வழங்குதல்.

(11) 'உணவுப் பாதுகாப்பு' கொள்கையை அமைப்புசார்ந்த பால் பண்ணைகளில் செயல்படுத்துதல்.

(12) உபரியாக உள்ள பாலை, பால்பவுடர், வெண்ணெய் மற்றும் நெய் ஆகிய பால் உப பொருட்களாக மாற்றுதல்.

(13) மதிப்பு கூட்டப்பட்ட பால் உப பொருட்களாகிய ஐஸ்கிரீம், குலோப்ஜாமூன், பன்னீர், பாலாடைக்கட்டி மற்றும் இதர பால் உப பொருட்களைத் தயாரித்தல்.

(14) பால் உற்பத்தியைப் பெருக்குவதுடன், மத்திய / மாநில அரசின் நேரடியான மற்றும் பங்களிப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

(15) நலிவடைந்த பால் கூட்டுறவு ஒன்றியங்களுக்கு, நிதி உதவி அளித்துப் புனரமைத்தல்.

(16) பால் வளத் துறை, இணையம், மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் சங்கங்களுக்குத் தேவையான மனித வளத்தினைக் கண்டறிந்து காலிப் பணியிடங்களை நிரப்புதல்.

(17) பால் வளத் துறையின் அனைத்துப் பிரிவுகளையும் மின் ஆட்சி மயமாக்கி நிர்வாகத்தைத் திறம்படச் செய்தல்.



2008 ஏப்ரல் 30]

(18) சீரிய முறையில் பால் மற்றும் பால் உப பொருட்கள் ஆணை 1992-ஐ அமல்படுத்தி தரமான பால் மற்றும் பால் உப பொருட்கள் நுகர்வோர்களுக்குக் கிடைக்கச் செய்தல்.

(19) தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ஐச் சிறப்பாக அமல்படுத்துவதன்மூலம் விழிப்புணர்வை அதிகரித்தல்.

**குறிப்பிடத்தக்க சாதனைகள் (2007-2008)**

அ. பால் உற்பத்தியாளர்களின் நலன் கருதி பால் கூட்டுறவுச் சங்கங்களின் உள்கட்டமைப்பு வளர்ச்சிக்காக ரூ.418 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது. பகுதி-2 திட்டத்தின்கீழ், பால் வளத் துறைக்கு வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இதுவே அதிகபட்ச தொகையாகும்.

ஆ. மொத்தம் உள்ள 7,833 சங்கங்களில் உத்தேச நிதிநிலை அறிக்கையின்படி 7,145 சங்கங்கள் இலாபத்தில் இயங்கி வருகின்றன.

இ. 1500 பால் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த 3,20,741 பால் உற்பத்தியாளர்களுக்கு, ஊக்கத் தொகை, போனஸ், கூடுதல் கொள்முதல் விலைமூலம் ரூ.524 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

ஈ. புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ஈரோடு மாவட்ட பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பால் பணத்தில் பிடித்தம் செய்யப்பட்டு வந்த, லிட்டருக்கு 50 பைசா பால் பணம், பால் உற்பத்தியாளர்களின் நலன் கருதி 10-03-2008 முதல் நிறுத்தப்பட்டது.

உ. 364 புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இவற்றில் 129 மகளிர் சங்கங்கள் அடங்கும்.

ஊ. 178 செயலிழந்த சங்கங்கள் மீண்டும் புத்துயிர் ஊட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளன.

எ. பால் கூட்டுறவுச் சங்கங்களின் வரலாற்றிலேயே 21-06-2007 அன்று அதிகபட்சமாக நாளொன்றுக்கு 29.40 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்து சாதனை படைக்கப்பட்டுள்ளது.

**பால் உற்பத்தியாளர் நலன்**

(1) ஒரே மாதிரியான பால் கொள்முதல் விலை.

(2) தரமான மாட்டுத் தீவனங்களை உற்பத்தியாளர்களுக்கு வழங்குதல்.

(3) பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளுக்கு, கால்நடைப் பராமரிப்புத் துறையின் உதவியுடன் நோய் தடுப்பு ஊசி போடுதல்.

(4) கலப்பினக் கறவை மாடுகளை உருவாக்குதல்.

(5) கால்நடை பராமரிப்புத் துறை உதவியுடன் 'கால்நடை பாதுகாப்பு' மற்றும் சிறப்பு மலடு நீக்கும் முகாம் திட்டங்களை முறையாகச் செயல்படுத்துதல்.

(6) பால் உற்பத்தியாளர்களின், கலப்பினக் கறவை மாடுகளுக்குக் காப்பீடு வசதி செய்தல். இத்திட்டம், கால்நடை மேம்பாட்டுக் கழகம் மூலம் வேலூர், கோயம்புத்தூர், சேலம், நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

(7) தகுதி வாய்ந்த பால் உற்பத்தியாளர்களை, அவர்களுக்குரிய நலன்களைப் பெறுவதற்காக வேளாண்மைத் துறை தொழிலாளர் நல வாரியத்தில் உறுப்பினர்களாகச் சேர்த்தல்.

(8) 30 கிலோ கால்நடை தீவன மூட்டைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

(9) பாலின் தரம் மற்றும் எடையைக் கணக்கிடுவதற்குக் கணினியுடன் கூடிய பால் எடை/தரம் பார்க்கும் கருவி, சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**பால் கூட்டுறவுத் துறை மற்றும் கூட்டுறவுப் பணியாளர்கள் நலன்**

(1) பால் உற்பத்தி மற்றும் பால் வள மேம்பாட்டுத் துறையில் காலியாக இருந்த 39 பணியிடங்கள் மற்றும் 170 இணைய மற்றும் ஒன்றியப் பணியாளர்கள் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

(2) மாவட்ட ஆட்சியரால் பணியமர்த்தப்பட்ட 7 தட்டச்சர்கள், தற்காலிக முறையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

(3) கருணை அடிப்படையில், பணிக்காலத்தில் மரணமடைந்த, பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குப் பால் வளத் துறையில் 2 பணியிடங்களும், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் 74 பணியிடங்களும் அளிக்கப்பட்டுள்ளது.



(4) மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில், பணியாற்றிய 202 தற்காலிகப் பணியாளர்களின் பணி வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது.

(5) இணையம் மற்றும் ஒன்றியப் பணியாளர்களுக்கு, 8.33 சதவிகிதம் போனஸாகவும், 11.67 சதவிகிதம் கருணைத் தொகையாகவும் ஆக மொத்தம் ரூ.597.87 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் 7279 பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

(6) பால் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு, தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகை பரிசாக ரூ.100.45 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் 31,729 பணியாளர்கள் பயன்பெற்றுள்ளனர்.

(7) கூட்டுறவு அமைப்புகளின் பணியாளர்களுக்கு உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகையாக ரூ. 317.79 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

(8) இணையத்திற்கு, "கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்குரிய சிறப்புத் துணை விதிகள்" பதிவு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

(9) மாவட்ட ஒன்றியப் பணியாளர்களுக்கான பணி விதிகளை உருவாக்குவதற்கு, அரசு ஒரு குழுவினை அமைத்துள்ளது.

**நுகர்வோர் நலன்**

இணையம், நுகர்வோர்களின் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கி வருகிறது. தரமான தூய பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. குறித்த நேரத்தில் பால் விநியோகம் செய்யப்படுகிறது. சென்னையிலுள்ள நந்தனத்தில் 24 மணி நேர நுகர்வோர் சேவை மையம் செயல்பட்டு வருகிறது. புகார்களின் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கட்டணமில்லாத் தொலைபேசி எண்: 1800 425 3300 மூலம் நுகர்வோர் தொடர்பு கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நுகர்வோர்களுக்குத் தரமான பால் விநியோகம் செய்யும்பொருட்டு தினமும் 16 மணி நேரம், பாலகங்கள் செயல்படுகின்றன. நுகர்வோர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் 2008 பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் மாதந்திர பால் அட்டை வழங்குவதற்காகச் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

**பால் வளத் துறையின் வளர்ச்சி**

**மாவட்ட பால் கூட்டுறவு ஒன்றியங்கள்**

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் 2,380 செயற்கைமுறைக் கருவூட்டல் மையங்களும், இதனைச் சார்ந்த 5,053 சங்கங்களில் சுமார் 8 இலட்சம் கறவை மாடுகளும் உள்ளன. 2,182 நடமாடும் செயற்கைமுறைக் கருவூட்டல் நிலையங்கள் செயல்படுகின்றன. 13.70 இலட்சம் செயற்கைமுறைக் கருவூட்டல் செய்யப்பட்டு 4.66 இலட்சம் கலப்பினக் கன்றுகள் பிறந்துள்ளன.

4,729 சங்கங்களுக்குக் கால்நடை மருத்துவர்களால் கால்நடை பராமரிப்பு வசதி ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது. 3,036 சங்கங்களில் கால்நடை முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

2007-2008-ல் 5.79 இலட்சம் கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. மேலும் அவசரகால சிகிச்சைப் பிரிவுகளும் செயல்பட்டு வருகின்றன. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களின்கீழ் 57 முழுநேர கால்நடை சிகிச்சைப் பிரிவுகளும், 55 அவசரகால சிகிச்சைப் பிரிவுகளும் இயங்கி வருகின்றன.

**அட்டவணை-I**

**முக்கிய தகவல்கள் (31-03-2008)**



| வ.எண் | விபரம் | |
|---|---|---|
| 1 | செயல்படும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் | 7833 |
| 2 | புதிதாக பதிவுசெய்யப்பட்ட சங்கங்கள் | 364 |
| 3 | தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த உறுப்பினர்கள் | 22.10 இலட்சம் |
| 4 | பால் வழங்கும் உறுப்பினர்கள் | 4.08 இலட்சம் |
| 5 | சங்கங்களில் பால் கொள்முதல் (நாளொன்றுக்கு) | 26.27 இலட்சம் லிட்டர் |
| 6 | மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் எண்ணிக்கை | 17 |
| 7 | மாநில அளவிலான இணையம் | 1 |
| 8 | பதிவு செய்யப்பட்ட தனியார் பால் பண்ணைகளின் எண்ணிக்கை | 20 |
| 9 | ஒன்றியங்களில் பால் கொள்முதல் (நாளொன்றுக்கு) | 21.64 இலட்சம் லிட்டர் |
| 10 | பதிவு செய்யப்பட்ட தனியார் பால் பண்ணைகளின் பால் கொள்முதல் (நாளொன்றுக்கு) | 18.60 இலட்சம் லிட்டர் |
| 11 | பதிவு செய்யப்பட்ட பால் பண்ணைகளின் மொத்த பால் கொள்முதல் (நாளொன்றுக்கு) | 40.24 இலட்சம் லிட்டர் |
| 12 | சென்னை மாநகரில் பால் விற்பனை (நாளொன்றுக்கு) | 10.36 இலட்சம் லிட்டர் |
| 13 | மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் பால் விற்பனை (நாளொன்றுக்கு) | 9.85 இலட்சம் லிட்டர் |
| 14 | ஒன்றியங்களில் பால் பதப்படுத்தும் பால் பண்ணைகளின் எண்ணிக்கை | 15 |
| 15 | இணையத்தின் பால் பண்ணைகள் எண்ணிக்கை | 4 |
| 16 | மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் பால் பண்ணைகள் கையாளும் திறன் (நாளொன்றுக்கு) | 19.42 இலட்சம் லிட்டர் |

| | | |
|---|---|---|
| 17 | இணையத்திலுள்ள பால்பண்ணைகள் கையாளும் திறன் (நாளொன்றுக்கு) | 10.00 இலட்சம் லிட்டர் |
| 18 | பதிவு செய்யப்பட்ட தனியார் பால் பண்ணைகளின் கையாளும் திறன் (நாளொன்றுக்கு) | 27.95 இலட்சம் லிட்டர் |
| 19 | செயல்படும் குளிரூட்டும் நிலையங்களின் எண்ணிக்கை | 36 |
| 20 | குளிரூட்டும் நிலையங்களின் கையாளும் திறன் (நாளொன்றுக்கு) | 13.55 இலட்சம் லிட்டர் |
| 21 | செயல்படும் மொத்த பால் குளிர்விப்பான்கள் | 42 |
| 22 | மொத்த பால் குளிர்விப்பான்களின் கையாளும் திறன் (நாளொன்றுக்கு) | 1.68 இலட்சம் லிட்டர் |
| 23 | பால் கொள்முதல் வழித்தடங்கள் | 487 |
| 24 | ஒன்றியங்களில் பால் விநியோக வழித்தடங்கள் | 230 |
| 25 | சென்னை மாநகர பால் விநியோக வழித்தடங்கள் | 81 |
| 26 | பால் பவுடர் பண்ணைகள் | 4 |
| 27 | பால்பவுடர் உற்பத்தித்திறன் (நாளொன்றுக்கு) | 70 மெட்ரிக் டன் |
| 28 | சென்னையில் உள்ள தானியங்கிப் பால் விநியோக நிலையங்களின் எண்ணிக்கை | 218 |

**பால் கொள்முதல்**

மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் 2006-07 மற்றும் 2007-08 ஆண்டுகளில் சராசரி பால் கொள்முதல் விவரம் கீழே தரப்பட்டுள்ளது:-





**அட்டவணை-II**

**(நாளொன்றுக்கு ஆயிரம் லிட்டரில்)**

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | 2006-07 | 2007-08 |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம்-திருவள்ளூர் | 54 | 48 |
| 2 | விழுப்புரம் | 167 | 165 |
| 3 | வேலூர் | 298 | 276 |
| 4 | தருமபுரி | 146 | 139 |
| 5 | சேலம் | 397 | 407 |
| 6 | ஈரோடு | 216 | 193 |
| 7 | கோயம்புத்தூர் | 219 | 208 |
| 8 | நீலகிரி | 20 | 22 |
| 9 | மதுரை | 208 | 227 |
| 10 | திண்டுக்கல் | 41 | 40 |
| 11 | திருச்சி | 298 | 286 |
| 12 | தஞ்சாவூர் | 28 | 34 |
| 13 | புதுக்கோட்டை | 11 | 11 |
| 14 | சிவகங்கை | 28 | 30 |
| 15 | விருதுநகர் | 12 | 11 |
| 16 | திருநெல்வேலி | 61 | 61 |
| 17 | கன்னியாகுமரி | 6 | 6 |
| | **மொத்தம்** | **2210** | **2164** |

2006-2007 ஆம் ஆண்டில் 7,662 கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சராசரியாக நாளொன்றுக்கு 26.10 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது. 2007-2008 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 7,833 ஆக உயர்ந்து பால் உற்பத்தி சராசரியாக நாளொன்றுக்கு 26.27 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது.

2007-2008 ஆம் ஆண்டில் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்ட பால் நாளொன்றுக்கு 21.64 இலட்சம் லிட்டர் ஆகும்.

**பால் கொள்முதல் விலை**

பசும்பாலின் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ. 2/-ம் எருமைப் பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.4/-ம் 10-03-2008 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

**மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் சென்னை மாநகர பால் விற்பனை**

மாவட்ட ஒன்றியங்களில் 2006-07 மற்றும் 2007-08 ஆண்டுகளில் சராசரியாக நாளொன்றுக்கு விற்பனை செய்யப்பட்ட பாலின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

**அட்டவணை-III**

**(நாளொன்றுக்கு ஆயிரம் லிட்டரில்)**

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | 2006-07 | 2007-08 |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம்-திருவள்ளூர் | 1 | 1 |
| 2 | விழுப்புரம் | 25 | 31 |
| 3 | வேலூர் | 69 | 75 |
| 4 | தருமபுரி | 18 | 17 |
| 5 | சேலம் | 123 | 144 |
| 6 | ஈரோடு | 90 | 83 |
| 7 | கோயம்புத்தூர் | 182 | 176 |
| 8 | நீலகிரி | 21 | 21 |
| 9 | மதுரை | 156 | 185 |
| 10 | திண்டுக்கல் | 22 | 20 |
| 11 | திருச்சி | 103 | 102 |
| 12 | தஞ்சாவூர் | 21 | 22 |
| 13 | புதுக்கோட்டை | 6 | 6 |
| 14 | சிவகங்கை | 27 | 29 |
| 15 | விருதுநகர் | 6 | 7 |
| 16 | திருநெல்வேலி | 49 | 49 |
| 17 | கன்னியாகுமரி | 23 | 17 |
| | மொத்தம் | 942 | 985 |
| 18 | சென்னை மாநகரில் பால் விற்பனை | 987 | 1036 |
| | ஆக மொத்தம் | 1929 | 2021 |



**சென்னை மாநகர பால் விற்பனை**

24 வட்டார அலுவலகங்கள், 516 பால் டிப்போக்கள், 364 பால் விற்பனை மையங்கள், 35 மொத்த பால் விற்பனையாளர்கள், 48 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சுமார் 3,000 சில்லறை விற்பனையாளர்கள்மூலமாகப் பால் பாக்கெட்டுகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

**2007-2008 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிற நடவடிக்கைகள்**

**தரம் உறுதி செய்தல்**

சென்னை மாநகரத்தில் இயங்கும் மூன்று பால் பண்ணைகள், சேலம் மற்றும் ஈரோடு பால் பண்ணைகள் ஐ.எஸ்.ஓ. மற்றும் உணவுப் பாதுகாப்புக் கொள்கை தரச் சான்றிதழ் (HACCP) பெற்றுள்ளன. நீலகிரி பால் பண்ணைக்கு, ஐ.எஸ்.ஓ. தரச் சான்றிதழ், 27-03-2007-ல் வழங்கப்பட்டுள்ளது. உணவுப் பாதுகாப்புக் கொள்கை தரச் சான்றிதழ் (HACCP) ஆவின் விற்பனை செய்யும் பால் மற்றும் பால் உப பொருட்களின் தரத்தினை உறுதி செய்கிறது. வெப்பம் கடத்தா வாகனங்கள்மூலம் (Insulated puffed vehicle) பால் பண்ணையிலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு நுகர்வோரைச் சென்றடையும் வரை பாலின் தரம் உறுதி செய்யப்படுகின்றது.

**கால்நடை தீவன உற்பத்தி**

நடப்பு ஆண்டில் 12,013 மெட்ரிக் டன்கள் கால்நடை தீவனம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

## உறைவிந்துக் குச்சிகள் உற்பத்தி

உதகையிலுள்ள ஜெர்சி மைய பொலிகாளைப் பண்ணை, ஐ.எஸ்.ஓ. தரச் சான்றிதழ் பெற்றுள்ளது. இந்திய அளவில் சிறப்பாகச் செயல்படும் பண்ணையாக மத்திய அரசின் மைய செயல்பாட்டுப் பிரிவினால் தேர்வு செய்யப்பட்டு 'A' தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் 20.07 இலட்சம் உறைவிந்துக் குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும், அரசு 46.33 ஏக்கர் நிலத்தை கால்நடைப் பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறைக்கு இலவசமாக ஒதுக்கியுள்ளது. பண்ணை நிலத்தைத் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்திற்கு இலவசமாக வழங்கியதோடு குத்தகைத் தொகை மற்றும் நிலத்தின் விலையாக இணையம் தர வேண்டிய ரூ. 7.29 கோடியையும் தள்ளுபடி செய்து அரசு ஆணை (G.O.Ms. No. 33, Revenue LD5 (1) Department, dated 23-01-2008) வழங்கப்பட்டுள்ளது.

## மாநில மற்றும் மைய அரசு திட்டங்கள்

### மத்திய அரசுத் திட்டங்கள்

### மகளிர் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம்

மத்திய அரசின் பெண்கள் மேம்பாட்டுத் துறையின்மூலம் கிராமப்புற நலிவடைந்த தாழ்த்தப்பட்ட / பிற்படுத்தப்பட்ட பெண்களின் முன்னேற்றத்திற்காக மகளிர் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசால் ரூ. 649.464 இலட்சத்திற்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டு இதில் 90% பங்கு ரூ.584.518 இலட்சம் மத்திய அரசு மானியமாகவும் மீதமுள்ள 10% பங்கு ரூ.64.946 இலட்சம் நடைமுறைப்படுத்தும் நிறுவனத்தின் பங்களிப்பாகவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம், தமிழகத்தில் 14 வருவாய் மாவட்டங்களை உள்ளடக்கிய சேலம், ஈரோடு, கிருஷ்ணகிரி, வேலூர், விழுப்புரம், கோயம்புத்தூர் மற்றும் திருச்சி ஆகிய 7 மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களில் செயல்படுத்தப்படுகிறது.

மத்திய அரசு இதுவரை ரூ. 425.838 இலட்சம் அரசு மானியமாக முதல் மற்றும் இரண்டாம் தவணையாக விடுவிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு உள்ளது. மீதமுள்ள ரூ.158.680 அரசு மானியம் மூன்றாம் தவணையாக எதிர்பார்க்கப்படுகிறது.



நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 145 மகளிர் கூட்டுறவுச் சங்கங்களில் 10,150 மகளிர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, நாளொன்றுக்குச் சராசரியாக 22,439 லிட்டர் பால் சேகரிக்கப்படுகிறது. நாளொன்றுக்குப் பயனாளி ஒருவருக்கு ரூ. 61/- வருமானமாகக் கிடைக்கிறது.

## தீவிர பால் பெருக்குத் திட்டம்

மத்திய அரசு, தீவிர பால்பெருக்குத் திட்டத்தின்கீழ் சிவகங்கை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு ரூ. 312.15 இலட்சத்தை 100 சதவிகித மானியமாக நிதியுதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இதனால் சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள் பயன்பெறும். நடப்பு ஆண்டில் மத்திய அரசு மானியம் ரூ. 102.14 இலட்சம் பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது. சங்கங்களில் பால் உற்பத்தியை அதிகரித்தல், பால் விற்பனையை அதிகரித்தல், பாலைப் பதப்படுத்துதல் மற்றும் பால் சந்தையிடலுக்கான உள்கட்டமைப்பு வசதிகளை அதிகரித்தல், இடுபொருள் வசதிகளை ஏற்படுத்துதல், மனிதவள மேம்பாடு வசதிகளை உருவாக்குதல், களப்பணிகளை விரிவுபடுத்தல், மனிதவளத்தை மேம்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் குறிக்கோள் ஆகும்.

நடப்பு ஆண்டில், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் இத்திட்டத்தைச் செயல்படுத்த முறையே ரூ. 554.06 இலட்சம் மற்றும் ரூ. 291.77 இலட்சத்திற்கு, மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. முதல் தவணையாக முறையே ரூ. 204.53 இலட்சமும் ரூ. 49.83 இலட்சமும் முறையே திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஒன்றியங்களில் பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மைய அரசு, இத்திட்டத்தின்கீழ் தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள் பயன்பெறும் வகையில் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு ரூ.867.624 இலட்சத்திற்கு மத்திய அரசு 11-10-2007 அன்று ஒப்புதல் அளித்து முதல் தவணையாக ரூ. 210.284 இலட்சத்தில் ரூ. 125.00 இலட்சம் விடுவிக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டு உள்ளது.

இத்திட்டத்தின் வாயிலாக, 8 வருவாய் மாவட்டங்களிலுள்ள 849 சங்கங்களைச் சார்ந்த 2.24 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறுவர். மேற்படி ஒன்றியங்களில் நாளொன்றுக்குச் சராசரி பால் உற்பத்தி 1.31 இலட்சம் லிட்டர் மற்றும் பால் விற்பனை

1.17 இலட்சம் லிட்டர். தென் மாவட்டங்களில் 71 புதிய சங்கங்கள் பதிவு செய்யப்பட்டும், 54 செயலிழந்த சங்கங்கள் புத்துயிரூட்டப்பட்டும் உள்ளன. 2,518 கறவை மாட்டுக் கடன்கள் வழங்கப்பட்டு பால் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**தரமான தூய பால் உற்பத்திக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்**

கிராமப்புறங்களிலிருந்து பெறப்படும் பால் தூய்மையானதாகவும், தரமானதாகவும் உள்ளதா என்பதை உறுதி செய்யும்பொருட்டு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு தரமான தூய பால் உற்பத்திக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குதல் என்னும் திட்டத்தை உருவாக்கி உள்ளது. இத்திட்டத்திற்கு மத்திய அரசு 100% மானியம் வழங்குகிறது. இத்திட்டம் இரண்டாண்டுகள் மற்றும் அதற்கு மேலும் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தின் குறிக்கோள், விவசாயிகளுக்குத் தூய பால் உற்பத்தி குறித்து பயிற்சி அளித்தல், பால் உற்பத்தியாளர்களுக்குத் தேவையான எவர்சில்வர் பாத்திரங்கள், நுண்மத் தடை திரவங்கள் (Antiseptic) வழங்குதல், ஒன்றியங்கள் மற்றும் குளிரூட்டும் நிலையங்களில் உள்ள பரிசோதனைக் கூடங்களை மேம்படுத்துதல், பாலின் முதன்மைத் தரத்தை அதிகரிக்கத் தேவைப்படும் மொத்த பால் குளிர்விப்பான்களைச் சங்கத்தில் நிறுவுதல் ஆகியவை ஆகும்.

இத்திட்டத்தின் வாயிலாக, விவசாயிகளுக்குப் பயிற்சி, எவர்சில்வர் பாத்திரங்கள் மற்றும் நுண்மத்தடை திரவம் வழங்குதல், பரிசோதனைக் கூடத்தை மேம்படுத்துதல், பால் குளிர்விப்பான்களை நிறுவுதல் திட்டமிடுதல் மற்றும் கண்காணித்தல் ஆகிய பணிகளுக்கு நிதி பயன்படுத்தப்படுகின்றது. மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவுவதற்கு மட்டும் மத்திய அரசு 75% மானியம் வழங்குகின்றது. மீதமுள்ள 25% செலவினத்தைப் பயனாளி ஒன்றியங்கள் ஏற்றுக்கொள்ளும்.

இத்திட்டம் வேலூர், விழுப்புரம், திருச்சி, தருமபுரி சேலம், ஈரோடு, நீலகிரி, காஞ்சிபுரம்-திருவள்ளூர், மதுரை, நீலகிரி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் ரூ. 1351.37 இலட்சம் செலவில் செயல்படுத்த, மைய அரசு அனுமதி அளித்துள்ளது.



இத்திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கீட்டில் மத்திய அரசின் பங்கு ரூ. 1102.45 இலட்சம் மற்றும் ஒன்றியங்களின் பங்கு ரூ.248.93 இலட்சம் ஆகும்.

இத்திட்டத்தின்கீழ் முதல் வருட நிதி உதவியாக, ரூ.445.15 இலட்சம் பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது. இரண்டாம் ஆண்டு நிதியுதவி ரூ.507.80 இலட்சம் மற்றும் முதல் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் உள்ள நிலுவைத் தொகை, ரூ.24.19 இலட்சம் ஆகியவை மத்திய அரசிடம் இருந்து எதிர்நோக்கப்படுகிறது.

**களவெளி ஜெர்சி கலப்பினப் பசு செயல்திறன் பதிவுத் திட்டம்**

களவெளி ஜெர்சி கலப்பினப் பசு செயல்திறன் திட்டம், மத்திய அரசின் நிதி உதவியுடன், தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின்மூலமாக இணையத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் முதல்கட்டமாக, வேலூர், சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய ஏழு மாவட்ட ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் பால் உற்பத்தியாளர்களிடையே உள்ள பசுக்களில், உயர்ந்த அளவாக நாளொன்றுக்கு 14 லிட்டருக்கும் அதிகமாகப் பால் கறக்கும் கறவைகளில், நோயற்ற கறவைகளைத் தேர்வு செய்து, உயர்ரகக் காளை விந்தினைக் கொண்டு கருத்தரிக்கச் செய்து, கன்று ஈன்றவுடன், அதன் பால் அளவைக் கணக்கிட்டு, அதிக பால் கறக்கும் கறவைகள் எதிர்வரும் காலங்களில் கலப்பினக் காளைக் கன்றுகள் உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் தாய்ப் பசுக்களாகத் தேர்வு செய்யப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் 810 கறவைகளின் பால் அளவு பதிவு செய்து முடிக்கப்பட்டு உள்ளது. இக்கறவைகளின் மூலம் பிறந்த 62 காளைக் கன்றுகளில் 19 காளைக் கன்றுகள் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின்மூலம் வளர்க்கப்பட்டு வருகின்றன.

**வம்சாவழி சோதனைத் திட்டம்**

வம்சாவழி சோதனைத் திட்டம் , மத்திய அரசின் நிதி உதவியுடன் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின்மூலமாக இணையத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், மரபுத் திறன் மிகுந்த காளைகளைத் தேர்ந்தெடுப்பதற்காக, ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் 20 முதல் 25 கலப்பினப் பொலிகாளைகளின் விந்தைச் சேகரித்து, செயற்கைமுறைக் கருவூட்டல்மூலம் வேலூர்,

சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்ட ஒன்றியங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளைக் கருத்தரிக்கச் செய்து, அக்கறவைகளுக்குப் பிறந்த கிடாரிகளின், முதல் ஈற்று பால் அளவு, கொழுப்பு சத்து, இதர சத்து மற்றும் முதல் கன்று ஈனுகையில் அவற்றின் வயது போன்ற பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த குணநலன்களை ஆராய்ந்து அவற்றின் அடிப்படையில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட கலப்பினக் காளைகளில், அதிக பால் கொடுக்கும் மரபுத் திறனுடைய பொலிகாளைகள் இனப்பெருக்கத்திற்காகத் தேர்வு செய்யப்பட்டு, இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஆறாவது ஜோடியின் கன்று ஈனும் திறன் 2007-2008-ல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**கால்நடை காப்பீட்டுத் திட்டம்**

கால்நடை காப்பீட்டுத் திட்டம் மத்திய அரசின் 50% நிதி உதவியுடன், தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின்மூலமாக, இணையத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், சேலம், நாமக்கல், ஈரோடு மற்றும் வேலூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில், மொத்தம் 77,000 பசு மற்றும் எருமை கறவையினங்களைக் காப்பீடு செய்யத் திட்டமிடப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 72,886 கறவைகள் காப்பீடு செய்யப்பட்டுள்ளன. மொத்த பிரீமியத்தில் 50% மானியமாகவும், மீதமுள்ள 50% உறுப்பினர்களாலும் வழங்கப்படும்.

**புனரமைப்புத் திட்டம்**

**மத்திய மாநில அரசுகளின் கூட்டுத் திட்டம்**

**"கூட்டுறவுகளுக்கு உதவுதல்"**

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மத்திய அரசு "கூட்டுறவுகளுக்கு உதவுதல்" என்னும் திட்டத்தை, நட்டத்தில் இயங்கும் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களின் ஒன்றியங்கள் மற்றும் இணையங்களைச் சீரமைப்பதற்காகவும், மேலும் நட்டத்தைச் சரி செய்து இலாபகரமாகச் செயல்படுத்தவும் உருவாக்கியது.

இத்திட்டத்தின்கீழ், நட்டத்தில் செயல்படும் ஒன்றியங்கள் மற்றும் இணையம் ஆகியவற்றின் நட்டத்தைச் சரி செய்து கொள்வதற்காக, மத்திய மற்றும் மாநில அரசுகள் சரிசமமாக 50% தொகையை மானியமாக வழங்கும்.



ஈரோடு மற்றும் விழுப்புரம் மாவட்டக் கூட்டுறவு பால் ஒன்றியங்களைச் சார்ந்த 3 மாவட்டங்களில் இத்திட்டம் மத்திய, மாநில அரசுகளின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஈரோடு ஒன்றியத்திற்கு ரூ.9 கோடியும், விழுப்புரம் ஒன்றியத்திற்கு ரூ.4 கோடியும் நிதி உதவி அளிக்கப்பட்டது. தற்பொழுது விழுப்புரம், ஈரோடு ஒன்றியங்கள் இலாபத்தில் செயல்பட்டு பால் பணப்பட்டுவாடா நிலுவையைக் குறைத்துள்ளன. ஈரோடு ஒன்றியத்தில் உற்பத்தியாளர்களிடம் பிடிக்கப்பட்டு வந்த 50 பைசா பால் பணம் 10-03-2008 முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

மத்திய / மாநில அரசுகள் கூட்டுறவுகளுக்கு உதவுதல் திட்டத்தின் கீழ், தருமபுரி ஒன்றியத்தைப் புனரமைப்புச் செய்ய ரூ. 970.99 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது. மத்திய அரசின் பங்கு ரூ.350 இலட்சமும், மாநில அரசின் பங்கு ரூ. 350 இலட்சமும் தருமபுரி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை ரூ.700 இலட்சமும் பால் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் வழங்கப்பட்டு பால்பணம் பட்டுவாடா நிலுவைத் தொகையைக் குறைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. 2007-2008 ஆம் ஆண்டிற்குத் தமிழக அரசின் பங்கான ரூ.100 இலட்சம் ஒன்றியத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் பங்கான ரூ.100 இலட்சம் எதிர்பார்க்கப்படுகிறது.

'கூட்டுறவுகளுக்கு உதவுதல்' திட்டத்தின்கீழ் திண்டுக்கல் ஒன்றியத்திற்கு ரூ.180 இலட்சம் வழங்குவதற்கான கருத்துரு, மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

**மாநில அரசுத் திட்டங்கள்**

**சுனாமி அவசர உதவித் திட்டம்**

- 160 பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. பால் கொள்முதல் செய்வதற்கு உறுதுணையாக துருவுறா எஃகினால் செய்யப்பட்ட கேன்கள், பால் சேகரிக்கும் கருவிகள், பால் பரிசோதனைக் கருவிகள், மரச்சாமான்கள், விளம்பரப் பலகை மற்றும் கணக்குப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- நாளொன்றிற்கு 9,230 லிட்டர், பால் சுய உதவிக் குழுக்களால் கொள்முதல் செய்யப்பட்டு கிராமங்கள் / ஒன்றியங்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இதன்மூலம் தினசரி வருவாய் கிடைக்கிறது. ஆசிய வங்கியிடமிருந்து 100 சதவிகித மானியமாக

வழங்கப்பட்ட ரூ.80 இலட்சத்தில் ரூ.31 இலட்சம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் விரைவில் முடிவடையும்.

- 9 மொத்த பால் குளிர்விப்பான்கள், ஆசிய வங்கி நிதியுதவியுடன், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் வளர்ச்சித் துறையின் சுனாமி திட்டம்மூலமாக ரூ.153 இலட்சம் செலவில் நிறுவப்படவுள்ளது.
- பால் விற்பனைப் பயிற்சி பெற்ற 37 சுயு உதவிக் குழுக்களுக்குப் பாலகம் அமைத்து பால் மற்றும் பால் பொருட்களை விற்பனை செய்ய ரூ. 169.39 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. 14 சுய உதவிக் குழுக்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் நிறுவப்பட்டு பால் மற்றும் பால் உப பொருட்கள் விற்பனை நடைபெற்று வருகின்றது. 3 சுய உதவிக் குழு உறுப்பினர்கள்மூலம் பால் விற்பனை செய்யப்படுகிறது. ரூ.108 இலட்சம் பயன்படுத்தப்பட்டு எஞ்சிய தொகை விரைவில் பயன்படுத்தப்பட உள்ளது.
- ஈரோட்டிலிருக்கும் தேசிய பால் வள வாரியத்தின் பயிற்சி நிலையத்தில் மாவட்ட அளவில் சுனாமி திட்டத்தை செயல்படுத்தும் 49 அதிகாரிகள் மற்றும் அரசு சாராத அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு ரூ. 1,79 இல்ட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- 641 உறுப்பினர்களுக்கு, விழிப்புணர்வு பயிற்சியும் 381 உறுப்பினர்களுக்குத் தொழில் சார்ந்த பயிற்சியும், ஈரோடு மற்றும் சேலம் ஒன்றியத்தைச் சார்ந்த 377 சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டு, சேலம் மற்றும் ஈரோடு பால் பண்ணைகளில் பால் உப பொருட்கள் தயாரிக்கும் பயிற்சியும் ரூ. 4.31 இலட்ச செலவில் அளிக்கப்பட்டுள்ளது.
- சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 660 உறுப்பினர்களுக்கு, தூய்மையான பால் உற்பத்தி மற்றும் கறவை மாடுகளின் வளர்ப்பு குறித்த பயிற்சியும் 3,936 உறுப்பினர்களுக்கு சங்கங்களில் செயல்படுத்தக்கூடிய சிக்கன நடவடிக்கைக் குறித்தும் ரூ. 5.30 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டது.

**பகுதி-II திட்டம் 2007-2008**

2007-2008 ஆம் ஆண்டில் பகுதி-II திட்டத்தின்கீழ் ரூ. 418 இலட்சம், தமிழக பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் நிதி உதவி அளிக்கப்பட்டது. இதுவே பகுதி-II திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அதிகபட்ச நிதியாகும். இதில் மாநில அரசின் பங்கு ரூ.218 இலட்சம்.





மீதமுள்ள ரூ.200 இலட்சத்தைப் பயனாளி ஒன்றியங்கள்/சங்கங்கள் ஏற்கும்.

(அ) ரூ. 200 இலட்சம் செலவில் 5,000 துருவுறா எஃகிலான கேன்கள், கேன் ஒன்று ரூ. 4000 வீதம் கொள்முதல் செய்து 1,000 பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கு வழங்கப்படும். இதில் ரூ.100 இலட்சத்தை, அரசு மானியமாக வழங்கியுள்ளது.

(ஆ) துருவுறா எஃகிலான பால் சேகரிக்கும் தட்டு, புனல், வடிகட்டி, அளவுகள், மாதிரி பாட்டில்கள் ஆகியவை அடங்கிய பெட்டி ஒன்று ரூ. 6000 செலவில் 50 பெட்டிகள் பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதன் மொத்த விலை ரூ.3.00 இலட்சம் ஆகும்.

(இ) 5000 லிட்டர் கொள்ளளவுள்ள 10 பால் குளிர்விப்பான்கள் சங்கங்களில் நிறுவப்படும். 10 பால் குளிர்விப்பான் விலை ரூ. 200 இலட்சம் ஆகும். இதில் ரூ. 100 இலட்சத்தை அரசு, மானியமாக வழங்கியுள்ளது.

(ஈ) 10 கணினியுடன் கூடிய பால் எடைபோடும் கருவி ஒன்று ரூ. 1.50 இலட்ச செலவில் கொள்முதல் செய்யப்பட்டு, 10 சங்கங்களில் நிறுவப்படவுள்ளது. மொத்தச் செலவு ரூ.15 இலட்சத்தையும் அரசு மானியமாக வழங்கியுள்ளது.

**திருவண்ணாமலை பால் பவுடர் தொழிற்சாலை**

நாளொன்றிற்கு 2 இலட்சம் லிட்டர் பாலைப் பதப்படுத்தும் பால் பண்ணை மற்றும் 20 மெட்ரிக் டன் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலையைத் திருவண்ணாமலையில், நபார்டு வங்கி கடன் உதவியுடன் நிறுவ, அரசு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்தின் மதிப்பு ரூ.2931 இலட்சங்கள் ஆகும். இதில் மாநில அரசின் பங்கு ரூ.146.57 இலட்சம். எஞ்சிய தொகையை நபார்டு வங்கி கடனாக அளிக்கிறது. நடப்பு ஆண்டில் திட்ட மதிப்பீட்டுத் தொகையில் இதுவரை ரூ.1076.52 இலட்சம் அரசு வழங்கியுள்ளது.

**தொலைநோக்கு திட்டம் - 2008-2009**

**புதிய திட்டம்**

1. **"பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு கிராமப்புற மகளிர் பால் பண்ணை திட்டம்"** தமிழ்நாட்டின் பால் உற்பத்தியை மேலும் பெருக்கவும், விவசாயக் குடும்பங்கள் கூடுதல் பால் உற்பத்தி செய்யும்

வருவாய் பெறும் வகையிலும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 10,000 கலப்பினக் கறவை மாடுகள் வழங்கப்படும். இத் திட்டம் பால் உற்பத்தி செய்யத் தகுந்த 200 கிராமங்களில் 5,000 மகளிர் பயன்பெறும்வகையில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம்மூலமாக வரும் இரண்டு ஆண்டுகளில் ரூ.22 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

**2.** பால் உற்பத்தியாளர்களின் நலனுக்காக **"பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு பால் உற்பத்தியாளர் நல நிதி"** நடப்பு ஆண்டில் உருவாக்கப்படும். இந்த நல நிதிக்காக மாதந்தோறும் ஒவ்வொரு பால் வழங்கும் பால் உற்பத்தியாளரும் ரூ.1/-ம் சம்பந்தப்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் ஒன்றியம் இரண்டும் சேர்ந்து ரூ.1/-ம் வழங்கவேண்டும். இந்த நிதி, பால் வழங்கும் பால் உற்பத்தியாளர் விபத்தில் இறத்தல், ஊனமாதல் போன்ற காரணங்களால் பாதிப்புக்குள்ளாகி பால் வழங்குவதில் தடை ஏற்பட்டால், அவர் குடும்பத்திற்கு உதவித் தொகை வழங்கவும், பால் உற்பத்தியாளரின் பெண் குழந்தைகளுக்குத் திருமணச் செலவுகள் மற்றும் குழந்தைகளின் படிப்பு செலவுகள் போன்றவற்றிற்காகவும் பயன்படுத்தப்படும்.

**புதிய சங்கங்கள் உருவாக்குதல் / செயலிழந்த சங்கங்களைச் செயல்படுத்துதல்**

2008-2009 ஆம் அண்டில் 250 புதிய சங்கங்கள் பதிவு செய்யவும் 100 செயலிழந்த சங்கங்களைப் புத்துயிரூட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பால் கொள்முதல்**

2008-2009 ஆம் ஆண்டில், சங்கங்களிலிருந்து நாளொன்றிற்கு 28 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**பால் விற்பனை**

சென்னை மாநகரில் 2008-2009 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 10.30 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யவும், மாவட்ட ஒன்றியங்களில் நாளொன்றுக்கு 10.00 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**பால் பதப்படுத்தும் திறனை அதிகரித்தல்**

2008-2009 ஆம் ஆண்டில் அதிகப்படியான பால் பதப்படுத்துதல், பால் பைகளில் அடைத்தல் ஆகிய பணிகளுக்குத் தேவையான





உள்கட்டமைப்பு வசதிகள் அந்தந்த மாவட்ட ஒன்றியங்களில் உள்ள நிதி ஆதாரத்தைக் கொண்டு ரூ.23.64 இலட்ச மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படவுள்ளது.

**மொத்த பால் குளிர்விப்பான்களை நிறுவுதல்**

2008-2009 ஆம் ஆண்டில் 131 மொத்த பால் குளிர்விப்பான்கள் அமைக்கப்படவுள்ளன.

**பால் உற்பத்தியாளர்களுக்குப் பயிற்சி**

'தூய பால் உற்பத்தி' திட்டத்தின்கீழ் ரூ.37 இலட்சம் செலவில் 29,600 பால் உற்பத்தியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். மேலும் ரூ.30 இலட்சம் செலவில் 8,000 பால் உற்பத்தியாளர்களுக்குப் பால் கறவை மேலாண்மை செயல்பாடுகள் குறித்தும் பயிற்சி அளிக்கப்படும்.

**கால்நடை நலத் திட்டம்**

பால் உற்பத்தியாளர்களிடம் நிருவாக செலவினமாகப் பிடிக்கப்படும் 10 பைசாவில், 2½ பைசா கால்நடை மருந்து வாங்க பயன்படுத்தப்பட்டு, உற்பத்தியாளர்களின் கால்நடைகளின் மருத்துவச் செலவிற்கும் மற்றும் 100 நடமாடும் கால்நடை அமைப்புகளை உருவாக்கவும் பயன்படுத்தப்படும்.

**தொழில்நுட்பப் பயிற்சி**

இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களில் பணிபுரியும் தொழில்நுட்பப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்க மாதவரத்தில் ஒரு தொழில்நுட்பப் பயிற்சி மையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**பகுதி-II திட்டம் 2008-2009**

பகுதி - 2 திட்டத்திற்கான கீழே குறிப்பிட்டுள்ள பணிகள் ரூ. 110.85 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட உள்ளன. இதில் ரூ. 22.00 இலட்சம் பயனாளிகள் பங்கு ஆகும்.

(அ) 500 சங்கங்களுக்கு, 2000 துருவுறா எஃகிலான கேன்கள் ரூ. 2200 வீதம் ரூ.44 இலட்சம் செலவில் வழங்கப்படவுள்ளன. இதில் ரூ. 22.00 இலட்சம் அரசு மானியமாகும். மீதி ரூ. 22.00 இலட்சம் பயனாளிகள் பங்காகும்.

(ஆ) 150 சங்கங்களுக்கு, ரூ. 6000 மதிப்புள்ள பால் சேகரிக்கும் உபகரணங்கள் ரூ. 9.00 இலட்ச மதிப்பீட்டில் வழங்கப்படவுள்ளன. முழுத் தொகையும் அரசு மானியமாகும்.

(இ) ரூ. 60,000 மதிப்பில் 3 கோன் ஐஸ்கிரீம் இயந்திரங்களும், ரூ. 25000 மதிப்பில் 3 பால்கோவா தயாரிக்கும் இயந்திரங்களும், ரூ. 50000 மதிப்பில் 2 பன்னீர் தயாரிக்கும் இயந்திரங்களும், சங்கங்களுக்கு வழங்கப்பட உள்ளன. இதன் மொத்த மதிப்பீடான ரூ.3.50 இலட்சத்தை அரசு, மானியமாக வழங்கும்.

(ஈ) ரூ. 3.25 இலட்சம் மதிப்பீட்டில், 5 நடமாடும் கறவை இயந்திரம் சங்கங்களுக்கு வழங்கப்பட உள்ளன. இதில் ஒரு பால் கறவை இயந்திரம், மூன்று சக்கர வாகனத்தில் பொருத்தப்பட்டிருக்கும். மொத்த மதிப்பீடான ரூ. 16.25 இலட்சம் அரசு மானியமாக வழங்கப்படும்.

(உ) ஆணையர் அலுவலகத்தில், புதிய கணினி, ஜெராக்ஸ் மற்றும் பேக்ஸ் இயந்திரங்களை நிறுவி ரூ. 7.50 இலட்சம் அரசு மானியத்தில் மின்னணு தொடர்பகம் உருவாக்கப்பட உள்ளது.

(ஊ) அரசு மானியம் ரூ.3.00 இலட்சத்தில், ஆணையர் அலுவலகத்தில் உள்ள பயிற்சி நிலையம் புதுப்பிக்கப்பட உள்ளது.

(எ) பால் பண்ணையில் உள்ள 125 ஏக்கரில் அமைந்துள்ள பழத்தோட்டத்தில் அறுவடை செய்யப்படும் பழங்களைப் பாதுகாக்கவும், கருவிகள் வைத்துக்கொள்ளவும் ரூ.10.00 இலட்சம் அரசு மானியத்தில், புதிய கட்டடம் கட்டப்பட உள்ளது.

(ஏ) பழத்தோட்டத்தில், நீர்பாசன வசதிகளை மேம்படுத்த ரூ. 3.00 இலட்சத்தில் ஆழ்துளைக்குழாய் கிணறு மற்றும் மோட்டார், அரசு மானியத்தில் அமைக்கப்பட உள்ளது.

(ஐ) மாதவரம் பால் பண்ணையிலுள்ள புல்பண்ணையில், நான்கு இரும்புக் கதவுகள் ரூ. 1.60 இலட்சத்தில் அமைக்கப்படும்.

(ஒ) நீலகிரி மாவட்டத்தில் ரூ. 35 இலட்சம் அரசு மானியத்தில், பாலாடைக் கட்டி பாலிலிருந்து பிரித்தெடுக்கும் புரதச் சத்திலிருந்து 'வே' பானம் (Whey drink) தயாரிக்கப்பட உள்ளது.

**தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்**

11-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண் துறை 4% வளர்ச்சி அடைய தேசிய வளர்ச்சிச் கழகம், மத்திய அரசால் செயல் படுத்தப்படும் 'தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்' அல்லது 'தேசிய விவசாயிகள் நலத் திட்டம்' என்ற திட்டத்தைச் செயல்படுத்தி



வருகிறது. இத்திட்டத்திற்குத் தேவைப்படும் நிதியை மத்திய அரசு 100% மானியமாக வழங்கும்.

இத்திட்டத்தின்வாயிலாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்ற அரசு ரூ. 7.97 இலட்சம் மானியமாக அளித்துள்ளது:—

(அ) எருமைக் கன்று வளர்ப்பு திட்டம் ரூ.1.62 இலட்சத்தில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) ஈரோடு மாவட்ட ஒன்றியத்தில் ரூ. 100.00 இலட்சம் மதிப்பீட்டில் சரிவிகித புரதச் சத்து உள்ள கால்நடை தீவனம் தயாரிக்கும் ஆலை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) ஈரோடு மற்றும் திருநெல்வேலி ஒன்றியங்களில், ரூ.30 இலட்சம் மதிப்பில் நுண்சத்து கலவை அலகினை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஈ) பால் வளத் துறையின் கட்டுப்பாட்டில், மாதவரத்தில் தற்போது இயங்கிவரும் பரிசோதனைக் கூடத்தை, ரூ.222 இலட்சம் செலவில் நவீனப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

(உ) 30 தானியங்கி பால் கறவை இயந்திரங்களை, ஒவ்வொன்றும் ரூ. 70,000/- வீதம் ரூ. 21.00 இலட்சம் மதிப்பில் பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஊ) 107 கணினியுடன் கூடிய எடை இயந்திரங்களை, ஒவ்வொன்றும் ரூ.1.69 இலட்சம் வீதம் ரூ. 181 இலட்சம் மதிப்பில் பால் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(எ) ரூ.54 இலட்சம் மதிப்பீட்டில், விவசாயிகள் மற்றும் களப் பணியாளர்கள் திறமையை வளர்க்க தமிழ்நாடு கால்நடை வளர்ச்சி முகமைமூலம் பயிற்சி அளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(ஏ) ரூ.27.00 இலட்சம் மதிப்பீட்டில் பால் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த 550 விவசாயிகள், கல்வி சுற்றுலா செல்வதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

**பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை**

பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை 01-10-1987 அன்று தொடங்கப்பெற்றது. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு

[2008 ஏப்ரல் 30

இணையம், 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் 9,259 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் கணக்குகளைச் சட்டப்பூர்வமாகத் தணிக்கை செய்யும் பொறுப்பு இத்துறையைச் சார்ந்தது. இத்துறையில் 304 பணியாளர்கள் அயற்பணியில் (அதாவது கூட்டுறவுத் துறை, கருவூலக் கணக்குத் துறை மற்றும் நிதித் துறை) பணிபுரிந்து வருகின்றனர்.

**அரசு வருவாய்**

நிதி ஆண்டில் தணிக்கைக் கட்டணம் மொத்த கேட்பு ரூ.199.35 இலட்சம் ஆகும். இத்தொகையில் ரூ.195.88 இலட்சம் இதுவரையில் வசூலிக்கப்பட்டுள்ளது. அடிப்படை விதிக் கட்டணம் மொத்த கேட்புத் தொகை ரூ.87.29 இலட்சங்கள் ஆகும். இதில் ரூ.84.58 இலட்சங்கள் இதுவரையில் வசூல் செய்யப்பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 30]

## இணைப்பு IV

(440ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 8-பால் வளத் துறை

## அறிவிப்புகள், 2008-2009

**(1) "பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு கிராமப்புற மகளிர் பால் பண்ணைத் திட்டம்"**

தமிழ்நாட்டில் பால் உற்பத்தியைப் பெருக்கவும், பால் உற்பத்தி செய்யும் விவசாயக் குடும்பங்கள் கூடுதல் வருவாய் ஈட்டவும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 10,000 உயர் கலப்பினக் கறவை மாடுகள் வழங்கப்படும். இத்திட்டம் 200 கிராமங்களில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மூலமாக வரும் இரண்டு ஆண்டுகளில் ரூ. 22 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

(2) பால் உற்பத்தியாளர்களின் நலனுக்காக **"பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு பால் உற்பத்தியாளர் நல நிதி"** நடப்பு ஆண்டில் உருவாக்கப்படும். இந்த நல நிதிக்காக மாதந்தோறும் ஒவ்வொரு பால் வழங்கும் பால் உற்பத்தியாளரும் ரூ. 1/-ம், சம்பந்தப்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் ஒன்றியம் இரண்டும் சேர்ந்து ரூ. 1/-ம் வழங்க வேண்டும். இந்த நிதி பால் வழங்கும் பால் உற்பத்தியாளர் விபத்தில் இறத்தல், ஊனமாதல் போன்ற காரணங்களால் பாதிப்புக்குள்ளாகி பால் வழங்குவதில் தடை ஏற்பட்டால், அவர் குடும்பத்திற்கு உதவித் தொகை வழங்கவும், பால் உற்பத்தியாளரின் பெண் குழந்தைகளுக்குத் திருமண செலவுகள் மற்றும் குழந்தைகளின் படிப்புச் செலவுகள் போன்றவற்றிற்காகவும் பயன்படுத்தப்படும்.

**2008-2009 ஆம் ஆண்டு பகுதி-II திட்டத்தின்கீழ், பால் வளத் துறையில் மேற்கொள்ளப்படவுள்ள பணிகள்:**

(3) 500 பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 2,000 துருவுறா எஃகிலான (Stainless Steel) பால் கேன்கள், கேன் ஒன்றுக்கு ரூ. 2,200/- வீதம் ரூ. 44.00 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும். இதில் ரூ. 22.00 இலட்சத்தை அரசு மானியமாக வழங்கும். எஞ்சியுள்ள ரூ. 22.00 இலட்சம் பயனாளி சங்கங்களின் பங்களிப்பாகும்.

(4) பால் சேகரிப்பு உபகரணம் ஒன்று ரூ.6,000/- வீதம், மொத்தம் ரூ.9.00 இலட்சம் அரசு மானியத்தில் 150 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தலா ஒன்று வீதம் வழங்கப்படும்.

(5) ஒரு கோன் ஐஸ்கிரீம் தயாரிக்கும் இயந்திரம், ரூ.60,000/- வீதம் 3 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், ஒரு பால் கோவா தயாரிக்கும் இயந்திரம் ரூ.25,000/- வீதம் 3 சங்கங்களுக்கும், ஒரு பன்னீர் தயாரிக்கும் இயந்திரம் ரூ.50,000/- வீதம் 2 சங்கங்களுக்கும் வழங்கப்படும் இதன் மொத்த மதிப்பீடு ரூ. 3.50 இலட்சம் ஆகும். இத்தொகை மானியமாக வழங்கப்படும்.

(6) ஒரு நடமாடும் பால் கறவை இயந்திரம் ரூ.3.25 இலட்சம் மதிப்பீட்டில் 5 நடமாடும் பால் கறவை இயந்திரங்கள் வழங்கப்படும். இதில் பால் கறவை இயந்திரம், சிறிய பளு தூக்கும் வாகனத்தில் (Load Auto) பொருத்தப்பட்டிருக்கும். இதன் மொத்த மதிப்பீடு ரூ.16.25 இலட்சம் ஆகும். இத்தொகை மானியமாக வழங்கப்படும்.

(7) மாதவரத்தில் செயல்படும் பால் வளத் துறை ஆணையர் அலுவலகத்தில் புதிய கணினி, ஒளிநகல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம் மற்றும் மின்னணு தொடர்பகம் போன்றவை, அரசு மானியத்தில் நிறுவப்படும். இதன் மொத்த மதிப்பீடு ரூ.7.50 இலட்சம் ஆகும்.

(8) ஆணையர் அலுவலகத்தில் பயிற்சி நிலையம் புதுப்பிக்கப்படும். இத்தொகையினை அரசு மானியமாக வழங்கும். இதன் மொத்த மதிப்பீடு ரூ.3.00 இலட்சம் ஆகும்.

(9) மாதவரம் பால்பண்ணையில், 125 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள, பழத்தோட்டத்தில், அறுவடை செய்யப்படும் பழங்களைப் பாதுகாக்க, சேகரிப்புக் கிடங்கு, ரூ.10.00 இலட்சம் அரசு மானியத்தில் நிறுவப்படும்.

(10) பழத்தோட்டத்திற்கு, நீர்பாசன வசதிகளை மேம்படுத்த, ஆழ்துளைக் குழாய் கிணறு மற்றும் மோட்டார் வசதியுடன், ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் அரசு மானியத்தில் அமைக்கப்படும்.

(11) மாதவரம் பால்பண்ணையில் உள்ள புல் பண்ணைக்கு ரூ.1.60 இலட்சம் அரசு மானியத்தில் நான்கு இரும்புக் கதவுகள் அமைக்கப்படும்.



(12) நீலகிரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் பாலாடைக் கட்டியிலிருந்து பிரித்தெடுக்கும் புரதச் சத்து மிகுந்த கழிவுப் பொருளைப் பயன்படுத்தி குளிர்பானம் (Whey Drink) தயாரிக்கும் இயந்திரம் ரூ.35.00 இலட்சம் அரசு மானியத்தில் நிறுவப்படும்.

**2007-2008 ஆம் ஆண்டின் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 100 சதவிகித மானியத்துடன் நடப்பு ஆண்டில் அரசால் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள்:**

(13) 810 பெண் எருமைக் கன்றுகள் வளர்ப்புத் திட்டம் ரூ.162.00 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

(14) ஈரோடு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் செறிவூட்டப்பட்ட புரதச் சத்துத் தீவனம் (By Pass Protein) தயாரிக்கும் ஆலை ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

(15) மாதவரத்தில் பால் வளத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள பால் மற்றும் பால் உபபொருட்கள் தரப் பரிசோதனை கூடத்தில் ரூ. 222.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீன தானியங்கி ஆய்வு இயந்திரங்கள் நிறுவப்படும்.

(16) 30 தானியங்கி பால் கறவை இயந்திரங்கள், ஒவ்வொன்றும் ரூ.70,000/- விலையில் மொத்தம் ரூ.21.00 இலட்சம் மதிப்பீட்டில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும்.

(17) 107 கணினியுடன்கூடிய தானியங்கி எடை மற்றும் பாலின் சத்துக்களின் தரத்தைக் கண்டறியும் இயந்திரங்கள் ஒவ்வொன்றும் ரூ.1.69 இலட்சம் விலையில் பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும். இதன் மொத்த மதிப்பீடு ரூ.181 இலட்சம் ஆகும்.

(18) விவசாயிகள் மற்றும் களப் பணியாளர்களின் திறமையை மேம்படுத்த தமிழ்நாடு கால்நடை வளர்ச்சி முகமைமூலம் ரூ.54.00 இலட்சம் மதிப்பீட்டில் பயிற்சி அளிக்கப்படும்.

(19) ரூ.27.00 இலட்சம் மானியத்தில் பால் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த 550 முன்னோடி விவசாயிகள் வெளி மாநிலங்களில் உள்ள பால் பண்ணைகளைப் பார்வையிட கல்வி சுற்றுலாமூலம் அழைத்துச் செல்லப்படுவார்கள்.

(20) ஈரோடு மற்றும் திருநெல்வேலி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் கறவையினங்களுக்குத் தேவையான தாது

உப்புச் சத்துக்கள் நிறைந்த தீவனக் கலவை தயாரிக்கும் தொழிற்சாலைகள், ரூ. 30.00 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**இதர அறிவிப்புகள்**

(21) 2008-2009 ஆம் ஆண்டில், 250 புதிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்படும். மேலும் 100 செயல்படாத பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் புத்துயிரூட்டப்படும்.

(22) 2008-2009 ஆம் ஆண்டில் 131 மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவப்படும்.

(23) பால் உற்பத்தியாளர்களிடம் நிருவாகச் செலவினமாகப் பிடிக்கப்படும் 10 பைசாவில் குறைந்தபட்சம் 2 1/2 பைசா கால்நடை மருத்துவச் செலவுகளுக்குப் பயன்படுத்தப்படும்.

(24) ஒப்பந்த முறையில் நியமிக்கப்படும் கால்நடை மருத்துவர்களைக் கொண்ட கால்நடை சிகிச்சைப் பிரிவு, முழுநேர சிகிச்சைப் பிரிவு மற்றும் அவசரகால சிகிச்சைப் பிரிவுகள் செயல்படுத்தப்படும்.

(25) மாநில அளவில், +2 தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் இணையம் மற்றும் ஒன்றியங்களில் பணிபுரியும், நிரந்தரப் பணியாளர்களின் குழந்தைகளில் ஓர் ஆண் மற்றும் ஒரு பெண் குழந்தைக்கு 5 ஆண்டுகள் அல்லது அவர்களது பட்டப் படிப்புக் காலம் இதில் எது குறைவோ அதுவரை மாதம் ரூ.1000/- வீதம் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும்.

(26) மாநில அளவில் +2 தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் இணையம் மற்றும் ஒன்றியப் பணியாளர்களின் குழந்தைகளில் 5 ஆண் மற்றும் 5 பெண் குழந்தைகள் ஒவ்வொருவருக்கும், ஒரு கணினி வழங்கப்படும்.

(27) மாநில அளவில், +2 தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில், பால் ஊற்றும் உறுப்பினர்களின் குழந்தைகளில் ஓர் ஆண் மற்றும் ஒரு பெண் குழந்தைக்கு, மாதம் ரூ.1000/- கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும். இத்தொகை 5 ஆண்டுகள் அல்லது அவர்களது பட்டப் படிப்புக் காலம், இதில் எது குறைவோ அதுவரை வழங்கப்படும்.

(28) பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த, நிதியாண்டில் அதிகமாகப் பால் ஊற்றும் 10 சங்க



உறுப்பினர்களுக்கு ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

(29) இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களில் பணிபுரியும் முறையான பணியாளர்களின் 2 குழந்தைகளுக்கு, அவர்கள் பி.வி.எஸ்ஸி. (தமிழ்நாடு கால்நடை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகம்) அல்லது பி.டெக். (பால் வளத் தொழில்நுட்பம்) அல்லது பி.எஸ்ஸி. (பால் வள அறிவியல்) போன்ற பட்டப் படிப்புகளை நன்மதிப்பு பெற்ற நிறுவனங்களில் படிப்பதற்கும் அல்லது தமிழ்நாடு கால்நடை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகத்தில் பால் வள அறிவியலில் முதுநிலை பட்டப் படிப்புப் படிப்பதற்கும் அதிகபட்சமாக ஆண்டொன்றுக்கு ரூ. 40,000/- (படிப்புக் கட்டணம் + விடுதிக் கட்டணம் உட்பட) அல்லது அவர்கள் செலுத்திய உண்மையான தொகை இதில் எது குறைவோ அத்தொகை வழங்கப்படும். இத்தொகையைப் பெறும் மாணவர்கள், அவர்களின் படிப்பு முடிந்தபின் 5 ஆண்டுகள் இணையம் அல்லது ஒன்றியங்களில் பணிபுரிய வேண்டும் என்ற நிபந்தனையுடன் வழங்கப்படும்.

(30) மாநகரப் பால் பண்ணைகளில் கண்காணிப்பு முறையை மேம்படுத்தும் பொருட்டு, சோதனை அடிப்படையில் அம்பத்தூர் பால்பண்ணையின் பணிகளைத் தொலைக்காட்சிமூலம் கண்காணிக்கும் முறை (T.V. Monitoring System) ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

(31) இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களில் பணிபுரியும் தொழில்நுட்பப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்க, மாதவரத்தில் ஒரு தொழில்நுட்பப் பயிற்சி மையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(32) ஒவ்வொரு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தைச் சார்ந்த, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, பால் வழங்கும் உறுப்பினர்களின் குழந்தைகளில், +2 தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் ஒருவருக்கு ஒரு கணினி வழங்கப்படும்.

(33) ஒவ்வொரு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திலும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திலுள்ள பாலின் தரம் மற்றும் அதிக பால் உற்பத்தி செய்வதில் திறம்படச் செயல்படும் 3 செயலாளருக்கு ஊக்கப் பரிசும், சான்றிதழும் வழங்கப்படும். மேலும் மாநில அளவில் அதிக தரம் மற்றும்

அதிக பால் உற்பத்தி செய்யும் 3 தலைசிறந்த சங்கங்களின் செயலாளர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு ஊக்கப் பரிசும் சான்றிதழும் வழங்கப்படும்.

(34) தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் ஒன்றியப் பணியாளர்களுக்கு இரவு நேர பணிப் படி, தையற்கூலி மற்றும் சோப்பு ஆகியவை கூடுதலாக வழங்கப்படும்.

(35) பிரதம பால் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் தையற்கூலி உயர்த்தி வழங்கப்படும்.

(36) அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றிய களப் பணியாளர்களுக்கு நிரந்தர பயணப்படி தற்பொழுது வழங்கப்படும் நிலையிலிருந்து ரூ. 100/- உயர்த்தி வழங்கப்படும்.

(37) சென்னை மாநகரத்தில் பால் விநியோகம் கணினிமயமாக்கப்பட்டு, பால் அட்டைகள் இணைய தளத்தின் மூலம் புதுப்பிக்கும்முறை செயல்படுத்தப்படும்.

(38) அனைத்துப் பிரதம பால் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கும், தொகுப்பு ஊதியம் பெறுபவர் உட்பட, இடைக்கால நிவாரணத் தொகையாக மாதந்தோறும் ரூ.100/- ஏப்ரல் 2008 முதல் வழங்கப்படும்.

(39) தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்திற்கு 5 புதிய கனரக பால் ஏற்றும் ஊர்திகள் ரூ. 60.00 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

(40) பெண் பணியாளர்களின் நலனுக்காக, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் 2 குழந்தைகள் காப்பகம் அமைக்கப்படும்.

(41) பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களின் பணிநிலை திறன், பணியாளர் சிறப்புத் துணை விதி பணி வரன் முறைப்படுத்துதல் மற்றும் ஊதிய விகிதம் நிர்ணயித்தல் ஆகியவை அரசின் கவனத்தை ஈர்த்து வருகிறது. அதன் பொருட்டு ஒரு குழு அமைக்கப்பட்டு அதன் அறிக்கை மற்றும் பரிந்துரைகள் 6 திங்களுக்குள் பெறப்படும்.

(42) சென்னையில் புரோபயாட்டிக் தயிர் எனப்படும் புதியவகை தயிர் அறிமுகப்படுத்தப்படும்.



# இணைப்பு V

(454ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 7—மீன் வளத் துறை

## அறிவிப்புகள், 2008-2009

**1. மீன் இனப்பெருக்கக் காலத்தில் மீன்பிடிக்க தடை செய்யப்பட்டமைக்கு மீனவர் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குதல்.**

தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 15-ஆம் தேதி முதல் மே 29 ஆம் தேதி வரை கிழக்குக் கடற்கரைப் பகுதியிலும், ஜூன் 15 ஆம் தேதி முதல் ஜூலை 29ஆம் தேதி வரை மேற்கு கடற்கரைப் பகுதியிலும் விசைப் படகுகளில் மீன்பிடிப்பது, மீன் இனப்பெருக்கத்தினைக் கருத்தில்கொண்டு தடை செய்யப்படுகிறது. எனினும் இத்தடைக் காலத்தில் கட்டுமரம் மற்றும் சிறிய படகுகளில் மீன்பிடிக்க தடை ஏதும் விதிக்கப்படுவது இல்லை.

45 நாட்களுக்கு மீன்பிடிப்பது தடை செய்யப்படுவதால், தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகக் கூறி, விசைப் படகு மீனவர்கள் தங்களுக்கு மீன் பிடிப்பு தடைக் காலத்தின்போது, அரசு நிதி உதவி வழங்கி நிவாரணம் அளிக்க வேண்டுமென நீண்ட நாட்களாக கோரிக்கை வைத்து வருகின்றனர். மீனவர்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், இக்கோரிக்கையினைக் கனிவுடன் பரிசீலித்து, தமிழகத்தில் கடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 2 இலட்சம் மீனவக் குடும்பங்களுக்கு இந்த தடைக்காலத்தின்போது நிவாரணமாக, ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 500/- வழங்க ஆணையிட்டுள்ளார்கள். இதனால், அரசுக்கு சுமார் ரூபாய் 10 கோடி கூடுதல் செலவு ஏற்படும்.

**2. மீனவர்கள் பயன்பெற உலகத்தரம் வாய்ந்த மீனவர் பயிற்சி நிலையம் அமைத்தல்.**

2008-2009ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்போது மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி அவர்களது வருமானத்தைப் பெருக்கும் நடவடிக்கைகளில் இந்த அரசு தொடர்ந்து ஈடுபடும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்காகத் தனியே அரசு சங்கம் ஒன்று ஆரம்பித்து உலகத் தரம் வாய்ந்த மீனவர் பயிற்சி

மையம் ஒன்று சென்னைக்கு அருகில் முட்டுக்காட்டில் அமைக்கப்பட உள்ளது.

இச்சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு டாடா போன்ற தனியார் நிறுவனங்கள் தொழில்நுட்ப உதவி வழங்க முன் வந்துள்ளன. இதற்காக டாடா நிறுவனம், நார்வே நாட்டின் தொழில்நுட்ப வல்லுநர்களை அழைத்து, தலைமைச் செயலாளர் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி அவர்கள், துறைச் செயலர் மற்றும் அரசு அதிகாரிகள் கொண்ட ஆலோசனைக் கூட்டம் 28-4-2008 அன்று நடைபெற்றது. ஆரம்ப கட்ட சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து மீன்பிடி தொழில்நுட்பங்களான கடல் மீன் வளர்ப்பு, வழக்கமான மீன்பிடி முறைகளுக்கு மாற்று மீன்பிடி முறைகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் மேற்படி புதிய வழிமுறைகளைப் பின்பற்ற மீனவர் சுய உதவிக் குழுக்களை உருவாக்கி ஊக்குவித்தல் போன்ற நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்படும். மேலும், பிடிக்கப்பட்ட மீன்களின் மதிப்பினை உயர்த்தும் வகையில் (value addition) மீன்பிடிப்பிற்கு பின்பு அதனைச் சுகாதாரமான முறையில் கையாளுதல், பதப்படுத்துதல் போன்றவற்றில் தொழில்நுட்பப் பயிற்சி மேம்பாடு மற்றும் ஆலோசனைகளை இச்சங்கத்தின் வாயிலாக வழங்கி மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தையும் வருமானத்தையும் பன்மடங்கு உயர்த்திட அரசு திட்டமிட்டுள்ளது.

## 2008-2009ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் மீன் வளத் துறையில் மேற்கொள்ளப்படவுள்ள பணிகள்

### 3. தலைமை அலுவலகத்தில் இடர்ப்பாடு மேலாண்மைப் பிரிவு அமைத்தல்

பருவமழைக் காலத்தில் தலைமை அலுவலகத்தின் கட்டுப்பாட்டு அறையிலுள்ள ஒரு தொலைபேசிமூலம் அனைத்து கடலோர மாவட்டங்களிலிருந்தும், கடலோரக் காவற்படை மற்றும் கடற்படை ஆகியவற்றிடமிருந்தும் பெறப்படும் விவரங்களை அரசுக்கு உடனடியாக அனுப்ப இயலவில்லை. எனவே, தலைமை அலுவலகத்தில் ரூ.6.00 இலட்சம் செலவினத்தில் கணினி மற்றும் அனைத்து வசதிகளுடன்கூடிய இடர்ப்பாடு மேலாண்மைப் பிரிவு ஒன்றினை நிறுவி, பெறப்படும் விவரங்களை உடனடியாக அரசுக்கு மின்அஞ்சல்மூலமாக அனுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது.



### 4. இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமேஸ்வரம் பகுதி மீனவர்களுக்கு வினைத்திறன் அட்டைகள் (Smart Cards) வழங்குதல்

மாநிலத்தின் தெற்குக் கடலோர மாவட்டங்களில் உள்ள மீனவர்கள் அடிக்கடி வளமான மீன் இருப்புப் பகுதிகளைத் தேடி சர்வதேச கடல் எல்லைக் கோட்டினைத் தாண்டுவதனால் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, துன்புறுத்தலுக்கு ஆளாகின்றனர். சில சமயங்களில் மோசமான வானிலை காரணமாக அவர்கள் திசைமாறி செல்கின்றனர். அத்தகைய சமயங்களில் எல்லை தாண்டி மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களையும்/படகுகளையும், காணாமல் போகும் மீனவர்களையும் கண்டறிவது கடினமாகிறது. எனவே, இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் பகுதியிலுள்ள அனைத்து மீனவர்களுக்கும் வினைத்திறன் அட்டைகள் வழங்குவதன் மூலம் சர்வதேச எல்லைக்கோட்டைத் தாண்டுபவர்களையும், காணாமல் போகும் மீனவர்களையும் கண்டறிந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள, ரூ.10.00 இலட்சம் செலவில் இம்முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்படும்.

### 5. 13 கடலோர மாவட்டங்களில் உள்ள மீன் துறை உதவி இயக்குநர் (கடல்வளம்) அலுவலகங்களுக்கு "இன்வெர்ட்டர்" சாதனங்கள் வழங்குதல்

13 கடலோர மாவட்ட தலைமையகங்களில் மீன் துறை உதவி இயக்குநர் அலுவலகங்கள் இயங்கிவருகின்றன. வானிலை எச்சரிக்கை, காணாமல் போகும் மீனவர்களைத் தேடும் பணி மற்றும் செயல்படுத்தப்படும் பல்வேறு சமூகப் பொருளாதார திட்டங்கள் குறித்த செய்திகளை எவ்வித மின்தடையுமின்றி அறியவேண்டியுள்ளதால், ரூ.7.00 இலட்சம் செலவினத்தில் மேற்படி கடலோர மாவட்ட மீன் துறை உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு "இன்வெர்ட்டர்" சாதனம் வழங்கப்படவுள்ளது.

### 6. 11 மீன் இறங்குதளங்களில் தலா 2 சூரிய ஒளி விளக்குகள் அமைத்தல்

தமிழகக் கடற்கரைப் பகுதியில் மொத்தம் 363 மீன் இறங்குதளங்கள் உள்ளன. பொதுவாக மீனவர்கள் மீன்பிடிப்பினை மேற்கொண்டு இரவு நேரங்களில் கரைக்குத் திரும்புகின்றனர். அவர்கள் கடற்கரையிலேயே இரவு நேரத்தில் மீன்களை ஏலம் விடுகின்றனர். இதற்குப் போதுமான வெளிச்சம் தேவை. எனவே, 11 மீன்

இறங்குதளங்களில் ரூ. 7.00 இலட்சம் செலவில் ஒவ்வொரு மீன் இறங்குதளத்திலும் தலா 2 சூரிய ஒளி விளக்குகள் நிறுவப்படவுள்ளன.

**7. தமிழ்நாடு அண்மைக் கடல் பகுதிகளில் செயற்கை மீன் உறைவிடங்கள் நிறுவுதல்**

செயற்கை உறைவிடம் என்பது கடலுக்குள் கடல்வாழ் உயிரினங்கள் தங்குவதற்காக அமைக்கப்படும் உறைவிடமாகும். இத்தகைய உறைவிடங்களின் அருகில், மீன்கள் உணவிற்காகவும், தங்குவதற்காகவும், இனப்பெருக்கத்திற்காகவும், அதிக அளவில் வந்து சேரும். இதன் காரணமாக மீன் உற்பத்தி அதிகரிக்கும். இத்தகைய செயற்கை உறைவிடங்கள் அமைக்கும் பகுதிகளில் விசைப் படகுகள் இழுவலைகளைப் பயன்படுத்த முடியாது. எனவே, செயற்கை உறைவிடங்களை அமைப்பது மீன் வள இருப்பினை அதிகரிக்கும் திட்டமாகும். காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் தலா 1 வீதம் 2 செயற்கை உறைவிடங்கள் ரூ.20.00 இலட்சம் செலவினத்தில் நிறுவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**8. கடலில் இறால் குஞ்சுகளை இருப்பு செய்து இருப்பினை அதிகப்படுத்துதல்**

கடலில் உயிரின உற்பத்தி மற்றும் கடலோர மீன் வளத்தை அதிகப்படுத்தவும், மீன் வளத்தைப் பாதுகாக்க உதவிடவும், மீன் வளத் துறையால் வணிக ரீதியான இறால் குஞ்சுகளை கடலில் இருப்பு செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் ரூ. 20.00 இலட்சம் செலவில் 15 முதல் 20 நாள் வரை வளர்ச்சியடைந்த இளம் இறால் குஞ்சுகளை வளர்த்து கடலில் இரண்டு இடங்களில் இருப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**9. உள்நாட்டு நீர்நிலைகளில் கூண்டுகள்மூலம் மீன்வளர்ப்பு செயல்முறைக்கான முன்னோடித் திட்டம்**

தமிழ்நாட்டில் உள்நாட்டு மீன் வள ஆதாரங்கள் 3.7 இலட்சம் ஹெக்டேர் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இதனில் மீன் உற்பத்தியினைப் பெருக்க மிதவைக் கூண்டுகள் மூலம் மீன் வளர்ப்பது உகந்ததாகும். தற்போது நீர்த்தேக்கங்களில் ஒரு ஹெக்டேருக்கு 20 முதல் 25 கி.கி. வரை உற்பத்தி செய்யப்படுகிறது. மிதவைக் கூண்டுகளில் மீன் வளர்த்தல்மூலம் இதனை ஹெக்டேருக்கு 150 முதல் 200 கி.கி. வரை அதிகரித்திட ரூ.4.80 இலட்சம் செலவில் பொருத்தமான ஒரு இடத்தில் மிதவைக் கூண்டுகளில் மீன் வளர்ப்பு செய்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.



**10. மீன் குஞ்சுகள் எடுத்துச்செல்ல சிறப்பு வாகன வசதி ஏற்படுத்துதல்**

நீர்நிலைகளில் இருப்பு செய்வதற்கு மீன் குஞ்சு வளர்ப்பு நிலையங்களிலிருந்து மீன் குஞ்சு கள் எடுத்துச் செல்லப்படவேண்டும். மீன் குஞ்சுகள் விரைவில் இறக்கும் தன்மை உடையவை. நீண்ட நேர பயணங்களுக்கு மீன் குஞ்சுகள் ஏற்றதல்ல. அதனால் மீன் குஞ்சுகளின் பிழைப்புத் தன்மை குறைகின்றது. எனவே, இதற்கென சிறப்புவாகன வசதிகள் ஏற்படுத்தித் தரவேண்டியுள்ளது. பெருமளவு மீன் குஞ்சு உற்பத்தி செய்யும் மையத்திலிருந்து மீன் குஞ்சுகளை எடுத்துச் செல்வதற்குச் சிறப்பு வாகன வசதி ஏற்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மீன் குஞ்சுகளுக்குத் தேவையான பிராண வாயுவினை நிரப்பிட பிராண வாயு சிலிண்டர் மற்றும் மீன் குஞ்சுகள் நிரம்பிய பைகளை வைப்பதற்கான கூடுதல் இடம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு வாகனம் ரூ.10.00 இலட்சம் செலவில் வாங்கப்பட உள்ளது.

**11. கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள மீன் குஞ்சு உற்பத்திப் பண்ணையினை மேம்படுத்துதல்**

1981-82 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட கிருஷ்ணகிரியில் உள்ள மீன் குஞ்சு உற்பத்திப் பண்ணையில் பழுதுபார்ப்புப் பணி மேற்கொள்வது அவசியமாகிறது. இப்பணியினை மேற்கொள்வதன் மூலம் சுமார் 7 இலட்சம் கூடுதல் விரலிகள் வளர்த்தெடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் ரூ.20.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

**12. மீன் துறை ஆணையர் அலுவலகத்தில் உள்ள மத்திய நூலகத்திற்கு சர்வதேச மீன் வளம் சார்ந்த இதழ்கள் வாங்குவதற்குச் சந்தா செலுத்துதல்**

மீன் வளத் துறையின் நூலகம் மீன் வளக் கருவூலமாக உள்ளது. இதில் விலை மதிப்புள்ள 3,000 புத்தகங்கள், 109 முக்கியப் பிரசுரங்கள், 32 இதழ்கள், 29 துறைவாரியான வெளியீடுகள் மற்றும் முக்கிய அறிவியல் இதழ்கள், MPEDA, CMFRI, CIFRI, CIBA Newsletters FAO, UNDP, BOBP ஆகியவற்றின் வெளியீடுகள் நூலகத்தில் உள்ளன.

தமிழ்நாடு மற்றும் இதர மாநிலங்களிலுள்ள மாணவர்கள், விவசாயிகள், விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் இந்நூலகத்தில் உள்ள புத்தகங்களைப் படித்துப் பயன்பெறுகின்றனர். எனவே, சர்வதேச வெளியீடுகளுக்கு ரூ.2.00 இலட்சம் சந்தா தொகை

செலுத்தி மீன் வளம் தொடர்பான வெளியீடுகளை வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன:—**

**13. வனத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள தடுப்பு அணைகளில் (Check Dams) கிராம வனக் கவுன்சிலை ஈடுபடுத்தி மீன் வளர்ப்பினை மேற்கொள்ளுதல்**

மீன் வளத் துறையானது வனத் துறையுடன் இணைந்து தகுதிவாய்ந்த 100 ஹெக்டேர் நீர்ப்பரப்பினைத் தேர்வு செய்து, இத்திட்டத்தினை நீலகிரி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, திண்டுக்கல் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் செயல்படுத்தும். 300 கிராம வன கவுன்சில் உறுப்பினர்களுக்கு ரூ.2.50 இலட்சம் செலவில் மீன் வளர்ப்பில் படிப்படியாக பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**14. மீன் உற்பத்தியினை அதிகரிக்கவும், அழிந்துவரும் மற்றும் அழியக்கூடிய மீன் இனங்களைப் பாதுகாக்கவும் ஆறுகளில் மீன் குஞ்சுகளை இருப்பு செய்தல்**

சிரைனஸ் சிரோசா, கோழிமீன் போன்ற அழிந்துவரும் மீன் இனங்களை உற்பத்தி செய்து, வளர்ப்பதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த அழிந்துவரும் மீன் இனங்களின் சினை மீன்கள் முதலில் வளர்த்தெடுக்கப்படும். ரூ.35.00 இலட்சம் செலவில் இவ்வாறு சினை மீன்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட மீன் குஞ்சுகள் இருப்பு செய்யக்கூடிய அளவிற்கு மேட்டூரில் வளர்க்கப்பட்டு, மேட்டூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள காவிரி ஆற்றின் பல்வேறு இடங்களில் இருப்பு செய்யப்படும்.

**15. பயன்பாட்டிலுள்ள மீன் விதைப் பண்ணைகளைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல்**

பவானிசாகர், மணிமுத்தாறு, கிருஷ்ணகிரி மற்றும் மேட்டூர் அணையில் உள்ள மீன் விதைப் பண்ணைகளில் உள்ள 3 ஹெக்டேர் நர்சரி வளர்ப்பிடங்களை ரூ.323.50 இலட்சம் செலவில் பழுதுபார்க்கவும், புதுப்பிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. உபயோகத்தில் இல்லாத நர்சரி, வளர்ப்புக் குளங்கள் மற்றும் சினை



மீன் குளங்களைப் பழுதுபார்ப்பதன்மூலமாக கூடுதலாக மீன் குஞ்சு உற்பத்தியினை எய்த வாய்ப்புள்ளது.

**16. தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நெய்தலூரில் கூடுதலாக இட வசதியினை ஏற்படுத்தி, மீன் குஞ்சுகளைக் கூடுதலாக உற்பத்தி செய்து வளர்த்தல்**

தற்போதுள்ள துறையின் மீன் விதைப் பண்ணைகளைப் பலப்படுத்தி, கூடுதல் வளர்ப்பிடங்களைப் படிப்படியாக ஏற்படுத்துவதன்மூலம் மீன் குஞ்சு தேவையில் உள்ள இடைவெளியினை நிரப்பிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்குக் கூடுதல் வளர்ப்பிடங்கள் தேவை. மீன் துறைக்குச் சொந்தமான நெய்தலூர் மீன் பண்ணையில் ரூ.192.00 இலட்சம் செலவில் கூடுதலாக 1 ஹெக்டேர் (0.7 ஹெக்டேர் நீர்ப்பரப்பு) மீன் வளர்ப்பிடம் உருவாக்கப்படும்.

**17. உள்நாட்டு நீர்நிலைகளில் கூண்டுகளில் மீன்வளர்ப்பு.**

எளிய உத்தி, குறைந்த முதலீடு, அதிக வருமானம் அளிக்கக்கூடிய கூண்டுகளில் மீன் வளர்க்கும் முறையினைச் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரைச் சென்றடையச் செய்யலாம். நீர்த்தேக்கங்கள், விவசாய பாசன வாய்க்கால்கள் மற்றும் ஓடும் நீர்நிலைகள் ஆகியவற்றில் உள்ள மேற்பகுதிகளைப் பயன்படுத்தி, உள்நாட்டு மீன் உற்பத்தியினை அதிகரிக்கலாம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. கூண்டுகளில் மீன்வளர்ப்பு என்பது, "விரலிகளை (fingerlings) உண்ணும் அளவு வளர்ந்த மீன்களாக (eatable size)" நீர்ப் பரிமாற்றம் மற்றும் கழிவுகளை நீக்குதல் மூலம் வளர்த்தல் என்பதாகும். ஆழியாறு, கெலவரப்பள்ளி, குண்டேரிப்பள்ளம், ஒடத்துறை மற்றும் பழனி ஆகிய பகுதிகளில் 15 இடங்களில் ரூ. 52.50 இலட்சம் செலவில் கூண்டுகளில் மீன் வளர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**18. மீன் வளர்ப்போருக்குக் கல்விச் சுற்றுலா:**

அறிவியல் ரீதியான நீர்வாழ் உயிரின வளர்ப்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், அதிநவீன உத்திகளைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்குவதற்கும், நமது மாநில மீன் வளர்ப்போரைப் பிற மாநிலங்களிலுள்ள மத்திய மாநில மையங்களுக்கு அழைத்துச் சென்று நேரடிப் பயிற்சி அளித்தல் அவசியமாகிறது. மேலும், சில தனிப்பட்ட நிறுவனங்கள் வணிக ரீதியாக வெற்றிகரமாக மீன் வளர்ப்பினை மேற்கொண்டு வருகின்றன. அவற்றுடன் மீன் வளர்ப்போர் நேரடிக் கலந்தாய்வு செய்யவேண்டும். தமிழ்நாட்டைச்

V 211, 2 / 006
N08 · 51.2



சேர்ந்த வளர்ந்துவரும் மீன் வளர்ப்போரை ரூ. 18.00 இலட்சம் செலவில் பிற மாநிலங்களுக்கு அழைத்துச் சென்று, புதிய மீன் உற்பத்தி உத்திகளைப் பயிலச் செய்து, அவற்றைப் பின்பற்றி மீன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதுடன் விஞ்ஞானிகள் மற்றும் வெற்றி பெற்ற பண்ணையாளர்களுடன் நேர்காணச் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**19. தமிழ்நாட்டிலுள்ள விரிவாக்க மையங்களை மேம்படுத்துதல்**

இத்திட்டத்தின்கீழ் மீன் வளத் துறையின் திட்டங்களை விளக்க விரிவாக்க உபகரணங்கள், பல்வேறு திட்டங்களை விளக்கும் மாதிரி படங்கள், மீன்பிடி கலன்களின் மாதிரிகள், வெளிப் பொருத்தும் இயந்திரங்கள், வரைபடங்கள் மற்றும் பெரிதாக்கப்பட்ட பல்வேறு உபகரணங்களின் மாதிரி அட்டைகள் ஆகியவற்றைக் கொண்ட ஒலி ஒளி வசதியுடன்கூடிய ஊர்தி மற்றும் பல்நோக்கு ஊடக உபகரணங்களான கணினிகள், லேப்டாப், எல்.சி.டி. புரொஜெக்டர், திரை, டி.வி.டி., பிளேயர், டி.வி.டிக்கள், டிஜிட்டல் கேமரா, டீசலில் இயங்கும் ஜெனரேட்டர்கள், ஆம்ப்ளிபையர், ஒலிப்பான்கள், வரைபலகைகள், வண்ண எழுதுகோல்கள் மற்றும் ஸ்விட்ச் பலகைகள் ஆகியவை ரூ. 50.00 இலட்சம் செலவில் சென்னை, பரங்கிப்பேட்டை, நாகப்பட்டினம், மதுரை மற்றும் குளச்சலில் உள்ள ஐந்து விரிவாக்க மையங்களுக்கு வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**20. தமிழ்நாட்டில் முக்கிய நகரங்களில் நவீன மீன் விற்பனை நிலையங்கள் அமைத்தல்**

சில்லறை மீன் விற்பனையை நவீனப்படுத்தும் முக்கியமான ஒரு நடவடிக்கையாகவும், மீன் விற்பனை நிலையங்களைச் சுற்றிலும் சுகாதார வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்காகவும், அறுவடைக்குப் பின்னர் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதலுக்கான வேளாண் துறை நிதியுதவி திட்டத்தின்கீழ் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் 4 நவீன மீன் விற்பனை நிலையங்களைச் சென்னையில் நிறுவி உள்ளது. இது பொதுமக்களிடையே பிரபலமடைந்து வருகிறது.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மேலும் மீன் விற்பனைக்கென ரூ. 30.00 இலட்சம் செலவில் ஐந்து சில்லறை மீன் விற்பனை நிலையங்களைச் ... இரண்டு இடங்களிலும், மதுரையில் இரண்டு இ... ...த்தூரில் ஓர் இடத்திலும் ஏற்படுத்தி... உத்தேசித்துள்ளது.

228386
சென்னை-600 008

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**110, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Principal Secretary to Government and Commissioner of Stationery and Printing, Chennai-600 002.